ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ப்ரபந்த ஜநகூடஸ்தரான நம்மாழ்வார் அருளிச்செய்த
திருவாய்மொழிக்கு வியாக்கியானங்களான
ஒன்பதினாயிரப்படி, இருபத்துநாலாயிரப்படி ஈடுமுப்பத்தாறாயிரப்படிகளைக் கொண்ட

பகவத் விஷயம்


முதலிரண்டுபத்துக்கள்

ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் ஸ்வாமி பதிப்பு

அச்சுத்தாள் திருத்தினவர்கள் :
திருமலை அனந்தாண்பிள்ளை, குன்றபாக்கம், ந்யாய வேதாந்த வித்வச்சிரோமணி
கிருஷ்ணமாச்சாரியர், திருப்பதி.
M. A. வெங்கடகிருஷ்ணன், திருவல்லிக்கேணி.

கிடைக்குமிடங்கள் :
பி. அ. அக்காரக்கனி அனந்தாழ்வான், காஞ்சீபுரம்-3.
M. A. வெங்கடகிருஷ்ணன் 20, தெற்கு மாடவீதி, திருவல்லிக்கேணி.
V. N. தேவநாதன், 213, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1.
திருவல்லிக்கேணி குரு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
ஆனந்த ௵ தைத் திருமூலம்
1975
விலை ரூ. 15-00] [தபால் செலவு 3 ரூ.

ஸ்ரீ:
பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

திவ்யப்ரபந்தப் பொதுத் தனியன்கள்

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்,
யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்.

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமுந மத்யமாம்,
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்.
யோ நித்ய மச்யுத பதாம்புஜ யுக்மருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே,
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே.

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்,
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா.

பூதம் ஸரச்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந்,
பக்தாங்க்ரிரேணு பரகாலயதீந்த்ரமிச்ராந்
ஸ்ரீமத் பராங்குச முநிம் ப்ரணதோஸ்மி நித்யம்.

திருவாய்மொழித் தனியன்கள்

பக்தாம்ருதம் விச்வஜநாநுமோதநம்
ஸர்வார்த்ததம் ஸ்ரீ சடகோப வாங்மயம்,
ஸஹஸ்ரசாகோபநிஷத் ஸமாகமம்
நமாம்யஹம் த்ராவிட வேதஸாகரம்.

திருவழுதி நாடென்றும் தென்குருகூரென்றும்
மருவினிய வண்பொருநலென்றும்—அருமறைகள்
அந்தாதி செய்தான் அடியிணையே எப்பொழுதும்
சிந்தியாய் நெஞ்சே தெளிந்து.

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணும்
இனத்தாரை யல்லா திறைஞ்சேன்—தனத்தாலும்
ஏதும் குறைவிலேன் எந்தை சடகோபன்
பாதங்கள் யாமுடைய பற்று.

ஏய்ந்த பெருங்கீர்த்தி இராமா நுசமுனிதன்
வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன்—ஆய்ந்த பெருஞ்
சீரார் சடகோபன் செந்தமிழ் வேதந் தரிக்கும்
பேராத வுள்ளம் பெற.

வான்திகழுஞ்சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்
ஆன்ற தமிழ்மறைக ளாயிரமும்—ஈன்ற
முதற்றாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த
இதத்தாய் இராமா நுசன்.

மிக்க விறைநிலையும் மெய்யா முயிர்நிலையும்
தக்க நெறியுந் தடையாகித்—தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையு மோதுங் குருகையர்கோன்
யாழினிசை வேதத் தியல்.

பகவத்விஷய காலக்ஷேபத் தனியன்கள்

நாதம் பங்கஜநேத்ரராமயமுநாவராஸ்தவ்ய மாலாதராந்
யோகீந்த்ரம் குருகேசசந்த்ரஜலதிம் கோவிந்தகூராதிபௌ,
பட்டார்யம் நிகமாந்தயோகிஜகதாசார்யௌ ஸக்ருஷ்ணத்வயௌ
வந்தே மாதவபத்மநாபஸுமந: கோலேச தேவாதிபாந்.
நமோ வேதாந்தவேத்யாய ஜகந்மங்களஹேதவே,
யஸ்ய வாகம்ருதாஸாரபூரிதம் புவநத்ரயம்.
வேதாந்த வேத்யாம்ருதவாரிராசே: வேதார்த்தஸாராம்ருதபூரமக்ர்யம்,
ஆதாய வர்ஷந்தமஹம் ப்ரபத்யே காருண்யபூர்ணம் கலிவைரிதாஸம்.
ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே,
யத்கடாக்ஷைகலக்ஷ்யாணாம் ஸுலப: ஸ்ரீதரஸ் ஸதா.
ஸ்ரீக்ருஷ்ணபாதபாதாப்ஜே நமாமி சிரஸா ஸதா,
யத்ப்ரஸாதப்ரபாவேந ஸர்வஸித்திரபூந்மம.
லோகாசார்யாய குரவே க்ருஷ்ணபாதஸ்ய ஸூநவே,
ஸம்ஸாரபோகிஸந்தஷ்ட ஜீவஜீவாதவே நம:.
ச்ருத்யர்த்தஸாரஜநகம் ஸ்ம்ருதிபாலமித்ரம்
பத்மோல்லஸத்பகவதங்க்ரி புராணபந்தும்,
ஜ்ஞாநாதிராஜமபயப்ரதராஜபுத்ரம்
அஸ்மத்குரும் பரமகாருணிகம் நமாமி.
த்ராவிடாம்நாயஹ்ருதயம் குருபர்வ க்ரமாகதம்,
ரம்யஜாமாத்ருதேவேந தர்சிதம் க்ருஷ்ணஸூநுநா.
ஸுந்தரஜாமாத்ருமுநே: ப்ரபத்யே சரணாம்புஜம்,
ஸம்ஸாரார்ணவஸம்மக்ந ஜந்துஸந்தாரபோதகம்.
நமோஸ்து தேவராஜாய சதுர்க்ராம நிவாஸிநே'
ராமாநுஜார்யதாஸஸ்ய ஸுதாய குணசாலிநே.
நம:ஸ்ரீசைலநாதாய குந்தீநகரஜந்மநே,
ப்ரஸாதலப்தபரமப்ராப்யகைங்கர்யசாலிநே.
ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்,
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்.

(இனி ஸ்வாசார்ய தனியன்களை அநுஸந்திப்பது)

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

திருவாய்மொழி வ்யாக்யானங்களின் அவதாரிகைகள்

நஞ்சீயர் அருளிச்செய்த ஒன்பதினாயிரப்படியின் அவதாரிகை

இந்தஜகத்தில், சிதசித்நீச்வரர்களுடைய ஸ்வரூபஸ்வபாவங்களொன்றையும் அறியாதே புருஷார்த்தோபாயங்களொன்றிலும் சூளாதே, சப்தாதிவிஷயங்களிலே மிகவும்மண்டி, பொறுக்கவும் கடக்கவு மொண்ணாதிருக்கிற ஸம்ஸாரது:கஸாகரத்திலே அழுந்தாநின்ற சேதநருக்கு "துர்லபோ மாநுஷோ தேஹ:, தேஹிநாம் க்ஷணபங்குர:, தத்ராபி துர்லபம் மந்யே வைகுண்டப்ரியதர்சநம்" என்கிறபடியே புருஷார்த்தோபயோகியான மநுஷ்யசரீரம் துர்லபம். இப்படி துர்லபமானசரீரத்தைப் பெற்றாலும் மோக்ஷேச்சை பிறக்கை அரிது: மோக்ஷேச்சை பிறந்தாலும் நிரதிசயஸுகரூபமாய் பகவத்குணாநுபவகாரிதமான தத்கைங்கர்யப்ராப்திரூப மோக்ஷேச்சை ஒருவர்க்கும் பிறக்கிறதல்ல. "பாகவதசேஷதைகாதித்வா பாவம் கிம்புநர்ந்யாயஸித்தம். "கலௌ ஜகத்பதிம்" இத்யாதி ச்லோகத்திற்படியாலே மிகவும் கலிகாலத்தில் பகவத்ருசி ஒருவர்க்கும் பிறக்கிறதல்ல. இத்தன்மையை "மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு" இத்யாதி ச்லோகத்தாலே எம்பெருமான்தானும் அருளிச்செய்தான். இப்படியிருக்கிற ஸம்ஸாரத்திலே "ததோகில ஜகத்பத்ம" இத்யாதி ச்லோகத்திற் சொல்லுகிறபடியே ஜகத்தில் அஜ்ஞாநாந்தகாரமெல்லாம் நீங்கி லோகமெல்லாம் வாழும்படியாகச் சேதநர் பண்ணின பாக்யத்தாலே, ஆழ்வார் திருநகரியிலே வந்து திருவவதாரம் பண்ணியருளி, "ஜனிதம் பாஷிதம்" இத்யாதி ச்லோகத்திற்படியாலே பகவத்ப்ரஸாதத்தாலே ஸாக்ஷாத்க்ருதமான பகவத்ஸ்வரூபரூபகுணவிபூதிகளையுடையராய், "ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்" என்று எம்பெருமான் அருளிச்செய்த ஜ்ஞாநிகளுக்கு அக்ரேஸரராய், "பால்யாத்ப்ரப்ருதிஸுஸ்நிக்த:" "நச ஸீதா த்வயா ஹீநா" என்று சொல்லுகிறபடிகளையுடைய இளையபெருமாளைப்போலே ஜந்மப்ரப்ருதி எம்பெருமானையே தாரகாதிகளாகவுடையராய், அவனைப் பிரியில் தரியாத தன்மையருமாய், நிரஸ்தநிகிலஸாம்ஸாரிக ஸ்வபாவருமாய், "ந தேவலோகாக்ரமணம்" இத்யாதி ச்லோகத்திற் சொல்லுகிறபடியே பகவத்வ்யதிரிக்த புருஷார்த்தப்ரஸ்தாவத்திலே வெருவும் ஸ்வபாவருமாய், "விஸ்தரேணாத்மநோ யோகம்" "ந தத்ருப்ய ஸமாயாந்தம்" இத்யாதியிற் சொல்லுகிறபடிகளையுடைய அர்ஜுந தசரதாதிகளைப்போலே காலதத்த்வமுள்ளதனையும் எம்பெருமானை அநுபவித்தாலும் த்ருப்தி பிறவாதே மேன்மேலெனக் கடல்போலே பெருகுகிற தம்முடைய அபிநிவேசத்தாலே கபளீக்ருத சிதசித்நீச்வரதத்வத்ரயத்தையுமுடையருமாய், பிராட்டிமார்பக்கலாதல் அந்த லக்ஷ்மணபரதாதிகள்பக்கலாதல் ஸ்ரீகோபிமார்பக்கலாதல் தம்முடைய இப்படிக்கு ஸர்வதாஸாம்யம் காணவொண்ணாதபடியான ப்ரபாவத்தையுடையருமாய், "தர்மாத்மா ஸத்யசௌசாதிகுணாநாமாகரஸ்ததா" இத்யாதி ச்லோகத்தில் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானை ஸாதுக்களுக்கெல்லாம் உபமாநபூமியாகச் சொன்னாற்போலே எல்லாருக்கும் தம்முடைய ஒரோவகைகளாலே உபமாந பூமியுமாய், "குணைர்தாஸ்யமுபாகத:" என்னும்படியாலே, பகவத்குணங்களுக்குத் தோற்று அடிமைகொள்ளுவது புகுவதும் செய்து, "அஹம்தாவத்" இத்யாதி ச்லோகத்திற்படியே பகவதைகாந்த்யஸீமையுமாய், "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்னும்படியாலே எப்பேர்ப்பட்ட அடிமையும் செய்தல்லது தரியாதபடியையுடையருமாய், தம்முடைய ஸந்நிதிமாத்ரத்தாலே எல்லாருடைய அஹங்கார

மமகாரரூபமான அவித்யாக்யதமஸ்ஸைப் போக்கி ஜ்ஞாநபக்திகளைப் பிறப்பித்து அவர்களை பகவத்கைங்கர்யலக்ஷண மோக்ஷத்துக்கு ஈலவராக்கும் ஸ்வபாவத்தையுடையராய்க்கொண்டு வளர்ந்தருளுகிற காலத்திலே, இவருடைய பகவதநுபவம் உள்ளடங்காமை வேதங்களிலும் வேதோபப்ருஹ்மணமான இதிஹாஸபுராணாதிகளிலுமுண்டான ஸம்சயங்களை அறுக்கைக்கீடான ஸாத்குண்யத்தையுடைத்தான திருவிருத்தம் திருவாசிரியம் திருவந்தாதி திருவாய்மொழியாகிற ப்ரபந்தங்களாய்க்கொண்டு ப்ரவ்ருத்தமாயிற்று. இப்படி "அவாவிலந்தாதிகளாலிவையாயிரமும்" என்று ஆழ்வார்தாமே அருளிச்செய்தார்.

இது இங்ஙனாகில், இப்ப்ரபந்தங்களுக்குப் பாட்டும் ஸங்க்யையும், பாட்டுக்கள் நாலடியாகையும், அக்ஷரங்கள் ஸமமாகையும் கூடக்கமான இப்ப்ரபந்தலக்ஷணங்கள் சேரவிழுந்தபடி எங்ஙனே ? என்னில்;—சோகவேகத்தாலே பிறந்த "மாநிஷாத" இத்யாதி ச்லோகமானது "மச்சந்தாதேவ" என்கிற ச்லோகத்தின்படியே ப்ரஹ்மாவின் ப்ரஸாதத்தாலே ஸர்வலக்ஷணோபேதமானாற்போலே, பகவத்ப்ரஸாதமடியாகப் பிறந்த இப்ப்ரபந்தங்களுக்கு இவற்றில் கூடாததில்லை "இவை என்னகோடியிலே அடைக்கப்பட்ட ப்ரபந்தங்கள் ? இவை பிறந்தபடி எங்ஙனே? இவற்றிற்கு மூலமென்? ஒன்றை மூலமாகச்சொன்னால் அது மூலமென்றறியும்படி எங்ஙனே ? இவை ப்ரமாணமென்று அறிவது எத்தாலே? இவற்றுக்கு ப்ரதிபாத்யர் ஆர்? இப்ப்ரபந்தங்கள் கற்கைக்கு அதிகாரிகள் யார் ? இவற்றுக்கு போக்தாக்கள் யார் ? இவை எதுக்காகப் பண்ணப்பட்டன ?" என்று அவ்யுத்பந்நர் கேட்கில் ;—இவை புருஷார்த்தப்ரகாசகமான ப்ரபந்தங்களில் ப்ரதாநமான ப்ரபந்தங்கள்; பகவதநுபவ ஜநித ஹர்ஷப்ரகர்ஷ பலாத்காரம் சொல்லுவிக்கப் பிறந்தன : பகவத்ப்ரஸாதலப்தமான திவ்யசக்ஷுர்மூலமாகப் பிறந்தன வென்னுமிடம் ஸ்வாவசநவ்யக்திகளாலே அறியலாம் : வேதார்த்தவித்துக்களான ஸர்வசிஷ்டஜநங்களும் பரிக்ரஹிக்கையாலும், ஸம்ஸாரத்தில் உத்வேகப்பிறந்தாருக்கு ஜ்ஞாதவ்யமான வேதார்த்தங்களை இப் ப்ரபந்தங்களிலே காண்கையாலும், இவை உத்க்ருஷ்டதமமான ப்ரமாணங்க ளென்று அறியலாம் ; எல்லாருக்கும் பரமப்ராப்யபூதனை ச்ரிய:பதி இப்ப்ரபந்தங்களுக்கு ப்ரதிபாத்யன் ; ஸம்ஸாரத்தில் ருசியற்று எம்பெருமான் திருவடிகளிலே எப்பேர்ப்பட்ட அடிமைகளும் செய்யவேணுமென்றிருக்குமவன் இவை கற்கைக்கு அதிகாரி; முமுக்ஷுக்களும் முக்தரும் நித்யரும் ச்ரிய:பதியான எம்பெருமான் தானும் இவற்றுக்கு போக்தாக்கள்; பகவத்கைங்கர்யமாகிற நிரதிசய புருஷார்த்தம் இன்னபடிப்பட்டிருக்குமென்று அறிவிக்கைக்காகப் பிறந்த ப்ரபந்தங்கள் இவை" என்று சிரோபாஸித ஸத்வ்ருத்தராயிருப்பார் பரிஹரித்தார்கள்.

"த்ரவிடபாஷையா யிருக்கையாலும், இப்ப்ரபந்தங்களை ஸ்த்ரீசூத்ராதிகளும் அப்யஸிக்கக் காண்கையாலும், இக்கலிகாலத்திலே ஜ்ஞாநத்துக்கு அடைவில்லாத சதுர்த்த வர்ணத்திலே பிறந்தாரொருவராலே நிர்மிதங்களாகையாலும், தேசாந்தரங்களிலின்றிக்கே ப்ராதேசிகங்களாகையாலும், அவைதிகர் க்ரஹிக்கையாலும், ச்ருதிஸ்ம்ருதிவிருத்தமான காமபுருஷார்த்தத்தைப் பலகால் பேசுகையாலும், ச்ருதிஸ்ம்ருதிகளில் புருஷார்த்தமாகச் சொல்லப்படுகிற ஐச்வர்ய கைவல்யங்களைக் காற்கடைக்கொள்ளுகையாலும், இப்ப்ரபந்தங்கள் ப்ரமாணமாகமாட்டா" என்று வைதிககோஷ்டியில் பழக்கமில்லாதார் சில அறிவுகேடர் ப்ரலாபமாத்ரம்பண்ண, மாத்ஸ்யபுராணத்திலே பாஷாந்தரத்திலே பாடாநின்றுள்ள கைசிகனைத் தன் நாட்டினின்றும் போகவிட்ட ராஜாவைக்குறித்து, "ஹரிகீர்த்திம் விநைவாந்யத் ப்ராஹ்மணேந நரோத்தம, பாஷாகாநம் நகாதவ்யம் தஸ்மாத்பாபம் த்வயாக்ருதம்" என்ற வசனத்தின்படியே பாஷா நிஷேதம் பகவத்விஷயமொழிய பாஹ்யவிஷயங்களிலேயாகையாலும், இங்ஙனன்றிக்கே பாஷா மாத்ரவதியாக விதிநிஷேதங்களை அங்கீகரிக்கில் ஸம்ஸ்க்ருத பாஷையான பாஹ்யசாஸ்த்ராப்யாஸங்கள் பண்ண ப்ரஸங்கிக்கையாலும், ஆழ்வார் தம்முடைய க்ருபாதிசயத்தாலே வேதத்தில் அநதிகாரிகளான ஸ்த்ரீசூத்ராதிகளும் இழவாதபடி வேதார்த்தத்தை த்ராவிட பாஷையாலே அருளிச் செய்கையாலும், "எதிர்சூழல்புக்கு" என்னுங்கணக்காலே அநேக ஜந்மங்கள் எம்பெருமான் தானே தொடர்ந்து விஷயீகரிக்கைக்கு ஈடான பாக்யத்தையுடையராய், நிரந்தர பகவத் கடாக்ஷபாத்ரருமாய்,

தத்வஹிதங்களில் நிபுணராய், அவற்றினுடைய உபதேசத்திலும் ப்ரவ்ருத்தராய், விதுர சபர்யாதிகளில் விலக்ஷணரான ஆழ்வார்பக்கலிலே இப்ப்ரபந்தங்கள் பிறக்கையாலும், இப்பாஷை நடையாடி சிஷ்டப்ரசுரமான தேசங்களெங்கும் உண்டாய் பாஷாந்தரங்களிலே பிறந்து விலக்ஷணராயுள்ளாரும் இவற்றின் வைலக்ஷண்யத்தைக் கேட்டு "இவற்றை அப்யஸிக்கைக்கு ஈடான இப்பாஷை நடையாடுந் தேசத்திலே பிறக்கப்பெற்றிலோமே!" என்றிருக்கையாலும், இவற்றின் நன்மையைக் கண்ட அவைதிகனுங் கூடப் பரிக்ரஹிக்கை ச்லாக்யதாஹேதுவாகையாலும், வேதநமென்றும் உபாஸநமென்றும் உபநிஷத்துத் தன்னில் சொல்லப்படுகிற பக்தியை இவற்றில் காமமாகச் சொல்லுகையாலும் ஐச்வர்யகைவல்யங்களை தூஷித்தது- அல்பாஸ்திரத்வாதி தோஷத்தாலே யாகையாலும், ப்ரதிபாத்யனான எம்பெருமானுடைய மாஹாத்ம்யத்தாலும், அவனை ஸுஸ்பஷ்டமாகப் ப்ரதிபாதிக்கையாலும், பக்திக்கும் உத்பாதகங்களாகையாலும், உத்பன்னையான பக்திக்கு வர்த்தகங்களாகையாலும், ச்ரவணாதிகளில் அப்போதே நிரதிசய ப்ரீதி ஜநகங்களாகையாலும், இவற்றிற் சொல்லுகிற பொருளுக்குப் பலவிடங்களிலும் வேதத்தை ஸாக்ஷியாகச் சொல்லுகையாலும், ப்ரஹ்ம காரணவாதத்தாலும், ப்ரஹ்மஜ்ஞாநாந் மோக்ஷத்தைச் சொல்லுகையாலும், புருஷார்த்த விஷயமான ப்ரபந்தங்களெல்லாவற்றிலும் இப்ப்ரபந்தங்களை த்ருடதரப்ரமாணங்களாக உபபாதித்து வைதிககோஷ்டிகளில் அபியுக்தரானவர்கள் பரிஹரித்தார்கள்.

பகவத்ப்ரஸாதத்தாலே பரிபூர்ணமாக அவனை அநுபவித்துப் பூர்ணராயிருந்த ஆழ்வாருக்கு எம்பெருமானைப் பிரிகையும், பிரிவாலே நோவுபட்டுக் கூப்பிடுகையும் கூடினபடி எங்ஙனே? என்னில்;—ஒரோகுணத்தை அநுபவித்தால் அநுபூதகுணங்களிலுண்டான ப்ரீதிப்ரகர்ஷம் க்ஷுத்ரவிஷயங்களில் வைராக்யத்தைப் பிறப்பித்து குணாந்தரங்களிலே ஸ்ப்ருஹையைப் பிறப்பிக்கும்; அக்குணங்களில் க்ரமப்ராப்திபற்றாதே யாதொருபோது ஆசை மிக்கது, அப்போது ஆசைப்பட்ட பொருள் கிடையாமையாலும், பகவதநுபவ விரோதியான ப்ரக்ருதி ஸம்பந்த ஸ்மரணாதிகளாலுமாக பகவத்விஷயத்தில் அநுபவித்த அம்சத்தையும் இழந்து நோவுபடாநிற்பர். பஹுகுணனான எம்பெருமான்பக்கலிலே நிரதிசய பக்திமான்களாய், தத்ஸம்ச்லேஷ விச்லேஷைக ஸுகது:கராய், அவனையல்லது அறியாதபடியாய், பகவதநுபவஸுகமே மிக்கபோது இதரபதார்த்தங்களுமெல்லாம் தம்மைப்போலே எம்பெருமானைப்பெற்று ஸுகிக்கிறனவாக நினைத்தும், விச்லேஷமென்று ஒருபதார்த்த முண்டென்று அறியாதே லோகயாத்ரையோடு ஒக்க மறந்தும், விச்லேஷவ்யஸநம் மிக்கால் ஸம்ச்லேஷரஸமுண்டென்றும் அறியாதே, அந்யபரமான இதரபதார்த்தங்களுமெல்லாம் தம்மைப்போலே எம்பெருமானைப் பிரிந்து நோவுபடுகிறனவாகக் கொண்டு அவற்றுக்குமாகத் தாம் நோவுபடாநிற்பர். இவருக்கு ப்ரியாப்ரியங்கள் ஒருகாலும் முடியாதே பர்யாயேண உண்டாயிருக்கையாலே சிந்தயந்தியுடையபடி நித்யமாய்ச் செல்லுமென்று சொல்லுவர்.

சேதநருக்கு ஸ்த்ர்யந்ந பாநாதிகளே தாரகபோஷக போக்யங்களாய்ச் செல்லாநிற்க, இவரை பகவத்குணைகதாரகரென்னக் கூடுமோ? என்னில்;—திருவயோத்யையிலும் கோஸல ஜநபதத்திலுமுள்ள ஸ்தாவரஜங்கமங்களுடைய ராமகுணைகதாரகங்களாயிருக்கும்படியை அநுஸந்தித்து இதுவுங்கூடுமென்று கொள்வது. இப்படியிருக்கிற இவர்க்கு எம்பெருமானோடு ஸம்ச்லேஷமாவது—ப்ரத்யக்ஷஸமாநாகாரமான ஜ்ஞாநஸாக்ஷாத்காரம்; விச்லேஷமாவது—பாஹ்யஸம்ச்லேஷாபேக்ஷைபண்ணி அதுபெறாமையாலே மாநஸாநுபவத்துக்கு வந்த கலக்கம். ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தனாய் ஸர்வநியந்தாவாய் நிரவதிகக்ருபாவானாயிருந்த எம்பெருமான் இவருடைய இவ்வநுபவத்தை உருவ நடத்தாதே விச்சேதித்ததுக்கு ப்ரயோஜநமென்? என்னில்; — திருவயோத்யையிலும் திருக்குரவையிலும் பிரிந்த பிரிவிற்போலே இவர்க்கு அநுபூதகுணங்கள் ஸாத்மிக்கைக்கும் மேன்மேலென த்ருஷ்ணை பிறக்கைக்கும். எம்பெருமான்பக்கல் பிறந்த ஆசை முதிர்ந்து நினைத்தபடி பெறவிட்டவாறே சோக மோஹங்கள் பிறக்கும். இப்படியுள்ள கலவியாலும் பிரிவாலும் ஆழ்வாருக்கு வந்த தசை அந்யாபதேசப்பேச்சைப் பேசுவிக்கும். இப்ப்ரபந்தங்களில் ஸூக்திகள் ப்ராப்யனான எம்பெருமானுடைய ஸ்வரூப ப்ரதிபாதகங்களாயிருக்கும் சில; ப்ராப்தாவான ப்ரத்யகாத்மஸ்வ

ரூப விஷயமாயிருக்கும் சில; ப்ராப்[illegible] சொல்லாநிற்கும் சில; [illegible] நிற்கும் சில; ப்ராப்தி விரோதி[illegible] [illegible] சில; அவசிஷ்டமானவை [illegible] களுக்கு உபபாதகங்களாயிருக்கும். [illegible] [illegible] பலம்; ததர்த்தமாக [illegible] நாலர்த்தமும் சொல்லுகிறது.

இவற்றில் ப்ரதம ப்ரபந்தமான [illegible] த்வதநுபவ விரோதியான ஸம்[illegible] பந்தத்தை யறுத்துத் தந்[illegible] எம்பெருமானை அர்த்திக்கிறார். திருவாசிரியத் தில் நிவ்ருத்தஸம்ஸாரர்க்கு [illegible] எம்பெருமானைப் பரிபூர்ணமாக அநுபவித்துப் [illegible] கிறார். பெரியதிருவந்தாதியில் [illegible] எம்பெருமானை அநுபவிக்கையாலே, ததநுகுணமாக த்ருஷ்ணை பிறந்து [illegible] அவனைப் பேசியும் நினைத்தும் [illegible] கிறார். திருவாய்மொழியில் இ[illegible] [illegible]னாக ச்ரிய:பதியாய், ஸமஸ்தகல்யாண குணாத்மகனாய், தனக்குத் தகுதியான [illegible] முடையனாய், திவ்யபூஷணபூஷிதனு மாய், சங்கசக்ராதி திவ்யாயுதனாய், [illegible] ஆநந்தமயமான திவ்யாஸ்தாந ரத்நமண்டபத்திலே பிராட்டிமா[illegible] திவ்யஸிம்ஹாஸநத்திலே வீற்றிருந்தருளி அஸ் தாநேபயுசங்கிகளான அயர்வறும[illegible] அவாதபரிசர்யமாண சரணநளினனாய்க் கொண்டு அங்கு அங்ஙனே செல்லாநிற்க; [illegible]பாபத்தஸ்வருபஸ்திதி ப்ரவ்ருத்திகமான ஸ்வேதரஸமஸ்தத்தையும் சரீரதயா [illegible]னாய், அந்தராத்மதயா சேதநாசேதநங் களை அடைய வ்யாபித்து, தத்கதிதோஷை [illegible]னாய், நாராயணாதி நாமங்களைத் தனக்கு வாசகமாகவுடையனாய், [illegible]னுமாய், இப்படி விலக்ஷணனுமா யிருந்து வைத்து ஆச்ரிதர்[illegible] தேவமநுஷ்யாதி ஸஜாதீயனாய்வந்து திருவவதாரம்பண்ணும் ஸ்வபாவனுமாய், தன்னுடைய திருவவதாரங்களிலும் உதவுகைக் கிடான பாக்யமில்லாதார்க்கும் இழக்கவேண்டாதபடி ஸர்வாபராதஸஹனாய், பத்ரபுஷ்பாதி களாலே ஸ்வாராதனாய்க்கொண்டு ஆச்ரிதர்க்கு அ[illegible]னாய், அவர்களுடைய இச்சாநு குணமான போஜநசயநாதிகளையுடையனாய், [illegible] பரிபூர்ணனான தானே ஆச்ரித ஸௌலப்யார்த்தமாகக் கோயில்களிலே வந்து [illegible]யும், இப்படியுள்ள ஸர்வேச் வரத்வத்துக்கும் ஆச்ரிதாநுக்ரஹத்துக்கும் [illegible]னால் பரிபூர்ணனான எம்பெரு மான், தன்னை நிர்ஹேதுகமாகக் காட்டியருளக் கண்டு அநுபவித்துத் தம்முடைய ப்ரக்ருதி ஸம்பந்தமாகிற ப்ரதிபந்தகமும் அற்று எம்பெருமானைப் பெற்று முடிக்கிறார். இனிச்சொல்ல வேண்டுவன அவ்வவ திருவாய்மொழிகள்தோறும் சொல்லக் கண்டுகொள்வது.

முதல் திருவாய்மொழியிற் சொல்லிற்றாயிற்று - [illegible]பூர்ணமாய் அபரிச்சேத்யமான கடலை முந்துறத் திரளக்கண்டாற்போலே ஸ்வரூப குணவிபூதிகளால் பரிபூர்ணனாய், எல்லாப் படியாலும் எல்லாரிலும் மேற்பட்டு ஸர்வேச்வரருபனாய் ச்ரிய:பதியாக அபௌருஷேயமாய்க் கொண்டு ஸ்வத:ப்ரமாணமான ச்ருதிகளாலே ப்ரதிபாதிக்கப்பட்ட எம்பெருமானை, பாஹ்ய குத்ருஷ்டிகளால் அவிசால்யமாம்படி அவன்ப்ரஸாதத்தாலே ஸாக்ஷாத்கரித்து அநுபவித்து, அநுபவஜநித ப்ரீதி உள்ளடங்காமை, அநுபவித்தபடியே ஸவிபூதிகனான எம்பெருமானைப் பேசி, ஏவம்விதனானவன் திருவடிகளிலே அடிமைசெய்து உஜ்ஜீவி யென்று தந்திருவுள்ளத் தைக் குறித்து அருளிச்செய்கிறார். கடலைத் திரளக்கண்டானொருவன் அதில் திரைகளையும் மற்றும் அங்குண்டான ரத்நாதிகளையும் தனித்தனியே காணுமாபோலே, முதல்திருவாய்மொழி யில் திரள அநுபவிக்கப்பட்ட எம்பெருமானுடைய ஒரோவகைகளிலே ஒரோ திருவாய்மொழி யாய்ச் செல்லுகிறது, இரண்டாந்திருவாய்மொழி துடங்கி மேலெல்லாம். இப்படிச்செய்தார் இவரேயல்ல, பாரதராமாயணங்களைப்பண்ணின வ்யாஸாதிகளும் ஸங்க்ஷேபவிஸ்தரங்களாலே தங்கள் ப்ரபந்தங்களை ப்ரபந்திகரித்தார்கள்.

பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்த இருபத்து நாலாயிரப்படியின் அவதாரிகை

இந்த ஜகத்தில் சிதசிதீச்வரர்களுடைய ஸ்வரூபஸ்வபாவங்களொன்றும் அறியாதே, புருஷார்த்தோபாயங்களுள் ஒன்றிலும் மூளாதே, சப்தாதிவிஷயங்களிலே மிகவும் மண்டி, பொறுக்கவும் கடக்கவு மொண்ணாதே யிருக்கிற ஸாம்ஸாரிகமான து:கஸாகரத்திலே அழுந்தாநின்றுள்ள சேதநர்க்கு, “துர்லபோமாநுஷோதேஹ: தேஹிநாம்க்ஷணபங்குர: தத்ராபி துர்லபம் மந்யே வைகுண்டப்ரிய தர்சநம்.” என்கிறபடியே புருஷார்த்தோபயோகியான மநுஷ்யசரீரம் துர்லபம். இப்படி துர்லபமான சரீரத்தைப் பெறிலும் மோக்ஷேச்சை பிறக்கை அரிது. “மாநுஷ்யம் ப்ராப்ய லோகேஸ்மிந், அமூகோZபதிரோபிவா, நாபக்ராமதி ஸம்ஸாராத்ஸகலுப்ரஹ்மஹாபவேத்” என்கிறபடியே இந்தலோகத்திலே மநுஷ்ய சரீரத்தைப் பெற்று மூகபதிரனு மன்றிக்கே யிருக்கிறவன் ஸம்ஸாராத் உத்தீர்ணனாகாதவன், ப்ரஹ்மஹந்தாவாகக் கடவனிறே. மோக்ஷேச்சை பிறந்தாலும் நிரதிசயஸுகரூபமாய் பகவத்குணாநுபவகாரிதமான தத்கைங்கர்யப்ராப்திரூபமான மோக்ஷேச்சை ஒருவர்க்கும் பிறக்கிறதல்ல. பாகவதசேஷதைகரதித்வாபாவம் கிம்புநர்ந்யாயஸித்தம். இவ்வர்த்தத்திலே ஸ்ரீபராசரப்ரஹ்மர்ஷியும் “கலௌ ஜகத்பதிம்” இத்யாதி ச்லோகத்திற் சொல்லுகிறபடியாலே, மிகவும் கலிகாலத்தில் பகவத்ருசி ஒருவருக்கும் பிறக்கிறதல்ல. இத்தன்மையை “மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு” இத்யாதி ச்லோகத்திற் சொல்லுகிறபடியாலே எம்பெருமான் தானும் அருளிச்செய்தான். இப்படியிருக்கிற ஸம்ஸாரத்திலே “ததோZகிலஜகத்பத்ம” இத்யாதி ச்லோகத்திற் சொல்லுகிறபடியே இஜ்ஜகத்தில் அஜ்ஞாநாந்தகாரமெல்லாம் நீங்கி லோகமெல்லாம் வாழும்படியாகச் சேதநர் பண்ணின பாக்யவசத்தாலே ஆழ்வார் திருநகரியிலே வந்து திருவவதாரம் பண்ணியருளினார். “ஹஸிதம் பாஷிதம்”, “ப்ரஸாதாத்” இத்யாதி ச்லோகங்களிற்படியே பகவத்ப்ரஸாதத்தாலே ஸாக்ஷாத்க்ருதமான பகவத்ஸ்வரூபரூபகுணவிபூதிகளையுடையராய், “ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்” என்று எம்பெருமான் அருளிச்செய்த ஜ்ஞாநிகளுக்கெல்லாம் அக்ரேஸரராய்; “பால்யாத்ப்ரப்ருதிஸுஸ்நிக்த:- லக்ஷ்மணோலக்ஷ்மிவர்த்தந:” “நசஸீதா த்வயாஹீநா” என்று சொல்லுகிற படிகளையுடைய இளையபெருமாளைப்போலே ஜந்மப்ரப்ருதி எம்பெருமானையே தாரகாதிகளாக வுடையராய், அவனைப் பிரியில் தரியாத தன்மையருமாய், நிரஸ்தநிகில ஸாம்ஸாரிக ஸ்வபாவருமாய், “நதேவலோகாக்ரமணம்” இத்யாதி ச்லோகத்திற் சொல்லுகிறபடியே பகவத்வ்யதிரிக்த புருஷார்த்த ப்ரஸ்தாவத்திலே வெருவும் ஸ்வபாவருமாய் “விஸ்தரேணாத்மநோயோகம்” “நததர்ப்ப ஸமாயாந்தம் பச்யமாநோ நராதிப:” இத்யாதி ச்லோகங்களிற் சொல்லுகிற படிகளையுடைய அர்ஜுந தசரதாதிகளைப்போலே காலதத்த்வமுள்ளதனையும் எம்பெருமானை அநுபவியாநின்றாலும் த்ருப்தி பிறவாதே, மேன்மேலெனக் கடல்போலே பெருகுகிற தம்முடைய அபிநிவேசாதிசயத்தாலே கபளீக்ருதமான சிதசிதீச்வர தத்த்வத்ரயத்தையுடையருமாய், பிராட்டிமார்பக்கலாதல் நித்யஸூரிகள்பக்கலாதல் லக்ஷ்மண பரதாதிகள்பக்கலாதல் ஸ்ரீகோபிமார்கள்பக்கலாதல் தம்முடைய இப்படிகளுக்கு ஸர்வதா ஸாம்யம் கொள்ளவொண்ணாத ப்ரபாவத்தை யுடையருமாய், “தர்மாத்மாஸத்யசௌசாதி குணாநாமாகரஸ்ததா, உபமாநமசேஷாணாம் ஸாதூநாம் யஸ்ஸதாபவத்” இத்யாதி ச்லோகத்தில் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானை ஸாதுக்களுக்கெல்லாம் உபமாநபூமியாகச் சொன்னாற்போலே எல்லாருக்கும் தம்முடைய ஓரோவகைகளாலே உபமாநபூமியுமாய், “குணைர்தாஸ்யமுபாகத:” என்னும்படியாலே பகவத்குணங்களுக்குத் தோற்று அடிமைபுகுவதுஞ் செய்து, “அஹம்தாவத்மஹாராஜே” இத்யாதி ச்லோகத்திற்படியும் “சேலேய்கண்ணியரும்” இத்யாதிப்படியே(யும்) பகவதைகாந்த்யஸீமையுமாய், “அஹம்ஸர்வம்கரிஷ்யாமி” என்றபடியாலே எப்பேர்ப்பட்ட அடிமைகளுஞ் செய்தல்லது தரிக்கமாட்டாத படியையு முடையராய், தம்முடைய ஸந்நிதிமாத்ரத்தாலே எல்லாருடைய அஹங்காரமமகார ரூபமான அவித்யாக்ய தமஸ்ஸைப் போக்கி அவர்களுக்கு ஜ்ஞாநபக்திகளைப் பிறப்பித்து அவர்களை பகவத்கைங்கர்யலக்ஷண மோக்ஷத்துக்கு நிலவராக்கும் ஸ்வபாவத்தையுடையராய்க்கொண்டு வளர்ந்தருளுகிற காலத்திலே, இவருடைய பகவத்குணாநுபவம் உள்ளடங்காமை வேதங்களிலும் வேதோபப்ரும்

ஷணமான இதிஹாஸபுராணாதிகளிலு முண்டான ஸம்சயங்களை அறுக்கைக்கு ஈடான ஸாத்குண்யத்தையுடைத்தாய்க்கொண்டு வேதஸங்க்யையிலே திருவிருத்தம் திருவாசிரியம் திருவந்தாதி திருவாய்மொழி யாகிற ப்ரபந்தங்களாய்க்கொண்டு ப்ரவ்ருத்தமாயிற்று. இப்படியை "அவாவிலந்தாதிகளாலிவையாயிரமும்" என்று ஆழ்வார்தாமே அருளிச்செய்தார்.

இங்ஙனாகில், இப்ப்ரபந்தங்களுக்குப் பாட்டும் ஸங்க்யையும் பாட்டுக்கு நாலடியாகையும் அக்ஷரங்கள் ஸமமாகையும் தொடக்கமான ப்ரபந்தலக்ஷணங்கள் சேரவிழுந்தபடி எங்ஙனே? என்னில்;—சோகவேகத்தாலே பிறந்த "மாநிஷாத" இத்யாதி ச்லோகமானது "மச்சந்தாதேவ" என்கிற ச்லோகத்தின்படியே ஸ்ரீவால்மீகிபகவானுக்கு ப்ரஹ்மாவின் ப்ரஸாதத்தாலே ஸர்வலக்ஷணோபேதமானாற்போலே, இவ்விடத்திலும் பகவத்ப்ரஸாதமடியாகப் பிறந்த இப் ப்ரபந்தங்களுக்குக் கூடாததில்லை. "இவை என்ன கோடியிலே அடைக்கப்பட்ட ப்ரபந்தங்கள்? இவை பிறந்தபடி எங்ஙனே? இவற்றுக்கு மூலமென்? ஒன்றை மூலமாகச் சொன்னால் அது மூலமென்று அறியும்படி எங்ஙனே? இவை ப்ரமாணமென்று அறிவது எத்தாலே? இவற்றுக்கு ப்ரதிபாத்யர் ஆர்? இப்ப்ரபந்தங்கள் கற்கைக்கு அதிகாரிகள் ஆர்? இவற்றுக்கு போக்தாக்கள் ஆர்? இவை எதுக்காகப் பண்ணப்பட்டன?" என்று சில அவ்யுத்பந்நர் கேட்கில்,—"இவை புருஷார்த்த ப்ரகாசகமான ப்ரபந்தங்களில், ப்ரதாந ப்ரபந்தங்கள்; பகவத்குணாநுபவஜநித ஹர்ஷப்ரகர்ஷ பலாத்காரம் சொல்லுவிக்கப் பிறந்தன. பகவத்ப்ரஸாதலப்தமான திவ்யசக்ஷுஸ்ஸு மூலமாகப் பிறந்தன வென்னுமிடம் ஸ்வர வசந வ்யக்திகளாலே அறியலாம். வேதார்த்தவித்துக்களான ஸர்வ சிஷ்டர்களும் பரிக்ரஹிக்கையாலும், ஸம்ஸாரத்தில் உத்வேகம் பிறந்தார்க்கு ஜ்ஞாதவ்யமான வேதார்த்தங்களை இப்ப்ரபந்தங்களிலே காண்கையாலும் இவை உத்க்ருஷ்டதமமான ப்ரமாணமென்று அறியலாம். எல்லார்க்கும் பரம ப்ராப்யபூதனான ச்ரிய:பதியான நாராயணன் இப்ப்ரபந்தங்களுக்கு ப்ரதிபாத்யன்; ஸம்ஸாரத்தில் ருசியற்று எம்பெருமான் திருவடிகளிலே எப்பேர்ப்பட்ட அடிமைகளும் செய்ய வேண்டுமென்றிருக்கு மவன் இவை கற்கைக்கு அதிகாரி; முமுக்ஷுக்களும் முக்தரும் நித்யரும் ச்ரிய:பதியான எம்பெருமான்தானும் இவற்றுக்கு போக்தாக்கள்; பகவத்கைங்கர்யமாகிற நிரதிசய புருஷார்த்தம் இன்னபடிப்பட்டிருக்குமென்று அறிவிக்கைக்காகப் பிறந்த ப்ரபந்தங்கள் இவை" என்று சிரோபாஸிதஸத்வ்ருத்தராயிருப்பார் பரிஹரித்தார்கள்.

இனி, "நிஷித்தபாஷையாயிருக்கையாலும், இப்ப்ரபந்தங்களை ஸ்த்ரீசூத்ராதிகள் அப்யஸிக்கக் காண்கையாலும், கலிகாலத்திலே ஜ்ஞாநத்துக்கு அடைவில்லாத சதுர்த்த வர்ணத்திலே பிறந்தாரொருவராலே நிர்மிதங்களாகையாலும், தேசாந்தரங்களிலின்றிக்கே ப்ராதேசிகங்களாகையாலும், அவைதிகருங்கூடப் பரிக்ரஹிக்கையாலும், ச்ருதி ஸ்ம்ருதி விருத்தமான காம புருஷார்த்தத்தைப் பலகாலும் பேசுகையாலும், ச்ருதிஸ்ம்ருதிகளில் புருஷார்த்ததயா சொல்லப்படுகிற ஐச்வர்யகைவல்யங்களைக் காற்கடைக் கொள்ளுகையாலும், இப்ப்ரபந்தங்கள் ப்ரமாணமாகமாட்டா" என்று வைதிககோஷ்டியில் பழக்கமில்லாதார் சில அறிவுகேடர் ப்ரத்யவஸ்தாநம்பண்ண, மாத்ஸ்யபுராணத்திலே பாஷாந்தரத்தாலே பாடாநின்றுள்ள கைசிகாதிகளைத் தன்னாட்டில் நின்றும் போகவிட்ட ராஜாவைக்குறித்து, "ஹரிகீர்த்திம் விநைவாந்யத் ப்ராஹ்மணேந நரோத்தம பாஷாகாநம் நகாதவ்யம் தஸ்மாத் பாபம் த்வயாக்ருதம்" என்கிற வசநத்தின்படியே பாஷாநிஷேதம் பகவத்விஷயமொழிய பாஹ்யவிஷயங்களிலே யாகையாலும், அவ்வளவன்றிக்கே பாஷாமாத்ராவதியாக விதிநிஷேதங்களை அங்கீகரிக்கில் ஸம்ஸ்க்ருத பாஷையான பாஹ்ய சாஸ்த்ராப்யாஸங்கள் பண்ண ப்ரஸங்கிக்கையாலும், ஆழ்வார்தாமும் தம்முடைய க்ருபாதிசயத்தாலே வேதத்தில் அநதிகாரிகளான ஸ்த்ரீசூத்ராதிகளும் இழவாதபடி வேதார்த்தத்தை த்ராவிடபாஷையாலே அருளிச்செய்கையாலும், "எதிர்சூழல்புக்கு" என்னும் கணக்காலே அநேக ஜந்மங்களில் எம்பெருமான்தானே தொடர்ந்து விஷயீகரிக்கைக்கு அடியான பாக்யவைபவத்தையுடையராய், நிரந்தர பகவத்கடாக்ஷ பாத்ரபூதருமாய், தத்த்வ ஹிதங்களில் அத்யந்தநிபுணருமாய், அவற்றினுடைய உபதேசத்திலும் ப்ரவ்ருத்தரான ஸூத தர்மவ்யாத விதுராதிகளில் அத்யந்த விலக்ஷணரான ஆழ்வார்பக்கலிலே இப்ப்ரபந்தங்கள் பிறக்கையாலும், இப்பாஷை நடையாடி சிஷ்டப்ரசுரமான தேசங்களெங்கும் உண்டாகை

யாலும், பாஷாந்தரங்களிலே பிறந்து விலக்ஷணராயுள்ளாரும் இவற்றின் வைலக்ஷண்யத்தைக் கேட்டு "இவற்றை அப்யஸிக்கைக்கு ஈடான இந்த பாஷை நடையாடுந் தேசத்திலே பிறக்கப் பெற்றிலோமே!" என்றிருக்கையாலும், இவற்றின் நன்மையைக் கண்டு அவைதிகருங் கூடப் பரிக்ரஹிக்கை ச்லாக்யதாஹேதுவாகையாலும், வேதநமென்றும் உபாஸநமென்றும் உபநிஷத்துக்களிற் சொல்லப்படுகிற பக்தியை இவற்றில் காமமாகச் சொல்லுகையாலும், ஐச்வர்யகைவல்யங்களை தூஷித்தது - அல்பாஸ்திரத்வாதி தோஷத்தாலே யாகையாலும், ப்ரதிபாத்யனான எம்பெருமானுடைய மாஹாத்ம்யத்தாலும், அவனை ஸுஸ்பஷ்டமாக ப்ரதிபாதிக்கையாலும், பக்திக்கு உத்பாதகங்களாகையாலும், உத்பந்நையான பக்திக்கு வர்த்தகங்களாகையாலும், ச்ரவணமாத்ரத்தில் அப்போதே நிரதிசயப்ரீதிஜநகங்களாகையாலும், இவைதன்னிற் சொல்லுகிற பொருள்களுக்குப் பலவிடங்களிலும் வேதத்தை ஸாக்ஷியாக எடுக்கையாலும், ப்ரஹ்மகாரணவாதத்தாலும், ப்ரஹ்மஜ்ஞாநாந் மோக்ஷத்தைச் சொல்லுகையாலும், புருஷார்த்தவிஷயங்களான ப்ரபந்தங்களெல்லாவற்றிலும் இப்ப்ரபந்தங்களை த்ருடதரப்ரமாணங்களாக உபபாதித்து வைதிககோஷ்டிகளில் அபியுக்தராயிருப்பார்கள் பரிஹரித்தார்கள்.

பகவத்ப்ரஸாதத்தாலே பரிபூர்ணமாக அவனை அநுபவித்துப் பூர்ணராய் எழுந்தருளியிருந்த ஆழ்வார்க்கு எம்பெருமானைப் பிரிகையும், பிரிவாலே நோவுபட்டுக் கூப்பிடுகையும் கூடினபடி எங்ஙனே? என்னில் ;—ஒரோகுணத்தை அநுபவித்தால் அநுபூத குணங்களிலுண்டான ப்ரீதிப்ரகர்ஷம் க்ஷுத்ரவிஷயங்களில் வைராக்யத்தைப் பிறப்பித்து குணாந்தரங்களிலே ஸ்ப்ருஹையைப் பிறப்பிக்கும்: அந்த குணங்களில் க்ரமப்ராப்தி பற்றுதபடி யாதொருபோது ஆசை மிக்கது, அப்போது ஆசைப்பட்ட பொருள் கிடையாமையாலும், பகவதநுபவ விரோதியான ப்ரக்ருதி ஸம்பந்தத்தின் ஸ்மரணாதிகளாலுமாக பகவத்விஷயத்தில் அநுபவித்த அம்சத்தையும் இழந்து நோவுபடாநிற்பர். பஹுகுணனான எம்பெருமான் பக்கலிலே நிரதிசய பக்திமான்களாய், தத்ஸம்ச்லேஷ விச்லேஷைக ஸுகதுஃக்கராய், அவனையல்லது அறியாதபடி பகவதநுபவ ஸுகம் மிக்கபோது இதர பதார்த்தங்களும் எல்லாம் தம்மைப் போலே எம்பெருமானைப் பெற்று ஸுகிக்கின்றனவாக நினைத்தும், விச்லேஷமென்று ஒரு பதார்த்தமுண்டென்றும் அறியாதே லோகயாத்ரையோடொக்க மறந்துபோருவர். விச்லேஷ வ்யஸநம் மிக்கால் ஸம்ச்லேஷம் உண்டென்றும் அறியாதே அந்யபரமான இதரபதார்த்தங்களுமெல்லாம் தம்மைப் போலே எம்பெருமானைப் பிரிந்து நோவுபடுகின்றனவாகக் கொண்டு அவற்றுக்குமாகத் தாமே நோவுபடாநிற்பர். இவருக்கு ப்ரியாப்ரியங்கள் ஒருகாலும் முடியாதே பர்யாயேண உண்டாயிருக்கையாலே இவருக்குச் சிந்தயந்தியுடையபடி நித்யமாய்ச் செல்லாநிற்குமென்பர்கள். சேதநர்க்கு அந்நபாநாதிகளே தாரகபோஷக போக்யங்களாய்ச் செல்லாநிற்க, இவரை பகவத்குணைகதாரகரென்னக்கூடுமோ? என்னில்;—திருவயோத்யையிலும் கோஸலஜநபதத்திலுமுள்ள ஸ்தாவர ஜங்கமங்களுடைய ராமகுணைகதாரகங்களாயிருக்கும்படியை அநுஸந்தித்து இதுவுங்கூடுமென்று கொள்வது. இப்படியிருக்கிற இவர்க்கு எம்பெருமானோடு ஸம்ச்லேஷமாவது - ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமான ஜ்ஞாநஸாக்ஷாத்காரம்: விச்லேஷமாவது - பாஹ்யஸம்ச்லேஷாபேக்ஷை பிறந்து அது பெறுமையாலே மாநஸாநுபவத்துக்கு வந்த கலக்கம். ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தனாய் ஸர்வநியந்தாவாய் நிரவதிகக்ருபாவானுமாயிருந்துள்ள எம்பெருமான் இவருடைய இவ்வநுபவத்தை முடிய நடத்தாதே விச்சேதிப்பித்ததுக்கு ப்ரயோஜநமென்? என்னில்,—திருவயோத்யையிலும் திருக்குரவையிலும் பிரிந்த பிரிவுபோலே இவர்க்கு அநுபூதகுணங்கள் ஸாத்மிக்கவும், மேன்மேலென த்ருஷ்ணை பிறக்கவும், இவர்க்கு எம்பெருமான்பக்கல் பிறந்த ஆசை முதிர்ந்து நினைத்தபடி ஸம்ச்லேஷிக்கவும் பெறுவிட்டவாறே சோகமோஹங்கள் பிறக்கும். இப்படியுள்ள கலவியாலும் பிரிவாலும் ஆழ்வாருக்குப் பிறந்த தசை அந்யாபதேசப்பேச்சைப் பேசுவிக்கும். இப்ப்ரபந்தங்களில் ஸூக்திகள் சில-ப்ராப்யனான எம்பெருமானுடைய ஸ்வரூப ப்ரதிபாதகங்களாயிருக்கும்; சில-ப்ராப்தாவான ப்ரத்யகாத்மஸ்வரூபவிஷயமாயிருக்கும்; சில - ப்ராப்த்யுபாயத்தைச் சொல்லாநிற்கும்; சில - பலத்தைச் சொல்லும்; சில - ப்ராப்த்யுபாயவிரோதிகளைச் சொல்லாநிற்கும்; அவசிஷ்டமானவை இவ்வர்த்தங்களுக்கு உபபாதகங்களாயிருக்கும். இவற்

றில் உத்தேச்யம் பலம்; அதாவது - கைங்கர்யம்; ததர்த்தமாக மற்றுள்ள நாலர்த்தமும் சொல்லுகிறது.

இனி இவற்றில் ப்ரதமப்ரபந்தமான திருவிருத்தத்தில் த்வதநுபவவிரோதியான ஸம்ஸாரஸம்பந்தத்தை அறுத்துத் தந்தருளவேணுமென்று எம்பெருமான் திருவடிகளிலே அர்த்திக்கிறார். திருவாசிரியத்தில் நிவ்ருத்த ஸம்ஸாரர்க்கு விஷயபூதனான எம்பெருமானைப் பரிபூர்ணமாக அநுபவித்து ப்ரீதராகிறார். பெரிய திருவந்தாதியில் நிரதிசயபோக்யனான எம்பெருமானை அநுபவிக்கையாலே ததநுகுணமாக த்ருஷ்ணை பிறந்து த்ருஷ்ணாநுகுணமாக அவனைப் பேசியும் நினைத்தும் தரிக்கிறார். திருவாய்மொழியில் இவருடைய த்ருஷ்ணாநுகுணமாக ச்ரிய:பதியாய் ஸமஸ்தகல்யாணகுணாத்மகனுமாய்த் தனக்குத்தகுதியான திவ்யமங்கள விக்ரஹ வைலக்ஷண்யத்தையுமுடையனாய் திவ்யபூஷணபூஷிதனுமாய் சங்க சக்ராதி திவ்யாயுததரனுமாய் பரமவ்யோமத்தில் ஆநந்தமயமான திவ்யாஸ்தாநரத்நமண்டபத்திலே "வைகுண்டே து" என்கிறபடியே பிராட்டிமாரோடே கூட திவ்யஸிம்ஹாஸநத்திலே வீற்றிருந்தருளி அஸ்தாநே பயசங்கிகளான அயர்வறுமமரர்களாலே அநவரதபரிசர்யமாண சரணநளிநனாய்க்கொண்டு, அங்கு அங்ஙனே செல்லாநிற்க, ஸ்வஸங்கல்பாயத்தஸ்வரூபஸ்திதிப்ரவ்ருத்திகமான ஸ்வேதர ஸமஸ்தத்தையும் தனக்கு சரீரதயா சேஷமாக வுடையனாய் அந்தராத்மதயா சேதநாசேதநங்களையடைய வ்யாபித்து, தத்கததோஷை ரஸம்ஸ்ப்ருஷ்டனாய், நாராயணாதி நாமங்களைத் தனக்கு வாசகமாகவுடையனாய், ஏவம்விதனாக உபநிஷத்ப்ரஸித்தனுமாய், இப்படி ஸர்வவிஸஜாதீயனாயிருந்துவைத்து அப்ராக்ருதமான தன்னுடைய திவ்யவிக்ரஹத்தை இதரஸஜாதீய மென்னலாம்படி யாக்கி ஆச்ரித வாத்ஸல்யத்தாலே தேவமநுஷ்யாதி ஸஜாதீயனாய் வந்து திருவவதாரம் பண்ணியருளும் ஸ்வபாவனுமாய், தன்னுடைய திருவவதாரங்களிலும் உதவப்பெறாத பாக்யஹீநருக்கும் இழக்கவேண்டாதபடி ஸர்வாபராதஸஹனாய், பத்ரபுஷ்பாதிகளாலே ஸ்வாராதனுமாய்க்கொண்டு ஆச்ரிதர்க்கு அத்யந்தபராதீநனுமாய், அவர்களுடைய இச்சாதீநமான போஜந சயநாதிகளையுடையனுமாய், ஸமஸ்தகல்யாணகுணபரிபூர்ணனுமாயிருக்கிற தானே ஆச்ரித ஸௌலபத்யார்த்தமாகக் கோயில் திருமலை தொடக்கமான திவ்யதேசங்களிலே வந்து நின்றருளியும், அவ்வளவு செல்லமாட்டாத ஸம்ஸாரிகளும் இழவாதபடி தன்னுடைய நிர்ஹேதுகக்ருபையாலே க்ராமங்களிலும் க்ருஹங்களிலும் எழுந்தருளியும், விஷயபரதந்த்ரனான இவன் செய்தவற்றை ஸாங்கஸமாராதநமாகக் கைக்கொண்டருளி ருசியைப் பிறப்பித்து இவனுக்கு இவ்விடந்தன்னிலேயிருக்கச்செய்தே போகமோக்ஷங்களைக் கொடுத்தும், இப்படியுள்ள ஸர்வேச்வரத்வத்துக்கும் ஆச்ரிதாநுக்ரஹத்துக்கும் ஏகாந்தமான படிகளால் பரிபூர்ணனான எம்பெருமான் தன்னைத்தானே நிர்ஹேதுக க்ருபையினாலே காட்டியருளக் கண்டு அநுபவித்துத் தாம் முதலிலே அபேக்ஷித்தபடியே தம்முடைய ப்ரக்ருதிஸம்பந்தமாகிற ப்ரதிபந்தகத்தை ஸவாஸநமாக அறுத்துக்கொடுக்கையாலே, நித்யவிபூதியிலே நித்யஸூரிகளோடே எம்பெருமானைப் பெற்று க்ருதார்த்தராகிறார். இனிச்சொல்லவேண்டுவனவெல்லாம் அவ்வவ திருவாய்மொழிகள்தோறும் சொல்லக் கண்டுகொள்வது.

முதல்திருவாய்மொழியிற் சொல்லிற்றாயிற்று என்? என்னில்;—நாநாரத்நபரிபூர்ணமாய் அபரிச்சேத்யமான கடலை முந்துறத் திரளக்கண்டாற்போலே ஸ்வரூபரூபகுணவிபூதிகளால் பரிபூர்ணனாய், எல்லாப்படியாலும் எல்லாரிலும் மேற்பட்டு ஸர்வேச்வரனாய், ச்ரிய:பதியாய், அபௌருஷேயமாய்க்கொண்டு ஸூத்ருடப்ரமாணமான ச்ருதிகளாலே ப்ரதிபாதிக்கப்பட்டுள்ள எம்பெருமானை பாஹ்யகுத்ருஷ்டிகளால் அவிசால்யமாம்படி அவன் ப்ரஸாதத்தாலே ஸாக்ஷாத்கரித்து அநுபவித்து அவ்வநுபவஜநித ப்ரீதி உள்ளடங்காமையாலே அநுபவித்தபடியே ஸவிபூதிகனான எம்பெருமானைப் பேசி ஏவம்விதனான அவன் திருவடிகளிலே அடிமை செய்து உஜ்ஜீவியென்று தம்முடைய திருவுள்ளத்தைக்குறித்து அநுசாஸிக்கிறார். கடலைத் திரளக் கண்டானொருவன் அதிலுள்ள திரைகளையும் மற்றும் அங்குள்ள ஸத்த்வங்களையும் ரத்நாதிகளையும் தனித்தனியே காணுமாபோலே முதல்திருவாய்மொழியில் திரள அநுபவிக்கப்பட்ட எம்பெருமானுடைய ஒரோவகைகளிலே ஒரோ திருவாய்மொழியாய்ச் செல்லுகிறது, இரண்டாம் திருவாய்மொழி தொடங்கி மேலெல்லாம். இப்படி செய்தார் இவரேயல்லர்; பாரத ராமாயணாதிகளைப் பண்ணின வ்யாஸாதிகளும் ஸம்க்ஷேபவிஸ்தரங்களாலே தந்தாமுடைய ப்ரபந்தங்களை ப்ரபந்தீகரித்தார்களிறே.

முதற்பாட்டுக்குக் கருத்து - அகிலஹேயப்ரத்யநீக கல்யாணகுணைகதானனாய், அக்குணங்களுக்கும் நிறங்கொடுக்கவற்றான திவ்யதேஹயுக்தனாய், ச்ரிய:பதியாய், இந்தஸௌந்தர்யாதிகளுக்கு போக்தாக்களான அயர்வறுமமரர்களுக்கு அதிபதியாயிருந்துவைத்துத் தன்னுடைய நிரவதிக க்ருபையாலே என்னுடைய தோஷாகரத்வத்தைப் பாராதே என்னுடைய அஜ்ஞானமெல்லாம் நீங்கும்படி ஸ்வவிஷய பக்திரூபாபந்ந ஜ்ஞானத்தை நிர்ஹேதுகமாக ஸாதரனாய்க் கொண்டு தந்தருளினான்; ஆனபின்பு, அவன் திருவடிகளிலே அடிமைசெய்து உஜ்ஜீவிப்போமென்று திருவுள்ளத்தோடேகூட எம்பெருமானுக்கு அடிமைசெய்கையிலே ப்ரவ்ருத்தராகிறார். இத்தால், ப்ரபந்தாரம்பத்திலே வஸ்துநிர்த்தேச நமஸ்காரங்களும் பண்ணப்பட்டனவாய் விழுந்தது.

திருவிருத்தத்தில் தேவரீரை அநுபவிக்கைக்கு விரோதியான தேஹஸம்பந்தத்தையறுத்துத் தந்தருளவேணுமென்கிறார்; இப்படி ஸம்ஸாரம் அத்யஸஹ்யமென்று கைவிட்ட இவரைக் கொண்டு ஈச்வரன் நாட்டுக்கு ஒரு வெளிச்சிறப்பைப் பண்ண நினைத்திருக்கிற ஒருவனாகையாலே, அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகளுக்கு விஷயமான தன்னுடைய ஸ்வரூபாதிகளைத் தானே இவர்க்குக் காட்டிக்கொடுக்கக் கண்டு அநுபவித்து ப்ரீதராகிறார், **திருவாசிரியத்தில்;** அவ்விஷயாநுகுணமாக த்ருஷ்ணைபிறந்து அத்த்ருஷ்ணாநுகுணமாகப் பேசியும் நினைத்தும் தரிக்கிறார், **திருவந்தாதியில்;** இவ்விடாய்க்கு அநுகூலமாக ச்ரிய:பதியாய் நித்யவிபூதியிலே அயர்வறுமமரர்களுக்கு அழகோலக்கங் கொடுத்துக்கொண்டிருக்கிற பெரிய மேன்மையையும் இப்பால் லீலாவிபூதிநிர்வஹணார்த்தமாக வ்யூஹவிபவஅர்ச்சாவதார அந்தர்யாமித்வ பர்யந்தமாகத் தன் அநுக்ரஹத்தாலே பார்த்துக்கொண்டிருக்கிற நன்மையையும், அவன் நிர்ஹேதுகமாகக் காட்டிக்கொடுக்கக் கண்டு அநுபவித்து, அதுக்குமேலே தமக்குப் பரபக்த்யாதிகளைப் பிறப்பித்துத் தாம் ஆசைப்பட்டபடியே தம்முடைய ப்ரக்ருதிஸம்பந்தத்தையும் ஸவாஸநமாக அறுத்து எம்பெருமான் பெரிய திருவடியை மேற்கொண்டருளி நாச்சிமாரும் தானுமாக வந்து தோற்றி, தன்படிகளொன்றுங் குறையாமை வந்து, "நயாமி" என்கிறபடியே இவரைப் பரமபதத்தேறக் கொண்டுபோய், இவர் முதலிலே அபேக்ஷித்தபடியே நித்யகைங்கர்யத்திலே அந்வயிப்பிக்கப்பெற்று க்ருதார்த்தராகிறார், **திருவாய்மொழியில்.** திருவாய்மொழிக்கெல்லாம் ஸங்க்ரஹம் - முதல் திருவாய்மொழி.

இருபத்துநாலாயிரப்படி அவதாரிகை முற்றிற்று.

நம்பிள்ளை திருவாய்மலர்ந்தருளின
ஈடுமுப்பத்தாறாயிரப்படியின் அவதாரிகை
மஹாப்ரவேசம்—முதல் ச்ரிய:பதி

ச்ரிய:பதியாய், அவாப்தஸமஸ்தகாமனாய், ஸமஸ்தகல்யாணகுணாத்மகனான ஸர்வேச்வரன், "மாறிமாறிப்பலபிறப்பும்பிறந்து" என்கிறபடியே ஜந்மபரம்பரைகளிலே தோள்மாறி நித்யஸம்ஸாரியாய்ப் போந்த இவரை "அடியையடைந்துள்ளந்தேறி ஈறிலின்பத்துஇருவெள்ளம் யான்மூழ்கினன்" என்று முதலிலே தம்திருவாயாலே சொல்லவல்லராம்படியாக முதலடியிலே விசேஷ கடாக்ஷம்பண்ணியருளினான். "ப்ருந்தாவநம் பகவதா க்ருஷ்ணேநாக்லிஷ்டகர்மணா, சுபேந மநஸா த்யாதம் கவாம் வ்ருத்திமபீப்ஸதா" என்கிறபடியே ஸ்ரீப்ருந்தாவநத்தை "உத்பந்நநவசஷ்பாட்யம்" என்னும்படி கடாக்ஷித்தாப்போலே தத்த்வங்களை விசதமாக அறியவல்லராம்படி கடாக்ஷித்தான்.

இதரதர்சநங்களில் தத்த்வங்களைப் பதினாறென்பார் ஆறென்பாராய், பஹுப்ரகாரங்களிலே விப்ரதிபத்திபண்ணுவர்கள்.

எங்ஙனேயென்னில்,—லோகாயதிகன் ப்ருதிவ்யாதிபூதங்கள் நாலினுடைய கூட்டரவிலே சைதந்யமென்று ஒருதர்மம் பிறக்கும்; அதுக்கு உண்டான ஸுகதுக்கங்களே ஸ்வர்க்கநரகங்கள்; அவற்றினுடைய பிரிவிலே சைதந்யம் நசிக்கும்; அவ்வருகு ஒன்றுமில்லையென்பது அவனுடைய ஸித்தாந்தம். ஆர்ஹதன் கார்யகாரணரூபத்தாலே ஜகத்து நித்யாநித்யமும் பிந்நாபிந்நமும் ஸத்யாஸத்யமுமாயிருக்கும்; ஆத்மாக்கள் கர்மாநுரூபமான சரீரங்களினுடைய பரி

மாணத்தையே தனக்குப் பரிமாணமாகக்கொண்டிருக்கும்; ஸம்ஸாரம் அநாதி; மலதாரணாதிகளாலும் ஆத்மஜ்ஞாநத்தாலும் ப்ரக்ருதிவிநிர்முக்தராய் ஊர்த்வகதியை ப்ராபியாநிற்கை மோக்ஷமாகிறது என்றான். பௌத்த மதங்களில் வைத்துக்கொண்டு, வைபாஷிகன் பரமாணு ஸங்காதமாய் ப்ரத்யக்ஷஸித்தமாயிருக்கும் ஜகத்து; தத்விஷயஜ்ஞாநமும் க்ஷணிகம்; வேறே ராத்மா இல்லை: இதில் ஸ்திரத்வபுத்தி - ஸம்ஸாரம்; க்ஷணிகபுத்தி - மோக்ஷம் என்றான். ஸௌத்ராந்திகனுக்கும் ஸித்தாந்தம் அதுவேயாயிருக்கச் செய்தே அநுமாநஸித்தம் ஜகத்து என்றான்; அதுவே அவனுக்கு விசேஷம். யோகாசாரன் ஜ்ஞாத்ருஜ்ஞேயங்கள் ப்ரமம், ஜ்ஞாநமே யுள்ளது; அதுவும் க்ஷணிகமென்றிருக்கை மோக்ஷம் என்றான். மாத்யமிகன் ப்ரமாணமும் ப்ரமேயமும் ப்ரமாதாவும் இவை யுண்டென்று அறிகை ப்ரமம், சூந்யத்தாலே சூந்யமென்று அறிகை மோக்ஷம் என்றான்.

நையாயிக வைசேஷிகர்கள் - ஜகத்துக்கு உபாதாநகாரணம் பரமாணுக்கள்; ஆநுமாநிகேச்வரன் நிமித்தகாரணம்; ஸம்ஸாரம் அநாதி; ஈச்வரோபாஸ்தியாலே ஸுகதுக்க ஜ்ஞாநங்கள் நசிக்கை மோக்ஷம் என்றார்கள்.

பாசுபதன் - பரமாணுக்கள் ஜகத்துக்கு உபாதாநகாரணம்; ஆகமஸித்தேச்வரன் நிமித்தகாரணம்; ஸம்ஸாரம் அநாதி; ஆகமோக்தமான கர்மாநுஷ்டாநத்தாலே பசுபதிஸாரூப்யத்தைப் பெறுகை மோக்ஷம் என்றான். ஸாங்க்யயோகிகள் - ப்ரக்ருதியே ஸ்வதந்த்ரமாய்க்கொண்டு ஜகத்காரணமாகிறது; அந்த ப்ரக்ருதியோடு ஆத்மாவுக்கு உண்டான அநாதி ஸம்பந்தம் ஸம்ஸாரம்; ப்ரக்ருதி புருஷவிவேகம் மோக்ஷம் என்றார்கள். பாட்டப்ராபாகரர்கள்- நித்யராய் அநேகராய் ஸர்வகதராய் அநாதிகர்மத்தாலே ஸம்ஸரிக்கிறார்கள் ஆத்மாக்கள்; ஜகத்து ப்ரவாஹரூபேண நித்யம்; கர்மாபூர்வமே ஆத்மப்ராப்திரூபமோக்ஷஹேது; ஈச்வர ஸத்பாவமில்லை யென்றார்கள். மாயாவாதி - நிர்விசேஷ சிந்மாத்ரமே மாயாசபளமாய்க்கொண்டு ப்ரமிக்கை ஸம்ஸாரம், "தத்த்வமஸி" இத்யாதி வாக்யஜந்ய ஜ்ஞாநத்தாலே அந்த ப்ரமம்போகை மோக்ஷம் என்றான். பாஸ்கரீயன் - அந்த ப்ரஹ்மந்தானே ஸத்யோபாதிமிச்ரமாய்க்கொண்டு ப்ரமிக்கை ஸம்ஸாரம்; வர்ணாச்ரம தர்மோபேதமாய் வாக்யஜந்யஜ்ஞாநபூர்வகமாயுள்ள உபாஸநாத்மகஜ்ஞாநத்தாலே உபாதிநசிக்கை மோக்ஷம் என்றான். யாதவப்ரகாசன்- அந்த ப்ரஹ்மந்தானே ஸத்யமான சிதசிதீச்வராத்மகமாய்க்கொண்டு ப்ரமிக்கிறது; அதுக்கு உண்டான பேதஜ்ஞாநம் ஸம்ஸாரம்; ஜ்ஞாநகர்மஸமுச்சயத்தினாலே பேதஜ்ஞாநம் போகை மோக்ஷம் என்றான். ப்ரஹ்மம் ஜகத்காரணமென்கிற வைதிகஸித்தாந்தத்திற்காட்டில் ஏகாயநன் ப்ரஹ்மத்தை கதிபயசக்திவிசிஷ்டமாகக்கொண்டானத்தனை; அதுவே அவனுக்கு விசேஷம். ஆக, ஸித்தாந்தங்கள் பதினேழும் பாஹ்யங்களும் குத்ருஷ்டிகளுமாகையாலே வ்யர்த்தங்கள்.

நம் தர்சநத்துக்குத் தத்த்வங்கள் மூன்று: அவையாவன - சித்தும் அசித்தும் ஈச்வரனும். ப்ரகார ப்ரகாரிகள் ஐக்யத்தாலே ஒன்றென்னலாய், ஸ்வரூபபேதத்தாலே பலவென்னலாயிருக்கும். அசித்தாகிறது - குணத்ரயாத்மகமாய் நித்யமாய் விபுவாய் ஸததபரிணாமியாய் ஹேயதயா ஜ்ஞாதவ்யமாயிருக்கும். இப்படியிருக்கிற அசித்திலே போக்யதாபுத்திபண்ணி ஸம்ஸாரத்தை த்ருடமாக்கிக்கொள்ளவேணுமென்றிருக்குமவனுக்கும் ஸர்வேச்வரனை ஆச்ரயிக்கவேணும்; இது த்யாஜ்யமென்னும் ப்ரதிபத்தியுண்டாய், இத்தைக்கழித்துக்கொள்ளவேணுமென்றிருக்குமவனுக்கும் ஸர்வேச்வரனை ஆச்ரயிக்கவேணும்: "ஸம்ஸாரபந்தஸ்திதி மோக்ஷஹேது:" என்றும், "தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா, மாமேவயேப்ரபத்யந்தே மாயாமேதாந்தரந்திதே" என்றும் சொல்லுகிறபடியே, 'நான் பிணைத்தபிணை ஒருவரால் அவிழ்க்கப்போகாது; என்னையே கால்கட்டி யவிழ்த்துக்கொள்ளவேணும்' என்றானிறே. அதுதன்னையே இவரும், "பொல்லாவாக்கையின் புணர்வினையறுக்கலறு, சொல்லா யான் உன்னைச்சார்வதோர் சூழ்ச்சி" என்றாரிறே. "ஒருகுருவி பிணைத்தபிணை ஒருவரால் அவிழ்க்கப் போகிறதில்லை; ஸர்வசக்தி கர்மாநுகுணமாகப் பிணைத்தபிணையை அவனையே கால்கட்டி யவிழ்த்துக்கொள்ளுமித்தனைகாண்" என்று பிள்ளை திருநறையூரரையர்வார்த்தை. சேதநன் நித்யனாய் அணுவாய் ஜ்ஞாநாநந்தலக்ஷணனாய் ஜ்ஞாநகுணகனாய் ஏகரூபனாய் பகவச்சேஷபூதனாயிருக்கும். இப்படியிருக்கிற ஆத்மாவினுடைய வைலக்ஷண்யத்தை அநுஸந்தித்து "ஜராமரண

மோக்ஷாய" என்கிறபடியே ஆத்மாநுபவம் அமையுமென்றிருக்குமவனுக்கும் ஸர்வேச்வரனை உபாஸிக்கையும் அந்திமஸ்ம்ருதியும் வேணும்; ஆத்மாநுபவத்தை நெகிழ்ந்து ஸர்வேச்வரனுடைய குணாநுபவம் பண்ணவேணுமென்றிருக்குமவனுக்கும் அவன் தன்னையே உபாயமாகப் பற்றவேணும். இவற்றில் ஒன்றை அறியிலும் "ஒண்டாமரையாள்கேள்வனொருவனையே நோக்குமுணர்வு" என்கிறபடியே ஸர்வேச்வரனளவிலே பர்யவஸித்தன்றி நில்லாது; ஜ்ஞாநமாகில் ச்ரிய:பதியைப் பற்றியல்லது நில்லாது. பகவத்வ்யதிரிக்தவிஷயங்களைப்பற்றிப் பிறக்கும் ஜ்ஞாநமெல்லாம் அஜ்ஞாநகல்பம்; "தஜ்ஜ்ஞாநமஜ்ஞாநமதோऽந்யதுக்தம்", "தத்கர்ம யந்ந பந்தாய ஸா வித்யா யா விமுக்தயே, ஆயாஸாயாபரம் கர்ம வித்யாந்யா சில்பநைபுணம்" என்கிறபடியே பகவத்விஷயத்தையொழியக் கற்றவையெல்லாம் செருப்புக்குத்தக் கற்றவோபாதி. இப்படியிருக்கிற ஸிதஸிநீச்வரர்கள்ஸ்வரூபஸ்வபாவங்களை அறியக்கடவாரொருவரும் இல்லை; இவற்றை உள்ளபடியறிவாரில் தலைவராயிற்று இவ்வாழ்வார்.

இவர்க்கு ஒப்புச்சொல்லலாவார் ஸம்ஸாரிகளிலுமில்லை; நித்யஸூரிகளிலுமில்லை. தம்படி தாமும் அறியார்; ஸம்ஸாரிகளும் அறியார்கள்; ஸர்வேச்வரனும் அறியான். ஒரு ஸாதநத்தை அநுஷ்டித்து இந்நன்மை நமக்கு வருமென்றிருக்க வந்ததல்லாமையாலே தாமும் அறியார்; இவரைப்போலேயிருப்பாரை ஸம்ஸாரத்திற் காணாமையாலே ஸம்ஸாரிகளும் அறியார்கள்; தன்குணங்கள் புறம்பு ஒருவ்யக்தியில் இப்படி பலிக்கக் காணாமையாலே ஸர்வேச்வரனும் அறியான். ஸம்ஸாரிகளில் வ்யாவ்ருத்தரானவோபாதி நித்யஸூரிகளிலும் வ்யாவ்ருத்தர். "அடியார்நிலாகின்ற வைகுந்தமோ வையமோ நும்நிலையிடம்" என்று உபயவிபூதியிலும் அடங்காதிருப்பர். "விண்ணுளாரிலும்சீரியர்" என்னும்படியாயிற்று இவர்நிலை; பகவதநுபவத்துக்குப் பாங்கான தேசத்திலே இருந்து அநுபவிக்கிறவர்களைப்போலன்றே, அவ்வநுபவத்துக்கு மேட்டுநிலமான ஸம்ஸாரத்திலேயிருந்து அநுபவிக்கிறவர்கள். "கலௌ ஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வஸ்ரஷ்டாரமீச்வரம், நார்ச்சயிஷ்யந்தி மைத்ரேய! பாஷண்டோபஹதா ஜநா:" என்கிறபடியே கலிகாலத்திலே பகவத்ருசி ஒருவருக்கும் பிறக்கிறதல்ல. "துர்லபோ மாநுஷோ தேஹோ தேஹிநாம் க்ஷணபங்குர:, தத்ராபி துர்லபம் மந்யே வைகுண்டப்ரியதர்சநம்" என்கிறபடியே முதல்தன்னிலே மநுஷ்யசரீரம் கிடையாது: பெற்றாலும் ஸர்வேச்வரன் ப்ராப்யனென்று அவனைப்பெறுகைக்கு அநுரூபமாயிருப்பதொரு உபாயத்தைப் பரிக்ரஹிக்கவேணுமென்னும்ருசி ஒருவர்க்கும் பிறவாது; இது உண்டாகிலும் உண்டாம், பாகவதசேஷத்வம் உண்டாகாதென்னுமிடம் சொல்லவேண்டாவிறே; "மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கச்சித்யததி ஸித்தயே, யததாமபி ஸித்தாநாம் கச்சிந்மாம் வேத்தி தத்த்வத:" என்று ஸர்வேச்வரன் தானும் அருளிச்செய்தான்.

இப்படியிருக்கிற ஸம்ஸாரத்திலே ஆழ்வார் வந்து அவதீர்ணரான இது சேதநர் பண்ணின ஸுக்ருதபலமாயிற்று. "ததோऽகிலஜகத்பத்ம போதாயாச்யுதபாநுநா" என்கிறபடியே ஸர்வேச்வரன் வந்து அவதரித்தாற்போலேயாயிற்று, ஆழ்வார் வந்து அவதரித்தபடி. ஆதித்யன் பாஹ்யமான அந்தகாரத்தைப் போக்கும். இவன் ஆந்தரமான அந்தகாரத்தைப் போக்கிக்கொண்டாயிற்று இருப்பது. அப்படியே இவரும் "ஊருநாடுமுலகமுந்தன்னைப்போல்" "மரங்களுமிரங்கும்வகை" என்றும், "பாலேய்தமிழரிசைகாரர்பத்தர் பரவும்" படியாயும் "கேட்டாராரார்வானவர்கள்" என்றும், "பண்ணார்பாடலின்கவிகள் யானாய்த் தன்னைத்தான்பாடித் தென்னாவென்னுமென்னம்மான்" என்னும்படி இப்படியே தம்முடைய நன்மை எங்குமுண்டான எல்லார்க்கும் உண்டாம்படிபண்ணிக்கொண்டாயிற்று இருப்பது. "ஹஸிதம் பாஷிதஞ்சைவ கதிர் யா யச்ச சேஷ்டிதம், தத் ஸர்வம் தர்மவீர்யேண யதாவத்ஸம்ப்ரபச்யதி" என்கிறபடியே (ப்ரஹ்மாவின்ப்ரஸாதத்தாலே ஸ்ரீவால்மீகிபகவான் ஸர்வத்தையும் ஸாக்ஷாத்கரித்தாற்போலே இவரும்) பகவத்ப்ரஸாதத்தாலே ஸாக்ஷாத்க்ருதமான பகவத்ஸ்வரூபரூபகுணவிபூதிகளையுடையராயிருப்பர். "ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்" -ஐச்வர்யம் ஆத்மலாபம் ஏதேனுமொரு புருஷார்த்தமாகவுமாம், நம்பக்கலிலே கொள்ளுமவர்கள் உதாரர்; ஜ்ஞாநியானவன் எனக்கு தாரகனென்று ஸர்வேச்வரன் அருளிச் செய்த ஜ்ஞாநிகளுக்கு அக்ரேஸரராயிருப்பர்.

"பால்யாத்ப்ரப்ருதி ஸுஸ்நிக்தோ லக்ஷ்மணோ லக்ஷ்மிவர்த்தந:" என்று பால்யந் தொடங்கிப் பெருமாள் திருத்தொட்டிலோடணையத் திருத்தொட்டிலிடாதபோது பள்ளிகொள்ளாத

இளையபெருமாளைப் போலே, இவரும் பருவம்நிரம்புவதற்குமுன்பே பகவத்குணைகதாரகராயிருப்பர். "அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்புசெய்வித்து" என்றும், "மூலையோ முழுமுற்றும் போந்தில - பெருமான்மலையோ திருவேங்கட மென்று கற்கின்ற வாசகம்" என்றும் சொல்லுகிறபடியே. "நச ஸீதா த்வயா ஹீநா நசாஹமபி ராகவ, முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ" - 'உம்மை யொழிந்தவன்று பிராட்டியும் இல்லை, அடியேனும் இல்லை, ஜீவித்தோமோ முஹூர்த்தம். என்போலே? என்றால்,—ஜலாதுத்த்ருதமான மத்ஸ்யம் நீர்நசையறுமளவும் ஜீவிக்குமாபோலே, நீர் நிறுத்திப்போகிறீரே மென்கிற வார்த்தை உம்முடைய திருவுள்ளத்திலே உண்டென்று அறியுமளவுங்காணும் நாங்கள் ஜீவிப்பது' என்றாரிறே. அத்தலையில் நினைவாலேயிறே இத்தலை ஜீவிப்பது. "எத்தேவர் வாலாட்டு மெவ்வாறு செய்கையு மப்போதொழியும்" என்கிறபடியே அவன் நினைவில்லாதவன்று இவையும் இல்லையிறே. அப்படியே இவரும் "நின்னலால்இலேன் காண்" என்றிருப்பாரொருவர். "நதேவலோகாக்ரமணம் நாமரத்வமஹம் வ்ருணே, ஐச்வர்யம் வாபி லோகாநாம் காமயே நத்வயா விநா" "வானவர்நாடு" என்கிற பரமபதம் ஆத்மலாபம் லோகாநாமைச்வர்யம் இவையித்தனையும் உமக்குப் புறம்பாய் வருமன்று வேண்டே னென்ற இளைய பெருமாளைப்போலே, இவரும் "இருவொடுமருவியவியற்கை மாயாப்பெருவிறலுலக மூன்றி னொடு நல்வீடுபெறினுங் கொள்வதெண்ணுமோ" என்றும், "எம்மாவீட்டுத்திறமும் செப்பம்" என்றும், "பாவியேனைப் பலநீகாட்டிப்படுப்பாயோ" என்றும் இதரபுருஷார்த்த ப்ரஸ்தாவத்திலே வெருவும் ஸ்வபாவருமா யிருப்பர். "அஹம் தாவந்மஹாராஜே பித்ருத்வம் நோபலக்ஷயே, ப்ராதா பர்த்தா ச பந்துச்ச பிதா ச மம ராகவ:" என்று பெருமாளையே எல்லாவுறவுமாகப் பற்றின இளையபெருமாளைப்போலே, இவரும் "சேலேய்கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாத்தாய்தந்தையு மவரே" என்று பகவதைகாந்த்யஸீமையாயிருப்பர். "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத: ஸ்வபதச்ச தே, பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷுரம்ஸ்யதே" என்று இளையபெருமாள் ஸர்வவிதகைங்கர்யங்களும் செய்தல்லது தரியாதாப்போலே, இவரும் "ஒழிவில்காலமெல்லா முடனாய்மன்னி வழுவிலாவடிமைசெய்யவேண்டும்" என்று எல்லா வடிமைகளும் செய்தல்லது தரியாத தன்மையராயிருப்பர்.

"விஸ்தரேணாத்மநோ யோகம் விபூதிஞ்ச ஜநார்த்தந" என்றும், "நததர்ப்ப ஸமாயாந்தம் பச்யமாநோ நராதிப:" என்றும் சொல்லுகிற அர்ஜுநதசரதாதிகளைப்போலே காலதத்த்வமுள்ளதனையும் அநுபவியாநின்றாலும் "அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதம்" என்னும்படி மேன்மேலெனப் பெருகிவருகிற ஆராதகாதலை யுடையராயிருப்பர்.

"தர்மாத்மா ஸத்யசௌசாதிகுணாநா மாகரஸ்ததா, உபமாநமசேஷாணாம் ஸாதூநாம் யஸ்ஸதாZபவத்" என்று ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வானை ஸாதுக்களுக்கெல்லாம் உபமாநபூமியாகச் சொல்லுகிறாப்போலே எல்லார்க்கும் தம்முடைய ஒரோவகைகளாலே உபமாநபூமியாயிருப்பர்.

"அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர்தாஸ்ய முபாகத:" என்று குணங்களுக்குத்தோற்று அடிமைபுக்க இளையபெருமாளைப்போலே இவரும் பகவத்குணங்களிலே தோற்று "உயர்வற உயர்நலமுடையவன் - துயரறுசுடரடி தொழுதெழென் மனனே" என்றார்.

இப்படி பகவத்ஸ்வரூபரூபகுண விபூதிகளை விசததர விசததமமாக அநுபவித்து அது உள்ளடங்காமை வழிந்து புறப்பட்ட சொல்லாயிற்று இப்ப்ரபந்தங்கள்.

இங்ஙனேயாகில், இப்ப்ரபந்தங்களுக்குப் பாட்டும் ஸங்க்யையும் பாட்டுக்கு நாலடியாகையும் அக்ஷரங்கள் ஸமமாகையும் "எழுத்தசைசீர்பந்தமடிதொடைபாவினம்" என்றாற்போலே சொல்லுகிற ப்ரபந்தலக்ஷணங்கள் சேரவிழுந்தபடி எங்ஙனே? என்னில்,—சோகவேகத்தாலே பிறந்த "மாநிஷாத" இத்யாதி ச்லோகமானது "மச்சந்தாதேவ" என்கிற ச்லோகத்தின்படியே அத்திக்காயில் அறுமான்போலே பகவத்விபூதியில் ஏகதேசஸ்தனான ப்ரஹ்மாவின் ப்ரஸாதத்தாலே ஸர்வலக்ஷணோபேதமானாற்போலே பகவத்ப்ரஸாதமடியாகப் பிறந்த இப்ப்ரபந்தங்களுக்கு இவற்றில் கூடாத தில்லை.

"இவை என்ன கோடியிலே அடைக்கப்பட்ட ப்ரபந்தங்கள்? இவை பிறந்தபடி எங்ஙனே? இவற்றுக்கு மூலமென்? ஒன்றை மூலமாகச் சொன்னால் அது மூலமென்று

அறியும்படி எங்ஙனே? இவை ப்ரமாணமென்றறிவது எத்தாலே? இவற்றுக்கு ப்ரதிபாத்யர் ஆர்? இப்ப்ரபந்தங்கள் கற்கைக்கு அதிகாரிகள் ஆர்? இவற்றுக்கு போக்தாக்கள் ஆர்? இவை எதுக்காகப் பண்ணப்பட்டன?'' என்று சில அவ்யுத்பந்நர் கேட்க—இவை புருஷார்த்த ப்ரகாசகமான ப்ரபந்தங்களில் ப்ரதாநப்ரபந்தங்கள்; பகவத்குணாநுபவஜநித ஹர்ஷப்ரகர்ஷ பலாத்காரம் சொல்லுவிக்கப் பிறந்தன; பகவத்ப்ரஸாதலப்தமான திவ்யசக்ஷுர்மூலமாகப் பிறந்தன வென்னுமிடம் ஸ்வரவசந வ்யக்திகளாலே அறியலாம்; வேதார்த்தவித்துக்களான ஸர்வசிஷ்டர்களும் பரிக்ரஹிக்கையாலும் ஸம்ஸாரத்தில் உத்வேகம் பிறந்தார்க்கு ஜ்ஞாதவ்யமான வேதார்த்தங்களை இப்ப்ரபந்தங்களிலே காண்கையாலும் இவை உத்க்ருஷ்டதமமான ப்ரமாணமென்று அறியலாம்; எல்லார்க்கும் பரமப்ராப்யபூதனை ச்ரிய:பதி இப்ப்ரபந்தங்களுக்கு ப்ரதிபாத்யன்; ஸம்ஸாரத்தில் ருசியற்று எம்பெருமான் திருவடிகளிலே எப்பேர்ப்பட்ட அடிமைகளும் செய்யவேணுமென்றிருக்குமவன் இவை கற்கைக்கு அதிகாரி; முமுக்ஷுக்களும் முக்தரும் நித்யரும் எம்பெருமான்தானும் இவற்றுக்கு போக்தாக்கள்; பகவத்கைங்கர்யமாகிற நிரதிசயபுருஷார்த்தம் இன்னபடிப்பட்டிருக்குமென்று அறிவிக்கைக்காகப் பிறந்த ப்ரபந்தங்கள் இவை'' என்று சிரோபாஸிதஸத்வ்ருத்தராயிருப்பார்கள் பரிஹரித்தார்கள்.

த்ராவிடபாஷையாகையாலும், இப்ப்ரபந்தங்களை வேதத்தில் அநதிகாரிகள் அப்யஸிக்கக் காண்கையாலும், கலிகாலத்திலே ஜ்ஞாநத்துக்கு அடைவில்லாத சதுர்த்தவர்ணத்திலே பிறந்தாரொருவராலே நிர்மிதங்களாகையாலும், தேசாந்தரங்களிலின்றிக்கே ப்ராதேசிகங்களாகையாலும், அவைதிகர் பரிக்ரஹிக்கையாலும், ச்ருதி ஸ்ம்ருதி விருத்தமான காமபுருஷார்த்தத்தைப் பலவிடங்களிலும் பேசுகையாலும், ச்ருதிஸ்ம்ருதிகளிலே புருஷார்த்ததயா சொல்லப்படுகிற ஐச்வர்யகைவல்யங்களைக் காற்கடைக்கொள்ளுகையாலும், இப்ப்ரபந்தங்கள் ப்ரமாணமாகமாட்டாவென்று வைதிக கோஷ்டியில் பழக்கமில்லாதார் சில அறிவுகேடர் வந்து ப்ரத்யவஸ்தாநம் பண்ண; மாத்ஸ்யபுராணத்திலே, பாஷாந்தரத்தாலே பாடாநின்றுள்ள கைசிகாதிகளைத் தன் நாட்டினின்றும் போகவிட்ட ராஜாவைக்குறித்து "ஹரிகீர்த்திம் விநைவாந்யத் ப்ராஹ்மணேந நரோத்தம, பாஷாகாநம் ந காதவ்யம் தஸ்மாத் பாபம் த்வயா க்ருதம்.'' என்ற யமவசநத்தின் படியே பாஷாநிஷேதம் பகவத்வ்யதிரிக்தவிஷயங்களிலே யாகையாலும், அங்ஙனன்றியே பாஷா மாத்ராவதியாக விதிநிஷேதங்களை அங்கீகரிக்கில் ஸம்ஸ்க்ருத பாஷையான பாஹ்ய சாஸ்த்ராதிகள் அப்யஸிக்கவேண்டுகையாலும், ஆழ்வார் தம்முடைய க்ருபாதிசயத்தாலே வேதத்தில் அநதிகாரிகளான ஸ்த்ரீசூத்ராதிகளும் இழவாதபடி வேதார்த்தத்தை த்ராவிடபாஷையாலே அருளிச்செய்கையாலும், எதிர்சூழல்புக்கு அநேகஜந்மங்கள் எம்பெருமான்தானே தொடர்ந்து விஷயீகரிக்கைக்கடியான பாக்யத்தையுடையராய் நிரந்தர பகவத்கடாக்ஷபாத்ரபூதருமாய் தத்த்வஹிதங்களில் நிபுணராய் அவற்றினுடைய உபதேசத்திலும் ப்ரவ்ருத்தராய் விதுர சபர்யாதிகளில் விலக்ஷணரான ஆழ்வார்பக்கலிலே இப்ப்ரபந்தங்கள் பிறக்கையாலும், இப்பாஷை நடையாடி சிஷ்டப்ரசுரமான தேசங்களெங்கும் உண்டாய் பாஷாந்தரங்களிலே பிறந்து விலக்ஷணராயுள்ளாரும் இவற்றின் வைலக்ஷண்யத்தைக் கேட்டு 'இவற்றை அப்யஸிக்கைக்கு ஈடான இப்பாஷை நடையாடுந் தேசத்திலே பிறக்கப்பெற்றிலோமே!' என்றிருக்கையாலும், இவற்றின் நன்மையைக் கண்டு வேதார்த்த ஜ்ஞாநத்துக்கு அடைவில்லாத அவைதிகருங்கூடப் பரிக்ரஹிக்கை ச்லாக்யதாஹேதுவாகையாலும், வேதநமென்றும் உபாஸநமென்றும் உபநிஷத்துக்களிற் சொல்லுகிற பக்தியை இவற்றில் காமமாகச் சொல்லுகையாலும், ஐச்வர்யகைவல்யங்களை தூஷித்தது அல்பாஸ்திரத்வாதி தோஷத்தாலே யாகையாலும், ப்ரதிபாத்யனை எம்பெருமானுடைய மாஹாத்ம்யத்தாலும், எம்பெருமானை ஸுஸ்பஷ்டமாக ப்ரதிபாதிக்கையாலும், பக்திக்கு உத்பாதகங்களாகையாலும், உத்பந்நையான பக்திக்கு வர்த்தகங்களாகையாலும், ச்ரவணாதிகளில் அப்போதே நிரதிசயப்ரீதிஜநகங்களாகையாலும், இவற்றிற்சொல்லுகிற அர்த்தங்களுக்கு வேதத்தில் பலவிடங்களிலும் ஸாக்ஷியாகச் சொல்லுகையாலும், ப்ரஹ்மகாரணவாதத்தாலும், ப்ரஹ்மஜ்ஞாநாந் மோக்ஷத்தைச் சொல்லுகையாலும் புருஷார்த்தவிஷயமான ப்ரபந்தங்களெல்லாவற்றிலும் இப்ப்ரபந்தங்களை த்ருடதர ப்ரமாணங்களாக உபபாதித்து வைதிககோஷ்டியில் அபியுக்தரானவர்கள் பரிஹரித்தார்கள்.

பகவத்ப்ரஸாதத்தாலே அவனை அநுபவித்துப் பரிபூர்ணராயிருக்கிற இவர்க்கு எம்பெருமானைப் பிரிகையும், பிரிவாலே நோவுபட்டுக்கூப்பிடுகையுங் கூடினபடி எங்ஙனேயென்னில்;— ஒரோகுணத்தை அநுபவித்தால் அநுபூதகுணங்களிலுண்டான ப்ரியத்வப்ரகர்ஷம் க்ஷுத்ர விஷயங்களில் வைராக்யத்தைப் பிறப்பித்து குணாந்தரங்களிலே ஸ்ப்ருஹையைப் பிறப்பிக்கும், "பரமாத்மநி யோ ரக்தோ விரக்தோZபரமாத்மநி" என்றும், "மாற்பால்மனஞ்சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு" என்றும் சொல்லுகிறபடியே; பின்னை அக்குணங்களில் க்ரமப்ராப்தி பற்றாது: யாதொருபோது ஆசைமிக்கது, அப்போது ஆசைப்பட்ட பொருள் கிடையாமையாலும், பகவதநுபவவிரோதியான ப்ரக்ருதிஸம்பந்த ஸ்மரணாதிகளாலுமாக பகவத்விஷயத்தில் அநுபவித்த அம்சத்தையும் இழந்து "எந்நாள் யானுன்னை யினிவந்து கூடுவன்" என்றும், 'பலநீ காட்டிப் படுப்பாயோ' என்றும், "போரவைத்தாய்புறமே" என்றும், "கூவிக்கொள்ளுங்கால மின்னங்குறுகாதோ" என்றும் கூப்பிடாநிற்பர். அவனை அநுபவிக்கப்புக்கால் "அடியேனடைந்தேன் முதன்முன்னமே" என்றும், "பருகிக்களித்தேனே" என்றும், "உண்டுகளித்தேற்கும்பரென்குறை" என்றும் "தொண்டரெல்லீரும்வாரீர் தொழுது தொழுதுநின்றார்த்தும்" என்றும், "எமர்கீழ்மேலெழு பிறப்பு மாசதிர்துபெற்று நம்முடை வாழ்வுவாய்க்கின்றவா" என்றும் தாமும் தம்முடைய ஸம்பந்தி ஸம்பந்திகளுமாய்க் கூடக் களிப்பர்; இப்படி பஹுகுணனான எம்பெருமான்பக்கலிலே நிரதிசயபக்திமான்களாய், தத்ஸம்ச்லேஷ விச்லேஷைகஸுகதுக்கராய், அவனை யல்லதுஅறியாதபடியாய் பகவதநுபவ ஸுகம் மிக்கபோது இதரபதார்த்தங்களுமெல்லாம் தம்மைப் போலே எம்பெருமானைப் பெற்று ஸுகிக்கிறனவாகவும், விச்லேஷமென்று ஒருவகையுண்டென்றும் அறியாதே லோகயாத்ரையோடொக்க மறந்து, விச்லேஷவ்யஸநம் மிக்கால் ஸம்ச்லேஷ ரஸமுண்டென்றும் அறியாதே இதரபதார்த்தங்களுமெல்லாம் தம்மைப்போலே எம்பெருமானைப் பிரிந்து நோவுபடுகிறனவாகக் கொண்டு "நீயுந்திருமாலாநெஞ்சங்கோட்பட்டாயே" இத்யாதியாலே அவற்றுக்குமாகத் தாம் நோவுபடாநிற்பர். இவர்க்கு ப்ரியாப்ரியங்கள் ஒருகாலும் முடியாதே பர்யாயேண உண்டாயிருக்கையாலே இவர்க்கு சிந்தயந்திப்படி நித்யமாய்ச் செல்லுகையாலே இவரை தீர்க்கசிந்தயந்தி யென்றுயிற்று நம்முதலிகள் அருளிச்செய்வது. ஆனால், சேதநர்க்கு ஸ்த்ர்யந்நபாநாதிகளே தாரகபோஷகபோக்யங்களாய்ச் செல்லாநிற்க, இவரை பகவத்குணக தாரகரென்னக்கூடுமோ? என்னில்; திருவயோத்யையிலும் கோஸலஜநபதத்திலுமுள்ள ஸ்தாவரஜங்கமங்களுடைய ராமகுணைகதாரகங்களாயிருக்கும்படியை அநுஸந்தித்து இதுவும் கூடுமென்று கொள்வது. இப்படியிருக்கிற இவர்க்கு எம்பெருமானோடு ஸம்ச்லேஷமாவது-ப்ரத்யக்ஷஸமாநாகாரமான ஜ்ஞாநஸாக்ஷாத்காரம். விச்லேஷமாவது - பாஹ்யஸம்ச்லேஷாபேக்ஷை பண்ணி அதுபெறாமையாலே மாநஸாநுபவத்துக்கு வந்த கலக்கம். ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியாய் ஸர்வநியந்தாவாய் நிரவதிக க்ருபாவானாயிருந்த எம்பெருமான் இவருடைய அநுபவத்தை முடிய நடத்தாதே இவ்வநுபவத்தை விச்சேதித்ததுக்கு ப்ரயோஜநமென்? என்னில்; திருவயோத்யையிலும் திருக்குரவையிலும் பிரிந்த பிரிவுபோலே இவர்க்கு அநுபூதகுணங்கள் ஸாத்மிக்கைக்காகவும், மேன்மேலென த்ருஷ்ணைபிறக்கைக்காகவும். எம்பெருமான்பக்கல் பிறந்த ஆசைமுதிர்ந்து நினைத்தபடி பெறுவிட்டவாறே சோகமோஹங்கள் பிறக்கும். இப்படியுள்ள கலவியாலும் பிரிவாலும் ஆழ்வார்க்கு வந்த தசை அந்யாபதேசப்பேச்சைப் பேசுவிக்கும்.

இப்ப்ரபந்தங்களில் ஸூக்திகள் ப்ராப்யனான எம்பெருமானுடைய ஸ்வரூபப்ரதிபாதநபரமாயிருக்கும் சில; ப்ராப்தாவான ப்ரத்யகாத்மவிஷயமாயிருக்கும் சில; ப்ராப்த்யுபாயத்தைச் சொல்லும் சில; பலத்தைச் சொல்லும் சில; ப்ராப்திவிரோதியைச் சொல்லும் சில; அவசிஷ்டமானவை இவற்றுக்கு உபபாதகங்களாயிருக்கும். இவற்றில் உத்தேச்யம்-பலம்; ததர்த்தமாக மற்றுள்ள நாலர்த்தமும் சொல்லுகிறது.

இவற்றில் ப்ரதமப்ரபந்தமான திருவிருத்தத்தில் - த்வதநுபவவிரோதியான ஸம்ஸாரஸம்பந்தத்தை யறுத்துத் தந்தருளவேணுமென்று எம்பெருமானை ப்ரார்த்திக்கிறார்; திருவாசிரியத்தில் - நிவ்ருத்தஸம்ஸாரர்க்குபோக்யமான தன்னுடையவடிவழகைக் கலம்பகன்மாலையைப் பணியாக எடுத்துக்காட்டுமாபோலே காட்டிக்கொடுக்கக்கண்டு அநுபவித்தார் பூர்ணமாக; பெரியதிருவந்தாதியில் - நிரதிசயபோக்யனான எம்பெருமானை அநுபவிக்கையாலே ததநுகுண

மாக த்ருஷ்ணை பிறந்து த்ருஷ்ணாநுகுணமாகப் பேசியும் நினைத்தும் தரிக்கிறார்; திருவாய்மொழியில் இவருடைய த்ருஷ்ணாநுகுணமாக ச்ரிய:பதியாய் ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய்த் தனக்குத்தகுதியான திவ்யதேஹத்தையுடையனுமாய் திவ்யபூஷணபூஷிதனுமாய் சங்கசக்ராதி திவ்யாயுததரனுமாய்ப் பரமவ்யோமத்திலே ஆநந்தமயமான திவ்யாஸ்தான ரத்நமண்டபத்திலே பெரியபிராட்டியாரும் தானும் பிராட்டிமாருங்கூட திவ்யஸிம்ஹாஸநத்திலே ஏழுலகுக் தனிக்கோல் செல்ல வீற்றிருந்தருளி அஸ்த்தாநே பயசங்கிகளான அயர்வறுமமரர்களாலே அநவரதபரிசர்யமாண சரணநளிநனாய்க்கொண்டு, அங்கு அங்ஙனே செல்லாநிற்க ஸ்வஸங்கல்பாயத்த ஸ்வரூபஸ்த்திதி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகமான ஸ்வேதரஸமஸ்தத்தையும் தனக்கு சரீரதயா சேஷமாகவுடையனாய் அந்தராத்மதயா சேதநாசேதநங்களை வ்யாபித்துத் தத்கததோஷைரஸம்ஸ்ப்ருஷ்டனாய் நாராயணாதிநாமங்களைத் தனக்கு வாசகமாகவுடையனாய், ஏவம்விதனாக "உளன் சுடர்மிகுசுருதியுள்" என்கிறபடியே உபநிஷத்ஸித்தனுமாய் இப்படி விஸஜாதீயனுமாயிருந்துவைத்து ஆச்ரிதவாத்ஸல்யத்தாலே தேவமநுஷ்யாதி ஸஜாதீயனாய் வந்து தன்னுடைய பரமக்ருபையாலே திருவவதாரம் பண்ணும் ஸ்வபாவனுமாய்த் தன்னுடைய அவதாரங்களிலும் உதவப்பெறாத கர்ப்பநிர்ப்பாக்யர்க்கும் இழக்கவேண்டாதபடி ஸர்வாபராதஸஹனாய் பத்ரபுஷ்பாதிகளாலே ஸ்வாராதனாய்க்கொண்டு ஆச்ரிதர்க்கு அத்யந்தபரதந்த்ரனாய் அவர்களுடைய இச்சாநுகுணமான போஜநசயநாதிகளையுடையனாய் ஸமஸ்தகல்யாணகுணபரிபூர்ணனான தானே ஆச்ரிதஸௌலபத்வார்த்தமாகக் கோயில்களிலே வந்து நின்றருளியும், இப்படியுள்ள ஸர்வேச்வரத்வத்துக்கும் ஆச்ரிதாநுக்ரஹத்துக்கும் ஏகாந்தமான படிகளால் பரிபூர்ணனான எம்பெருமான் தன்னை நிர்ஹேதுகமாகக் காட்டியருளக் கண்டு அநுபவித்துத் தம்முடைய ப்ரக்ருதிஸம்பந்தமாகிற ப்ரதிபந்தகமற்று எம்பெருமானைப்பெற்று முடிக்கிறார். இனிச் சொல்லவேண்டுமவையெல்லாம் அவ்வவதிருவாய்மொழிகள் தோறும் சொல்லக் கண்டுகொள்வது.

முதல் திருவாய்மொழியிற் சொல்லிற்றாவது - நாநாரத்நபரிபூர்ணமாய் அபரிச்சேத்யமான கடலை முந்துறத் திரளக் கண்டாற்போலே ஸ்வரூபரூபகுணவிபூதிகளாலே பரிபூர்ணனாய் எல்லாப்படியாலும் எல்லாரிலும்மேற்பட்டு ஸர்வேச்வரனாய் ச்ரிய:பதியாக அபௌருஷேயமான ஸுத்ருடப்ரமாணச்ருதிகளாலே ப்ரதிபாதிக்கப்பட்டுள்ள எம்பெருமானை பாஹ்யகுத்ருஷ்டிகளால் அவிசால்யமாம்படி அவன் ப்ரஸாதத்தாலே ஸாக்ஷாத்கரித்து அநுபவித்து, அவ்வநுபவஜநிதப்ரீதி உள்ளடங்காமை அநுபவித்தபடியே ஸவிபூதிகனான எம்பெருமானைப் பேசி ஏவம்விதனானவன் திருவடிகளிலே அடிமைசெய்து உஜ்ஜீவியென்று தந்திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்கிறார்; கடலைத் திரளக்கண்டானொருவன் அதிலுண்டான முத்துமாணிக்யாதிகளையும் தனித்தனியே காணுமாபோலே முதல் திருவாய்மொழியிலே திரள அநுபவிக்கப்பட்ட எம்பெருமானுடைய குணங்களை ஓரோவகைகளிலே ஓரோதிருவாய்மொழியாய்ச் செல்லுகிறது இரண்டாந்திருவாய்மொழி தொடங்கி மேலெல்லாம். இப்படிசெய்தார் இவரேயல்லர், பாரதராமாயணாதிகளைப் பண்ணின வ்யாஸாதிகளும் ஸம்க்ஷேபவிஸ்தரங்களாலே தங்கள்ப்ரபந்தங்களை ப்ரபந்தீகரித்தார்கள்.

பரஸ்வரூபம் அகிலஹேயப்ரத்யநீகத்வத்தாலும் கல்யாணைகதாநத்வத்தாலும் ஸ்வேதரஸமஸ்தவஸ்துவிலக்ஷணமாய், விபுத்வாத் தேசத:பரிச்சேதரஹிதமாய் நித்யத்வாத் காலத:பரிச்சேதரஹிதமாய், ஸர்வமும் தனக்கு ப்ரகாரமாகத்தான் ப்ரகாரியாய்த் தனக்கு ஒரு ப்ரகார்யந்தரமில்லாமையாலே வஸ்துபரிச்சேதரஹிதமுமாய் ஜ்ஞாநாநந்தமயமாய் ஜ்ஞாநபலைச்வர்யசீலாத்யநந்த கல்யாணகுணகணமஹோததியாய் ச்ரிய:பதியாய் ஸ்வேதரஸமஸ்தத்தையும் வ்யாபிக்குமிடத்தில் அப்ராக்ருதமாய் சுத்தஸத்த்வமயமாய் ஸ்வாஸாதாரணமாய் புஷ்பஹாஸஸுகுமாரமாய் புண்யகந்தவாஸிதாநந்ததிகந்தராளமாய் ஸர்வாபாச்ரயமாயிருந்துள்ள திவ்யவிக்ரஹம்போலே வ்யாபித்து தரித்து நியமித்து, இப்படி ஸர்வப்ரகாரத்தாலும் ரக்ஷகமாய்க்கொண்டு சேஷியாயிருக்கும்; ப்ரக்ருதிஸ்வரூபம் மஹதாதிவிகாரங்களையுடைத்தாய் நித்யமாய் த்ரிகுணாத்மிகையாய் சுக்லக்ருஷ்ணரக்தவர்ணையாய் அநேகப்ரஜைகளுக்கு ப்ரஜநநபூமியாய் எம்பெருமானுக்கு சரீரதயா சேஷமாய் சேதநர் கர்மாநுகுணமாக இச்சிக்க இந்த இச்சாநுகுணமாக பகவத்ஸங்கல்பத்தாலே சதுர்விம்சதிதத்த்வமாய்க்கொண்டு விகரிக்கக்கடவ

தாய் இப்படி எம்பெருமானுக்குஇஷ்டவிநியோகார்ஹமா யிருக்கும். ஆத்மஸ்வரூபம் அணுபரி மாணமாய்த் தேஜோத்ரவ்யமாய் ஜ்ஞாதாவாய் ஜ்ஞாநாநந்தகுணகமாய் நித்யமாகையாலே காலபரிச்சேதரஹிதமாய் ஜ்ஞாநத்ரவ்யமாகையாலே வஸ்துபரிச் சேதரஹிதமாய் அப்ருதக் ஸித்யர்ஹ ப்ருதங்நிர்தேசார்ஹ அநந்யார்ஹசேஷமுமாய் பரசேஷதைகரஸமுமாய் அத்யந்த பரதந்த்ரமுமாயிருக்கும் எம்பெருமானுக்கு; இந்தை உள்ளபடியறிவாரில் தலைவராயிற்றிவர்.

இவ்வாழ்வார் திருவாய்மொழி ப்ரபந்தத்தால் செய்ததாயற்ற அர்த்தம் ஏதென்னில்;— முதல் திருவாய்மொழியிலே "உயர்வற வுயர்நலமுடையவன்" என்று தொடங்கி "உணர்முழு நலம்—மிகுநரையிலன்", "நிலனிடைவிசும்பிடையுருவினனருவினன்", "ஆமவையாயவையாய் நின்றவவர்" என்று சொல்லிக்கொண்டு போந்து "கரவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை வரன வில்திறல்வலியளிபொறையாய் நின்ற பரன்" என்று தலைக்கட்டுகையாலே நாராயணனே பரதத்வமென்கைக்காக நாராயணசப்தார்த்தத்தை அருளிச் செய்தார்; ஸர்வாதிகத்வமும் ஸமஸ்தகல்யாண குணாத்மகத்வமும் உபயவிபூதிநாதத்வமுமிறே நாராயணசப்தார்த்தம்; இதி னுடைய சேஷமிறே "ஒன்றுந்தேவும்", "திண்ணன்வீடும்". அநந்தரத்திருவாய்மொழியிலே இவ்வர்த்தத்துக்கு வாசகமான திருநாமந்தன்னை "வண்புகழ்நாரணன்" என்று அருளிச் செய்தார்; வ்யாபகாந்தரங்களிலும் இவ்வர்த்தத்தை அறியலா யிருக்குமே; அங்ஙனன்றிக்கே, இதுவே வாசகமென்று தம் திருவுள்ளத்திலே அறுதியிட்ட ஆகாரந்தோற்ற, "செல்வ நாரணன்", "திருநாரணன்", "நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன்", "காராயினகாள நன்மேனியினன் நாராயணன்", "திண்ணம்நாரணம்" என்று ஆதரித்துக்கொண்டு போந்து "வாழ்புகழ் நாரணன்" என்று வழிப்போக்கில்வார்த்தையும் இதுவேயாய்த் தலைக்கட்டுகை யாலே இதுவே வாசகமென்கிற நிர்ப்பந்தத்தை அருளிச்செய்தார்; இனி, "மலர்மகள் விரும்பும் நமரும்பெற லடிகள்" என்று தொடங்கி "திருவுடையடிகள்" என்றும், "மைய கண்ணாள் மலர்மேலுறைவாளுறைமார்பினன்" என்றும், "நமக்கும் பூவின்மிசைநங்கைக்கு மின்பன்" என்றும், "கோலத்திருமாமகளோடுன்னைக்கூடாதே" என்றும் சொல்லிக்கொண்டு போந்து, "திருவாணை" என்றும், "கோலமலர்ப்பாவைக் கன்பாகிய வென்னன்பே" என்றும் தலைக்கட்டுகையாலே ஸ்ரீமானான நாராயணனே பரதத்வமென்றும் சொல்லிற்று. இத்தால் நம் ஆசார்யர்கள் ரஹஸ்யத்திற் பதத்வயத்தாலும் அருளிச்செய்துகொண்டுபோரும் அர்த்தத் துக்கடி இவ்வாழ்வாராயிருக்கு மென்றதாயிற்று; ஆச்ரயணவேளையிலே "மலர்மகள் விரும்பும் நமரும்பெற லடிகள்" என்று தொடங்கி, போகவேளையிலே "கோலமலர்ப்பாவைக் கன்பாகிய வென்னன்பே" என்று சொல்லுகையாலே, ஆச்ரயண வேளையோடு போகவேளை யோடு வாசியற ஒருமிதுநமே உத்தேச்யமென்னுமிடம் சொல்லிற்றாயிற்று; இப்படி பரஸ்வரூபம் நிர்ணீதமாயிற்று. பரஸ்வரூபப்ரதிஸம்பந்தியான ஸ்வஸ்வரூபம் இருக்கும்படி என்? என்னில்;—"உடன்மிசையுயிரெனக்கரந்தெங்கும்பரந்து" என்று சரீராத்மபாவத்தைத் தாம் அநுஸந்தித்துப் பிறர்க்கு உபதேசிக்கிற இடத்திலே "உம்முயிர் வீடுடையானிடை" என்று அந்த சரீராத்மபாவந்தன்னையே உபதேசித்து, இந்த சரீராத்மபாவத்தால் பலிக்கிறது அநந்யார்ஹசேஷத்வ மென்னுமிடத்தை "தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்றும் "அடியேனுள்ளானுடலுள்ளான்" என்றும் சொல்லி இது தச்சேஷத்வத்தளவிலே நிற்ப தொன்றல்ல, ததீயசேஷத்வபர்யந்தமாகுலாயிற்று தச்சேஷத்வஸித்தி யென்னுமிடத்தை "பயிலுஞ்சுடரொளி" "நெடுமாற்கடிமை"யிலே பரக்க அருளிச்செய்து, "அடியார்கள் குழாங் களை உடன்கூடுவதென்றுகொலோ" என்று ப்ரார்த்தித்து, ப்ரார்த்தித்தபடியே "அடியரோ டிருந்தமை" என்று தலைக்கட்டுகையாலே பாகவதசேஷத்வபர்யந்தமான பகவச்சேஷத்வமே ஸ்வரூபமென்னுமிடம் சொல்லிற்று. ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தம் இருக்கும்படியென்? என்னில்;—"தனக்கேயாகவெனைக்கொள்ளுமீதே" என்று தொடங்கி, "வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம்" என்றும் "பணிமானம்பிழையாமே யடியேனைப் பணிகொண்ட" என்றும் "முகப்பேகூவிப்பணிகொள்ளாய்" என்றும் இப்படிகளாலே அடிமையே புருஷார்த்தமென்னுமிடத்தை நிர்ணயித்து 'இதுதான் சாஸ்த்ரவிஹிதமென்று செய்யுமவை யல்ல, ஸ்வரூபப்ராப்தமென்று செய்யுமவையல்ல, ராகப்ராப்தம்' என்று சொல்லுகைக் காக அடியிலே "உயர்வறவுயர்நலமுடையவன்" என்று கொண்டு ப்ராப்யமான குணங்களைச் சொல்லி, "சுவையன் திருவின்மணாளன்" என்றும் "தூயவமுதைப்பருகிப்பருகி" என்றும்

குணவிசிஷ்டவஸ்துவினுடைய போக்யதையையுஞ் சொல்லி ,"அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதம்" என்றும் "ஆராவமுதே" என்றும் "ஆராவமுதானாயே" என்றும் இந்த போகத்தினுடைய நித்யாபூர்வதையைச் சொல்லி, "உகந்துபணி செய்துனபாதம்பெற்றேன்" என்று குணாநுபவஜநித ப்ரீதிகாரிதகைங்கர்யமே புருஷார்த்த மென்னுமிடத்தைச் சொல்லி, இதுதான் யாவதாத்மபாவியான புருஷார்த்த மென்கைக்காக "ஈதேயின்னம்வேண்டுவதெந்தாய்" என்று தலைக்கட்டுகையாலே பகவத்குணாநுபவஜநிதப்ரீதிகாரிதகைங்கர்யமே புருஷார்த்தமென்று அருளிச்செய்தார்; இப்புருஷார்த்தத்துக்கு இடைச்சுவரான விரோதிவேஷத்தை இரண்டாந்திருவாய்மொழியிலே "வீடுமின்முற்றவும்" என்று கட்டடங்கச் சொல்லி அதுதன்னையே மேல் மூன்று திருவாய்மொழியாலே விஸ்தரித்து அருளிச்செய்தார்; அவை எவை யென்னில்;—அஸேவ்யஸேவை த்யாஜ்ய மென்றார், "சொன்னால் விரோத"த்திலே; ஐச்வர்ய கைவல்யங்கள் த்யாஜ்ய மென்றார், "ஒருநாயகத்"திலே; சரீரஸம்பந்தநிபந்தநமாக வரும் பரிக்ரஹங்கள் த்யாஜ்ய மென்றார், "கொண்டபெண்டி"ரிலே; அங்ஙனே சொல்லலாமோ? சாஸ்த்ரஸித்தமான ஐச்வர்யகைவல்யங்கள் புருஷார்த்தமாகத் தட்டென்? என்னில்; - பரம புருஷார்த்த லக்ஷணமோக்ஷத்திலே அதிகரித்தவனுக்கு ஐங்கருவி கண்ட வின்ப மாகையாலும், தெரிவரிதாய் அளவிறந்து இருந்ததேயாகிலும் பகவதநுபவத்தைப் பற்றச் சிற்றின்பமாகையாலும், முமுக்ஷுவுக்கு இவை த்யாஜ்ய மென்றார்; ஆக த்யாஜ்ய வேஷத்தை அருளிச்செய்தார். த்யாகப்ரகாரமிருக்கும்படியென்? என்னில்,—த்யாஜ்யமென்றால் விடுமத்தனையன்றோ; த்யாகப்ரகாரமிருக்கும்படி அறியவேணுமோ? என்னில், வேணும்; விஷயங்களினின்றும் தான் கடக்க வர்த்திக்கவோ? அன்றியே, விஷயங்களை நசிப்பித்து வர்த்திக்கவோ? என்றால்;—இரண்டும் ஒண்ணாது; கடக்க வர்த்திக்கவென்று நினைத்தால் லீலாவிபூதிக்கு அவ்வருகே போகவேணும்; நசிப்பித்து வர்த்திக்கவோவென்றால் பகவத்விபூதியை அழிக்கையாய்விடும்; இரண்டுமொழிய விஷயஸந்நிதியினின்றும் நிர்மாநுஷமான காட்டிலே வர்த்திந்தாலோ? என்றால்,—ஸர்வத்தையும் விட்டுக் காட்டிலேயிருந்த ஆதிபரதனுக்கு மானின்பக்கலிலே ஸங்கமுண்டாய் ஜ்ஞாநப்ரம்சம் பிறந்தது; ஸௌபரி நீருக்குள்ளே முழுகிக்கிடக்கச்செய்தே அங்கே சில மத்ஸ்யஸஞ்சாரத்தைக் கண்டு விஷயப்ரவணனானான்; ஆகையாலே, த்யாகப்ரகாரம் இவையல்ல; ஆனால் ஏதாவதென்னில், —"நீர் நுமதென்றிவை வேர்முதல்மாய்த்திறைசேர்மின்" என்று தேஹத்தில் ஆத்மபுத்தியையும், தேஹாநுபந்திகளான பதார்த்தங்களில் மமதாபுத்தியையுந் தவிருகை த்யாகப்ரகாரமென்று பிறர்க்கு உபதேசித்தார்; "யானேயென்னையறியகிலாதே யானேயென்தனதேயென்றிருந்தேன்" என்று தாமும் அநுஸந்தித்தார்; "நிவ்ருத்தராகஸ்ய க்ருஹம் தபோவநம்" என்று நிவ்ருத்தராகனாயிருக்குமவனுக்குத் தானிருந்த தேசமே தபஸ்ஸுக்கு ஏகாந்தஸ்த்தல மென்றதாயிற்று; இப்படி எங்கேகண்டோம்? என்னில், - ஸ்ரீஜநகராஜன்பக்கலிலும் ஸ்ரீகுலசேகரப்பெருமாள் பக்கலிலும் கண்டுகொள்வது; ஆகையாலே, புத்தித்யாகமே த்யாகமென்றபடி. இவ்விரோதி நிவ்ருத்திக்கும் புருஷார்த்தஸித்திக்கும் உபாயம் எது? என்னில்,—த்ரைவர்ணிகாதிகாரமான பக்தியும் அகிஞ்சநாதிகாரமான ப்ரபத்தியும் என்று இரண்டிறே வேதாந்தஸித்தமான உபாயம்; இதில் ப்ரபத்தியே உபாயமென்று தமக்கு ஸித்தாந்தமென்னும் ஆகாரம் தோற்ற உபாய வேஷத்தை அருளிச்செய்தார்; "நோற்றநோன்பிலேன்" என்று தொடங்கி "ஆறெனக்குநின் பாதமே சரணாகத்தந்தொழிந்தாய்" என்றும், "உழலையென்பிற் பேய்ச்சிமுலையூடவனையுயிருண்டான் கழல்களவையேசரணாகக்கொண்ட" என்றும், "நாமங்களாயிரமுடைய நம்பெருமானடி மேற்சேமங்கொள்தென்குருகூர்ச்சடகோபன்" என்றும், "நாகணைமிசைநம்பிரான் சரணே சரண் நமக்கு" என்றும் சொல்லிக்கொண்டுபோந்து, "ஆவிக்கோர்பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன்" என்று தலைக்கட்டுகையாலே திருவடிகளே உபாயமென்று அருளிச்செய்தார்; இத்தைப் பிறர்க்கு உபதேசிக்கிறவிடத்திலும் "திருநாரணன்தாள் காலம்பெறச்சிந்தித்துய்ம்மினோ" என்றும், "ஆறெனக்கு நின்பாதமே" என்றும், "கழல்களவையே" என்றும், "சரணேசரணமக்கு" என்றும் அவதரிக்கையாலே உபாயபூர்த்தியை அருளிச்செய்தார். இவ்வுபாயத்துக்கு அதிகாரிகளாவார் ஆர்? என்னில்;- "மயர்வறமதிநலமருளினன்" என்றவிடத்தில் எனக்கருளினனென்கைக்குத் தம்மைக்காணாமையாலே ஆகிஞ்சந்யத்தையே புரஸ்கரித்து, உபாயநிர்ணய வேளையிலே "நோற்றநோன்பிலேனுண்ணறிவிலேன்" என்று த்ரைவர்ணிகாதி

காரமான உபாயாந்தரங்களில் அகந்வயமுகத்தாலே ஆகிஞ்சந்யத்தைப் பேசி, ஆச்ரயணவேளையிலே "புகலொன்றில்லாவடியேன்" என்றுசொல்லி போக வேளையில் தமக்கு உண்டானது அடங்க பகவத்ப்ரஸாதலப்தமென்கைக்காக "நீசனேன் நிறையொன்றுமிலேன்" என்று கருந்தரையைப் பேசி, "ஒப்பிலாத்தீவினையேனையுய்யக்கொண்டு" என்று ஸர்வாபராதஜந்துக்களுக்கும் புகுரலாமென்று தோற்றுகையாலே ஸர்வாதிகாரமென்றதாயிற்று. அதிகாரியைப்பெற்றாலும் உபாயம் ஸித்தமானாலும் ஸ்வீகாரமில்லாதபோது ஜீவிக்கையாகாமையாலே அந்தஸ்வீகாரவேஷத்தை "கழல்களவையேசரணாகக்கொண்ட" என்றும், இதினுடைய ஸாங்காநுஷ்டாநவேளையிலே "அடிக்கீழமர்ந்துபுகுந்தேன்" என்றும் அருளிச்செய்தார்; இந்த ஸ்வீகாரஸித்திதானும் அவனாலே யென்னுமிடத்தை "நின்பாதமேசரணாகத் தந்தொழிந்தாய்" என்றும், "அதுவுமவனதின்னருளே" என்றும் அருளிச்செய்தார்; இந்த ஸ்வீகர்த்தாவினுடைய அத்யவஸாயவேஷத்தை "களைவாய் துன்பங் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்" என்றும் "நாடொறு மேகசிந்தையனாய்" என்றும் அருளிச்செய்தார். இவ்வுபாயத்தைப் பிறர்க்கு உபதேசிக்கிறவிடத்திலே "சிற்றவேண்டா சிந்திப்பேயமையும்" என்று உபாயஸௌகர்யத்தை அருளிச்செய்து, இதுதன்னை ஸப்ரகாரமாக அருளிச்செய்கிறவிடத்திலே "இது பக்த்யங்கமன்று; ஸ்வதந்த்ரோபாயம் என்கைக்காக "சரணமாகும்" என்று தொடங்கி "மரணமானால் வைகுந்தங் கொடுக்கும்பிரான்" என்று ப்ராப்திபர்யந்தமாக முடியநடத்துமென்று அருளிச்செய்தார். இவ்வுபாயாத்யவஸாயம் பண்ணியிருக்குமவனுக்குக் காலக்ஷேபப்ரகாரம் இருக்கும்படி யென்? என்னில்,- "தொண்டர்க்கமுதுண்ணச்சொன்மாலைகள் சொன்னேன்" என்று திருவாய்மொழிதானே காலக்ஷேபப்ரகார மென்று அருளிச்செய்தார். இப்படி உபாயத்தை ஸ்வீகரித்து இதுவே போதுபோக்காகத்திரியும் அதிகாரிக்கு பலவேஷமிருக்கும்படியென்? என்னில்;— ஜிதேந்த்ரியத்வம் ப்ரதமமாய் கைங்கர்யஸித்தி சரமமாயிருக்குமித்தனையும் உபாயபலமென்னுமிடத்தை அருளிச்செய்தார். ப்ரதமத்திலே இழியும்போது ஜிதேந்த்ரியனாய்க்கொண்டு இழியவேணும் உபாஸகனுக்கு; ஜிதேந்த்ரியத்வமும் உபாயபலம் இவ்வதிகாரிக்கு. எங்ஙனேயென்னில்,— "என்னைத்தீமனங்கெடுத்தாய்" "மருவித்தொழும்மனமேதந்தாய்" என்று ஜிதேந்த்ரியத்வம் அவனாலேயென்னுமிடத்தைச்சொல்லி ஜிதேந்த்ரியனானவாறே பகவதநுபவத்துக்கு உபகரணமான பக்த்யாதிகள் தனக்குத்தானே உண்டாகிறதோ? என்னில்,— "மயர்வறமதிநலமருளினன்" என்று பக்திரூபாபந்ந ஜ்ஞாநத்தையுந் தானே தந்தானென்கையாலே பக்த்யுத்பத்தியும் அவனாலே யென்னுமிடமும் சொல்லிகின்றது. ஆனால், உத்பந்நையான பக்திக்கு வர்த்தகர் ஆர்? என்னில், "காதல்கடல்புரையவிளைவித்த காரமர்மேனி நங்கண்ணன்" என்று அவனே வர்த்தக னென்னுமிடஞ் சொல்லி, வ்ருத்திக்கு எல்லை ஏதென்னில், "அதனிற்பெரியவென்னவா" என்று தத்த்வத்ரயங்களையும் விளாக்குலைகொள்ளும்படி பெருகினபடி சொல்லி, "என்னவாவறச் சூழ்ந்தாய்" என்று தம்திருவாயாலே அருளிச்செய்கையாலே சரீரஸம்பந்தத்தை யறுத்து தேசவிசேஷத்திலே கொண்டுபோய் ஸம்ச்லேஷித்துத் தலைக்கட்டினா னென்றதாயிற்று. ஆக, இவ்வைந்தர்த்தமுமே திருவாய்மொழியால் ப்ரதிபாதிக்கிறது; அல்லாதவை ஆநுஷங்கிகஸித்தமாய் வந்தவித்தனை: எங்ஙனே யென்னில்,—பரதத்த்வம் ஸ்ரீமந்நாராயணனென்றும், அநந்யார்ஹசேஷத்வமே ஸ்வரூபமென்றும், குணாநுபவஜநித ப்ரீதிகாரிதகைங்கர்யமே புருஷார்த்தமென்றும், அஹங்கார மமகாரங்கள் தத்விரோதியென்றும், தந்நிவ்ருத்திக்கும் கைங்கர்யஸித்திக்கும் ஸர்வ ஸுலபனான ஸர்வேச்வரன் திருவடிகளே உபாயமென்றும், ஜிதேந்த்ரியத்வம் தொடக்கமாகக் கைங்கர்யபர்யந்தமாக உபாய பலமென்றும் சொல்லிகின்றது. "ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந: ப்ராப்த்யுபாயம் பலம்ப்ராப்தேஸ் ததாப்ராப்திவிரோதி ச வதந்தி ஸகலாவேதாஸ்ஸேதிஹாஸ புராணகா: முநயச்ச மஹாத்மாநோ வேதவேதார்த்த வேதிந:" என்று ஸகல வேததாத்பர்யம் இவ்வர்த்தபஞ்சகமென்னுமிடத்தைப் பெரியவாச்சான் பிள்ளை புரத்துநம்பி திருவாய்மொழிக்கு வாக்யார்த்தமாக அருளிச்செய்தார்.

௬௫ - மஹாப்ரவேசம் - இரண்டாம்ச்ரிய:பதி

ச்ரிய:பதியாய் அவாப்தஸமஸ்தகாமனாய் ஸமஸ்தகல்யாணகுணாத்மகனான ஸர்வேச்வரன், "மாறிமாறிப்பலபிறப்பும்பிறந்து" என்கிறபடியே ஜந்மபரம்பரைகளிலே தோன்மாறித்

திரிகிற இவரை இவ்வர்த்தபஞ்சகத்தையும் விசததமமாக அறியவல்லராம்படி முதலடியிலே நிர்ஹேதுகமாக விசேஷகடாக்ஷம் பண்ணியருளினன். நம்மாழ்வார் திருவாய்மொழி ப்ரபந்தத்தாலே த்வயவிவரணம் பண்ணுகிருர். இதில் முதலிட்டு மூன்றுபத்தாலே உத்தரார்த்தத்தை விவரிக்கிருர்; மேலிட்டு மூன்று பத்தாலே பூர்வார்த்தத்தை விவரிக்கிருர்; மேலிட்டு மூன்று பத்தாலே உபாயோபயோகியான குணங்களையும், ஆத்மாத்மீயங்களில் தமக்கு நசையற்ற படியையும், அவனோடு தமக்கு உண்டான நிருபாதிக ஸம்பந்தத்தையும் அருளிச்செய்தார்; மேலிற்பத்தாலே தாம் ப்ரார்த்தித்தபடியே பெற்றபடியைச் சொல்லித் தலைக்கட்டுகிருர்.

இதில் முதற்பத்தாலே "உயர்வறவுயர்நலமுடையவன் - அயர்வறுமமரர்களதிபதியவனவன் - துயரறுசுடரடிதொழுதெழென்மனனே" என்று ஸமஸ்தகல்யாணகுணத்மகனாய், ஸூரிபோக்யனானவன் திருவடிகளில் கைங்கர்யமே புருஷார்த்தமென்று நிர்ணயித்து, உக்தமான அர்த்தத்துக்கும் வக்ஷ்யமாணமான அர்த்தத்துக்கும் ப்ரமாணம் "உளன்சுடர்மிகுசுருதியுள்" என்று நிர்த்தோஷமான ச்ருதியே ப்ரமாணமென்றும், ஏவம்விதனானவன் ஆர்? என்ன, "வண்புகழ்நாரணன்" என்றும், "திருவுடையடிகள்" என்றும், "செல்வநாரணன்" என்றும் விசேஷித்து, "தொழுதெழென்மனனே" என்று உபக்ரமித்து "அயர்ப்பிலனலற்றுவன் தழுவுவன் வணங்குவனமர்ந்தே" என்று த்ரிவிதகரணங்களாலும் அடிமைசெய்து தலைக்கட்டுகையாலே பகவத்கைங்கர்யமே புருஷார்த்தமென்று அறுதியிட்டார். இரண்டாம்பத்தால் இந்தக் கைங்கர்யத்துக்கு விரோதியான ப்ரக்ருதிஸம்பந்தத்தையுங் கழித்து, 'ஒளிக்கொண்ட சோதியமாய் இக்கைங்கர்யத்துக்கு தேசிகரான அடியார்கள் குழாங்களை உடன்கூடுவது என்றுகொலோ?' என்று தாமும் ப்ரார்த்தித்து, "நலமந்தமில்லதோர்நாடுபுகுவீர்" என்று பிறர்க்கும் உபதேசிக்கையாலே 'இவர்க்குப் பரமபதத்திலே நோக்காயிருந்தது' என்று ஈச்வரன் பரமபதத்தைக் கொடுக்கப் புக, "எம்மாவீட்டுத்திறமும்செப்பம்" என்று - 'எனக்கு அதில் ஒரு நிர்ப்பந்தமில்லை; "தனக்கேயாகவெனைக்கொள்ளுமீதே" என்று - உனக்கேயாயிருக்கும் இருப்பே எனக்கு வேண்டுவது' என்று இப்புருஷார்த்தத்தை ஓடவைத்தார். மூன்றாம்பத்தால் இவர்க்குக் கைங்கர்யத்திலுண்டான ருசியையும் த்வரையையும் கண்ட ஈச்வரன் கைங்கர்யத்துக்கு ஏகாந்தமான திருமலையில்நிலையைக் காட்டிக்கொடுக்கக் கண்டு "வழுவிலாவடிமை செய்யவேண்டும்நாம்" என்று பாரித்து, பாரித்தபடியே பாகவதசேஷத்வ பர்யந்தமாக வாசிகமாக அடிமைசெய்து தலைக்கட்டுகிருர். நாலாம்பத்தால் இப்புருஷார்த்தத்துக்கு உபாயம் "திருநாரணன் தாள்" என்றும், விரோதி "குடிமன்னுமின்சுவர்க்கம்", "எல்லாம் விட்டவிறுகலிறப்பு" என்று ஐச்வர்யகைவல்யங்களே விரோதியென்றும்பிறர்க்கு உபதேசித்து "ஐங்கருவிகண்டவின்பம் தெரிவரியவளவில்லாச்சிற்றின்பம்" என்று தாமும் அநுஸந்தித்தார். அஞ்சாம்பத்தால் இந்த இஷ்டப்ராப்திக்கும் அநிஷ்டநிவ்ருத்திக்கும் "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத்தந்தொழிந்தாய்" என்று தன் திருவடிகளையே உபாயமாகத் தந்தானென்கிருர். அவன் தந்த உபாயத்தை கடகரை முன்னிட்டுப் பெரியபிராட்டியார் புருஷகாரமாக "அலர்மேல் மங்கையுறைமார்பா! உன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேன்" என்று ஸ்வீகரித்தார் ஆரும்பத்தால். ஏழாம்பத்தால் இப்படி ஸித்தோபாயஸ்வீகாரம் பண்ணியிருக்கச்செய்தேயும் சடக்கெனப் பலியாமையாலே விஷண்ணராய் "கடல்ஞாலங்காக்கின்றமின்னுநேமியினாய்" என்றுதொடங்கி உபாயோபயோகியான குணங்களைச் சொல்லிக் கூப்பிட "கூராராழிவெண்சங்கேந்தி....வாராய்" என்று இவர் ஆசைப்பட்டபடியே வென்னைச்கரி சங்கொடாழியேந்தி வந்தவிது மாநஸாநுபவமாத்ரமாய் பாஹ்யஸம்ச்லேஷம் கிடையாமையாலே விச்லேஷித்தபடியை அருளிச்செய்தார். எட்டாம்பத்தால் மேற்பிறந்தஸம்ச்லேஷம் பாஹ்யஸம்ச்லேஷயோக்யமல்லாமையாலே "உமருகந்துகந்தவுருவம்நின்னுருவமாகி உன்றனக்கன்பரானாரவருகந்தமர்ந்தசெய்கையுன்மாயை" என்று இப்படி - ஆச்ரிதாதீந ஸ்வரூபஸ்த்திதியாதிகளையுடையவன் நமக்குத் தன்னைக்காட்டி மறைக்கைக்கு அடி ஆத்மாத்மீயங்களில் ஏதேனும் நசையுண்டாகக்கொண்டாக வேணுமென்று அதிசங்கை பண்ணி, அவற்றில் நசையற்றபடியை அருளிச்செய்தார்; ஒன்பதாம்பத்தால் "நீரென்றிய அதிசங்கைபண்ணிப்படுகிறீர் இப்படி" என்று தன்னுடைய நிருபாதிகபந்தத்தையுங் காட்டி, "நான் நாராயணன், ஸர்வசக்தியுக்தன், உம்முடைய ஸர்வாபேக்ஷிதங்களையும் செய்து தலைக்கட்டுகிறோம்" என்று அருளிச்செய்ய, "சிலமெல்லையிலான்" என்று அவனு

டைய சிலகுணங்களிலே ஆழங்கால்பட்டார். பத்தாம்பத்தால் ஆழ்வாருடைய ஆற்றாமையைக் கண்டு திருமோகூரிலே தங்குவேட்டையாக வந்துதங்கி, இவருக்கு அர்ச்சிராதி கதியையுங் காட்டிக் கொடுத்து, இவர் ப்ரார்த்தித்தபடியே "என்னவாவறச்சூழ்ந்தாயே" என்று இவர் திருவாயாலே அருளிச்செய்யும்படி பேற்றைப்பண்ணிக்கொடுத்தபடியை அருளிச்செய்கிறார்.

௩டு - மஹாப்ரவேசம் - மூன்றும் ச்ரிய:பதி

ச்ரிய:பதியாய், அவாப்தஸமஸ்தகாமனாய், ஸமஸ்தகல்யாணகுணாத்மகனான ஸர்வேச்வரன், "மாறிமாறிப்பலபிறப்பும்பிறந்து" என்கிறபடியே ஜந்மபரம்பரைகளிலே தோன்மாறி நித்ய ஸம்ஸாரியாய்ப்போந்த இவரை "அடியையடைந்துள்ளந்தேறி யீறிலின்பத்திருவெள்ளம்யான் மூழ்கினன்" என்று தம்திருவாயாலே அருளிச்செய்யலாம்படி முதலடியிலே விசேஷகடாக்ஷத்தைப் பண்ணியருளினான். முதல்தன்னிலே சித்ஸ்வரூபமாதல் அசித்ஸ்வரூபமாதல் ஈச்வரஸ்வரூபமாதல்அறியாதேயிருக்கிற இவர்க்கு அசிதம்சம் த்யாஜ்யமென்னுமிடத்தையும், சேதநன் உபாதேயனென்னுமிடத்தையும், தான் உபாதேயதமனென்னுமிடத்தையும் அவன்தானே காட்டிக்கொடுக்கக் கண்டு, அவனோட்டை யநுபவத்துக்கு இத்தேஹஸம்பந்தம் விரோதியாயிருக்கையாலே த்வதநுபவவிரோதியான இத்தேஹஸம்பந்தத்தை யறுத்துத் தந்தருளவேணுமென்று அர்த்தித்தார் திருவிருத்தத்தில்; ஸம்ஸாரஸம்பந்தமற்று ஒருதேசவிசேஷத்திலே போனால் அநுபவிக்கக்கடவ தன்னுடைய மேன்மையையும் நீர்மையையும் வடிவழகையும் பரப்பற ஏழுபாட்டாலே அநுபவிக்கலாம்படி இங்கேயிருக்கச்செய்தே ஒருதசாவைசத்யத்தைப் பண்ணிக் கொடுக்க அவ்வழகையநுபவித்தார் திருவாசிரியத்தில்; இப்படி அநுபவித்த விஷயத்திலே விஷயாநுரூபமான ஆசை கரைபுரண்டபடியைச் சொன்னார் திருவந்தாதியில்; ஆமத்தையறுத்துப் பசியைமிகுத்துச் சோறிடுவாரைப்போலே தமக்கு ருசியைப்பிறப்பித்தபடியையும், அந்த ருசிதான் பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளாய்க்கொண்டு பக்வமான படியையும், பின்பு ப்ரக்ருதி ஸம்பந்தமும் அற்றுப் பேற்றோடே தலைக்கட்டின படியையும், சொல்லுகிறார் திருவாய்மொழியில். கைங்கர்யமநோரதம்பண்ணிக்கொண்டு வரக் கொள்ளக் கைகேயி "ராஜந்" என்ற சொற்கேட்டு ஸ்ரீபரதாழ்வான் பட்டபாடுபோலேயிருக்கிறதாயிற்று, திருவிருத்தத்தில் நிலை: அவன் திருச்சித்திரகூடத்திலே பெருமாள் எழுந்தருளியிருந்தாரென்று கேட்டு "ஏபிச்ச ஸசிவைஸ் ஸார்த்தம்" என்கிறபடியே என்னொருவன்கண்ணில் கண்ணநீர் பொறுக்கமாட்டாதவர் இத்தனைபேர்ஆற்றாமை கண்டால் மீளாதொழிவரோ? "சிரஸா யாசிதோ மயா"-என் அபிமதம் தந்தலையாலே யிரந்துசெய்யக்கடவஅவர், நான் என்தலையாலே இரந்த கார்யத்தை மறுப்பரோ? "ப்ராது:" - நான் தம்பின்பிறந்தவனல்லேனோ? - "சிஷ்யஸ்ய" பின்பிறந்தவனென்று கூறுகொள்ள இருக்கிறேனோ? மந்த்ரஸம்பந்தமும் தம்மோடேயன்றோ? "தாஸஸ்ய" — சிஷ்யனாய் க்ரயவிக்ரயார்ஹனன்றிக்கே இருக்கிறேனோ? "ப்ரஸாதம் கர்த்துமர்ஹதி" - ஆனபின்பு என்பக்கல் ப்ரஸாதத்தைப்பண்ணியருளாரோ? என்று மநோரதித்துக்கொண்டு போகிறபோதை தரிப்புப்போலே, திருவாசிரியத்தில் நிலை; ஸ்ரீநந்திக்ராமத்திலே "ராமாகமநகாங்க்ஷயா" என்கிறபடியே பதினாலாண்டும் ஆசைவளர்த்துக்கொண்டிருந்தாப்போலே யிருக்கிறது, திருவந்தாதியில்; மீண்டெழுந்தருளித் திருவபிஷேகம் பண்ணியருளி, அவனும் ஸ்வரூபாநுரூபமான பேறு பெற்றாப்போலேயிருக்கிறது, இவர்க்குத் திருவாய்மொழியில் பேறு.

திருவாய்மொழிக்காக ஸங்க்ரஹம் முதல்திருவாய்மொழி: முதல்திருவாய்மொழியினுடைய ஸங்க்ரஹம் - முதல் மூன்று பாட்டு; முதல்மூன்றுபாட்டினுடைய ஸங்க்ரஹம் - முதற்பாட்டு: முதற்பாட்டினுடைய ஸங்க்ரஹம் - முதலடி; என்போலென்னில்:— "ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநிச ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்த்தம் யச்சாந்யதபிவாங்மயம்" என்கிறபடியே ஸகலவேத ஸங்க்ரஹம் திருமந்த்ரமாய், அதினுடையஸங்க்ரஹம் ப்ரணவமாய், அதினுடைய ஸங்க்ரஹம் அகாரமானாற்போலே. மற்றும் பாரதராமாயணாதிகளையும் ஸம்க்ஷேப விஸ்தரங்களிலே செய்தார்களிறே.

(௩டு மஹாப்ரவேசம் முற்றிற்று)

ஸ்ரீ:
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி

முதற்பத்து

முதல்திருவாய்மொழி—உயர்வற

உயர்வறவுயர் நலமுடையவன் யவனவன்*
மயர்வறமதி நலமருளினன் யவனவன்*
அயர்வறுமமரர்களதிபதி யவனவன்*
துயரறுசுடரடி தொழுதெழென் மனனே. (1)

நஞ்சீயரருளிச்செய்த ஒன்பதினாயிரப்படி வியாக்கியானம்

முதற்பாட்டுக்குக் கருத்து - அகிலஹேயப்ரத்யநீக கல்யாணகுணனாய், குணங்களுக்கு நிறங் கொடுக்கவற்றான திவ்யதேஹயுக்தனாய், ச்ரிய:பதியாய், ஸௌந்தர்யாதிகளுக்கு போக்தாக்களான அயர்வறு மமரர்க ளதிபதியா யிருந்துவைத்துத் தன்னுடைய நிரவதிகக்ருபையாலே என்னுடைய தோஷாகரதையைப் பாராதே என்னுடைய அஜ்ஞாநமெல்லாம் நீங்கும்படி ஸ்வவிஷய பக்திரூப ஜ்ஞாநத்தை நிர்ஹேதுகமாக ஸாதரனாய்க்கொண்டு தந்தருளினான்; ஆனபின்பு, அவன் திருவடிகளிலே அடிமைசெய்து உஜ்ஜீவிப்போமென்று திருவுள்ளத்தோடே கூட எம்பெருமானுக்கு அடிமை செய்கையிலே ப்ரவ்ருத்தராகிறார். இத்தால், ப்ரபந்தாரம்பத்திலே வஸ்துநிர்த்தேச நமஸ்காரங்களும் பண்ணப்பட்டனவாய் விழுந்தது.

[உயர்வற வுயர்நலமுடையவன்] - ஆநந்தவல்லியிற் சொல்லுகிறபடியிலே ஒரோ குணத்தின் ஸந்நிதியிலே வ்யதிரிக்த ஸகலார்த்தகதமான எல்லாப்படியாலுமுள்ள எல்லாவுயர்த்தியும் ஆதித்ய ஸந்நிதியில் நக்ஷத்ராதிகளைப்போலே யுண்டாய், அவற்றை இல்லையென்னலாம்படியாய், அவைதனக்கு அவதியுண்டாயிருக்கை யன்றியே காலதத்த்வமுள்ளதனையும் அநுஸந்தியாநின்றாலும் மேன்மேலென உயர்ந்து காட்டாநிற்பனவான கல்யாணகுணங்களை யுடையான். நலமென்றவிடத்தில், ஏகவசநம் - குணஜாதிபரம். நலமாவது - குணவிபூத்யாதிகளை அநுபவிக்கையாலே வந்த ஆநந்தகுணமாகவுமாம்; ஆநந்தமென்று ஆநந்தச்ருதிகளில் ப்ரஸித்தம். குணநிரபேக்ஷமாகத் தானே விலக்ஷணமாய் தன்னைப் பற்றிக் குணங்கள் நிறம்பெறும்படியான திவ்யாத்ம ஸ்வரூபத்தினுடைய உபநிஷத்ப்ரஸித்தியைச் சொல்லிற்றாகவுமாம். [அவன்] - முன்புசொன்ன நன்மைகளிற்காட்டில் மேற்பட்டதொரு நன்மை சொல்லுகைக்காக அவனென்று நிர்த்தேசிக்கிறது. இப்படியே மேல் யவனவன்களுக்கும் பொருள். 'அவன்' என்று பலகால் சொல்லுகிறதுக்குக் கருத்து - இப்பாட்டில் ப்ரதிபாதிக்கிற குணங்கள் தனித்தனி ஈச்வரத்வஸாதகங்களென்று தோற்றுகைக்காக. [மயர்வற] - ஸ்வவிஷயத்திலே எனக்கு அநாதியாய்வருகிற அஜ்ஞாநமெல்லாம் போம்படி. [மதிநலம்] - பக்திரூபாபந்நஜ்ஞாநம். [அருளினன்] - இத்தலை நன்மைதிண்மைபாராதே நிர்ஹேதுகமாகத் தன்க்ருபையாலே தந்தருளினான். எனக்குத் தந்தருளினானென்னு மொழிவானென்? என்னில்;—''அஸந்நேவ ஸபவதி'' என்று சொல்லுகிற கணக்காலே பகவத்விஷயீகாரத்துக்குமுன்பு தம்மை அஸத்கல்பராக நினைத்திருக்கையாலே. [அயர்வறுமமரர்களதிபதி] - பகவத்ஜ்ஞாநத்துக்கு விச்சேதமில்லாமை ஸ்வபாவமாய், அவ்வநுபவத்துக்கு ஒருநாளும் விச்சேதமின்றிக்கே யிருக்கிற நித்யஸூரிகளுக்கு ஸ்வாமி. 'அமரர்கள்' என்கிற பஹுவசநத்துக்கு முக்யார்த்தத்வம் ப்ராப்தமாகையால் அவர்கள்தங்களுக்கு எண்ணில்லை யென்கிறது. [துயரறுசுடரடி] - துயரறும் ஸ்வபாவமாய், அப்ராக்ருத தேஜோரூபமான திருவடிகளை. திருவடிகளுக்குத் துய

ருண்டோ? என்னில்,—ஆச்ரிதருடையதுயர் திருவடிகளுக்குத் துயர். அவனைத் தொழுதெழென்னுதே திருவடிகளைத் தொழுதெழு என்பானென்? என்னில்,—ஸ்தநந்தயப்ரஜை முலையிலே வாய்வைக்குமா போலே அடியனானவனுக்குத் திருவடிகளிலே தலைமடுக்கை முறைமையாகையாலே. [தொழுதெழு] - அடிமையாலல்லது செல்லாத தன்மையா யிருக்கச்செய்தே அநாதிகாலம் அடிமையிழந்து உருவி இல்லாதார்கணக்காயிருக்கிற நீயே எம்பெருமானுடைய திருவடிகளிலே அடிமை செய்து உஜ்ஜீவி. எம்பெருமானோடு ப்ரத்யாஸந்நமான திருவுள்ளத்தோடே தமக்கு ஸம்பந்தத்தை ஆசைப்பட்டு, 'என் மனனே' என்கிறார்.

'ஸந்மாத்ரமே வஸ்து' என்கிற வாதமும், 'ஜீவபரர்களுடைய பேதம் ஔபாதிகம்; மோக்ஷ தசையில் எல்லாம் ஒன்று' என்கிற வாதமும் இவர்க்கு ஸித்தாந்தமன்றென்னுமிடம் வ்யக்தம் இப் பாட்டில்; பராமவர்களுக்கு விருத்தமாகையால். இப்பாட்டில் 'அவன், அவன்' என்கிற மூன்று பர்யாயத்திலும் 'துயரறுசுடரடி தொழுதெழென்மனனே' என்று வாக்யபேதம்பண்ணி யோஜிப்பர். ''நமோநம:'' இத்யாதி ச்லோகவத் ப்ரதிவிசேஷணம் ஈடுபடுகையாலே.

பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்த இருபத்து நாலாயிரப்படி

முதற்பாட்டு. ச்ரிய:பதியாய் ஸமஸ்தகல்யாண குணாத்மகனாய் அக்குணங்களுக்கு ப்ரகாசகமான திவ்யவிக்ரஹத்தையுடையனாய் அவற்றையநுபவிக்கும் நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனாயிருக்கிற இருப் பைத் தன்னுடைய நிர்ஹேதுகக்ருபையினாலே அநுபவயோக்யமாம்படி நமக்கு பக்திரூபாபந்நஜ்ஞாநத்தைத் தந்தருளினான்; அவன் திருவடிகளிலே அடிமைசெய்து உஜ்ஜீவிக்கப்பாரென்று தம்திருவுள்ளத்தைக் குறித்து அநுசாஸிக்கிறார்.

[உயர்வு] - உயர்த்தி; அதாவது-தன்னையொழிந்த ஸகலபதார்த்தங்களிலும் எல்லாப் படியாலுமுண் டான எல்லாவுயர்த்தியையுஞ் சொல்லுகிறது. [அற] - ஆதித்யஸந்நிதியிலே நக்ஷத்ராதிகளைப்போலே யுண்டாய், அவற்றை இல்லையென்னலாம்படி யிருக்கை; ''ஜ்யோதீம்ஷ்யாதித்யவத்'' இத்யாதி. [உயர்] - உயராநிற்கை. காலதத்த்வமுள்ளதனையும் அநுபவியாநின்றாலும் அவ்வருகாய்க்கொண்டு வாங்மநஸங்களால் பரிச்சேதிக்கவொண்ணாதிருக்கை. அநுபூதாம்சம் அல்பமாய் அநுபாவ்யாம்சமே விஞ்சியிருக்கை. [நலம்] - குணவிபூத்யாதிகளை அநுபவிக்கையால் வந்த ஆநந்தகுணம்; ஏகவசநம் - ஜாத்யபிப்ராயமாய் குணஜாதிபரமாகவுமாம்; ஆநந்தாவஹமான குணவிபூத்யாதி பரமாகவுமாம். நல மென்கையாலே - கட்டடங்க நன்மையேயாயிருக்கை. [உடையவன்] - ஆதந்துகமன்றிக்கே ஸ்வரூபாநு பந்தியாயிருக்கை. இதுக்கு ஆளவந்தார் ''ஸ்வாபாவிகாநவதிகாதிசய அஸங்க்யேய கல்யாணகுண கண:'' என்று அருளிச்செய்வர். 'குத்ருஷ்டிகளுடைய மிடற்றைப் பிடித்தாற்போலே நலமுடையவன் என்று ஆழ்வார் அருளிச் செய்தபடி கண்டாயே' என்று பிள்ளைப்பிள்ளையாழ்வானுக்கு ஆழ்வான் பணித் தான். [யவன்] - இக்குணங்களுக்கு ஆச்ரயமான திவ்யாத்மஸ்வரூபத்தினுடைய ச்ருதி ப்ரஸித்தியைச் சொல்லுகிறது. இந்தக்குணங்கள்தானும் நிறம்பெறும்படியான ஸ்வரூபவைலக்ஷண்யத்தைச் சொல்லிற் றாகவுமாம். [அவன்] - முன்பு சொன்ன நன்மைகளிற்காட்டில் மேற்பட்டதொரு நன்மை சொல்லுகைக்காக 'அவன்' என்று உத்தேசிக்கிறது. [மயர்வு] - அஜ்ஞாநம்; இத்தால், ஜ்ஞாநாநுதய அந்யதாஜ்ஞாந [illegible] அஜ்ஞாநத்தைச் சொல்லுகிறது. [அற] - ஸவாஸநமாகப் போகும்படி. [மதிநலம்] - மதியென்று - ஜ்ஞாநம், நலமென்று - பக்தி; பக்திரூபாபந்நஜ்ஞாந மென்றபடி [அருளினன்] இத்தலையில் [illegible] தீமை பாராதே நிர்ஹேதுகக்ருபையாலே தந்தருளினான்; முலைக்கடுப்பாலே தரையிலே பீச்சுமா போலே எனக்குத் தந்தருளினானென்னுதொழிந்தது - பகவத்விஷயீகாரத்துக்கு முன்பு தம்மை அஸத்கல்ப ராக நினைத்திருக்கையாலே. [யவன்]-இப்படி உபகாரகனாக ச்ருதிப்ரஸித்தனானவன். [அவன்]-அதுக்கு மேலே ஒருநன்மை சொல்லுகைக்காக அவனென்று உத்தேசிக்கிறது [அயர்வறும்] - பகவத்ஜ்ஞாநத்துக்கு விச்சேதமில்லாமை ஸ்வபாவமாயிருக்கை. [அமரர்கள்] - மரணமின்றிக்கே யிருப்பவர்கள். அவர் களுக்கு மரணமாவது - பகவதநுபவ விச்சேதம்; அதின்றிக்கே யிருக்கை. அமரர்களென்கிற பஹு வசநத்தாலே - அவர்களுக்கு எண்ணில்லை யென்கிறது. [அதிபதி]-அதிகனான பதி. அஸங்க்யாதரான நித்யஸூரிகள் நித்யாநுபவம் பண்ணாநின்றாலும் பரிச்சேதிக்கவொண்ணாத பெருமையையுடையவன். [யவன்] - நித்யவிபூதியோகத்தாலே வந்த ச்ருதிப்ரஸித்தி [அவன்] - அதுக்குமேலே விக்ரஹத்தால் வந்த

வைலக்ஷண்யம் சொல்லுகைக்காக உத்தேசிக்கிறது. [துயரறு] - துயரற்ற என்றபடி. இவர் மயர்வற, அவன் துயரற்றபடி [சுடரடி] - நிரவதிகதேஜோரூபமான திவ்யவிக்ரஹம். [அடி] - சேஷபூதர் அநுபவிக்க இழியுந் துறை. [தொழுது] - சேஷியைக்கண்டால் பிறக்கும் வ்ருத்திவிசேஷம். [எழு] - உஜ்ஜீவி. தொழப்பெறாத போது "அஸந்நேவ" என்னும்படியாயிறே இருப்பது. [என்மனனே] - பகவத்ப்ரத்யாஸத்தியாலே தமக்குத் திருவுள்ளத்தோடே ஒரு ஸம்பந்தத்தை ஆசைப்படுகிறார்.

தனித்தனியே 'அவன்' என்கிறது - ஒரோவொன்றே ஈச்வரத்வ ஸாதகங்களென்று தோற்றுகைக்காக. மூன்றுபர்யாயத்திலும் 'துயரறுசுடரடிதொழுதெழென்மனனே' என்று வாக்யபேதம்பண்ணி யோஜிக்கவுமாம்; "நமோ நமோ வாங்மநஸாதிபூமயே" என்னுமா போலே தனித்தனியே ப்ரீதியாலே ஈடுபடுகையாலே. "உயர்வறவுயர்நலமுடையவன் யவன், அவன் மயர்வறமதிநலமருளினன். மயர்வற மதிநலமருளினன் யவன், அவன் அயர்வறும் அமரர்களதிபதி; அயர்வறும் அமரர்களதிபதி யவன், அவன் துயரறுசுடரடி தொழுதெழு என்மனனே" என்று வாக்யைகவாக்யந்யாயத்தாலே யோஜிக்கவுமாம்.

ஈடு முப்பத்தாறாயிரப்படி

முதற்பாட்டு.—தான் ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாயிருக்கிற இருப்பைக்காட்டி உபகரித்தான்; அக்குணங்களும் தன்னைப்பற்றி நிறம்பெறவேண்டும்படியாயிருக்கிற திவ்யாத்ம ஸ்வரூப வைலக்ஷண்யத்தைக் காட்டி உபகரித்தான்; இப்பேற்றுக்கு என்பக்கல் சொல்லலாவதொன்றுமின்றிக்கேயிருக்க நிர்ஹேதுகமாகத்தானே உபகாரகனானான்; ஸ்வஸ்வரூபாபந்நராயிருக்கிறவர்களுக்கும் அவ்வருகாயிருக்கிற இருப்பைக்காட்டியுபகரித்தான்; தன்னுடைய திவ்யவிக்ரஹ வைலக்ஷண்யத்தைக்காட்டி யுபகரித்தான் என்று அவன் பண்ணின வுபகாரங்களடையச் சொல்லி, இப்படி உபகாரகனானவன் திருவடிகளிலே நித்யகைங்கர்யத்தைப் பண்ணி யுஜ்ஜீவிக்கவாராயென்று தந்திருவுள்ளத்தோடே கூட்டுகிறார். ஆறு மெண்ணகமெடுத்தால் வேர்நின்ற மரங்கள் பறியுண்டுபோய்க் கடலிலே புகும்; நீர்வஞ்சி தொடக்கமானவை வளைந்து பிழைக்கும்; அதுபோலே பகவத்குணங்களினுடைய எடுப்பு இருந்தபடி கண்டோமுக்கு எதிரே நானென்று பிழைக்க விரகில்லை; அவன்திருவடிகளிலே தலைசாய்த்துப் பிழைக்க வாராய் நெஞ்சேயென்கிறார்; உயர்வறவுயர்நலமுடையவன் துயரறுசுடரடி தொழுதெழப்பாராயென்கிறார். *அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர் தாஸ்யமுபாகத:* என்னுமாபோலே; இளைய பெருமாளை "நீர் இவர்க்கென்னாவீர்" என்ன, "பெருமாளுமொருபடி நினைத்திருப்பர், நானுமொருபடி நினைத்திருப்பேன்" என்றார்; "அவர் நினைத்திருக்கும்படியென், நீர் நினைத்திருக்கும்படியென்" என்ன; "அவர் தம்பின்பிறந்தவனென்றிருப்பர், நான் அவர்குணங்களுக்குத் தோற்று அடியேனாயிருப்பன்" என்றாரிறே; அப்படியேயிவரும் "உயர்வறவுயர்நலமுடையவன் துயரறு சுடரடி தொழுதெழப் பாராய் நெஞ்சே" என்கிறார். இவர்தாம் முற்படக் குணங்களிலே யிழிவானென்னென்னில்; தாமகப்பட்ட துறை அதுவாகையாலே. இவரை குணத்தையிட்டாயிற்று வணங்குவித்தது.

(உயர்வு இத்யாதி) பகவதாநந்தத்தைப் பேசப்புக்க வேதங்கள் மநுஷ்யாநந்தம்தொடங்கி ப்ரஹ்மாநந்தத்தளவும் சென்று பின்னையு மவ்வருகே யுத்ப்ரேக்ஷித்துக்கொண்டு சென்று பின்னையும் பரிச்சேதிக்கமாட்டாதே, *யதோ வாசோ நிவர்த்தந்தே* என்று மீண்டனவிறே; இது ஆநந்தகுணமொன்றிலுமிறே; குணங்களெல்லாமிப்படியேயிறே யிருப்பது; இக்குணங்களெல்லாம் தமக்கு நிலமாய்ப் பேசுகிறாரிறே யிவர்.

உயர்வு - வருத்தம். எல்லார்க்கும் உயர்த்தியுண்டாம்போது வருத்தமுண்டு; அப்படி வருந்தவேணுமோ! என்றால், உயர்வறவுயராநிற்கும்; இத்தைப்பற்றவிறே ஆளவந்தாரருளிச்செய்த சந்தை. பகவத்வ்யதிரிக்த ஸமஸ்தவஸ்துகதமான ஸர்வப்ரகாரத்தாலுமுண்டான உச்ச்ராயத்தை உயர்வென்கிறது; அற - இன்றியிலேயொழிய: இத்தால அத்யந்தா

பாவத்தைச் சொல்லுகிறதன்று; பின்னை யென்சொல்லுகிற தென்னில்; தன்னுடைய உச்ச்ராயத்தையும் இவற்றையும் பார்த்தால் ஆதித்யஸந்நிதியில் நக்ஷத்ராதிகளைப்போலவும், மேருசிகரத்திலே நின்றவனுக்குக் கீழுள்ள ஸர்ஷபாதிகள் இருக்குமாபோலவும், உண்டாயிருக்கச்செய்தே யில்லை யென்னலாம்படி யிருக்கை. இப்படி யல்லாதவற்றை யில்லையென்னலாம்படி பண்ணினால் தனக்கு ஒரெல்லை யுண்டாயிருக்குமோ! என்னில் (உயர்) காலதத்த்வமுள்ள தனையும் அநுபவியாநின்றாலும் அவ்வருகாய்க்கொண்டு வாங்மநஸ்ஸுக்களால் பரிச்சேதிக்க வொண்ணாதபடி உயராநிற்கும், ஆனால் *ஸர்வே க்ஷயாந்தா நிசயா: பதநாந்தாஸ் ஸமுச்ச்ரயா:| ஸம்யோகா விப்ரயோகாந்தா மரணாந்தஞ்ச ஜீவிதம்* என்கிறபடியே யிருக்கிறதோ! என்னில்: அன்று, இயத்தாராஹித்யத்தைச் சொன்னபடி. இப்படி கரைகட்டாக் காவேரிபோலே பரந்திருந்தால் இப்பரப்பெல்லாம் ப்ரயோஜனமாயிராதே காடுபட்டுக்கிடக்குமோ வென்னில் (நலம்) கண்டிட மெங்கும் பயிர்பட்டிருக்கும் நிலம்போலே யெங்குமொக்க உபாதேயமாயிருக்கும். நலமென்று - ஆநந்தகுணம் ஒன்றையுஞ்சொல்லுகிறதென்னுதல்; குணஸமூஹத்தைச் சொல்லுகிற தென்னுதல்; ஆநந்தாவஹமான விபூதியைப்பற்றச் சொல்லுகிற தென்னுதல்.

(உடையவன்) இக்குணங்கள்தன்னை அஸ்தியென்று விடுமளவன்றிக்கே இவற்றையிட்டு நிரூபிக்கவேண்டும்படியாயிருக்கும். அதாவது - ஆகந்துகமன்றிக்கே ஸ்வரூபாநுபந்தியாயிருக்குமென்றபடி. ஆழ்வான் பிள்ளைப் பிள்ளையைப்பார்த்து "நிர்க்குணமென்பார் மிடற்றைப்பிடித்தாற்போலே ஆழ்வார் 'நலமுடையவன்' என்றபடி கண்டாயே" என்று பணித்தான். இத்தால் ஸமஸ்தகல்யாணகுணாத்மகோZஸௌ' என்றபடி; *வர்ஷாயுதை:* இத்யாதி. *தாதூநாமிவ சைலேந்த்ரோ குணாநாமாகரோ மஹாந்*, *பஹவோ ந்ருப கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்தி தே| *ஸ்வாபாவிகாநவதிகாதிசய அஸங்க்யேய கல்யாணகுணகண:* என்று இதுக்கு ஆளவந்தாரருளிச்செய்யும் சந்தை.

இப்படி குணங்கள் கரைபுரண்டிருந்தால் இக்குணங்களாலே தனக்கு நிறமாம்படி யிருக்குமோ திவ்யாத்மஸ்வரூபம் என்னில், அங்ஙன் இராது; அஸ்ஸ்வரூபத்தைப்பற்றி குணங்களுக்கும் நிறம்பெறவேண்டும்படி யிருக்குமென்று ஸ்வரூப வைலக்ஷண்யத்தைச் சொல்லுகிறது—['யவன்' என்று] *யதா ஸைந்தவகந:* என்கிற ப்ரமாண ப்ரஸித்தியைப்பற்ற 'யவன்' என்கிறார். இத்தால் குணநிரபேக்ஷமான ஸ்வரூபப்ரஸித்தியைச் சொல்லுதல்; குணவிசிஷ்டமான ஸ்வரூபவைலக்ஷண்யத்தைச் சொல்லுதல் - [அவன்] - இதுக்கு அவ்வருகே ஓர் உபகாரத்தைச் சொல்ல நினைத்துக் கீழ் நின்ற நிலையை அமைத்து மேலே தோள்படிகொள்ளுகிறார். அந்த உபகாரந்தான் ஏது? என்னில்;—[மயர்வற] - ஜ்ஞாநாநுதயம் அந்யதாஜ்ஞாநம் விபரீதஜ்ஞாநம் என்கிற இவை வாஸனையோடே போம்படியாக. "ஜ்ஞாநாநுதயமாவது - தேஹாத்மாபிமாநம். அந்யதாஜ்ஞாநமாவது - தேவதாந்தரசேஷமென்றிருக்கை. விபரீதஜ்ஞாநமாவது - ஸ்வதந்த்ரமாகவும் ஸ்வபோக்யமாகவும் நினைத்திருக்கிற கேவலனுடைய ஜ்ஞாநம்" என்று நம்பிள்ளை அருளிச்செய்வர். தம்வாயாலே 'மயர்வற' என்று சொல்லலாம்படி காணும் அவன்தான் இவர்க்கு அஜ்ஞாநத்தை வாஸனையோடே போக்கினபடி. [மதிநலம்] - 'ஜ்ஞாநபக்திகளிரண்டையும் தந்தான்' என்று நிர்வஹிப்பாருமுண்டு; அன்றிக்கே, 'நலமான மதியைத் தந்தானென்றாய், முனைக்கும்போதே வயிரம்பற்றி முனைக்கும் பதார்த்தம்போலே பக்திரூபாபந்நஜ்ஞாநத்தைத் தந்தானென்கிறார்' என்று பட்டர் அருளிச் செய்யும்படி. கர்ம ஜ்ஞாந ஸஹக்ருதையான பக்திஸ்தாநத்திலே பகவத்ப்ரஸாதமாய், அநந்தரம் கைங்கர்யத்துக்குப் பூர்வக்ஷணவர்த்தியான பக்தியாயிற்று இவரது. "ஆழ்வார் ப்ரபந்நரோ? பக்திநிஷ்டரோ?" என்று எம்பாரைச் சிலர் கேட்க "ஆழ்வார் ப்ரபந்நர்; பக்தி இவர்க்கு தேஹயாத்ராசேஷம்" என்று அருளிச்செய்தார்; என்போல வென்னில்;—நாமுமெல்லாம் ப்ரபந்நராயிருக்கச் செய்தே ஆண்டாறுமாஸத்துக்கு ஜீவநம் தேடுகிறாப்போலே; *உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ணணிறே இவர்க்கு. [அருளினன்] - நிர்ஹேதுகமாக அருளிக்கொண்டு நிற்கக் கண்டவித்தனை. 'எனக்கு அருளினன்' என்றுதொழிந்தது பகவத் விஷயீகா

ரத்துக்கு முன்பு தம்மை அஸத்கல்பராக நினைத்திருக்கையாலே. [அருளினன்] இத்தலை அர்த்திக்க வன்றிக்கே முலைக்கடுப்பாலே தரையிலே பீச்சுவாரைப்போலே அருளிக்கொண்டு நிற்கக் கண்ட வித்தனை; *தாது: ப்ரஸாதாந்மஹிமாநமீசம்* என்கிறபடியே நிர்ஹேதுகமாக அருளிக்கொண்டு நிற்கக் கண்ட வித்தனை. இத்தலையில் நினைவின்றிக்கே யிருக்க வந்தருளினவன் தன்னருள்கொள்வாரில்லாதா னொருவனோ? என்னில்,—[அயர்வறுமமரர்களதிபதி] - தான் அருளாத வன்று ஸத்தையின்றிக்கே யிருப்பாரை ஒரு நாடாகவுடையவன். அயர்வாகிறது - விஸ்ம்ருதி; அதின்றிக்கே யிருப்பவர்கள். ப்ராகபாவத்தைப் பற்றச் சொல்லுகிறது, ப்ரத்வம்ஸாபாவமுண்டிறே முக்தர்க்கு. [அமரர்கள்] - பகவதநுபவ விச்சேதத்தில் தாங்கள் உளரன்றிக்கேயிருக்குமவர்கள், *நச ஸீதா த்வயா ஹீநா நசாஹமபி ராகவ* என்கிறபடியே. [அமரர்கள்] த்ரிபாத்விபூதியோகத்தைப் பற்றச்சொல்லுகிறது. பரமஸாம்யாபந்நரா யிருக்கையாலே ஒலக்கமிருந்தாலாயிற்று, அவர்களுக்கும் அவனுக்கும் வாசியறியலாவது: பிராட்டிமாராலே யாதல் ஸ்ரீகௌஸ்துபாதிகளாலேயாதல் சேஷியென்று அறியுமத்தனை. ஆனால், இப்படியிருக்கிற இவர்கள் பலராய்த் தான் ஒருவனானால், இவர்களை அநுவர்த்தித்துக்கொண்டு தன்னுடைய சேஷித்வமாம்படியிருக்குமோ? என்னில்,—[அதிபதி] - அவர்களுக்கும் தொட்டுக்கொள் தொட்டுக்கொள் என்ன வேண்டும்படி ஆனைக்குக் குதிரைவைத்து அவ்வருகாயிருக்குமென்னுதல்; ஸ்வாமிவாசகமென்னுதல்.

இதுக்கு அவ்வருகே விக்ரஹவைலக்ஷண்யம் சொல்ல ஒருப்பட்டுக் கீழ்நின்ற நிலையைக் குறுக்கி 'அவன்' என்று அவ்வருகே போகிறார்; [துயரறு] - 'துயரறுக்கும்' என்று முன்புள்ள முதலிகள் அருளிச்செய்யும்படி; ஸமஸ்த து:காபநோதந ஸ்வபாவமான திருவடிகள்; ஸகலாத்மாக்களுடையவும் து:க்கத்தைப் போக்குகையே ஸ்வபாவமான திருவடிகள். 'துயரறும்சுடரடி' என்று எம்பெருமானார் அருளிச்செய்யும்படி :— *வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம்பவதி து:க்கித:* என்றால் து:க்கநிவ்ருத்தியும் அவனதாயிருக்குமிறே; இவர் துயரறத் தான் துயர்தீர்ந்தானாயிருக்கை. இத்தால், இவர் மயர்வற அவன் துயரற்றபடி. [சுடரடி] - நிரவதிகதேஜோரூபமான திவ்யமங்களவிக்ரஹத்தைச் சொல்லுகிறது. [சுடர்] - பஞ்சசக்திமயமான புகரைச் சொல்லுகிறது. [அடி] - சேஷபூதன் சேஷிபக்கல் கணிசிப்பது திருவடிகளையிறே. ஸ்தநந்த்ய ப்ரஜை முலையிலே வாய்வைக்குமாபோலே, இவரும் "உன்தேனே மலரும் திருப்பாதம்" என்கிற திருவடிகளிலே வாய்வைக்கிறார். [தொழுது] - நித்யஸம்ஸாரியாய்ப் போந்த இழவெல்லாம் தீரும்படி ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியிலே அந்வயித்து. [எழு] *அஸந்நேவ ஸபவதி* என்னும் நிலைகழிந்து, *ஸந்தமேநம் ததோ விது:* என்கிறவர்கள் கோடியிலே எண்ணலாம்படியாக உஜ்ஜீவிக்கப் பார். அடியிலே தொழாமையால் வந்த ஸங்கோசம் தீரும்படி அடியிலே தொழுது உஜ்ஜீவி யென்கிறார். [என்மனனே] - இப்போதாயிற்று தம்மைக் கண்டது: 'அருளினன்' என்று நின்ற வித்தனையிறே முன்பு. இருவர் கூடப் பள்ளியோதியிருந்தால், அவர்களிலே ஒருவனுக்கு உத்கர்ஷமுண்டானால், மற்றையவன் தனக்கு அவனோடே ஒரு ஸம்பந்தத்தைச் சொல்லிக்கொண்டு கிட்டுமாபோலே *மநஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:* என்கிறபடியே நெடுநாள் பந்தஹேதுவாய்ப்போந்தது இப்போது முந்துற்ற நெஞ்சாய் முற்பட்டு நிற்கிறபடியாலே அத்தோடே தமக்கு ஒரு ஸம்பந்தத்தை ஆசைப்பட்டு 'என்மனனே' என்கிறார்.

பாட்டை முடியச்சொல்லி 'அவன்' என்ன வமையாதோ? அடிதோறுஞ் சொல்லுகிறவிதுக்குக் கருத்தென்? என்னில்,—இவர் தாம், இத்திருவாய்மொழிதன்னில் ஈச்வரத்வமாயிற்று ப்ரதிபாதிக்கிறது: அந்த ஈச்வரத்வத்துக்கு ஒரோகுணங்களை நிரபேக்ஷமாகப் போந்திருக்கையாலே சொல்லுகிறார். உயர்வறவுயர்நலமுடையவன்யவன், அவன் மயர்வற மதிநலமருளினன் என்று இங்ஙனே வாக்யைகவாக்யபாவத்தாலே யோஜிக்கவுமாம். அன்றிக்கே, உயர்வறவுயர்நலமுடையவன் யவன், அவன் துயரறு சுடரடி தொழுதெழென் மனனே என்று வாக்யபேதம் பண்ணி யோஜிக்கவுமாம்; *நம: புரஸ்தாத் அத ப்ருஷ்டதஸ்தே* என்னுமாபோலே. ஆனால், உயர்வற வுயர்நலமுடையவன் அயர்வறு மமரர்க ளதிபதி

மயர்வறமதிநலமருளினன் என்ன வேண்டியிருக்க, "உயர்வற உயர்நலமுடையவன்" என்ற வநந்தரம் "அயர்வறுமமரர்களதிபதி" என்று அவ்வளவும் போகமாட்டாமை உபகாரஸ்ம்ருதியாலே "மயர்வறமதிநலமருளினன்" என்கிறார். குணமில்லை விக்ரஹமில்லை விபூதியில்லை என்று சொல்லுகிறவர்களெல்லாரும் நிரஸ்தர் இப்பாட்டாலே. அவர்களை எதிரிகளாக்கிச் சொல்லவேண்டாவிறே, ஸ்வபக்ஷத்தை ஸ்தாபிக்கவே பரபக்ஷம் நிரஸ்தமாமிறே. நெல் செய்யப் புல்தேயுமாபோலே தன்னடையே நிரஸ்தராவர்களிறே அவர்கள். 'உயர்வற வுயர்நலமுடையவன் அயர்வறுமமரர்களதிபதி' என்கையாலே—ப்ராப்யவேஷம் சொல்லிற்று. 'மயர்வற' என்கையாலே—விரோதிபோனபடி சொல்லிற்று; 'அருளினன்' என்கையாலே—அவனே ஸாதநமென்றது; 'தொழுதெழு' என்கையாலே—ப்ராப்திபலமான கைங்கர்யத்தைச் சொல்லிற்று; 'என்மனனே' என்கையாலே—பரிசுத்தாந்த: கரணனே அதிகாரியென்னுமிடம் சொல்லிற்று.

மனனகமலமற மலர்மிசையெழுதரும்*
மனனுணர்வளவிலன் பொறியுணர்வவையிலன்*
இனனுணர்முழுநலம் எதிர்நிகழ்கழிவினும்*
இனனிலன் எனனுயிர்மிகுநரையிலனே* **(2)**

ஒ.—இரண்டாம்பாட்டில், அகிலஹேய ப்ரத்யநீகதையாலும் கல்யாணைகதாநதையாலும் சேதநாசேதநங்களிற்காட்டில் அத்யந்த விலக்ஷணமாய், ஜ்ஞாநாநந்தங்களே தனக்கு வடிவாய், முதற்பாட்டில் அநுபவித்த குணங்களுக்கு ஆச்ரயமாயிருந்துள்ள நிஷ்க்ருஷ்டமான திவ்யாத்மஸ்வரூபத்தை ஸோபாந க்ரமத்தாலே அநுபவிக்கிறார்.

[மனனகம் என்று தொடங்கி] - யோகாப்யாஸத்தாலே மநஸ்ஸிலுண்டான அவித்யாதி தோஷங்களெல்லாம் போனகாட்டில் விகஸிதமாய் மேன்மேலெனக் கிளராநின்றுள்ள மாநஸஜ்ஞாநகம்யமான ஆத்மாவின்படி யல்லாதான். [பொறியுணர்வவையிலன்] - இந்த்ரியங்களால் அறியப்படும் ப்ராக்ருத பதார்த்தங்களின் படி யல்லாதான். சேதநிற்காட்டில் விலக்ஷணனென்ற போதே அசேதந வைலக்ஷண்யம் சொல்லிற்றாகாதோ ? என்னில்;—அவனோடு ஒவ்வாமைக்கு அசேதநத்தோடு சேதநத்தோடு ஒருவாசியில்லை என்னுமிடம் சொல்லுகைக்காக த்ருஷ்டாந்ததயா சொல்லிற்று. சேதநாசேதநங்களிற்காட்டில் விலக்ஷணமென்ன அமையாதோ ? அவற்றைக்காணும் ப்ரமாணங்களாலும் காணமுடியாதா னென்பானென் ? என்னில் ;—ஏகப்ரமாணகம்யத்வ ஸாம்யமும் இல்லை யென்று கொண்டு அத்யந்த வைலக்ஷண்யம் தோற்றுகைக்காக. 'இனன்' என்கிறது - இப்படிப்பட்டானென்ற ஹேதுசொல்லக்கடவ படியைச் சொல்லுகிறது. [உணர்முழுநலம்] - கட்டடங்க ஜ்ஞாநமும் ஆநந்தமுமாயிருக்கும். [எதிர் நிகழ் கழிவினும் இனனிலன்] - பூதபவிஷ்யத்வர்த்தமாந காலத்ரயத்திலும் ஒத்தாரையில்லாதான். சேதநாசேதந வைலக்ஷண்யம் முதலிலே சொல்லிற்றிறே: மீளவும் தன்னோடொத்தாரில்லாதா னென்பானென் ? என்னில்; — 'திரள ஒப்பில்லையே யாகிலும் ஒருவகையாலும் ஒத்தாரை யில்லாதா னென்கிறது' என்றார்கள் சிலர். அதுவும் சேதநாசேதந வைலக்ஷண்யம் சொன்னபோதே சொல்லிற்றும் : ஆனபின்பு, அவனோடு ஒவ்வாதென்று சொல்லுகைக்கு ஸத்ருசமாயிருப்பதொரு பதார்த்தத்தை யுடையனல்ல னென்கிறது. [மிகுநரைஇலன்] - மிகுநரை இல்லாதான். ஒத்தாரையில்லாத நிலத்திலே மிக்காரையில்லானென்கிறது-மிக்கார் ஸம்பவியாதாப்போலே ஒத்தாரும் ஸம்பவியாதென்று தோற்றுகைக்காக. [எனனுயிர்] - இங்ஙனேயிருக்கிற இவன் எனக்கு தாரகன்.

இ.—இரண்டாம்பாட்டில், கீழ்'யவன்' என்று ப்ரஸ்துதமான திவ்யாத்மஸ்வரூபத்தை அகிலஹேயப்ரத்யநீகதையாலும் கல்யாணைகதாநதையாலும் சேதநாசேதந விலக்ஷணமாய் ஜ்ஞாநாநந்தமே ஸ்வரூபமாயிருக்குமென்று ஸோபாநக்ரமத்தாலே அநுபவிக்கிறார்.

[மனன்] - மன மென்றபடி. [மனனகம்]-மனனில்; மநஸ்ஸி லென்றபடி; நிரவயவமாயிருக்கிற இதுக்கு உள்வாய் புறவா யில்லாமையாலே. அங்ஙனன்றிக்கே, இம்மநஸ்ஸு பராகர்த்தவிஷயமாயும் ப்ரத்யகர்த்த விஷயமாயும் போருகையாலே ப்ரத்யகர்த்தவிஷயமானத்தை 'அகம்' என்று சொல்லிற்றாகவுமாம். [மலமற] - யோகாப்யாஸத்தாலே மநஸ்ஸிலுண்டான அவித்யாதி தோஷங்கள் கழியக்கழிய. [மலர்மிசையெழுதரும்]- விகஸிதமாய்க்கொண்டு மேன்மேலெனக் கிளராநின்றுள்ள. [மனனுணர்வளவிலன்] - மாநஸஜ்ஞாநகம்யனான ஆத்மாவின்படி யல்லாதான். [பொறியுணர்வவையிலன்] - இந்த்ரியங்களாலறியப்படும் ப்ராக்ருத பதார்த்தங்களின் படி யல்லாதவன். சேதநவைலக்ஷண்யம் சொன்னபோதே அசேதநவைலக்ஷண்யம் கிம்புநர்ந்யாயஸித்த மன்றோ? என்னில், - அவனோடு ஒவ்வாமைக்கு இரண்டிலும் ஒருவாசியில்லை யென்னுமிடம் தோற்றுகைக்காக த்ருஷ்டாந்ததயா சொல்லிற்று. ஆனால், சேதநாசேதந விலக்ஷண னென்ன அமையாதோ? அவற்றைக் காணும் ப்ராமணங்களால் காணமுடியாதென்பானென்? என்னில்,—ஏகப்ரமாண கம்யத்வ ஸாம்யமுமில்லையென்று கொண்டு அத்யந்தவைலக்ஷண்யம் தோற்றுகைக்காக. "மனஸாது விசுத்தேந" என்று சுத்தமான மநஸ்ஸாலே ஈச்வரன் க்ராஹ்யனென்கிறவிடம் — ஜ்ஞாநவிஷயமென்கைக்காக; இங்கு அளவிலனென்கிறது - பரிச்சேதிக்கவொண்ணாதென்று. [இனன்] - இப்படிப்பட்டான். இது கீழுக்கும் மேலுக்கும் பொது. [உணர்முழுநலம்] கட்டடங்க ஜ்ஞாநமும் ஆநந்தமுமாயிருக்கும்; ஆநந்தரூபஜ்ஞாநமென்றபடி. [எதிர் நிகழ் கழிவினும் இனனிலன்] - காலத்ரயத்திலும் ஒத்தாரில்லாதான். இனன் - ஒப்பன்; இனமென்றபடி. சேதநாசேதந வைலக்ஷண்யம் சொன்னபோதே இதுவும் உக்தமன்றோ வென்னில்,—அவனோடு இது ஒவ்வாதென்கைக்கு ஸத்ருசமாயிருப்பதொரு பதார்த்த மில்லையென்று வைதர்ம்ய த்ருஷ்டாந்தத்தாலே சொல்லுகிறது. [மிகுநரைஇலனே] - மிக்காரை யில்லாதான். ஒத்தாரில்லாத நிலத்திலே மிக்காரில்லை யென்கிறது - மிக்காரில்லாதாப்போலே ஒத்தாருமில்லையென்று தோற்றுகைக்காக. [எனனுயிர்] - எனக்கு தாரகன். மனனகமலமற மலர்மிசை யெழுதரும் மனனுணர்வளவிலன், பொறியுணர்வவையிலன், எதிர்நிகழ்கழிவினு மினனிலன் மிகுநரையிலன், உணர்முழுநலம், இனன், எனனுயிர். எனனுயிர் இனன் அவன் துயரறுசுடரடி தொழுதெழென்மனனே. என்றுகொண்டு கீழோடே தலைக்கட்டவுமாம்.

ஈடு.—*இரண்டாம் பாட்டு*—*யதோ வா இமாநி* *இத்யாதி ச்ருதி ப்ரக்ரியையாலே கார்யகாரமான ஜகத்தைப் பிடித்து ஜகத்காரணவஸ்து உபாஸ்ய மென்னுதல், அன்றிக்கே, ஸ்வரூபத்தை முற்படச் சொல்லிப் பின்னை விபூதியிலே போருதல் செய்யாதே முற்படக்குணங்களிலே இழிவானென்? என்னில்,-ஸர்வேச்வரன் தம்மை வசீகரித்தது குணங்களைக்காட்டியாகையாலே தாம் அகப்பட்ட துறையிலே முற்பட இழிந்து பேசினார்; அக்குணங்கள் தான் ஸ்வரூபத்தைப் பற்றியல்லது இராமையாலே அவற்றுக்கு ஆச்ரயமான ஸ்வரூபத்தை 'அவன்' என்று ப்ரஸங்கித்தார் முதற்பாட்டில்; அங்கு ப்ரஸ்துதமான திவ்யாத்மஸ்வரூபம் ஹேயப்ரத்யநீகதையாலும் கல்யாணகுணைகதாநதையாலும் சேதநாசேதந விலக்ஷணமாயிருக்குமென்று அந்த ஸ்வரூபத்தை அநுபவிக்கிறார் இப்பாட்டில்.*

[மனனகம் இத்யாதி] - ஜீவாத்மஸ்வரூபத்தில் பகவத்ஸ்வரூபம் விலக்ஷணமென்கிறார். ஆனால், 'மனனகம்' என்று தொடங்கிச் சொல்லுகிற இதுக்குக் கருத்து என்? என்னில்:- ஸ்வரூபவைலக்ஷண்யத்தை அநுபவிக்கிற இவருடைய ப்ரதிபத்திக்ரமம் இருக்கிறபடி. மனனென்றது - மன மென்றபடி [அகம்]-நிரவயவமா யிருக்கிற மநஸ்ஸுக்கு ஓர் உள்ளும் புறம்பு மில்லாமையாலே, மனனக மென்றது - மநஸ்ஸிலே என்றபடி. அன்றியே, பராகர்த்த விஷயமாயும் ப்ரத்யகர்த்த விஷயமாயும் போருகையாலே பராகர்த்தத்தைத் தவிர்ந்து ப்ரத்யகர்த்த விஷயமானத்தை அகமென்கிற தாகவுமாம். [மலமற] - மனனகத்திலுண்டான மலமுண்டு - அவித்யாதிகள்; [அவையற அவையாவன *காம: க்ரோதச்ச லோபச்ச ஹர்ஷமாநமதா குணா:, விஷாதச்சாஷ்டம: ப்ரோக்த இத்யேதே மநஸோ மலா:*.] *ஆத்மஸ்வரூபமும் நித்யமாய், ஜ்ஞாநமும் நித்யமாகையாலே இத்தோஷம் ஸ்வரூபகதமுமல்ல, ஜ்ஞாநகதமுமல்ல; ஆத்மாவினுடைய தர்மபூதஜ்ஞாநத்துக்கு உதயாஸ்தமயவ்யவஹாரம் பண்ணுகிறது ஜ்ஞாநப்ரஸ்ருதித்வாரத்தைப் பற்றவாயிற்று; ஆக ஜ்ஞாநப்ரஸ்ருதித்வாரமான மநஸ்ஸைப் பற்றிக்கிடக்கிற தோஷமானது யோகசாஸ்த்ரத்தில் சொல்லுகிற க்ரமத்திலே பாஹ்யவிஷயப்ரவணமான நெஞ்சை ப்ரத்யக்*

விஷயமாக்கி யமநியமாதி க்ரமத்தாலே அநுஸந்திக்கப் புக்கவாறே கழியக்கடவது. அறவென்றது - அறவற வென்றபடி. அநந்தரம், மலர் - விகஸிதமாய். மிசை - மேல்நோக்கி. எழுதரும் கொழுந்துவிட்டு மேன்மேலெனக் கிளராநின்றுள்ள. மனனுணர்வு உண்டு - மானஸ ஜ்ஞாநம்; இப்படி விகஸிதமாய்க் கொழுந்து விட்டு மேன்மேலெனக் கிளராநின்றுள்ள மானஸ ஜ்ஞாநகம்யமாயிருக்கும் ஆத்மா; அளவிலன் - அதினளவல்ல ஈச்வரன். மாநஸஜ்ஞாந கம்யமாயிருக்கும் ஜீவாத்மஸ்வரூபம், பகவத்ஸ்வரூபம் அங்ஙனிராது என்றதுக்குக் கருத்து என்? என்னில்; —ஏகேந்த்ரியக்ராஹ்யத்வமும் இல்லையென்கை. பொன்னுக்கும் கரிக்கும் அத்யந்தம் வைஷம்யமுண்டாயிருக்கச் செய்தே க்ரஹிக்கைக்கு ஸாமக்ரி ஒன்றாயிருக்குமிறே; அப்படி ஏகப்ரமாணகம்யத்வஸாம்யமு மில்லை யென்கை. ஆனால், *மநஸா து விசுத்தேந* என்று பரிசுத்தமான அந்த:கரணத்தாலே க்ரஹிக்கலா மென்னு கின்றதே, அத்தோடு விரோதியாதோ? என்னில்;—*நேதி நேதி* என்று க்ரஹிக்குமத்தனை யல்லது, ஈத்ருக்தயா இயத்தயா பரிச்சேதித்து க்ரஹிக்கப் போகா தென்கை. முதலிலே ஜ்ஞாநவிஷயமன் றென்னில், துச்சத்வம் வருமிறே, அணுத்ரவ்யத்தை க்ரஹிக்குமா போலே விபுத்ரவ்யத்தை க்ரஹிக்கப்போகாதென்கை. [பொறியுணர்வவையிலன்] - பொறியென்று - சக்ஷுராதிகரணங்கள். அவற்றால் அறியப்படும் பதார்த்தங்களின் படியல்லன். *யமாத்மா நவேத, யம் ப்ருதிவீ நவேத* என்கிறபடியே. இவ்வோபாதி ஜீவாத்மஸ்வரூபத்தில் விலக்ஷணனென்றதுவு மென்கை; ஜாத்யந்தன் பதார்த்ததர்சநம் பண்ணிற்றில னென்பதும், கண்ணில் வைசத்யமுடையவனும் கண்டில னென்பதும்; காணாமைக்கு இருவரும் ஒக்குமிறே. அப்படியே அசித்விலக்ஷணனென்ற வோபாதி சித்விலக்ஷணனென்றதுவும்—என்கைக்காகச் சொல்லுகிறது. இப்படி உபயவிலக்ஷணனாயிருக்குமாகில் அவனை ப்ரதிபத்தி பண்ணும்படி என்? என்னில்,—[இனன்] - ஏவம்விதனென்னு மித்தனை. உக்தத்தைச் சொல்லவுமாம்; வக்ஷ்யமாணத்தைச் சொல்லவுமாம். எப்படிப்பட்டவனென்னில்,-[உணர்முழுநலம்] - உணரென்று - ஜ்ஞாநம். நலமென்று - ஆநந்தம். முழுவென்று - இரண்டிடத்திலும் அந்வயிக்கிறது. கட்டடங்க ஜ்ஞாநமுமாய்க் கட்டடங்க ஆநந்தமுமாயிருக்கும். இத்தால் ஸ்வரூபத்தில் அப்ரகாசமாயாதல், அநநுகூலமாயாதல் இருக்கு மிடமில்லை யென்கை. அன்றிக்கே, ஆநந்தமாகிறதும் ஜ்ஞாநவிசேஷமாகையாலே ஆநந்தத்தைச் சொன்னபோதே ஜ்ஞாநத்தையுஞ் சொல்லிற்றாய் வருமிறே; ஆகையாலே, [இன னுணர்முழுநலம்] - நேர்கொடு நேர் தன்னை அறியப்போகாமையாலே என்றுமொக்க இனனாலே-உபமாநத்தாலே அறியப்படுவதான முழுநலமாயிருக்கும். *யதா ஸைந்தவகந:* என்கிறபடியே நிரதிசயாநந்தமாயிருக்கும்; (ஆநந்தோ ப்ரஹ்ம) என்றும் (ஆநந்தமய:) என்றுஞ் சொல்லக்கடவதிறே;* கடிசேர் நாற்றத்துள்ளாலை—கடியும், நாற்றமும், இரண்டும்-பரிமளம். ஆலையென்பது - மது. ஸர்வரஸத்துக்கும் உபலக்ஷணம். ஸர்வகந்தத்துக்கும் உபலக்ஷணம் நாற்றம். "கடிசேர் நாற்றத்துள்ளாலை யின்பத்துன்பக்கழிநேர்மை ஒடியாவின்பப் பெருமையோன்" என்று - பூவில் கந்தத்தையும் மதுவில் ரஸத்தையும் பிடித்து, அவைதன்னிலும் அல்பாஸ்திரத்வாதி தோஷங்களைக்கழித்து, ஏகத்ரமாக்கிச் சேர்த்துப் பார்த்தால் சிறிதொப்பா மென்னுமாபோலே உபமாநத்தாலே அறியில் அறியலாமத்தனை; தன்னையே இழிந்து அறியப்போகா தென்றபடி. [உணர்முழுநலம்] - முழுவுணர்வுமாய், முழுநலமுமாயிருக்கும். கட்டடங்க ஜ்ஞாநமுமாய்க் கட்டடங்க ஆநந்தமுமாயிருக்கும். அநுகூலஜ்ஞாநமேயாகிலும் ஆநந்தமாகிறது, பிரித்து வ்யவஹரிக்கக்கடவதா யிருக்குமிறே. [எதிர் நிகழ் கழிவினும் இனனிலன்] - காலத்ரயத்திலும், இனன் - ஒப்பு. அதில்லாதான், சிதசிதீச்வர தத்வத்ரயமேயாயிற்று நம் தர்சனத்துக்குள்ளது. அதில் சிதசித்விலக்ஷணனென்னுமிடம் முன்பே சொல்லிற்று; இங்குச் சொல்லிற்றது தென்? என்னில்;—'திரள ஒப்பில்லையாகில் ஒருவகையாலே தான் ஒப்புண்டோ? என்னில், அதுவுமில்லை யென்கிறது' என்று நிர்வஹிப்பாருமுண்டு; அங்ஙனன்றிக்கே, பட்டர் "ஸாதர்ம்ய த்ருஷ்டாந்த மில்லையென்றது முன்பு; வைதர்ம்ய த்ருஷ்டாந்த மில்லையென்கிறது இங்கு" என்று. வைதர்ம்யத்ருஷ்டாந்தத்துக்கு உதாஹரணம் *ந பரேஷு மஹௌஜஸச் சலாதபகுர்வந்தி மல்லநா இவ*. [எனனுயிர்] - இப்படியிருக்கிறவன் எனக்கு தாரகன். *யஸ்யாத்மா சரீரம்* என்கிறபடியே. இத்தைத் தனக்கு சரீரமாகக் கொண்டு தான்சரீரியாய் தாரகனாயிருக்குமென்னும் அர்த்தமும் சொல்லவேண்டுவதொன்றிறே. [மிகுநரையிலனே] - மிக்காரையுடை

யனல்லன்: தான் ஜீவாத்மாவை சரீரமாகக்கொண்டு தாரகனும் நியாமகனுமிருக்கிறப்போலே தன்னையும் நியமிக்கக்கடவதொரு வஸ்த்வந்தரமுண்டோ என்னில் - தனக்கு மேற்பட்டாரை யுடையனல்லன்; *ந தத்ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே* என்னுமாபோலே. மனனகமலமற மலர் மிசையெழுதரும் மனனுணர் வளவிலன், பொறியுணர்வவையிலன், எதிர்நிகழ்கழிவினுமினனிலன், மிருகரையிலன், உணர்முழுநலம், இனன் எனனுயிர் என்று அந்வயம். அன்றிக்கே எனனுயிரானவன் துயரறுசுடரடி தொழுதெழு என்மனனே என்று கீழ்ப்பாட்டோடே அந்வயம்.

இலனதுவுடையன் இதெனநினைவரியவன்*
நிலனிடைவிசும்பிடை உருவினன் அருவினன்*
புலனொடுபுலனலன் ஒழிவிலன்பரந்தஅந்*
நலனுடையொருவனை நணுகினம்நாமே* (3)

ஒ.—மூன்றும்பாட்டில், முதற்பாட்டிற்சொன்ன நித்யவிபூதி யுக்தனை எம்பெருமானுக்கு லீலார்த்தமான ஜகத்விபூதியோகத்தைச் சொல்லுகிறது.

[இலன்என்றுதொடங்கி] - ஒன்றைச்சுட்டி அத்தையுடையனல்ல னென்னில், ஐச்வர்யத்தில் சிறிதுகுறைந்துதோற்றும்; ஒன்றைச்சுட்டி இத்தையுடையனென்னில், இதொழிய அல்லாத தெல்லாம் இவனதல்லாமையாலே அத்யல்பவிபூதிகனும்; இவ்விரண்டுபடியாலும் கருதமுடியாதான். பின்னை எங்ஙனே சொல்லுவ தென்னில்,—கீழில் லோகங்களிலும் மேலில் லோகங்களிலுமுண்டான சேதநாசேதநங்களையு மெல்லாமுடையான். நிலமும் விசும்பு மென்று - கீழும்மேலுமுண்டான லோகங்களெல்லாவற்றுக்கும் உபலக்ஷணம். உருவின னருவின னென்றல்-சேதநாசேதநங்களையுடைய னென்னும் பொருளுக்கு வாசகமாமோ? என்னில் ;—''காராயின காளநன்மேனியினன்'' என்றாற் போலே இதுவும் வாசகமாம். [புலனொடு என்று தொடங்கி] - ப்ரமாணகோசரமான பதார்த்தங் களோடே அந்தராத்மதயா கலந்து நின்றானேயாகிலும், அவற்றின் தோஷங்கள் தன்பக்கல் தட்டாத படியாய் இப்படி எல்லாப்பதார்த்தங்களிலும் வ்யாபித்திருப்பதுஞ் செய்து இந்த லீலாவிபூதியோடே முதற்பாட்டிற்சொன்ன அத்யந்தவிலக்ஷணநமமாய் அந்தரங்கதமமாயிருந்துள்ள நித்யவிபூதியை யுடையனும் அத்விதீயனுனவனை அநாதிகாலம் ஸம்ஸாரத்திலே மங்கி பகவத்பக்திகந்தரஹிதரான நாம் பரிபூர்ணமாக அநுபவிக்கப்பெற்றோம் என்று திருவுள்ளத்தோடேகூட ''மந்யே ப்ராப்தா:ஸ்ம தம் தேசம்'' என்ற பரதாழ்வானைப்போலே ப்ரீதராய் விஸ்மிதராகிறார்.

இ.—மூன்றும்பாட்டில், முதற்பாட்டிற் சொன்ன நித்யவிபூதியுக்தனை ஸர்வேச்வரனுக்கு லீலார்த்தமான ஜகத்விபூதியோகம் சொல்லுகிறது.

[இலனது] - அதில்லாதான். ஒன்றைத் தான்அநுபவித்து அத்தை ஸ்மரித்து அது இவனுக்கில்லை யென்றால், ஐச்வர்யத்திலே சிறிதுகுறைந்து தோற்றும். [உடையனிது] - இத்தை யுடையவன். ஒன்றை ப்ரத்யக்ஷித்து இது இவனுக்கு உண்டென்றால், அல்லாதவெல்லாம் இவனுக்கு இல்லாமையாலே அல்ப விபூதிகனென்றுதோற்றும். [எனநினைவரியவன்] - இரண்டுபடியாலும் நினைக்க முடியாதவன். பின்னை எங்ஙனே சொல்லுவதென்னில், - [நிலனிடை] - பூமிமுதலான கீழுள்ள லோகங்களில். [விசும்பிடை] - மேலுள்ள லோகங்களில். [உருவினன்அருவினன்] - இரண்டுகோடியிலு முண்டான சேதநாசேதநங்களை யெல்லா முடையவன். நிலனும், விசும்பு மென்று கீழுள்ள லோகங்களுக்கும், மேலுள்ள லோகங்களுக்கும் உபலக்ஷணம். உருவென்று - அசேதநம். அருவென்று - ஆத்மா. உருவினனென்று - உருவையுடையவ னென்கிற அர்த்தத்துக்கு வாசகமாமோ? என்னில், - ''காராயின காளநன்மேனியினன்'' என்றாற்போலே இதுவும் வாசகமாம். [புலனொடு] - புலனென்று புலப்படும் பதார்த்தங்களைச் சொல்லுகிறது. ப்ரமாண விஷயமான ஸகலபதார்த்தங்களோடே அந்தராத்மதயா கலந்துநின்று ஸத்தையை நோக்கும். [புலனலன்]- அந்தப் பதார்த்தகதமான தோஷங்கள் தன்பக்கல் தட்டாதபடியிருக்கும்; தத்தர்மா வல்லன்.

“த்வாஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே, தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்யந
ச்நந்நந்யோ அபிசாகசீதி”. என்று ஒட்டை நீங்கி விளங்காநிற்கு மென்று. [ஒழிவிலன்பரந்த] - பரந்தே
ஒழிவிலன். இப்படி ஸகலத்திலும் வ்யாபித்துநிற்கும். [அந்நலனுடை யொருவனை] - முதற் பாட்டிற்
சொன்ன அத்யந்தவிலக்ஷணமாய் அந்தரங்கதமமாயிருந்துள்ள நித்யவிபூதியையும் இரண்டாம் பாட்டிற்
சொன்ன அத்வித்யமான திவ்யாத்ம ஸ்வரூபத்தையு முடையனானவனை. இந்த லீலாவிபூதியோடேகூட.
[நணுகினம்] - கிட்டப்பெற்றோம். [நாமே] - அநாதிகாலம் ஸம்ஸாரத்திலே மங்கி பகவத்கதா கந்தரஹித
ரான நாம், இப்படி உபயவிபூதியுக்தனாயிருந்துள்ள ஸர்வேச்வரனைப் பூர்ணமாக அநுபவிக்கப்பெற்றோம்.
“அவன் துயரறு சுடரடி தொழுதெழென் மனனே” என்று அந்வயம். “மந்யேப்ராப்தா:ஸ்ம தம்தேசம்
பரத்வாஜோ யமப்ரவீத்” என்கிற ஸ்ரீபரதாழ்வானைப்போலே இப்படி பெறுவோமே யென்று விஸ்மிதராகிறார்.
“வாநராணாம் நராணாம்ச கதமாஸீத் ஸமாகம:” [நாமே] - “கிந்நுஸ்ஸ்யாச்சித்தமோஹோZயம்” - இது
ஏதேனும் ப்ரமஸ்வப்நாதிகளோ வென்றாற்போலே.

ஈடு:—மூன்றாம்பாட்டு.—முதற்பாட்டிலே ப்ராதாந்யேந கல்யாணகுணயோகத்தையும்
நித்ய விபூதியோகத்தையும் விக்ரஹவைலக்ஷண்யத்தையும் அநுபவித்து, அவற்றுக்கு ஆச்ரய
மான திவ்யாத்மஸ்வரூபம் சிதசித்விலக்ஷணமுமாய் உபமாநரஹிதமுமாயிருக்கு மென்று
இரண்டாம்பாட்டாலே அருளிச்செய்து நின்றார்; அவற்றோடே சேர ஒருகோவையாய்த்
தோற்றுமிறே ததியத்வாகாரத்தாலே லீலாவிபூதியும் இவர்க்கு; *நோபஜநம் ஸ்மரந் இதம்சரீரம்*
என்னுநிற்கச்செய்தே ததியத்வாகாரத்தாலே லீலாவிபூதியும் உத்தேச்யமாகா நின்றதிறே
முக்தனுக்கு; இவர்க்கும் கர்மநிபந்தமான ஆகாரமும் கிடக்கச்செய்தே மயர்வற மதிநலம்
அருளப்பெற்றவராகையாலே ததியத்வாகாரமும் தோற்றி அநுபவிக்கிறார். ராஜாக்களுக்கு
நாடெங்கும் செல்லாநிற்கச்செய்தே மஹிஷிகளும் தாங்களுமாகச் சில பூந்தோட்டங்களைக்
குடநீர்வார்த்து ஆக்குவது அழிப்பதாய் லீலாரஸம் அநுபவிக்குமா போலே *திருவிண்ணகர்
சேர்ந்தபிரான் பெய்தகாவுகண்டீர் பெருந்தேவுடை மூவுலகு” என்கிறபடியே ஸர்வேச்வரனும்
பெரியபிராட்டியாருமாகக் கடாக்ஷித்தபோது உண்டாய் இல்லையாகில் இல்லையாய் அவர்களுக்கு
லீலாரஸவிஷயமாயிருக்கிற லீலா விபூதியை அநுபவிக்கிறார்.

[இலனதுவுடையனிதென நினைவரியவன்] அதுஇலன், இதுஉடையன் என நினைவரிய
வன். அநுபூதமாயிருப்பதொன்றைச் சொல்லி அதிலன் என்றவாறே அதொழிந்
தத்தை யுடையவ னென்று தோற்றும்; ஒன்றைக்காட்டி இத்தையுடையவனென்றவாறே
இதொழிந்ததில்லையாய்த்தோற்றும். இலனது என்றால் பரிச்சிந்ந விபூதிகளும்; உடையனிது
என்றால் இதொழிந்ததில்லாமையாலே அல்பவிபூதிகளும்; இரண்டுவழியாலுமாக ஐச்வர்யம்
குறைந்து தோற்றும். என - இப்படியிருக்குமென. [நினைவரியவன்] - அநுபபந்நங்களைச்
சேர்த்து நினைக்கலாமிறே: ஓர் ஊசி நிற்கிறதாகவும், அதினமேலே கலசம் இருக்கிறதாகவும்,
அதின்மேலே சால் இருக்கிறதாகவும், அதின்மேலே மஹாமேரு இருக்கிறதாகவும், இப்படி
அநுபபந்நங்களைச் சேர்த்து நினைக்கலாமிறே; அப்படியேதான் மநோரதத்துக்கு விஷயமா
யிருக்குமோ? என்னில்,-மநோரதஸமயத்திலும் பரிச்சேதிக்கவரியனா யிருக்கும். ஆனால்,
இவனைச்வர்யத்தைப் பேசும்படியென்? என்னில், - [நிலன் இத்யாதி] - *பதிம் விச்வஸ்ய*
என்னுமித்தனை. ‘நிலனிடை’ என்கிறவிது பாதாளாந்தளவும் நினைக்கிறது; ‘விசும்பிடை’
என்கிறவிது பரமபதத்துக்கு இவ்வருகுள்ளத்தையெல்லாம் நினைக்கிறது. [உருவினன்] -
உருக்களையுடையான். [அருவினன்] - அருக்களையுடையான். ‘இனன்’ என்ன, உடையவ
னென்று காட்டுமோ? என்னில்; “காராயின காளநன்மேனியினன்” என்றால், மேனியை
யுடையவனென்று காட்டுமாபோலே. ஆக, கீழ்மேலுண்டான சேதநாசேதநங்களை யுடையா
னென்றபடி. இத்தால், ப்ராதேசிகமான ஐச்வர்ய முடையவர்களன்று லீலாவிபூதி;
ஸர்வாதிகனதென்கை. இப்படி ஸர்வத்தையுமுடையவனாய்த்தான் போகத்தில் அந்யபரனாய்க்
கோயிற்சாந்துபூசி நித்யவிபூதியிலே யிருக்குமோ? என்னில், - [புலனொடு] - இவை பட்டத்
தைத் தானும் பட்டு உடன்கேடனாய்நின்று நோக்கு மென்கிறது. புலன் என்கிறது - புலப்
படும் பதார்த்தங்களை. *த்ருச்யதே ச்ரூயதேZபி வா* என்கிறபடியே ப்ரமாணகோசரங்களான

பதார்த்தங்களை. [ஒடு] - *தத்ஸ்ருஷ்ட்வா* என்கிறபடியே இவற்றை யுண்டாக்கி, ஜீவத்வாரா அநுப்ரவேசித்து, பின்னை இவற்றுக்கு வஸ்துத்வ நாமபாக்த்வங்களுண்டாம்படி பண்ணி, *அந்த:ப்ரவிஷ்டச்சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா* என்கிறபடியே ஸர்வாந்தராத்மாவாய் நிற்கும்படியைச் சொல்லுகிறது. ஆனால், பின்னை தான் ஸர்வாத்மாவாய் நின்றால் அசித்தினுடைய பரிணாமாதிகளாதல், சேதநருடைய ஸுகித்வ து:கித்வங்களாதல் தனக்கு ஸ்பர்சிக்கும்படியிருக்குமோ? என்னில், - [புலனலன்] - தத்தர்மாவல்லன். *த்வாஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே, தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி, அநச்நந்நந்யோ அபிசாகசீதி* என்று தானெட்டற்று நின்று விளங்காநிற்கும். [ஒழிவிலன் பரந்த] - ஒருவஸ்துக்கொழியாமே இப்படிவ்யாபித்திருக்கு மென்னவுமாம்; அன்றியே, காலபரமாக்கி, எல்லாக்காலத்திலும் எல்லா வஸ்துக்களிலும் வ்யாபித்திருக்கு மென்னவுமாம். [அந்நலனுடையொருவனை] - கீழிரண்டுபாட்டாலும் சொன்ன குணவிசிஷ்டஸ்வரூபத்தை நினைத்து 'அந்நலனுடையொருவனை' என்கிறார். [நணுகினம்] - "மயர்வறமதிநலமருளினன்" என்கிற ஜ்ஞாநமாத்ரமன்றிக்கே கிட்டப்பெற்றோம். [நாமே] - இது பொய்யோ? *கிந்நு ஸ்யாச்சித்தமோஹோZயம்* - இது ஏதேனும் ப்ரமஸ்வப்நாதிகளோ? என்றாப்போலே. இவர் ஈச்வரோZஹமென்றால் அவனுக்கும் குடிவாங்க வேண்டும்படியாயிறே இருப்பது; அஹமென்றால் அவனளவிலே பர்யவஸிக்க வேண்டும்படியாயிருக்க, தேஹத்தளவிலேயாம்படியாகவிறே முன்பு போந்தது; *மங்யே ப்ராப்தாஸ்ம தம்தேசம் பரத்வாஜோ யமப்ரவீத்* - கைகேயி "ராஜந்" என்று ஸம்போதிக்கும்படி பிறந்து, ஸ்ரீபரத்வாஜபகவான் 'அவள்மகனுக்குக் கீழ்வயிற்றுக்கழலையறுக்க வருகிறானோ?' என்று *கச்சிந்நதுஷ்டோ வ்ரஜஸி* என்னும்படியான நான் அவன் சொன்ன ஆச்ரமத்திலே புகுந்தேனோ? என்று சங்கியாநின்றேனென்றானிறே. *வாநராணாம் நராணாஞ்ச கதமாஸீத் ஸமாகம:* - காட்டிலே வர்த்திக்கக் கடவ குரங்குகளுக்கும் நாகரகரான சக்ரவர்த்திபிள்ளைகளுக்கும் ஒருசேர்த்தியுண்டானபடி எங்ஙனே? என்ன, *ராமஸுக்ரீவயோரைக்யம் தேவ்யேவம் ஸமஜாயத* - பெருமாளும் மஹாராஜரும் சேர்ந்த சேர்த்தி, பின்னே பிறந்த இளையபெருமாள் நிற்க அடியேன் அந்த:புர கார்யத்துக்கு வரும்படியாகவிறே; நானும் இங்ஙனே கூடிக் கொண்டு நிற்கக்கண்டேனிந்தனை. [நாமே]-இவ்வநுபவத்துக்குப் புறம்பான நாம். பகவத்கதாகந்தரஹிதரான நாம் [நாமே] - இது பொய்யோ?

நாமவனிவனுவன் அவளிவளுவளெவள்*
தாமவரிவருவர் அதுவிதுவுதுவெது*
விமவையிவையுவை அவைநலந்தீங்கவை*
ஆமவையாயவை ஆய்நின்றவவரே. (4)

ஒ.—இத்திருவாய்மொழியில், சேஷித்த பாட்டுக்களால் இம்மூன்றும்பாட்டில் பொருளே விஸ்தரிக்கப்படுகிறது. நாலாம்பாட்டு. நாநாவிதமான சொற்களாலே சொல்லப்படுகிற எல்லாப் பதார்த்தங்களினுடைய ஸ்வரூபஸ்வபாவம் பகவததீநமென்று ஸாமாநாதிகரண்யத்தாலே சொல்லுகிறது

'நாமவனிவனுவன் என்கிறது' - தந்தாமையும் தூரஸ்தனையும் ஸந்நிஹிதனையும் அதூரவிப்ரக்ருஷ்டனையும் சொல்லுகிறது. 'அவளிவளுவளெவள் என்கிறது' - தூரஸ்தையாயும் ஸந்நிஹிதையாயும் அதூரவிப்ரக்ருஷ்டையாயும் வினவப்படுமவளுமான ஸ்த்ரீலிங்க பதார்த்தங்களைச் சொல்லுகிறது. [தாமவரிவருவர்] - பூஜ்யராயுள்ளாரில் தூரஸ்தராயும் ஸந்நிஹிதராயும் அதூரவிப்ரக்ருஷ்டராயு முள்ளாரைச்சொல்லுகிறது. 'அதுவிதுவுதுவெது' என்றது - தூரஸ்தமாயும் ஸந்நிஹிதமாயும் அதூரவிப்ரக்ருஷ்டமாயும் வினவப்படுவதுமான நபும்ஸக பதார்த்தங்களைச் சொல்லுகிறது. [விமவையிவையுவை] - நச்வரமான பதார்த்தங்களில் ஸந்நிஹிதமாயும் அதூரவிப்ரக்ருஷ்டமாயும் தூரஸ்தமாயுமுள்ள பதார்த்

தங்களைச் சொல்லுகிறது. [அவைநலந்திங்கவை] - அவற்றில் நல்லனவும் தீயனவும். [ஆமவையாய வையாய்நின்ற அவரே] - ஆகக்கடவனவும், பண்டேயானவையும் ஆய்நின்ற பதார்த்தங்கள் அவரே. இப்பாட்டிற்சொன்ன ப்ரயோஜநங்கள் ஓரிடத்திலுண்டாய் ஓரிடத்திலின்றிக்கே ஒழிந்தவை இல்லாத விடத்தில் போக்யமானவை கூட்டிக்கொள்ளக்கடவது.

இ.—இனி இத்திருவாய்மொழியில் குறையும் இந்த லீலாவிபூதியை விஸ்தரேண பேசுகிறார். நாலாம்பாட்டில், இதினுடைய ஸ்வரூபம் தததீநமென்று ஸாமாநாதிகரண்யத்தாலே சொல்லுகிறார்.

[நாமவனிவனுவன்] - தந்தாமும், தூரஸ்த்தனும், ஸந்நிஹிதனும், அதூரவிப்ரக்ருஷ்டனும். [அவ ளிவளுவளெவள்] - தூரஸ்த்தையும், ஸந்நிஹிதையும் அதூரவிப்ரக்ருஷ்டையும், வினவப்படுமவளும். [தாமவரிவருவர்] - பூஜ்யராயுள்ளாரில் தூரஸ்தரும், ஸந்நிஹிதரும், அதூரவிப்ரக்ருஷ்டரும். [அதுவிது வுதுவெது] - தூரஸ்த்தமாயும், ஸந்நிஹிதமாயும், அதூர விப்ரக்ருஷ்டமாயுமுள்ளவையும், வினவப்படும தாயுமுள்ளவையும். [வீமவையிவையுவை] - நச்வரபதார்த்தங்களில் ஸந்நிஹிதமாயும், தூரஸ்தமாயும், அதூரவிப்ரக்ருஷ்டமாயுமுள்ள பதார்த்தங்களைச் சொல்லுகிறது. [அவைநலந்தீங்கவை] - அவற்றில் நல்லனவும் தீயனவும்; நன்மையும், தீமையு மென்னவுமாம். [ஆமவையாயவை] - ஆகக்கடவனவும், பண்டேயானவையும். [ஆய்நின்ற அவரே] - ஆகாநின்ற அவரே. இவையெல்லாம் ஆகாநின்றார் ப்ரக்ருதரானவர். ஸகல பதார்த்தங்களிலும் அந்தராத்மதயா ஸத்தாஹேதுவாய் நிற்கையாலே ஸாமாநாதி கரண்யத்தாலே சொல்லுகிறது. இப்பாட்டிற் சொன்ன ப்ரயோஜகங்கள் ஓரிடத்திலே உண்டாய் ஓரிடத்தி லின்றிக்கே யொழிந்தவற்றை இல்லாதவிடத்திலே யோக்யமானவற்றைக் கூட்டிக்கொள்ளக்கடவது. ஸ்த்ரீபுந்நபும்ஸக பேதத்தாலும், பூஜ்யபதார்த்தங்கள் நச்வரபதார்த்தங்களென்கிற பேதத்தாலும் விலக்ஷணவிலக்ஷண பேதத்தாலும், பூதபவிஷ்யத்வர்த்தமாநகால பேதத்தாலும் வந்த விசேஷங்களாலே ஸகலசேதநாசேதநங்களையும் ஸங்கரஹித்து அவற்றினுடைய ஸ்வரூபம் பகவததீந மென்றதாய்விட்டது.

ஈடு:—நாலாம்பாட்டு. கீழிற்பாட்டிலே ததீயத்வாகாரத்தாலே அவன் குணங்களோ பாதி உத்தேச்யமாய்த் தோற்றுகையாலே லீலாவிபூதி யோகத்தை அநுபவித்தார்; இனிமேலிற் பாட்டுக்களெல்லாம் லீலாவிபூதிவிஷயமாயிருக்கிறது. நித்யவிபூதியில் வந்தால் அவ்விபூதி பாவஜ்ஞமாய் அவனுடைய ச்சந்தத்தைப் பின்செல்லுமதாயிருக்கும்; "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப" என்னும்படியாயிறே இருப்பது; கர்மபந்தமான அசித்ஸம் ஸர்க்கத்தோடே கூடி ஈச்வரஸங்கல்பத்தைப் பின்செல்லுமதாயிருக்கும் இந்த விபூதி. அந்த விபூதியில் வந்தால் அவ்விருப்புக்கண்டு உகக்குமதுக்கு அவ்வருகு ஒன்றுமில்லை; அங்கு சேஷித்வ ஸ்வஸ்வாதந்த்ர்யங்கள் நடையாடுகிறது இவ்விபூதியிலேயாகையாலே இரண்டையும் தவிர்த்து பகவததீநமென்று சொல்ல வேண்டுவது இங்கேயாயிருந்தது. இனி ஒரு மூன்று பாட்டாலே இதனுடைய ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள் பகவததீநமாயிருக்கு மென்று, ஜகத்துக்கும் ஈச்வரனுக்கும் ஸம்பந்தம் சரீராத்மபாவமென்று குத்ருஷ்டிகளை நிரஸித்து, சூந்யவாதியை நிரஸித்து, வ்யாப்திஸௌகர்யத்தைச் சொல்லி, பலத்தைச் சொல் லித் தலைக்கட்டுகிறார். அதில் ஸ்வரூபம் அவனதீந மென்கிறார் இப்பாட்டில். அதாகிறபடி எங்ஙனே? என்னில்,—ஸ்ருஷ்டிகாலத்திலே வந்தவாறே இவற்றையுண்டாக்கி ஜீவத்வாரா அநுப்ரவேசித்து, வஸ்துத்வ நாமபாக்த்வங்களும் உண்டாம்படி பண்ணியும், இது அடங்க தும் அழிந்தவன்று சக்த்யவஸ்த்த ப்ரபைபோலே தன்பக்கலிலே ஸூக்ஷ்மரூபேண கிடக்கும் படி எதிட்டுக்கொண்டு தரித்தும், காரணதசையோடு கார்யதசையோடு வாசியறத் தன்னைப் பற்றி ஸ்வரூபஸ்தித்யாதிகளாம்படி இருக்கையாலே ஸ்வரூபம் அவனதீநமென்கிறது. அதில், லோகத்தில ஸகல பதார்த்தங்களையும் தனித்தனியே சொல்லி, 'இதினுடைய ஸ்வரூபம் அவ னாலே, இதினுடைய ஸ்வரூபம் அவனாலே' என்னில், பணிப்படுமிறே ஜீவாநந்த்யத்தாலே; இப் ப்ரயோஜகத்திலே சொல்லிவிடுமன்று, ப்ரதிபத்திக்கு விஷயமாகாது; ஆகையாலே, சேதநாதி பதார்த்தங்களை நாலுமூன்று வகையாலே சேர்த்து அவற்றினுடைய ஸ்வரூபம் அவனதீநமென்கிறார்.

[நாம் அவன் இத்யாதி] நானென்றும், நாமென்றும், யானென்றும், யாமென்றும் தந்தாமைச் சொல்லக்கடவது. ஸந்நிஹிதமென்ன, தூரஸ்த்தமென்ன, அதூரவிப்ரக்ருஷ்ட

மென்ன, வினவப்படுகிறதென்ன, [அவன் இவன் உவன் எவன்] - ஸ்த்ரீலிங்க நிர்த்திஷ்ட வஸ்துக்களைச் சொல்லுகிறது. [நாம்] பஹுமந்தவ்யரை. [அது] நபும்ஸகலிங்க நிர்த்திஷ்ட வஸ்துக்களைச் சொல்லுகிறது. [விமவை] நச்வரபதார்த்தங்கள். [நலம்தீங்கு] நன்மை தீமை என்னுதல், நன்ரூனவை தீதானவை என்னுதல். [ஆமவையாயவை] - கழிந்தவற்றிலும் வருமவற்றிலும் அடைப்புண்ணுமிறே வர்த்தமானம். [ஆய்நின்ற] ஆய்நின்ற பதார்த்தங்கள். இவற்றைப் பதார்த்தத்தனவிலே கொண்டபோது மேல் ஐக்யஞ் சொல்லப் போகாது; அசித்தும், அசிதபிமாநியான ஜீவனும், ஜீவாந்தர்யாமியான பரமாத்மாவுமான இஸ்ஸங்காதமித்தனைக்கும் வாசகமாயிருக்கிறது இச்சப்தம். [அவர்] இவையாய் நிற்கிருர் அவர். "இதம் ஸர்வம் ப்ரஹ்மகலு" என்னுமாபோலே. "தத்த்வமஸி" என்ருப்போலேயிருக்கிறது. முதற்பாட்டிலே கல்யாணகுணயோகத்தையும் நித்யவிபூதியோகத்தையும் விக்ரஹவைலக்ஷண்யத்தையும் சொல்லி, இரண்டாம் பாட்டிலே ஸ்வரூபவைலக்ஷண்யத்தையும் சொல்லிற்று; தச்சப்தம் ப்ரக்ருத பராமர்சியாகையாலே 'அவர்' என்று கல்யாணகுணவிசிஷ்ட வேஷத்தைச் சொல்லி, 'ஆய்நின்ற' என்று அசிஜ்ஜீவவிசிஷ்டபரமாத்மாவைச் சொல்லி ஸாமாநாதிகரண்யத்தாலே ஐக்யம் சொல்லுகிறது. ஆக ஸத்ரீபுந்நபும்ஸக பேதத்தாலும், பூஜ்யபதார்த்தங்கள் நச்வர பதார்த்தங்களென்கிற பேதத்தாலும், விலக்ஷண விலக்ஷண பேதத்தாலும், பூத பவிஷ்யத் வர்த்தமாந காலபேதத்தால் வந்த விசேஷங்களாலும், ஸகல சேதநாசேதநங்களையும் ஸங்க்ரஹித்து அவற்றினுடைய ஸ்வரூபம் பகவததீநமென்றதாய்விட்டது.

அவரவர்தமதமது அறிவறிவகைவகை*
அவரவரிறையவர் எனவடியடைவர்கள்*
அவரவரிறையவர் குறைவிலரிறையவர்*
அவரவர்விதிவழி அடையநின்றனரே* **(5)**

ஒ.—அஞ்சாம் பாட்டில், ஸகலபதார்த்தங்களுடைய ஸ்த்திதியும் எம்பெருமானாலே என்கிறது.

[அவரென்று தொடங்கி] - தந்தம் ப்ரக்ருத்யநுகுணமாக விவிதபலாபிஸந்தியையுடைய அதிகாரிகள் தந்தாமறிந்த மார்க்கபேதங்களாலே தங்களுடைய அபேக்ஷித பலப்ரதாநசக்தரான அவ்வவ தேவதைகளை இவர்களே நமக்கு அஸாதாரணஸ்வாமிகளென்று ஆச்ரயிப்பர்கள். [அவரவரென்று தொடங்கி] - ஆச்ரயணீயர் ஆச்ரயிக்கிறவர்களுடைய அபேக்ஷிதம் செய்கைக்கு குறையுடையரல்லர்; ஆச்ரயிக்கிறவர்கள் ஆச்ரயணீயரை வித்த்யுக்தப்ரகாரமே ஆச்ரயிக்கவும், அவர்கள் அவர்களுக்கு பலப்ரதாநசக்தராகவும், ஸர்வேச்வரன் அந்தராத்மதயா நின்றான்.

இ.—ஸ்த்திதியும் பகவததீநையென்று வையதிகரண்யத்தாலே சொல்லுகிறது.

[அவரவர்] - ஸத்த்வாதிகுணபேதத்தால்வந்த ப்ரக்ருதிபேதத்தைச் சொல்லுகிறது [தமதமது] - குணபேதத்தால் வந்த பலபேதத்தைச் சொல்லுகிறது. [அறிவறி] - 'அதுக்கு அடியான ஜ்ஞாநபேதத்தைச் சொல்லுகிறது. [வகை வகை] - மார்க்கபேதங்களாலே. [அவரவர்] - அவ்வோபலப்ரதாநத்துக்கு சக்தராக ஸ்வீகரித்த தேவதைகளை [இறையவரென] - அவரவர்களே தந்தாமுக்கு ஸ்வாமிகளென்று. [அடியடைவர்கள்] - ஆச்ரயிப்பர்கள். அடியடைவர்களென்று - ஸ்வகோஷ்டீப்ரஸித்தியாலே அருளிச்செய்கிருர். [அவரவர் இறையவர்] - அவ்வோதேவதைகள். [குறைவிலர்] - ஆச்ரயிக்கிறவர்களுடைய பலம்கொடுக்கைக்குக் குறையுடையரல்லர். [இறையவர்] - நிருபாதிக ஸர்வேச்வரன். [அவரவர் விதிவழியடைய] - ஆச்ரயிக்கிறவர்கள் வித்யுக்த ப்ரகாரத்தாலே ஆச்ரயிக்கவும், ஆச்ரயணீயர் அவர்களுக்கு பலப்ரதாநத்துக்கு சக்தராகவும். [நின்றனர்] - அந்தராத்மதயா நின்ருர்.

ஈடு :—*அஞ்சாம் பாட்டு.—ஸ்வரூபம் அவனதீநமானவோபாதி ஸ்த்திதியும் அவனதீநை யென்கிருர்.*

[அவரவர் இத்யாதி] -ஒருவன் ஒரு க்ருஹத்துக்குக் கடவனாயிருக்கும்; ஒருவன் ஒரு க்ராமத்துக்குக் கடவனாயிருக்கும்; ஒருவன் ஒரு ஜநபதத்துக்குக் கடவனாயிருக்கும்; ஒருவன் த்ரைலோக்யத்துக்குக் கடவனாயிருக்கும்; ஒருவன் சதுர்த்தசபுவநத்துக்குக் கடவனாயிருக்கும்; ஆக, சதுர்த்தசபுவநத்துக்குக் கடவனானவனோடு, ஒரு க்ருஹத்துக்குக் கடவனானவனோடு வாசியற அவர்கள் ரக்ஷகராகிறதும், இவை ரக்ஷ்யமாய் உபகாரங்கொண்டதாகிறதும் ஸர்வேச்வரன் அந்தராத்மாவாய் நின்று நடத்துகையாலே; அவன் இப்படி நடத்திக்கொண்டு போராதவன்று இவர்கள் ரக்ஷகராகமாட்டார்களென்கிறார். *நஸம்பதாம் ஸமாஹாரே விபதாம் விநிவர்த்தநே ஸமர்த்தோ த்ருச்யதே கச்சித் தம் விநா புருஷோத்தமம் நஹி பாலநஸாமர்த்த்யம் ருதே ஸர்வேச்வரம் ஹரிம்*- எல்லா நன்மைகளையும் பண்ணித்தரவல்லனாய் விரோதிகளையும் போக்கவல்லனானவனையொழிய வேறொருவர் பக்கலில் இந்த ரக்ஷகத்வம் கிடவாது. *யத்வேதாதௌ ஸ்வர: ப்ப்ரோக்தோ வேதாந்தேச ப்ரதிஷ்ட்டித:* - செப்பிலேகிடந்த ஆபரணத்தை வாங்கிப்பூண்டு, பின்னையும் அவ்வாபரணத்தை வாங்கிச் செப்புக்குள்ளேயிட்டு வைக்குமாபோலே ஆத்யந்தபீஜமாயிருக்கிறது யாதொன்று: *தஸ்யப்ரக்ருதிலீநஸ்ய*-அதுதன்னுடைய ப்ரக்ருதியிலே லீநமாயிருக்கிறதாகிறது- அகாரம். அது ரக்ஷகனைக் காட்டுவதொன்றிறே. *ய:பரஸ்ஸ மஹேச்வர:* - அதுக்கு வாச்யதயா பரனாயிருக்கிறான் யாவனொருவன், அவன் ஸர்வேச்வரனென்றதிறே [அவரவர்] - தம்முடைய அநாதரமும், அவர்களுடைய வைவித்யமும் தோற்றுகிறது. [தமதமது] - குணபேதத்தால் வந்த பலபேதத்தைச் சொல்லுகிறது. [அறிவறி] - அதுக்கு அடியான ஜ்ஞாநபேதத்தைச் சொல்லுகிறது. [வகைவகை] - மார்க்கபேதங்களாலே. [தமதமதறிவறிவகைவகை] - சேதநபேதத்தோபாதியும் போருமாயிற்று ருசிபேதங்களும். தந்தாமுடைய குணாநுகுணமாகப் புறம்பே ஆச்ரயிப்பாரும் ஆச்ரயணீயராயிருப்பாருமாயிருக்குமிறே. ரஜோகுணப்ரசுரராயிருப்பாரும் தமோகுணப்ரசுரராயிருப்பாரும் அளாவனான ஸத்த்வத்தையுடையராயிருப்பாருமாயிறே இருப்பது, அப்படியே குணாநுகுணமாகப்பிறந்த ஜ்ஞாநமும். அறிந்தவறிந்த வகைகளாலே, [அவரவர் இறையவரென] - அவ்வவர் ஆச்ரயணீயரென்று. [அடியடைவர்கள்] - அவ்வவதேவதைகள் தான் துராராததேவதைகளாய், 'ப்ரஜையை யறுத்துத்தா' 'ஆட்டையறுத்துத்தா'. என்னுகிற்கச்செய்தேயும், ஆச்ரயணமாவது - அவற்றின் காலிலே குனியுமதுக்கு அவ்வருகில்லை யென்கிறார் இவர், ஸ்வகோஷ்டீப்ரஸித்தியாலே; ஓரஞ்சலிஸாத்யவஸ்துவோபாதியிறே தமக்கு வாஸனை, *அஞ்சலி: பரமா முத்ரா க்ஷிப்ரந்தேவ ப்ரஸாதிநீ*; *க்ருதாபராதஸ்ய ஹி தே நாந்யத் பச்யாம்யஹம் க்ஷமம் அந்தரேணாஞ்சலிம் பத்த்வா லக்ஷ்மணஸ்ய ப்ரஸாதநாத்* - இளையபெருமாளுடைய ஜ்யாகோஷத்தைக் கேட்டு மஹாராஜர் கழுத்தில் மாலையையறுத்துப்போகட்டுக் காபேயமாய்ச் சில வ்யாபாரங்களைப் பண்ணி, அருகே நின்ற திருவடியைப் பார்த்து 'இவ்வளவில் நமக்குச் செய்யவடுப்பதென்?' என்ன, 'அபராதகாலத்திலே அநுதாபம் பிறந்து மீண்டோமாய் எளியன சில செய்கிறோமல்லோம்; திரக்கழிய அபராதம் பண்ணினபின்பு இனி ஓரஞ்சலி கோராமற்போகாது' என்றானிறே. இப்படி குறைநிகளாய் ப்ராப்தனாயிருக்கிறவனோட்டை வாஸனையாலே 'அடியடைவர்கள், என்கிறார். மாமலர்நீர்சுடர் தூபங்கொண்டு தொழுதெழு நு மென்னுமிது மிகையாயிறே இவர்பற்றின விஷயம் இருப்பது. [அவரவர் இறையவர் குறைவிலர்] - ஆச்ரயிக்கிறவர்களுடைய இறையவரென்னுதல், அவ்வவாச்ரயணீயரானவர்களென்னுதல். அவர்களுக்கு ஆச்ரயணீயரானவர்கள் அவர்களுக்கு பலப்ரதாநசக்தராகைக்குக் குறையுடையரல்லர். அதுக்கு அடியென்? என்னில்,—[இறையவர்] -பொதுவிலே 'இறையவர்' என்கிறார், அவர்களோடு, அவர்களாச்ரயிக்கிற தேவதைகளோடு, தம்மோடு வாசியற எல்லார்க்கு மொக்க இறையவராகையாலே; *பதிம் விச்வஸ்ய* என்கிறபடியே எல்லார்க்கு மொக்க ஸ்வாமியானவர். [அவரவர் விதிவழி யடைய நின்றனரே] - அவ்வவாச்ரயணீயர் தந்தாமுடைய ஆகமாதிகளிலே விதித்துவைத்த ப்ரகாரங்களிலே அடையும்படியாக நம் இறையவர் அந்தராத்மாவாய் நின்றார். அன்றிக்கே, ஸர்வேச்வரன் காமநாதிகாரத்தில் அருளிச்செய்தபடியே அவர்களடையும்படியாக வென்னுதல். ஸர்வேச்வரன் இராமடமூட்டுவாரைப்போலே முகந்தோற்றாதே அந்தராத்மாவாய் நின்று நடத்துகையாலே அவர்களும் ஆச்ரயித்தார்களாய், இவர்களும் பலப்ரதாநசக்தராகிறார்களித்தனை; அவனை யொழிந்தவன்று இவர்கள் ஆச்ரயிக்கவும்

மாட்டார்கள், அவர்கள் பலப்ரதாநம் பண்ணவும் மாட்டார்களென்கிறுர். அய்யன்பாழியில் ஆனை போர்க்கு உரித்தாமன்றுயிற்று அவ்வோதேவதாமாத்ரங்களுக்கு பலப்ரதாநசக்தியுள்ளது.

நின்றனரிருந்தனர் கிடந்தனர்திரிந்தனர்*
நின்றிலரிருந்திலர் கிடந்திலர்திரிந்திலர்*
என்றுமொரியல்வினர் எனநினைவரியவர்*
என்றுமொரியல்வொடு நின்றவெந்திடரே. (6)

ஒ.—ஆறும்பாட்டில், சேதநாசேதநாத்மக ஸமஸ்த வஸ்துக்களுடைய ஸமஸ்த ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் பகவத்ஸங்கல்பாதீந மென்கிறது.

'நின்றனர் இருந்தனர்' என்று தொடங்கி. [என்றுமொரியல்வினர் என்று தொடங்கி] - அநேக ப்ரகாரனுயிருக்கையாலே ஒரு ப்ரகாரத்தைச் சொல்லி இதுவே படி யென்று ஒருநாளும் பரிச்சேதிக்க அரியனுய் அபரிச்சேத்யதைகஸ்வரூபனுய் இப்படி ஸூத்ருடப்ரமாண ஸித்தனு யுள்ளவர். 'எம்' என்று - ஸ்வலாபத்தைச் சொல்லுகிறது. நாலாம்பாட்டிலே ஸ்வரூபதாதந்த்ர்யம் ஸித்தமாகையால் இப்பாட்டில் ப்ரவ்ருத்திநிவ்ருத்த்யம்ச தாதந்த்ர்யத்திலே தாத்பர்யமாயிற்று; "அருணயா பிங்காக்ஷ்யா ஸோமங்க்ரீணுதி" என்கிறவிடத்தில் ஆருண்யாதிகளே விதேய மானுற்போலே.

இ.—ஆறும்பாட்டில்; ப்ரவ்ருத்திநிவ்ருத்திகள் பகவத்ஸங்கல்பாதீநைகளென்று ஸாமாநாதிகரண்யத்தாலே சொல்லுகிறது.

[நின்றனர் இத்யாதி] - ஸகல சேதநாசேதநங்களுடைய ஸகல ப்ரவ்ருத்திநிவ்ருத்திகளும். விசேஷ்யபர்யந்தாபிதாநம் பண்ணுநிற்க, இங்ஙனே சொல்லுமதென்? என்னில்;—"நாமவன்" என்கிற பாட்டிலே ஸ்வரூபஞ்சொல்லுகையாலே இப்பாட்டில் ப்ரவ்ருத்திநிவ்ருத்தி மாத்ரத்தையே நினைக்கிறது: அருணுதிகரணத்தில் ஆருண்யாதிகளே விதேயமானுப்போலே. [நின்றனர் இத்யாதி] - ஸகலப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் ததீநைக ளென்கிறது. நிவ்ருத்தி ததீநை யாவதென்? எறிட்ட கட்டி விழும்போது ஒருநியாமகர் வேணுமோ? என்னில்; — வேணும்; ஸ்வர்க்கத்தினின்றும் விழுகிற த்ரிசங்குவுக்குத் தன்னுல் முடிய விழவொண்ணுமையாலே. [என்று மொரியல்வினரென நினைவரியவர்] - அநேக ப்ரகாரனுகையாலே ஒருப்ரகாரத்தையே சொல்லி இது இப்படியென்று ஒருநாளும் பரிச்சேதிக்க அரியவர். [என்று மொரியல்வொடுநின்ற] - என்றுமொக்க இப்படி அபரிச்சேத்யதைகஸ்வபாவராயிருக்கை. [எம்திடரே]- இப்படி ஸூத்ருட ப்ரமாண ஸித்தர். 'எம்' என்று தமக்கு இவ்வர்த்தம் ப்ரகாசிக்கையாலே ஸ்வலாபத்தைச் சொல்லுகிறது.

ஈடு:—ஆறும்பாட்டு—லீலாவிபூதியினுடைய ஸ்திதியும் பகவத்ஸங்கல்பாதீநமென்றார் கீழ்; அதினுடைய ப்ரவ்ருத்தி நிவ்ருத்தியும் பகவத்ஸங்கல்பாதீந மென்கிறார் இதில்.

[நின்றனர் இத்யாதி] - நிற்றல் இருத்தல் கிடத்தல் திரிதல் என்றும், நில்லாமை இராமை கிடவாமை திரியாமை என்றும் சொல்லக் கடவதிறே ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளை. பகவத்வ்யதிரிக்த ஸமஸ்தவஸ்துக்களுடையவும் ப்ரவ்ருத்திநிவ்ருத்திகளைச் சொல்லுகிறது இப்பன்மையால். ஆக்ருதிவாசகசப்தம் வ்யக்தியிலே பர்யவஸித்து நிற்குமாபோலே ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு வாசகமான சப்தமும், அபர்யவஸாநவ்ருத்த்யா அவனளவிலே சென்றல்லது நில்லாது. *அருணயா பிங்காக்ஷ்யா ஸோமங்க்ரீணுதி* என்கிற விடத்தில் குணவிசிஷ்டவஸ்து தோற்றுநிற்கச்செய்தேயும் ஆருண்யாம்சத்திலே தாத்பர்யமாகிறுப்போலே, ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு ஆச்ரயமான வஸ்துக்களினுடைய ஸ்வரூபம் அவனதீநமென்று முன்னே சொல்லுகையாலே ப்ரவ்ருத்தி நிவ்ருத்த்யம்சத்திலே நோக்கென்று சொல்லுவாருமுண்டு; அப்போது ஸாமாநாதிகரண்யம் ஸித்தியாது; ஆக, ப்ரவ்ருத்திநிவ்ருத்திகளுக்கு வாசகமான இச்சப்தம்

அவற்றுக்கு ஆச்ரயமான சேதநனைக் காட்டி, அவன்தனக்கு ஈச்வரனையொழிய ஸ்திதி யாதல் உபலம்பமாதல் இல்லாமையாலே அவனளவுங் காட்டுகிறது; ஆக, விசிஷ்ட வஸ்துவையே காட்டுகிறது. ப்ரவ்ருத்தி அவனதீநையாகிறது வேணுமாகில்; நிவ்ருத்திக்கு அவன் வேணுமோ?' என்று எம்பாரைக் கேட்க, 'ஸ்வர்க்கத்தினின்றும் விழுகிற த்ரிசங்குவை சக்திமான் நிற்கச் சொல்ல நிற்கவேண்டிற்றுக் கண்டாயே; அப்படியே நிவ்ருத்திக்கும் அவன் வேணுங்காண்' என்று அருளிச்செய்தார். [என்றுமொரியல்வினரென நினைவரியவர்] - இப்படி அநேக ப்ரகாரராயிருக்கையாலே காலதத்த்வ முள்ளதனையும் ஆராயாநின்றாலும் இன்னபடிப்பட்ட ஸ்வபாவத்தையுடையவனென்று நினைக்கவுங்கூட அரியவர். [என்று மொரியல்வொடு நின்ற] வ்ருஷலவிவாஹ மந்த்ரம்போலே, என்றும் ஓரியல்வொடு நின்றவராவது என்? என்னில் ;—என்றும் ஒருபடிப்பட்ட ஸ்வபாவத்தை யுடையவ ரென்று நினைக்க அரிதான நிலை, என்றும் ஒருபடிப்பட்டிருக்குமென்கை. [எந்திடர்] அபௌருஷேயமான வேதப்ரதிபாத்யனாகையால் வந்த தார்ட்யத்தைச் சொல்லுகிறது. இப்படி ஸூத்ருட ப்ரமாண ஸித்தரான நிலை தம்முடைய லாபமாய்த் தோற்றுகையாலே, 'எந்திடர்' என்கிறார். நின்றனர் இருந்தனர் கிடந்தனர் திரிந்தனர் நின்றிலர் இருந்திலர் கிடந்திலர் திரிந்திலரான இவையெல்லாம், என்றுமொரியல்வினரென நினைவரியவராய் என்றும் ஓரியல்வொடு நின்ற எந்திடரானவர்.

திடவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை*
படர்பொருள்முழுவதுமாய் அவையவைதோறும்*
உடல்மிசையுயிரெனக் கரந்தெங்கும்பரந்துளன்*
சுடர்மிகுசுருதியுள் இவையுண்டசுரனே. (7)

ஒ.—ஏழாம்பாட்டில், கீழ்மூன்றுபாட்டிலாகச் சேதநாசேதந பதார்த்தங்களினுடைய ஸ்வரூப ஸ்திதிப்ரவ்ருத்திகள் பகவததீநமென்று ஸாமாநாதிகரண்யத்தாலும் வையதிகரண்யத்தாலுமாகப் பேசி, அந்தஸாமாநாதிகரண்யத்துக்கு நிபந்தநமான ஜகதீச்வரர்களுக்கு உண்டான சரீரசரீரிபாவ ஸம்பந்தத்தைச் சொல்லுகிறது. 'ஜகத்தினுடைய ஸ்வரூபஸ்த்தித்யாதிகள் பகவததீந மாகையாலே இந்த ஜகத்து அவனுக்கு சரீர மென்கிறது' என்றுஞ் சொல்லுவர்.

[திடவிசும்பு என்று தொடங்கி] - ஸ்வகார்யமான பூதசதுஷ்டயங்களுண்டாவதற்கு முன்பே உண்டாய் அவை நசித்தாலும் தான் சிலநாள் நிற்குமதான ஆகாசம் முதலான பூதபஞ்சகங்களையும் உபாதாநமாகக் கொண்டு கார்யமாய் விஸ்த்ருதமாகாநின்றுள்ள தேவாதிபதார்த்தங்களையெல்லாம் உண்டாக்கி. இங்கு ஆகாசத்துக்குச் சொன்ன தார்ட்யம் லோகாயதாதிமதநிராஸபரம்; எரியாவது-தேஜஸ்ஸு, வளியாவது - காற்று. [அவையவை யென்று தொடங்கி] - அவ்வவபதார்த்தங்கள்தோறும் சரீரத்தில் ஆத்மாவைப்போலே தாரகனுமாய் நியந்தாவுமாய்க் கொண்டு வ்யாப்யபதார்த்தங்களுக்குத் தெரியாமே வ்யாபித்து, அவ்வளவன்றிக்கே அப்பதார்த்தங்களுடைய புறம்பும் வ்யாபித்து, காலத்திலே இவற்றை ஸம்ஹரிப்பதுஞ் செய்த ஸர்வேச்வரன், முதற்பாட்டுத் தொடங்கிச் சொன்னபடியே பௌருஷேயத்வ நிபந்தநமான விப்ரலம்பாதி தோஷரஹிதமுமாய், அபாதிதப்ரமாணமுமாகையாலே மிக்க தேஜஸ்ஸை யுடைத்தாய், ஒருவரால் பண்ணப்பட்டதன்றிக்கே என்றும்கேட்டேவருகையாலே ச்ருதியென்று சொல்லப்படுகிற வேதத்திலே ப்ரதிபாத்யனுக்கொண்டு உளன். தாம் அநுஸந்தித்த அர்த்தத்துக்கு ச்ருதியை ஸாக்ஷியாகச் சொல்லுகையாலே ச்ருதியிற்சொல்லுகிற ச்ரிய:பதித்வமும் நாராயணசப்தவாச்யத்வமும் அநுஸந்தித்தாராகவேணும். இவ்வர்த்தத்தில் நிர்த்தோஷச்ருதியே ப்ரமாணமாகப் பிடிக்கையாலே வேதவிருத்தரான பாஹ்யரும், ஜகதீச்வரர்களுக்கு அந்யதாஸம்பந்தஞ் சொல்லும் குத்ருஷ்டிகளும் அர்த்தாத் ப்ரதிக்ஷிப்தரானார்கள்.

இ.—ஏழாம்பாட்டில், கீழ் மூன்றுபாட்டிலே சேதநாசேதநங்களுடைய ஸ்வரூபஸ்த்திதி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள் பகவததீநங்க ளென்று ஸாமாநாதிகரண்யத்தாலும் வையதிகரண்யத்தாலும் சொல்லிற்று; அந்த ஸாமாநாதிகரண்யத்துக்கு நிபந்தநம் ஜகதீச்வரர்களுடைய சரீராத்மபாவ ஸம்பந்த மென்கிறது.

ஜகத்தினுடைய ஸ்வரூபாதிகள் பகவததீநங்களாகையாலே இந்த ஜகத்து அவனுக்கு சரீர மென்று சொல்லிற்றாகவுமாம்.

[திடவிசும்பு] - த்ருடமான விசும்பு. ஸ்வகார்யமான பூதசதுஷ்டயத்துக்கு முன்பே யுண்டாய் அவை நசித்தாலும் சில நாள் நிற்கக்கடவதாகையாலே ஸ்திரமான ஆகாச மென்கிறது; இது முதலான பூதபஞ்சகங்களென்ன: [இவைமிசை படர் பொருள்] - இவற்றின் கார்யமாய் விஸ்த்ருதமாகாநின்றுள்ள தேவாதி பதார்த்தங்களென்ன: [முழுவதுமாய்] - இந்த ஸகலபதார்த்தங்களையும் உண்டாக்கி. ஆகாசத்துக்குச் சொன்ன தார்ட்ட்யம் லோகாயதாதிமத நிராஸ பரம். வளி - காற்று. [அவையவைதொறும்] - அவ்வவபதார்த்தங்கள்தோறும். [உடல்மிசை உயிரென] - சரீரத்தில் ஆத்மாவைப்போலே தாரகனுமாய், நியந்தாவுமாய், சேஷியுமாய்; "பூதேந்த்ரியாந்த:கரணபுருஷாக்யம்ஹி யத்ஜகத். ஸ ஏவ ஸர்வபூதாத்மா விச்வரூபோ யதோZவ்யய:" [கரந்து] - வ்யாப்ய பதார்த்தங்களுக்குத் தெரியாமே. [எங்கும் பரந்து] - உள்ளும் புறம்பும் வ்யாபித்து. [இவையுண்டசுரன்] - ப்ரளயதசையிலே இவற்றை ஸம்ஹரித்த ஸர்வேச்வரன். [உளன் சுடர் மிகு சுருதியுள்] - முதற்பாட்டுந் தொடங்கிச்சொன்ன அர்த்தங்களெல்லாவற்றுக்கும் ப்ரமாணம் நிர்த்தோஷ ச்ருதியென்கிறது. சுடர்மிகுகையாவது - பௌருஷேயத்வநிபந்தநமான விப்ரலம்பாதிதோஷ ரஹிதமுமாய், ப்ரமாணாந்தரங்களைக் கொண்டு பாஹ்யகுத்ருஷ்டிகளால் அபிசால்யமாகையாலே மிக்கதேஜஸ்ஸை யுடைத்தாகை. ஒருத்தரால் பண்ணப்பட்டதன்றிக்கே என்றுங் கேட்டேவருமதாகையாலே ச்ருதி யென்கிறது. [உளன்] - இப்படிப்பட்ட ச்ருதியிலே ப்ரதிபாத்யனாய்க்கொண்டு தோற்றினவன். தாம் அநுஸந்தித்த அர்த்தங்களுக்கு ச்ருதியை ஸாக்ஷியாகச் சொல்லுகையாலே அதிற் சொல்லுகிற ச்ரிய:பதித்வமும் நாராயணசப்த வாச்யத்வமும் அநுஸந்தித்தாராகவேணும்; இவர்க்கு நிர்த்தோஷச்ருதியே ப்ரமாணமாகையாலே பாஹ்யரும், ஜகதீச்வரர்களுக்கு அந்யதாஸம்பந்தஞ் சொல்லும் குத்ருஷ்டிகளும் அர்த்தாத ப்ரதிக்ஷிப்தரானார்கள்.

ஈடு :—ஏழாம்பாட்டு—[திடவிசும்பு இத்யாதி]-கீழ் ஸாமாநாதிகரண்யம் சொன்ன இது பாவிப்ரதிஸந்தாந ந்யாயத்தாலேயாய், அத்தால் பலித்த ஸம்பந்தம் சரீராத்ம பாவம் என்கிறாரதல்; அன்றியே, கீழே ஸாமாநாதிகரண்யத்தாலும் வையதிகரண்யத்தாலும் சொன்னார்: அப்படி சொன்ன ஐக்யத்துக்கு நிபந்தநம் சரீராத்மபாவம் என்கிறாரதல். *அநேந ஜீவேநாத்மநாZநுப்ரவிச்ய நாமரூபே வ்யாகரவாணி* என்கிறபடியே த்ரிவ்ருத்க்ருதமான அசித்திலே ஜீவத்வாரா அநுப்ரவேசித்து வஸ்துத்வ நாமபாக்த்வங்களுண்டாம்படி பண்ணி, இவை தானென்னலாம்படி யிருந்தால் 'ம்ருதாத்மகோ கட:' என்னும்படி யிருக்கையன்றிக்கே, *அந்த:ப்ரவிஷ்டச்சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா* என்கிறபடியே ஸர்வேஷாம் ஆத்மாவாய், இவற்றை நியமிக்குமிடத்தில் இந்த சரீரத்துக்கு இந்த ஆத்மா தாரகனாய் நியாமகனாய் சேஷியாயிருக்கிறாப்போலே *யஸ்யாத்மா சரீரம்* *யஸ்ய ப்ருதிவீ சரீரம்* என்கிறபடியே தான் இரண்டுக்கும் தாரகனாய் நியாமகனாய் சேஷியாய் நின்று நடத்திக்கொண்டு போருமென்று கீழ்ச்சொன்ன ஸாமாநாதிகரண்யத்துக்கு நிபந்தநம் சரீராத்மபாவ மென்கிறார். வ்ருக்ஷத்திலே தேவதத்தன் நின்றானென்றால் அங்கு சரீராத்மபாவமில்லை, ஜாதிகுணங்கள் வ்யக்தியிலே கிடந்ததென்றால் அங்கு சரீராத்மபாவமில்லை; விசிஷ்டத்திலேயிறே சரீராத்மபாவம் கொள்ளலாவது.

[திடவிசும்பு]—இதுதான் அல்லாதவற்றிலும் ஏறி, 'த்ருடமான எரி, த்ருடமான காற்று' என்று கிடக்கிறதாகவுமாம்; அன்றிக்கே *ஆத்மந ஆகாசஸ் ஸம்பூத:* என்று சொல்லுகிறபடியே அல்லாத பூதங்களுக்கு முன்னே யுண்டாய், அவை யழிந்தாலும் சிலநாள் நிற்கக்கடவதாகையாலே த்ருடமான விசும்பென்னவுமாம; அன்றிக்கே, *சத்வார்யேவ பூதாநி* என்கிறவனை நிராகரிக்கிறாராகவுமாம். ஆக, பூதபஞ்சகங்களையும் சொல்லுகிறது. [இவைமிசை படர் பொருள் முழுவதுமாய்] - இவற்றை அடியாகக்கொண்டு மேலே விஸ்த்ருதமாகாநின்றுள்ள பதார்த்தங்களெல்லாவற்றையும் உண்டாக்கி. 'ஆய்' என்றது - ஆக்கி என்றபடி. 'ஆய்' என்பானென்? என்னில் ;—*பஹு ஸ்யாம்* என்கிற தன் விகாஸமே யாகையாலே, வைதிக நிர்த்தேசம் இருக்கிறபடி. [அவையவைதொறும்] அவ்வோ பதார்த்தங்கள் தோறும், அவற்றிலே வ்யாபிக்குமிடத்தில் பல தூணுக்காக ஒரு உத்தரம் கிடந்தாப்போலேயன்றிக்கே

ஜாதி வ்யக்திதோறும் பரிஸமாப்ய வர்த்திக்குமா போலே எல்லாவற்றிலும் தனித்தனியே குறைவற வ்யாபித்துநிற்கும். இப்படி வ்யாபித்து நிற்குமிடத்தில், [உடல்மிசை உயிரென] - இச்சரீரத்துக்கு ஆத்மா தாரகனும் நியாமகனும் சேஷியாயிருக்கிறாப்போலே இச்சரீராத்மாக்களுக்குத் தான் தாரகனும் நியாமகனும் சேஷியாயிருக்கும். [கரந்து] - இப்படியிருக்கச்செய்தே *யமாத்மா நவேத* என்கிறபடியே அஜ்ஞைரத்ருச்யனுமாயிருக்கும். [எங்கும் பரந்து] - அந்தர்பஹிச்ச வ்யாபித்து. இதில் ப்ரமாணமென்? என்னில், - [உளன் சுடர்மிகு சுருதியுள்] - அபௌருஷேயமாய் நிர்த்தோஷமாயிருக்கிற வேதத்தாலே ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கும். ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்கள்போலே ஹேத்வந்தரத்தால் கழிக்கவொண்ணாத ஒளியையுடைத்தாயிருக்கை. சுருதி - பூர்வ பூர்வோச்சாரணக்ரமத்தைப் பற்றி உத்தரோத்தரோச்சார்யமாணத்வத்தைப் பற்றச் சொல்லுகிறது. இத்தால் முதற்பாட்டுத் தொடங்கிச் சொன்ன அர்த்தங்களுக்கெல்லாம் ப்ரமாணம் நிர்த்தோஷச்ருதி என்கிறது. [இவையுண்ட சுரன்] - இவற்றை ஸம்ஹரித்த தேவன். முன்பே ஸ்ருஷ்டி ஸ்திதிகள் அவனதீநமென்று சொல்லிற்று; ஸம்ஹாரம் வேறொரு சேதநாதீநமாகில் இது தன்னதல்லாமையால் வரும் ஐச்வர்யம் குறையுமிறே; அதுக்காக ஸம்ஹாரமும் அவனிட்ட வழக்கு என்கிறார். இத்தால், ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களை ப்ரஹ்மாதிகளே நடத்துகிறார்களென்கிற குத்ருஷ்டிகளை நிரஸிக்கிறார். 'திடவிசும்பு' என்கிற இத்தால், அவைதிகமர்யாதையிலே நடக்கிற லோகாயதிகளை நிரஸிக்கிறார். 'உடல்மிசையுயிர்' என்கிற இத்தால், ஸ்வரூபேண தாதாத்ம்யம் சொல்லுகிறவர்களை நிரஸிக்கிறார். 'சுடர்மிகுசுருதியுள்' என்கையாலே, நாராயணாநுவாகாதிகளிற் சொல்லுகிற பரத்வம், லக்ஷ்மீஸம்பந்தம் இவையெல்லாவற்றையும் அங்கீகரித்தாராகிறார்.

சுரரறிவருநிலை விண்முதல்முழுவதும்*
வரன்முதலாயவை முழுதுண்டபரபரன்*
புரமொருமூன்றெரித்து அமரர்க்குமறிவியந்து*
அரனயனென உலகழித்தமைத்துளனே. (8)

ஒ.—எட்டாம்பாட்டு. இப்பாட்டில் இப்படி ச்ருதிஸித்தனான ஸர்வேச்வரனாகிறான் ஸ்ருஷ்டி ஸம்ஹாரகர்த்தாக்களாக ப்ரஸித்தரான ப்ரஹ்மருத்ராதிகளிலே ஒருவனானலோ? என்று சொல்லுகிற குத்ருஷ்டிகள் நிரஸிக்கப்படுகிறார்கள்.

[சுரரென்று தொடங்கி] - ப்ரஹ்மாதிகள் அறியவொண்ணாத ஸ்திதியையுடைத்தாயிருந்த ப்ரக்ருதி தொடக்கமாக மேலுள்ள ப்ராக்ருதபதார்த்தங்களெல்லாவற்றுக்கும் வரிஷ்டமான காரணமாம். விண் என்று - ப்ரக்ருதிகார்யமான ஆகாசவாசிசப்தத்தைக் காரணமான ப்ரக்ருதியிலே ப்ரயோகிக்கிறார். [அவைமுழுதுண்ட] - ஈச்வரனாலும், அவன் காட்டின வழியையுடைய ப்ரஹ்மாவாலும் ஸ்ருஷ்டமான பதார்த்தங்களில் ருத்ரனால் ஸம்ஹார்யமாவது ஏகதேசம்; ஸம்ஹர்த்தாவான ருத்ரன் தன்னையும், அவனுக்கு நிலமன்றிக்கே யிருந்துள்ள மஹதாதிகளையும் அகப்பட ஸம்ஹரித்தவன். [பரபரன்] - அவன் காட்டின வழியாலே ஏகதேசஸ்ருஷ்டியையும் ஏகதேசஸம்ஹாரத்தையும் பண்ணுகையாலே அஸ்மதாதிகளைக்காட்டில் பரராயிருக்கிற ப்ரஹ்மருத்ரர்களுக்கு நிலமல்லாத ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைப் பண்ணுகையாலே அவர்களுக்கும் பரனென்றவாறு. [புரமொரு மூன்றெரித்து என்று தொடங்கி] - ருத்ரன் த்ரிபுரதஹநம்பண்ணினானென்றும், ப்ரஹ்மா வைதிகஜ்ஞாநத்தை தேவர்களுக்கு உபதேசித்தானென்றும் அவர்களுக்கு ப்ரஸித்தியைக் கொடுத்து, அந்தராத்மதயா நின்று தானே அவ்வுபகாரங்களை லோகத்துக்குப் பண்ணினாப்போலே ஸமஸ்தஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களையும் தானே செய்தருளுகையாலே வேறேயும் சிலர் ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களைப் பண்ணுவாருண்டென்று சொல்ல முடியாது.

இ.—எட்டாம்பாட்டில், இப்படிச்ருதிப்ரஸித்தனான ஸர்வேச்வரனுகிறான் ஸ்ருஷ்ட்யாதிகளிலே ப்ரஸித்தரான ப்ரஹ்மருத்ராதிகளிலே ஒருவனனுலோ? என்கிற குத்ருஷ்டிகளை நிரஸிக்கிறார்.

[சுரர் அறிவரு நிலை விண்] - ப்ரஹ்மாதிகளால் அறிய அரிதான ஸ்திதியையுடைய முதல் ப்ரக்ருதி. கார்க்கிவித்யையில் "கஸ்மிந்நு கல்வாகாச ஓதச்ச ப்ரோதச்ச" என்று ஆகாச சப்தத்தாலே முதல் ப்ரக்ருதியைச் சொல்லுகையாலே, இங்கும் ஆகாச சப்தத்தாலே மூலப்ரக்ருதியை அருளிச்செய்கிறார். [விண்முதல் முழுவதும் வரன்முதலாய்] - மூலப்ரக்ருதி தொடக்கமான மேலுள்ள பதார்த்தங்களெல்லாவற்றுக்கும் வரிஷ்டமான காரணமாய். வரன் - வரம். [அவை முழுதுண்ட] - ஈச்வரனுலும் அவனடியாக ப்ரஹ்மாவாலும் ஸ்ருஷ்டமான பதார்த்தங்களில் ருத்ரனுல் ஸம்ஹார்யமாவது ஏகதேசம்; ஸம்ஹர்த்தாவான ருத்ரனையும், அவனுக்கு நிலமல்லாத மஹதாதிகளையும் அகப்பட ஸம்ஹரித்தவன். [பரபரன்] - ஈச்வரனடியாக ஏகதேச ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைப் பண்ணுகிற ப்ரஹ்மாதிகள் அஸ்மதாதிகளில் பரர்; அந்த ப்ரஹ்மாதிகளுக்கும் பரனுகையாலே பராத்பரன். [புரமொருமூன்று எரித்து என்று தொடங்கி] - ருத்ரனுக்கு அந்தர்யாமியாய்க் கொண்டு த்ரிபுரதஹநம் பண்ணி, ப்ரஹ்மாவுக்கு அந்தர்யாமியாய்நின்று வைதிகஜ்ஞாநத்தை தேவர்களுக்கு உபதேசித்து. இயந்து - ஈந்து; அறிவையீந்து. [அரன் அயனென] - த்ரிபுரதஹநம்பண்ணினுன் ருத்ர னென்றும், வைதிகஜ்ஞாந ப்ரவர்த்தகன் ப்ரஹ்மாவென்றும் அவர்களுக்கு ப்ரஸித்தியைக் கொடுத்தாப்போலே. [உலகழித்து அமைத்துளனே] ப்ரஹ்மாவுக்கு அந்தர்யாமியாய் நின்று அண்டாந்தர்வர்த்திகளை ஸ்ருஷ்டித்தும், அவனுக்கு நிலமல்லாத ப்ராக்ருத ஸ்ருஷ்டியை ஸ்வேநரூபேண பண்ணியும், ருத்ரனுக்கு அந்தர்யாமியாய் நின்று அவனுலே ஸம்ஹார்யமான அம்சத்தை ஸம்ஹரித்தும், அவனுக்கு நிலமல்லாத ப்ராக்ருத ஸம்ஹாரத்தை ஸ்வேநரூபேண பண்ணினுன ஸர்வேச்வரனே. "ஏதௌ த்வௌ விபுதச்ரேஷ்ட்டௌ" இப்படி ஸமஸ்தஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களையும் தானேசெய்கையாலே வேறேயும் சிலர் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களுக்குக் கடவாருண்டென்று சொல்ல முடியாது. சுரரறிவருநிலை விண்முதல் முழுவதுக்கும் வரனமுதலாய அவை முழுதுண்ட பரபரன் அரனெனப் புரமொருமூன்றெரித்து உலகழித்து, அயனென அமரர்க்கு அறிவியந்து உலகமைத்துமுளன். "விஷ்ணுராத்மா பகவத:".

ஈடு.—எட்டாம்பாட்டு—[சுரர் இத்யாதி] - ச்ருதிஸித்தன் அவனேயென்றும், ஸர்வசரீரியாய் நிற்கிறான் அவனே யென்றும் சொல்லாநின்றீர்; அல்லாதாரும் ஓரோ கார்யங்களிலே அதிகரித்துஅவையும் நடத்தியன்றோ போருகிறது? ப்ரஹ்மா ஸ்ருஷ்டிக்குக் கடவனாய் ருத்ரன் ஸம்ஹாரத்துக்குக் கடவனாயன்றோ போருகிறது; இவற்றை ஒரு வ்யக்தியிலே ஏறிட்டால் நீர் பக்ஷபாதத்தாலே சொன்னீராகீரோ? என்ன, -'ஒரு வ்யக்தியில பக்ஷபாதத்தாலே சொல்லுகிறேனல்லேன்; ப்ரமாணகதிகளை யாராய்ந்தால் அவை அவர்கள் பக்கலில் கிடவாமையாலே சொல்லுகிறேன்' என்கிறார்.

[சுரர் இத்யாதி] - ப்ரஹ்மாதிகளால் அறியவரிய ஸ்வபாவத்தை யுடைத்தாயிருக்கிற விண் உண்டு - மூலப்ரக்ருதி: அது தொடக்கமாக வுண்டான எல்லாவற்றுக்கும் வரிஷ்ட்டமான காரணமாய். *அக்ஷரமம்பராந்தத்ருதே:* என்று அம்பராந்தமென்று சொல்லக்கடவதிறே; கார்க்கி வித்யையிலே கஸ்மிந்நு கல்வாகாச ஓதச்ச ப்ரோதச்ச* என்று ஆகாசசப்தத்தாலே மூலப்ரக்ருதியைச் சொல்லுகையாலே இவரும் ஆகாச சப்தத்தாலே மூலப்ரக்ருதியை அருளிச்செய்கிறார்: ப்ரக்ருதிகார்யமான ஆகாசவாசி சப்தத்தை யிட்டுக் காரணமான மூலப்ரக்ருதியை உபசரிக்கிறது. [வரன் முதலாய்] - காரணதசையிலும் ஸூக்ஷ்மரூபேண வ்யாபித்துத் தன்மேலே யேறிட்டுக்கொண்டு நோக்கியும், கார்யமாமளவிலே வந்தவாறே அவ்யக்தம் மஹாந் அஹங்காரம் என்கிற இவற்றிலும் ஸூக்ஷ்மரூபேண வ்யாபித்தும், காரண பரம்பரையோடு கார்யபரம்பரையோடு வாசியறத் தானேநின்று நடத்திக்கொண்டு போருகையாலே வரிஷ்ட்டமான காரணமாய் என்கிறது. [அவை முழுதுண்ட] - ஸம்ஹாரத்திலும் வந்தால் முழுக்க ஸம்ஹர்த்தாவாகிறானும் அவனே. *யஸ்ய ப்ரஹ்மச க்ஷத்ரஞ்ச உபே பவத ஓதந:, ம்ருத்யுர் யஸ்யோபஸேசநம்* - யாவனொருவனுக்கு ப்ரஹ்மக்ஷத்ராத்மகமாயிருக்கிற

இதெல்லாம் ஓதகமாயிருக்கிறது, யாவனொருவனுக்கு ம்ருத்யு உபஸேசந கோடியிலே நிற்கிறான். *கஸித்தாவேத யத்ரஸ:* - அப்படி யிருக்கிறவன்பெருமை ஒருவர்க்கும் அறிய நிலமோ? என்னு கின்றதிறே. [பரபரன்] - ப்ரஹ்மாதிகள் அதிகாரிபுருஷர்களா யிருக்கையாலே நம்மைக் குறித்து அவர்கள் பரராயிருப்பதொன்று உண்டிறே, *பர: பராணாம்* என்கிறபடியே அவர்கள் தங்களுக்கும் பரனாயிருக்குமவன். "மனிசர்க்குத் தேவர்போலத் தேவர்க்குத் தேவா" என்னக்கடவதிறே. [புரம் இத்யாதி] - ருத்ரன் த்ரிபுரதஹநம் பண்ணினானென்றும்; [அமரர்க்கு மறிவியந்து] - அறிவை ஈந்து. அன்றிகே வியத்தல் - கடத்தலும், கொடுத்தலு மாகையாலே அறிவைக் கொடுத்து என்னவுமாம். ப்ரஹ்மா தேவர்களுக்கு ஜ்ஞாநப்ரதாநம் பண்ணினானென்றும் ஒருப்ரஸித்தி யுண்டிறே நாட்டிலே அவர்களுக்கு; அங்ஙனன்றோ? என்னில் ;—அவற்றை ஆராய்ந்தால் *விஷ்ணுராத்மா பகவதோ பவஸ்யாமிததேஜஸ:, தஸ்மாத்தநுர்ஜ யாஸம்ஸ்பர்சம் ஸவிஷேஹே மஹேச்வர:* என்றுநின்றார்களிறே அத்தை அடியறிவார். "நண்ணார் நகரம் விழ நனிமலை சிலைவளைவுசெய் தங்கழனிற வம்பதுவானவனே" என்றுநின்றார்களிறே மயர்வற மதிநலமருளப்பெற்றவர்கள்; தான் பூட்டின நாணி, தன் கழுத்தை யறுத்துக் கொண்டு போகா தொழியும்போதும் ஈச்வரன் அந்தராத்மாவாய் நிற்கவேணும். ப்ரஹ்மா தேவர்களுக்கு ஜ்ஞாநப்ரதாநம் பண்ணினானென்று ஒரு ப்ரஸித்தி யுண்டு; அதுக்கு அடி ஆராய்ந்தால் *யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்* என்கிறபடியே அவன் அடியாயிருக்கும். [அரன் இத்யாதி]-அரன் செய்தான், அயன் செய்தானென்ன உலகழித்தமைத்துளன். சுரரறி வருநிலை விண்முதல் முழுவதும் வரன்முதலாய் அவை முழுதுண்ட பரபரன் அரனெனப் புரமொருமூன்றெரித்து உலகத்தையழித்து, அயனென அமரர்க்கும் அறிவியந்து உலகத்தை யமைத்துளன். *ஏதௌ த்வௌ விபுதச்ரேஷ்டௌ ப்ரஸாதக்ரோதஜௌஸ்ம்ருதௌ, ததாதர்சித பந்தாநௌ ஸ்ருஷ்டி ஸம்ஹாரகாரகௌ* என்கிறபடியே ப்ரமாணகதிகள் இருந்தபடியால் ஏகதேச ஸ்ருஷ்டியும் ஏகதேசஸம்ஹாரமுமே ப்ரஹ்மாதிகளுக்கு உள்ளது; அது தானும் இவர்களுக்கு அந்தராத்மாவாய்நின்று ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களைப் பண்ணுகிறான் ஸர்வேச்வரனாகையாலே சொன்னேனத்தனை, ஒரு வ்யக்தியில் பக்ஷபாதத்தாலே சொன்னேனல்லேன் என்று குத்ருஷ்டி களை நிரஸிக்கிறார்.

உளனெனிலுளன் அவனுருவமிவ்வுருவுகள்*
உளனலனெனில் அவனருவமிவ்வருவுகள்*
உளனெனவிலனென இவைகுணமுடைமையில்*
உளனிருதகைமையொடு ஒழிவிலன்பரந்தே* (9)

௯.—ஒன்பதாம்பாட்டில், இப்படி ப்ரமாணமும் ப்ரமேயமும் ஒருபடி உளவாகக்கொண்டு ஈச்வர ஸ்வரூபத்திலும் ஈச்வரவிசேஷணத்திலும் விப்ரதிபத்தி பண்ணின வாதிகளையெல்லாம் நிராகரித்து, 'ப்ரமாணமுமில்லை, ப்ரமேயமுமில்லை, ஸர்வமும் சூந்யம்; ஆதலால், வேதமுமில்லை, வேதப்ரமேயமா யுள்ள ஈச்வரனும் அவனுடைய விபூதியாயுள்ள ஜகத்து மில்லை' என்கிற சூந்யவாதியை நிராகரிக்கிறது.

எங்ஙனேயென்னில்;—சூந்யவாதியான உன்னைக் கேட்போம்: ஈச்வரன் இல்லாமையை ஸாதிக்க நினைக்கிற நீ நினைத்த பொருளை ஒருவாக்யத்தாலே ப்ரதிஜ்ஞைபண்ணி, பின்னை ஹேதுவாலே அத்தை ஸாதிக்கவேணுமிறே; அவ்விடத்தில் நீ ஹேது சொல்லுவதற்கு முன்பே உன் ப்ரதிஜ்ஞையைக்கொண்டு ஈச்வரனுள னென்னுமிடமே ஸாதிப்பன்; அதுக்காக ஈச்வரனுடைய இன்மையை ப்ரதிஜ்ஞை பண்ணு வது உளனென்ற சொல்லாலேயோ? இலனென்ற சொல்லாலேயோ? என்ன, இப்படிக் கேட்கைக்குக் கருத்தென்? என்னில்,—உளனென்ற சொல்லால் இன்மையைக் காட்டவொண்ணாதாப்போலே இல னென்ற சொல்லால் நீ கிற்ற நினைத்த இன்மை காட்டவொண்ணா தென்றவாறு. அது எங்ஙனே யென்னில்,—உண்டென்ற சொல்லாலும் இல்லை யென்ற சொல்லாலும் லோகத்தில் யாதொருபொருள் விளையக் கண்டோம், அப்பொருளே உன் சொற்களுக்கும் பொருளாக வேணுமிறே; கண்டறியாததொரு பொருளை இச்சப்தங்கள் காட்டமாட்டாதிறே; லோகத்தில், குடமுண்டென்றால் குடமென்று சொல்லப்

படுகிற பொருள் உண்மை யென்பதொரு தர்மத்தை யுடைத்தென்று தோற்றுநின்றது; அவ்விடத்தில் குடமாவது - மண்ணாலே பண்ணிற்றென்று. அதினுடைய உண்மையாவது-மண்ணும் உருண்டையுமன்றியே இரண்டுக்கும் நடுவில் அவஸ்தையாய் வயிறும் வாயும் உடைத்தான மண்ணாயிருக்கை. இப்படியால், ஈச்வரனுளனென்னில் உளனாய் வரும்; இச்சொல்லால் அவனுடைய இன்மை காட்டவொண்ணாது. இப்படி ஈச்வரனுள னென்னவே, ஐச்வர்யத்தையொழிய ஈச்வரன் உளனாகக் கூடாமையால் அவனுடைய விபூதியான ஜகத்தும் உண்டாம்; ஆமிடத்திலும் அவனுக்கு சரீரமாயே உளதாம். இப்பொருள் "அவனுருவமிவ்வுருவுகள்" என்றவிடத்தாலே சொல்லப்பட்டது. இனி, ஈச்வரன் இலனென்ற சொல்லாலே அவனுடைய இன்மை காட்ட நினைத்தாயாகில், இல்லையென்ற பொருளிலும் லோகத்திற் கண்டபடி பொருள்கொள்ளவேணும். லோகத்தில் குடமில்லையென்றால், இங்கில்லை யென்னுதல், இப்போதில்லை யென்னுதல், மண்ணுருண்டையா யிருந்தது குடமாய்ப் பிறந்த தில்லையென்னுதல், தளர்ந்து ஓடுகளாய்க் கிடந்ததென்னுதல், இவ்வனைத்திலொன்று பொருளாகக் கண்டோம்; இப்படியன்றியே, வெறுமனே குடமில்லையென்னில், என்றும் எங்கும் எப்படியும் குடமில்லையென்று சொல்லிற்றாக வேணும்; அப்படியாகில், எப்படியும் குடமென் றொன்று அறிய உபாயமில்லை யாகையால் குடமென்று சொல்லவுங் கூடாது, நினைக்கவுங் கூடாது. ஆதலால், ஒன்றில்லை யென்பானுக்கு ஒருபடியாயின்றியே மற்றப்படியாலுண்டாக இசையவேணும்; ஆதலால், இங்கில்லை யென்றது - அப்பாலேயுண்டு என்றவாறு. இப்போதில்லையென்று - மற்றொருபோது உண்டு என்றவாறு. குடமில்லையென்றது - மண்ணுருண்டையாதல், ஓடுகளாயாதல் இருந்த தென்றவாறு. இப்படியால் இன்மையாவது - மற்றொருபடியா லுண்மையாய்த் தோற்றிற்று. இப்படியால் ஈச்வரனில்லை யென்றானுக்கும் அவன் தன்னையும் அவனைச்வர்யங்களையும் ஒருபடியால் உள்வாகக் கொண்டு, அப்படியால்உண்மை இல்லையென்ற சொல்லாலே சொன்னானாகவேணும்; ஆதலால், உளனென்ற சொல்லால் அவனும் அவனைச்வர்யமும் ஸித்தித்தாற்போலே இலனென்ற சொல்லாலும் அவன்தன்னுடைய உண்மையும் அவனைச்வர்யத்தின் உண்மையும் ஸித்தமாய் வந்தது. இப்பொருள் - உளனலனெனில் அவனருவம் இவ்வருவுகள் என்றத்தால் சொல்லப்பட்டது. அவனருவமென்றது - அபாவமென்ற சொல்லாலே சொல்லப்பட்டதான உளதாயிருந்த அது என்றவாறு. இப்படியால் உண்மையும் இன்மையுமாகிறன உள்ள வஸ்துவுக்கே இரண்டு குணமாய் முடிந்தன. ஆதலால், ஈச்வரனுள னென்றுதல், இலனென்றுதல், இரண்டுபடியாலுமுளனும். இவ்வழியாலே வேத முண்டாயிற்று; அதிற் சொன்னபடியே அவன்தான் எங்கும் பரந்துளனானன். இப்பொருள் இப்பாட்டில் மேலிரண்டடியாலுஞ் சொல்லுகிறது. இப்பாட்டு ஆழ்வான் பொழிந்தபடி.

இ.—ஒன்பதாம்பாட்டு. ஒருபடியாலே ப்ரமாணப்ரமேயங்களைக்கொண்டு ஈச்வரஸ்வருபத்திலும் ஈச்வரவிசேஷணத்திலும் விப்ரதிபத்தி பண்ணினவர்களை நிராகரித்தது கீழ்; இப்பாட்டில் ப்ரமாண ப்ரமேயங்களிரண்டு மில்லை யென்ற சூந்யவாதியை நிராகரிக்கிறது: சூந்யவாதியை ஹேது சொல்லுவதுக்குமுன்பே ப்ரதிஜ்ஞாமாத்ரத்திலே ஸவிபூதிகனான ஸர்வேச்வரனுடைய உண்மையை ஸாதிக்கிறார்.

[உளனெனில்] - உளனென்று ப்ரதிஜ்ஞையாகில். [உளன்] - அஸ்தித்வ விசிஷ்டனாய்க்கொண்டு உளனும்; ஈச்வரன் உளனும்போது ஐச்வர்யத்தையொழிய உளனாகக்கூடாமையாலே விபூதியான ஜகத்தும் உண்டாம். [அவனுருவம் இவ்வுருவுகள்] - உண்டாமிடத்தில், ப்ரமாணம் காட்டுகிறபடியே சரீரமாய்க் கொண்டு உளவாம். 'இல்லாமையை ஸாதிக்கிற நான் அஸ்திசப்தத்தாலே ப்ரதிஜ்ஞைபண்ணுவனோ?' என்னில்,—'உளன்' என்கிற சப்தம் இல்லாமையைக் காட்டமாட்டாதோபாதி, 'இல்லை' என்கிற சப்தமும் நீ நினைக்கிற அத்யந்தாபாவத்தைக் காட்டமாட்டா தென்கை. [உளனலனெனில்] - நாஸ்திசப்தத்தாலே அவனுடைய இல்லாமையை ப்ரதிஜ்ஞை பண்ணில், லோகத்தில் நாஸ்தி சப்தார்த்தமே உனக்கும் அர்த்தமாகவேணும்; கடோ நாஸ்தி யென்றால், இங்கில்லை யென்னுதல், இப்போதில்லை யென்னுதல், ம்ருத்பிண்டமாய் உத்பத்த்யபாவத்தாலே இல்லையென்னுதல், கபாலாவஸ்த்தமா யில்லை யென்னுதல். இவற்றிலே ஒன்று நாஸ்தி சப்தார்த்தமாகக் கண்டோம்; ஆகையாலே, ஒருபடியாலே இல்லையானது ப்ரகாராந்தரத்தாலே உண்டாயிருக்கையால், ஈச்வரனும் நாஸ்தித்வ விசிஷ்டனாய்க்கொண்டு உளனும். [அவனருவம் இவ்வருவுகள்] - அவனுடைய விபூதியும் ஒருப்ரகாரத்தாலே இல்லையானவை ப்ரகாராந்தரத்தாலே உண்டாகையாலே அபாவவிசிஷ்டமாய்க் கொண்டு உளவாம். [உளனென இலனென இவைகுணமுடைமையில்] -

அஸ்தித்வ நாஸ்தித்வங்கள் உள்ள வஸ்துவுக்கு இரண்டுங் குணமாய் முடிகையாலே. [உளனிருதகைமையொடு] - ஈச்வரன் உளனென்றுதல், இலனென்றுதல், இரண்டுபடியாலு முளன். [ஒழிவிலன்பரந்தே] - இவ்வழியாலே விபூதியையும் வ்யாபித்துக் கொண்டே யொழிவிலன்.

௯.—ஒன்பதாம்பாட்டு—ஸர்வசூந்யவாதியை நிரஸிக்கிறார். நிரஸிக்கிறபடிதான் என்? என்னில்,—பாஷ்யத்திலே சூந்யவாதியை நிரஸித்த க்ரமத்திலே. இவ்வாழ்வார்தாம் அடியாக பாஷ்யகாரர்க்கு அவனை நிரஸிக்கலாம்; இவர்தாம் அவனை நிரஸிக்கைக்கு அடியென்? என்னில்;—அதுவும் இவ்வாழ்வார்தம்பக்கலிலே யுண்டு. புறம்பே சிலர் ப்ரஹ்மாதிகள் பக்கலிலே ஈச்வரத்வ ப்ரதிபத்தியைப் பண்ணி, ப்ரமாணங்களையும் அதுக்கீடாக நியமித்துக் கொண்டு வந்து தோற்ற, தாம் அங்கீகரித்தவனே ஸர்வஸ்மாத்பர னென்றும், ஜகத்து அவனுக்கு சரீரதயா சேஷமென்றும், தத்ப்ரதிபாதகப்ரமாணம் வேத மென்றும் தம்முடைய மதத்தை உபந்யஸித்துநின்றார் இறே; இவையித்தனையும் இல்லையென்னும்போது பூர்வபக்ஷமாக இவற்றை அங்கீகரித்து அநுபாஷித்துக் கழிக்கவேணுமிறே; அதில் இவற்றை அங்கீகரித்து அநுபாஷித்து அவனால் இல்லையென்னப் போகாது: முதலிலே சூன்யமென்னில் ஸர்வசூன்யவாதம் ஸித்தியாது. இனி உன்னைக்கேட்போம்; நீதான் ஈச்வரன் உளனென்கிற சொல்லாலே அவனில்லாமையை ஸாதிக்கப்பார்க்கிறாயோ? இல்லையென்கிற சொல்லாலே இல்லாமையை ஸாதிக்கப்பார்க்கிறாயோ? என்ன, இங்ஙன் விகல்பிக்கைக்குக் கருத்தென்? என்ன; உளனென்கிற சொல்லாலே சொன்னால், உனக்கு அபிமதமான அபாவம் ஸித்தியாதவோபாதி, இல்லையென்கிற சொல்லாலும் உனக்கு அநபிமதார்த்தமேகாண் ஸித்திப்பது: ஆனபின்பு, நீ இல்லையென்கிற சொற்கொண்டே அவனுண்மையை ஸாதிப்பன். லோகத்தில் பாவாபாவசப்தங்களுக்கு யாதொருபடி பொருள் கொள்ளுகிறோம், அப்படிகொள்ளில் நீ நினைக்கிற அர்த்தம் உன்னால் ஸாதிக்கப்போகாது; அங்ஙனேகொள்ளாயாகில் வாதந்தன்னில் உனக்கு அதிகாரமில்லை.

[உளனெனில்] - ஈச்வரஸத்பாவம் முதலிலே இல்லை யென்கிற நீ அவனுண்மைக்கு இசையாயிறே; நான் உளனென்கிறப்போலே சொல்லில்தானே உளன். [அவனுருவம் இவ்வுருவுகள்] - சசித்வ்யநிரபேக்ஷமாகவன்றிறே ஈச்வரன் உளனாவது; அவன் உளனாமிடத்தில் *யஸ்யாத்மா சரீரம்* யஸ்ய ப்ருதிவீ சரீரம்* என்கிறபடியே ஜகத்து அவனுக்கு சரீரதயா சேஷமாயுண்டாம். உளனலனென்பாயோ? அப்போது அபாவதர்மியாய்த் தோற்றும். [அவனருவம் இவ்வருவுகள்] - அப்போது நாஸ்திசப்தவாச்யமாய் அவஸ்தாந்தர பாக்காய்க்கொண்டு இவற்றின் உண்மை தோற்றும். 'கடோZஸ்தி' என்றால் வாயும் வயிறுமான ஆகாரந் தோற்றும்; 'கடோ நாஸ்தி' என்றால் நாஸ்தித்வதர்மவிசிஷ்டமாய்த் தோற்றும்; இங்கு இல்லை யென்றதாகில் வேறோரிடத்திலே யுண்டாம்; இப்போது இல்லையென்றதாகில், வேறொரு காலவிசேஷத்திலே யுண்டாம்; எங்கும் எப்போதும் ஒரு ப்ரகாரத்தாலும் கடமில்லையென்னக்கூடாமையால், நிருபாதிகநிஷேத மில்லையிறே. [உளனென இலனென இவைகுணமுடைமையில்] - உளனென்கிற இத்தையும் இலனென்கிற இத்தையும் இவையிரண்டையுங் குணமாகவுடையனாகையாலே. இவையிரண்டும் இரண்டு தர்ம மாயிற்று. [உளனிருதகைமையொடு] - உளனென்கிற சொல்லாலும் இலனென்கிற சொல்லாலுஞ் சொன்ன இரண்டு ஸ்வபாவத்தாலும் உளனானான். [ஒழிவிலன்பரந்தே] - நான் உளனென்கிற சொல்லாலே உண்மையை ஸாதித்தேன். நீ இலனென்கிற சொல்லாலே உண்மையை ஸாதித்தாய்; ஆக, இருவருமாக உண்மையை ஸாதித்தோம்; இனி அவன் உளனானால் உளனாமாபோலே, ஸவிபூதிகனாயே உளனாக அமையாதோ? என்கிறார்.

பரந்ததண்பரவையுள் நீர்தொறும்பரந்துளன்*
பரந்தவண்டமிதென நிலவிசும்பொழிவற*
கரந்தசிலிடந்தொறும் இடந்திகழ்பொருடொறும்*
கரந்தெங்கும்பரந்துளன் இவையுண்டகரனே* (10)

ஒ.—பத்தாம்பாட்டில், கீழ்ச்சொன்ன பகவத் வ்யாப்தியினுடைய ஸௌகர்யத்தை அருளிச் செய்கிறார்.

[பரந்த என்று தொடங்கி] - பரந்து குளிர்ந்திருந்த கடலில் ஜலபரமாணுதோறும் அஸங்குசிதமான அண்டாவகாசத்திற் போலே வ்யாபித்திருக்கும். [நிலவிசும்பு என்று தொடங்கி] - இப்படி எல்லா பூதங்களிலும் பௌதிகமான க்ஷுத்ரசரீரங்களிலும் தத்தந்தர்வர்த்திகளாய் ஸ்வயம்ப்ரகாசமாயுள்ள ஆத்மாக்கள்தோறும் அந்யைரத்ருஷ்டனுய்க்கொண்டு ஸமஸ்த வஸ்துக்களிலும் வ்யாபித்திருக்கும். இவற்றை யெல்லாவற்றையும் தன்திருவயிற்றிலே வைத்து ஸம்ஹரித்தவன்கிடீர் பரமாணுக்களிலும் வ்யாபித்துநிற்கிறு னென்று கருத்து.

இ.—பத்தாம்பாட்டில், கீழ்ச்சொன்ன பகவத்வ்யாப்தியினுடைய ஸௌகர்யத்தைச் சொல்லுகிறது.
[பரந்த தண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன் பரந்த அண்டமிதென] - பரந்து குளிர்ந்த கடலில் ஜலபரமாணுக்கள்தோறும், சதுர்த்தசபுவநாத்மகமான அண்டாவகாசத்திலே ஓர் ஏகாகி வர்த்திக்குமாபோலே அஸங்குசிதமாக வ்யாபித்திருக்கும். இதர பூதங்களிலும் வ்யாப்தி இப்படியே யென்கிறது. [நிலவிசும்பு] - முதலான பூமியையும், முடிவான ஆகாசத்தையுஞ் சொன்னபடி. இது அநுக்தமான பூதங்களுக்கும் உபலக்ஷணம். [ஒழிவற] - ஒன்றொழியாமே வ்யாபித்திருக்கும். பூதகார்யங்களில் அதிக்ஷுத்ரமான சரீர சரீரிகளிலு முண்டான வ்யாப்தி சொல்லுகிறது. [கரந்தசிலிடந்தொறும்] - அதிக்ஷுத்ர சரீரங்களிலும். [இடந்திகழ் பொருள்தொறும்] - ததந்தர்வர்த்திகளாய் ஸ்வயம்ப்ரகாசமான ஆத்மாக்கள்தோறும். [கரந்து] - அந்யைரத்ருஷ்டனுயிருக்கை. [எங்கும்பரந்துளன்] - இப்படி ஸமஸ்த வஸ்துக்களிலும் வ்யாபித்திருக்கும். [இவையுண்ட] - இவற்றை யெல்லாவற்றையும் தன்திருவயிற்றிலே வைத்து உபகரித்தவன். [கரன்] - இப்படி த்ருடப்ரமாண ஸித்தன். இப்படி எல்லாவற்றையும் தன் திருவயிற்றிலே வைத்து உபகரித்தவன்கிடீர், பரமாணுக்கள்தோறும் வ்யாபித்திருக்கிறு னென்று கருத்து.

ஈடு.—*பத்தாம்பாட்டு.—[பரந்த இத்யாதி.]* *ஜகத்தை சரீரதயா சேஷமாகவுடையனை எங்கும் வ்யாபித்து தாரகனாய் நியாமகனாய் சேஷியாயிருக்குமென்று கீழே சொன்னார்; இப்படி வ்யாபித்துநின்றால் அசித்ஸம்ஸர்க்கத்தாலே சேதநனுக்கு ஒரு ஸங்கோசம் பிறவாநின்றதிறே; அப்படியே அவனுக்கும் இவற்றோட்டை ஸம்ஸர்க்கத்தாலே ஸங்கோசம் பிறக்குமோ? என்னில்?—அது செய்யாது: அஸங்குசிதமாக வ்யாபித்துநிற்குமென்று வ்யாப்திஸௌகர்யத்தை அருளிச்செய்கிறார்.*

[பரந்ததண்பரவை இத்யாதி] - பரந்து குளிர்ந்திருந்துள்ள கடலில் ஜலபரமாணுக்கள் தோறும் வ்யாபித்திருக்கும். நீர்ச்செறிவாலே திரண்டுதோற்றுகிற வித்தனையிறே; பரமாணுஸங்காதமிறே. *ஜ்யாயாநந்தரிக்ஷாத்* *என்கிற வஸ்து, ஜலபரமாணுக்களிலே வ்யாபியாநின்றால் அல்பாவகாசமாய் நெருக்குப்பட்டிருக்குமோ? என்னில், [பரந்தவண்டமிதென] - அந்த ஜலபரமாணுக்கள்தான் பரந்த அண்டமிதெனவாயிற்று வ்யாபித்திருப்பது. ஓரண்டத்தைச் சமைத்து, அதிலே ஓரேகாகியை வைத்தாற்போலே யிருக்கும். இப்படி ஜலபரமாணுக்களிலே வ்யாபித்துவிடுமித்தனையோ வென்னில். [நிலவிசும்பொழிவற] - பூம்யந்தரிக்ஷங்களிலும் அப்படியே. இவைமூன்றும் அஞ்சுக்கும் உபலக்ஷணமாய், அஞ்சாலும் ஆரப்தமான அண்டத்தளவும் நினைத்து, மேல் கார்யமான பதார்த்தங்களில் வ்யாபித்திருக்கும்படி சொல்லுகிறது. [கரந்த சிலிடந்தொறும்] - இமையோடு இமை பொருந்தும்போதைக் காற்றிலே முடியும்படியான ஸூக்ஷ்மமான அல்பசரீரங்கள் தோறும். [இடந்திகழ்பொருள் தோறும்] - அவ்வவசரீரங்களிலே ஜ்ஞாநைகலக்ஷணமாய்க் கொண்டு மிளிருகிற ஆத்மாக்கள் தோறும். [கரந்து] - வ்யாப்யபதார்த்தங்களுக்குத் தெரியாதபடி அந்யைரத்ருஷ்டனாய்-[எங்கும் பரந்துளன்] - சேதநன் சரீரத்திலே வ்யாபிக்கும்போது அதில் ஏகதேசத்திலே நின்று ஜ்ஞாநத்தாலே எங்கும் வ்யாபிக்கக் கடவனாயிருக்கும்; இவன், அங்ஙனன்றிக்கே, ஸ்வரூபத்தாலே, எங்கும் வ்யாபித்திருக்கும். விபுத்வத்தை அவனுக்குச் சொல்லி, அணுத்வத்தை இவனுக்குச் சொல்லி, இதுக்குள்ளே அவன் குறைவற வ்யாபித்திருக்குமென்றால்,*

அதுகூடுமோ? என்னில்,—[இவையுண்டகரனே] - சிறுவடிவைக்கொண்டு பெரியவற்றை யெல்லாந் தன்வயிற்றிலே வைத்தால் "தயிருண்ட பொன்வயிறு இவ்வேழுலகுமுண்டு மிடமுடைத்தால்" என்கிறபடியே பின்னையும் அவ்வயிறே இடமுடைத்தாம்படி யிருக்கவல்ல ஸர்வசக்தி சிறியவற்றிலே குறைவற இருக்க மாட்டானோ? என்கிறார் [கரன்] - இப்படி ஸூத்ருடப்ரமாண ஸித்தன். இவையுண்ட கரன் - பரந்ததண்பரவையுள் நீர்தொறும் பரந்த வண்டமிதெனப் பரந்துளன். நிலவிசும் பொழிவறப் பரந்துளன்; கரந்தசிலிடந்தொறுமிடத் திகழ்பொருள்தொறுங் எங்குங்கரந்து பரந்துளன் என்று அந்வயம்.

கரவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை*
வரனவில்திறல்வலி அளிபொறையாய்நின்ற*
பரனடிமேல் குருகூர்ச்சடகோபன்சொல்*
நிரனிறையாயிரத்து இவைபத்தும்விடே* (11)

ஒ.—நிகமத்தில், ஸமஸ்தகல்யாண குணகரனுய், நிரவதிகக்ருபாம்போதியாய், தனக்கு ஸத்ருசமான திவ்யதேஹத்தையு முடையனுய், ஹேயப்ரத்யநீகத்வ கல்யாணைகதாநத்வங்களாலே சேதநாசேதநங்களிற்காட்டில் அத்யந்த விலக்ஷண ஜ்ஞாநாநந்த ஸ்வருபனுமாய், ஸ்வாதீநமான அசேஷ சிதசித்ஸ்வருபஸ்த்திதி சேஷ்டைகளையு முடையனுய், ஸமஸ்தஜகத்தையும் சரீரதயா சேஷமாக வுடையனுய், அப்ரதிபக்ஷமாம்படி வேதப்ரதிபாத்யனுய், வேதங்களில் பரராகச்சொல்லுகிற ருத்ராதிகளுக்கும் பரனுய், 'ப்ரமாணமு மில்லே. ப்ரமேயமு மில்லே' என்கிற சூந்யவாதிகளால் அவிசால்யமான தன்மையை யுடையனுய், பரமாணுக்கள் தோறும் புக்கு அணுதரனுய் வ்யாபிக்கவல்லனுய், ச்ரிய:பதியாய், நாராயணனுன ஸர்வேச்வரனே தத்ப்ரஸாத லப்தையான ஜ்ஞாநத்ருஷ்டியாலே ஸாக்ஷாத்கரித்து, ததநுபவஜநித ஹர்ஷப்ரகர்ஷத்தாலே தனக்குத்தானே பிறந்து இவனுடைய ஏவம்வித பரத்வ ப்ரதிபாதகமாய், சப்தச்சேர்த்தியையும் அர்த்தபௌஷ்கல்யத்தையு முடைத்தா யிருந்துள்ள இப்பத்தும் எம்பெருமான்திருவடிகளிலே பரிசர்யாருபமாகப் பிறந்தன என்கிறுர்.

[கரவிசும்பென்று தொடங்கி] - ஸஸ்வபாவமான பூதபஞ்சகங்களையும், ததுபலக்ஷிதமான கார்யவர்க்கநித்யவிபூத்யாதிகளையு முடையனுகையாலே ஸர்வஸ்மாத்பரனுன ஸர்வேச்வரன்திருவடிகளிலே. கரவிசும்பென்றுமிடத்துக்கு அல்லாத 'பூதங்களிற்காட்டில் அச்சதயா கரந்திருக்கை யென்றுஞ் சொல்லுவர்; திண்மை சொல்லிற்றுகவுமாம். நிரனிறை யென்கிற இடத்துக்கு - அர்த்தபௌஷ்கல்யமும் சப்த பௌஷ்கல்யமும். "பாதபத்தோZக்ஷரஸமஸ்தந்த்ரீலயஸமந்வித:" என்றுற்போலே சொல்லும் பொருளும் இசையுந் தாளமும் அந்தாதியும் அடைவே நிறுத்தப்படுகை யென்றுஞ் சொல்லுவர். பரனடிமேற்சொன்ன இவ்வாயிரத்து இப்பத்தும் மோக்ஷப்ரத மென்றுஞ் சொல்லுவர்கள்.

இ.—நிகமத்தில், இப்படி உபயவிபூதிநாதத்வமான பரத்வத்தை ப்ரதிபாதித்த இப்பத்தும் எம்பெருமான்திருவடிகளிலே பரிசர்யாருபமாகப் பிறந்தன என்கிறது.

[கரவிசும்பு] - த்ருடமான விசும்பு. ஸூக்ஷ்மமான ஆகாசம். [எரிவளிநீர்நிலம்] - இந்தப் பூதங்களைந்தும் நித்யவிபூதிக்கும் ஸ்வகார்யமான அண்டாதிகளுக்கும் உபலக்ஷணம். [இவைமிசை வரனவில் திறல்வலியளிபொறை] - இந்த பூதங்களின் ஸ்வபாவமான, [வரனவில்] - இவ்வாகாச குணமாய் வரிஷ்டமான சப்தம். [திறல்] - அக்நியினுடைய ஸ்வபாவமான தாஹகத்வசக்தி. [வலி] - வாயுவினுடைய ஸ்வபாவமான பலம். [அளி] - ஜலத்தினுடையசைத்யத்தாலே வந்த தண்ணளி. [பொறை] - பூமியினுடைய ஸ்வபாவமான க்ஷமை. [ஆய்நின்றபரன்] - இந்த உபயவிபூதியையும் சரீரவத்ப்ரகாரமாக வுடையனுகையாலே ஸர்வஸ்மாத்பரன் [அடிமேற்குருகூர்ச்சடகோபன்சொல்] - திருவடிகளிலே பரிசர்யாருபமாக அருளிச்செய்தது "வால்மீகிர் பகவாந் ருஷி:" என்னுமாபோலே தம்முடைய ஆப்தியைத் தாமே அருளிச்செய்கிருர். [நிரனிறை] - சப்தபௌஷ்கல்யமும் அர்த்தபௌஷ்கல்யமும். சொல்லும் பொருளும்

இசையுந் தாளமும் அந்தாதியும் அடைவே நிற்கப் பாடுகை யென்னவுமாம். [இப்பத்தும் பரனடிமேல் வீடு] - ஸர்வேச்வரன்திருவடிகளிலே ஸமர்ப்பிக்கப்பட்டது. [இப்பத்தும் வீடு] - மோக்ஷப்ரத மென்னவுமாம். 'இச்செய்யடைய நெல்' என்னுமாபோலே மோக்ஷமென்றது - மோக்ஷப்ரத மென்றபடி.

சுடு.— நிகமத்தில், முதற்பாட்டிலே கல்யாணகுண யோகத்தையும் நித்யவிபூதியோகத்தையும் விக்ரஹ வைலக்ஷண்யத்தையும் சொல்லி, இரண்டாம்பாட்டிலே இவற்றுக்கு ஆச்ரயமான திவ்யாத்ம ஸ்வரூபம் சேதநாசேதநவிலக்ஷணமென்றும், மூன்றாம்பாட்டிலே நித்யவிபூதியோபாதி ததீயத்வாகாரத்தாலே அவனுக்கு அந்தரங்கமாய்த் தோற்றுகிற லீலாவிபூதியோகத்தை அநுபவித்தார்; நாலாம்பாட்டிலே அந்த லீலாவிபூதியினுடைய ஸ்வரூபம் அவனதீநமென்றார்; அஞ்சாம்பாட்டிலே அதினுடைய ஸ்திதியும் அவனதீநை யென்றார்; ஆறாம்பாட்டிலே ப்ரவ்ருத்தி நிவ்ருத்தியும் பகவததீந மென்றார்: ஏழாம்பாட்டிலே சரீரசரீரிகளுக்கு உண்டான லக்ஷணம் ஜகத்துக்கும் ஈச்வரனுக்கும் உண்டாகையாலே இதுக்கும் அவனுக்குஞ் சொன்ன ஐக்யத்துக்கு நிபந்தநம் சரீராத்மபாவ மென்றார்; எட்டாம் பாட்டிலே குத்ருஷ்டிகளை நிரஸித்தார்; ஒன்பதாம்பாட்டிலே சூந்யவாதியை நிரஸித்தார்; பத்தாம் பாட்டிலே வ்யாப்தி ஸௌகர்யத்தை அருளிச்செய்தார்; இப்படிகளாலே அவனுடைய பரத்வத்தை நிஷ்கர்ஷித்தாராய் நின்றார் கீழ்: இத்திருவாய்மொழியில் அந்வயித்தவர்களுக்குத் தாம் பெற்ற பேறே பேறென்னுமிடத்தை அருளிச்செய்கிறார்.

[கரவிசும்பு] - கரமான விசும்பு: த்ருடமான விசும் பென்றபடி. அன்றியே, [கரவிசும்பு]- கரந்த விசும்பு; அச்சமான விசும்பென்னுதல். 'அத்ர க்ருத்த்ர: பததி' என்று நிரூபிக்கவேண்டும்படியாயிருக்குமிறே. [எரி] - தேஜஸ்தத்த்வம். [வளி] - காற்று. [நீர்] - ஜலம். [நிலம்] - பூமி. [இவை மிசை] - இவற்றின்மேலேயுண்டான. [வரன்] - வரனான; ச்ரேஷ்டமான. [நவில்] - வரிஷ்டமான சப்தம், அக்நியினுடைய தாஹகத்வசக்தி, காற்றினுடைய மிடுக்கு, ஜலத்தினுடைய தண்ணளி, பூமியினுடைய பொறை. இப்படி ஸ்வபாவமான பூத பஞ்சகங்களையும் சொல்லி, இத்தாலே லீலாவிபூதியைச் சொல்லிற்றாய், ரஜஸ்தமஸ்ஸுக்களைக் கழித்து, நிஷ்க்ருஷ்டஸத்த்வமேயா யிருக்குமிறே நித்யவிபூதி: அதுக்கும் இதுதானே உபலக்ஷணமாய், ஆக, உபயவிபூதி யுக்தனாயிருக்கிற ஸர்வஸ்மாத்பரன் திருவடிகளிலே. [இவைபத்தும் பரனடிமேல்வீடு] - அவன் திருவடிகளிலே விடப்பட்டன; ஸமர்ப்பிக்கப்பட்டன. [குருகூர்ச்சடகோபன்] - *வால்மீகிர் ப்பகவாந்ருஷி:* என்னுமாபோலே ஆப்திக்கு உடலாக அருளிச்செய்கிறார். நிரல்நிறை என்னுதல், நிரன்நிறை யென்னுதல்; நிரல்நிறை என்றபோது - சப்தங்களும் நிறைந்து, அர்த்தங்களும் புஷ்கலமாயிருக்கை. நிரன்நிறை என்றபோது-நேரே நிறுத்தப்படுகை. *ப்ரமாணஸ்த்ரிபி ரந்விதம்* *பாதபத்தோக்ஷரஸமஸ் தந்த்ரீலய ஸமந்வித :* என்கிறபடியே லக்ஷணங்களிற் குறையாமே, எழுத்தும் சொல்லும் பொருளும் அந்தாதியும் க்ரமத்திலே நிறுத்தப்படுகை. [ஆயிரம்] - *காவ்யம் ராமாயணம் க்ருதஸ்நமீத்ருசை: கரவாண்யஹம்* என்னுமாபோலே மயர்வறமதிநலமருளப்பெற்றவ ராகையாலே மேலுள்ளதடையத் தோன்றுநின்றது; வாச:க்ரமவர்த்தித்வாத் அடைவேசொல்லு மத்தனையாகையாலே 'ஆயிரம்' என்கிறது. அன்றிக்கே, ஆயிரமுஞ் சொல்லியல்லது நிற்கவொண்ணாத விஷயஸ்வபாவத்தாலே சொல்லுகிறாராதல். [இவை பத்தும் வீடே] - இவைபத்தும் பரனடிமேல் விடப்பட்டன வென்னுதல்; அன்றிக்கே, 'இச்செய்யடைய நெல்' என்றால் நெல்லைவிளைக்குமதென்று காட்டுமாபோலே, இவைபத்தும் வீடென்றது-வீட்டை விளைக்குமென்றபடியாய், மோக்ஷப்ரத மென்கிறாராதல். பகவத்ப்ரஸாதத்தாலே தமக்குப் பரத்வஜ்ஞாநம் பிறந்தபடியையும், அந்த ஜ்ஞாநத்துக்கு பலம் மோக்ஷமென்னுமிடத்தையும், இப்ப்ரபந்தத்தில் ஏதேனுமொருபடி அந்வய முடையார்க்குப் பலம் தம்முடைய பலமென்னு மிடத்தையும் அருளிச்செய்கிறார்.

ஆழ்வார் திருவடிகளே சரணம். எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

———

இரண்டாந்திருவாய்மொழி—வீடுமின் : ப்ரவேசம்.

—:—

ஒ.—இரண்டாந்திருவாய்மொழியில், இப்படி எம்பெருமானுடைய பரத்வத்தை அநுஸந்தித்த ஆழ்வார், அவ்வநுபவஜநித ஹர்ஷப்ரகர்ஷத்தாலே "போதயந்த : பரஸ்பரம்" என்னும் படியாலே சிலரோடே உசாவியல்லது தரிக்கமாட்டாத தசை வருகையாலும், அதுக்கிடானவரைக் காணாமையாலும், எல்லாரையும் நமக்குப் பாங்காம்படி திருத்தியாகிலும் அவர்களோடேகூட எம்பெருமானை அநுபவிக்க நினைத்து, அவர்களைத் திருத்தும் விரகு எங்ஙனே? என்று பார்த்தருளி, "சேதநராகிறார் - பொல்லாதது கண்டால் கைவிடவும், நல்லது கண்டால் கைக்கொள்ளவுங் கடவராயிருப்பர்; ஆனபின்பு, அவர்கள் பற்றின நிலத்தில் பொல்லாங்குகளைக் காட்டிக்கொடுத்தும், பகவத்குணங்களுடைய நன்மையைக் காட்டிக்கொடுத்தும் இவர்களைத் திருத்துவோம்' என்று இவர்கள் பற்றின நிலங்களினுடைய அஸ்த்திரத்வாதி தோஷங்களை உபதேசித்து, அகிலஹேய ப்ரத்யநீகனும் ஸமஸ்தகல்யாண குணாத்மகனும் ஸர்வைஸ்ஸ்ப்ருஹணீயனுமான எம்பெருமான் படியையும், இவனைப்பற்றுமிடத்திலுள்ள அந்தராயபரிஹாரபூர்வகமாக மற்றும் பஜநத்துக்கு வேண்டும் உறுப்புக்களெல்லாம் உபதேசித்தருளி, இப்படி அவனை பஜியுங்கோளென்று பக்தி யோகத்தை அருளிச்செய்கிறார்.

இ.—இரண்டாந்திருவாய்மொழியில், இப்படி எம்பெருமானுடைய பரத்வத்தை அநுபவித்தவர் அநுபவஜநிதஹர்ஷ ப்ரகர்ஷத்தாலே "போதயந்த : பரஸ்பரம்" பண்ணியல்லது தரிக்கமாட்டாத தசை வருகையாலும், "ஏக : ஸ்வாது நபுஞ்ஜீத" என்கிறபடியே தனியே அநுபவிக்கும் விஷயமல்லாமையாலும், இவர்தாம் தனியே அநுபவிக்க க்ஷமரல்லாமையாலும், துணைதேடி அதுக்கீடானவரை ஸம்ஸாரத்தில் காணாமையாலே 'எல்லாரையுந் திருத்தியாகிலும் அவர்களோடே அநுபவிப்போம்' என்று நினைத்து, 'திருத்தும் விரகு எங்ஙனே?' என்று பார்த்தருளி, 'சேதநராகிறார் - பொல்லாதது கண்டால கைவிடுகையும், நல்லது கண்டால் கைக்கொள்ளவுங் கடவர்களாயிருப்பர்கள்; ஆனபின்பு, ஸம்ஸாரத்தின் தன்மையைக் காட்டியும், பகவத்விஷயத்தின் நன்மையைக் காட்டியும், திருத்துவோம்' என்று பார்த்தருளி, இவர்களுக்கு ஸம்ஸாரத்தினுடைய அல்பாஸ்த்திரத்வாதி தோஷங்களையும், ஸர்வராலும் ஸ்ப்ருஹணீயனான எம்பெருமான் படியையும் உபதேசித்தருளி, அவனை பஜியுங்கோளென்று பக்தி யோகத்தை அருளிச்செய்கிறார்.

ஈடு.—வீடுமின்முற்றவும்—தத்த்வபரமாயும் உபாஸகபரமாயுமிறே மோக்ஷசாஸ்த்ரந்தானிருப்பது; அதில் தத்த்வபரமாகச் சொல்லவேண்டுவதெல்லாஞ் சொல்லிற்று, கீழில் திருவாய்மொழியிலே; உபாஸகபரமாகச் சொல்லவேண்டுமவற்றுக்கெல்லாம் ஸங்க்ரஹமாயிருக்கிறது, இத்திருவாய்மொழி. இத்திருவாய்மொழிதன்னை ஆளவந்தார் அருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் ப்ரபத்திவிஷயமாக்கி நிர்வஹித்துக்கொண்டு போந்து, எம்பெருமானாரும் அப்படியே அருளிச்செய்துகொண்டு போந்து, பாஷ்யம் தலைக்கட்டினபின்பு பக்திவிஷயமாக அருளிச்செய்துகொண்டு போருவர். பின்பு எம்பாரும் அப்படியே அருளிச்செய்தார். இவருடைய பக்தி ப்ரபத்திகள்தான் விகல்பிக்கலாயிறே யிருப்பது; "மயர்வறமதிநல மருளினன்" என்று இவர் தாம் பெற்றது பக்திரூபாபந்நஜ்ஞாநமாயிருந்தது, தாம் பெற்றதொன்றும், பிறர்க்கு உபதேசிப்பதொன்றுமாக வொண்ணாதே; அப்போது விப்ரலம்பககோடியிலேயாவரே. *உபயபரிகர்மிதஸ்வாந்தஸ்ய* என்கிறபடியே கர்ம ஜ்ஞாந ஸம்ஸ்க்ருதாந்த:கரணனுக்குப் பிறக்குமதிறே பரபக்தி; அந்த ஜ்ஞாநகர்மங்களினுடைய ஸ்தாநே பகவத்ப்ரஸாதமாய், அதடியாக அநந்தரம் விளைந்ததிறே இவருடைய பக்திதான். இதுதான வேதாந்தவிஹிதையான பக்திதானேயானாலோ? என்னில்; ஸர்வேச்வரன் அருள இவர் பெற்றாராகிற ஏற்றம் போம்; அபசூத்ராதிகரண ந்யாயமும் ப்ரஸங்கிக்கும்; ஆனபின்பு, தான் பெற்றத்தையே பிறர்க்கு உபதேசிக்கிறாராக அமையும். கீழில் திருவாய்மொழியிலே அவனுடைய பரத்வத்தை அநுபவித்து ஒரு பெரிய திருநாள்போலேயிறே போந்தது; இவர் இப்போது நெஞ்சொழிந்திருந்து பிறர்க்கு உபதேசிக்கிறபடி எங்ஙனே தான்? தாம் அநுபவித்த

விஷயத்தை எல்லேகண்டோ, அன்றிக்கே தாம் அவ்விஷயத்தில் விரக்தராயோ? என்னில்;—விஷயமோ என்ருல், "தனக்குந் தன்தன்மையறிவரியான்" என்கிறபடியே அபரிச்சிந்நவிஷயம்; கொள்ளமாளாவின்ப வெள்ளமிறே. இனித் தம் அபிநிவேசமோ என்ருல், "காதல் கடலின் மிகப்பெரிதால்" என்றும், "மண்திணிஞாலமுமேழ்கடலுநீள்விசும்புங்கழியப்பெரிதால்" என்றும், 'சூழ்ந்ததனிற்பெரிய வென்னவா" என்னும்படி பெருகியிருக்கது. ஆகிலும், ஒருகால் ஒன்றிலே அபிநிவேசம் பிறந்தால் அப்படிப்பட்ட விஷயந்தானே காலாந்தரத்திலே விரக்தி பிறக்கக் காணுநின்ருேம். அப்படியே சிலகாலம் அநுபவித்துப் பின்பு விரக்தி பிறந்ததோ வென்னில்;—அங்ஙனஞ் சொல்லவொண்ணுது;"எப்பொழுதும் நாள்திங்களாண்டூழியூழிதொறு மப்பொழுதைக்கப்பொழு தென்னாராவமுதம்" என்னும்படி நித்யாபூர்வமாயிருக்கும். இனி ஆசார்யபதம் நிர்வஹிக்கைக்காகவன்று; க்யாதி லாப பூஜைகளுக்காகவன்று; *ப்ரப்ரூயாத்* என்று ஒரு விதிபரதந்த்ரரா யன்று. ஆனல், இது பின்னை எத்தாலேயாவ தென்னில்;—ஸ்வாநுபவப்ரகர்ஷம் இருக்கிறபடி. தாம் அநுபவித்த விஷயம் தனியே அநுபவிக்குமதன்றிக்கே யிருந்தது; இனி நமக்கு போதயந்த: பரஸ்பரத்துக்கு ஆளாவாரரென்று ஸம்ஸாரிகள்பக்கலிலே கண்வைத்தார்; தாம் பகவத் விஷயத்திலே ப்ரவணராயிருக்கிறப்போலே அவர்கள் சப்தாதிவிஷயங்களிலே ப்ரவணராயிருந்தார்கள்; இவர்களநர்த்தம் பரிஹரித்தல்லது நிற்கவொண்ணுதா யிருந்தது: 'ஒருவனுக்கு வைஷ்ணவத்வமுண்டு, இல்லை என்னுமிடம் தனக்கே தெரியுங்காண்' என்று சீயர் பலகாலும் அருளிச்செய்வர்; பிறரநர்த்தங் கண்டால் ஐயோ! என்றிருந்தானகில் 'நமக்கு பகவத்ஸம்பந்தமுண்டு' என்றிருக்க அடுக்கும்; இத்தனையும் பட்டிடுவானுக்கென்றிருந்தானகில், 'நமக்கு பகவத்ஸம்பந்தமில்லை யென்றிருக்க அடுக்குமென்று. இவர்களை இவர் மீட்கப் பார்க்கிற வழிதானென்? என்னில், இவர்கள் சேதநராயிருந்தார்கள்; சப்தாதிவிஷயங்களில் வாசியறிந்து தியவை கழித்து, நல்லவை பற்றிப் போருகிறதோன் றுண்டாயிருந்தது; அவற்றினுடைய ஹேயதையையும், ஸர்வேச்வரனுடைய உபாதேயதையையும் இவர்களுக்கு அறிவித்தால் அவற்றைவிட்டு இவனைப் பற்ற வடுக்குமென்று பார்த்து, ஸர்வேச்வரனுடைய நன்மையையும், இவர்கள் பற்றின விஷயங்கள் அல்பாஸ்திரத்வாதி தோஷதுஷ்டங்களென்னுமிடத்தையும், பற்றுமிடத்தில் வரும் அந்தராய பரிஹாரத்தையும், பற்றுமிடத்தில் இன்று புதிதாகச் செய்யவேண்டுவதொன்றில்லை - பழைய ஸம்பந்தத்தை உணர அமையுமென்னுமிடத்தையும், பற்றுவார்க்கு அநுஸந்திக்கப்படும் மந்த்ர மின்னதென்னுமிடத்தையும், அவனுடைய பஜநீயதையையும் அருளிச்செய்யாநின்று கொண்டு, இதரவிஷய வைராக்யபூர்வகமாக பகவத்பக்தியைப் பண்ணி ஆச்ரயியுங்கோளென்று பரோபதேசப்ரவ்ருத்தராகிருர்.

வீடுமின்முற்றவும்* வீடுசெய்து* உம்முயிர்
வீடுடையானிடை* வீடுசெய்ம்மினே. (1)

ஓ.—முதற்பாட்டில், பகவத்வ்யதிரிக்தமான ஸர்வவிஷயங்களையும் அறவிட்டு, ஸர்வசேஷியான எம்பெருமான் திருவடிகளிலே ஆத்மாவை ஸமர்ப்பியுங்கோள் என்கிருர்.

[வீடுமின்] - பற்றிநின்ற நிலத்தினுடைய த்யாஜ்யதாதிசயம் தோற்றுகைக்காக முதலிலே விடுங்கோளென்கிருர். [முற்றவும்] - பண்டுபற்றின விஷயங்களில் சில ஹேயமும், சில உபாதேயங்களுமா யிருக்கிறனவல்ல; எல்லாம் த்யாஜ்யமே. 'வீடுசெய்து' என்று - அநுபாஷிக்கிறது - பற்றினவற்றை விடுகையே ப்ரயோஜநம் போந்திருக்கச்செய்தே அதுக்குமேலே ஒரு நன்மை உபதேசிக்கைக்காகவென்னுமிடந் தெரிகைக்கு. [உம்முயிர் என்று தொடங்கி] - உம் உயிரை விடுமிடத்தில் உறவில்லா நிலத்திலன்றிக்கே உடையவன் பக்கலிலேவிட இசையுங்கோள்.

இ.—முதற்பாட்டில், பகவத்வ்யதிரிக்தமான ஸர்வவிஷயங்களையும் விட்டு ஸர்வசேஷியான எம்பெருமான் திருவடிகளிலே ஆத்மாவை ஸமர்ப்பியுங்கோ ளென்கிருர்.

7

[வீடுமின்] - விடுமி னென்றபடி. இன்னத்தை விடுங்கோ ளென்னுதொழிவா னென்? என்னில்,— சிறுப்ரஜை ஸர்ப்பத்தைப் பிடித்துக்கொண்டிருந்தால், விட்டுக்கொள் ளென்று பின்னையிறே ஸர்ப்ப மென்பது. அதுபோலே விடுகிறவற்றினுடைய த்யாஜ்யதாதிசயந் தோற்றுகைக்காக முதலிலே விடுங்கோ ளென்கிறார். உபதேசம் அஷ்டகர்ணமாயிருக்க பஹுவசநத்தாலே சொல்லிற்று - சிலர் தாந்தராய் அர்த்திக்கச் சொல்லுகிறாரல்லாமையாலும், அநர்த்தம் ஸர்வஸாதாரண மாகையாலும், எல்லாரையுங் குறித்துச் சொல்லுகிறார். எத்தைவிடுவதென்னும் அபேக்ஷையிலே "முற்றவும்" என்கிறார்: "அஹம்ம மேதிசண்டால". சண்டாலர் குடியிருப்பை ப்ராஹ்மணனுக்கு ஆக்கும்போது சண்டாலஸ்பர்சமுள்ள பதார்த்தமடைய த்யாஜ்யமானாப்போலே, அஹங்காரகர்ப்பமாக ஸ்வீகரித்தவற்றில் த்யாஜ்யமல்லாதன வில்லை யென்கை. இனி, "உம்முயிர் வீடுடையானிடை" என்ன அமைந்திருக்க, "வீடுசெய்து" என்று அநுபாஷிக்கிறது - விடுகைதானே ப்ரயோஜநம் போந்திருக்கை. ராஜபுத்ரன் சிறையிலே கிடந்தால் முடிசூடுவதிலும் சிறைவிடுகைதானே ப்ரயோஜநமாயிருக்குமிறே. [உம்முயிர்வீடுடையானிடை] - உங்களாத்மாவையும் சரீரத்தையும் உடையவன் பக்கலிலே; உங்களாத்மாவைத் தனக்கு சரீரமாக வுடையவன்பக்கலிலே யென்னுதல். உங்களாத்மாவை விடுமிடத்தில் உடையவன்பக்கலிலே யென்னுதல்; மோக்ஷப்ரதன்பக்கலிலே யென்னுதல். [வீடு] - விடுகையை, ஸமர்ப்பிக்கையை. [இசைமினே] - இசையுங்கோள். அவன்நினைவு நித்யமாயிருக்க நீங்கள் இசையாமையாலேயிறே இழந்துபோந்தது; "யமோ வைவஸ்வதோ ராஜா யஸ்தவைஷ ஹ்ருதிஸ்த்தித: தேநசேதவிவாதஸ்தே மாகங்காம் மாகுருந்கம:"

ஈடு:—முதற்பாட்டு—இதரவிஷயங்களை விட்டு, உங்களுக்கு வகுத்தவிஷயத்தைப் பற்றப் பாருங்கோள் என்கிறார்.

[வீடுமின்] - "வீடும்ன்" என்று ஒரு சொல்லாய்க் கிடக்கவுமாம்; விடுமினென்றத்தை நீட்டி "வீடுமின், என்று கிடக்கிறதாகவுமாம். முதலிலே 'வீடுமின்' என்பானென்? என்னில்;— சிறுப்ரஜை கையிலே ஸர்ப்பத்தைப் பிடித்துக்கொண்டு கிடந்தால், போகட்டுக்கொடு நிற்கச் சொல்லி, பின்னை 'ஸர்ப்பம்' என்பாரைப்போலேயும், ஒருவன் க்ருஹத்துக்குள்ளே கிடந்து உறங்காநிற்க, நெருப்புப்பற்றிப் புறம்பே எரியாநின்றால் 'புறப்பட்டுக்கொள்கிடாய்' என்று பின்பு 'நெருப்பு' என்பாரைப்போலேயும், முந்துற விடுங்கோ ளென்கிறார். ஐம்மரணங்களுக்கு நடுவேயிறே இவைதான் நோவுபடுகிறது. *த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச* என்றும் *பரித்யக்தா மயாலங்கா* என்றும் விடுகை முன்னாகவிறே முன்பு பற்றினவர்களும் பற்றிற்று. "வீடுமின்" என்கிற பன்மையாற் சொல்லுகிறதென்? என்னில்; ஒருவன் தாந்தனாய் வந்துநிற்க அவனுக்கு உபதேசிக்கிறா ரன்றே; ஸம்ஸாரவெக்காயம் எல்லார்க்கு மொத்திருக்கையாலே ஒருவரல்லா தொருவருக்காகிலும் ருசி பிறக்குமோ? என்று எல்லார்க்கும் உபதேசிக்கிறார். எத்தை விடுவ தெனனில்,—[முற்றவும்] - சண்டாலரிருப்பிடத்தை ப்ராஹ்மணர்க்காக்கும்போது சிலகூட்டி சிலகழித்தன்றே கொள்ளுவது; அப்படியே அஹங்கார மமகாரங்களாலே தூஷிதமான வற்றிலே சிலகூட்டிக்கொள்ளவொண்ணாதே; ஆகையாலே கட்டடங்க விடுங்கோளென்கிறார். [வீடுசெய்து] - "வீடுமின்முற்றவும்" என்றாராகில் திரிய "வீடுசெய்து" என்கிற இதுக்குக் கருத்தென்? என்னில்;—மேலொருபேறு பெறுவதிலும் இவற்றைவிட்டு நிற்கும் நிலைதானே பேறாகப் போருகையாலே விடுகையாகிற பேற்றைப் பெற்று என்கிறபடி; ராஜபுத்ரன் அழுக் சிறையிலே கிடந்தால், முடிசூடி ராஜ்யம் பண்ணுவதிலும் சிறைவிடுகைதானே ப்ரயோஜநமா யிருக்குமிறே. [உம்முயிர்வீடுடையானிடை] - இதுக்குப் பலபடியாக அருளிச்செய்வர்: *யஸ்யாத்மாசரீரம், யஸ்ய ப்ருதிவீ சரீரம்* என்கிறபடியே, உம் உயிரையும் அதினுடைய வீட்டை யும் உடையவ னென்னுதல்; உம்முயிரை வீடாகவுடையவ னென்னுதல்; உம்முயிரை விடுமிடத்தில் - ஸமர்ப்பிக்குமிடத்தில், உடையான்பக்கலிலே யென்னுதல; [வீடுடையான்] - பரமபதமுடையான்பக்கலிலே யென்னுதல். [உம் உயிர்] - அநித்யமான சரீரத்துக்கு நன்மை பார்க்கச் சொல்லுகிறேனோ? நித்யமான ஆத்மவஸ்துவுக்கன்றோ நான் நன்மைபார்க்கச் சொல்லுகிறது: அதுதானும் என்னுயிர்க்கோ? உம்முயிர்க்கன்றோ? [உடையானிடை] பொதுவிலே யுடையவ னென்கிறார்; ருசிபிறந்து 'அவன் ஆர்?' என்றால், "வண்புகழ்நாரணன்" என்பாராக. அவன் உடையவனாய் உங்கள் ஸத்தையை நோக்கிக்கொண்டு போராநிற்க,

நீங்களும் 'நான் என்னது என்று அகலப்பாராதே உங்களை அவன்பக்கலிலே ஸமர்ப்பிக்கப் பாருங்கோள். அவன் உடையவனான பின்பு அவனோடு அவிவாதமே உங்களுக்கு வேண்டுவது; (யம:) - ப்ராதேசிகமான நியமநத்தையுடையவனையன்று சொல்லுகிறது, *ப்ரபவதி ஸம்ய மநே மமாபி விஷ்ணு:* என்று அவன் தன்னையும் நியமிக்குமவனாயிற்று, இவன். (வைவஸ்வத:)— விவஸ்வானுடைய குலத்திலே பிறந்தவனென்னுதல், ஆதித்யாந்த ரஸ்த்திதனென்னுதல். (ராஜா) - அவனைப்போலே 'தஹபச' என்கையன்றிக்கே எல்லார்க்கும் இனியனாயிருக்குமவனா யிற்று, இவன். (ய:) அந்தர்யாமிப்ராஹ்மணாதிகளில் ப்ரஸித்தி. (தவைஷ ஹ்ருதி ஸ்த்தித:) - அவன் எங்குற்றானென்ன; கண்டிலையோ? உன்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்து 'ஆட்சியில் தொடர்ச்சி நன்று' என்றிருக்கிறான். ஆனால், செய்யவேண்டுவதென்? என்னில், (தேநசேத விவாதஸ்தே) - உடையவனாயிருக்கிறவனோடே உனக்கு அவிவாத முண்டாகில். இத்தால் பேறென் என்பாயோ? (மாகங்காம் மாகுரூந் கம:) - ஒருதீர்த்தந்தேடிப்போதல், புண்யக்ஷேத்ரந் தேடிப்போதல் செய்யவேண்டா; அஹங்காரமமகாரங்கள் கிடக்க ப்ராயச்சித்தம்பண்ணுகை யாவது - க்ஷித்தத்ரவ்யத்தை உள்ளே வைத்து மெழுகூட்டினவோபாதியிறே. உடைய வனுக்கும் உடைமைக்குந் தக்கபடியிறே ப்ராயச்சித்தமும்; உடையவன் - ஸர்வேச்வரன். த்ரவ்யங்களில் ப்ரதாநமான ஆத்மத்ரவ்யத்தையிறே அபஹரித்தது. அபஹரித்த த்ரவ்யத் தைப் போகட்டு ப்ராயச்சித்தம்பண்ணவேணுமே. போகடுகிற த்ரவ்யம் தானாகையாலே ப்ராயச்சித்தம்பண்ணுகைக்கு வேறு அதிகாரியு மில்லையே. ஆகையாலே, நீங்களும் உடை யவன் பக்கலிலே விடுசெய்ம்மினே. வீடு - ஸமர்ப்பிக்கை. அதாகிறது - இசைகை.

மின்னின் நிலையில* மன்னுயிராக்கைகள்*
என்னுமிடத்து* இறையுன்னுமின் நீரே. (2)

ஒ.— இரண்டாம்பாட்டில், நெடுங்காலம் பழகின விஷயங்களை விடவொண்ணுமோ? என்னில் அஸ்திரத்வாதி தோஷங்களை அநுஸந்திக்கவே விடுகை எளிது என்கிறார்.

[மின்னின்நிலையில] - மின்னுக்குள்ள நிலையு மில்லை யென்கிறது; அஸ்திரமாயிருந்தே ஸ்திரங் கள்போலே சிலநாள் செல்லுகிலுஞ் செல்லு மென்றவாறு. [மன்னுயிராக்கைகள்] - ஆத்மாதான் தனக்கு உபாதேயமாகக் கொண்டு விடே னென்று பற்றிக்கிடக்கிற தேஹங்கள். 'உயிர்' என்கிற ஏகவசநத்துக்கும் 'ஆக்கைகள்' என்கிற பஹுவசநத்துக்கும் கருத்து - ஓராத்மாவே கர்மாநு குணமாக அநேக தேஹங்களிலே நலிவுபடு மென்று தோற்றுகைக்காக. [என்னுமிடத்து என்று தொடங்கி] - என்னும் இஸ்தலத்தில். தோஷப்பரப்பெல்லாம் அநுஸந்திக்கவேண்டுவதில்லை; தோஷத்தினுடைய ஏகதேசாநுஸந்தாநத்தாலே விஷயங்களில் வைராக்யம் பிறக்கும். [நீரே] - தோஷாநுஸந்தாநத்துக்கு ப்ரமாணபேக்ஷையில்லை, உங்களுக்கே அநுஸந்திக்கலாம்.

இ.—இரண்டாம்பாட்டில், நெடுங்காலம் பழகின விஷயங்களை விடவொண்ணுமோ? என்னில்,— அஸ்த்திரத்வாதி தோஷங்களை அநுஸந்திக்கவே விடலா மென்கிறார்.

[மின்னின்நிலையில] - மின்னுக்குள்ள நிலையு மில்லை; "ஸம்பதஸ் ஸ்வப்நஸங்காசா: யௌவநம் குஸுமோபமம், தடிச்சஞ்சலமாயுச்ச கஸ்ய ஸ்யாஜ்ஜாநதோ த்ருதி:." அது தோற்றி நசிக்கும், இது கர்ப்பத்திலே நசிக்கும்; தோற்றினபோதே மாயக்கடவதா யிருப்பதொரு வ்யவஸ்தை உண்டு அதுக்கு; இது சிலநாளிருக்கிலும் இருக்கும். அஸ்திரமென்று ஹிதத்தில் ப்ரவர்த்திக்க வொட்டாது; ஸ்திரமென்று விச்வஸிக்கப்பண்ணி நசிக்கும். [மன்னுயிராக்கைகள்] - உயிர் மன்னி விடேனென்று பற்றிக்கிடக்கிற சரீரங்கள்; நித்யனான ஆத்மாவினுடைய சரீரங்களென்னவுமாம். 'உயிர்' என்கிற ஏகவசநத்துக்கும், 'ஆக்கைகள்' என்கிற பஹுவசநத்துக்கும் கருத்து - ஓராத்மாவே கர்மாநு குணமாக அநேக சரீரங்களிலே நலிவுபட்டுப்போருகிறானென்று தோற்றுகைக்காக; "மகிழலகொன்றே போல்", "வாஸாம்ஸி ஜீர்ணாநி". அன்றிக்கே, ஜாத்யேக வசநமாகவுமாம். [என்னுமிடத்து] - என்னும் ஸ்தலத்தில்; என்னும் இவ்வர்த்தத்திலே யென்னவுமாம்; ஆனபின்பு என்னவுமாம். [இறையுன்னுமின்]

இதினுடைய தோஷம் எல்லாமறிய வேண்டா: ஏகதேசாநுஸந்தாநத்தாலே விரக்தி பிறக்கும். [நீரே] - தோஷாநுஸந்தாநத்துக்கு சாஸ்த்ரம் வேண்டா; தோஷம் ப்ரத்யக்ஷமாகையாலே உங்களுக்கே தெரியும்.

ஈடு.—இரண்டாம்பாட்டு—பகவத்வ்யதிரிக்த விஷயங்களை விட்டு ஸர்வேச்வரனான எம்பெருமான்பக்கலிலே ஆத்மஸமர்ப்பணம் பண்ணப் பாருங்கோளென்றார் முதற்பாட்டில்; 'பகவத்வ்யதிரிக்த விஷயங்களை விடச் சொல்லாநின்றீர்; அநாதிகாலம் வாஸனை பண்ணிப் போந்தவற்றை இப்போதாக விடப்போமோ?' என்ன,—அவற்றினுடைய தோஷதர்சநம் பண்ணவே விடலாமென்கிறார், இதில்.

[மின்னின் நிலையில] - மின்னுடைய நிலையுடைத்தல்ல. அல்பமாய் அஸ்திரமாயிருக்குமிறே அது: இதுவும் அஸ்திரமாயிருக்கச்செய்தேயும் ஸ்திரபுத்தியைப் பிறப்பித்து அநர்த்தத்தோடே தலைக்கட்டுவித்துவிடும். சந்தநப்ராந்தியாலே நாற்றம் குளிர்த்தி மென்மைகளைக்கொண்டு ஸர்ப்பத்தின்மேலே கையை வைத்துக்கொண்டு கிடந்து உறங்காநின்றால், ஒருதார்மிகன் 'இது ஸர்ப்பங்காண்' என்று அறிவித்தால் பின்னை அதினின்றுங் கைவாங்கியல்லது நிற்கவொண்ணாதிறே: அப்படியே இதர விஷயங்களிலே போக்யதாபுத்தி பண்ணிப்போருகிற இவனுக்கு 'இது அல்பம், அஸ்திரம்' என்று இதினுடைய தோஷதர்சநத்தைப் பண்ணுவிக்கவே விடலாயிருக்குமிறே. (மன்னுயிராக்கைகள்) - உயிர் மன்னுகிற ஆக்கைகளென்னுதல், நித்யமான ஆத்மவஸ்து பரிக்ரஹிக்கிற தேஹங்களென்னுதல். திறந்துகிடந்த வாசல்கள்தோறும் நுழைந்துதிரியும் பதார்த்தம்போலேயிறே இவன் திரிவது; மகிழலகொன்றேபோல் மாறும் பல்யாக்கையிறே; ஒரலகுதானே காணிஸ்தாநத்திலே நிற்பது கோடிஸ்தாநத்திலே நிற்பதாமிறே: அப்படியே ஓராத்மாதானே கர்மபேதத்தாலே தேவாதி தேஹபேதங்களைப் பரிக்ரஹிக்குமிறே. அன்றியே, 'உயிர்' என்கிற ஏகவசநம் ஜீவாநந்த்யத்துக்கு உபலக்ஷணமாய், ஆத்மாக்கள் பரிக்ரஹிக்கிற சரீரங்களென்னவுமாம். [என்னுமிடத்து] பகவத்குணங்களைப் பரிச்சேதிக்கிலும் பரிச்சேதிக்கப் போகாதாயிற்று தோஷப்பரப்பு; இவ்விடையாட்டத்து என்றபடி. [இறையுன்னுமின்] - இதிலே அல்பத்தை ஆராயுங்கோள் [நீரே] - இதுதனக்கு ஒரு ப்ரமாணாபேக்ஷையுமில்லை; ஸதாசார்யோபதேசமும் வேண்டா.

நீர்நுமதென்றிவை* வேர்முதல்மாய்த்து* இறை
சேர்மினுயிர்க்கு* அதன் நேர்நிறையில்லே. (3)

ஒ.—மூன்றாம்பாட்டில், த்யாஜ்யத்தைச் சுருங்க உபதேசிக்கிறார்.

[நீர்நுமதென்று] - அநர்த்தகரமான அஹங்கார மமகாரங்களைச் சொல்லுகிறது. [இவை வேர்முதல் மாய்த்து] - அஹங்கார மமகாரங்கள்தான் செல்லாநின்றனவேயாகிலும், ஆசார்யஸேவாப்ராசுர்யத்தாலும், சாஸ்த்ராப்யாஸத்தின் மிகுதியாலுமாக இவை அபுருஷார்த்தமென்று அத்யவஸிக்கை - இவற்றினுடைய வேர்முதல் மாய்க்கையாவது. ஸவாஸநமாக இவற்றை விட்டு எம்பெருமானை ஆச்ரயிக்கை துஷ்கரமாகையால் இதுவே பொருளாகை உசிதம். [இறை என்று தொடங்கி] - ஸர்வேச்வரனை ஆச்ரயியுங்கோள்: ஆத்மாவுக்கு அத்தோடொக்கும் சீரியது இல்லை. சீரியதாவது - ஹிதமும், ப்ரியமும்.

இ.—மூன்றாம்பாட்டில், அநாதிகாலம் பற்றிப்போந்த விஷயங்களை விடும்போது பற்றின காலமெல்லாம் வேண்டாவோ தனித்தனியே விடுகைக்கு? என்னில்,—அது வேண்டா, எளிதாக விடலாமென்று த்யாஜ்யத்தை இரண்டாகாரத்தாலே சுருங்க உபதேசிக்கிறார்.

[நீர் நுமது] - அநர்த்தகரமான அஹங்காரமமகாரங்களை. நான், என்னது; என்னும் அர்த்தத்தைப் பிறர்க்கு உபதேசிக்கப்புக்கால் 'நீங்கள்' என்றும், 'உங்களது' என்றுமிறே சொல்லுவது. அதாகிறது - அநாத்மந்யாத்மபுத்தியும், அஸ்வே ஸ்வத்வபுத்தியும். 'நான், என்னது' என்னில் நாவேமிறே - "அநாத்

மங்யாத்மபுத்திர்யா அஸ்வேஸ்வமிதி யாமதி:, அவித்யாதரு ஸம்பூதி பீஜமேதத் த்விதாஸ்திதம்'' என்று ஸம்ஸார பீஜத்தையும், ''அச்யுதாஹந் தவாஸ்மீதி ஸைவ ஸம்ஸாரபேஷஜம்'' என்று பரிஹாரத்தையும் சொல்லிற்றிறே. [இவை வேர்முதல் மாய்த்து] - இவற்றை ஸவாஸநமாகப் போக்கி இது ''அக்நி நா ஸிஞ்சேத்'' போலே துஷ்கரம்; இவை நேராக விடும்போது பகவத்விஷயத்தைப்பற்றி விடவேணும்; அவனைப் பற்றும்போது இவற்றை விட்டல்லது பற்றவொண்ணாது: ஆகையாலே, இதரேதராச்ரயக்ரஸ்தம். ஆனால், இதுக்குப் பொருளென்? என்னில்,—ஆசார்யஸேவையாலும் சாஸ்த்ராப்யாஸத்தாலும் இவை அபுருஷார்த்தமென்று அத்யவஸிக்கை. இரண்டுவ்ருக்ஷம் சேர நின்றால் ஒன்றிலே குட்டமிட்டுப் பெருங் காயத்தை வைத்தால் மற்றையது நிற்க இது க்ரமந்தாலே உலர்ந்துபோமாபோலே இந்தஜ்ஞாநம் பிறந்தால் இவை ஸ்வகார்யம் செய்யமாட்டாது; ''பீஜாங்யக்ந்யுபதக்தாநி'' '' இத்யாதி. ரக்ஷகன் அவஸர ப்ரதீக்ஷனா யிருக்க இவன்பக்கலிலே விலக்காமை யுண்டானால் விரோதி போகைக்குத் தட்டில்லை யென்கை. [இறைசேர்மின்] - ஸர்வேச்வரனை ஆச்ரயிபுங்கோள். கெடுமரக்கலம் கரைசேர்ந்தாற்போலேயிறே ஸம்ஸாரிக்கு பகவத்ஸமாச்ரயணம் [உயிர்க்கு அதன் நேர்நிறையில்லை] - ஆத்மாவுக்கு அந்தோடொத்த சீரியதுஇல்லை. ப்ரதமத்தில் ஹிதமாய் உதர்க்கத்தில் ப்ரியமாயிருக்கும். நேர் - ஒப்பு- நிறை - மிகுதி. ஒத்ததும் மிக்கது மில்லை யென்னவுமாம். ''ஸம்ஸாரார்ணவ மக்நாநாம்''.

ஈடு.—மூன்றும்பாட்டு. தோஷதர்சகம்பண்ணவே விடலாமென்றீர்; காலம் அநாதி; மேல் அநந்தமாயிராநின்றது; பற்றின காலமெல்லாம் வேணுமிறே விடுகைக்கும்—என்ன, த்யாஜ்யாம்சத்தைச் சுருங்க அருளிச்செய்கிறார்; ஸம்ஸாரபீஜம் இன்னதென்றும், அதுக்கு பேஷஜம் இன்னதென்றும் அருளிச்செய்கிறார்.

[நீர் நுமது] - அநர்த்தகரமான அஹங்கார மமகாரங்கள். நான் என்னது என்னு மத்தைப் பிறர்க்கு உபதேசிக்கும்போது ''நீர் நுமது'' என்றிறே சொல்லுவது: நான் என்னது என்று தம்வாக்காலே சொல்லமாட்டாரே, நாக்கு வேமென்று. 'என்னுடைமை' என்பது, வேணுமாகில் தவிருகிறான், 'நான்' என்னுமது தவிரும்படி என்? என்னில்,— இவன் அஹமென்றால் ராவணாதிகள் நான் என்றாற்போலே பிறருடைய நானைத் தவிர்த்துக் கொண்டிறே யிருப்பது: தேஹத்தில் அஹம்புத்தி பண்ணிப்போருமது தவிரவேணுமே! [இவை வேர்முதல்மாய்த்து] - இவை வேர்முதல் மாய்க்கையாவதென்? என்னில்;— இது அபுருஷார்த்தமென்னும் ப்ரதிபத்தியைச் சொன்னபடி. இரண்டு வ்ருக்ஷம் தன்னிலே சேர நின்றால், ஒன்றிலே தொளைத்துப் பெருங்காயத்தை வைக்கச் சிலநாள் ஒன்றுபோலே நின்று, பின்னை பட்டுப்போகாநின்றதிறே: அப்படியே அஹங்கார மமகாரங்கள் த்யாஜ்யமென்னும் ப்ரதிபத்தி யுண்டாகத் தன்னடையே ஸம்ஸாரம் அடியற்று நிற்கும். *அநாத்மங்யாத்மபுத் திர்யா அஸ்வே ஸ்வமிதி யா மதி: - அவித்யாதருஸம்பூதிபீஜமேதத் த்விதா ஸ்த்திதம்* என்று ஸம்ஸாரபீஜமும் சொல்லி,:*அச்யுதாஹந் தவாஸ்மீதி ஸைவ ஸம்ஸாரபேஷஜம்* என்று பரிஹாரமும் சொல்லிற்றிறே; ரக்ஷகனானவன் அவஸரப்ரதீக்ஷகனாயிருக்க, இவன்பக்கலிலே விலக்காமை யுண்டானால் விரோதி போகைக்குத் தட்டில்லை யென்கை. [இறைசேர்மின்] அப்ராப்த விஷயங்களை விட்டு வகுத்த சேஷியானவனைப் பற்றப் பாருங்கோள். ''சேர்மின்'' என்கிறார் காணும், கெடுமரக்கலம் கரைசேர்ந்தாற்போலே யிருக்கையாலே ஸம்ஸாரிக்கு பகவத்ஸமாச் ரயணம். [உயிர்க்கதனேர்நிறையில்லை] இத்தோடொத்த சீரியதில்லையென்னுதல்; நேரென்று ஒப்பாய், நிறையென்று மிகுதியாய், உயிர்க்கு இத்தோடொத்ததும் மிக்கதுமில்லையென்று மாம். ப்ரதமத்தில் *(ஔஷதம்போலே ஸம்ஸாரிகளுக்கு பகவத்ஸம்பந்தம்) ஹிதமுமாய், உதர்க்கத்தில் ப்ரியமுமாயிருக்கும். நித்யமாய் ஜ்ஞாநாநந்தலக்ஷணமான வஸ்துவுக்கு இத் தோடொக்குஞ் சீரியதில்லை; *ஸம்ஸாரார்ணவமக்நாநாம்* இத்யாதி. *விஷ்ணுபோதம்*—இக் கரையும் அக்கரையும் ஒன்றாய்நின்று அவ்வருகு கடத்தும் ஓடம்.

இல்லதுமுள்ளதும்* அல்லதவனுரு*
எல்லையிலந்நலம்,* புல்குபற்றற்றே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், பற்றப்படுகிற விஷயத்தின் நன்மை சொல்லுகிறார்.

[இல்லதென்று தொடங்கி] - ஏகரூபமல்லாமையாலே இல்லை யென்னலாம்படி இருக்கிற அசேதநத்தின் தன்மையும், ஏகரூபமாகையாலே உண்டென்னலாம்படியிருக்கிற சேதநர்படியு மன்றிக்கே யிருக்கும் அவன்ஸ்வரூபம்; அவன ஸ்வரூபந்தா னிருக்கும்படி எங்ஙனே? என்னில்,—[எல்லையில் என்று தொடங்கி] - அஸங்க்யேய கல்யாண குணங்களை யுடைத்தாயிருக்கும், புறம்புள்ள ஸங்கத்தை விட்டு அவனை ஆச்ரயி. 'புல்கு' என்கையாலே, ஆச்ரயணம் இனிதென்று கருத்து.

இ.—நாலாம்பாட்டில், பற்றுகிற விஷயத்தின் நன்மை சொல்லுகிறார்.

[இல்லது முள்ளது மல்ல தவனுரு] - நச்வரமான அசேதநத்தின் ஸ்வபாவமும், ஏகரூபனான சேதநன்படியு மன்றிக்கே யிருக்கும் அவன்ஸ்வரூபம், இல்லதென்று - துச்சத்வ மித்யாத்வங்களைச் சொல்லுகிறதன்று: நச்வரதையைச் சொல்லுகிறது. உள்ளதென்று - அஸ்தித்வமாத்ரத்தைச் சொல்லுகிறதன்று: நித்யதையைச் சொல்லுகிறது [எல்லையிலந்நலம்] - அவன் ஸ்வரூப மிருக்கும்படிதா னென்? என்னில், - அஸங்க்யேய கல்யாண குணங்களையுடைத்தாயிருக்கும். எல்லையில்லாத அந்நலத்தை யுடைத்தென்னுதல்' எல்லையில்லாத அந்நல மென்னுதல். [புல்கு] - ஆச்ரயி. அபிமத விஷயத்தை அணைத்தாற்போலே ஆச்ரயணந்தான் இனிதா யிருக்கையாலே 'புல்கு' என்கிறார். [பற்றற்றே] - ப்ரக்ருதிப்ராக்ருதங்களில் ஸங்கத்தை விட்டு.

ஈடு.—நாலாம்பாட்டு. விடுகிறவைபோலே அபோக்யமுமாய், ஸதோஷமுமாயிராதென்று பற்றப்படுகிற விஷயத்தினுடைய போக்யதையை அருளிச்செய்கிறார்.

[இல்லதும்] - ப்ரமாணயோக்ய மல்லாமையால் வரும் துச்சத்வத்தைப் பற்றவாதல் ப்ரதீதிமாத்ரமாய் பாதயோக்யமான மித்யாத்வத்தைப்பற்றவாதல் "இல்லது" என்கிறதன்று; விநாசித்வத்தைப்பற்றச் சொல்லுகிறது. [உள்ளதும்] - இல்லாதான வஸ்துவில் வ்யாவ்ருத்தியைப் பற்ற "உள்ளது" என்கிறது; *யதஸ்தி யந்நாஸ்தி* என்றும், *ஸத்யஞ் சாந்ருதஞ்ச* என்றுஞ் சொல்லக்கடவதிறே சிதசித்துக்களை. அன்றியே, ஆத்மாவுக்கு இருப்பிடமான சரீரத்தின்படியும் அத்தை இருப்பிடமாக வுடைய ஆத்மாவின்படியு மல்லவென்றுமாம். [அல்லது அவனுரு] - நச்வரமா யிருக்கிற அசித்தின்படியுமன்று, அசித் ஸம்ஸர்க்கத்தாலே *அஹம் ஸுகீ, அஹம் து:கீ* என்கிற சேதநன்படியுமன்று, அவன் ஸ்வரூபம். ஆனால், எங்ஙனேயிருக்கும்? என்னில், —[எல்லையிலந்நலம்] - *ஆநந்தமய:* என்றும், "உணர்முழுநலம்" என்றும், "ஒடியாவின்பப்பெருமையோன்" என்றும், "சுடர் ஞானவின்பம்" என்றும், *ஸமஸ்த கல்யாண குணாத்மகோZஸௌ* என்றுஞ் சொல்லலாம்படி யிருக்கும். [புல்கு] - அங்காபரிஷ்வங்கம்போலே போகரூபமா யிருக்குமிறே, குணஜ்ஞாநமுடையவனுக்கு குணாநுவிஷயாநுபவம். [பற்றற்றே] - அதுசெய்யுமிடத்தில் இருகரையனாகையன்றிக்கே, புறம்புள்ள பற்று அற்றே புல்கு. பற்றிலார் பற்றநின்றானிறே அவன்; ஆகையாலே, பற்றற்றே புல்கவேணும்.

அற்றதுபற்றெனில்,* உற்றதுவீடுயிர்*
செற்றதுமன்னுறில்* அற்றிறைபற்றே. (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், பகவத் ஸமாச்ரயணத்துக்கு அந்தராய பரிஹாரத்தை அருளிச் செய்கிறார்.

[அற்றது என்று தொடங்கி] - ப்ராக்ருதவிஷய ஸங்கம் அறுங்காட்டில் ஆத்மா மோக்ஷத்தை, உற்றது - கையுற்றது. [செற்றது என்று தொடங்கி] - அந்தப் புருஷார்த்தத்தைத் தவிர்த்து நிரதிசய புருஷார்த்தமான பகவத் கைங்கர்யத்தைப் பெற்று நிலைநிற்க வேண்டியிருந்தாயாகில் ஆச்ரயிக்கும் போது உன்னை எம்பெருமானுக்கே சேஷமாக அத்யவஸித்து ஸ்வாமியானவனை ஆச்ரயிப்பது.

இ.—அஞ்சாம்பாட்டில், பகவத் ஸமாச்ரயணத்துக்கு அந்தராயபரிஹாரஞ் சொல்லுகிறது.

[அற்றதுபற்றெனில்] - பற்று அற்றதென்னில்; இதர விஷயங்களில் பற்றற்றமாத்ரத்திலே ஆத்மா மோக்ஷத்தை, உற்றது - கையுற்றது. அநித்யமாய் ஜடமான அசித்ஸம்ஸர்க்கம் அற்றவாறே நித்யமாய் ஜ்ஞாநாநந்த லக்ஷணமான ஆத்மா தன்பக்கலிலே கால்தாழப்பண்ணும்; நிச்சிதம். [செற்றது] - அத்தை ஜயித்து, அத்தை முகம்சிதறப் புடைத்து. [மன்னுறில்] - நிரதிசயமான பகவத் கைங்கர்யத்தைப் பெற்று நிலைநிற்க வேண்டியிருந்தாயாகில். [அற்றிறைபற்றே] - இதர விஷயங்களில் தொற்றற்று ஸர்வேச்வரனைப் பற்று என்னுதல்; ஆச்ரயிக்கும் போதே உன்னை பகவச்சேஷமாக அத்யவஸித்து ஸ்வாமியானவனை ஆச்ரயி யென்னவுமாம். அன்றிக்கே, விபக்தியை மாறுடி, இறையைப்பற்றி அத்தை அறுங்கோ ளென்னவுமாம்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. பற்றுமிடத்தில் வரும் அந்தராய பரிஹாரத்தையும் அருளிச் செய்கிறார்: இந்த்ரபதத்தைக் கோலுமவன் இவ்வருகுண்டான ஐச்வர்யத்தைக் கோலான்; ப்ரஹ்மபதத்தை ஆசைப்படுமவன் இவ்வருகுண்டான இந்த்ரபதத்திற் கண்வையான்; ஆத்மாநுபவத்தை ஆசைப்படுமவன் ஐச்வர்யாதிகளிற் கண்வையான்; ஸமஸ்தகல்யாண குணாத்மகனாய் நித்யமங்கள விக்ரஹ யுக்தனாயிருக்குமவனைப் பற்றுமவன் இவையித்தனை யிலுங் கண்வையான்: ஆக, இங்ஙன்வரும் அந்தராயபரிஹாரத்தை அருளிச்செய்கிறார்.

[அற்றதுபற்றெனில்] - ப்ரக்ருதி ப்ராக்ருதங்களிலுண்டான பற்று அற்றதென்னு மளவிலே, [உற்றது வீடுஉயிர்] ஆத்மா மோக்ஷத்தை ப்ராபித்தது. விலக்ஷணஜ்ஞாநத்தையும் ஸ்வரூபத்தையு முடைய வஸ்துவுக்குத் திரோதாநத்தைப் பண்ணுகிறது அசித்ஸம் ஸர்க்கமிறே: யோகாப்யாஸத்தாலே கழிந்தவாறே ஸ்வரூபம் ப்ரகாசிக்கும்; அது நித்யமாய் ஜ்ஞாநாநந்த லக்ஷணமா யிருக்கையாலே 'இதுதன்னையே அநுபவிக்க அமையாதோ?' என்று தன்பக்கலிலே கால்தாழப் பண்ணும். [செற்றது] அத்தைச்செற்று: அத்தை முகம்சிதறப் புடைத்து. [மன்னுறில்] மன்னவுறில். தன்னைப்பற்றினால், 'இன்னமும் அதுக்கு அவ்வருகே ஒரு அநுபவ முண்டு' என்று இருக்கவேண்டாதபடியான நிலைநின்ற புருஷார்த்தத்தைப் பற்றப் பார்க்கில். [அற்றிறை பற்றே] ஆச்ரயண காலத்திலே அவனுக் கென்று அத்யவஸித்து, சேஷியான அவனைப் பற்றப்பாருங்கோள். அன்றியே, விபக்தியை மாறுடி, இறையைப்பற்றி இத்தை யறப்பா ரென்னுதல். "மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர்தோள்கைவிட்டு" என்னுமாபோலே.

பற்றிலனீசனும்* முற்றவும்நின்றனன்*
பற்றிலையாய்* அவன்முற்றிலடங்கே. (6)

ஒ.—ஆறும்பாட்டில், விலக்ஷணரான நித்யாச்ரிதரையுடைய ஈச்வரன் அவிலக்ஷணராய் இன்று வந்த அபூர்விகர்களை அங்கீகரிக்குமோ? என்னில்;—

நித்யாச்ரிதர்பக்கல் அவன் ஸங்கத்தைத் தவிர்ந்து இன்று ஆச்ரயித்தவர்களையே தாரகாதி களாகக் கொண்டிருப்பானொருவன். ஆனபின்பு, நீயும் அப்படியே புறம்புள்ள ஸங்கத்தை யற்று அவனையே தாரகபோஷகாதிகளெல்லாமாகக் கொண்டு பற்று. நிரபேக்ஷனான ஈச்வரன் க்ஷுத்ரரான நம்மை அங்கீகரிக்குமோ? என்னில், — அங்ஙனேயிருந்தானேயாகிலும் ஸங்கஸ்வபாவனாய் ஆச்ரித ரெல்லார்பக்கலிலும் ஒக்க ஸங்கித்திருக்கும்; நீயும் ஸங்கஸ்வபாவனாய், அவனுடைய ஸர்வசேஷ வ்ருத்தியிலும் அதிகாரி யென்றுமாம்.

இ- ஆறும்பாட்டில், நாம் புறம்புள்ளவற்றை விட்டு அவனைப் பற்றினால் அவன் ஸர்வேச்வர
னன்றோ? நமக்கு முகந்தருமோ? என்னில்;—ஈச்வரத்வம் வந்தேறி யென்னும்படி ஸங்கஸ்வபாவன்கா
ணென்கிறார்.

[பற்றிலன்] - பற்று உண்டு - ஸங்கம், அத்தை வாஸஸ்தாநமாக வுடையவன். [பற்றிலன்] -
பற்றிலான்; பற்றிலேயுள்ளா னென்னவுமாம்; ஸங்கஸ்வபாவ னென்றபடி [ஈசனும்] - ஈச்வரனும்.
ஈச்வரத்வத்தைத் தவிர்க்கவொண்ணாமையாலே கிடக்குமத்தனை; இஸ்ஸங்கம் குணமாகைக்காகக் கிடக்
கிறது; பயப்படுகைக்கு உடலன்று; "ப்ரஸாத பரமௌநாதௌ". [முற்றவும் நின்றனன்] - "ஸமோZஹம்
ஸர்வபூதேஷு" என்கிறபடியே ஆச்ரயணீயத்வே ஸர்வஸமாநனாயிருக்கை. [பற்றிலையாய்] - நீயும்
அவன்பக்கலிலே ஸங்கஸ்வபாவனாய். [அவன் முற்றிலடங்கே] - அவனுடைய எல்லாமுற்றிலும் அடங்கு;
எல்லா சேஷவ்ருத்தியிலும் அந்வயி. அதவா, நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனானவன் நித்யஸம்ஸாரி
களான நம்மை அங்கீகரிக்குமோ? என்னில்,- இன்று ஆச்ரயித்தநாம் ஒருதலையானால் நித்யாச்ரிதர்பக்கல்
ஸங்கத்தைவிட்டு நம்மையே தாரகாதிகளாக நினைத்திருப்பானொருவ னென்கிறது. [ஈசனும்பற்றிலன்] -
நித்யாச்ரிதரையுடையனாயிருந்தானேயாகிலும் இன்று ஆச்ரயித்த நாம் ஒருதலையானால், அவர்கள்பக்கல்
ஸங்கத்தை யுடையனல்லன், "த்வயி கிஞ்சித் ஸமாபந்நே" இத்யாதி. [முற்றவும் நின்றனன்] நாமே தனக்கு
தாரகாதிகளெல்லாமாக நினைத்திருக்கும். [பற்றிலையாய்] - நீயும் புறம்புள்ள ஸங்கத்தைத் தவிர்த்து;
நாசகரமான நித்யஸம்ஸாரத்தில் ஸங்கத்தைவிட்டு என்கிறது; அவன் தனக்கு நித்யபோக்யமான நித்ய
விபூதியில் ஸங்கத்தையன்றோ விடுகிறது. [அவன் முற்றிலடங்கே] - அவனாகிற எல்லாவற்றிலும் அடங்கு;
அவனே தாரகாதிகளும் ஸர்வவிதபந்துவும் எல்லாமாகப் பற்று; "மாதாபிதாப்ராதா", "வாஸுதேவஸ்
ஸர்வம்", "உண்ணுஞ்சோறு பருகுநீர்", "சேலேய்கண்ணியர்", "ஏகைகபலலாபாய". இது பட்டர்
நிர்வாஹம்.

ஈடு.—ஆறும்பாட்டு. பற்றுமிடத்தில் வரும் அந்தராய பரிஹாரஞ் சொன்னார் கீழ்; நீர்
பரிஹாரஞ் சொல்லுகைக்கு அவாப்த ஸமஸ்தகாமனாய் சேஷியா யிருக்கிற அவன்தான்
நமக்குக் கைப்புகுர்நாரோ? என்ன, அவன்பக்கல் திருத்தவேண்டுவதொன்றில்லை, அவன்
ஸங்கஸ்வபாவ னென்கிறார்.

[பற்றிலன்] பற்று உண்டு ஸங்கம். அத்தை வாஸஸ்தாநமாகவுடையவன், பற்றிலா
னென்னுமத்தை 'பற்றிலன்' என்று குறைத்துக்கிடக்கிறது. 'இன்னான் இங்கு உண்டோ?'
என்றால், 'இங்கில்லை அவன், அகத்திலான்' என்னக்கடவதிறே. [ஈசனும்] ஈச்வரத்வம்
கழற்ற வொண்ணாமையாலே கிடக்குமித்தனை. இஸ்ஸங்கம் குணமாகைக்காகக் கிடக்
கிறது: பயப்படுகைக்கு உடலன்று, பெரியவ னெளிமையிறே குணமாவது; *ப்ரஸாத
பரமௌ நாதௌ*— தண்ணளியே இவர்களுக்கு விஞ்சியிருப்பது; மேன்மை கழற்றவொண்
ணாமையாலே கிடந்தவித்தனை. இரண்டும் அவ்வாச்ரயகதமா யிருக்க, தண்ணளியேயுள்ள
தென் றதிந்தபடியென்? என்னில், — *மம கேஹமுபாகதௌ* சேஷிகளாயிருப்பார்க்கு
சேஷபூதரை அழைத்துக் கார்யங்கொள்ளலா யிருக்க, நெடுந்தெருவே போகிறவர்கள் நான்
இருந்த முடுக்குத்தெருத் தேடி வந்தபோதே ப்ரஸாதமே விஞ்சியிருக்குமென்னு மிடம்
தெரிந்ததில்லையோ? *தந்யோZஹம்* - என்று மோக்க ஸஞ்சரிக்கிற வழியிலே நிதியெடுப்
பாரைப் போலே. *அர்ச்சயிஷ்யாமி* - என்னுடைய ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியிலே
அந்வயித்து அழிந்துக்கெடுத்து ஜீவிக்கப் பாராகின்றேன். *இத்யாஹ* - குட்டுகன்மாலை
கள் தூயனவேந்திற்பார் சொல்லக்கடவ பாசுரத்தை இவன் சொல்லுவதே! என்று ருஷி
கொண்டாடுகிறான். *மால்யோபஜீவந:* - பூவில்கண்வைத்துத் தொடுகல் சாபலம் பிறக்கு
மென்று கண்ணை மாறவைத்துத் தொடுத்து, பூவிற்று ஜீவிக்குமத்தனைபுல்லியன் சொல்லும்
வார்த்தையே ஈது! என்கிறான். [முற்றவும நின்றனன] *ஸமோZஹம ஸர்வபூதேஷு* என்கிற
படியே ஆச்ரயணீயத்வே ஸமனாயநின்றான். இத்தலையிருந்தபடி யிருக்கத் தான் எல்லாருக்கு
மொத்திருக்கை. [பற்றிலையாய்]-நீயும் பற்றிலையாய்-நீயும் பற்றை யுடையையாய்; ஸங்கத்தை
யுடையையாய். [அவன் முற்றிலடங்கே] *அஹம் ஸர்வம் கரிஷ்யாமி* என்கிறபடியே அவனு

டைய எல்லாக் கைங்கர்யத்திலும் அந்வயி. அதவா, பட்டர் அருளிச்செய்யும்படி - [பற்றிலனீசனும்] - *வாஸுதேவோऽஸி பூர்ண:* என்கிறபடியே ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய் ஜ்ஞாநாநந்தாமலஸ்வரூபனாய்த் திரைமாறின கடல்போலே ஈசிதவ்யரான நித்யஸூரிகளையுடையனாய்ப் பரமபதத்திலே எழுந்தருளியிருக்கிறவனும் அவர்கள் பக்கல் பற்றுடையவனல்லன். அவர்கள் பக்கல் பற்றுடையவனன்றிக்கே யிருந்தால் குறைபட்டிரானோ? என்னில், [முற்றவும் நின்றனன்] அவர்களெல்லாராலும் வரும் ஏற்றமும் இன்று ஆச்ரயிக்கிற இவனாலேயாம்படி நின்றான்; *த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம* என்னுமாபோலே இன்று ஆச்ரயித்ததொரு திர்யக்குக்கு ஒரு வாட்டம் வரில் நித்யாச்ரிதையான பிராட்டியாலும் கார்யமில்லை; அன்று ஈன்ற கன்றின்பக்கல் வாத்ஸல்யத்தாலே முன்னணைக்கன்றையும் கொம்பிலே கொள்ளுமாபோலே. [பற்றிலையாய்] விடவொண்ணாதாரை நீ ஒருதலையாக விட்டான் அவன்; அவன் ஒரு தலையானால் விடலாமவற்றை விடத் தட்டென் உனக்கு? [அவன் முற்றிலடங்கே] அவனையே எல்லாமாகப் பற்றப்பார்; *வாஸுதேவஸ் ஸர்வம்* என்கிறபடியே, *மாதா பிதா ப்ராதா நிவாஸச் சரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண:*, *ஏகைகபலலாபாய ஸர்வலாபாய கேசவ:*.

அடங்கெழில்சம்பத்து * அடங்கக்கண்டு * ஈசன்
அடங்கெழிலஃதென்று * அடங்குகவுள்ளே. (7)

ஒ.—ஏழாம்பாட்டில், ஸங்கஸ்வபாவனேயாகிலும் அபரிச்சேத்யோபயவிதமஹாவிபூதியாயிருக்கையாலே நம்போல்வாருக்குக் கொள்ளவொண்ணாது; ஆனபின்பு, ஆச்ரயிக்கக்கூடாதென்னில்:- எம்பெருமானோடு உள்ள ஸம்பந்தத்தை அநுஸந்திக்கவே தன் சிறுமையால் வெருவாதே தரித்து ஆச்ரயிக்கலாமென்கிறார்.

[அடங்கெழில் என்று தொடங்கி] - அடங்க எழிலான ஸம்பத்து எல்லாவற்றையும் கண்டு. [ஈசனென்று தொடங்கி] - அந்த விலக்ஷணமான ஸம்பத்தெல்லாம் என்ஸ்வாமியது என்று அநுஸந்தித்து. தானும் அவன் விபூத்யந்தர்ப்பூதனாக அநுஸந்திப்பது.

இ.—ஏழாம்பாட்டில், ஸங்கஸ்வபாவனேயாகிலும் அபரிச்சேத்யோபயமஹாவிபூதிகனாயிருக்கையாலே நம்மால் முகங்கொள்ளவொண்ணுமோ? என்னில்,—அவனோடு உள்ள ஸம்பந்தத்தை உணரவே கிட்டலாமென்கிறது.

[அடங்கெழில் சம்பத்தடங்கக்கண்டு] - அடங்க எழிலான ஸம்பத்தை ஒன்றொழியாமே கண்டு. புறம்பு ஓராச்ரயத்திற் காணாத இஸ்ஸம்பத்தை ஓரிடத்தே சேரக் கண்டு. அவன் விபூதியாகில் கட்டடங்க உபாதேயமாயிறே யிருப்பது; முக்தனுக்கும் ததீயத்வாகாரேண லீலாவிபூதி அநுபாவ்யமாயிறே யிருப்பது. [ஈசனடங்கெழிலஃதென்று] - என்நாயகனுடைய ஐச்வர்யம் ஈதென்று அநுஸந்தித்து. [அடங்குக உள்ளே]- அந்தஸம்பந்தஜ்ஞாநமடியாகத் தானும் அவன்விபூதியிலே ஒருவனென்று அந்வயிக்கலாம்; ஸமுத்ரம் அபரிச்சிந்நமானாலும் அதிலுள்ள ஸத்த்வங்களுக்கு வேண்டினபடி புகலாமிறே; அதுபோலே ஸம்பந்தஜ்ஞாநமுண்டாகவே கிட்டலாம். ஸம்பந்தஜ்ஞாநமில்லாத த்ருணத்தையிறே கடல் கரையிலே ஏறத்தள்ளுவது. ஸம்பந்தஜ்ஞாநத்தைப் பிறப்பிக்கையிறே கடகக்ருத்யம். இங்கே பட்டர் பிதாபுத்ரர்களிருவரும் படவோடின கதையை அருளிச்செய்வர்.

ஈடு.—ஏழாம்பாட்டு. ஸங்கஸ்வபாவனென்றார் கீழ்; அவன் ஸங்கஸ்பாவனானாலும் அபரிச்சிந்நோபயவித மஹாவிபூதியையுடையனாயிருந்தான் அவன்; இவன் அதிக்ஷுத்ரனாய் க்ஷுத்ரோபகரணனாயிருந்தான்; ஆனபின்பு, அவனை இவனாலே கிட்டலாயிருந்ததோ? கடலிலே புக்க துரும்பானது இரண்டுதலையிலும் நிலைநின்றிக்கேயிருக்கத் திரைமேல்திரையாகத் தள்ளுண்டுபோந்து கரையிலே சேருகிறதில்லையோ? அப்படியே அவனுடைய ஐச்வர்ய தரங்கமானது இவனைத் தள்ளாதோ? என்னில்;—இந்த ஐச்வர்யமெல்லாம நமக்கு வகுத்த

சேஷியானவனுடைய ஐச்வர்யமென்று அநுஸந்திக்கவே, தானும் அதுவாய் அந்வயிக்கலாமிறே: ஆனபின்பு, ஸம்பந்தஜ்ஞானமே வேண்டுவது என்கிறார். ஒரு வ்யாபாரி, ஸ்த்ரீ கர்ப்பிணியான ஸமயத்திலே அர்த்தார்ஜநம் பண்ணவேணுமென்று போவது, அவளும் பிள்ளைபெற்று, அவனும் பக்வனாய்த் தனக்கும் தமப்பனுடைய வ்யாபாரமே யாத்ரையாய், அவனும் போய் இருவரும் சரக்குப்பிடித்துக்கொண்டு வந்து ஒருபந்தலிலே தங்குவது; அது இருவருக்கும் இடம் போராமையாலே அம்பறுத்தெய்யவேண்டும்படி விவாதம்ப்ரஸ்துதமான ஸமயத்திலே, இருவரையும் அறிவானொருவன் வந்து 'இவன் உன் பிதா, நீ அவன்புத்ரன்' என்று அறிவித்தால், கழிந்த நாளைக்குச் சோகித்து, இருவர் சரக்கும் ஒன்றாய், அவன் ரக்ஷகனாய், இவன் ரக்ஷ்யமாய் அந்வயித்துவிடுமிறே; *ஸமானம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே* ஜீவாத்மாவும் பரமாத்மாவும் தேஹமாகிற வ்ருக்ஷத்தைப் பற்றியிருந்தால், ஒருவன் கர்மபலங்களை புஜியாநிற்கும்; ஒருவன் புஜிப்பித்து விளங்காநிற்கும். அவன் நியாமகன், நாம் நியாம்யமென்னும் முறையறியவே பொருந்தலாமிறே. ராஜபுத்ரன் ஒரு உத்யாநத்தைக் கண்டு புக அஞ்சினால், 'உன் தமப்பனதுகாண்' என்னவே நினைத்தபடி புக்குப் பரிமாறலாமிறே; ஆனபின்பு, ததீயமென்னும் ப்ரதிபத்தியே வேண்டுவது; தானும் அதுக்குள்ளே ஒருவனாய் அந்வயிக்கலாமென்கிறார்.

[அடங்கெழில்சம்பத்து அடங்கக் கண்டு] போகபூமியாயிருக்கும் நித்யவிபூதி, கர்மநிபந்தநமாக அவனாலே நியாம்யமாயிருக்கும் இவ்விபூதி: அதில் ததீயமென்று அநுஸந்திக்கப்புக்கவாறே கர்மநிபந்தநமான ஆகாரம் தோற்றாதே ததீயத்வாகாரமேயிறே தோற்றுவது. [அடங்கெழில் இத்யாதி] கட்டடங்க நன்றான ஸம்பத்தையெல்லாங் கண்டு, நமக்கு வகுத்த ஸ்வாமியானவனுடைய ஸம்பத்து இதெல்லாமென்று அநுஸந்தித்து, அவ்விபூதிக்குள்ளே தானும் ஒருவனாய் அந்வயிக்கப் பார்ப்பது; அப்போது சேஷிக்கு அதிசயத்தை விளைத்தானாகலாமிறே: சேஷபூதனுடைய ஸ்வரூபஸித்தி, சேஷிபக்கல் கிஞ்சித்காரத்தாலேயாயிருக்குமே. [அடங்குகவுள்ளே].ஸ்வஸ்வாமிபாவஸம்பந்தஜ்ஞாநமடியாகத் தானும் அவன் விபூதியிலே ஒருவனாய் அந்வயிக்கலாமிறே; ஸமுத்ரம் அபரிச்சிந்நமானாலும் அதினுள்ளில் ஸத்த்வங்களுக்கு வேண்டினபடி புகலாமிறே; அதுபோலே ஸம்பந்த ஜ்ஞானமடியாகக் கிட்டலாம்; ஸம்பந்தஜ்ஞாநமில்லாத த்ருணத்தையிறே கடல் கரையிலேயேறத் தள்ளுவது. ஸம்பந்தஜ்ஞாநம் பிறப்பிக்கையிறே கடகக்ருத்யம்.

உள்ளமுரைசெயல்* உள்ளவிம்மூன்றையும்*
உள்ளிக்கெடுத்து* இறையுள்ளிலொடுங்கே. (8)

ஒ.—எட்டாம்பாட்டில், பஜநப்ரகாரத்தைச் சொல்லுகிறார்.

[உள்ளம் என்று தொடங்கி] - மநோவாக்காயங்கள் தேடவேண்டாதே ஸம்பந்நமாய் விதேயமான மூன்றையும் என்ன ப்ரயோஜநங்கொள்ளுகைக்கு இவையுண்டாக்கிற்று? என்று ஆராய்ந்து அவற்றுக்கு உண்டான அப்ராப்தமான பாஹ்யவிஷய ப்ராவண்யத்தைத் தவிர்த்து அவன்பக்கலிலே நிவேசியென்கிறார்.

இ. –எட்டாம்பாட்டில், பஜநப்ரகாரம் சொல்லுகிறது.

[உள்ளமுரைசெயல்] - மநோவாக்காயங்கள். உரை செயலென்று - ததாச்ரயமான கரணங்களை நினைக்கிறது. [உள்ள] - இன்று தேடவேண்டாதே ஸம்பந்நமாயிருக்கை. [இம்மூன்றையும்] – ஸந்நிஹிதங்களும் விதேயங்களுமான இம்மூன்றையும். இவற்றுக்கு அவ்வருகே ஒன்று தேடவேண்டா: இவையே அமையும். [உள்ளி] - இன்னப்ரயோஜநங் கொள்ளுகைக்கு இவற்றை யுண்டாக்கிற்று என்று ஆராய்ந்து "ஈச்வராய நிவேதிதும்" என்று நிரூபித்தால் பகவத்விஷயத்திலே ஸமர்ப்பிக்கைக்காகவாயிருக்குமிறே [கெடுத்து] - அவற்றுக்கு உண்டான பாஹ்யவிஷய ப்ராவண்யத்தைத் தவிர்த்து. [இறையுள்ளிலொடுங்கே] - வகுத்தவிஷயத்திலே இவற்றையுங் கொண்டு புக்கு அடிமைசெய்யப் பார்,

அன்றிக்கே, ஒடுக்கென்று மெல்லொற்றை வல்லொற்றாக்கி அவன் திருவடிகளிலே ஸமர்ப்பி யென்றுமாம். இப்பாட்டில் பஜிக்கைக்குப் புறம்பொரு உபகரணம் ஸம்பாதிக்கவேண்டா; முன்னமே யுண்டானவற்றின் வ்யபிசாரத்தைத் தவிர்த்து வகுத்தவிஷயத்திலே ஸமர்ப்பியுங்கோ ளென்கிறார்.

ஈடு.—எட்டாம்பாட்டு அவனுக்கு விபூதியாய் அந்வயித்தால் பின்னை தானும் தனக்கென்ன சில கரணங்களும் என்று உண்டாய் பஜித்தானுகை அரிதாயிருந்ததே! என்ன, பஜநப்ரகாரத்தை அருளிச்செய்கிறார்.

[உள்ளம் உரை செயல்] பாஹ்யவிஷயங்களிலே ப்ரவணமாகிற மநஸ்ஸை ப்ரத்யக்காக்கினவாறே பகவதநுஸந்தாநத்துக்கு உடலாமே; அவ்வநுஸந்தாநம் வழிந்து "பொங்கேழ்புகழ்கள் வாயவாய்" என்கிறபடியே சொல்லாய்ப் புறப்படுகைக்கு உடலாமிறே வாக்கு; *குணைர் தாஸ்யமுபாகத:* என்கிறபடியே திருவடிகளிலே விழுந்து ஸகல கைங்கர்யங்களும் பண்ணுகைக்கு உடலாயிருக்குமிறே உடம்பு. [உள்ள இம்மூன்றையும்] இவைதான் இன்றாக ஸம்பாதிக்கவேண்டாதே சேஷியான தான் இவற்றை யுண்டாக்கிவைத்தானே; இவையும் வேறே சிலவும் தேடவேண்டாவே; இங்கே "தாமுளரே" "நாவாயிலுண்டே" இத்யாதிகளை யோஜித்துக்கொள்வது. உள்ள இம்மூன்றையும் உள்ளுவது: 'இவைதான் எதுக்காகக் கண்டது? இவைதான் இப்போது இருக்கிறபடியென்?' என்று ஆராய்ந்து பார்த்தால் அப்ராப்தவிஷயங்களிலே ப்ரவணமாயிருக்கும். [கெடுத்து] கெடுப்பது—அவற்றினின்றும் மீட்பது. [இறையுள்ளிலொடுங்கே] பாழிலே மேட்டிலே பாய்கிற நீரைப் பள்ளத்திலே பயிரிலே பாய்ச்சுவாரைப் போலே ப்ராப்தவிஷயத்திலே யாக்கப் பார்ப்பது. ஒடுங்கென்னுதல், ஒடுக்கென்னுதல்; மெல்லினமான ஙகரத்தை வல்லோற்றாக்கி ஒடுக்கென்று கிடக்கிறதாதல்.

"தாமுளரே"—தந்தாமைத் தேடவேண்டாவே. "தம்முள்ளமுள்ளுளதே"—'எனக்குச் சற்றுப்போது பகவத்விஷயத்தை நினைக்கைக்கு நெஞ்சு தரவேணும்' என்று தனிசு வாங்கவேண்டாவே; தாம் உளரானால் உண்டான நெஞ்சும் உண்டே. "தாமரையின் பூவுளதே" கைக்கெட்டும் பூ உண்டாக்கிவைத்தானே. "கள்ளார் துழாய்" என்று அங்குத்தைக்கு அஸாதாரணமான திருத்துழாயைச் சொல்லி, அத்தோடொக்க "கணவலர்" என்று காக்கணத்தையும் ஆம்பலையும் சொல்லுகையாலே அங்குத்தைக்கு ஆகாததில்லை யென்றபடி; ஆகையாலே, 'தாமரையின் பூவுளதே' என்றது எல்லாப் புஷ்பங்களுக்கும் உபலக்ஷணமான வித்தனை. "எத்தும்பொழுதுண்டே" காலத்தை யுண்டாக்கி வைத்தானே, அது தனிசு வாங்கவேண்டாவே. "வாமன்" இதெல்லாம் வேண்டுவது அவன் அவனல்லவாகிலன்றோ! தன்னுடைமை பெறுகைக்குத் தான் இரப்பாளனுவானொருவனாயிருந்தானே. "திருமருவுதாள்" அவனுடைய ஐச்வர்ய ப்ரகாசமான திருவடிக ளென்னுதல், "வடிவிணையில்லா மலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடி" என்னுதல். "மருவுசென்னியரே." மருவுகை சேருகை: இப்படிப்பட்ட திருவடிகளிலே சேருகைக்குத் தலை யாக்கிவைத்தானே. "வாமன்" அமரர் சென்னிப்பூவான திருவடிகளை நித்ய ஸம்ஸாரிகள் தலையிலும் வைப்பானொருவனாயிருந்தானே. இப்படி யிருக்கச்செய்தே, "செவ்வேயருநரகம் சேர்வதரிது" இவர்கள் ஸம்ஸாரத்துக்கு விலக்கடி தேடிக்கொண்டு போகிறபடி எங்ஙனேயோ? "நாவாயிலுண்டே" இது முன்னம் புறம்பு தேடிப்போக வேண்டாவே, "நமோநாரணவென்று ஓவாதுரைக்குமுரையுண்டே" ஸஹஸ்ராக்ஷரீமாலா மந்த்ரம்போலே இருக்கையன்றிக்கே எட்டெழுத்தாய் நடுவே விச்சேதியாதே சொல்லலாந் திருநாம முண்டாக்கிவைத்தானே. 'மூவாதமாக்கதிக்கட் செல்லும் வகையுண்டே" புநராவ்ருத்தியில்லாத ப்ராப்யத்தை யுண்டாக்கிவைத்தானே. "என்னொருவர்தீக்கதிக்கட் செல்லுந்திறம்" இங்ஙனேயிருந்தபின்பு இவர் தண்ணியவழி தேடிப்போகிறபடி யெங்ஙனேயோ?

ஒடுங்கவவன்கண்* ஒடுங்கலுமெல்லாம்*
விடும்பின்னுமாக்கை* விடும்பொழுதெண்ணே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், இப்படி ஆச்ரயிக்க பகவத்ப்ராப்தி ப்ரதிபந்தகமான கர்மங்களெல்லாம் நசிக்கும்; சரீரபர்யவஸாநமாத்ரமே இவனுக்கு விளம்ப மென்கிறார்.

[ஒடுங்க என்று தொடங்கி] - அவனையாச்ரயிக்குங்காட்டில் அவித்யாதி ஸங்கோசகங்களெல்லாம் போம்; ஆக்கை என்று சரீரத்துக்குப் பேர்.

இ.—ஒன்பதாம்பாட்டில், பஜநம் எளிதானாலும் அநாதிகாலஸஞ்சிதமான அவித்யாதிகள் பஜநப்ராப்திகளுக்கு விரோதியன்றோ? என்னில்; - 'பஜிப்போம்' என்கைக்கு அடியான ஸுக்ருதமே வேண்டுவது: அதடியாக பஜநத்திலே இழிபவே அவையடங்கக் கழியு மென்கிறது.

[ஒடுங்க அவன்கண்] - "ஈச்வரோZஹம்" என்றிருக்கை தவிர்ந்து அவனுக்கு ப்ரகாரமாய் அவனபிமாநத்துக்குள்ளே அந்தர்ப்பவிக்கவே [ஒடுங்கலுமெல்லாம்விடும்] - ஒடுங்கல்-ஒடுக்கத்தைப் பண்ணுமவை. ஆத்மாவுக்கு ஸங்கோசகங்களான அவித்யாதிகளெல்லாம் போம். ஒடுங்கல் - வந்தேறியாய் ஒடுங்கிக்கிடந்தவை யென்னவுமாம். ஸ்வரூபாதிரேகியாய் ஒடுங்கிக் கிடந்த அவித்யாதிகளெல்லாம் போம் 'எல்லாம்' என்கையாலே - பஜநவிரோதியோடு ப்ராப்திவிரோதியோடு வாசியற ஸர்வமும் நசிக்கு மென்கிறது. [பின்னுமாக்கை விடும்பொழுதெண்ணே] - பின்பு சரீராவஸாநமே விளம்பம். காமிநி தன் உடம்பில் அழுக்கைக் கழற்றி போகத்திலே அந்வயிக்க அவஸரப்ரதீக்ஷையாயிருக்குமாபோலே சரீராவஸாநத்தைப்பார்த்துக்கொண்டிருக்கை. உடையவர் குன்றத்துச்சீயரை "சிங்கப்பிரான்! இன்று அயநம்கிடாய்" என்ன, நிதாநம் அறியாமையாலே திகைத்துநிற்க "ப்ராப்திப்ரதிபந்தகமான காலத்திலே ஆறுமாஸம் போந்தது உனக்கு ஒன்றுயிருந்ததில்லையோ?" என்று அருளிச்செய்தார். "க்ருதக்ருத்யா:" இத்யாதி. எம்பார் "அஸ்த்திரமான சரீரம் தானே நசியாநிற்க இவனுக்குத்தான் மநோரதிக்கவேணுமோ?" என்று அருளிச்செய்வர்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. ஸம்பந்தஜ்ஞாந முண்டாகவே தன் சிறுமை பார்த்து அகலவேண்டா வென்றும், பஜநமாவது தான் அவன் தனக்காகத் தந்த கரணங்களை அவனுக்கு உறுப்பாக்குகை யென்றுஞ் சொல்லி நின்றார் கீழிரண்டுபாட்டாலே; இது தன்னரசுநாடாய் ப்ராப்த விஷயம் அவனல்லாமை பஜியாதிருக்கிறோமோ? பஜநவிரோதிகள் கனக்கவுண்டாகையன்றோ நாங்கள் பஜியாதொழிகிறது? என்ன, நீங்கள் அவனைக் கிட்டவே அவையடைய விட்டுப்போ மென்கிறார் இதில்.

[ஒடுங்க அவன்கண்] ப்ரகாரபூதரான நீங்கள் ப்ரகாரியான அவன்பக்கலிலே சென்று சேர. [ஒடுங்கலுமெல்லாம்விடும்] ப்ராப்தத்தைச் செய்ய அப்ராப்தமானவையெல்லாம் தன்னடையே விட்டுப்போம். ஸ்வரூபாநுரூபமானத்தைச் செய்யவே ஸ்வரூபவிரோதிகளடங்க விட்டுப்போம். "ஒடுங்கல்" என்கையாலே இது ஸ்வரூபத்திற் கிடப்ப தொன்றல்ல, ஸ்வரூபவிரோதியாய்க் கொண்டு வந்தேறி யென்னுமிடம் தோற்றுகிறது; அன்றிக்கே, "ஒடுங்கல்;" என்கிற மெல்லொற்றை ஒடுக்கலென்று வல்லொற்றாக்கி இவனுக்கு ஸங்கோசத்தைப் பிறப்பிக்குமவை யென்னுதல். [எல்லாம் விடும்] அவித்யாகர்மவாஸநாருசிகள் ஸவாஸநமாக விட்டுக் கழியும். "வானோ மறிகடலோ" இத்யாதி, "மாடேவரப்பெறுவராமென்றே வல்வினையார்" இத்யாதிகளை யோஜித்துக்கொள்வது. இவை போமாகில் பின்பு இவனுக்குக் கர்த்தவ்யம் எது? என்னில்—[பின்னுமாக்கை விடும்பொழுதெண்ணே] "உபாஸநத்தால் வந்த ராஜகுலங்கொண்டு பலம் தப்பாது, தன்னடையே வருகிறது என்று ஆறியிருக்கை யன்றிக்கே, ஹேதுவான அவித்யாதிகள் கழிந்ததாகில் அவற்றின் கார்யமான இச்சரீரமும் ஒருபடிபோய், தண்ணீர்த் துரும்பற்று ப்ராப்தி கைபுகுந்ததாவது எப்போதோ? என்று அதுக்கு விரல் முடக்கி யிருக்கு மித்தனை; காமியானவள் தன்னுடம்பி லழுக்குக்

கழற்றி போகத்திலே அந்வயிக்க அவஸரப்ரதீக்ஷையாயிருக்குமாபோலே சரீராவஸாநத்தைப் பார்த்துக்கொண்டிருக்கை; "கொங்கைமேற் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்தொருநாள் தங்குமே லென்னாவி தங்கும்" என்று அழுக்குக் கழற்றி பொப்பித்துப் பார்த்திருந்தாளிறே; அப்படி "அழுக்குடம்பு" என்கிற இவ்வழுக்குக் கழன்று ப்ராப்யம் கைப்புகுந்ததாவது எப்போதோ? என்று பார்த்திருக்கு மித்தனை: *ம்ருத்யும் ப்ரியமிவாதிதிம்* என்றிருக்குமித்தனை. *விது: *க்ருதக்ருத்யா:* - க்ருதக்ருத்யராகிறார் - ஸித்த ஸாதநபரிக்ரஹம் பண்ணினவர்களிறே; *விது: க்ருஷ்ணம் ப்ராஹ்மணாஸ் தத்த்வதோ யே தேஷாம் ராஜந் ஸர்வயஜ்ஞாஸ் ஸமாப்தா:* அவனை உள்ளபடி அறிந்தவர்களிறே எல்லாவற்றையும் அநுஷ்டித்துத் தலைக்கட்டினார்களாகிறார்: ஓரயநத்தி லன்று குன்றத்தச்சியார் எம்பெருமானார்ஸ்ரீபாதத்திலே புக, அவருடைய சிறுபேரைச் சொல்லி "சிங்கப்பிரான்! இன்று அயநங்கிடாய்" என்ன, திருவுள்ளத்திலோடுகிறது இன்னதென்று அறியாமையாலே அவர் பேசாதிருக்க, "இந்தேஹஸம்பந்தத்திலே ப்ராப்தி கண்ணழிவற்ற பின்பு நடுவு விரோதியாய்ச் செல்லுகிற நாளிலே ஓராண்டு கழிடப்பெற்ற இது உனக்கு ஒன்றாயிருந்த தில்லையோ?" என்று அருளிச்செய்தார். அன்றியே, எம்பார் ஒருருவிலே "பின்னுமாக்கைவிடும்பொழு தெண்ணே" என்று "இங்ஙனே காரணமாவது கழிந்தபோதே கார்யமும் தன்னடையே கழிந்ததேயன்றோ! ப்ராப்தியும் இனிக் கைப்புகுந்ததேயன்றோ? இனி சிந்தாவிஷய முண்டோ?" என்று அருளிச்செய்தார்.

எண்பெருக்கந்நலத்து* ஒண்பொருளீறில*
வண்புகழ்நாரணன்* திண்கழல்சேரே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், ஸார்த்தமாகத் திருமந்த்ரத்தை அருளிச்செய்து இத்தாலே பாவச்சரீ பாதம் எம்பெருமானை யாச்ரயியுங்கோள் என்கிறார். அஸங்க்யேயராய் ஜ்ஞாநாதி கல்யாணகுணங்களை யுடையருமாய் நித்யமாய் விலக்ஷணமான ஸ்வரூபத்தையுடைய ஸர்வாத்மாவையும் நித்யஸித்த கல்யாண குணங்களையுமுடைய நாராயணனுடைய ஆச்ரிதரை ஒருகாலும் விடாதே ரக்ஷிக்கும் ஸ்வபாவ மான திருவடிகளை ஆச்ரயி.

இ.—பத்தாம்பாட்டில், ஆச்ரயணத்திலே இழிவார் திருமந்த்ரத்தை ஸார்த்தமாக அநுஸந்தித்துக் கொண்டு ஆச்ரயியுங்கோ ளென்கிறார்.

'எண்பெருக்கு' என்று ஜீவாநந்த்யத்தைச் சொல்லுகிறது. [அந்நலம்] - கல்யாணமான ஜ்ஞாநாதி குணங்களை யுடைத்தாகை. [ஒண்பொருள்] - ஸ்வயம்ப்ரகாசமாயிருக்கை. [ஈறில] - நித்யமாயிருக்கை. இப்படிப்பட்ட ஆத்மவர்க்கத்தையும். [வண்புகழ்] - கல்யாண குணங்களையுமுடையனாயிருக்கை. 'ஈறில' என்று குணங்களுக்கு விசேஷணமாகவுமாம். [நாரணன்] - நித்யஸித்த கல்யாணகுணங்களோபாதி ஜீவஸமூஹத்தையும் ஸ்வாதீநமாகவுடையவனாகையாலே நாராயணன். [திண்கழல்] - இப்படிப்பட்ட ஸம்பந்தஜ்ஞாநம் முன்னாகப் பற்றினாரை ஒருகாலும் விடாத திருவடிகள். [சேர்] - ஆச்ரயி.

ஈடு.—பத்தாம்பாட்டு. அழகிது; அப்படியேயாகிறது: பஜநத்துக்கு ஆலம்பநமான மந்த்ரம் எது? என்ன,—அது இன்னதென்றும், அதினுடைய அர்த்தம் அநுஸந்தேய மென்றுஞ் சொல்லுகிறார். இதுதன்னைப் புறம்புள்ளார் ஜபஹோமாதிகளாலே கார்யங் கொள்ளாநிற்பர்கள்; நம் ஆசார்யர்கள் 'ஸ்வரூபாநுஸந்தாநத்துக்கு சடாயிருக்கிற இதினுடைய அர்த்தாநுஸந்தாநம் மோக்ஷஸாதநம்' என்று தாங்களும் அநுஸந்தித்து, தங்களைக் கிட்டினார்க் கும் உபதேசித்துக்கொண்டு போருவர்கள். வேதங்களுக்கும் இவ்வாழ்வார்க்கும் இம்மந்த்ரம் ப்ரஸ்துதமானவாறே, முன்பே சப்தத்தைச்சொல்லி அநந்தரம் அர்த்தத்தைச் சொல்லுதல்; அன்றியே, முன்பே அர்த்தத்தைச் சொல்லிப் பின்பே சப்தப்ரயோகம் பண்ணுதல் செய்யக் கடவதொரு நிர்ப்பந்த முண்டாயிருக்கும்; அதுக்கு அடி அர்த்தாநுஸந்தாநம் உத்தேச்யமாகை யாலே; "யாவையும் யாவருந் தானமைவுடைநாரணன்" என்னுதல், "நாரணன் முழுவேழு லகுக்கும்நாதன்" என்னுதல் செய்வதொரு நிர்ப்பந்தமுண்டு; *அந்தர்பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய

நாராயண:ஸ்தித:* என்னுதல், *நாராயண பரோ ஜ்யோதி:* என்னுதல் செய்யும் வேதம். [எண் பெருக்கந்நலம் இத்யாதி] இப்பாட்டாலே திருமந்த்ரத்தை ஸார்த்தமாக அருளிச்செய்கிறார். ஆழ்வான் இப்பாட்டளவும் வாய் பணித்து, இப்பாட்டளவிலே வந்தவாறே, இத்தையும் தம் ஆசார்யர்கள்பக்கலிலே கேட்டுக்கொள்ளுங்கோள்' என்ன, பட்டரும் சீராமப்பிள்ளையும் எழுந்திருந்து போகப்புக்கவாறே அவர்களை மறைத்து, இன்னபோது இன்னார் இருப்பார், இன்னார் போவார் என்று தெரியாது; இருந்து கேளுங்கோள்' என்று திருமந்த்ரத்தை உபதேசித்து, இப்பாட்டை நிர்வஹித்து, 'இப்பாட்டை இதுக்கு அர்த்தமாக நினைத்திருங்கோள்' என்று பணித்தான்.

எண்பெருக்கென்கிற இத்தாலே ஜீவாநந்த்யத்தைச் சொல்லுகிறது. [நலத்து] இவ்வஸ்துக்கள்தான் ஜ்ஞாநகுணைகாச்ரயமுமா யிருக்கக்கடவதிறே; ப்ரணவத்தில் த்ருதீயபதமான மகாரத்தாலே ஜ்ஞாநகுணைகாச்ரயமுமாய் ஜ்ஞாதாவுமா யிருக்குமென்று சொல்லிற்றிறே. [ஒண் பொருள்] அசைதந்யம் அசித்துக்கு ஸ்வபாவமாகாநிற்கச்செய்தே வஸ்துதான் ஜடமுமா யிருக்குமிறே—அஸர்ஜ்ஞாவத்தா யிருக்குமிறே; அங்ஙனன்றிக்கே, வஸ்துதான் ஸ்வஸ்மை ஸ்வயம்ப்ரகாசமுமாய், தர்ம பூதஜ்ஞாநமானதுவும் விஷயங்களை க்ராஹித்துத் தன்னையும் அறிவிக்கக்கடவதாயிருக்கும்; அத்தைப்பற்றச் சொல்லுகிறது. ஈறிலவென்கிற இது கீழும் மேலும் அந்வயித்துக்கிடக்கிறது. ஈறிலவான ஒண்பொருளையும், ஈறிலவான வண்புகழையுமுடையனானையாயிற்று நாராயணனாகையாகிறது; *பாவத்கமங்கலகுண ஹி நிதர்சநம் ந:* தன்னுடைய கல்யாணகுணங்களோபாதி நித்யமுமாய் ப்ரகாரமுமாயிருக்கும் இவ்வஸ்துவென்கைக்காக குணங்களை நிதர்சநமாகச் சொல்லுகிறது; நித்யரான த்ரிவித சேதநரையும், நித்யமான கல்யாண குணங்களையு முடையனா யிருக்கையாயிற்று நாராயணனாகையாவது. அவனுடைய [திண்கழல்சேரே]. இப்படி ஸம்பந்தம் காதாசித்கமாகை தவிர்ந்து நித்யமாயிற்றபின்பு, ஸ்வரூபஜ்ஞாநமுடையாரை அவன் ஒருநாளும் விடானிறே; ஆச்ரிதரை ஒருகாலும் விட்டுக்கொடாத திண்மையைப் பற்ற "திண்கழல்" என்கிறது. [சேர்] ஆச்ரயி, உன்னுடையதாய் உனக்கு வகுத்ததா யிருந்த பின்பு நீகடுக ஸ்வீகரி; நம: என்றபடி.

சேர்த்தடத்* தென்குருகூர்ச்சடகோபன்சொல்*
சீர்த்தொடையாயிரத்து* ஓர்த்தவிப்பத்தே. (11)

ஒ.—நிகமத்தில், எம்பெருமானுடைய குணங்களைத் தொடுத்த ஆயிரம் திருவாய்மொழியும் ஆராய்ந்து சொல்லப்பட்டன இவை யென்கிறார்.

[சேர்த்தடத்தென்குருகூர்ச்சடகோபன்]-திரண்ட தடங்களையுடைய திருநகரியையுடைய ஆழ்வார். "சேர்த்தடங்களை யுடைத்து" என்றுஞ் சொல்லுவர். "இப்பத்தைச் சேர்" என்று க்ரியாபதமாகவுஞ் சொல்லுவர். பரோபதேசம் பலரைக்குறித்து உபக்ரமிக்கையாலே மேல் ஏகவசநமான இடங்களெல்லாம் ஜாத்யபிப்ராயம்.

இ.—நிகமத்தில், பகவத்குணங்களைத் தொடுத்த ஆயிரந்திருவாய்மொழியிலும் ஆராய்ந்து சொல்லப்பட்டன இவை யென்கிறார்.

[சேர்த்தடம்]-ஊரோடே சேர்ந்த தடம்; தன்னிலே சேர்ந்த தடமென்னுதல். [சீர்த்தொடையாயிரம்] - சீரென்று - கவிக்கு உறுப்பான அலங்காரங்களைச் சொல்லுதல்; பகவத்குணங்களைச் சொல்லுதல். [ஓர்த்தஇப்பத்து] - ஓர்ந்துசொல்லப்பட்டன இவை. ப்ரஜைகள் துர்க்கதியைக் கண்டு இவற்றினுடைய உஜ்ஜீவநோபாயத்தைத் திருவுள்ளத்தாலே ஆராய்ந்து அருளிச் செய்தது; 'இப்பத்தைச்சேர்'' என்று - க்ரியாபதமாக ஒருவன் சொன்னான். இப்பத்தை நெஞ்சிலே சேர் - அநுஸந்தி.* பரோபதேசம் பலரைக் குறித்து உபக்ரமிக்கையாலே ஏகவசநமான இடம் ஜாத்யபிப்ராயம்,

ஈடு.—நிகமத்தில், முதற்பாட்டில் வ்யதிரிக்த விஷயங்களை விட்டு ஸர்வேச்வரன் பக்கலிலே ஆத்மாவை ஸமர்ப்பிக்க இசையுங்கோ ளென்றார்: இரண்டாம்பாட்டில் வ்யதிரிக்த விஷயங்களினுடைய தோஷதர்சநம்பண்ணவே விடலாமென்றார்; மூன்றாம்பாட்டில் த்யாஜ்யாம்சத்தைச் சுருங்க அருளிச்செய்தார்; நாலாம்பாட்டில் பற்றப்படுகிற விஷயத்தினுடைய நன்மையை அருளிச்செய்தார்; அஞ்சாம்பாட்டில் பற்றுமிடத்தில் வரும் அந்தராய பரிஹாரத்தை அருளிச்செய்தார்; ஆறாம்பாட்டில் அவன் ஸங்கல்பஸ்வபாவ னென்றார்; ஏழாம் பாட்டில் ஸம்பந்தஜ்ஞாந முண்டாகவே பொருந்தலா மென்றார்; எட்டாம்பாட்டில் வேறு உபகரணம் தேடவேண்டா, அவன்தந்த கரணங்களை அவனுக்காக்க அமையு மென்றார்; ஒன்பதாம்பாட்டில் அப்படிச்செய்யவே பஜந விரோதிகள் தன்னடையே விட்டுப்போ மென்றார்; பத்தாம்பாட்டில் பஜநத்துக்கு ஆலம்பநமான மந்த்ரம் இன்னதென்றார்; இது தான் வாய்வந்தபடி சொல்லிற் றொன்றல்ல, சேதநருடைய ஹிதத்துக்கீடாக ஆராய்ந்து சொல்லப்பட்ட தென்னுதல்; அன்றிக்கே, இதுதான் ஹிததமமாயிருப்ப தொன்றாகையாலே எப்போது மொக்க ஓரப்படுவதொன் றென்னுதல்.

[சேர்த்தடம் இத்யாதி] 'சேர்த்தடம்' என்கிற இத்தைச் சேர்தடமாக்கி, பொய்கைகளோடு பொய்கைகள் சேர்ந்திருக்கும்படியைச் சொல்லிற்றாகவுமாம்; அன்றியே, "தென் குருகூர்" என்று ஊர் ப்ரஸ்துதமாகையாலே தடாகங்கள் சேர்ந்திருந்துள்ள தென்குருகூர் என்று ஊருக்கு விசேஷணமாதல்; அன்றிக்கே, "சேர்" என்கிற இது க்ரியாபதமாய்க் கிடத்தல். [தென்குருகூர்ச் சடகோபன் சொல்] ஹிதஞ்சொல்ல வென்றிழிந்து அஹிதத்தைச் சொல்லுவானொருவன் வார்த்தையன்று, ஆப்ததமரானவர் சொன்ன வார்த்தையென்கை. [சீர்த்தொடையாயிரம்] "எழுத்தசை சீர்பந்தமடி தொடைபாவினம்" என்று கவிக்கு அவயவமாயிருப்பன சிலவுண்டு: அவற்றைச் சொல்லுதல்; அன்றிக்கே, உபாஸகாநுக்ரஹத்தாலே உபாஸ்யனுடைய கல்யாணகுணங்களைத் தொடுத்த ஆயிரமென்னுதல். [ஆயிரத்தோர்த்தவிப்பத்தே] ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு சேதநர்க்கு ஹிதமாவதே தென்று நிரூபித்துச் சொல்லப்பட்ட தென்னுதல்; அன்றிக்கே, சேதநர்க்கு ஹிததமமாயிருப்ப தொன்றாகையாலே எப்போதும் ஓரப்படுவதொன் றென்னுதல். ஓர்த்த இப் பத்தை, நெஞ்சிலே சேர் அநுஸந்தி. பரோபதேசம் பலரைக்குறித்து உபக்ரமிக்கையாலே மேல் ஏகவசநமானவிடம் ஜாத்யபிப்ராயம்.

ஆழ்வார் திருவடிகளே சரணம். எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றாந்திருவாய்மொழி—பத்துடையடியவர் : ப்ரவேசம்.

ஒ.—மூன்றாந்திருவாய்மொழியில், லோகத்தில் கண்ணாலே கண்டு கையாலேயாயிற்று பஜிக்கலாவது. இரண்டுபடியுமன்றிக்கே அதீந்த்ரியனான ஸர்வேச்வரனை அதிக்ஷுத்ரரான நாங்கள் பஜிக்கும்படியெங்ஙனே? என்னில்;—எம்பெருமான் நிரதிசயபோக்யனென்று கேட்டமாத்ரத்திலே அவனைக் காணவேணுமென்று அபிநிவேசம் பிறந்தால் அவர்களுக்குக் காணலாம்படி தன்னுடைய ஸௌசில்யாதி குண பலாத்க்ருதனாய்க் கொண்டும், அப்ராக்ருத திவ்ய தேஹத்தோடும் ஆச்ரித பரித்ராணார்த்தமாகவும், தத்விரோதி நிரஸநார்த்தமாகவும், தன்னுடைய ஸங்கல்பத்தாலே நிஹீநமான மநுஷ்யாதிகளோடு ஸஜாதீயனாய் ராமக்ருஷ்ணாதி ரூபேண யுகந்தோறும் திருவவதாரம்பண்ணியருளாநிற்கும்; பரத்வதசைகளிற்காட்டில் திருவவதாரங்களிலே தன்னுடைய கல்யாணகுணங்கள் நிறம் பெறும்;

இவ்வவதார ரஹஸ்யத்தினுடைய சீர்மை ஒருவர்க்கும் அறிய அரிது; சிலதார்மிகர் ஏரியைக் கல்லினால்,
சிலர்க்கு ஜீவநஹேதுவாய்ச் சிலர்க்கு அநர்த்தஹேதுவாமா போலே இத்திருவவதாரங்கள் அநு
கூலர்க்கு உஜ்ஜீவநஹேதுவாய், ப்ரதிகூலர்க்கு எதிரிட்டழிகைக்கு ஹேதுவா மென்று தொடங்கி
ஸ்ரீகீதையில் சதுர்த்தாத்யாயத்தில் அருளிச் செய்தபடியே ஸௌலப்யத்தைப் பேசி, இப்படி ஸுலபனு
கையாலே ஆச்ரயணங்கூடும்; ஆச்ரயியுங்கோ ளென்கிறார்.

௩.—மூன்றுந்திருவாய்மொழியில், சக்ஷுர்விஷயத்தையாதல் அத்தோடு ஸத்ருசத்தையாதலா
யிற்று பஜிக்கலாவது; அதீந்த்ரியனான ஸர்வேச்வரனை அதிக்ஷுத்ரரான எங்களுக்கு பஜிக்கப்போமோ?
என்னில்;--சாஸ்த்ரங்களிலே 'ஸமஸ்தகல்யாணகுணாத்மகன், ஸர்வாதிகன், பரமபோக்யன், பரமோதாரன்'
என்று கேட்டமாத்ரத்திலே ருசி பிறந்தவர்களுக்குக் கண்டு ஆச்ரயிக்கலாம்படி க்ருபாதிகுணங்களே
ப்ரேரிக்க அஜஹத்ஸ்வபாவனாய்க்கொண்டு ஸங்கல்பத்தாலே அப்ராக்ருததிவ்யதேஹத்தை இதர ஸஜாதீய
மாக்கிக்கொண்டு ஸாது பரித்ராண துஷ்க்ருத்விநாசார்த்தமாக ராமக்ருஷ்ணதிருபத்தாலே அவதரித்து
ஸுலபனும்; ஆகையாலே, ஆச்ரயிக்கைக்கு ஒரு தட்டில்லை, ஆச்ரயியுங்கோ ளென்கிறார்.

௧௫.—ஸர்வஸ்மாத்பர னென்றார் முதல் திருவாய்மொழியில்; பரனாகையாலே பஜநீய
னென்றார் இரண்டாந் திருவாய்மொழியில்; பஜியுங்கோள்' என்று பலகாலும் அருளிச்செய்யா
நின்றீர்; இருகை முடவனை 'ஆனை யேறு' என்றால் அவனாலே ஏறப்போமோ? அப்படியே ஸர்
வேச்வரனாய் அவாப்தஸமஸ்தகாமனாயிருக்கிற அவனை இந்த க்ஷுத்ரனான ஸம்ஸாரி சேதந
னாலே பற்றப்போமோ? என்ன; அவ்வானை தானே அவ்விருகை முடவனுக்கும் ஏறலாம்படி
படிந்து கொடுக்குமன்று ஏறத் தட்டில்லையே; அப்படியே இஸ்ஸம்ஸாரிசேதநனுக்கு பஜிக்க
லாம்படி அவன் தன்னைக் கொண்டுவந்து தாழவிட்டு ஸுலபனுமாகில் இவனுக்கு பஜிக்கத தட்
டில்லையே' என்கிறார். அவதாரந்தன்னில்வந்தால் பாக்யஹீநர்க்கு ஸஜாதீய ப்ரதிபத்திபண்ணி
அநர்த்தப்பட்டுப் போகவுமாய், பாக்யாதிகர்க்கு 'அரியன் எளியனாகப் பெற்றோமே!' என்று
ஆச்ரயிக்கலாம்படி இரண்டுக்கும் பொதுவாயிறே இருப்பது. 'ஸர்வேச்வரன அரியனென்றால்
ஸம்ஸாரத்தில் ஆள்பற்றாதென்று அவனெளிமையை உபபாதித்துக் கொண்டு போந்தோம்;
அதுதானே இவர்களுக்கு 'இத்தனையெளியனோ!' என்று விடுகைக்கு உடலாயிற்று; அவ்
வெளிமைதானே ஆதரிக்கைக்கு உடலாயிற்றது உமக்கொருவருக்குமேயிறே' என்று எம்பா
ரைப்பார்த்து உடையவர் அருளிச்செய்தருளினாராம். சில தார்மிகர் ஏரி கல்லினால், சேற்றிலே
தலையைநொழுந்திப் பட்டுப்போகா நிற்பர் சிலர்; விடாயர் அதிலே முழுகி விடாய்தீர்ந்து
போகாநிற்பர்கள்; விளக்கை யேற்றினால் அதிலே விட்டிலென்று சில பதார்த்தங்கள் விழுந்து
முடிந்துபோம்; சிலர் அவ்வொளியிலே ஜீவியாநிற்பர்கள்; வேதநல்விளக்கிறே இவன்தான்.
ஆயர்குலத்தினில் தோன்றுமணி விளக்கிறே; வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்கிறே.
அவன்தான் அன்றியவாணனையிரந்தோளுந் துணிய அன்றுழிதொட்டதும் இப்படிவந்து
அவதரித்து ஸுலபனான நிலைதன்னிலேயிறே; அப்படியே சிசுபாலாதிகள் பூதநாசகட
யமலார்ஜுநாதிகளுக்கு எதிரிட்டு முடியவுமாய், அநுகூலித்து உஜ்ஜீவிப்பார்க்கு உஜ்ஜீவிக்க
வுமாயிற்று அவதாரந்தான் இருப்பது. பலகாலும் 'அவனை பஜியுங்கோள்' என்னா நின்றீர்;
கண்ணாலே கண்டாலல்லது பஜிக்க விரகில்லை; பஜித்தாலல்லது காண விரகில்லை; ஆனபின்பு,
ஆச்ரயிக்கும்படி யெங்ஙனே?' என்ன; *தஸ்மிந் த்ருஷ்டே பராவரே* என்றும், *விசதே ததநந்தரம்*
என்றுஞ் சொல்லுகிறபடியே சில வருத்தத்தோடே காட்சியாய்த் தலைக்கட்டும் ஸாதநபக்தியை
யன்று இங்குச் சொல்லுகிறது; காணவேணுமென்னும் ஆசாலேசமுடையார்க்கு அவன்
எளியனாம்படியையாயிற்று. ஸர்வாதிகன் தாழநிற்குமன்று நிவாரகரில்லை; *பஹூநி மே
வ்யதீதாநி* என்கையாலே அவதாரந்தன்னில் புரையில்லை; இச்சைதானே யுண்டே; இது
தன்னை அவதாரரஹஸ்யத்திலே தானும் அருளிச்செய்தானிறே - *ஜந்ம கர்ம ச மே திவ்யம்*
என்று. என்னுடைய ஜந்மங்கள் கர்மமடியாகவன்று, இச்சையடியாகவாயிருக்கும். நாம்
பிறவா நிற்கச்செய்தே பிறவாமையுங் கிடக்கும்; தாழநின்ற நிலையிலே மேன்மையுங்
கிடக்கும்; அப்ராக்ருத ஸம்ஸ்த்தாநத்தை இதர ஸஜாதீயமாக்கிவந்து பிறப்புதோம்;
இவற்றிலே ஒன்றை அறிந்தவர்களுக்குப் பின்னை ஜந்மமில்லை; நானும் பிறந்து அவர்களும்

பிறக்கவேணுமோ? ஈரிரை யுண்டோ? என்று அவன் சதுர்த்தாத்யாயத்திலே அருளிச்செய்த படிகளை உபஜீவித்துக்கொண்டு, ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணிக்கொண்டு ஸுலப னும்; ஆனபின்பு, ஆச்ரயணைங் கூடும்: ஆச்ரயியுங்கோள் என்கிறார். அவதாரங்களை முன்னோட்டுக்கொண்டு, அவதாரங்களிலும் நீர்மைக்கு எல்லையான க்ருஷ்ணாவதாரத்திலே இழிந்து, அது தன்னிலும் பரத்வத்தோடொக்கச் சொல்லலான நிலைகளைக் கழித்து, நவநீத சௌர்ய நகர க்ஷோபத்திலே அகப்பட்டு இளமணற்பாய்ந்து, 'எத்திறம்!' என்று மோஹித்துக்கிடக்கிறார்: பரத்வத்தை அநுஸந்தித்தார், தெளிந்திருந்து பரோபதேசம் பண்ணினார்; ஸௌலப்யத்தை அநுஸந்தித்தார், 'எத்திறம்!' என்று மோஹித்துக்கிடக்கிறார்.

பத்துடையடியவர்க்கெளியவன் பிறர்களுக்கரிய
வித்தகன் * மலர்மகள் விரும்பும் நமரும்பெறலடிகள்*
மத்துறுகடைவெண்ணெய் களவினிலுரவிடையாப்புண்டு*
எத்திறமுரலினோடு இணைந்திருந்தேங்கியவெளிவே. (1)

ஒ.—முதற்பாட்டில், எம்பெருமானுடைய ஸௌலப்யத்துக்கு உதாஹரணத்தைப் பேசுகைக்காகத் திருவவதாரங்களை முன்னோட்டுக்கொண்டு ஆழ்வார் பரோபதேசாத்ருதராய், க்ருஷ்ணனுடைய நவநீத சௌர்யசாரித்ரத்திலே அகப்பட்டு அழுந்துகிறார்.

பத்தென்கிறது, பக்தியை. [வித்தகன்] - ஆச்ரிதபவ்யனாயிருக்கிற இருப்பிலே சத்ருக்களுக்குக் கணிசிக்க முடியாதே யிருக்கும் விஸ்மயநீயன். [மலர்மகளென்று தொடங்கி] - பெரியபிராட்டியாலும் ஆசைப்படப்படுவானாய் விலக்ஷணனாக ப்ரஸித்தனான பெறுதற்கு அரிய ஸ்வாமி; யசோதைப்பிராட்டி ஆபாலித்துக் கடையாநிற்க சாபலாதிசயத்தாலே அந்தவெண்ணெய் களவுகாண்கிற தசையிலே உரஸ்தலத்திலே உரலோடு கட்டுண்டு உரலோடு தன்னோடு வாசியில்லாதபடியிருந்து ஏங்கின ஸௌலப்யம். எத்திறம் என்றது - இது என்னபடி யென்று தாம் ஈடுபடுகிறார். உரத்தையுடைய விடையென்னவுமாம்; பெருமிடுக்கு என்றவாறு.

இ.—முதற்பாட்டில், ஸௌலப்யத்தை உபதேசிக்கைக்காக அவதாரங்களை அநுஸந்தித்தவர், தொடங்கின உபதேசத்தை மறந்து க்ருஷ்ணாவதாரத்தில் நவநீத சௌர்யசாரித்ரத்திலே தாம் அகப்பட்டு அழுந்துகிறார்.

[பத்து] - பக்தி. பத்தென்று - பக்தியைக் காட்டுமோ? என்னில்,—"எட்டினோடிரண்டெனுங் கயிற்றினால் மனந்தனைக்கட்டி" என்னக்கடவதிறே. பக்திசப்தத்தால் - இங்கு பரபக்த்யாதிகளைச் சொல்லுகிறதன்று, பக்த்யுபக்ரமமான அத்வேஷமாத்ரத்தைச் சொல்லுகிறது, தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்குமென்கிற குணப்ரகரணமாகையாலே. [உடை] - இம்மாத்ரத்தைக் கனக்க வுடைமையாகச் சொல்லுகிறது - "விண்ணுளாரிலுஞ் சீரியர்" என்று இங்கே பகவதநுபவம்பண்ணுவாரை நித்ய ஸூரிகளுக்கும் அவ்வருகாக நினைத்திருக்கும் பகவதபிப்ராயத்தாலே. [அடியவர்] - இதுவும் பகவதபிப்ராயத்தாலே. ஆநுகூல்யலேசம் குவாலாயிருக்கை. "த்வயி கிஞ்சித் ஸமாபந்நே" என்று இன்று கிட்டிற்றொரு குரங்கை நித்யாச்ரிதையான பிராட்டிக்கும் அவ்வருகாக நினைத்திருக்கையாலே. [எளியவன்] - பாபத்தைப் போக்குதல், புண்யத்தைக் கொடுத்தல், தத்பலமான ஸ்வர்க்காதிகளைக் கொடுத்தல், தன்னைக் கொடுத்தல் செய்யுமவனல்லன்: அவர்களுக்குத் தன்னைக் கையாளாக்கிவைக்கும். "பக்திக்ரீதோ ஜநார்த்தந:" தூத்யஸாரத்யங்களைப் பண்ணுகையாலே ஆச்ரிதர்க்கு இஷ்ட விநியோகார்ஹனானிறே. இவ்வெளிமை உகவாதார்க்கும் பொதுவாகிறதோ வென்னுமதத்தைப் பரிஹரிக்கிறது; [பிறர்களுக்கரிய] - ராவணாதிகளுக்கு இளைக்கப் போகாதிருக்கை. "ஹிமவாந் மந்தரோ மேரு:" [வித்தகன்] - விஸ்மயநீயன். யசோதைக்கு பவ்யனாயிருக்கிற இருப்பிலே யமலார்ஜுநர்க்கு அநபிபவநீயனாயிருக்கை. இப்படி இருக்கிறவன் தான் ஆர்? என்னில் - [மலர்மகள் விரும்பும்] - "ஈசவரீம் ஸர்வ

பூதாநாம்'' என்கிற மேன்மையையுடையளாய்ப் பரிமளம் ஒருவடிவுகொண்டாற்போலே யிருக்கிற போக்யதையையுடையளான பிராட்டி ''அகலகில்லேனிறையும்'' என்று விரும்பும் தத்த்வம். [அரும் பெறலடிகள்] - பெறுதற்கரிய ஸ்வாமிகள். ச்ரிய:பதியென்கையிறே ஸர்வாதிகத்வத்துக்கு லக்ஷணம். ''நம்'' என்று இந்த மேன்மையும், நீர்மையும் தமக்கு ப்ரகாசித்திருக்கிறபடி. [மத்துறு] - இப்படி மேன்மையை உபபாதித்து ஸௌலப்ய காஷ்டையைச் சொல்லப்புக்கு அதிலே தாம் ஈடுபடுகிறார். மத்துறு கடை வெண்ணெய் களவினில் - மத்தாலே யுற்றுக்கடையாநிற்கிற வெண்ணெய் களவுகாண்கிற வளவிலே. உற்றுக்கடைகையாகிறது - ஆயாஸித்துக் கடைகை. ''கடைகிற பராக்கிலே ஒதுங்கிச் சாபலாதிசயத்தாலே அள்ளியமுதுசெய்யும்போலே காண்'' என்று பிள்ளான். அவாப்தஸமஸ்தகாமன் தனக்கு ஒருகுறையுண்டாய், அது நேர்கொடுநேர் கிடையாமையாலே களவிலே யிழிந்து, அது தலைக்கட்டப்பெறாதே வாயது கையதாக அகப்பட்டுக் கட்டுண்டு அடியுண்டு நிற்கும் நிலையைச் சொல்லுகிறது. [உரவிடையாப்புண்டு] - உரஸ்ஸ்தலத்திலே கட்டுண்டு. மலர்மகள் விரும்பி யணைக்கும் மார்விலேகிடீர் கயிற்றையிட்டுக் கட்டக் கட்டுண்டிருந்தது. தாமோதரனென்கிறபடி யெங்ஙனே? என்னில்; - அப்ப்ரதேசத்தையெல்லாம் நினைக்கிறதாகலாமிறே. அன்றிக்கே, உரத்த விடையான தான் கட்டுண்டு - பெருமிடுக்க னென்றபடி. [உரலினோடிணைந்திருந்து] - உரல் மூச்சுவிடிலும் தான் மூச்சுவிடாதே அசிதவ்யாவ்ருத்தனாயிருந்தபடி. [ஏங்கியவெளிவு] - இந்த சுத்தனைக் கள்ளனென்று கட்டினால் பொறுக்க மாட்டாதே அழத்தொடங்குமே; அவள் ''வாய் வாய்'' என்றால் எறிட்ட த்வநி இழியவிடமாட்டாதே பயப்பட்டு நிற்கும். [எளிவு] - ஸௌலப்யம். [எத்திறம்] - இதுஎன்னபடி! ''யதோ வாசோ நிவர்த்தந்தே'' என்று வேதம் மீண்ட பரத்வத்தை எல்லைகாணலாம், இந்த ஸௌலப்யம் தரைகாணவொண்ணாதா யிருந்ததீ! என்கிறார்.

ஈடு.—*முதற்பாட்டில், எம்பெருமானுடைய ஸௌலப்யத்தை உபதேசிக்கப்புக்கு அவனுடைய நவநீத சௌர்ய சாரித்ரத்திலே அகப்பட்டு அழுந்துகிறார்.*

[பத்து] பக்தி. பத்தென்று பக்தியைக் காட்டுமோ? என்னில், ''*எட்டினோடிரண்டெனுங் கயிற்றினால் மனந்தனைக்கட்டி*'' *என்னக்கடவதிறே; ஆகையாலே, பத்தென்று பக்தியைச் சொல்லுகிறதாய், அதுதன்னிலும் பரபக்தியையன்று இங்குச் சொல்லுகிறது, பக்த்யுபக்ரம மாத்ரத்தை. உபக்ரமமாத்ரமென்று இத்தை நியமிப்பாரார்? அதினுடைய சரமாவஸ்த்தையைக் காட்டினாலோ? என்னில்; அது ஒண்ணாது; இப்போது இங்குச் சொல்லிக்கொண்டு போருகிற இது குணப்ரகரணமாகையாலும், ஸர்வேச்வரனுக்கு ஒரு உத்கர்ஷஞ் சொல்லுகை இப்போது இவர்க்கு அபேக்ஷிதமல்லாமையாலும், தந்தாமை யொழியச் செல்லாதார்க்கு ஸ்நேஹிக்குமது அல்லாதார்க்கு முண்டாகையாலும்,* *மித்ர பாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந* *என்னுமவனாகையாலும், உபக்ரமமாத்ரத்தையே சொல்லிற்றாகக்கடவது; ஆசாலேசமுடையார்க்குத் தலைனைக் கொடுப்பதாக பகவானுக்கியு முண்டாயிருந்ததிறே;* ''*எதிர்சூழல்புக்கு*'' *என்றும்* ''*என்னின்முன்னம் பாரித்து*'' *என்றும் விலக்காமைதேடித்திரிகிறவனிறே. [உடை] இந்த அப்ரதிஷேத அத்வேஷ மாத்ரத்தைத் தனத்தவுடைமையாகச் சொல்லுகிறது.* ''*விண்ணுளாரிலுஞ்சீரியர்*'' *என்று இங்கே பகவதநுபவம் பண்ணுவாரை நித்யஸூரிகளிற்காட்டில் கனக்க நினைத்திருக்கும் பகவதபிப்ராயத்தாலே சொல்லுகிறது. இவர்கள் பக்கலிலே இம்மாத்ரமுண்டானால், பின்னை இவர்களுடைய பரத்துக்கெல்லாம் நானே கடவன் என்றிருக்குமாயிற்று இவன்; ராவணபவநத்தை விட்டு ஆகாசத்திலே கிளம்பினபோதே ஸ்ரீ வைஷ்ணவலக்ஷ்மி குடிகொண்டபடியிறே* *அந்தரிக்ஷகத: ச்ரீமாந்* *என்றது;* *லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:* *என்றதிறே இளைய பெருமாளை; இதிறே இவனுக்கு நிலைநின்ற ஐச்வர்யம்; இத்தைப்பற்ற, 'உடை' என்கிறது. [அடியவர்க்கு] இதுவும் பகவதபிப்ராயத்தாலே;* *த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம* *என்று இன்று கிட்டிற்றொரு குரங்கை நித்யாச்ரிதையான பிராட்டிக்கும் அவ்வருகாக நினைத்தானிறே. ஒருதிருவடி திருவனந்தாழ்வானல்ல இவனுக்கு சேஷபூதராய் அதிசயத்தைப் பண்ணுகிறவர்கள்; இவ்விலக்காமையை யுடையவர்களாயிற்று; உள்ள குணத்தை யநுபவித்திருக்கு மித்தனையிறே அவர்கள்; குணம் நிறம் பெறுவது இவர்கள்பக்கலிலேயிறே.*

[எளியவன்] அவர்கள்பாபத்தைப் போக்குதல், புண்யத்தைக் கொடுத்தல், தன்னைக் கிட்டலாம்படியிருத்தல் செய்கையன்றிக்கே தன்னை அவர்களுக்கு இஷ்ட விநியோகார்ஹமாக்கிவைக்கும்; தன்னை யொழிந்தவொன்றைக் கொடுத்தல், தன்னை யழைத்துக்கொடுத்தல் செய்யான் *இமௌ ஸ்ம முநிசார்த்தூல கிங்கரௌ ஸமுபஸ்திதௌ* என்கிறபடியே 'நான் உங்களடியான், என்னை, வேண்டினபடியேவிக் காரியங்கொள்ளுங்கோள்'' என்று நிற்கும்; *பக்த்யா த்வநந்யயா சக்ய: அஹமேவம்விதோ'ர்ஜுந*—பீஷ்மாதிகள் சொல்ல *பரம் ப்ரஹ்ம பரந் தாம* என்று, கனக்கக் கேட்டிருந்தபடியாலே 'நீயொருவன்பக்திக்கு எளியவனாவதென்?' என்ன, 'ஒருவன் கறுத்திருக்க ஒருவன் சிவந்திருக்கிறபடி கண்டாயே, அப்படியே எனக்கும் இது நிலைநின்ற ஸ்வபாவம்' என்றானிறே; *பக்திக்ரீதோ ஜநார்த்தந:* - ஸார்வபௌமனை ராஜபுத்ரன் க்ஷாமகாலத்திலே அல்பத்ரவ்யத்துக்குத் தன்னை எழுதிக்கொடுத்தால் பின்னை தன் செல்வக்கிடப்புக் காட்டி மீட்க வொண்ணாதாப்போலே ஸர்வேச்வரனும் பக்திநிஷ்டனுக்குத் தன்னை அறவிலைசெய்துகொடுத்தால் பின்னை மேன்மைகாட்டி அகலமாட்டான்; கழுத்திலே ஓலையைக்கட்டித் 'தூதுபோ' என்னலாம்படி தன்னைக் கையாளாக்கிவைக்கும்.

இவ்வெளிமை உகவாதார்க்கும் பொதுவாகிறதோ? என்னுமத்தைப் பரிஹரிக்கிறது, மேல்; [பிறர்களுக்கரிய வித்தகன்] பிறர்களாகிறார் 'இவனைக்கொண்டு கார்யங்கொள்ளோம்' என்றிருக்குமவர்கள்; [வித்தகன்] விஸ்மயநீயன். இங்கு விஸ்மயநீயமென்? என்னில், யசோதாதிகளுக்கு பவ்யனானநிலை தன்னிலே பூதநாசகடயமலார்ஜுநாதிகளுக்கு அநபிபவநீயனாயிருக்கை; இன்னமும்; பள்ளிகொண்டருளாநிற்கச் செய்தே அர்ஜுநனும் துர்யோதநனுங் கூடவர, அர்ஜுநனுக்குத் தன்னைக்கொடுத்து, துர்யோதநனுக்குப் பங்களத்தைக் கொடுத்துவிட்டானிறே; நம்முடையவர்கள் எம்பெருமானையே உபாயமாகப் பற்றாநிற்க, அல்லாதார் அசேதந க்ரியாகலாபங்களைப் பற்றுகிறாப்போலேயிறே துர்யோதநன்நிலை; ராமாவதாரத்திலும் *ஹிமவாந் மந்தரோ மேரு:* இத்யாதி; *சத்ருணாப்ரகம்ப்யோ'பி லகுத்வமகமத் கபே:* ராவணன் ஸபரிகரனாய்க் கொண்டு எடுக்கப் புக்கவிடத்தில் நெஞ்சில் சாத்ரவத்தாலே எடுக்கமாட்டிற்றிலன்; திருவடி தனியனாயிருக்கச் செய்தேயும் நெஞ்சில் செவ்வையாலே கருமுகைமாலைபோலே எடுத்தேறிட்டுக்கொண்டு போனான்; இங்ஙனன்றாகில் 'ராவணனுக்குக் கனக்கவேணும்' என்றும் 'திருவடிக்கு நொய்தாகவேணும்' என்றுமன்று, வஸ்துஸ்வபாவம் இருக்கும்படியாயிற்று இது. [மலர்மகள் விரும்பும்] இவ்விரண்டுக்கும் அடி இவளுடைய சேர்த்தியிறே. புஷ்பத்தில் பரிமளம்போலே புஷ்பத்தை இருப்பிடமாகவுடையளாய், அதில் பரிமளந்தான் ஒருவடிவு கொண்டாற்போலேயிருப்பாளாய், நாட்டார் பரிமளத்தை விரும்புவர்களாகில், பரிமளந்தான் "தண்ணீர் தண்ணீர்" என்னப் பிறந்தவன். [நம்] "உளன்சுடர்மிகுசுருதியுள்" என்கிற ப்ரமாண ப்ரஸித்தியைப் பற்றச் சொல்லுகிறது. நாராயணாநுவாகாதிகளோடே சேர; *ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ* என்னக்கடவதிறே; "உளன் சுடர்மிகு சுருதியுள்" என்று ச்ருதிவழியாலே அங்கீகரித்த லக்ஷ்மீ ஸம்பந்தத்தை வெளியிடுகிறார். [அரும்பெறலடிகள்] பெருதற்கரிய ஸ்வாமிகள்; [மலர்கள் விரும்பும் நம் அரும்பெறலடிகள்] பெரியபிராட்டியார் விரும்பும்படியிருக்கை போலேகாணும் ஸர்வாதிக வஸ்துவுக்கு லக்ஷணம். *அப்ரமேயம் ஹி தத்தேஜ:* என்னக் கடவதிறே. [மத்துறு] கீழ்ச்சொன்ன எளிமையை உபபாதிக்கிறார்மேல். மந்தரத்தைப் பிடுங்கிக் கடலில் நடுநெஞ்சிலே நட்டு நெருக்கிக் கடைந்து வெளிகொடுவெளியே தேவர்களுக்கு அம்ருதத்தைக் கொடுத்துவிட்ட மஹாபாஹு கிடீர்! இப்போது இடைச்சேரியிலே வந்து பிறந்து வெண்ணெய் களவுகாணப்புக்கு, கட்டுண்டு அடியுண்டு நின்றானென்கிறார். [மத்துறு கடை வெண்ணெய்] தயிர்ச்செறிவாலே மத்தாலே நெருக்கிக் கடையப்பட்ட வெண்ணெய். "கடைவெண்ணெய்" என்றால் காலத்ரயத்திலுள்ளதையுங் காட்டும். "முப்போதுங் கடைந்தீண்டிய வெண்ணெய்" என்னக்கடவதிறே; இங்கு வர்த்தமாநத்திலே ஒரு ஸௌகர்ய முண்டாகையாலே, 'கடையாநிற்கச்செய்தே, பசியராயிருக்குமவர்கள் சோறு சமையப் பற்றாமல் வெந்தது கொத்தையாக வாயிலிடுமாபோலே, கடையப்பற்றாமல் நடுவே அள்ளி அமுது செய்யும்படியைச் சொல்லுகிறது'' என்று பிள்ளான் பணிக்கும்படி.

[களவினில்] கடைகிற பராக்கிலே நிழலிலே பொதுங்கிச் சாபலத்தாலே அள்ளி யமுதுசெய் தான்போலே காணும். [களவினில்] களவிடையாட்டத்தில். உபக்ரம ஸமயத்திலேயிறே அகப்பட்டது! [உரவிடையாப்புண்டு] உரமென்று மார்வு.* (மார்விடையிலே யென்றபடி.) "பொன்பெயரோன் தன தாம்பினந்து" என்னக்கடவதிறே. பெரியபிராட்டியார் நெருக்கியணைக்கும் மார்வைக்கிறே கயிற்றாலே நெருக்கிக்கட்டக் கட்டுண்டது! அன்றியே, பிடுக்கையுடைய ருஷபம்போலே யிருக்கிறவன்கிடீர் கட்டுண்டான்! [உரவிடையாப்புண்டு] உதரவிடையாப்புண்டு. உதரமென்கிற இத்தை "உரம்" என்று இடைக்குறைத்தலாய்க் கிடக்கிறது. தாமோதரனென்று பிள்ளைபெற்றுப் பேரிடும்படியிறே கட்டுண்டது. *தாம்நா சைவோதரே பத்த்வா ப்ரத்யபத்நாதுலூகலே* என்றும் *யதி சக்நோஷி கச்ச த்வமதிசஞ்சலசேஷ்டித, இத்யுக்த்வாத நிஜம் கர்ம ஸாசகார குடும்பிநீ* என்றுஞ் சொல்லும்படியிறே எளியனாயிருக்கும்படி; தான் தாயான பரிவுதோற்ற இவனைக் களவிலே கண்டுபிடித்து, தாம்பாலே ஒருரலோடே பிடித்துக் கட்டி, மறுகண்ணியும் பொத்தி 'துருதுருக்கைத்தன மடித்துத் திரிந்த நீ வல்லையாகில் போய்க் காணாய்?' என்று உறுக்கி விட்டால், போகமாட்டாதே யிருக்கும்; *பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே* என்று ஓதப்படுகிற வஸ்து இவனுக்கு எளியதானபடியிறே இங்ஙனே சொல்லலாகிறது; *ஸம்ஸாரபந்த ஸ்த்திதி மோக்ஷஹேதுவான தானிறே இப்படி கட்டுண்டிருக்கிறான்; ப்ராஹ்மாதிகளைத் தன்ஸங்கல்பத்தாலே கட்டுவது விடுவதாகிறவனிறே இப்போது ஒரு அபலை கையாலே கட்டுண்டிருக்கிறான்: *த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி* என்கிறபடியே நம்முடைய கட்டை யவிழ்க்கவிறே தான் கட்டுண்டிருக்கிறது [உரலினோடிணைந்திருந்து] "உரலுக்கு ஒரு வ்யாபாரக்ஷமதை யுண்டாமன்று தனக்கும் ஒரு வ்யாபாரக்ஷமதை யுள்ளது" என்று தோற்ற இருந்தபடி. [ஏங்கிய] உரலிற்கட்டில் வ்யாவ்ருத்தி இத்தனையே காணும். அழப்புக்கவாறே "வாய்வாய்" என்னுமே; பின்னை அழமாட்டாதே ஏங்கியிருக்குமித்தனை. எளிவுண்டு - எளிவந்தபடி. [எத்திறம்] பிரானே! இது என்ன ப்ரகாரம்? இன்னம் மேன்மை தரைகாணலாம். நீர்மை தரைகாணவொண்ணாதாயிருந்ததீ! "உயர்வறவுயர்நலமுடையவன்" என்கிற மேன்மையிலே போவேன் என்கிறார்; நியாம்யனா யிருக்கிற இருப்பில் நியந்தாவா யிருக்கிற இருப்புப் பேசலாயிருந்ததீ! பேசப்புக்க வேதங்களும் *யதோ வாசோ நிவர்த்தந்தே* என்றதும் மேன்மையிலேயிறே; நிலமன்று என்கைக்கும் நிலமன்றிறே நீர்மை. இத்தனை தாழநில்லாமையாலே ஸம்ஸாரிகள்பக்கல் காணவொண்ணாது; பரத்வத்தில் இந்நீர்மை யில்லை. இதென்ன ப்ரகாரம்? என்கிறார். பெரியவன்தாழ்த்தி யாகையாலே பொறுக்கமாட்டுகிறிலர்.

எளிவருமியல்வினன் நிலைவரம்பிலபலபிறப்பாய்*
ஒளிவருமுழுநலம் முதலிலகேடிலவீடாம்*
தெளிதருநிலைமையது ஒழிவிலன்முழுவதுமிறையோன்*
அளிவருமருளினோடு அகத்தனன்புறத்தனனமைந்தே. (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், எம்பெருமானுடைய ஸௌலப்யத்தை அநுஸந்தித்து விவசரான ஆழ்வார் ப்ரக்ருதிஸ்த்தராய் ப்ரஸ்துதமான ஸௌலப்யத்தை ஸப்ரகாரமாக உபதேசிக்கிறார்.

[எளிவருமியல்வினன்] - எல்லார்க்கு மொக்க எளியனாம் ஸ்வபாவன். [நிலைவரம்பில பலபிறப்பாய்] - உத்க்ருஷ்டயோநி அபக்ருஷ்டயோநி யென்றின்றிக்கே, உத்க்ருஷ்டசேஷ்டிதம் அபக்ருஷ்ட சேஷ்டித மென்றின்றிக்கே யிருந்துள்ள பலஜந்மங்களையு முடையனாய்; இவையிரண்டு பொருளையும் நிலையில்லாமைக்காக்கி, வரம்பில்லாமைக்குப் பொருளாக-திருவவதாரங்களிலே பரத்வத்தை ஆவிஷ்கரிக்க வேண்டிலும் ஆவிஷ்கரிக்கு மென்றுமாம். [ஒளிவருமுழுநலம்] - திருவவதாரங்களிலே நிறம் பெறும்படியான பூர்ணமான கல்யாணகுணங்கள். [முதலில கேடில] - அக்குணங்கள்தான் இன்னநாள் தொடங்கி யுண்டாயிற்றென்றுதல், இன்னநாள் முடியுமென்றுதல் சொல்லவொண்ணாதே நித்யமாயுள்ளன. [வீடாமென்று தொடங்கி] - மோக்ஷமாகிற தெளிவைத் தரும் ஸ்வபாவந் தொடக்கமான

எல்லாவற்றோடுங்கூட. [அளிவருமென்று தொடங்கி] - ஆச்ரிதபரித்ராணம் தன்பேறுகக்கொண்டு அவர்களிட்ட வழக்காய், அநாச்ரிதர்க்கு எட்டாதேயிருக்கும். [அமைந்தே] - இங்ஙனே சமைந்து.

இ.—இரண்டாம்பாட்டில், இந்த ஸௌலப்யத்தை அநுஸந்தித்து ஆறுமாஸம் மோஹங்கதராய், "சிரேண ஸம்ஜ்ஞாம் ப்ரதிலப்ய சைவ விசிந்தயாமாஸ விசாலநேத்ரா" என்கிறபடியே காலமுணர்ந்த ப்ரபுத்தரானவர் ப்ரஸ்துதமான ஸௌலப்யத்தை ஸப்ரகாரமாக உபதேசிக்கிறார்.

[எளிவருமியல்வினன்] - "பத்துடையடியவர்க்கு" என்று - ஸோபாதிகமன்று இவனெளிமை; ஜலத்துக்கு சைத்யம்போலே ஸ்வபாவஸித்தம் எளிமையை இயல்வாகவுடையவன். [நிலைவரம்பில] - நிலையில்லாமையாவது - ஜந்மத்தில் உத்கர்ஷாபகர்ஷமில்லாமை. வரம்பில்லாமையாவது - சேஷ்டிதங்களில் நியதியில்லாமை. இவையிரண்டும் நிலையில்லாமையிலே யாக்கி, வரம்பில்லாமைக்குப் பொருள் - அவதரித்தவிடத்திலே பரத்வத்தை ஆவிஷ்கரிக்கிலும் ஆவிஷ்கரிக்கும். அதாகிறது - கண்டாகர்ண மோக்ஷாதிகள். ஒன்றிலும் ஒருநியதியில்லை ரக்ஷணத்துக்கு உறுப்பானவை ஏதேனுமாக அமையும். [பலபிறப்பாய்] - வேதஞ்சொல்லிலும் "பஹுதா விஜாயதே" என்னுமத்தனை. தான் சொல்லிலும் "பஹூநிமே" என்னுமத்தனை. உட்புக்க தம்போல்வார் சொல்லிலும் "எங்கின்றயோநியுமாய்ப் பிறந்தாய்" என்னுமத்தனை. [பிறப்பாய்] - பரார்த்தமாகத் தாழ நின்றோமென்று தன்பக்கலிலும் புரையின்றிக்கேயிருக்கை. "ஆத்மாநம் மாநுஷம் மந்யே" "அஹம் வோ பாந்தவோஜாத:" என்னக்கடவதிறே. [ஒளிவருமுழுநலம்]-பிறக்கப்பிறக்கக் கல்யாணகுணங்கள் கட்டடங்க உஜ்ஜ்வலமாகாநிற்கும். "ஸ உ ச்ரேயாந் பவதி ஜாயமாந:" [முதலிலகேடில] - இக்குணங்களுக்கு உத்பத்தி விநாசங்களில்லாமையாலே நித்யங்களாயுள்ளன. [வீடாங் தெளிதரு நிலைமைய தொழிவிலன்] - மோக்ஷமாகிற தெளிவைத் தரும் ஸ்வபாவத்தை விடாதே கூடவந்து அவதரிக்கும். இதுவும் கல்யாண குணங்களிலே ஒன்றாயிருக்கப் பிரித்துச் சொல்லுகிறது - அவதாரத்துக்கு மோக்ஷப்ரதாநத்திலே நோக்காகையாலே. [வீடாந்தெளிதரும்] அவனே இங்கேவந்து அவதரிக்கிலும் சோகமோஹங்களைப் பண்ணும். ஸம்ஸாரி அங்கேசெல்லிலும் தெளிவைப் பண்ணுந் தேசம். "பரமம் ஸாம்யமுபைதி". [முழுவதும்] - ஒளிவரு முழுநலம் வீடாந் தெளிதருநிலைமையது முழுவதுமொழிவிலன். [இறையோன்] "அஜோZபிஸந்நவ்யயாத்மா பூதாநாமீச்வரோZபிஸந்" என்கிறபடியே நியாம்யர்நடுவே நியாமகத்வம் குலையாமல் வந்துபிறக்கும். [அளிவருமருளினோடு] - பக்வமான அருளோடே. அதாகிறது - ஆச்ரிதரக்ஷணம் தன்பேறாயிருக்கை. [அகத்தனன் புறத்தனன்] - அகத்தனனாயிருக்கும் ஆச்ரிதர்க்கு. புறத்தனனாயிருக்கும் அநாச்ரிதர்க்கு; அதாகிறது - அர்ஜுநாதிகளுக்குக் கையாளாயிருக்கையும், துர்யோதநாதிகளுக்கு ஆளிட்டு விடுகையும். [அமைந்தே] - இங்ஙனே சமைந்திருக்கை. இறையோன் முதலில கேடிலவா மொளிவருமுழுநலம், வீடானதெளிதருநிலைமையது, முழுவது மொழிவிலனாய் அளிவரு மருளினோ டகத்தனன் புறத்தனனாய்க்கொண்டு சமைந்து நிலைவரம்பில பலபிறப்பாயெளிவருமியல்வினன்.

ஈடு:—இரண்டாம் பாட்டு. 'எத்திறம்' என்று ஆறுமாஸம் மோஹித்துக் கிடந்தாரென்று ப்ரஸித்தமிறே; இவர் மோஹித்துக் கிடக்க, பெருமாளும் பிராட்டியும் பள்ளிகொண்டருளினவிடத்தை ஸ்ரீகுஹப்பெருமாள் நோக்கிக்கொண்டு கிடந்தாப்போலே, ஸ்ரீமதுகரவிப்ரப்ருதி ஸஜ்ஜநங்களடங்கலும் பலிதமான வ்ருக்ஷத்தைப் பக்ஷிஜாதங்கள் மொய்த்துக்கொண்டு கிடக்குமாபோலே இவரைச் சூழ்ந்துகிடந்தார்கள்; *மந்யே ஸாபரணா ஸுப்தா ஸீதாZஸ்மிஞ்சயநோத்தமே*—வழிநடந்த விடாயாலே ஆபரணங்கள் கழற்றாதேயாயிற்றுப்பள்ளி கொண்டது. *தத்ரதத்ர ஹி த்ருச்யந்தே ஸக்தா: கநகபிந்தவ:* பசியர்க்குத் தந்தாம் ஜீவநத்தைப் பகுந்திடுவாரைப்போலே, வந்த ஸ்ரீபரதாழ்வானுக்குத் தாம் நோக்கிக்கொண்டு கிடந்தவிடத்தைக் காட்டுகிறானிறே. அவ்விடத்தைக் கண்டவாறே, *சத்ருக்நோZநந்தரஸ்த்தித:* என்னும்படி அவ்விடத்தைக் காணா மோஹித்துக் கிடந்தானிற்று ஸ்ரீபரதாழ்வான்; அப்படியே மோஹித்துக்கிடந்த இவர், *சிரேண ஸம்ஜ்ஞாம் ப்ரதிலப்ய சைவ விசிந்தயாமாஸ விசாலநேத்ரா* என்கிறபடியே அநுபவிதாக்கள் பாக்யத்தாலே காலமுணர்த்த உணர்ந்தார்; *நல்லார்நவில்குருகூரிறே; ஸத்துக்களடங்கலும் இவரைப்பற்றிப் படுகாடுகிடந்தது; உணர்ந்த அநந்தரம் 'நான் இங்குச் சொல்லிற்றென்?' என்று கேட்டார்; "பத்துடையடியவர்க் கெளியவன்' என்று ப்ரஸக்தா

நுப்ரஸக்தமாகச் சிலவற்றைச் சொல்லா "எத்திறம்" என்று மோஹித்துக்கிடந்தீர்" என்
றார்கள். தப்பச்சொன்னோம்; அழித்து ப்ரதிஜ்ஞை பண்ண வேணும்' என்கிறார் இரண்டாம்
பாட்டில். ஆவதென்? என்னில்:—பரோபதேசம் பண்ணப்புக்குத் தாம் அநுபவித்தார் முதற்
பாட்டில்; இப்பாட்டுத் தொடங்கிப் பரோபதேசம் பண்ணுகிறார். கீழ் ப்ரஸ்துதமான ஸௌலப்
யத்தை ஸப்ரகாரமாக அருளிச்செய்கிறார் இதில்.

[எளிவருமியல்வினன்] எளிமையை இயல்வாக ஸ்வபாவமாகவுடையவன். ஸ்நேஹி
களுக்கு ஸ்நேஹியாயிருக்கு மென்னுமிது குற்றமன்றோ? எல்லார்க்கும் காதாசித்கமாக
எளிமைகூடும், இவனுக்கு எளிமை ஸ்வரூப மென்கிறார். [நிலைவரம்பில] 'இன்ன அவதாரம்,
இன்ன சேஷ்டிதம் என்றில்லை' என்று பூர்வாசார்யர்கள் நிர்வாஹம். பட்டர் இவ்விரண்டை
யும் நிலையில்லாமையிலே கொண்டு, "இனி வரம்பில்லாமையாவது அவதரித்து எளியனாய்
நின்ற நிலைதன்னிலே பரத்வங் தோற்றநிற்கிலும் நிற்கும்" என்று. ஸாரத்யவேஷத்தோடே
தாழநிற்கச்செய்தே ஸ்ரீவிச்வரூபத்தைக்காட்டியும், தான் புத்ரார்த்தமாகப் போகா நிற்கச்
செய்தே கண்டாகர்ணனுக்கு மோக்ஷத்தைக் கொடுத்தும், ஏழு திருநக்ஷத்ரத்திலே கோவர்த்தந
கிரியை தரித்துக்கொண்டு நின்றுஞ் செய்தவை. இக்காற் சொல்லிற்றாயிற்றது—ஒன்றிலும்
ஒரு நியதியில்லை, ரக்ஷணத்துக்கு உறுப்பாமத்தனையே வேண்டுவது; ஏதேனுமாக அமையும்
இவனுக்கென்கை. [பலபிறப்பாய்] தெளிவுடைய தான் சொல்லும்போதும் *பஹூநி*
என்னும் யதாபூதவாதியான வேதம், *பஹுதா விஜாயதே* என்னும், அவன் கொடுத்த அறிவு
கொண்டு சொல்லுவார் 'பலபிறப்பு" என்பர்கள். [பிறப்பாய்] "பரார்த்தமாகத் தாழநின்
றோம்"—என்று தன்பக்கலிலும் புரையின்றிக்கே யிருக்கை: *ஆத்மாநம் மாநுஷம் மந்யே*,
அஹம் வோ பாந்தவோ ஜாத: [ஒளிவருமுழுநலம்] அபஹதபாப்மத்வாதிகள் ஜீவாத்மாவுக்கு
முண்டிறே; இங்ஙனே யிருக்கச்செய்தே ஜந்மநிபந்தநமான திரோதாநம் பிறவாநின்றதிறே
ஸ்வரூபத்துக்கு. அவனுக்கு ஜந்மத்தால் வரும் விகாராதிகளுண்டு; இவன் தன்னைத் தாழ
ஜாயமாந:* கர்மநிபந்தநஜந்ம மாகிலிறே பிறக்கப்பிறக்கப் புகரழிவது; அநுக்ரஹமடியாக
விட்டுப் பிறக்கப்பிறக்க, கல்யாணகுணங்கள் புகர்பெற்று வாராநிற்கும். *ஸ உ ச்ரேயாந் பவதி
வருகிற ஜந்மமாகையாலே புகர்பெற்று வாராநிற்கும். ஸ ஏவ ச்ரேயாந் என்றபடி. அக்
குணங்கள் தானிருக்கும்படி யென்? என்றால், [முதலிலகேடில] ஒருநாள்வரையிலே தோன்றி
ஒருநாள்வரையிலே முடியுமவையன்றே, ஸ்வரூபாந்தர்க்கதமா யுள்ளன. [வீடாந் தெளி
இத்யாதி] இக்குணம் "ஒளிவரு முழுநலம்" என்ற இதிற் புகாதோ? என்னில்:—மோக்ஷ
ப்ரதத்வமும் தனியே சொல்ல வேண்டுவதொரு குணமாகையாலே சொல்லுகிறார்; அவதாரத்
துக்கு ப்ரயோஜநம் இதுவேயிறே. [வீடாம் இத்யாதி] மோக்ஷமாகிற தெளிவு - பரமபதம்.
அத்தைத்தரும் ஸ்வபாவம் என்றும் ஒத்திருக்குமவன்; அவன் இங்கேவந்து அவதரிக்கிலும்
சோகமோஹங்களைப் பண்ணும் இவ்விடம், இவன் அங்கே செல்லிலும் தெளிவைப்பண்ணும்
அவ்விடம்; "தெளிவிசும்பு" என்னக்கடவதிறே. [முழுவது மொழிவிலன்] கீழ்ச்சொன்ன
இரண்டையுங்கூட்டிச் சொல்லுகிறார். [இறையோன்] மோக்ஷப்ரதத்வம் ஈச்வரனுக்கே
உள்ளதொன்றிறே. அவதரிக்கச் செய்தே ஈச்வரத்வத்திற் குறையாதே நிற்கை. [அளிவரு
மருளினோடு] குளிர்ந்து பக்வமான அருளோடே; நிர்ஹேதுகமான அருளோடே. [அகத்தனன்]
ஆச்ரிதர்க்குக் கழுத்திலே ஓலைகட்டி 'தூதுபோ' என்னலாம்படி யிருக்கும். [புறத்தனன்]
அநாச்ரிதர்க்கு அங்கிலைதன்னிலே கிட்டவொண்ணாதபடி யிருக்கும். [அமைந்தே] இப்படி
சமைந்து. இறையோன் அளிவருமருளினோ டகத்தனன் புறத்தனனாயமைந்து, முதலில
கேடிலவா மொளிவருமுழுநலம், வீடாந்தெளிதருநிலைமையது முழுவது மொழிவிலனாய்,
நிலைவரம்பில பல பிறப்பாய் எளிவருமியல்வினன் என்று அந்வயம்.

அமைவுடையறநெறி முழுவது முயர்வறவுயர்ந்து*
அமைவுடைமுதல்கெடல் ஒடிவிடையறநிலமதுவாம்*
அமைவுடையமரரும் யாவையும் யாவருந்தானும்*
அமைவுடை நாரணன்மாயையை அறிபவர்யாரே* (3)

ஒ.—மூன்றும்பாட்டில், ஸர்வேச்வரனை நாராயணனுடைய ச்லாக்யமான ஜந்மரஹஸ்யம் அதிசயிதஜ்ஞாநரான ப்ரஹ்மாதிகளுக்கும் நிலமன் றென்கிறார்.

[அமைவென்று தொடங்கி] - இன்னபடி அநுஷ்டிக்க இன்னபலத்தைத் தரும் என்னும் வ்யவஸ்த்தையுடைய தர்மமார்க்கம் எல்லாவற்றாலும் எல்லார்க்கும் மேற்படுவதுஞ்செய்து இன்னபடியாக வென்றால் அப்படியுண்டாம் சமைவையுடைத்தான ஸ்ருஷ்டி ஸம்ஹாரம் அவாந்தர ஸம்ஹாரமாகிற இவை மிகவும் கைவந்திருக்கும் சமைவையுடைய ப்ரஹ்மாதிகளும் மற்றுமுண்டான அசேதநங்களெல்லாமும் சேதநரெல்லாரும். [தானுமென்று தொடங்கி] - இவையெல்லாம் தனக்கு சேஷமாகையாலே இவை தானென்னலாம்படியான சமைவை யுடைய நாராயணனுடைய.

இ.—மூன்றும் பாட்டில், இவ்வவதாரரஹஸ்யம் அதிசயிதஜ்ஞாநராயிருப்பார்க்கும் அறியவொண்ணா தென்கிறது.

[அமைவுடையறநெறி] - பலத்தோடு நியதமாயிருந்துள்ள தர்மமார்க்கம். [முழுவது முயர்வறவுயர்ந்து] - எல்லாவற்றாலும் இவையநுஷ்ட்டித்தாரில் இவர்களுக்கு அவ்வருகில்லை யென்னும்படி எல்லையிலே நிற்கை. [அமைவுடைமுதல்கெடல்] - இதின்பலமான ஸ்ருஷ்ட்யாதிகள் மிகவும்விதேயமாயிருக்கை. [அமைவுடைமுதல்] - ப்ரஹ்மா ஜகத்ஸ்ருஷ்டிபண்ணினால் ''ஸர்வேச்வரனோ!'' என்று சங்கிக்க வேண்டும்படியிருக்கை. [கெடல்] - ஸம்ஹாரம். [ஒடிவிடை] - அவாந்தரஸம்ஹாரம். [அறநிலமதுவா மமைவுடை] - மிகவுங் கைவந்திருக்கும் சமைவையுடைய. [அமரரும்] - ப்ரஹ்மாதிகளும். [யாவையும்] - அசேதநங்களும். [யாவரும்] - சேதநரும். [தானு மமைவுடைநாரணன்] - தானென்கிற சொல்லுக்குள்ளே ப்ரகாரமாய் அந்வயிக்கையாலே நாரணனென்னும் திருநாமத்தையுடையவன். [மாயையை யறிபவர் யாரே] ஸகல சேதநாசேதநங்களையும் தனக்கு ப்ரகாரமாகவுடைய தான் தன்னுடையவிபூதியிலே ஒருப்ரகாரத்துக்குத் தான் ப்ரகாரமாய் அவர்களுக்கு நியாம்யனுய் நிற்கிற ஆச்சர்யம் ஒருவர்க்கும் நிலமோ? ''பிதா புத்ரேண பித்ருமாந் யோநியோநௌ நாவேதவிந்மநுதே தம் ப்ருஹந்தம்'' இத்யாதி. நித்ய ஸூரிகள் அநுபவத்திலே அந்யபரராகையாலே அறிய மாட்டார்கள்; ப்ரஹ்மாதிகள் துர்மாநத்தாலே அறியமாட்டார்கள்; ஸம்ஸாரிகள் விஷயப்ரவணராய் அறியார்கள்; இவர்போல்வார் ''எத்திறம்'' என்று மோஹித்துக்கிடப்பர்கள்.

ஈடு.—மூன்றும்பாட்டு. எளியனென்றார், எளிமையை ஸப்ரகாரமாக அருளிச்செய்தார்; இவனுடைய அவதாரரஹஸ்யம் ஒருவர்க்கும் நிலமல்லவென்கிறார் இதில்.

[அமைவுடையறநெறி இத்யாதி] ஒரு தர்மத்தை அநுஷ்ட்டியாநிற்கச் செய்தே இப்போதே பலம்பெறு தொழியிலும் ஒழியும்; இடையிலே சில விக்நங்கள் வரிலும் வரும்; அங்ஙனன்றியே, சக்ரவர்த்தி, க்ஷத்ரிபண்ணி நாலு ரத்நத்தை எடுத்துக்கொண்டாற் போலே பலத்தோடே ஸந்திப்பிக்கக்கடவ தர்மமார்க்கம் எல்லாவற்றாலும், ''உயர்வறவுயர் நலமுடையவன்'' என்று ஸர்வேச்வரன் குணங்களால் உயர்ந்திருக்குமா போலே 'இதுக்கு இவனுக்கவ்வருகு ஒருவருமில்லை' என்னும்படி சமைந்திருக்கை. [அமைவுடை முதல் இத்யாதி] ப்ரஹ்மா ஜகத்ஸ்ருஷ்டி பண்ணினால் 'ஸர்வேச்வரனோ?' என்று சங்கிக்கவேண்டும்படியிருக்கை. இப்படி சமைவை யுடைத்தான ஸ்ருஷ்டியென்ன, அப்படி யிருந்துள்ள ஸம்ஹாரமென்ன, இடையொடிவென்ன. இடை-இடையிலே, நடுவே. ஒடிவு-ஸம்ஹாரம், அவாந்தர ஸம்ஹாரமென்றபடி. இவை [அறநிலமதுவாம்] இவை தங்களுக்கு நிலையிட்டுக் கொடுத்த ஸர்வேச்வரனையும் மறுத்துக் கேள்விகொள்ளவேண்டாதபடி மிகவும் விதேயமாம்படி சமைந்த ப்ரஹ்மாதிகளும். [யாவையும்] அசேதநங்களும். [யாவரும்] சேதநரும். [தானும் அமை

அடை நாரணன்] சேதநா சேநங்களெல்லாம் தானென்கிற சொல்லுக்குள்ளே ப்ரகாரமாய் அந்வயிக்கும்படியான சமைவையுடையனுகையாலே நாராயணனென்னுந் திருநாமத்தை யுடையவனுடைய. [மாயையை அறிபவர்யாரே] இவனுடைய அவதாரரஹஸ்யம் ஒருவர்க்கும் அறிய நிலமல்ல வென்கிறார். ப்ரகாரியான தான், ப்ரகாரமான வஸ்துவிலே ஒன்று 'என்மகன்' என்று அபிமாநிக்கும்படி வந்துபிறந்த இவ்வாச்சர்யம் ஒருவர்க்கும் நிலமல்ல வென்கிறார். [தானும் அமைவுடை நாரணன்] ஒருவன் ஒருவனை 'உனக்கு ஜீவநம் என்ன வேணும்?' என்றால், தன்புத்ராதிகளையுங் கூட்டிக்கொண்டு 'எனக்குக் கலநெல்லு வேணும்' என்னுகின்றானிறே; அப்படியே இவையடங்கலும் தன் 'அஹம்' சப்தத்துக்குள்ளே யடங்கி, தான் இவற்றுக்கு அபிமாநியா யிருக்கும்படியைச் சொல்லுகிறது. [அறிபவர் யாரே] நித்யஸூரிகள் பரத்வாநுபவம் பண்ணுகையாலே அறியார்கள்; ஸம்ஸாரிகள் நாஸ்திகராகையாலே அறியார்கள்; ப்ரஹ்மாதிகள் தந்தாமறிவாலே அறிய இருக்கிறவர்களாகையாலே அறியார்கள்; மயர்வறமதிநல மருளப்பெற்றவர்கள் மோஹித்துக்கிடப்பர்கள்; ஸ்வதஸ் ஸர்வஜ்ஞனை தானும் *ஜந்ம கர்ம ச மே திவ்யம்* என்னுமாகையாலே ஒருவர்க்கும் நிலமல்ல வென்கிறார்.

யாருமோர்நிலைமையனென அறிவரியவெம்பெருமான்*
யாருமோர்நிலைமையனென அறிவெளியவெம்பெருமான்*
பேருமோராயிரம் பிறபலவுடையவெம்பெருமான்*
பேருமோருருவமும் உளதில்லையிலதில்லைபிணக்கே* **(4)**

ஓ.—நாலாம்பாட்டில், இப்படி யிருக்கிற திவ்யாவதாரங்கள் ஒருவர்க்கும் நிலமன்றோ வென்னில்;—இதெல்லாம் ஆச்ரிதர்க்கு அத்யந்தஸுலபமாய், அநாச்ரிதர்க்கு அத்யந்த துர்லபமாயிருக்குமென்கிறார்.

[யாருமென்று தொடங்கி] - எத்தனையேனும் அறிவுடையாரேயாகிலும் அநாச்ரிதரால் ஒரு ஸ்தூலாகாரமும் அறிய அரியனாய், ஒன்றும் அறிவிலராகிலும் ஆச்ரிதர்க்கு இப்படிப்பட்டானென்று பரிச்சேதிக்கலாம்படி யிருக்கும் ஸ்வபாவனாய்த் தன் குணசேஷ்டிதாதிகளுக்கு வாசகமான அநேகத் திருநாமங்களையும் மற்றும் அநேக விக்ரஹங்களையு முடையான். [பேருமென்று தொடங்கி] - இப்பேர்களிலே ஒருபேரும் ஒருவடிவுமாத்ரங்கூட அநாச்ரிதர் இல்லையென்றிருப்பர்; ஆச்ரிதர் இவையெல்லா முண்டென் றிருப்பர்; இப்படி நித்யவிப்ரதிபந்நமாயிருக்கும். பலகாலும் 'எம்பெருமான்' என்று ஆச்ரிதர்க்கு எளியனாய் அநாச்ரிதர்க்கு அரியனானபடியை அநுஸந்தித்திருக்கிறபடி.

இ.—நாலாம்பாட்டில், இப்படி யிருக்கிற அவதார ஸௌலப்யம் ஒருவர்க்கும் நிலமன்றோ வென்னில்;—ஆச்ரிதர்க்கு அத்யந்த ஸுலபமாய், அநாச்ரிதர்க்கு அத்யந்த துர்லபமாயிருக்கு மென்கிறார்.

[யாருமோர்நிலைமையனென அறிவரிய] - அநாச்ரிதர் எத்தனையேனும் அதிசயித ஜ்ஞாநரான ப்ரஹ்மாதிகளேயாகிலும் ஒருஸ்தூலாகாரமும் அறிய அரியனாயிருக்கும். தன்னை யுட்புக்கறிய மாட்டிற்றிலர்களேயாகிலும் ஆபாதப்ரதீத்யாயும் அறியப்போகாதபடியிருக்கும்; "நேரே கடிக்கமலத்துள்ளிருந்துங் காண்கிலான் கண்ணனடிக்கமலந்தன்னை யயன்" என்னக்கடவதிறே [எம்பெருமான்] - உகவாதார் கண்படாதபடி யிருக்கிறவிடம் தனபேருக உகக்கிறார். [யாருமோர் இத்யாதி] - அறிவிற்குறைந்த இடைச்சிகள்; குரங்குகளேயாகிலும் ஆச்ரிதர்க்கு இப்படிப் பட்டானென்று பரிச்சேதிக்கலாம்படி இருக்கும்- [எம்பெருமான்] - ஆச்ரிதர்க்குக் கைபுந்திருக்கிற இடமும் தம்பேருக 'உகக்கிறார். "நமோநமோ வாங்மநஸாதிபூமயே" இத்யாதி. [பேருமோராயிரம்] - ஆச்ரிதர்க்கு அநுபாவ்யமான குணசேஷ்டிதங்களுக்கு வாசகமான அநேகம் திருநாமங்களையுடையவன். [பிறபலவுடைய] - இத்திருநாமங்களைச்சொல்லிக் கூப்பிட்டார்க்குக் காட்டும் வடிவைச் சொல்லுகிறது. 'பிற' என்ன, வடிவைக்காட்டுமோ? என்னில், -

நாமத்தைச் சொன்ன அநந்தரம் 'பிற' என்றால் ரூபத்தைக் காட்டுமிறே. "நாமரூபே வ்யாகர வாணி". [பேருமோருருவமுமுளதில்லை] - இவற்றிலே ஒருபேரும் ஓருருவமும் அநாச்ரிதர்க்கு ப்ரகாசி யாமையாலே இல்லையென்றிருப்பர்கள். [இலதில்லை] - ஆச்ரிதர்க்கு இவையெல்லாம் ப்ரகாசித் திருக்கையாலே உண்டென்றிருப்பர்கள். [பிணக்கே] - இப்படி நித்யவிப்ரதிபந்நமாய்ச் செல்லா நிற்கும்.

ஈடு.—நாலாம்பாட்டு. இப்படியிருக்கிற அவதாரஸௌலப்யம் ஒருவர்க்கும் அறிய நிலமன்றே? என்னில்,—ஆச்ரிதர்க்கு அத்யந்தஸுலபனாய் அநாச்ரிதர்க்கு அத்யந்த துர்லபனாயிருக்குமென்கிறார்.

[யாரும்] எத்தனையேனும் அதிசயிதஜ்ஞாநரா யிருக்குமவர்களேயாகிலும் ஸ்வயத்நத்தாலே காணுமன்று 'இன்னபடிப்பட்டிருப்பதொரு ஸ்வபாவத்தை யுடையவன்' என்று அறிய வொண்ணாத என்ஸ்வாமியானவன். [யாரும்] இந்த யச்சப்தம் தாழ்ச்சிக்கு எல்லையிலே நிற்கிறது. ஜந்ம வ்ருத்த ஜ்ஞாநங்களால் ஓரளவுமில்லையேயாகிலும் தானே காட்டக் காணுமவர்களுக்குத் தன்படிகளெல்லாம் அறியலாயிருக்கும். எங்கே கண்டோம்? என்னில் - ஒருகுரங்கு, வேடச்சி, இடைச்சி இவர்களுக்கு எளியனாயிருக்கக் கண்டோமிறே. [எம்பெருமான்] ஆச்ரிதர்க்கு எளியனாய் அநாச்ரிதர்க்கு அரியனான என்னையன் நிலையிருந்தபடியென் என்று எழுதிக் கொடுக்கிறார்; *நமோநமோ வாங்மநஸாதிபூமயே நமோநமோ வாங்மநஸைகபூமயே* என்றாற்போலே. [பேருமோராயிரம்] அநுபவிதாக்களுக்கு இழிந்தவிடமெல்லாம் துறையாம்படி அநேகந்திரு நாமங்களையுடையனாயிருக்கை. குணத்துக்கு வாசகமாயும் ஸ்வரூபத்துக்கு வாசகமாயும் வருமவற்றுக்கு ஓரெல்லையில்லையிறே, *தேவோ நாமஸஹஸ்ரவாந்* என்கிறபடியே. [பிறபல வுடைய] அந்த நாமத்வாரா காணும் அநேகந்திருமேனிகளை யுடையனாயிருக்கை. 'பிற' என்ன, திருமேனியைக் காட்டுமோ? என்னில்,—*நாமரூபஞ்ச பூதாநாம்*, *நாமரூபே வ்யாகரவாணி* என்று நாமத்தோடே சேர ரூபத்தையுஞ் சொல்லக்கடவது. அவ்வளவேயல்ல, இவர்தாமும் இத்தை அநுபாஷிக்கிற இடத்திலே "பேருமோருருவமும்" என்று அருளிச்செய்து வைத்தார். [பேருமோருருவமும்] இவற்றிலே ஒருதிருநாமமும், ஒரு விக்ரஹமும். [உளதில்லை] அநாச்ரிதர்க்கு ஸ்தூலப்ரதிபத்தியும் அரிதாயிருக்கும். [இலதில்லை] ஆச்ரிதர்க்கு எல்லாங் காணலாமாகையாலே இலதில்லை. [பிணக்கே] ஆச்ரிதர் எல்லாம் காண்கையாலே மங்களாசாஸநம் பண்ணி நிற்பர்கள்; அநாச்ரிதர் இவை இல்லையென்றிருக்கையாலே முதலிலே இட்டார்கள்; இரண்டுக்கும் நடுவே வஸ்து நித்யமாகப் பெற்றோமே! என்று தாம் இனியராகிறார். (அன்றியே [பேருமோருருவமுமுளது] திருநாமமும் திருநாமத்துக்கு வாச்யமான திருமேனியும் நித்யம்; இலதில்லை. [இல்லைபிணக்கே] இவ்விடையாட்டத்தில் விவாதம் வேண்டாவென்கிறார்).

பிணக்கறவறுவகைச்சமயமும் நெறியுள்ளியுரைத்த*
கணக்கறுநலத்தனன் அந்தமிலாதியம்பகவன்*
வணக்குடைத்தவநெறி வழிநின்றுபுறநெறிகளைகட்டு*
உணக்குமின்பசையற அவனுடையுணர்வுகொண்டுணர்ந்தே. (5)

ஓ.—அஞ்சாம்பாட்டில், இப்படி அவன் தூரஸ்த்தனாகையாலே ஆச்ரயிப்பார்க்கு துர்லபனென்னுமிடத்தைப் பரிஹரித்து, ஆழ்வார் - ஸ்ரீகீதையில்அருளிச்செய்தபடியே பக்தியோகத்தாலே எம்பெருமானை ஆச்ரயியுங்கோளென்கிறார்.

[பிணக்கற என்று தொடங்கி] - ஷட்ஸமயங்களுக்கும் வைதிகஸமயத்துக்கும் அந்யோந்ய விரோதத்தாலுள்ள பிணக்கு அறும்படி வேதமார்க்கத்தாலே ஆராய்ந்து அருளிச்செய்த பரமோதாரன். [அந்தமிலாதியம்பகவன்] - தனக்கு அந்தமின்றி எல்லார்க்கும் தான் ஆதியாய் ஸ்வாபாவிகமாய்

ஹேயப்ரத்யநீகமான ஜ்ஞாநாதி கல்யாணகுணபரிபூர்ணன். இங்ஙனே சொல்லிற்று, இவன் சொல்லியதை விச்வஸிக்கலாம்படி இவனுடைய ஆப்ததமத்வம் தோற்றுகைக்காக. [வணக்கென்று தொடங்கி] - பக்தியோகத்தை நிரந்தரமாக அநுஷ்டித்து பாஹ்ய விஷயங்களாகிற விரோதிகளைத் தவிர்த்து அவற்றின் ருசியையும் ஸவாஸநமாக விடுங்கோள்; ஆச்ரிதர்க்கு இனிதாயிருந்ததேயாகிலும் இத்தைப் பெருவருத்தமாகக் கொள்ளும் பகவதபிப்ராயத்தாலே 'தவநெறி' என்கிறது. [அவனுடைபுணர்வு கொண்டுணர்ந்து] - பக்திரூப தத்விஷயஜ்ஞாநத்தாலேயாதல், அவன் அருளிச்செய்த சரமச்லோகோக்தமான உபாயஜ்ஞாநத்தாலேயாதல்.

இ.—அஞ்சாம்பாட்டில், இப்படி ஆச்ரயணீயன் ஸுலபனானபின்பு ஆச்ரயிக்கும் வழியென்? என்ன,-அவன் ஸ்ரீகீதையிலே அருளிச்செய்துவைத்த பக்திமார்க்கத்தாலே ஆச்ரயியுங்கோ ளென்கிறார்.

[பிணக்கற அறுவகைச்சமயமும்] - ஆறுவகைப்பட்ட பாஹ்யஸமயத்துக்கு வைதிக ஸமயத்தோடு உண்டான பிணக்கு அற. [நெறியுள்ளியுரைத்த] - வேதமார்க்கத்தை ஆராய்ந்து அருளிச்செய்தபடி. "வாக்விவ்ருதாச்ச வேதா:" என்று தான் சொன்னதடங்க வழியாயிருக்க ப்ரஜைகள்பக்கல் பரிவாலே, ஓரர்த்தம்போதியாதவன் நிரூபிக்குமாபோலே ஆராய்ந்து அருளிச்செய்தபடி. [கணக்கறுநலத்தனன்] - எல்லையிறந்த ஔதார்யகுணங்களை யுடையவன். [அந்த மிலாதி] - தனக்கு முடிவின்றிக்கே எல்லார்க்கும் காரணபூதனாயிருக்கும். [அம்பகவன்] - ஹேயப்ரத்யநீகமான ஜ்ஞாநாதிகுண பரிபூர்ணனாயிருக்கை. இத்தால் - உதாரனாய் ப்ராப்தனாய் ஆப்தனாயிருந்தவன் வார்த்தையாகையாலே விச்வஸநீயமென்கை. [வணக்குடைத்தவநெறிவழி நின்று] - வணக்கத்தையுடைய பக்திமார்க்கமாகிற வழியிலே நிலைநின்று. பக்திசரீரத்திலே "மாம்நமஸ்குரு" என்கையாலே "வணக்குடை" என்கிறது. தபச்சப்தத்தாலே பக்தியைச் சொல்லிற்று; பக்தி ஜ்ஞாநவிசேஷமாகையாலே "யஸ்ய ஜ்ஞாநமயந்தப:" என்கிற ந்யாயத்தாலே யென்னுதல்; இவனுடைய ப்ரேமமாத்ரத்தையே குவாலாக நினைத்திருக்கும் அவனபிப்ராயத்தாலேயாதல்; [புறநெறிகளை கட்டு] - இதுக்கு விரோதியான சப்தாதிவிஷயங்களிற் போகிற வழியாகிற களையைக் கடிந்து-பறித்து. இத்தை 'நெறி' எனபானென்? என்னில்; - இருந்ததே குடியாகப்போகிற மஹாபதமாகையாலே; துர்மார்க்க மென்னக் கடவதிறே. [உணக்குமின் பசையற] பறித்தாலும் கிடந்திடத்தே கிடக்குமாகில், பருவம் செய்யுமிறே. அதுக்காக ஸவாஸநமாக விடுங்கோள். இது செய்வது என்கொண்டு? என்னில்;-[அவனுடைபுணர்வுகொண்டுணர்ந்தே] - ததுக்தஜ்ஞாநம், தத்விஷயஜ்ஞாநமென்னுதல். அவனை விஷயீகரித்த ஜ்ஞாநத்தைக் கொண்டு விலக்ஷண விஷயத்திலே நெஞ்சைவைத்து, இவற்றின் தோஷத்தை தர்சித்து விடுங்கோள், அவனை சரணம்புக்கு, இவற்றை ஸவாஸநமாக விடுங்கோ ளென்னவுமாம். "தாநி ஸர்வாணி ஸம்யம்ய", "மாமேவயே ப்ரபத்யந்தே" சரமச்லோகத்தின்படியே;

ஈடு.— அஞ்சாம்பாட்டு. பலகாலும் பஜியுங்கோ ளென்னாநின்றீர்; பஜநோபாயம் இருக்கும்படியை அருளிச்செய்யீரென்ன, இன்று நான் உபதேசிக்கவேணுமோ? அவன்தான் ஸ்ரீ கீதையிலே அருளிச்செய்த பக்திமார்க்கத்தாலே அவனை ஆச்ரயியுங்கோ ளென்கிறார்.

[பிணக்கற அறுவகைச்சமயமும்] வைதிகஸமயத்துக்கும் பாஹ்ய ஷட்ஸமயங்களுக்கும் தன்னில்தானுண்டான பிணக்கு அறும்படியாக. [நெறியுள்ளியுரைத்த] தான்சொல்லிற்றடைய வேதார்த்தமா யிருக்கச்செய்தே, தந்தாமுக்கென்ன ஓரர்த்தம் போதியாதார் ஆராய்ந்து சொல்லுமாபோலே விசாரித்து அருளிச்செய்தான். அதுக்கு நிலையென்? என்னில்;— அஹ்ருதயமாகச் சொல்லிலும் நன்றாயிருக்கச்செய்தே, ப்ரஜைகளுடைய ஹிதத்திலுண்டான ஆதராதிசயத்தாலே, சடக்கெனச் சொன்னால் 'வாய்வந்தபடி சொன்னான் நிரூபியாதே' என்பர்களென்று ஆராய்ந்துசொன்னானாகச் சொன்னபடி. [கணக்கறுநலத்தனன்] எல்லையில்லாத குணத்தையுடையவனென்னுதல், எல்லையில்லாத ஸ்நேஹத்தையுடையவனென்னுதல்; ஆர் இரக்கச் செய்தான்? தன் வாத்ஸல்யத்தாலே அருளிச்செய்தானித்தனையிறே. வாத்ஸல்யத்தாலே சொல்லிற்றெல்லாம் அர்த்தமாமித்தனையோ? என்னில்,—[அந்த மிலாதி] - ஆப்ததமன். எல்லார்க்கும் உத்பத்தி விநாசங்களாலேயிறே ஜ்ஞாநஸங்கோசம் பிறப்பது; இவனுக்கு அவையில்லாமையாலே அகர்மவச்ய னென்கிறது. [அம்பகவன்] ஜ்ஞாநாதிகளால் அல்பம்

உத்கர்ஷமுடையவன் பக்கலிலே பகவச்சப்தம் வர்த்தியாநின்றதிறே; *அந்யத்ர ஹ்யுபசாரத:* பகவச்சப்தம் முக்யமாக வசிப்பது இவன்பக்கலிலே, அல்லாதார் பக்கல் ஔபசாரிகம். [அம்பகவன் வணக்குடைத்தவநெறிவழி நின்று] - *நமஸ்யந்தச்ச மாம் பக்த்யா* என்று பக்தி சரீரத்திலே நின்று அருளிச்செய்தானிறே. அங்கநாபரிஷ்வங்கம்போலே போகரூபமாயிறே இதுதான் இருப்பது [வணக்குடைத்தவநெறிவழிநின்று] - வணக்கத்தையுடைய பக்திமார்க்க மாகிற வழியிலே நின்று. பக்திசரீரத்திலே *மாம் நமஸ்குரு* என்கையாலே "வணக்குடை" என்கிறது. தபச்சப்தத்தாலே - பக்தியைச் சொல்லிற்று, பக்தி ஜ்ஞாநவிசேஷமாகையாலே. *யஸ்ய ஜ்ஞாநமயம் தப:* என்கிற ந்யாயத்தாலே யென்னுதல், இவனுடைய ப்ரேம மாத்ரத் தையே குவாலாக நினைத்திருக்கும் பகவதபிப்ராயத்தாலேயாதல். [புறநெறிகளைகட்டு] - புற நெறியாகிற களையைக் கடிந்து - பறித்து. கட்டல் - களைதல். பக்திவிஷயமான போது, பாலாந்தரத்திலே போம் விலக்கடிகளைத் தள்ளி என்றபடி; ப்ரபத்திவிஷயமானபோது, இதரஸாதநங்களைத் தள்ளி என்றபடி. [உணக்குமின் பசையற] *ரஸவர்ஜம்* என்கிறபடியே பாஹ்யவிஷய ப்ராவண்யத்தை ருசிவாஸநைகளோடே விடுங்கோள். இதெல்லாம் என் கொண்டு தான்? என்னில்,—[அவனுடையுணர்வுகொண்டுணர்ந்து] - தத்விஷயஜ்ஞாநத்தைக் கொண்டு என்னுதல், ததுக்தஜ்ஞானத்தைக்கொண்டு என்னுதல், பக்திமார்க்கத்தைக் கொண்டு என்னுதல், அவன் அருளிச்செய்த சரமச்லோகத்திற்படியைப் பற்றிநின்று என்னுதல்.

உணர்ந்துணர்ந்திழிந்தகன்று உயர்ந்துருவியந்தவிந்நிலைமை*
உணர்ந்துணர்ந்துணரிலும் இறைநிலையுணர்வரிதுயிர்காள்!*
உணர்ந்துணர்ந்துரைத்துரைத்து அரியயனரனென்னுமிவரை*
உணர்ந்துணர்ந்துரைத்துரைத்து இறைஞ்சுமின்மனப்பட்டதொன்றே (6)

ஒ.—ஆறும்பாட்டில், ஸர்வேச்வரன் ஸௌலப்யத்துக்காக ப்ரஹ்ம ருத்ரர்களோடு ஸஜாதீயனாய்த் திருவவதாரம் பண்ணுகையாலே ஸமாச்ரயணீயன் இன்னான் என்று நிர்ணயிக்கவொண்ணாமே பழைய துர்லபத்வசங்கை மீளவும் ப்ரஸங்கிக்க, மூர்த்தித்ரய நிர்ணயோபாயத்தைச் சொல்லிக்கொண்டு அந்த தௌர்லப்யத்தைப் பரிஹரிக்கிறார்.

[உணர்ந்து உணர்ந்து] - வீப்ஸையாலே ஆத்மாவுக்கு ஜ்ஞாத்ருத்வம் ஆகந்துகமன்று, ஸ்வாபா விக நித்யதர்மம் என்கிறது. [இழிந்தென்று தொடங்கி] - ஸ்வஜ்ஞாந ப்ரபையாலே பத்துத்திக்கும் வ்யாபித்து ப்ரக்ருதிவியுக்தமாய்க்கொண்டு இப்படியிருக்கிற ஆத்மாவின் நிலைமையை ச்ரவணமநநாதி களாலே ஸாக்ஷாத்கரிக்கக்கூடிலும் ஸர்வேச்வரன் ப்ரஹ்மருத்ரர்களோடொக்கத்தன்னை ஸங்கோசித்துக் கொண்டு நிற்கையாலே இவர்களில் ஈச்வரன் இன்னான் என்று அறிகை அரிது. [உணர்ந்தென்று தொடங்கி] - குணரூபநாமாதிகளாலும் தத்ப்ரதிபாதகமான ப்ரமாணங்களாலும் இவர்கள் மூவரிலும் எவன் ஈச்வரனென்று மிகவும் ஆராய்ந்து ஈச்வரதயா நிர்ணீதனானவனை மநநாதிகளாலே ஹ்ருதயத் திலே ப்ரதிஷ்டிதனாம்படி அநுஸந்தித்து ஆச்ரயியுங்கோள்.

இ.—ஆறும்பாட்டில், "மத்யேவிரிஞ்சகிரிசம் ப்ரதமாவதார:" என்று ப்ரதமாவதாரம் ப்ரஹ்மருத்ராதி ஸஜாதீயமாயிருக்கையாலே பிரித்து ப்ரதிபத்திபண்ண அரிதாகையால் பழைய துர்லபத்வமே ஸம்பவித் திருந்ததீ! என்ன, த்ரிமூர்த்திஸாம்யத்தைப் பரிஹரிக்கிறார்.

[உணர்ந்துஉணர்ந்து] - உணர்வென்னாதே 'உணர்ந்து' என்கையாலே - 'ஜ்ஞப்திமாத்ரம் வஸ்து' என்கிறவனை நிரஸிக்கிறது. வீப்ஸையாலே - ஆகந்துக சைதந்யவாதியை நிரஸிக்கிறது. ஜ்ஞாத்ருத்வம் நித்யதர்மமாகையாலே - "ஜ்ஞாநக்ரியா கர்த்ருத்வம் ஜ்ஞாத்ருத்வம்" அதுதான் அநித்யம்' என்கிற க்ரியாவாதியையும் நிரஸிக்கிறது. [இழிந்தகன்று உயர்ந்து] - தான் அணுபரிமாணனாயிருக்க ஸ்வஜ்ஞாநத்தாலே பத்துத்திக்கையும் வ்யாபித்திருக்கும். "வாலாக்ர சதபாகஸ்ய" இத்யாதி.

[உருவியந்த] - ஆகையாலே ஜடமான அசித்திற்காட்டில் வியந்திருக்கும் - வேறுபட்டிருக்கும். 'உருவு' என்று பதபேதமானபோது, இயத்தல் - கடத்தலாய், கடந்திருக்கு மென்னவுமாம். வேறுபாடுதான் ப்ரகாரித்வ ப்ரமாத்ருத்வ நியந்த்ருத்வங்களாலே. [இந்நிலைமை] - ஸந்நிஹிதனான ஆத்மாவினுடைய ஸ்த்திதி. [உணர்ந்துஉணர்ந்துஉணரிலும்] - ச்ரவணமநநாதிகளாலே ஸாக்ஷாத்கரித்தாலும் [இறைநிலை யுணர்வரிது] - ஈச்வரன் ப்ரஹ்மருத்ரர்களோடொக்கத் தன்னை ஸங்கோசித்து நிற்கையாலே ஈச்வரன் இன்னானென்று அறிகை அரிது. [உயிர்காள்] - சேதநராயுள்ளீர்காள்! ஜடவஸ்துவாய் அறியாதொழியப் பெற்றதில்லை. சேதநராய் ஜ்ஞாதவ்யங்களை அறியப்பெற்றதில்லை. உங்கள் நிலை யிருந்தபடி யென்? நீர் அறிவிக்க அறியப்பார்த்த எங்களுக்கு அவ்வருமை உண்டோ? என்ன, ஆகில் கேளுங்கோ ளென்கிறார். [உணர்ந்தென்று தொடங்கி] - அரியயனரனென்னு மிவரை உணர்ந்துஉணர்ந்து உரைத்துஉரைத்து-இவர் களுடைய குணரூபவிபூதிநாமாதிகளையும் தத்ப்ரதிபாதகமான ப்ரமாணங்களையும் மிகவும் ஆராய்ந்து [உணர்ந்துஉணர்ந்து இத்யாதி] - மனப்பட்டதொன்றை உணர்ந்துஉணர்ந்து உரைத்துஉரைத்து இறைஞ்சுமின் - உங்களுக்கேற ஈச்வரதயா நிர்ணீதமான வஸ்துவை மநநாதிகளாலே அநுஸந்தித்தும், தத்வாசகமான நாமங்களை உச்சரித்தும் ஆச்ரயியுங்கோள். "வ்யாஹரந் மாமநுஸ்மரந்".

ஈடு.—ஆறாம்பாட்டு. அவதாரத்திலே ஆச்ரயியுங்கோளென்று நின்றீர்; *மத்யே விரிஞ்சகிரிசம் ப்ரதமாவதார:* என்கிறபடியே ப்ரஹ்மருத்ரர்கள் நடுவே அவதீர்ணனாய்நிற்கிற நிலையாயிருந்தது ப்ரதமாவதாரம்; அதில் மூவரும் ஒத்த கார்யத்திலே அதிகரித்துநின்றார்கள்; இப்படி நிற்கையாலே, மூவரும் ப்ரதாநரோ? மூவரிலே ஒருவன் ப்ரதாநனோ? மூவர்க்கும் அவ்வருகே ஒருவன் ப்ரதாநனோ? என்று எங்களால் விவேகிக்கப்போகாமையாலே ஆச்ரயணத்திலே அருமைகூடும்படியாயிருந்தது; ஆச்ரயணீயவஸ்துவை நிரூபித்துத் தரலாகாதோ நாங்கள் ஆச்ரயிக்கும்படி? என்ன,—'காண்கிற தேஹமே ஆத்மா' என்றிருக்கும் நிலைதவிர்ந்து, 'தேஹாதிரிக்தமா யிருப்பதொரு ஆத்மவஸ்து உண்டு' என்று அறிகைதானே அரிது; வருந்தி அத்தை யறிந்தானேயாகிலும், ப்ரஹ்மருத்ராதிகளை சரீரமாகக்கொண்டுதான் சரீரியாய்நிற்கிற ஸர்வேச்வரன்படிதானே யறியப்போகாது; ஆனபின்பு, இவ்வழியே இழிந்து ஆச்ரயிக்கப் பாருங்கோள் என்று, ஆச்ரயணீயவஸ்து இன்னதென்றும், ஆச்ரயிக்கும் ப்ரகாரம் இன்னதென்றும் அருளிச்செய்கிறார்.

[உணர்ந்து] உணர்வு என்னாதே "உணர்ந்து" என்கையாலே, ஜ்ஞப்திமாத்ரமே யுள்ளது, ஜ்ஞாத்ரம்ச மில்லை' என்கிற பக்ஷத்தைத் தவிர்க்கிறது. "உணர்ந்துணர்ந்து" என்கிற வீப்ஸைக்குக்கருத்து 'சைதந்யம் ஆகந்துகம், முக்த்யவஸ்த்தையிலும் பாஷாணகல்பமா யிருக்கும்' என்கிற பக்ஷத்தைத் தவிர்த்து, சைதந்யம் நித்யமா யிருக்கு மென்னுமிடத்தைச் சொல்லுகிறது. ஜ்ஞாத்ருத்வம் நித்யமாகையாலே 'ஜ்ஞாநக்ரியா கர்த்ருத்வம்—ஜ்ஞாத்ருத்வம்; அதுதான் அநித்யம்' என்கிற க்ரியாவாதியையும் நிரஸிக்கிறது. [இழிந்த கன்றுயர்ந்து] இச்சேதநன் தான் அணுபரிமாணனா யிருக்கச்செய்தேயும், ஈச்வரன் ஸ்வரூபத்தாலே எங்கும் வ்யாபித்திருக்குமாபோலே ஜ்ஞாநத்தாலே எங்கும் வ்யாபித்திருக்கு மென்கிறது. *பாதே மே வேதநா, சிரஸி மே வேதநா*என்றிருக்குர்படியைச் சொல்லுகிறது. [உருவியந்தவிந்நிலைமை] உருவிற்காட்டில் வியந்த-வேறுபட்டிருக்கிற இந்நிலைமையுண்டு இந்த ஆத்மாவினுடைய ஸ்வரூபம்; அன்றியே, உருவு இயந்த என்று பதபேதமானபோது, இயத்தல் கடத்தலாய், உருவிற்காட்டில் கடந்திருக்கும்—வேறுபட்டிருக்கு மென்னவுமாம். ஆக, இரண்டாலும் ஜடமான சரீரத்திற்காட்டில் வேறுபட்டிருக்கிற ஆத்மாவினுடைய ஸ்வரூபத்தைக் கேவலச்ரவணமநநாதிகளாலே ஸாக்ஷாத்கரிக்கக்கூடிலும், தேஹாதிரிக்தமாயிருக்கிற ஆத்மாவினுடைய ஸ்வரூபத்தை யோகசாஸ்த்ரத்திற்சொல்லுகிற க்ரமத்தாலே இழிந்து வருந்தி ஒருபடி யறிந்தானாலும். [இறைநிலையுணர்வரிது] ஸர்வேச்வரன் ப்ரஹ்மருத்ரர்களுக்கு அந்தராத்மாவாய் அவர்களை சரீரமாகக் கொண்டு தான் சரீரியாய் நிற்கிற நிலை அறியப் போகாது. [உயிர்காள்] சைதந்யயோக்ய மன்றிக்கே யிருப்பதொன்றாய்த்தான் இழக்கப் பெற்றதோ? சேதநரானபின்பு அதின்கார்யம் பிறக்கப்பெற்றதில்லையே! அறிவுகேடராய் நீங்கள் பட்டதென்? 'எங்களறிவும் அறியாமையும் கிடக்கிடீர்; அறிந்த நீர் அருளிச் செய்யீர்,

நாங்கள் அப்படி ஆச்ரயிக்க' என்ன, அருளிச்செய்கிறார்மேல்: [அரியயனர னென்னுமிவரை யுணர்ந்துணர்ந்துரைத்துரைத்து]— [உணர்ந்துணர்ந்து] ஒருவுணர்த்தி ஸ்வரூபபரம், ஒருவுணர்த்தி ஸ்வபாவபரம். உரைத்துரைத்து—ஸ்வரூபபரமான ப்ரமாணங்களையும், ஸ்வபாவபரமான ப்ரமாணங்களையும். விரோதிநிரஸநசீலனாய் ரக்ஷகனாயிருக்கும் ஒருவன், ஒருவன் திருநாபீகமலத்திலே அவ்யவதாநேந பிறந்தவனாயிருக்கும், ஒருவன் ஸம்ஹார மொன்றுக்கே கடவனாயிருக்கும்; இவர்களை ப்ரதிபாதிக்கிற ப்ரமாணங்களை ஆராய்ந்து பார்த்து. அவைதன்னைப் பலகாலுஞ் சொல்லிப்பார்த்து. லிங்கத்துக்கே உத்கர்ஷம் தோற்றும்படியாயிருப்பதொரு ப்ரபந்தம் பண்ணித் தரவேணு மென்பாரைப்போலே ஒரு வ்யக்தியிலே பக்ஷபதிக்கப்பாராதே இவர்கள் ஸ்வரூப ஸ்வபாவங்களைப் பலகாலும் ஆராய்ந்து பார்த்து, கோல்விழுக்காட்டாலே உத்கர்ஷங்கிடந்த வ்யக்தியைப்பற்றப் பார்ப்பது. இப்படி ஆராய்ந்தவாறே ஒருவஸ்துவே ப்ரதாநமென்று உங்கள் நெஞ்சிலே தோற்றும்; அவ்வஸ்துவை ச்ரவணமநநாதிகளாலே 'கைபுகுந்தது' என்று விச்வஸிக்கலாமளவும் ஆச்ரயிக்கப்பாருங்கோள்.

ஒன்றெனப்பலவென அறிவரும் வடிவினுள்நின்ற*
நன்றெழில்நாரணன் நான்முகனரனென்னுமிவரை*
ஒன்றநும்மனத்துவைத்து உள்ளிநும்மிருபசையறுத்து*
நன்றெனநலஞ்செய்வது அவனிடை நம்முடைநாளே.* (7)

ஒ.— ஏழாம்பாட்டில், மந்தாயுஸ்ஸுக்களான நீங்கள் நிர்ணயோபாயங்களாலே மூவரிலும் இன்னான் பரனென்று நிர்ணயித்து, ஈச்வரதயா நிர்ணீதனான இன்னானை ஆச்ரயியுங்கோளென்கிறார்.

[ஒன்றென்று தொடங்கி] - மூர்த்தித்ரயத்துக்கும் ஆத்மா ஒருவனோ? பலரோ? பலரானால் அவர்களில் ப்ரதாநன் எவன்? என்று அறியவொண்ணாதபடியையுடையராய் நின்ற. [நன்று எழில் நாரணன்] - தன்வடிவைக்கண்டால் தானே ஈச்வரனென்று தோற்றும்படி நல்ல எழிலையுடைய நாராயணன். [ஒன்ற நும் என்று தொடங்கி] - சொன்ன மூன்றுவகையாலும் விஸத்ருசமாயுள்ள இவர்களைப் பக்ஷபதியாதே.

இ.—ஏழாம்பாட்டில், இப்படி அருளிச்செய்தவிடத்திலும் அவர்கள் ஆறியிருந்தவாறே திரியட்டும் மந்தாயுஸ்ஸுக்களான நீங்கள் வஸ்து இன்னதென்று நிர்ணயித்து ஆச்ரயிக்கப் பாருங்கோ ளென்கிறார்.

[ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள் நின்ற] - மூர்த்தித்ரயமும் ஏகாத்மாதிஷ்டிதமோ? அநேகாத்மாதிஷ்டிதமோ? அநேகாத்மாதிஷ்டிதமானால் அவர்களில் ப்ரதாநன் எவன் என்று அறியவொண்ணாத ஸ்வபாவத்தை யுடையராய் நின்ற. [நன்றெழில்நாரணன்] - அநந்யபரமான நாராயணாநுவாகாதிகளை நினைக்கிறார். எழிலென்று "அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:" என்கிற புகரை நினைக்கிறது [நான்முகன் இத்யாதி] - ஸ்ருஷ்டிக்கு உறுப்பான பலமுகங்களையுடைய சதுர்முகன், அழிக்குந்தொழிலே கற்றிருக்கும் ருத்ரன், இவர்களோடு மற்றுள்ள சேதநாசேதநங்களோடு வாசியற ஸர்வமும் சரீரமென்னுமிடத்துக்கு வாசகமான திருநாமத்தை யுடையானொருவன். [என்னும் இவரை] - இப்படி விஸத்ருச ஸ்வபாவராயுள்ளவர்களை. [ஒன்றநும்மனத்துவைத்து] - இவனே நிர்வாஹகனாக வேணுமென்று பக்ஷபதியாதே 'ப்ரமாணகதிகளை ஆராய்ந்தால் கோல்விழுந்தவன் பரனாகிறான்' என்று மூவரையுமொக்க உங்கள் நெஞ்சிலே வைத்து. [உள்ளி] - ச்ருதிந்யாயங்களாலே ஆராய்ந்து [நும் இருபசையறுத்து] நீங்கள் ஈச்வரதயா சங்கித்த ப்ரஹ்மருத்ராதிகள்பக்கல் நசையறுத்து. [நும் இருபசை] - புருஷகதமான ரஜஸ்தமஸ்ஸுக்களால் வந்த சங்கையொழிய ப்ரமாணகதிகளால் அவர்கள்பக்கல் ஈச்வரத்வசங்கையு மில்லையென்கை. [நன்றெனநலஞ்செய்வது அவனிடை] - அவன்பக்கலிலே அநந்யப்ரயோஜந பக்தியைப் பண்ணப்பாருங்கோள். [நம்முடைநாளே] - க்ரமத்திலே செய்கிறோமென்றிராதே, சரீரத்தினுடைய நிலையில்லாமையை புத்திபண்ணிச் சடக்கென ஆச்ரயியுங்கோள். "நந்தந்த்யுதித ஆதித்யே நந்தந்த்யஸ்தமிதே ரவௌ, ஆத்மநோநாவபுத்த்யந்தே மநுஷ்யா ஜீவிதக்ஷயம்".

௮௫.—ஏழாம்பாட்டு. 'அப்படியே செய்கிறோம்' என்று ஆறியிருந்தார்கள்; ஐயோ! நீங்கள், உங்களுடைய ஆயுஸ்ஸினுடைய ஸ்த்திதியும், இழக்கிற விஷயத்தின் நன்மையும் அறியாமையிறே ஆறியிருக்கிறது; நீங்கள் முடிந்துபோவதற்கு முன்னே நிர்ணயோபாயங்களாலே வஸ்துஇன்னதென்று நிர்ணயித்து, நிர்ணீதனானவன்பக்கலிலே கடுக பக்தியைப் பண்ணப் பாருங்கோளென்று கீழ்ப்பாட்டுக்கு சேஷமாயிருக்கிறது இப்பாட்டும். நீங்கள் மந்தாயுஸ்ஸுக்களாகையாலே கடுகச் செய்துகொடுகின்று, 'செய்கிறோம்' என்னவேணும்; 'செய்கிறோம்' என்று செய்யவொண்ணாதென்கிற இதுவே விசேஷம் கீழ்ப்பாட்டிற்காட்டில்.

[ஒன்றென] மூவர் ப்ரதானராய் மூவர்க்கும் மூன்று சரீரமுண்டாய்த் தோற்றுகையாலே, மூன்றுசரீரத்திலும் ஒருவனே அதிஷ்ட்டித்துக்கொண்டு நிற்கிறானோ? அன்றியே, மூன்றிலும் மூன்று சேதநர் அதிஷ்ட்டித்துக்கொண்டு நிற்கிறார்களோ? என்று அறிய அரிய வடிவுகளையுடையராய் நிற்கிற. ஏகாத்மாதிஷ்ட்டிதமோ? அநேகாத்மாதிஷ்ட்டிதமோ? என்று அரிய வரிதான வடிவையுடையராய் நின்ற. [நன்றெழில்நாரணன்] அநந்யபரமான நாராயணாநுவாகாதிகளை நினைக்கிறார். எழிலென்று *அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:* என்கிற புகரை நினைக்கிறது. [நன்றெழில்] ரூபஸ்ரீயைப் பார்த்தவாறே "கண்டவாற்றால் தனதேயுலகென நின்றான்" என்கிறபடியே ஸர்வரக்ஷகன் இவனே யென்னலாம். [நாரணன்] திருநாமத்தைப் பார்த்தவாறே தன்னை ஒழிந்ததடைய ப்ரகாரமாய்க்கொண்டு தான் ப்ரகாரியாயிருப்பா னொருவ னென்று தோற்றியிருக்கும். [நான்முகன்] ஒருவன், ஸ்ருஷ்டிகாலத்திலே வந்தால் நாலுவேதங்களையும் உச்சரிக்கைக்கு நாலுமுகத்தை யுடையனாய் ஸ்ருஷ்டிகார்யமொன்றிலும் அந்விதனென்று தோற்றியிருக்கும். [அரன்] ஒருவன், ஸம்ஹர்த்ருத்வமொன்றிலும் அந்விதனென்று தோற்றியிருக்கும். *ஸ்ருஷ்டிஸ்த்தித்யந்தகரணீம் ப்ரஹ்மவிஷ்ணுசிவாத்மிகாம், ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவாந் ஏக ஏவ ஜநார்த்தந:* என்கிற படியே. ஸம்ஜ்ஞைகளில் வந்தால் ஒக்க எடுக்கலாய் விஷ்ணுசப்தத்தோடு பர்யாயமான ஜநார்த்தந சப்தத்தையிட்டுத் தலைக்கட்டுகையாலே தானே ப்ரதாநனென்று தோற்றும்படியாயிருக்கும். இப்படி விஸத்ருசஸ்வபாவராயிருக்கிற இவர்களை, [ஒன்றநும்மனத்துவைத்து] அவனையொழிந்த இருவரிலே ஒருவனுக்கு உத்கர்ஷம் வேணுமென்றாதல், நிர்ணயிப்பதற்கு முன்னே இவனுக்கு உத்கர்ஷம் வேணுமென்றாதல் பாராதே ஒருபடிப்பட உங்கள் நெஞ்சிலே வைப்பது. [உள்ளி] உள்ளுவது—ச்ருதிந்யாயங்களாலே ஆராய்வது. அவர்கள் ஸ்வரூப ஸ்வபாவங்களை இப்படி ஆராய்ந்தவாறே ஒரு வஸ்து ப்ரதாநமாய் இரண்டு அப்ரதாநமாய்த் தோற்றும்; தோற்றினவாறே [நும்மிருபசையறுத்து] அவ்விரண்டிலும் நீங்கள் பண்ணுகிற நசையைத் தவிருவது; வஸ்துகதமாய் வருவதொரு உத்கர்ஷமில்லை, நீங்களேறிடுகிற இவற்றைத் தவிருவது. [நன்றெனநலஞ்செய்வதவனிடை] இப்படி நிர்ணீதனானவன்பக்கலிலே 'இவன் நமக்குக் கைபுகுந்தான்' என்று உங்களுக்கேறத் தேற்றம்பிறக்கும்படி அநந்யப்ரயோஜநமான பக்தியைப் பண்ணப் பாருங்கோள். க்ரமத்திலே செய்கிறோமென்றிருந்தார்கள்; [நம்முடைநாளே] கெடுவிகாள்! நம்முடை ஆயுஸ்ஸின் நிலையறிவீர்களே! கடுக ஆச்ரயிக்கப் பாருங்கோள். "நம்முடைநாள்" என்னுங்காட்டில் ஆயுஸ்ஸின்நிலையை அறிந்தபடி என்? என்னில், முன்பே "மின்னின்நிலையில" என்று அருளிச்செய்தாரிறே. ஒருவன் இரண்டுகதவையும் அடைத்துக்கொண்டு கிடந்து உறங்காநின்றால், நெருப்புப்பற்றி யெரியாநின்றால், 'அவிக்கிறோம்' என்று ஆறியிருக்கலாமோ? *நந்தந்த்யுதித ஆதித்யே நந்தந்த்யஸ்தமிதே ரவௌ, ஆத்மநோ நாவபுத்யந்தே மநுஷ்யா ஜீவிதக்ஷயம்* ஆதித்யோதயத்திலேவந்தவாறே 'த்ரவ்யார்ஜநகாலம் வந்தது' என்று உகப்பர்கள்; அவன் அஸ்தமித்தவாறே 'அபிமதவிஷயங்களோடே ரமிக்கைக்குக் காலம் வந்தது' என்று உகப்பர்கள்; சாலிலெடுத்த நீர்போலே தங்களாயுஸ்ஸு குறைகிறதென்று அறியாதிராநின்றார்கள் என்னுகின்றதிறே.

நாளுநின்றடுநமபழமை அங்கொடுவினையுடனே
மாளும்*ஓர்குறைவில்லை மனனகமலமறக்கழுவி*
நாளுநந்திருவுடையடிகள்தம் நலங்கழல்வணங்கி*
மாளுமோரிடத்திலும் வணக்கொடுமாள்வதுவலமே. (8)

ஒ.—எட்டாம்பாட்டில், எம்பெருமானுடைய பஜநீயதைக்கு நிதாநமான ச்ரிய:பதித்வத்தைச் சொல்லாநின்றுகொண்டு பஜநோபக்ரமகாலத்திலே பஜநவிரோதிஸர்வகர்ம நிவ்ருத்தியும் உண்டா மென்கிறார்.

[நாளுமென்று தொடங்கி] - நாள்தோறும் இடைவிடாதே நலியாநின்றுள்ள பழையதாய் மிகவும் க்ரூரமான நம்முடைய கர்மங்கள் ஆச்ரயிக்கத்தொடங்கினவாறே நிச்சேஷமாக நசிக்கும்; ஸர்வேஷ்டங்களும் பூர்ணமாம். [மனனென்று தொடங்கி] - ஈச்வரன் 'இவனோ? மற்றையவர்களோ?' என்று தொடக்கமான மநஸ்ஸிலுள்ள ஸம்சயங்களையெல்லாம் போக்கி ஸ்ரீமானாய் ஸ்வாமியான எம்பெருமானுடைய ஆச்ரிதாபராதம் பாராத திருவடிகளை நாடோறும் வணங்கி. [மாளுமென்று தொடங்கி] - நெடுங்காலங்கூட ஸாதிக்கவேண்டும் பக்தியோகத்தை ஸாதிக்க காலமும் கரணபாடவமு மின்றிக்கே சரமதசாபந்நரானவர்கள் இழந்தே போமித்தனையோ? என்னில்;—அந்தசையிலேயாகிலும் ப்ராணமாதிகளொன்றிலே உபக்ரமித்து அவ்வளவிலேதான் முடியில் அதுவே பரமபக்தியிலும் நன்று.

இ.—எட்டாம்பாட்டில், "நன்றெனநலஞ்செய்வது" என்னுங்காட்டில் ஆச்ரயிக்கலாயிருக்குமோ? அநாதிகாலம் ஆர்ஜிதமான கர்மம் ஆச்ரயணத்தை விலக்காதோ? என்னில்,— பஜநோபக்ரமவேளையிலே அவையடங்க நசிக்கும், நசிப்பிப்பாரு முண்டு என்கிறது.

[நாளும்நின்றடும்] - நாடோறும் இடைவிடாதே நின்று ஹிம்ஸிக்கை. ஆத்மா நித்யன், காலம் அநாதி, என்றுமொக்க நலிந்து போருகிற இதிறே. [நம] - நாம் புத்திபூர்வமாகப் பண்ணிப்போந்த. [பழமை] - அநாதியாயிருக்கை. [அங்கொடுவினை] - மிகவும் க்ரூரமாயிருக்கை. [உடனேமாளும்] - ஆச்ரயிக்கத்தொடங்கினவாறே, மாளும் - நசிக்கும். "தததைவமுஷ்ணாத்யசுபாந்யசேஷத:". [ஓர்குறை வில்லை] - மேலும் ஒரு விரோதங்கள் வாராதென்னுதல், ஸர்வாபிமதங்களும் பூர்ணமா மென்னுதல். "சுபாநி புஷ்ணாதி". [மனனகமலமறக்கழுவி] - ஆச்ரயணீயன் இவனோ? மற்றையவனோ? என்று மநஸ்ஸிலுண்டான ஸம்சயத்தை ஸவாஸநமாகப் போக்கி. "அஜ்ஞச்சாச்ரத்ததாநச்ச ஸம்சயாத்மா விநச்யதி" இறே. [நாளும்] - நாடோறும் வேணுமென்று ஒருவிதியன்று, அபர்வணி கடல்தீண்டலாகாது என்னுமாபோலே இதுக்கு நிஷித்தமாயிருப்பதொரு காலமில்லை யென்கை. [நந்திருவுடையடிகள்] - ஸ்ரீமானான ஸ்வாமியானவனுடைய. 'நம்' என்று "அஜாயமாநோ பஹுதா விஜாயதே" என்று அவதாரத்தை ப்ரஸ்தாவித்து. "ஹ்ரீச்சதே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ" என்று ப்ரமாணப்ரஸித்தமான ச்ரிய:பதித்வத்தைத் தமக்கு ப்ரகாசிப்பித்தபடியை அருளிச்செய்கிறார். [நலங்கழல்வணங்கி]-"வாச:பரம் ப்ரார்த்தயிதா ப்ரபத்யே நியத:ச்ரியம்" என்று அவன்முன்னாகப் பற்றுவாருடைய குணாகுண நிரூபணம் பண்ணாத திருவடிகள். 'வணங்கி' என்கிற இது-வினையெச்சம் பெற்று, வணங்க என்று அர்த்தமாய்க் கிடக்கிறது. 'வணங்க நாளும் நின்றடும்' என்று அந்வயம். [மாளுமோரிடத்திலும் வணக்கொடுமாள்வதுவலமே] - காலமுங் கரணபாடவமு மின்றிக்கே சரமதசாபந்நரானார் இழந்துபோமித்தனையோ? என்னில்;—அத்தசையிலேயாகிலும் ப்ராணமாதிகளிலே உபக்ரமித்த வளவிலே முடியிலும் அதுவே ப்ரபலம்; அதுவே ச்ரேஷ்டம். "ஸ்தித்வாऽஸ்யாமந்தகாலேऽபி ப்ரஹ்மநிர்வாணம்ருச்சதி" என்று - ஆத்மஸாக்ஷாத்காரத்துக்கு அகப்பட இப்படி சொல்லாநின்றால்,பகவத்விஷயத்துக்குச் சொல்ல வேணுமோ?

ஈடு.—எட்டாம்பாட்டு. 'ஒரு நாளாகிலும் முற்பட்டது உடலாக ஆச்ரயிக்கச் சொல்லாநின்றீர்; அநாதிகாலம் நாங்கள் பண்ணிவைத்த பாபங்கள் விலக்காவோ? இனிக் காலந் தானுண்டோ?' என்ன, 'நீங்கள் ஆச்ரயணத்திலே ஒருப்படவே விரோதிகளடங்கலும் நசிக்கும்; ச்ரிய:பதிஸமாச்ரயணமாகையாலே காலங்கழிந்தது என்றிருக்கவும் வேண்டா; நீங்கள்

தண்டுகாலா வூன்றியூன்றித் தள்ளி நடக்கும்போது அக்கோலோடே சாயவும் அமையும்' என்கிறார்.

[நாளும் நின்றடும்] நாள்தோறும் இடைவீடைதே நின்று ஹிம்ஸிக்கக் கடவதான. பரமாணுகதமான பாரிமாண்டல்யாதிகள் நித்யமாயிருக்கச்செய்தே நித்யபரதந்த்ரமா யிருக்குமாபோலவும் பகவத் ஸ்வரூபத்தோபாதி குணங்கள் நித்யமா யிருக்கச்செய்தே நித்யபரதந்த்ரமாயிருக்குமாபோலவும், நித்யவஸ்துவாய் நித்யபரதந்த்ரமாய்ப் போராநிற்கச் செய்தே அசித்ஸம்ஸர்க்கமும் நித்யமாய்ப் போருகிறதிறே. [நம] *த்விஷந்த: பாபக்ருத்யாம்* என்கிறபடியே பிறரதாய் அசல் பிளந்தேறிட வந்ததல்ல, நெஞ்சு உணர நாமே பண்ணி வைத்தவை. *அபூதபூர்வம் மம பாவி கிம் வா* எனக்கு, முன்பு அநுபவியாததாய், மேல் அநுபாவ்யமாயிருப்பதொன்று உண்டோ? *ஸர்வம் ஸஹே* எல்லாம் பொறுக்கவல்லேன். *மே ஸஹஜம் ஹி து:கம்* தன்காய்பொறுத கொம்பு உண்டோ? என்று சொல்லலாம்படியிறே நாமே பண்ணிவைக்குமவை இருப்பது. [பழமை] அதுதான் இன்று நேற்றன்றியே பழையதாயிருக்கை. [அம்]-அம்-என்று க்ரௌர்யத்தைப் பற்றச் சொல்லுகிறது. [கொடுவினை] அநுபவவிநாச்யமாயிருக்கை. [உடனேமாளும்] ஆச்ரயணகாலத்திலே நசிக்கும். *யதேஷீகதூல மக்நௌ ப்ரோதம் ப்ரதூயேதைவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே* *மேருமந்தரமாத்ரோZபி* என்றுஞ் சொல்லுகிறபடியே. விரோதி போமளவேயோ? [ஓர்குறைவில்லை] - மேலும் ஒரு விரோதங்கள் வாராதென்னுதல்; ஸர்வாபிமதங்களும் பூர்ணமாமென்னுதல். *கௌந்தேய ப்ரதிஜாநீஹி ந மே பக்த: ப்ரணச்யதி* அர்ஜுந! இவ்வர்த்தத்தில் நம்மை விச்வஸித்து ப்ரதிஜ்ஞைபண்ணு; நம்மைப் பற்றினவர்களுக்கு அநர்த்தம் வாராதுகாண். பகவத்ஸமாச்ரயணம் பண்ணுகைக்கும் வினை கிடக்கைக்கும் அக்நிநா ஸிஞ்சேத் போலே என்னசேர்த்தியுண்டு? அஸங்கதம். *துராசாரோZபி* செய்யக் கடவதல்லாதவற்றைச் செய்துபோருவது. *ஸர்வாசீ* அபோஜ்ய போஜநங்களைப் பண்ணுவது. *க்ருதக்ந:* உபகரித்த விஷயத்திலே அபகாரத்தைப் பண்ணுவது. *நாஸ்திக:* வைதிகமர்யாதையை இல்லையென்று போருவது. *புரா* இதுதான் பழையதாய்ப்போருவது. *ஸமாச்ரயேதித்யாதி* 'இவன் அநுகூலிப்பது எப்போதோ?' என்று ஏற்கவே அவஸரம் பார்த்திருக்கிறவனைப் பற்றி அநுகூலிக்குமாகில் பின்னை அவனை நிர்த்தோஷனாக ப்ரதிபத்தி பண்ணுவது. ஏன்தான்? என்னில்,—*ப்ரபாவாத் பரமாத்மந:* இவனைக் குறைய நினைக்கையாவது—பகவத்ப்ரபாவத்தைக் குறைய நினைக்கையிறே. *ந வாஸுதேவபக்தாநாமசுபம் வித்யதே க்வசித்* என்னுமாபோலே. இனிச்செய்ய வேண்டுவதொன்றுண்டு; [மனனகமலமறக்கழுவி] ஸர்வேச்வரன், ப்ரஹ்மருத்ரர்கள்நடுவே கலசிநின்றால், 'இவனோ கடவான்? மற்றையவர்களோ?' என்று ஸம்சயிக்குமது தவிர்ந்து, ஸர்வேச்வரனே கடவான்' என்கிற அந்த:கரணசுத்தியுண்டாகவேணும். *திருவடி தன்னமம் மறந்தும் புறந்தொழாதொழியுமித்தனையே வேண்டுவது. [நாளும்] அபர்வணி கடல்தீண்டலாகாதென்னுமாபோலே ஒருநியதியில்லை. [நந்திருவுடையடிகள்தம்] ஸ்ரீமானான ஸ்வாமியானவனுடைய. இத்தால் நித்யயோகத்தைச் சொல்லுகிறது. 'ஸர்வேச்வரனை ஆச்ரயித்தானாகில் அவன் பலப்ரதனாகிறான், பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்றவேண்டுகிறதென்?' என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்க, "நாளும் நந்திருவுடையடிகள் தம் நலங்கழல்வணங்கி' என்று அவள் மூலனாக ஆச்ரயிக்கவேணு மென்னுகின்றது கண்டிலரே" என்று அருளிச்செய்து, அவனை ஆச்ரயிக்குமிடத்தில் இவன்குற்றம் பாராதே தன்னிழலிலே இவனை வைத்து, அவன்பக்கல் முகம்பெறுமவாறே குற்றத்தைப்பொறுப்பிக்குமவள்முன்னாகப் பற்றவேணும். [நலங்கழல்] அவள் முன்னாகப்பற்றினாருடைய குற்றங்களைப் பாராதே கைக்கொள்ளுந்திருவடிகள். வணங்கி என்றது-வணங்க என்றபடி. 'வணங்கி' என்கிற இது வினையெச்சமாய், வணங்கவென்னும் அர்த்தமாயிருக்கும். வணங்க, நாளும் நின்றடும் நமபழமை அங்கொடுவினை உடனேமாளும், ஓர்குறைவில்லை. ஆனாலும் ஆச்ரயணத்துக்குக் காலம் தப்பிநின்றதே' என்ன, [மாளுமோரிடத்திலும்] முடிகிற ஒருக்ஷணத்திலும். [வணக்கொடுமாள்வதுவலம்] *த்விதா பஜ்யேயமப்யேவம் ந நமேயம்* என்னாதே, கிடக்கிற சிரைப் பாயைக் கவ்விக்கவிழ்ந்து கிடந்து சாவவும் அமையும். [வலமே] வரமென்னுதல், ச்ரேஷ்டமென்னுதல், பலவத்தரமென்னுதல், அவனையும ஆச்ரயித்து வேறுசிலர்பக்கலிலும் தலை

சாய்க்க இராதே, முடிகிற ஸமயத்திலே ஆச்ரயிக்கவே பின்னைப் பேற்றோடே தலைக்கட்டும். இத்தால் - ஐந்மப்ரப்ருதி ஆச்ரயித்தாலும் பலமில்லை பகவத்வ்யதிரிக்தர்பக்கல்; ஆச்ரயணத்திலே உபக்ரமித்து முடிந்தாலும் பலம்தப்பாது பகவத்விஷயத்திலென்கை.

வலத்தனன்திரிபுரமெரித்தவன் இடம்பெறத்துந்தித்
தலத்து* எழுதிசைமுகன்படைத்த நல்லுலகமுந்தானும்
புலப்பட* பின்னுந்தன்னுலகத்தில் அகத்தனன்தானே
சொலப்புகில்* இவைபின்னும்வயிற்றுள இவையவன்துயக்கே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், ஸர்வேச்வரனை தான் ஸ்வவிபூதிபூத லோகங்களிலே வந்து திருவவதாரம் பண்ணுகிறது ஆச்ரிதர் கண்டு அநுபவிக்கைக்காக என்கிறார்.

[வலத்தனன் என்று தொடங்கி] - த்ரிபுரதஹநாதி ஸமர்த்தனை ருத்ரன், எம்பெருமானுடைய தக்ஷிணபார்ச்வத்தை ஆச்ரயித்திருக்கும். எழுச்சியையுடைய திசைமுகன் படைத்த லோகமும் தானும் அஸங்குசிதமாக இருக்கிறது திருநாபிகமலத்திலே; இவை இவர்களுடைய ஸர்வ ப்ரகாரரக்ஷைக்கும் உபலக்ஷணம். நல்லுலகமாவது-எம்பெருமானுக்கு வந்து திருவவதாரம்பண்ணி ஆச்ரிதரோடே ஸம்ச்லேஷிக்கைக்கிடான தேசம். [சொலப்புகில் இவை பின்னும் வயிற்றுள] - இவனுடைய குணங்களைப் பேசப்புக்கால் பேசி முடிக்கவொண்ணாது; ஜகத்தைத் திருவயிற்றிலே வைத்து ரக்ஷிக்குமென்றுமாம். [இவை அவன் துயக்கே] - ஏவம்விதஸ்வபாவனென்று எல்லாரும் அறியாதொழிவானென்? என்னில்,—தன்பக்கல் விமுகரானவர்களுக்கு அறியவொண்ணாதபடி ஸந்தேஹவிபர்யஜ்ஞாநங்களை எம்பெருமான் பிறப்பிக்கையால்.

இ.—ஒன்பதாம்பாட்டில்; கீழ் ப்ரஹ்மருத்ராதிகளுடைய அபரத்வமும் ஸர்வேச்வரனுடைய பரத்வமுஞ் சொன்னார்; இப்பாட்டில் இவனைப்பற்றி அவர்கள் லப்தஸ்வரூபரா யிருக்கிறபடியைச் சொல்லுகிறார்.

[வலத்தனன் திரிபுரமெரித்தவன்] - த்ரிபுரதஹநாதி ஸமர்த்தனான ருத்ரன் இவனுடைய திருமேனியில் தக்ஷிணபார்ச்வத்தை யாச்ரயித்திருக்கும். ''பச்யைகாதச மே ருத்ராந் தக்ஷிணம் பார்ச்வமாச்ரிதாந்'', ''தபஸாதோஷிதஸ்தேந விஷ்ணுநா ப்ரபவிஷ்ணுநா, ஸ்வபார்ச்வேதக்ஷிணே சம்போர் நிவாஸ: பரிகல்பித:'' [இடம்பெறத் துந்தித்தலத்தெழுதிசைமுகன்படைத்த நல்லுலகமுந்தானும்] - எழுச்சியையுடைய திசைமுகன் தான் படைத்த நன்றான லோகமும் தானும் அஸங்குசிதமாகத் திருநாபிகமலத்திலே யிருக்கும். இவை-இவர்களுடைய ஸர்வப்ரகார ரக்ஷணத்துக்கும் உபலக்ஷணம். எழுச்சியாவது - சதுர்த்தசபுவநத்துக்கும் நிர்வாஹகனான வளமுடைமை. ஈச்வரன் விரும்பிவந்து அவதரிக்கைக்கு யோக்யமாயிருக்கையாலே நல்லுலக மென்கிறது. ஆபத்துக்களிலே திருமேனியிலே இடங்கொடுக்குமித்தை மஹாகுணமாகையாலே எப்போது மொக்க ஆழ்வார்கள் அருளிச்செய்து போராநிற்பர்கள்; ஸாமந்தர்க்குப் புறம்பே நாடுகள் கனக்கவுண்டானாலும் மாளிகைக்குள்ளே செம்பாலே நாழியரிசியைத் தங்களுக்கு வரிசைக்கு உடலாக ஆதரித்துப்போராநிற்பர்களிறே; அப்படியே இவர்களும் திருமேனியிற் பண்ணிவைக்கும் ப்ராப்தி விடார்கள். [பின்னும்] - ப்ரஹ்மருத்ராதிகளுக்குத் தன்திருமேனியிலே இடங்கொடுப்பதுக்கு மேலே [தன்னுலகத்திலகத்தனன்] - தான் உண்டாக்கின லோகங்களிலே வந்து அவதரிக்கும். [தானே]-ஒரு கர்மத்தாலன்று, தன் இச்சையாலே ''நாகாரணாத் காரணாத்வா'' இத்யாதி. இப்படி அவதரிக்கிறது எதுக்காகவென்னில்,— [புலப்பட] - காணவாரா யென்றென்று கண்ணும் வாயுந் துவர்ந்து இருப்பார்க்குக் காட்சி கொடுக்கைக் கீடாக. புலமென்று - இந்த்ரியம், படுகையாவது - விஷயமாகை, கண்ணுக்கிலக்காகை. [சொலப்புகில் இவை பின்னும் வயிற்றுள] - இவனுடைய குணங்களைப் பேசப்புககால் உள்ளேயுள்ளேயாய்த் தோண்டத் தொலையாது; பாசுரமிட்டுப்பேசி முடிக்கவொண்ணா தென்கை. ப்ரலயாபத்துக்களிலே திருவயிற்றிலே வைத்துநோக்கும் என்னவுமாம். [இவை அவன் துயக்கே]-துயக்கென்று

மனந்திரிவு. இப்படிகளை எல்லாரும் அறியாதொழிவானென்? என்னில்;—விமுகராயிருப்பார்க்கு ஸம்சய விபர்யயங்களை அவன்தானே பண்ணிவைக்கையாலே. "மம மாயா" என்று ப்ரக்ருதியையிட்டு மறைத்து அறிவுகெடுக்கும். தன்மேன்மை தோற்ற நிற்கில் எட்டானென்று கைவாங்கிப்போவர்கள், தாழநிற்கில் நம்மிலே ஒருவனென்று காற்கடைக்கொள்வர்கள்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. கீழ், ப்ரஹ்மாதிகளுடைய அபரத்வமும், ஸர்வேச்வரனுடைய பரத்வமும் சொன்னார்; இப்பாட்டில் அவர்கள்தாங்கள் இவனைப்பற்றி லப்தஸ்வரூபராயிருக்கிறபடியை அருளிச்செய்கிறார். ப்ரஹ்மாதிகளுக்கும் உத்பாதகனாய் அவர்களுக்கு ரக்ஷகனான ஸர்வேச்வரன அவர்கள்தாங்களும் காலிட மாட்டாத பூமியிலே வந்து அவதரிக்கைக்கு ஹேதுவென்? என்னில்;—'அவன்தான் அருளிச்செய்து வைத்ததுவே ஹேது, *** பரித்ராணாய ஸாதூநாம் *** என்றானிறே—ஆச்ரயிக்குமவர்களுக்கு இதிலே த்வரை பிறக்கைக்காகவும் ருசிஜநகனாகைக்காகவும் வந்து பிறப்பன்; அதின்பலமாய் வருமதிறே துஷ்க்ருத்துக்களுடைய விநாசம்' என்று அருளிச்செய்ததுவே ஹேதுவென்கிறார்.

[வலத்தனன் திரிபுரமெரித்தவன்] கீழிற்பாட்டுக்குக் கீழிரண்டு பாட்டாலுஞ் சொன்ன அர்த்தத்தை அநுபாஷிக்கிறார். த்ரிபுரதஹநத்தாலே ஸஞ்ஜாதாபிமாநியான ருத்ரன் திருமேனியில் வலவருகைப்பற்றி லப்தஸ்வரூபனாயிருக்கும்; *** பச்யைகாதச மே ருத்ராந் தக்ஷிணம் பார்ச்வ மாச்ரிதாந் *** என்கிறபடியே. [இடம்பெறத் துந்தித்தலத்து எழுதிசைமுகன் படைத்த நல்லுலகமும் தானும்] எழுச்சியையுடைய திசைமுகன் படைத்த லோகமும் தானும் அஸங்குசிதமாகத் திருநாபி கமலத்திலே யிருக்கும்; *** ப்ரஹ்மாணமீசம் கமலாஸநஸ்த்தம் *** என்கிறபடியே. இவை இவர்களுடைய ஸர்வப்ரகாரரக்ஷணத்துக்கும் உபலக்ஷணம். எழுச்சியாவது சதுர்த்தச புவநத்துக்கும் நிர்வாஹகனான அளவுடைமை. ஈச்வரன் விரும்பிவந்து அவதரிக்கையாலே "நல்லுலகம்" என்கிறது. * "ஏறாளுமிறையோனும் திசைமுகனும் திருமகளும், கூறாளும் தனியுடம்பன்" என்கிறபடியே பிராட்டிக்கும் ப்ரஹ்மாதிகளுக்கும் ஒக்கத் திருமேனியிலே இடங்கொடுத்துவைத்தால், அந்தப்புரத்திலுள்ளவர்களென்று அவர்களிருப்பிடத்தில் இவர்களுக்கு நலியவொண்ணாதபடி கூறாகக் கொடுத்துவைக்கும் ஸர்வாபாச்ரயமாயிறே திருமேனிதான் இருப்பது. [இடம்பெற] ஸாவகாசமாயிருக்கும். ருத்ரனுக்கும் இவ்வருகுள்ளார்க்கும் நிர்வாஹகனாய் சதுர்த்தச புவநஸ்ரஷ்டாவான சதுர்முகன் தானுண்டாக்கின நன்றான லோகமும் தானும் திருநாபி கமலத்தைப்பற்றி லப்தஸ்வரூபனாயிருக்கும். 'உந்தி' என்றும், 'துந்தி' என்றும் திருநாபிக்குப்பேர். [இடம்பெறத்துந்தி] இடம்பெற, அத்து, உந்தித்தலம், என்றாய் பதம், அதில், "அத்து" என்கிற பதம் சாரியைச் சொல்லாய்ப் பொருளின்றியேபோய், "இடம்பெற உந்தித்தலம்" என்கிறது. "பூதலம்" என்னுமாபோலே. [திசைமுகன் படைத்த நல்லுலகமும் தானும் உந்தித்தலத்தனன்] ஸ்தநந்தயப்ரஜை தாய்முலையை அகலில் நாக்கு ஒட்டுமாபோலே, திருநாபிகமலத்தை விடில் தன்ஸத்தை இல்லையம்படி இருக்கை. இப்படி பின்னை ஸர்வகாலமும் இவர்களிருப்பார்களோ? என்னில்,—ஆபத்துக்களிலே திருமேனியிலே இடங்கொடுக்கும். அது மஹாகுணமாகையாலே ஆழ்வார்கள் எப்போதுமொக்க அருளிச்செய்துகொண்டுபோருவர்கள். ஸாமந்தர்க்குப் புறம்பே நாடுகள் கனக்கவுண்டாகிலும் மாளிகைக்குள்ளே செம்பாலே நாழியரிசியைத் தங்களுக்கு வரிசையாக நினைத்திருப்பர்களிறே; அப்படியே இவர்களும் திருமேனியில் பண்ணிவைக்கும் ப்ராப்தி விடார்களிறே. ஒரு கலகங்களிலே அடையவளைந்தானுக்குள்ளே குடிவாங்கியிருந்து, காலந்தெளிந்தவாறே புறம்பே புறப்பட்டாலும் 'இவ்விடம் இன்னார் பற்று, இவ்விடம் இன்னார்பற்று' என்று பின்னும் ப்ராப்தி சொல்லிவைக்குமாபோலே. [பின்னும்] ப்ரஹ்மாதிகளுக்குத் தன் திருமேனியிலே இடங்கொடுத்ததுக்குமேலே. [தன்னுலகத்திலகத்தனன்] தானுண்டாக்கின ப்ரஹ்மாவாலே உண்டான லோகங்களிலே வந்து அவதரிக்கும். ப்ரஹ்ம ருத்ராகளும் தன் திருமேனியில் ஏகதேசத்தைப் பற்றி லப்தஸ்வரூபராம்படியிருக்கிறவன் அவர்களுங்கூடக் காலிட அருவருக்கிற ஸம்ஸாரத்திலே வந்து அவதரிக்கைக்கு ஹேதுவென்? என்னில்,—[புலப்பட] காணவாராயென்றென்று கண்ணும்

வாயுந் துவர்ந்திருக்குமவர்களுக்குத் தன் ஸங்கல்பத்தாலே ஸம்விதாநம் பண்ணவொண்ணுதே அவர்கள் சக்ஷுராதிகரணங்களுக்கு விஷயமாகவேணுமென்று. என்? ஸங்கல்பத்தாலே ஸம்விதாநம் பண்ணிஞல் என்செய்யும்? என்னில்,—* "மழுங்காதஞானமே படையாக மலருலகில் தொழும்பாயார்க்களித்தா லுன்சுடர்ச்சோதி மறையும்" என்பர்கள். இது தனக்குத்தான் அடியென்? என்னில்,—[தானே] * ஆத்மமாயயா * ஆத்மேச்சயா. ஒருகர்மம் ப்ரேரிக்கவன்று; இச்சையாலே. [சொலப்புகில் இவைபின்னும் வயிற்றுள] அவன் இப்படி அவதரித்துப்பண்ணும் ரக்ஷணங்களில் ஏகதேசம் சொல்லில் சொல்லுமத்தனை; எல்லாஞ் சொல்லித் தலைக்கட்டப்போகாது. சொலப்புகில் உள்ளேயுள்ளேயா மித்தனை. அன்றியே, தன்னுலே ஸ்ருஷ்டரான ப்ரஹ்மாதிகளாலே ஸ்ருஷ்டரானவர்களுக்கு 'என்மகன்' என்று அபிமானிக்கலாம்படி வந்துபிறந்து, "உனக்கு ராஜ்யத்தைத் தந்தேன், அதுதன்னை வாங்கினேன், போ" என்றும் கையிலே கோலைக்கொடுத்து "பசுக்களின் பின்னே போ" என்றுஞ் சொல்லலாம்படி எளியனுயிருக்கிற தான், இவர்களுக்கு ஓர் ஆபத்து வந்தால் இவர்களை வயிற்றிலே வைத்து நோக்கும்படியைச் சொல்லிற்றாகவுமாம். 'இப்படி இதுவே அர்த்தமென்னுமிடம் நீர் அருளிச்செய்தபோது தெரிந்து, அல்லாதபோது எங்களுக்குத் தெரியாதபடி இராநின்றதே!' என்ன,-[இவை அவன் துயக்கே] *மம மாயா துரத்யயா* என்கிறபடியே அவன்தானே ப்ரக்ருதியாகிற விலங்கையிட்ட பாக்யஹீநரானவர்கள் தன்பக்கல் அணுகாதபடி பண்ணி, அவர்கள் அகலப்புக்கால் அவன்தான் அநுமதிதாநம் பண்ணி, உங்கள்பக்கல் அவன் உதாஸீநனு யிருக்கையாலே தெரியாதொழிகிறது என்கிருர். துயக்கு - ஸம்சயம்.

துயக்கறுமதியில்நல்ஞானத்துள் அமரரைத்துயக்கும் *
மயக்குடைமாயைகள் வானிலும்பெரியனவல்லன் *
புயற்கருநிறத்தனன் பெருநிலங்கடந்தநல்லடிப்போது *
அயர்ப்பிலனலற்றுவன் தழுவுவன்வணங்குவனமர்ந்தே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், ஜலஸ்த்தல விபரீதங்கள் பாராதே எல்லார்தலையிலும் பொருந்துவதாய்த் தனக்கும் அயத்நலப்தமாய் நிரதிசயபோக்யமான திருவுலகளந்தருளின எம்பெருமானுடைய திருவடிகளை மநோவாக்காயங்களாலே அநுபவிக்கப் பாரிக்கிருர்.

[துயக்கறுமதி யென்று தொடங்கி] - நிர்த்தோஷாந்த:கரணராகையாலே ஸம்யக்ஜ்ஞாநவான்களான தேவர்களை அறிவுகெடுக்கும்படி தெரியாத குணசேஷ்டிதங்களோடு கூடின திவ்யாவதாரங்களாகிற மஹாச்சர்யங்களைப் பண்ணவல்லன். [புயற்கருநிறத்தனன்] - நீர்கொண்டெழுந்த காளமேகம் போலே கறுத்த நிறத்தை யுடையான். [அமர்ந்தே]-அநந்யப்ரயோஜநனுய்; 'மநோவாக்காயங்களாலே அநுபவிக்கப் பெற்றேன்' என்றுஞ் சொல்லுவர்.

இ.—பத்தாம்பாட்டில், அவன் விமுகர்க்குப் பண்ணுமவை கிடக்கிடீர், அவன் காட்டின வழியே காணப்புக்க நாம் மநோவாக்காயங்களாலே அவனை அநுபவிப்போ மென்று பாரிக்கிருர்.

[துயக்கறு என்று தொடங்கி]-துயக்கறு மதியுண்டு - ஸம்சய விபர்யயரஹிதமான அந்த:கரணம். அத்தையுடையராகையாலே யதாஜ்ஞாநத்தையுடைய தேவர்களை மதிகெடுக்கும்படி தெரியாத குணசேஷ்டிதங்களையுடைய ஆச்சர்யமான அவதாரங்களுக்கு எல்லையின்றிக்கேயிருக்கை. முற்பட, 'தங்கள் விரோதிகளைப் போக்குகைக்காக வந்தவதரிக்கவேணும்' என்று சரணம்புகுவர்கள்; அவன் வந்து அவதரித்தவாறே 'நம்மிலுந் தாழ்ந்தானொருவன்' என்று காற்கடைக்கொள்ளுவர்கள்; பாரிஜாத ஹரணத்திலே இந்த்ரன் வஜ்ரத்தைக்கொண்டு தொடர்ந்தானிறே. அமரர்களென்று நித்ய ஸூரிகளாகவுமாம். பெரிய திருவடியுடைய இதிஹாஸம். அவன் மயக்குகிறவை கிடக்கிடீர், அவன் காட்டக் கண்ட நாம் அநுபவிப்போ மென்று தாம் அதிலே பாரிக்கிருர். [புயற்கருநிறத்தனன்] - வர்ஷுகவலாஹகம்போலே ச்ரமஹரமான வடிவையுடையவன். [பெருநிலங்கடந்த] - பூமிப்பரப்படங்கலும் அநாயாஸேந அளந்த. [நல்லடிப்

போது] - குறைகுணநிரூபணம்பண்ணுத பரமபோக்யமான திருவடிகள். [அயர்ப்பிலன்] - மோஹித்துக் கிடக்கக்கடவேனல்லேன். [அலற்றுவன்] - ப்ரஹர்ஷத்தாலே அக்ரமமாகக் கூப்பிடக்கடவேன். [தழுவுவன்] - கண்டவாறே கட்டிக்கொள்ளக்கடவேன். [வணங்குவன்] - நிர்மமனுய் விழக்கடவேன். [அமர்ந்தே] - ப்ரயோஜந நிரபேக்ஷமாகச் செய்யக்கடவேன். இப்படி செய்யப்பெற்றே னென்றுஞ் சொல்லுவர்.

௬௫.—பத்தாம்பாட்டு. அவன் விமுகர்பக்கல் பண்ணுமவை கிடக்கிடீர், அவன் காட்டின வழியே காணப்புக்க நாம் மநோவாக்காயங்களாலே நம்விடாய்கெடத் திருவுலகளந்தருளின திருவடிகளை அநுபவிப்போமென்று பாரிக்கிருர்.

[துயக்கறுமதியில்] துயக்கற்ற மதியையுடைய. ஸம்சயவிபர்யய ரஹிதமான மதியையுடையராகையாலே, [நன்ஞானத்துளமரர்] உள்-மனமும் இடமும் மேலும். இங்கு, மேலான அமரரென்றபடி. நன்றான ஞானத்தையுடையரான அமரரையுங்கூட. [துயக்கும் மயக்குடைமாயைகள்] துயக்கு-மனந்திரிவு. அறிவுகெடும்படி தெரியாமையைப் பண்ணக்கடவதான குணசேஷ்டிதங்களோடு கூடின அவதாரங்கள். [வானிலும் பெரியனவல்லன்] ஆகாசத்தைப் பரிச்சேதிக்கிலும் பரிச்சேதிக்கப் போகாது. 'அமரர்' என்கிறது இந்த்ராதிகளை. ரஜஸ்தமஸ்ஸுக்கள் மிக்கிருக்கச்செய்தே, ஸத்த்வம் தலையெடுத்தாலும் அப்படியே கனத்திருக்குமிறே அவர்கள்தங்களுக்கு: அப்போது, 'நங்கார்யம் நம்மாற் செய்யப்போகாது: அவனே நங்கார்யத்துக்குக் கடவன்' என்றிரா, அநந்தரக்ஷணத்திலே எதிரிடா நிற்பர்கள்; தங்களிருப்பிடமும் இழந்து, ஸ்த்ரீகளும் பிடியுண்டு, எளிமைப்பட்டவளவிலே அத்தைப் பரிஹரித்துத் தரவேணுமென்று இரந்து பின்னை இவனும் போய், நரகவதம் பண்ணிச் சிறைகிடந்த ஸ்த்ரீகளையும் மீட்டுக்கொடுத்துப் போராநிற்கச்செய்தே, புழைக்கடைக்கே நின்றதொரு பூண்டைப் பிடுங்கிக்கொண்டு போர, வஜ்ரத்தைக்கொண்டு தொடர்ந்தானிறே. அன்றிக்கே, "நன்ஞானத்துளமரர்" என்கிறது நித்யஸூரிகளையாய், ஜ்ஞாநாதிகனான பெரியதிருவடியும், 'தேவரீரையும் நாய்ச்சிமாரையும் வஹித்தேன் நானன்றோ' என்றாற்போலே சிவியார் சொல்லும் வார்த்தையைச் சொன்னானிறே. அவனுடைய ஆச்சர்யங்கள் நம்மால் பரிச்சேதிக்கப்போமோ? அது கிடக்கிடீர், அவனநுக்ரஹத்தாலே காட்டின வடிவழகை அநுபவிப்போம் நாமென்கிருர்; [புயற்கருநிறத்தனன்] வர்ஷுக வலாஹகம்போலே யிருக்கிற திருமேனியையுடையவன். [பெருநிலம் இத்யாதி] "மநோவாக்காயங்களாலே அநுபவிக்கப்பெற்றே னென்கிருர்" என்று பிள்ளான் பணிக்கும்படி. "இவற்றாலே யநுபவிக்கப் பாரிக்கிருர்" என்று சீயர் அருளிச்செய்யும்படி. [பெருநிலங் கடந்த] பரப்பையுடைத்தான பூமியை அளக்கிறவிடத்தில், வஸிஷ்டசண்டால விபாகமற எல்லார் தலையிலு மொக்கத் திருவடிகளை வைத்தான். இவர்கள் நன்மை தீமை பாராதே தன்னுடைய சுத்தியே இவர்களுக்குமாம்படி பண்ணினுன். [நல்லடிப்போது] "படிக்களவாக நிமிர்த்த நின்பாதபங்கயமே தலைக்கணியாய்" என்று ஆசைப்படவேண்டும்படியிறே இருப்பது, * கதா புந: * என்று ப்ரார்த்தித்துக் கிடக்குமதிறே. செவ்விப்பூச்சூட ஆசைப்படுவாரைப்போலே. [அயர்ப்பிலன்] மறக்கக்கடவேனல்லேன். [அலற்றுவன்] அக்ரமமாகப் பேசக்கடவேன். [தழுவுவன்] * ஸூகாடம் பரிஷஸ்வஜே * என்னுமாபோலே, கட்டிக்கொள்ளக்கடவேன். [வணங்குவன்] நிர்மமனுய்த் திருவடிகளிலே விழக்கடவேன். [அமர்ந்தே] அநந்ய ப்ரயோஜநனுய் இப்படி செய்யக்கடவேன்.

அமரர்கள்தொழுதெழ அலைகடல்கடைந்தவன்தன்னை *
அமர்பொழில்வளங்குருகூர்ச் சடகோபன்குற்றேவல்கள் *
அமர்சுவையாயிரத்து அவற்றினுளிவைபத்தும்வல்லார் *
அமரரோடுயர்விற்சென்று அறுவர்தம்பிறவியஞ்சிறையே. (11)

ஒ.—நிகமத்தில், இப்பத்தும் அறிவார் முந்துற அயர்வறுமமரர்கள்வரிசையைப் பெற்று, பின்னை ஸம்ஸார நிகல விச்சேதத்தைப் பெறுவர்க ளென்கிறார்.

[அமரர்களென்று தொடங்கி] - தேவஜாதி அநுபவித்து வாழ அபிகாங்க்ஷிதமாம்படி கடலைக் கடைந்தவனை அமர்ந்திருந்துள்ள பொழிலின் வளர்த்தியுடைய திருக்குருகூர்ச் சடகோபனுடைய அந்தரங்க வ்ருத்திகளாய் ரஸகநமான ஆயிரந்திருவாய்மொழியிலும் இவை பத்தும் அப்யஸித்தவர்கள்.

இ.—நிகமத்தில், இப்பத்தை அப்யஸித்தவர்கள் நித்யஸூரிகள்வரிசையைப் பெற்றுப் பின்பு ஸம்ஸாரநிகலத்தை அறப்பெறுவ ரென்கிறார்.

[அமரர்கள் தொழுதெழ] - கடைகிறபோதையழகைக் கண்டு ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களும் அநந்யப்ரயோஜநரைப்போலே அழகுக்குத்தோற்கும்படியாயிற்று கடைந்தது. "தத: ப்ராஞ்ஜலயஸ் ஸர்வே பகவந்தம் ஸுரேச்வரா:, துஷ்டுவு: புண்டரீகாக்ஷம் சரண்யம் சரணார்த்திந:". 'தொழுதெழு' என்கிற தம்பாசுரமாயிற்று என்கிறார். [அலைகடல் கடைந்தவன்தன்னை] - ஒருகடல் நின்று ஒருகடலைக் கடையுமா போலே அதிகாங்க்ஷிதமாகக் கடலைக் கடைந்தபடி: [அமர்பொழில் இத்யாதி] - சேர்ந்த பொழிலழகையுடைய திருநகரிக்கு நிர்வாஹகரான ஆழ்வாருடைய அந்தரங்க வ்ருத்தியாயிற்று இவைதான். வாசிகமான அடிமையிறே. பூர்ணவிஷயத்தில் இதுக்குமேற் செய்யலாவதில்லையே. "தத்விப்ராஸோவிபந்யவ:" நித்யஸூரிகளுக்கும் இதுவேயிறே வ்ருத்தி. [அமர்சுவையாயிரம்] - இவ்வாசிகமான அடிமை முறை யென்று - கார்யபுத்த்யா செய்யவேண்டாதபடி ரஸகநமாயிற்று இவ்வாயிரமும். [அவற்றினுளிவை பத்தும்] - அவை கோதென்னும்படியாயிற்று இத்திருவாய்மொழியில் ரஸாதிசயம் இருப்பது. [அமரரோடு உயர்விற்சென்று அறுவர் தம்பிறவியஞ்சிறையே] - சிறையிலேயிருந்த ராஜகுமாரன்தலையிலே அபிஷேகத்தை வைத்துப் பின்னைச் சிறையை வெட்டிவிடுவாரைப்போலே, நித்யஸூரிகள்வரிசையைக் கொடுத்துப் பின்னை ஸம்ஸாரவஞ்சிறையைக் கழிக்கும் ஈச்வரன். ஆதிவாஹிகரோடே விரஜையிற் சென்று ஸூக்ஷ்மசரீரவிதூநநம் பெறுவர்.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லார் முற்பட நித்யஸூரிகள் வரிசையைப் பெற்று, பின்னை ஸம்ஸாரமாகிற அறவைச்சிறை வெட்டிவிடப் பெறுவர்க ளென்கிறார்.

[அமரர்கள் தொழுதெழ] கவிழ்ந்து 'உப்புச்சாறு கிளருவது எப்போதோ?' என்று கிடக்கிற தேவஜாதியானது எழுந்துவாங்கும்படியாகவாயிற்று தோளுந் தோள்மாலையுமாய் ஒருகடல் ஒருகடலை நின்று கடையுமாபோலே கடைந்தபடி. [தொழுதெழ] குணங்களுக்குத் தோற்று "தொழுதெழு" என்கிற தம்பாசுரமேயாய்விட்டது அழகுக்குத்தோற்ற அவர்களுக்கு மென்கிறார். [அமர்பொழில்] சேர்ந்த பொழில். [வளங்குருகூர்] - வளப்பத்தையுடைத்தாய், ஸம்பத்தையுடைத்தான திருநகரி. [சடகோபன்குற்றேவல்கள்] இத்திருநகரிக்கு நிர்வாஹகரான ஆழ்வார் வாசிகமான அடிமைசெய்தபடியாயிற்று இதுதான். பூர்ணவிஷயத்தில் வாசிகமான வ்ருத்திக்கு மேற்படச்செய்யலாவதில்லையே: *தத் விப்ராஸோ விபந்யவ:* என்று நித்யஸூரிகளுக்கும் இதுவேயிறே வ்ருத்தி. [அமரர்சுவையாயிரம்] ரஸகநமாயாயிற்று ஆயிரந்தான் இருப்பது. இத்தால் வாசிகமான அடிமை "முறை" என்று கார்யபுத்த்யா செய்ய வேண்டாவென்றபடி [அவற்றினுளிவைபத்தும்] "விண்ணவரமுதுணவமுதில்வரும்பெண்ணமுதுண்ட" என்னுமாபோலே, அவைதன்னிலே ரஸகநமாயிருக்குமாயிற்று இத்திருவாய்

மொழி. இவற்றை அப்யஸிக்க வல்லார் நித்யஸூரிகளோடொத்த உச்ச்ராயத்தை யுடையராய், தங்களுடைய ஜந்மமாகிற விலங்கு அறப்பெறுவர்கள். இப்பத்தைக் கற்றபோதே இவனை நித்யஸூரிகளிலே ஒருவனாக நினைப்பிடும், சரீர விச்லேஷம் பிறந்தால் போய்ப்புகுமித்தனை; ராஜா ஒருவனுக்கு காடிட்டால் க்ரமத்திலே போய்ப்புகுமித்தனையிறே. ராஜபுத்ரன் தலையிலே முடியைவைத்து, பின்னை விலங்குவெட்டிவிடுமாபோலே, நித்யஸூரிகளிலே ஒருவராம்படியான தரத்தைப் பெற்று, பின்னை ஸம்ஸாரநிகல விச்சேதத்தைப் பெறுவர்கள். (அன்றியே, [அமரரோடு உயர்வில் சென்று] ஆதிவாஹிகரோடே விரஜையிலே சென்று. [அறுவர் தம்பிறவியஞ்சிறையே] ஸூக்ஷ்மசரீரவிதூநநம் பெறுவர்.) *த்யக்த்வா தேஹம் புநர் ஜந்ம நைதி மா மேதி* என்று அருளிச்செய்த அதுவே பலமாகக்கடவது.

முதற்பாட்டில், ஸௌலப்யனென்றார்; இரண்டாம்பாட்டில், கீழ்ப்ரஸ்துதமான ஸௌலப்யத்தை ஸப்ரகாரமாக அருளிச்செய்தார்; மூன்றாம்பாட்டில், அவனுடைய அவதார ரஹஸ்யம் ஒருவர்க்கும் அறியநிலமல்ல வென்றார்; நாலாம்பாட்டில், அப்படிகள்தான் ஆச்ரிதர்க்கு அறியலாம், அநாச்ரிதர்க்கு அறியப்போகாது என்றார்; அஞ்சாம்பாட்டில், இப்படிப் பட்டவனை அவன் அருளிச்செய்த பக்திமார்க்கத்தாலே ஆச்ரயியுங்கோ ளென்றார்; ஆறாம் பாட்டில், ஆச்ரயணீயவஸ்து இன்னதென்றும், ஆச்ரயிக்கும் ப்ரகாரம் இன்னதென்றும் அருளிச்செய்தார்; ஏழாம்பாட்டில், நீங்கள் மந்தாயுஸ்ஸுக்களாகையாலே விளம்பிக்க வொண்ணாது, கடுக ஆச்ரயியுங்கோ ளென்றார்; எட்டாம்பாட்டில், ஆச்ரயிக்கவே விரோதிகளடங்கலும் நசிக்கு மென்றார்; ஒன்பதாம்பாட்டில், ப்ரஹ்மேசாநாதிகளுக்கும் காரணபூதனானவன் வந்து அவதரிக்கைக்கு ஹேது அருளிச்செய்தார்; பத்தாம்பாட்டில், இப்படி ஸௌலப்யனானவனை த்ரிவிதகரணங்களாலும் அநுபவிக்கப் பாரித்தார்; இத்தை அப்யஸித்தார்க்கு பலஞ்சொன்னார் நிகமத்தில்.

ஆழ்வார் திருவடிகளே சரணம். எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

நான்காந்திருவாய்மொழி—அஞ்சிறையப் ப்ரவேசம்.

—:—

ஓ—நாலாந் திருவாய்மொழியில், எம்பெருமான் தன்னை புஜிக்கைக்கீடான பக்த்யாரோக்யம் ஆழ்வார்க்குப் பிறப்பிக்கைக்காக, வ்யாதிபட்டார்க்கு பிஷக்குகள் போஜநநிரோதம் பண்ணுமாபோலே அநுபவிக்கவேணுமென்று இவர் பண்ணின மநோரதத்தை அல்பம் தாழ்க்க, அது பொறுக்கமாட்டாதே மிகவும் ஆர்த்தரான ஆழ்வார்; அநந்யார்ஹ சேஷத்வத்தாலும், அந்த சேஷத்வாநுபவத்தில் எம்பெருமானோடு கலந்தால் பிராட்டிமார்க்கு உண்டான ரஸம் பிறக்கையாலும், ததேகபோகத்வத்தாலும், பிரிவில்தரியாமையாலும், தமக்குப் பிராட்டிமாரோடு ஸாம்யமுண்டாகையாலே எம்பெருமானோடே கலந்துபிரிந்து பிரிவாற்றாமை நோவுபடுகிறாளொரு பிராட்டி தசையை ஆபந்நராய், அவள்பேச்சாலே தம்முடைய தசையை எம்பெருமானுக்கு அறிவிக்கிறார். தன்னுடைய லீலோத்யாநத்திலே தோழிமாரும் தானுமாய் விளையாடாநிற்க, தைவயோகத்தாலே தோழிமாரும் அந்யபரைகளானதசையிலே எம்பெருமான் இயற்கையிலேஸம்ச்லேஷித்து விச்லேஷிக்க, மிகவும் நோவுபடுகிறாளொரு பிராட்டி, அவன் தானே வரப்பற்றாமையாலே, "நம்பக்க லுண்டான குற்றத்தை அநுஸந்தித்து வாராதொழிகிறான், தன் அபராதஸஹத்வத்தை அறிவிக்க வரும்" என்று பார்த்து, பேரளவுடையரான பெருமாளும் ஸ்ரீஜநகராஜன்திருமகளும் புக்தாயுக்தநிருபணக்ஷமரன்றிக்கே "அசோக சோகாபநுத" என்றும், "ஹம்ஸகாரண்டவாகீர்ணம்" என்றும் அருளிச்செய்

நாற்போலே 'இவை நம் வார்த்தை யறியா' என்று பாராதே அவ்வுத்யாநத்திலே வர்த்திக்கிறன சில பக்ஷிகளை எம்பெருமானைக் குறித்துத் தூது விடுகிறாள்.

இ.—நாலாந்திருவாய்மொழியில், கீழ், மநோவாக்காயங்களாலே அநுபவிக்கப்பாரித்த இவர்க்கு ஈச்வரன் அப்போதேவந்து முகங்காட்டாமையாலே ஆற்றாமை மேலிட்டு, ஆண் பெண்ணாய் ஒரு பிராட்டி தசையை ப்ராப்தராய், அவள்பேச்சாலே தம்முடைய தசையை அவனுக்கு அறிவிக்கிறார். "ஆர்த்தோ வா யதிவா த்ருப்த:" என்கிற விஷயம் அப்போதே முகங்காட்டா தொழிவானென்? என்னில், தன்னை புஜிக்கைக்கீடான விடாய் பிறக்கைக்காக: பிஷக்குகள் வ்யாதிக்ரஸ்தர்க்கு போஜந நிரோதம் பண்ணுமா போலே எழநின்றான். ஆனால், பிராட்டிமார்தசை பிறந்தபடி எங்ஙனே? என்னில், - அநந்யார்ஹசேஷத்வத் தாலும், அந்த சேஷத்வமடியாக அவனோடு கலந்தால் பிராட்டிமார்க்கு உண்டான ரஸம் பிறக்கையாலும், ததேகபோகத்வத்தாலும், பிரியில்தரியாமை "நச ஸீதா த்வயாஹீநா நசாஹமபி ராகவ" என்று பிராட்டி யோடு ஒத்திருக்கையாலும், பிராட்டிமாரோடு ஸாம்யமுண்டாகலாம். ஆனால், பிராட்டிதானாகப் பேசு வானென்? என்னில்; - தாமரை திருவடிகளுக்குப் போலியாயிருக்க, ஸுஸத்ருசமாகையாலே "மண்விண் முழுதுமளந்த வொண்தாமரை" என்று தாமரையாகப் பேசுகிறப்போலே இங்கும் பிராட்டியாகப் பேசுகி றது. ராஜருஷி, ப்ரஹ்மருஷியானபின்பு க்ஷத்ரியத்வம் பின்னாட்டிற்றில்லையிறே. எதிர்த்தலையில் பும்ஸ்த் வத்தை அழித்துப் பெண்ணுடையுடுத்தும்படியிறே அவனுடைய புருஷோத்தமத்வம் இருப்பது: ஆகை யாலே, இயற்கையிலே புணர்ந்து, அதுதான் தெய்வப்புணர்ச்சியாகையாலே தைவம் பிரிக்கப் பிரிந்து பிரி வாற்றாமை நோவுபடுகிறாளொரு பிராட்டி, அவன் தானே வரப் பற்றாமையாலே 'அவன் வாராமைக்கு அடி நம்பக்கலுண்டான அபராதம்' என்று பார்த்து, அவனுடைய அபராத ஸஹத்வத்தை அறிவிக்கவே வரு மென்று தன் உத்யாநத்தில் பக்ஷிகளைத் தூது விடுகிறாள். ஆனால், பக்ஷிகளைத் தூதுவிடுவானென்? என்னில்,—பேரள வுடையரான சக்ரவர்த்தி திருமகனும் பிராட்டியும் யுக்தாயுக்த நிரூபணம் பண்ண க்ஷமரன்றிக்கே "அசோக சோகாபநுத" என்றும், "ஹம்ஸகாரண்டவாகீர்ணாம்" என்றும், "ஸர்வாணி சரணம்யாமி ம்ருக பக்ஷிகணாநபி" என்றார்களிறே; அப்படியே இவளும் 'இவை நம்வார்த்தையறியா' என்று பார்க்கமாட்டாதே, 'கமநஸாதநமான சிறகு உண்டு' என்னும் இவ்வளவைப் பார்த்துத் தூது விடுகிறாள். பட்டர் - "சக்ரவர்த்திதிருமகன் திருவவதரித்து வாநரஜாதி வீறுபெற்றாற் போலேகாண் ஆழ்வார்கள் திருவவதரித்துப் பக்ஷிஜாதி வீறுபெற்றபடி." தன்னுடைய சேஷத்வத்தை அநுஸந்தித்தால், "தத்தஸ்ய ஸத்ருசம்பவேத்" என்று அவன் செய்தபடி கண்டிருக்கலாம்; அத்தலையில்வைலக்ஷண்யத்தை அநுஸந்தித்தால் தூதுவிட்டல்லது இருக்கவொண்ணாது. இவர்க்கு யாத்ருச்சிக ஸம்ச்லேஷமாவது - அநாதிகாலம் இவரைத் தன்னோடே சேரவிடுகையிலே அவஸரப்ரதீக்ஷனாய்ப் போந்த ஈச்வரன், இவர் பக்கலிலே அப்ரதிஷேதம் உண்டாவதொரு அவகாசம் பெற்று, அவன் மயர்வறமதிநல மருளப்பெற்ற இது. இவர்க்கு விச்லேஷமாவது - அந்த ஜ்ஞாநம் பேற்றோடே தலைக்கட்டப் பெறாமை.

ஈடு.—பரத்வத்தையும் பஜநீயதையையும் ஸௌலப்யத்தையும் அநுபவித்து ஹ்ருஷ் டராய்த் தாமாய்ப் பேசினார் கீழ்; இதில், தாமான தன்மை யழிந்து ஒரு பிராட்டி தசையை ப்ராப்தராய், ஊர்ஷத்தாலே சொல்லும் பாசுரம் போய் ஆற்றாமையாலே சொல்லும் பாசுர மாய்ச் செல்லுகிறது: *அயமபர : காரக நியம :* என்னுமாபோலே, கீழ்ப்போந்த ரீதி யொழிய வேறொன்றாயிறே இருக்கிறது. முற்காலத்திலே அல்பம் விவக்ஷிதனா யிருப்பானொருவன், 'விதராகரா யிருப்பார் பரிக்ரஹித்துப் போருகிற தொன்றா யிருந்தது தத்த்வபரமாக அடுக்கும்' என்று இத்திருவாய்மொழியளவும் வர அதிகரித்து, இத்திருவாய்மொழியளவிலே வந்தவாறே 'இது காமுகவாக்யமா யிருந்ததீ!' என்று கைவிட்டுப்போனானும்; *நிதித்யாஸிதவ்ய:* என்று விதிக்கிற பகவத்காம மென்று அறிந்திலன் பாக்யஹாநியாலே. "அயர்ப்பில னலற்றுவன் தழுவுவன் வணங்குவன்" என்ற இது அநுபவிக்கிறார் என்று பிள்ளான் பணிக்குமென்ற இது, இவருக்கு முனியேநான்முகனளவும் உள்ளது மாநஸாநுபவ மாகையாலே அத்தோடே சேர விழுமிறே; அநுபவிக்கப் பாரிக்கிறா ரென்கிற விடம், இத்தோடே போரச் சேர்ந்திருக்கும். திருவுலகளந்தருளினவனுடைய திருவடிகளை அநுபவிப்பதாக ஒருப்பட்டுக் கட்டிக்கொண் டார்; அது ஒரு காலவிசேஷத்திலேயாய், தாம் பிற்பாடராய்த் தோற்றுகையாலே, துணுக் கென்று தாமான தன்மை யழிந்து ஒருபிராட்டி தசையை ப்ராப்தராய், ஊர்ஷத்தாலே சொல்

னும் பாசுரம்போய் ஆற்றாமையாலே சொல்லும் பாசுரமாய் விட்டது. *ஆர்த்தோ வா யதிவா த்ருப்த:* என்கிற விஷயத்தை அநுபவித்த இவர்க்கு இழவு வருகைக்கு ப்ரஸங்கம் என்? என்னில்;—'ஆமத்திற் சோறு பாதகம்' என்னுமத்தாலே க்ருதஜ்ஞரான பிஷக்குகள் போஜந நிரோதம் பண்ணுமாபோலே, மேல்வரும் அநுபவங்கள் ஸாத்மிக்கைக்காக நாலடிபேரநின்றான்; *மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணனிறே. அநந்தரம் கலங்கினார். மயர்வறமதிநல மருளப்பெற்றவரிறே இப்படி கலங்கினார்; அவன்தானே கொடுத்த அறிவும் விச்லேஷத்தில் அகிஞ்சித்கரமாம்படியிறே அவனுடைய வைலக்ஷண்யம்; *தத்தஸ்ய ஸத்ருசம் பவேத்* என்றிருந்தவள்தானே வேண்யுத்க்ரதநாதிகளிலே ஒருப்பட்டாளிறே. *ஹம்ஸகாரண்டவாகீர்ணாம் வந்தே கோதாவரீம் நதீம்* என்றும், *அசோக சோகாபநுத சோகோபஹதசேதஸம்* என்றுமிறே அவர்கள் வார்த்தையும். பிராட்டிமார்தசைதான் உண்டாகிறபடி யெங்ஙனே? என்னில்;—அநந்யார்ஹசேஷத்வத்தாலும் அநந்யசரணத்வத்தாலும், அந்வயத்தில் தரித்தும், வ்யதிரேகத்தில் தரியாதொழிகையாலும், ததேக போகராகையாலும், அவன் நிர்வாஹகனாக இத்தலை நிர்வாஹ்யமாகையாலும், பிராட்டிமார்தசை யுண்டாகத் தட்டில்லை. ஆனால், பிராட்டிதானாகப் பேசுவானென்? என்னில்;—தாமரை திருவடிகளுக்குப் போலியாயிருக்க, "வையங்கொண்ட தடந்தாமரை" என்று தாமரையாகவே திருவடிகளைப் பேசுகிறாப்போலே, இங்கும் பிராட்டியாகப் பேசுகிறது; முற்றுவமை யிருக்கிறபடி. ராஜருஷி, ப்ரஹ்மருஷியானபின்பு க்ஷத்ரியத்வம் பின்னாட்டிற்றில்லையிறே; எதிர்த்தலையில் பும்ஸ்த்வத்தையழித்துப் பெண்ணுடையுடுத்தும்படியிறே அவனுடைய புருஷோத்தமத்வம் இருப்பது. கூடுமிடம் குறிஞ்சி; அதுக்கு பூதம் ஆகாசம்; பிரியுமிடம் பாலை; அதுக்கு பூதம் தேஜஸ்ஸு; ஊடலுக்கு ஸ்தாநம் மருதம்; அதுக்கு பூதம் வாயு; பிரிந்தார் இரங்குமிடம் நெய்தல்; அதுக்கு பூதம் ஜலம்; பிரிந்தார் இரங்குவது நெய்தல்நிலத்திலே யாகையாலே; பிராட்டி, தானும் தன் பரிகரமுமாக லீலோத்யாநத்திலே புறப்பட்டாளாய், தோழிமார் பூக்கொய்கையிலே அந்யபரைகளாக, நாயகனும் தன்னோடாயிரம் பிள்ளைகளும் தானுமாக வேட்டைக்குப் புறப்பட்டுவர, ஏவுண்ட ம்ருகம் இவனை இந்த உத்யாநத்திலே தனியே கொண்டுவந்து மூட்டி, அது மறைய, தைவயோகத்தாலே இருவர்க்கும் ஸம்ச்லேஷம் ப்ரவ்ருத்தமாய், கூட்டின தைவம் பிரிக்கப் பிரிந்து, 'இனி இரண்டு தலையையும் அழித்தாகிலும் கிட்டவேணும்' என்னும் ஆற்றாமை பிறந்து, தன் பரிஸரத்திலுள்ளார் "எம்மின்முன் னவனுக்கு மாய்வார்" என்கிறபடியே தளர்ந்து, கால்நடை தருவாரில்லாமையாலே அப்பரிஸரத்திலே வர்த்திக்கிற சில திர்யக்குக்களைப் பார்த்து, 'இவை வார்த்தை சொல்ல மாட்டாது' என்னுமது அறியாதே, 'இவற்றுக்குப் பக்ஷபாத முண்டாயிருந்ததாகையாலே கடுகப் போய் நங்கார்யம் செய்யவற்று' என்று கமநஸாதநமான பக்ஷபாதமே பற்றாசாக, ராவணமாயையால் வரும் அதிசங்கையு மில்லாமையாலே கண்ணால் கண்டவற்றையெல்லாம் தூதுவிடுகிறாள்; "சக்ரவர்த்திதிருமகன் திருவவதரித்த பின்பு வாநரஜாதி வீறுபெற்றாற்போலே காணும், ஆழ்வார்கள் திருவவதரித்துத் திர்யக்ஜாதி வீறுபெற்றபடி" என்று பட்டர் அருளிச்செய்வர். இனி, இவர்க்கு யாத்ருச்சிக ஸம்ச்லேஷமாவது - அநாதிகாலம் இவரைத் தன்னோடே சேர விடுகைக்கு அவஸரப்ரதீக்ஷனாய்ப் போந்தவன் இவர்பக்கலிலே அப்ரதிஷேத முண்டாவதொரு அவகாசம் பெற்று, அவன் மயர்வறமதிநலமருளப்பெற்றவிது. விச்லேஷமாவது - அவன் கொடுத்த ஜ்ஞாநம் பேற்றோடே தலைக்கட்டப்பெறாமை. தூதுவிடுகைக்குப் பற்றாசுதான ஏது? என்னில்; - தன்மேன்மையாலே இத்தலையில் தண்மைபாராதே வந்து கலந்தான்; இட்டினவாறே தோஷதர்சநத்தைப் பண்ணினான்; பிரிந்தவளவிலே 'இது வன்றோ இருந்தபடி என்று அநாதரித்தான்; தோஷதர்சநம் பண்ணுமளவேயன்றிக்கே, தமக்கு அபராதஸஹத்வமென்றொரு குணமுண்டு நிரூபகமா யிருப்பதொன்று; அத்தையறிவிக்க வருமென்று அந்த அபராதஸஹத்வம் பற்றாசாகத் தூதுவிடுகிறாள்.

அஞ்சிறையமட நாராய்! அளியத்தாய்* நீயும்நின்
அஞ்சிறையசேவலுமாய் ஆவாவென்றெனக்கருளி*
வெஞ்சிறைப்புள்ளுயர்த்தார்க்கு என்விடுதூதாய்ச்சென்றக்கால்*
வன்சிறையிலவன்வைக்கில் வைப்புண்டாலென்செய்யுமோ. (1)

ஒ.—முதற்பாட்டில், இப்பிராட்டி, உத்யாநத்திலே ஸம்ச்லேஷித்து வர்த்திக்கிறன சில நாரைகளைக் கண்டு, ஸ்த்ரீத்வத்தாலே அவற்றில் தன்னோடு ஸஜாதியமான பேடையை நோக்கி எம்பெருமானுக்கு என் ஆர்த்தியை அறிவிக்கவேணு மென்கிறாள்.

[அஞ்சிறை என்று தொடங்கி] - சேவலோட்டை ஸம்ச்லேஷத்தாலே செந்தலித்து நினைத்தவிடத்திலே போகைக்கீடான சிறகை யுடையையாய் பவ்யமான நாராய்! இத்தசையிலே உதவும்படியான தகைமையையுடைய நீயும் நீ இட்டவழக்காய் அழகிய கமநஸாதநத்தையுடைத்தான சேவலுங் கூடி ஆர்த்தையான எனக்கு ஐயோ? என்று க்ருபை பண்ணி. [வெஞ்சிறைப்புள் உயர்த்தார்க்கு] - அங்கே போனால் அவனை அறியும்படி எங்ஙனே? என்னில், - ப்ரதிபக்ஷத்துக்கு வெவ்விதான சிறகையுடைத்தான பெரிய திருவடியைக் கொடியாகவுடையவ னென்று அடையாளம் சொல்லுகிறாள்; தன்னைப் பிரித்துச் சடக்கெனக் கொடுபோகையாலே "அக்ரூர: க்ரூரஹ்ருதய:" என்னுமாபோலே இவ் வெவ்விதான சிறகையுடைய புள்ளாலே வஹிக்கப்பட்டவனுக்கு என்றாளாகவுமாம். [என்விடுதூதாய்ச் சென்றக்கால்] - அத்யார்த்தையான எனக்குத் தூதாய்ச் சென்றக்கால். [வன்சிறையில் என்று தொடங்கி] - தான் அர்த்திக்கச்செய்தே அவை போகாதொழிந்தவாறே, தன்பக்கல்நின்றுஞ் சென்ற தங்கள் வார்த்தையை அவன் அங்கீகரியானென்று பார்த்து அவை போகாதொழிந்தனவாகக் கொண்டு அப்படி நீர்மையுடையவன் உங்களைக் கொண்டாடாமையாகிற வன்சிறையிலே வைக்கில்; 'பரார்த்தமாகச் சிறையிருக்கை கிடைப்பதொன்றோ? என்று ஸ்வகோஷ்டீ ப்ரஸித்தியாலே சொல்லுகிறாள்.

இ.—முதற்பாட்டில், தன்கண்வட்டத்திலே சேவலோடே கலந்திருக்கிறதொரு நாரையைப் பார்த்து 'நீ அவனுக்கு என் தசையை அறிவிக்கவேணும்' என்கிறாள்.

[அஞ்சிறைய] - ப்ரஜைக்குத் தாய்முலையிலே கண் ஓடுமாபோலே தனக்கு உபகாரகமான சிறகிலேயாயிற்று முற்படக் கண்வைத்தது. ஆசார்யனுடைய ஜ்ஞாநத்தை அநுமித்து சிஷ்யன் உபஸத்தி பண்ணுமாபோலே, கடகருடைய பரிகரவத்தையை அறிந்து பற்றவேணுமிறே. 'அம்' என்று அழகு. 'சிறை' என்று சிறகு. அழகிய சிறகையுடைய தன்னைப்போலே உருவியிராதே, சேவலோட்டை ஸம்ச்லேஷத்தாலே செந்தலித்திருக்கை. "ஸபங்காமநலங்காராம் விபத்மாமிவ பத்மிநீம்" என்றிறே தன்தசை. [மடநாராய்] - ஸம்ச்லேஷத்தாலே துவண்டு தூதுபோகைக்கு யோக்யமாயிருக்கை. நாண் மடம் அச்சம் என்று ஸ்த்ரீத்வமாய், பிரிவில் வ்யஸநமறியும் தன் இனத்தைப் பார்த்துச் சொல்லுகிறா ளென்னவுமாம். [அளியத்தாய் நீயும்] - இத்தசையிலே உதவும் அநுக்ரஹசீலையான நீயும். [நின் அஞ்சிறைய சேவலுமாய்] - நீ இட்டவழக்காய், நல்ல கமந பரிகரத்தையுடைத்தான சேவலுமாய். சேவலைப் பற்றுவது பேடை முன்னாகவென்றும், ஆர்த்தரக்ஷணம் பண்ணுவதும் ஒரு மிதுந மென்றிருக்கிறாள். [ஆவாவென்று] - என் தசையைப் பார்த்து, ஐயோ! ஐயோ! என்று. [எனக்கு] - "ஏஹி பச்ய சரீராணி" என்று தன் வடிவைக் காட்டுகிறாள். [அருளி] - க்ருபைபண்ணி. இரப்புக்குச் செய்ததாகையன்றிக்கே உங்கள் பேறாக அருளி. "விக்ராந்தஸ்த்வம் ஸமர்த்தஸ்த்வம் ப்ராஜ்ஞஸ்த்வம் வாநரோத்தம". எங்ஙனே ஸ்தோத்ரம் பண்ணுகிறதென்? அங்கேசென்றால் எல்லாரும் ஸாம்யாபந்நரா யிருக்கையாலே தெரியவொண்ணாது: அடையாளமென்? என்று இருக்கிறனவாகக்கொண்டு சொல்லுகிறாள் - [வெஞ்சிறைப் புள்ளுயர்த்தார்க்கு]-வெவ்விய சிறகையுடைய பெரிய திருவடியை த்வஜமாக எடுத்தவர்க்கு. வரும்போது ப்ரதிபக்ஷத்தை நிரஸித்துக்கொண்டு வரும்படியைச் சொல்லுகிறது; "ஸாமத்வநித்வஸ்தஸம்ஸ்தபாதகம்". உயர்க்கையாகிறது - வஹிக்கையாய். "அக்ரூர: க்ரூர ஹ்ருதய:" என்னுமாபோலே தன்னைப்பிரித்துச் சடக்கெனக் கொண்டுபோன கொடுமையைச் சொல்லிற்றாகவுமாம். [என் விடு தூதாய்] - பெரும்டுக்

கரான பாண்டவர்கள் க்ருஷ்ணனைத் தூதுவிட்டாற்போலேயோ? அபலையாய் அத்யார்த்தையான நான் விடவன்றோ போகிறது? பரார்த்தமாகத் தூதுபோகை கிடைப்பதொன்றோ? [சென்றக்கால்] - அவன் பக்கலிலே யன்றோ செல்லுகிறது. உங்கள் வழிபோக்குத்தானே அடிக்கழஞ்சு பெறுதோ? [வன்சிறையில்]- ப்ரணயிநிபாடுநின்றும் வந்தவர்களைச் சிறையிடுவான் ஒரு மூர்க்க னுண்டோ? இனி, சிறையாகிறது - இவர்கள் வார்த்தையை அநாதரிக்கை; இவர்களைக் கண்டபோதே துணுக்கென்று "மதுரா மதுராலாபா கிமாஹ மமபாமிநீ" என்னுமையிறே. [அவன் வைக்கில்] - "நைவ தம்சாந் நமசகாந்" என்று ஆதரியா தொழியுமோ? [வைக்கில்] - அநாதரிக்க ப்ரஸங்கமில்லை, சிரஸா வஹிக்கு மென்று கருத்து. [வைப் புண்டா லென்செய்யுமோ] - அங்ஙனேயாகில் அது உங்கள்பேறன்றோ? பரார்த்தமாகச் சிறையிருக்கை, கிடைப்பதொன்றோ? என்றிருக்கிறாள். தேவஸ்த்ரீகளுக்காகத் தான் சிறையிருந்தவளிறே?

ஈடு.—முதற்பாட்டு. தன்பரிஸரத்திலே வர்த்திப்பதொரு நாரையைப் பார்த்து, 'என்றும் சேவலைக்கார்யங்கொள்ளுவார் பேடையை முன்னாகக் காரியங்கொள்ளவேணும்' என்றிருக்கும் தம் வாஸனையாலே பேடையை முன்னிட்டுச் சேவலைப்பற்றி, 'நீ என் தசையை அறிவித்து என்னையும் அவனையுஞ் சேர்க்கவேணும்' என்கிறாள்.

[அஞ்சிறைய] ப்ரஜை, தாயினுடைய அவயவங்களெல்லாங் கிடக்க, முலையிலே வாய் வைக்குமாபோலே கமநஸாதநமான சிறகிலே யாயிற்று முற்படக் கண்வைத்தது. நீர்பாய்ந்த பயிர்போலே பரஸ்பர ஸம்ச்லேஷத்தால் பிறந்த ஹர்ஷம் வடிவிலே தொடை கொள்ளலாம்படி இராநின்றது. சிறையென்று சிறகு. ஆசார்யன்ஜ்ஞாநத்தை அநுபிந்து சிஷ்யன் உபஸத்தி பண்ணுமாபோலே சிறகிலே கண்வைக்கிறாள். [மட] ஏவிக்கார்யங்கொள்ளலாம்படி பவ்யதைதோற்ற இருந்தது. ஸம்ச்லேஷத்தாலே துவண்டு தூது போகைக்கு யோக்யமாம்படியிருக்கை. நாண் மடம் அச்சமென்று ஸ்த்ரீத்வமாய், பிரிவில் வ்யஸநமறியும் தன்னினமான பேடையைப் பார்த்துச் சொல்லுகிறாளென்றுமாம். [நாராய்] "அம்மே!" என்னுமாபோலே. [அளியத்தாய்] அவன் போகட்டுப்போன ஸமயத்திலே ஆற்றாமை அறிவிக்கலாம்படி வந்து முகங்காட்டின உன் அநுக்ரஹசீலதை இருந்தபடியென்! அளி க்ருபை; க்ருபைபண்ணத் தக்காயென்றபடி. *பம்பாதீரே ஹநுமதா ஸங்கத:* போலே; வழிபறிப்பார் கையிலே அகப்பட்டு நிற்க, தாய்முகத்திலே விழித்தாற்போலே. [நீயும்] *ஸ ப்ராதுச்சரணௌ காடம் நிபீட்ய ரகுநந்தந:, ஸீதாமுவாச* என்கிறபடியே என்றும் சேவலைக் காரியங்கொள்ளுவார் பேடையை முன்னிட்டுப்போலேகாணும் கார்யம் கொள்வது. [நின் அஞ்சிறைய சேவலுமாய்] பேடையையிட்டாயிற்று சேவலின்பக்கல் ப்ரதிபத்தி. "ச்ரிய:பதி" என்னுமாபோலே. [நின் அஞ்சிறைய சேவலுமாய்] "பெண்ணணைந்தவடிவு" என்று தோற்றுகின்றதாயிற்று. அதுஇட்ட வழக்கான நீயும், நீயிட்ட வழக்கான சேவலுமாய். [ஆவாவென்று] "ஐயோ! ஐயோ!" என்று. மிதுநமாயிருக்கிறது தன் ஆர்த்தி பரிஹரிக்கைக்கு என்றிருக்கிறாள். [எனக்கு] "ஏஹி பச்ய சரீராணி" என்று விரஹம் தின்ற தன்வடிவைக் காட்டுகிறாள். அவனோடே கலந்து பிரிந்து, 'கண்ணாலே காணப்பெறுவதுகாண்' என்னும் அபேக்ஷையோடேயிருக்கிற எனக்கு. [அருளி] இரப்புக்குச் செய்ததாகையன்றிக்கே உங்கள் பேறாக அருளி. தயை பண்ணுகைக்கு அத்தலை குறை வற்றாற்போலேயன்றோ! தயாவிஷயமான இத்தலை குறைவற்றபடி. பகவத் விஷயத்தில் உபகரிப்பார் ப்ரத்யுபகாரத்துக்கல்ல உபகரிப்பது, தங்கள் க்ருபையாலே யாயிற்று; உபய விபூதியுக்தனை அவர்கள் உபகரித்தால், அவனுக்கு ஸத்ருசமாக உபகரிக்கலாவதில்லையே இவனுக்கு! *விக்ராந்தஸ்த்வம் ஸமர்த்தஸ்த்வம் ப்ராஜ்ஞஸ்த்வம் வாநரோத்தம* என்றாற்போலேயிறே இவள் இவற்றை ச்லாகித்தது. "எங்களை இங்ஙன் கொண்டாடுகிறதென்? உன் தசையைக் கண்டு போகட்டுப்போனவன் எங்கள் வார்த்தை கேட்கப்புகாநின்றானோ? இனித்தான் *நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி* என்கிறபடியே அங்குள்ளார் பரமஸாம்யாபந்நராயன்றோ இருப்பது. 'நாங்கள் அவனுக்கும் அவர்களுக்கும் வாசியறியும்படி என?' என்றன்றோ நாங்களிருக்கிறதென்று அவற்றுக்குக் கருத்தாக மேல் வார்த்தை சொல்லுகிறாள். [வெஞ்சிறைப்புள்ளுயர்த்தார்க்கு] அவர்கள் பரமஸாம்யாபந்நராயிருக்கையாலே தனக்கு வ்யாவர்த்தகவிசேஷணமாகப் பெரிய திருவடியை த்வஜமாக

வுடையனாயிருக்கும் விரோதியைப் போக்கிக்கொண்டு வருகைக்கு அங்கே நமக்கு ஆளுண்டென்கிறாளாதல், நிர்த்தயமாகப் பிரித்துக்கொண்டு போகையாலே *அக்ரூர: க்ரூரஹ்ருதய:* என்னுமாபோலே சொல்லுகிறாளாதல். [புள்ளூயர்த்தார்க்கு] புள்ளாலே வஹிக்கப்பட்டவரென்னுதல்; புள்ளை த்வஜமாகவுடையவரென்னுதல். [என்விடு தூதாய்] அவன் ஆள்வரவிடஇருக்கக்கடவ நானன்றோ விடுகிறேன். [விடு] *க்ரியதாம்* என்கிறபடியே நான் ஏவவன்றோ நீங்கள் போகிறது. பெருமிடுக்கரான பாண்டவர்கள் க்ருஷ்ணனைத் தூதுவிட்டாற்போலேயோ? அபலையாய் அத்யார்த்தையான நான் ஏவவன்றோபோகிறது. பரார்த்தமாகத் தூதுபோகை கிடைப்பதொன்றோ? [சென்றக்கால்] எனக்கு முன்னே உங்களுக்கு உத்தேச்யமன்றோ விதிக்கப்புகுகிறது? உங்கள் போக்கு அடிக்கழஞ்சு பெறுதோ? [வன்சிறையில்] இவன் பாடுநின்றுஞ் சென்றவற்றைச் சிறையிட்டு வைக்கிறானன்றே; இவர்களுக்கு முகங்கொடாதே அந்யபரனாகையிறே இவர்களைச் சிறையிட்டுவைக்கையாவது. ராஜபுத்ரர்களுக்கு ப்ராப்த காலங்களிலே வெள்ளிலையிடாதபோது மாந்துவர்களிறே. [என்விடு தூதாய்ச் சென்றக்கால் வன்சிறையில் அவன் வைக்கில்] நீங்கள் ஏதேனும் அவனுக்குத் தூதுபோகிறீர்களோ? சிறைகூட்டுதல், சிங்கவிளக்கெரித்தல் செய்யில் செய்வதென்? என்று கூசுகைக்கு; எனக்குத் தூதுபோனாரை *பரிஷ்வங்கோ ஹநூமத:* என்னுமாபோலே மார்பிலே யணைக்கும் காணுங்கோள். நான் அணைய ஆசைப்படுகிற மார்வன்றோ உங்களுக்குப் பரிசிலாகப் புகுகிறது? [அவன் வைக்கில்] *வ்யஸநேஷு மநுஷ்யாணாம்* என்றிருக்குமவன் வைக்குமோ? சிரஸாவஹியானோ? [வைப்புண்டாலென்செய்யுமோ?] அது பொல்லாதோ கிடைக்குமாகில்? பரார்த்தமாகச் சிறையிருக்கக் கிடைப்பதொன்றோ? ராவணன் தேவஸ்த்ரீகளைச் சிறையிட்டு வைக்கத் தான் அவர்கள்காலில் விலங்கைத் தன்காலிலே கோத்துச் சிறைமீட்டவளிறே.

என்செய்யதாமரைக்கண் பெருமானார்க்கென்தூதாய்*
என்செய்யுமுரைத்தக்கால் இனக்குயில்காள்! நீரலிரே*
முன்செய்தமுழுவினையால் திருவடிக்கீழ்க்குற்றேவல்*
முன்செய்யமுயலாதேன் அகல்வதுவோவிதியினமே? (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், சில குயில்களைக் குறித்து எம்பெருமான்பக்கல் சென்றால் விண்ணப்பம் செய்யும் பாசுரத்தைச் சொல்லுகிறாள்.

[என் என்று தொடங்கி] - விச்லேஷதசையில், 'ஆத்மாத்மீயங்களெல்லாம் உன்னது' என்பாரைப்போலே ஸ்நேஹமாக நோக்கின நோக்கையும் இத்தலையைத் தோற்பிக்கையாலே மிகவும் மேனாணிப்பையும் உடையவனாயிருந்தவனுக்கு; ஸம்ச்லேஷ தசையில் ஸ்நேஹமாக நோக்கின நோக்காலே என்னை அடிமைகொண்டவனுக்கு என்றுமாம். அத்யார்த்தையான என்னுடைய தூதாய் எனக்காக ஒருவார்த்தை அங்கே அறிவித்தால் உங்களுக்கு என்ன சேதமுண்டு? சிலவருடைய ஆர்த்திக்கு உதவுகை கிடைப்பதொன்றோ? என்று கருத்து. [இனக்குயில்காள் நீரலிரே] - எங்களைப்போலே பிரியாதே கூட இருப்பது நீர்மைக்கு நீங்களாலது. [முன்செய்த என்று தொடங்கி] - அநாதிகாலஸஞ்சிதமான மஹாபாபத்தாலே திருவடிக்கீழ் அந்தரங்கவ்ருத்திகள் பண்ணுகைக்கு ஈடான பாக்யத்தைப் பண்டு பண்ணாத நான் அகன்றேபோமித்தனையோ? தந்தாமுக்கென்ன ஒன்றில்லாதார் தயநீயரன்றோ? என்று கருத்து. [விதியினம்] - பாவியோம்; விதி இன்னமென்றுமாம்.

இ.—இரண்டாம்பாட்டில், சில குயில்களைக் குறித்து, அவன்பக்கலிலே சென்றால் சொல்லும் பாசுரத்தைச் சொல்லுகிறாள். நாரைகளைத் தூதுபோகவேணுமென்று அர்த்தித்தாள். அவை போனால் சொல்லும் வார்த்தையைச் சிலகுயில்களைக்குறித்துச் சொல்லுகிறாள்; அந்யதுபக்ராந்தம் அந்யதாபதிதமாயிருந்ததீ! என்னில்; — இவ்வஸங்கத பாஷணம் பண்ணிற்றிலளாகில் விஷய வைலக்ஷண்யத்துக்கு நமஸ்கார மாமிறே.

[என்செய்ய தாமரைக்கண் பெருமானார்க்கு] - விச்லேஷ தசையிலே தான் வருந்தனையும் இவள் தரித்திருக்கைக்காக 'ஆத்மாத்மீயங்கள் எங்கேறுங் கிடக்கிலும் உன்னதன்றே? என்கிற வார்த்தையாலே, என்னுடையவ ரென்கிறாள். ஐச்வர்யத்தாலும் வாத்ஸல்யத்தாலும் கலவியாலும் சிவந்த திருக்கண்களை யுடையவர். இவையெல்லாம் இவள் அநுபவித்தவையிறே: முதல் திருவாய்மொழியில் ஐச்வர்யமும், மூன்றாந்திருவாய்மொழியிலே வாத்ஸல்யமும், இந்திருவாய்மொழியிலே கலவியும். [பெருமானார்க்கு] - ஸ்வாபாவிகமான பௌஷ்கல்யத்துக்கு மேலே, தன்னைத் தோற்பித்தத்தால் வந்த மேனாணிப்பைச் சொல்லுகிறாள். ஸம்ச்லேஷதசையில் ஸஸ்நேஹமாக நோக்கி, அந்நோக்காலே என்னை அடிமைகொண்டவனுக்கு என்றுமாம் [என்தூதாய்] - அந்நோக்குக்கு இலக்காய்; இன்று வெறுந்தரையான என்தூதாய். [என் செய்யு முரைத்தக்கால்] - அவனோடே கூட்டச் சொல்லுகிறேனோ? ஒரு வார்த்தை சொன்னால் என்ன சேதமுண்டு? ஆர்த்தரக்ஷணம் சிலர்க்குக் கிடைப்பதொன்றோ? [இனக்குயில்காள்] - இனமாயிருப்பார்க்கு, தனியராயிருப்பாரைக் கூட்டவேண்டாவோ? [நீரலிரே] - நானும்அவனும் சேர இருந்தபோது போது போக்கக்கடவர்களல்லீர்களோ? 'நீர்மைக்கு நீங்கள்' என்னுமத்தனையன்றோ? என்னவுமாம். போனால் சொல்லும் பாசுரம் அறியாமலிருக்கிறனவாகக்கொண்டு சொல்லுகிறாள் - *[முன்செய்த முழுவினையால்]*- அநாதிகால ஸஞ்சிதமான பாபத்தாலே. பாபம் ஸாவதியாதல், பாபம் பண்ணினகாலம் ஸாவதியாதலாது லன்றோ என்கையில் என்னைக் காட்டித்தருவது? இதிஹாஸம் - பட்டர் திருக்கோட்டியூரிலே எழுந்தருளியிருக்கச்செய்தே, தெற்காழ்வானும் கோளரியாழ்வானு மென்று இரண்டு திருப்பதியா ருண்டு; கோளரியாழ்வான் ஸ்தாசாரபரனாயிருக்கும்; தெற்காழ்வான் மேலெழத் திரியும்; ஒரு விசேஷதிவஸத்திலே இருவரும் சேர்ந்தவளவில், கோளரியாழ்வான் தெற்காழ்வானை 'இன்றாகிலும் ஒரு முழுக்கிட மாட்டாயோ?' என்ன, 'என்னுடைய பாபம் தெற்காழ்வார்கையில் திருவாழியாலே போக்கப்போமதொழிய ஓரிரண்டு முழுக்கால் போமதன்றுகாண்' என்ன, அத்தைக் கேட்டு 'இவனை மேலெழ விசாரித்தோமே' என்று வித்தராயருளினார் பட்டர் [திருவடிக்கீழ் குற்றேவல் முன்செய்யமுயலாதேன் அகல்வதுவோ] - திருவடியின்கீழே அந்தரங்கவ்ருத்தி பண்ணுகைக்கு ஏற்கவே ப்ரவர்த்திக்கப்பெறாத நான் அகன்றேபோமித்தனையோ? முன்செய்ய முயலுகையாவது - அதுக்கீடான பாக்யத்தைப் பண்ணுகை; ''க்ரியதாமிதி மாம்வத'' என்றும், ''முகப்பேகூவிப் பணிகொள்ளாய்'' என்றும் சொல்லுகிறபடியே கண்வட்டத்திலே நின்று பண்ணுகைக்கு ஈடாக முயலாத நான் அகன்றேபோமித்தனையோ? என்றுமாம். தந்தாமுக்கென்ன ஒன்றில்லாதார் தயநீயரன்றோ? என்று கருத்து ''த்வத்க்ருபா ஸங்குசந்தீ'' என்னக்கடவதிறே. [விதியினம்]- விதியென்று பாபமாய், விதியையுடையோம்: பாவியோ மென்றபடி கீழே ''முழுவினை'' என்று சொல்லிற்றிறே? என்னில்; மஹாபாபத்தைப் பண்ணின பாவியோ மென்றபடி. ''பாவமேசெய்து பாவியானேன்'' என்னக்கடவதிறே. அன்றிக்கே, எங்கள்தலையில் குற்றத்தை இசைந்தபின்பும் அகலுமத்தனையோ? என்றுமாம். இனம் - இன்னம். விதி - உன்கருத்து.

ஈடு.—இரண்டாம்பாட்டு. சிலகாரைகளைத் தூதுபோகவேணும் என்று இரந்தாள் கீழ்; அங்குப்போனால் சொல்லும் பாசுரத்தைக் குயில்களுக்குச் சொல்லாநின்றாள்; அந்யதுபக்ராந்தமந்யதாபதிதம் என்னும்படியாய் வந்து விழுந்தது; இத்தனையும் கலங்கிற்றிலளாகில் இவள் பிரிந்த விஷயத்துக்கும் நாட்டார் பிரிந்த விஷயத்துக்கும் வாசியன்றிக்கே யொழியுமே, இப்படி கலங்கப்பண்ணுதவன்று குணாதிகவிஷயத்துக்கு நமஸ்காரமா மித்தனையிறே.*

[என்] பிரிந்த ஸமயத்திலும் 'என்னுடையவன்' என்று சொல்லலாம்படிகாணும் கலக்கிற ஸமயத்திலே அவன் இவளிட்ட வழக்காயிருந்தபடி. அன்றிக்கே, பிரிகிற ஸமயத்திலே தான்வருமளவும் இவள் தரிக்கைக்காக 'இது எங்கேயிருக்கிலென்? எங்கே போகிலென்? உன் சரக்கன்றோ?' என்று சொல்லிப்போமே; அத்தாலே யாகவுமாம். [என் செய்யதாமரைக் கண்பெருமானார்க்கு] ஸ்வாபாவிகமான ஐச்வர்யத்தாலும் சிவந்திருக்கும்; ஸ்வகீயவஸ்துக்கள் பக்கல் வாத்ஸல்யத்தாலும் சிவந்திருக்கும்; மதுபாநமத்தரைப்போலே இவளோட்டைக் கலவியாலும் சிவந்திருக்கும்; பிரிவாலே அரையாறுபட்டுச் சிவந்திருக்கும்; இவையெல்லாம் இவள் அநுபவித்தவளிறே. முதல் திருவாய்மொழியிலே ஐச்வர்யம், மூன்றாந்திருவாய்மொழியிலே வாத்ஸல்யம், இத்திருவாய்மொழியிலே கலவியும் பிரிவும். [பெருமானார்க்கு] பிரிகிறபோது கண்ணாலேநோக்கி அநர்பார்ஹையாக்கிப் போனபடி; ஸ்வாபாவிகமான ஐச்வர்யத்துக்கு

மேலே இத்தலையிலொடுக்குமாட்டா துண்டான ஐச்வர்ய முண்டாகையாலே இரட்டித்திருக்குமிறே, [என் தூதாய்] கடலேறி வடிந்தாற்போலே காணும் கிடக்கிறது. அவனோடே கலந்து பிரிந்து வெறுந்தரையாயிருக்கிற எனக்குத் தூதாய். [என்செய்யுமுரைத்தக்கால்] உபய விபூதியுங் கண்டது உங்களுக்குக் கிஞ்சித்கரிக்கவென்றிருக்கிறான். [உரைத்தக்கால்] அவனைக்கொடுவந்து சேர்க்கச் சொல்லுகிறேனோ: ஒருக்தி சேர்ந்தால் என்செய்யும்? [இனக் குயில்காள்] என்னைப்போலே தனியிருக்கிறீர்களன்றே. [நீரலீரே] நீர்மைக்கு நீங்களன்றோ? நானும் அவனுமானபோது கேட்ட வார்த்தைக்கு ப்ரதிவசநம் பண்ணின நீங்கள் அவன் பிரிந்தவாறே வேறு சிலரானிகளோ? [முன்] நான்பாபம்பண்ணிப்போருகிற காலம் ஸாவதியோ? [செய்த] ஸங்கல்பித்துவிட்டவளவேயோ? [முழுவினை] அதுதன்னில் ஏதேனும் அநுஞ்சரிப்பட்டதுண்டோ? என்னால் பரிஹரிக்கவாதல், தம்மால் பரிஹரிக்க வொண்ணு தொழிதல் செய்யிலன்றோ எனக்கு இழக்கவேண்டுவது. திருக்கோட்டியூரிலே தெற்காழ்வான் கோளரியாழ்வானுக்குத் தீர்த்தத்துறையிலே சொன்ன வார்த்தை. "ஒருமுழுக்காலும் இரண்டுமுழுக்காலும் போகாதுகாண் — தெற்காழ்வார்கையில்திருவாழியாலே வினையை யறுத்துக்கொண்டுபோகில் அத்தனை யொழிய ஒன்றிரண்டு முழுக்கால் போகாதுகாண் நான் பண்ணின பாபம்" என்று [திருவடிக்கீழ்] ப்ராஹ்மணர் பிச்சேறினாலும் ஒத்துச் சொல்லுமா போலே, இவர் பிராட்டியாலும் மூலையால் அணைக்க நினையார்: திருவடிகளிலே யணையத் தேடுமத்தனை. [குற்றேவல்] திருவடிகளிலே கிட்டி அந்தரங்கவ்ருத்தி பண்ண ஆசைப்படுமத்தனை. [திருவடிக்கீழ் குற்றேவல் முன்செய்ய முயலாதேன்] ஏற்கவே தோலாத நானென்னுதல்; [முன்] *க்ரியதாமிதி மாம்வத* என்கிறபடியே இன்னத்தைச் செய்யென்று ஏவத்திருமுன்பே அடிமைசெய்ய முயலாதேனென்னுதல். [அகல்வதுவோவிதி] திருவடிகளிலே அடிமை செய்கைக் கீடாயிருப்பதொரு ஸாதநாநுஷ்டாநம் என்தலையால் பண்ணுகை நான் அகன்றேபோமித்தனையோ? முதலில்லாதார் பலிசையிழக்குமித்தனையன்றோ வென்ன, முதலில்லாதாரன்றோ பலிசையிழப்பார்! அவன்தானே முதலாகவிருக்கும் கோஷ்டியிறே இவர்கள் கோஷ்டி: "கலைகண்மற்றிலேன்" என்றும், "உன்சரணல்லால் சரணில்லை" என்றும், "மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவை" என்றும், "நெறிவாசல் தானேயாய் நின்றானை" என்றும், "விழிக்குங்கண்ணிலேன் நின் கண்மற்றல்லால்" என்றும், "வாழும் சோம்பர்" என்றும் இப்படிகளிலேயிறே இவர்கள் கோஷ்டியில் வார்த்தைகளும் இருக்கும்படி. [விதியினமே] விதியினன் என்றாய், பாபத்தை யுடையேனான நான்; அகன்றே போமித்தனையோ? என்னுதல்; "இனம்" என்ற இத்தை இன்னம் என்றாக்கி, 'எங்களபிமதம் பெறுகைக்கு எங்கள் பக்கலொரு நன்மையில்லாதபின்பும் தாழ்க்குமித்தனையோ? என்கிறாள், என்று பிள்ளை திருநறையூரரையர் பணிக்கும்படி. விதியினம்-பாவியோமென்றபடி. கீழே 'முழுவினை' என்று சொல்லிற்றிறேயென்னில்; மஹாபாபத்தைப் பண்ணின பாவியோமென்றபடி: "பாவமே செய்து பாவியானேன்" என்னக்கடவதிறே.

விதியினல்பெடைமணக்கும் மென்னடையவன்னங்காள்!*
மதியினல்குறள்மாணாய் உலகிரந்தகள்வர்க்கு*
மதியிலேன்வல்வினையே மாளாதோவென்று* ஒருத்தி
மதியெல்லாமுள்கலங்கி மயங்குமாலென்னீரே. (3)

ஒ.—மூன்றாம்பாட்டில், "தாந்தாம்பண்ணின பாபம் தாந்தாமே அவச்யம் அநுபவிக்க வேண்டாவோ?" என்று உபேக்ஷித்திருக்கிறானாகக் கொண்டு எல்லைச்சதிரியான சிந்தயந்திபாபம் அநுபவவிநாச்யமாகலாம்; நான் பண்ணின பாபமேயோ அநுபவ விநாச்யமாகாதென்று எம்பெருமானுக்கு விண்ணப்பம் செய்யவேணுமென்று சில அன்னங்களை அர்த்திக்கிறாள்.

[விதியென்று தொடங்கி] - நான்பண்ணின பாக்யத்தாலே பேடையோடே ஸம்ச்லேஷித்து அந்த ஸம்ச்லேஷ ரஸத்தாலே ஆகர்ஷகமான நடையையுடைய அன்னங்காள்! புத்தியோகத்தாலே

வாமநவேஷமும் குணசேஷ்டிதாதிகளாலே ஈடுபடுத்தும் ஸ்வபாவனுனவனுக்கு. [ஒருத்தி] - ஒருத்தியென்னவே, தானே "இன்னுள்" என்று அறிகிருனிறே என்று கருத்து. [மதியெல்லாமென்று தொடங்கி] - பகவத்ப்ரஸாதத்தாலே மயர்வறும்படி பெற்ற ஜ்ஞாநப்பரப்பெல்லாம் நிச்சேஷமாகக் கலங்கி மயங்காநின்ருள் என்று அறிவியுங்கோள்.

இ.—மூன்ரும்பாட்டில், அத்தலையில் இரக்கத்தால் என்பாபம்போகை தவிர்ந்தால், அநுபவ விநாச்யமன்றே? என்று சொல்லுங்கோளென்று சில அன்னங்களை அர்த்திக்கிருள்.

[விதியினுல் பெடை மணக்கும்] - என் பாக்யத்தாலே பேடையோடே ஸம்ச்லேஷிக்கும் பெடை மணக்கும் பேடையின் கருத்தறிந்து உகப்பிக்கும் என் ஆற்ருமைக்கு மேலே, நீங்களும் பிரிந்திருந்து, உங்களைக் கூட்டுகையிலே யத்நம்பண்ண வேண்டாதொழிந்தது என்பாக்யமிறே. உங்கள் பாக்யத்தாலேயிறே ஸம்ச்லேஷமே யாத்ரையாகப் பெற்ற தென்னவுமாம் [மென்னடைய அன்னங்காள்] - ஸம்போகத்தாலே வந்த துவட்சியாலே ஆகர்ஷகமான நடையையுடையவையாகை தாரையுடைய புறப்பாடு போலே இருந்ததீ உங்கள் புறப்பாடும்! [மதியினுல்] - ஔதார்யமென்பதொரு குணமுண்டாகையாலே மஹாபலியை அழிக்கவொண்ணுது. இந்த்ரன் ராஜ்யம்பெறவேணுமென்று புத்தியோகத்தாலே தன்னை அர்த்தியாக்கினுன். [குறள்] - பால் செல்லச்செல்ல ரஸிக்குமாபோலே சிறுகினவடிவு ஆகர்ஷகமானபடி. [மாணுய்] - "உண்டு" என்ற போதோடு, "இல்லை" என்ற போதோடு வாசியற முகமலர்ந்து போம்படி இரப்பிலே தகணேறினபடி. [உலகிரந்த] - தன்னதான பூமியை அவனதாக்கி அவன்பக்கலிலே பெற்றுனுயிருக்கை. [கள்வர்க்கு] - 'அப்படிப்பட்ட வஞ்சகருக்கு' என்பர் ஆளவந்தார். 'அன்று அச்செயல் செய்ததும் - அக்குணசேஷ்டிதங்களாலே என்னெஞ்சை அபஹரித்து ஈடுபடுத்துகைக்காகவிறே' என்பர் எம்பெருமானுர். [மதியிலேன்] - "பிரிவை ப்ரஸங்கித்தவளவிலே, போகாதேகொள்ளும்" என்று ஒருக்தியாலே விலங்கிட்டுவைக்கலாயிருக்க, "அதுவும் கலவியிலே ஒருவகையோ" என்றிருந்த மதிகேடியான என்னுடைய. [வல்வினையே மாளாதோ] - பாக்யவதியாகையாலே அநுபவவிநாச்யமான பாபத்தைப் பண்ணினுள் சிந்தயந்தி; நான் பண்ணின பாபத்துக்கேயோ முடிவு காணுதொழிகிறது. "தச்சித்தவிமலாஹ்லாத" இத்யாதி. இவர்தம்மை தீர்க்கசிந்தயந்தியென்றிறே நம்முதலிகள் சொல்வது. [ஒருத்தி] - ஒருத்தி என்னவே "இன்னுள்" என்று தானே அறிகிருனிறே; உபய விபூதியிலும் இப்பாடுபட்டாள் இவளொருத்தியு மாயிற்று; நித்யவிபூதியிலுள்ளார் விச்லேஷம் அறியார்கள்; ஸம்ஸாரிகள் விஷயப்ரவணராய் அறியார்கள் [மதியெல்லா முள்கலங்கி] - நீர் கொடுத்த மயர்வறு மதிநலமெல்லாம் அடிமண்டியோடே கலங்கிற்று என்று சொல்லுங்கோள். [மயங்குமால்] - இப்போது அறிவு போயிற்ருகில் பின்பு அறிவுண்டாகிறதென்று இராமே, முடியும் தசையாயிற்று என்னுங்கோள். [என்னீரே] - உங்களவத்யத்தைப் பரிஹரியுங்கோள்; அறிவித்தால் பின்பு அவத்யம் அவனதிறே.

ஈடு.—மூன்ரும்பாட்டு. "அகல்வதுவோ" என்ருற்போலே சொல்லுகிற பக்திவாதங்கள் நமக்குத் தெரியாது, *அவச்ய மநுபோக்தவ்யம்* என்று சொல்லுகிறபடியே அநுபவித்தேயறவேணும் என்று ஈச்வராபிப்ராயமாகக் கொண்டு, "நான் பண்ணின பாபமேயோ அநுபவித்தாலும் மாளாதது!" என்று சொல்லுங்கோளென்று சில அன்னங்களை யிரக்கிருள்.

[விதியினுல்] நீங்கள் சாஸ்த்ரஞ் சொல்லுகிறபடியே கலக்கையாலே பிரிவின்றியே யிருந்திகோள், இவன் அடைவுகெடக்கலக்கையிறே எனக்குப்பிரிவுவந்ததென்கிருள். உங்களுடைய பாக்யத்தாலே யென்னுதல், என்னுடைய பாக்யத்தாலேயென்னுதல். அபிமதஸம்ச்லேஷம் புண்யபலம், அபிமதவிச்லேஷம் பாபபலம்; (தங்களுடைய ஸுக்ருதத்தாலே) அன்றியே இவை சேரவிருக்கிற இருப்பு இவள் பாக்யமாகவுமாம். பெருமாள் பிராட்டியைப் பிரிந்து கடலும் மலையும் அரித்துக்கொண்டுவாராநிற்கச்செய்தே; ராஜ்யதாரங்களையிழந்த மஹாராஜரைக்கண்டு அவர்குறைதீர்த்த பின்பிறே தம்மிழவில் நெஞ்சு சென்றது அங்ஙனன்றிக்கே, இவை குறைவற்றிருக்கிற இதுதான் இவள்கார்யமா யிருக்குமிறே; நீர்மையுடையார்க்குத் தந்தாமிழவிலும் பிறருடைய இழவிறே நெஞ்சில் முற்படப்படுவது. [பெடை மணக்கும்] பேடையோடேகலக்கும (பேடையினுடைய கருத்தறிந்து) அத்தையுகப்பிக்கை. [மென்னடைய வன்னங்காள்] இவ்வன்ன நடைகொண்டோ என்கார்யஞ் செய்யப் புகுகிறது?

[மென்னடைய வன்னங்காள்] *ஸா ப்ரஸ்க்கலந்தீ* என்னுமாபோலே. இளையபெருமாளுடைய
ஜ்யாகோஷம் செவிப்பட்டவநந்தரம் மதுபாநத்தாலே வந்த கலக்கமும் தெளிந்து, கழுத்தில்
மாலையையும் அறுத்துப்போகட்டு, 'இச்சீற்றத்துக்கு நாம் முன்னிற்கவொண்ணாது' என்று
தாரையைப் புறப்படவிட, அவள், கலவியாலுண்டான பாரவச்யமடங்கலும் நடையிலே
தோற்றப் புறப்பட்டாற்போலே யிராநின்றதாயிற்று இவற்றின் நடையும். இளையபெருமா
ளுடைய திருவுள்ளத்தில் சிவிட்குத் தாரையை யிட்டு ஆற்றவேண்டிற்றுக்காணும். "ஸா"
ஒருகலவியும் பிரிவும் வேண்டாதபடியான நடையழகையுடையவள். "ப்ரஸ்க்கலந்தீ" ஸம்ச்
லேஷத்தாலுண்டான துவட்சியாலே தடுமாறி. அடிமேலடியாக இட்டுவந்தாள். "மதவிஹ்
வலாக்ஷீ" மதுபாநாதிகளாலே தழுதழுத்த நோக்கையுடையவளா யிருந்தாள்; "ப்ரலம்பகாஞ்சீ
குணஹேமஸூத்ரா" அரை நூல்வடமிழுப்புண்டு வரும்படி படுக்கையிற் கிடந்தபடியே பேணாதே
வந்தாள். "ஸலக்ஷணா" ஸம்போகசிஹ்நங்கள் காணலாம்படி வந்தாள். "லக்ஷ்மணஸந்நிதாநம்
ஜகாம" 'தாய்க்கு ஒளிப்பதுண்டோ?' என்று புறப்பட்டு வந்தாள். "தாரா" தாரையானவள்.
'இளையபெருமாள் திருவுள்ளத்தில் சிவிட்கு எத்தாலே யாற்றலாம்?' என்று மஹாராஜரும்
திருவடியுமாக விசாரித்து, 'வேறொன்று லாற்றுமதல்ல, தாரையை யிட்டு ஆற்றவேணும்'
என்று தாரையை வரவிட்டார்கள். "நமிதாங்கயஷ்டி:" உருகுபதத்திலே வளைந்தவை நிமிர்க்க
வொண்ணாதாபோலே இத்துவட்சி நிருபகம் இவளுக்கென்று தோற்றும்படி யிருந்தாள்.
அப்படிப்பட்ட நடையழகாலே அவரைத் துவக்கிக் காரியங்கொள்ளவற்று இவையு மென்
றிருக்கிறாள். [மதியினால்] அவர் சால தூரதர்சிகள்கிடிகோள். 'ராவணனைப்போலே தலை
யறுத்துவிடவொண்ணாதபடி ஔதார்ய மென்றொரு குணலேசத்தை யேறிட்டுக்கொண்டிருந்
தான்; இந்த்ரன் ராஜ்யத்தை இழந்துநின்றான், இரண்டுக்கும் அவிருத்தமாகச் செய்ய
லாவதென்?' என்று "கோஸஹஸ்ர ப்ரதாதாரம்" என்கிறபடியே கொடுத்து வளர்ந்த கையைக்
கொண்டு நீரேற்று அவனுக்குக் கொடுத்த விரகர்க்கு. [குறள்] கோடியைக் காணியாக்கினாற்
போலே பெரிய வடிவழகைக் கண்ணாலே முகந்து அநுபவிக்கலாம்படி சிறுக்கினபடி.
[மாணாய்] 'உண்டு' என்று இட்டபோதோடு, 'இல்லை' என்று தள்ளிக் கதவடைத்தபோதோடு
வாசியற முகம் மலர்ந்துபோம்படி இரப்பிலே தழும்பேறின வடிவையுடையவனானபடி.
[உலகிரந்த] தன்ஸங்கல்பத்தாலே யுண்டாக்கின லோகத்தை "கொள்வன் நான்" என்றிரந்த.
[கள்வர்க்கு] 'வஞ்சகர்க்கு' என்று திருமாலையாண்டான் நிர்வஹிக்கும்படி. எம்பெருமானார்,
'ஒன்றை நினைத்து ஒன்றைச் செய்தவர்க்கு' என்று அருளிச்செய்வர். மஹாபலியை வஞ்சித்
ததும் என்னை வசீகரிக்கைக்காக; இத் தான் 'பெருநிலங்கடந்த நல்லடிப்போது" என்றிறே
ஆசைப்பட்டதும்; "உலகங்கொண்டவடியன் அறிவருமேனி மாயத்தனாகிலும் கொடிய
வென்னெஞ்சமவனென்றே கிடக்கும்" என்றும், "அவ ரொருகால் வையமளந்தபிரான்
வாரானென்றொன் றொருகால்சொல்லாதுலகு" என்றுமிறே இவர் கிடப்பது: திருமங்கை
யாழ்வாரும் "முன்னங்குறளுருவாய் மூவடி மண்கொண்டளந்தமன்னன் சரிதைக்கே மாலாகிப்
பொன்பயந்தேன்" என்று இவர்களெல்லாரும் ஈடுபடுவது இச்செயலுக்கிறே. [மதியிலேன்]
பிரிகிற ஸமயத்திலே, 'போகாதேகொள்' என்றேனாகில் இப்பாடு படாதொழியலாயிற்றே,
அறிவுகேடியானேன். [வல்வினையேமாளாதோ] இவள் ஒரு நீர்க்கசித்யத்தியாயிற்று. எல்லைச்
சதிரியாய் குருதர்சநத்திலே முடிந்தாளிறே அவள்; "தச்சித்தவிமலாஹ்லாத" இத்யாதி அவள்
பக்கலிலே நெஞ்சை வைக்கையாலே புண்யபலம் அநுபவித்தாள்; அங்கினையின்படி
அநுபவிக்கப்பெறாமையாலே பாபபலம் அநுபவித்தாள்; ஆகையாலே, புண்யபாபங்களிரண்டும்
அரைக்ஷணத்திலே அநுபவித்தாளிறே அவள். [ஒருத்தி] 'ஒருத்தி' என்றால் அறியுமோ?
என்னில். எய்தவன் கை உணராதோ? 'இன்னகாட்டிலே மான்பேடை ஏவுடனே கிடந்து
உழையா நின்றது' என்று ஊரிலே வார்த்தையானால் எய்தவன் கை உணராதோ? 'நீயன்றோ
எய்தாய்?' என்று சொல்லவேண்டாவிறே [ஒருத்தி] ஸம்ஸாரவிபூதியிலுள்ளாள் இவ
ளொருத்தியுமிறே. ஸம்ஸாரிகள் புறம்பே அந்யபரர், நித்யஸூரிகளுக்கு விச்லேஷமில்லை;
மற்றையாழ்வார்கள் இவருக்கு அவயவமா யிருப்பர்கள். [மதிகலங்கி] அறிவழிந்தா
ளென்னுங்கோள். தன் அறிவழிந்தாளாகிலும் நாம்கொடுத்த அறிவு உண்டு என்றிருப்பர்;
[மதியெல்லாங்கலங்கி] நாம்கொடுத்த அறிவுகொண்டு "தந்நஸ்ய ஸத்ருசம் பவேத்"

என்றிராளோ? என்றிருப்பர்; அறிவுதந்தார் தாமன்றே! என்று அறிவியுங்கோள். தாம்
மயர்வறுத்துத் தந்த ஜ்ஞானப் பரப்பெல்லாம் கலங்குகைக்கு உடலாயிற்று என்னுங்கோள்.
மேலெழச் சிறிது கலங்கிற்றாகிலும், பின்னையும் நாம்கொடுத்த அறிவன்றே, அப்படி
கலங்குமோ? என்பர். [மதியெல்லாமுள்கலங்கி] தாம் தந்த மயர்வறுமதிநலமெல்லாம்
அடிமண்டியோடே கலங்கிற்று என்னுங்கோள். அத்தனையோ? நாம் இருந்தோமே! பின்பு
நாம் போனவாறே அறிவுகொடுத்துக்கொள்ளுகிறோ மென்றிராமே. [மயங்குமால்]
"மயங்கினள்" என்னில், 'இனிப்போனால் செய்வதென்?' என்றிருப்பர்; முடியும் தசையாயிற்று
என்னுங்கோள். [என்னீரே] உங்கள் தலையில் பழியைத் துடைக்கப் பாருங்கோள்; அறிவித்த
பின்பு வாரா தொழிந்தால் அவனதன்றோ அவத்யம்! ஆர்த்தத்வநி பொறுக்கமாட்டான்,
அறிவியுங்கோள். [என்னீரே] உங்களுக்கு ஸ்வரூபம், அவனுக்கு குணம், எனக்கு ஸத்தை
உங்களுக்கு ஒரு உக்தி.

என்நீர்மைகண்டிரங்கி இதுதகாதென்னாத*
என்நீலமுகில்வண்ணர்க்கு என்சொல்லியான்சொல்லுகேனோ?*
நன்னீர்மையினியவர்கண் தங்காதென்றொருவாய்ச்சொல்*
நன்னீலமகன்றில்காள் நல்குதிரோ? நல்கீரோ? (4)

ஒ.—நாலாம்பாட்டில், என் ப்ரக்ருதியை அறிந்துவைத்து விச்லேஷித்தவனுக்குச் சொல்லலாவ
துண்டோ? என்று விஷண்ணையாய், மீள ஓராசையாலே சில மகன்றில்களைக் குறித்து, என்னிடையாட்
டம் அவனுக்கு அறிவிக்க வல்லிகளோ? மாட்டிகளோ? என்கிறாள்.

[என்னீலமுகில்வண்ணர்க்கு] : தன்னுடைய ஸௌந்தர்யாதிகளைக் காட்டி முன்பு என்னை ஈடு
படுத்தினவனுக்கு நான் இனிச்சொல்லுவது எத்தை? [நன்னீர்மையென்று தொடங்கி] - சண்டெனச்
சென்று ஸம்ச்லேஷியிராகில் அவள் கிடையாளென்று ஒரு வார்த்தை சொல்லி என்னை உஜ்ஜீவிப்பியுங்
கோள். [நன்னிலமென்று தொடங்கி] - நிறம் அவனைப்போலே யிருந்தது; அவனைப்போலே ஆகிறி
களோ? என் அபேக்ஷிதம் செய்கிறிகளோ? என்று கருத்து.

இ.—நாலாம்பாட்டில், என் ப்ரக்ருதி அறிந்துவைத்து இரங்காதே போகட்டுப்போனவர்க்குச்
சொல்லலாவதுஉண்டோ? என்று நைராச்யந்தோற்றச் சொல்லி, பின்னையும் சாபலாதிசயத்தாலே சில
மகன்றில்களைக் குறித்து என்னிடையாட்டம் அவனுக்கு அறிவிக்கிறிகளோ? அல்லிகளோ? என்கிறாள்.
மகன்றில்களென்று அன்றில்களிலே ஓரவாந்தரபேதம்.

[என்நீர்மைகண்டிரங்கி] - என் ப்ரக்ருதி மார்த்தவத்தைக் கண்டுவைத்து ஐயோ! என்று இது
பிரிவு தகாதென்னாதவர் இவள் ப்ரக்ருதி மார்த்தவத்தைக் கண்டால் நிர்க்ருணர்க்கும் இரங்கவேண்டிக்
காணும் இருப்பது. ஆனால், இப்போது இவள்பிரிவை அவன் கண்டானோ? என்னில்; கலக்கிறபோது
அணைக்கைக்காக கை நெகிழ்ந்தபோது அதுவும் பொருதபடி அறியுமிறே; "உருண்கேணி", "புல்லிக்
கிடந்தேன்". [என்நீலமுகில்வண்ணர்க்கு] "அடியில் வடிவைக் காட்டியாயிற்று அநங்யார்ஹையாக
கிற்று. இவ்வடிவிலுள்ளது அகவாயிலு முண்டாகப் பெற்றிலோம். சில பதார்த்தங்கள் உருவு அழகி
தாய், அகவாய் நஞ்சாய் இருக்குமாபோலே காணும். [என்சொல்லி யான் சொல்லுகேனோ] - என்ன
பாசுரத்தைச் சொல்லி உங்களுக்கு நான் சொல்லிவிடுவது? என் தசையைக் கண்டு இரங்காதவர்
உங்கள் பேச்சைக் கேட்டோ இரங்கப்புகுகிறார்? கண்டவர்க்குச் சொல்லிவிடுவது ஒரு பாசுர முண்டோ?
"அதவா கிந்தலாபை : அபராக்ரியதாம் கதா" என்று கிராஸைகளானவர்கள் "அப்யஸௌ மாதரம்
த்ரஷ்டும் ஸக்ருதப்யாகமிஷ்யதி" என்றாற்போலே பின்னையும் தன் ஆற்றாமையாலே "நல்குதிரோ
நல்கீரோ" என்கிறாள். [நன்னீர்மை] - நற்சீவன். "ஜீவந்தீம் மாம் யதாராம:" [இனி] - பாடாற்றலாவ
தெல்லாம் ஆற்றினாள். இனித் தங்கமாட்டாது. [அவர்கண்தங்காது] - சேஷியான உம்முடைய
பக்கலிலே தங்கில்தங்குமித்தனை. [என்றொரு வாய்ச்சொல்] - என்றொரு வார்த்தை சொல்லு. [நன்னில

மகன்றில்காள்] - நன்றான நீலநிறத்தையுடைய மகன்றில்காள்! உங்களுக்கு நிறம் அவனைப்போலே இராநின்றது, உள்வாயும் அவனைப்போலேயாய் அநாதரிக்கப்புகுகிறிகளோ? அன்றிக்கே, இத்தசையிலே முகங்காட்டின உங்கள் ஸ்வபாவத்தாலே நல்குதிரோ? என்கிறாள்.

ஈடு.—நாலாம்பாட்டு. அநுபவித்தாலும் மாளாதது நான் பண்ணின பாபமேயோ! என்று நின்றது கீழ்; இவள் அநுபவித்தாளோ பின்னை? யென்னில்,—அவன் அரைக்ஷணம் தாழ்ந்து முகம் மாறவைத்தபோதே எல்லாம் அநுபவித்தாளிறே. இவ்வளவிலே சில மகன்றில்கள், 'நமக்குக் கிஞ்சித்கரிக்க நல்லவளவு' என்று, 'நாங்கள் இங்குத்தைக்குச் செய்ய வேண்டுவதென்ன?' என்று, வந்து முகங்காட்டிற்றனவாகக் கொண்டு, அவற்றைப்பார்த்து, 'என் தசையைக் கண்டுவைத்து இரங்காதே போனவனுக்கு நான் எத்தைச் சொல்லுவது?' என்று நிராசையாய், பின்னையும் சாபலத்தாலே, பலகால் சொல்லமறுத்தார்க்குச் சொல்லுவாரைப் போலே, இத்தனையுஞ் சொல்லவல்லிகளோ? மாட்டிகளோ? என்கிறாள்,

[என்நீர்மை கண்டிரங்கி] என் நீர்மையுண்டு—என் ஸ்வபாவம்; என் மார்த்தவம். [கண்டிரங்கி யீதுதகாதென்னாத] இத்தைக்கண்டு தயைபண்ணி 'நாம் பிரியுமது தகாது; என்னாதே போகட்டுப் போனவர்க்கு. பட்டரை ஒரு தமிழன் 'கேட்டிரங்கி' என்னாதே 'கண்டிரங்கி' என்னப்பெறுமோ?' என்ன, 'அணைத்த கை நெகிழ்த்தவளவிலே வெளுத்தபடி கண்டால் பிரியத்தகாதென்றிருக்க வேண்டாவோ? இப்படி கூடுமோ?' என்னில்; "புல்லி" இத்யாதி, "காதலர் தொடுவுழி" இத்யாதி, 'உனக்கு இத்தமிழ் போகாதோ?' என்றார். [என் நீலமுகில்வண்ணர்க்கு என்சொல்லி யான் சொல்லுகேனோ] இத்தசையிலும் 'என்னுடையவன்' என்னும்படிகாணும் முகங்கொடுத்தபடி, கலந்தபோது. அவர்க்கு நான் சொல்லி விடுவது எத்தை யென்கிறாள். திருமுகம் மறுத்துப்போனவர்க்கு எத்தைச் சொல்லுவது? என்கிறாள்காணும். இங்ஙன் சொல்லுவானென்? என்னில்:—கண்டு இரங்காதவரோ கேட்டு இரங்கப்புகுகிறாரென்னுமத்தாலே. கண்டாரோ பின்னை? என்னில்;—ஏன் கண்டிலரோ? கலக்கிற ஸமயத்தில் கைநெகிழ்த்தவிடமெல்லாம் வெளுக்கக் கண்டிருக்குமே. அன்றிக்கே, இவ்வளவிலே ஸங்கிஷிதனாய் என்தசையைக் கண்டு இதுக்கு ஒரு போக்கடி பாராதே, உங்கள் பக்கலிலே கேட்டறிய இருக்கிறவர்க்கு என்னவுமாம். [என்நீர்மை] அவனை அநுபவிக்குமதிலும் அவனைப் பிரிந்து நோவுபடுகிற தன்ஸ்வபாவத்தைக் கட்டிக்கொண்டு கிடக்க அமைந்திராநின்றது காணும். [கண்டு இரங்கி] "எத்திறம்" என்று மோஹித்து உடம்புவெளுத்துக் கிடக்கும்படி கண்டால் பிரியப்போருதென்றிருக்க வேண்டாவோ? [இது] தன்தசைதானும் தனக்கும் பேச்சுக்கு நிலமல்ல காணும். [என்நீலமுகில்வண்ணர்க்கு] அடியிலே வடிவைக் காட்டிக்காணும் அநந்யார்ஹமாக்கிற்று; இவ்வடிவில் புகர் அகவாயிலும் சிறிது உண்டாகப்பெற்றதில்லை. இல்லையோ? என்னில், *யாமுடையாயன்தன் மனம் கல்லிறே. [என் சொல்லி யான் சொல்லுகேனோ] என்ன பாசுரத்தையிட்டு எத்தை உங்களுக்கு நான் சொல்லிவிடுவது? நான் சொல்லிவிட இருக்கிறவர் நீங்கள் சொல்லுமளவையோ பார்த்திருக்கிறது? கண்டு இரங்காதவர்க்கு நான் எத்தைச் சொல்லுவது? என்று நிராசையாய் பின்னையும் சாபலாதிசயத்தாலே வார்த்தை சொல்லுகிறாள். திருமுகம் மறுத்தவன் கடையீட்டுக்குக் கேட்கப் புகுகிறானோ? ஸ்ரீ கோபிமார் *அதவாகிம் ததாலாபை:* என்ற அநந்தரத்திலே "அப்யஸௌ மாதரம் த்ரஷ்டும் ஸக்ருதப்யாகமிஷ்யதி" என்னுமாபோலே. இக்க்ருஷ்ணன் பிதற்றொழிய வேறொன்றில்லையோ? என்று, கலந்த காமன்றோ வேண்டாதது? பெற்ற தாயைக் காணவாகிலும் இங்ஙனே ஒருகால் போதானோ? என்பர்களிறே! [நன்னீர்மை] நல்லுயிர். [இனி] ஆனவளவும் கால்கட்டிப் பார்த்தாள் போலே காணும். [அவர்கண் தங்காது] சேஷியான உம்முடைய பக்கலிலே தங்கில் தங்குமத்தனை. "நசாஸ்ய மாதா" பெருமாள் பக்கல் குறையேயாய், தன் பக்கல் குறை தோற்றுதபடி பிராட்டி வார்த்தை அருளிச்செய்தவாறே, திருவடி, 'நாமோதான் இங்கு நன்றாகச் செய்தோம்? பெருமானைப் பிரிந்த அநந்தரம் முடிந்ததென்னும் வார்த்தை கேட்கப்பெற்றதில்லையே' என்ன, 'மாதா'

13

என்றும் 'பிதா' என்றும் பலர்பக்கலிலே பாலிபாயக்கடவதான ஸ்நேஹத்தைப் பெருமாள் என்னொருத்திபக்கலிலும் ஒருமடைசெய்து போந்தார்; அவர் இவ்வாற்றாமையாலே* உண்ணாது உறங்காது ஒலிகடலை யூடறுத்துக்கொண்டு வரக்கொள்ள, விடாயன் தண்ணீர்ப்பந்தலிலே வரக்கொள்ளச் சால் உருண்டு கிடந்தாற்போலே யாகவொண்ணாதென்று நோக்கியிட்டு வைத்தேனத்தனை; அவரைக்கண்ட பிற்றைநாள் இருந்தேனாகில்காண் நீ இவ்வார்த்தை சொல்லுவதென்றாளிறே. [ஒரு வாய்ச்சொல்] ஒரு உக்தி நேர அமையும். *வாசா தர்மமவாப்நுஹி* [நன்னிலம் இத்யாதி] அவர் நீலமுகில்வண்ணரா யிருந்தார், நீங்களும் நீலமகன்றில் களா யிருந்திகோள். செயலும் அவரைப் போலே யாகிறதோ? இத்தனையும் செய்திறிகளோ? முதல் வார்த்தையிலே பதின்கால் சொல்மறுத்தாரைச் சொல்லுமாபோலே சொல்லுகிறாளிறே ஆற்றாமையின் கனத்தாலே.

நல்கித்தான்காத்தளிக்கும் பொழிலேழும்வினையேற்கே*
நல்கத்தானாகாதோ? நாரணனைக்கண்டக்கால்*
மல்குநீர்ப்புனல்படப்பை இரைதேர்வண்சிறுகுருகே!*
மல்குநீர்க்கண்ணேற்கு ஓர்வாசகங்கொண்டருளாயே. (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், என்னை இப்படி உபேக்ஷித்தால் எல்லாரையும் ரக்ஷிக்கையாலே பரிபூர்ண மான தன்னுடைய நாராயணத்வம் விகலமாகாதோ? என்று அவனுக்கு அறிவித்தால், அவன் அருளிச் செய்த ப்ரதிவசநத்தை எனக்கு வந்து சொல்லவேணுமென்று சில குருகுகளை அபேக்ஷிக்கிறாள்.

[பொழில்] - பூமி: எல்லாலோகங்களுக்கும் உபலக்ஷணம். [வினையேற்கே நல்கத்தானாகாதோ] - பாபப்ராசுர்ய ஹேதுவான எனக்கேயோ இரங்கலாகாது? [மல்குநீரென்று தொடங்கி] - பெருகாநின்ற நீரையுடைய நீர்நிலங்களிலே இரையைத் தேடி உன் ஸஹசரத்துக்குக் கொடுக்கும் ஸ்வபாவமாய், நினைத்த இடத்திலே போகலாம்படி நொய்தான சரீரத்தையுடைய குருகே! [மல்குநீர்க்கண்ணேற்கு இத்யாதி] - அவற்றுக்கு தயைபிறக்கும்படி தன்தசையைச் சொல்லுகிறாள்.

இ.—அஞ்சாம்பாட்டு. 'என்னை உபேக்ஷித்தால் ஸர்வரக்ஷகத்வத்தாலே பூர்ணமான தன்னுடைய நாராயணத்வம் விகலமாகாதோ? என்று அறிவி' என்று ஒரு குருகை அபேக்ஷிக்கிறாள்.

[நல்கி] - விபூதிரக்ஷணம் பண்ணும்போது கர்த்தவ்ய புத்தியாலன்றிக்கே, பேறுதன்னதாகக் கிடீர் ரக்ஷிப்பது. எனக்குத் தன்பக்கலுண்டான வ்யாமோஹம் தனக்கும் தன்விபூதியிலே உண்டாயாயிற்று ரக்ஷிப்பது. [நல்கி] - ஸஸ்நேஹகமாக. [தான்] - அபேக்ஷிப்பாரின்றிக்கேயிருக்கத் தானே ரக்ஷிக்குமவன். [காத்தளிக்கும்] - காப்பதும்செய்து க்ருபைபண்ணுவதும் செய்யும். பொழிலேழென்று பூமியாய், நித்யவிபூதிக்கும் உபலக்ஷணம். [வினையேற்கே நல்கத்தானாகாதோ] - ரக்ஷகன் அநாதரித்தாலும் விடமாட்டதபடியான பாபத்தைப் பண்ணின எனக்கேயோ நல்கலாகாதது? நாட்டுக்கிட்ட நினைப்பும் அந்த:புரத்துக்கு அரிதாகவேணுமோ? [நாரணனைக்கண்டக்கால்] - குணங்களில் ஜ்ஞாநாநந்தாமலத்வங்கள் நிருபகமானாற்போலேயன்றோ சப்தங்களில் இத்திருநாமமும். இத்தாலே நிருபிதமான வஸ்துவுக்குச் சில விசேஷங்களைச் சொல்லுகிறதத்தனையன்றோ மற்றைத்திருநாமங்கள். நாரங்களிலே ஒன்று குறைந்தாலும் தன் கார்யம் ஒறுவாமன்றோ? என்ஸத்தையில் அபேக்ஷை இல்லையாகிலும் தன்ஸத்தையில் அபேக்ஷையில்லையோ? என்று சொன்னேனென்று சொல்லுங்கோள். [மல்குநீர்ப்புனல்படப்பை] - மிக்க நீரையுடைத்தான நீர்நிலங்களில் கொடித்தோட்டங்களிலே. திருவடியைப்போலே கடல்கண்டு தேங்க வேண்டாவே உனக்கு. [இரைதேர்வண்சிறுகுருகே] - உன்னுடைய ஸஹசரத்துக்குக் கொடுக்கைக்காக இரைதேடும் ஸ்வபாவமிறே உன்னது. உபவாஸக்ருசையாயிருக்க நினையாதேயிருக்கு மவனைப் போலன்றிறே. கார்யகாலத்திலே சிறுகவேண்டாவே உனக்கு. [மல்குநீர்க்கண்ணேற்கு] - தயநீய தசையை ப்ராப்தையாயிருக்கிற எனக்கு. தனக்கு நிருபகம் அதுபோலே காணும். [ஓர்வாசகங் கொண்டருளாயே] - ஒரு மறுமாற்றம் கேட்டுச் சொல்லவேணும். [ஓர்வாசகம்] - அவன் "வேண்டா"

என்னும் வார்த்தையும் அமையும். [அருளாயே] - சொல்லவேணுமென்னும் ஸ்த்தாநத்திலே அருளவேணுமென்கிறது: எதிர்த்தலை திர்யக்காகவுமாம், தான் ஜநககுலத்தில் பிறக்கவுமாம்; இவ்விஷயத்தில் உபகாரகரை இங்ஙனல்லது சொல்ல விரகில்லை.

ஈடு.—அஞ்சாம்பாட்டு, நல்கித்தான் இத்யாதி. எங்களைவிடீர், முடிவார்க்கு வேண்டாவிறே; ஜீவிக்க நினைத்திருக்கிற தமக்குத்தாம் வேண்டாவோ? என்கிறாள். தம்முடைய நாராயணத்வம் ஒறுவாய்ப்போகாமே நோக்கிக்கொள்ளச்சொல்லு மென்கிறாள்.

[நல்கி] விபூதிரக்ஷணம் பண்ணும்போது, கர்த்தவ்ய புத்த்யாவன்றிக்கே பேறு தன்னதாகக்கிடீர் ரக்ஷிப்பது. எனக்குத் தன்பக்கலுண்டான வ்யாமோஹம் தனக்கு விபூதியிலே உண்டாயாயிற்று ரக்ஷிப்பது. [தான்] அபேக்ஷிப்பாரின்றிக்கேயிருக்கத் தானே ரக்ஷிக்குமவன். [பொழிலேழும்] கீழும்மேலுமொன்றாக நினைத்துச் சொல்லுகிறதாதல், ஸப்தத்வீபவதியான பூமியைச் சொல்லுகிறதாதல். ஸ்வசரீரரக்ஷணம் பண்ணுவது ஸ்நேஹபுரஸ்ஸரமாகவிறே. [நல்கித்தான் இத்யாதி] நாமரூப விபாகாநர்ஹமாய்க் கிடந்தவன்று, ஆர் இருந்து அபேக்ஷிக்க இத்தை உண்டாக்கிற்று? சத்யவஸ்த்தப்ரபைபோலே தான் என்கிற சொல்லுக்குள்ளேயாய், தன்னையிட்டு வ்யவஹரிக்க வேண்டினவன்று தன்மேலே யேறிட்டுக்கொண்டு நோக்கினானாயிற்று. [காத்தளிக்கும்] காத்துக்கொடுக்கு மென்னுதல்; நோக்கி ரக்ஷிக்கு மென்னுதல். [வினையேற்கே நல்கத்தானாகாதோ] இல்லாதவன்று உண்டாக்கினாய், உண்டாக்கினதுக்கு பலம் கர்மத்தை யேறிட்டுக் கைவிடுகையோ? ஸ்வஜநரக்ஷணம் பண்ணலாகாதோ? நாட்டுக்கிட்ட நினைப்பு அந்த:புரத்துக்கு அரிதாக வேணுமோ? [வினையேற்கே] கடலிலே ஏற்றமிட்டுத் தண்ணீர் அரிதாம்படியான பாபத்தைப் பண்ணுவேனே? [நாரணனைக் கண்டக்கால்] ஜீவஸமூஹத்தினுடைய ஸ்வரூப ஸ்த்தித்யாதிகள் ஸ்வாதீநமாய், இவை ப்ரகாரமாகத் தான் ப்ரகாரியாய், இவற்றிலே ஒன்று குறையிலும் தம் இழவாம்படி யிருக்கையாலே நாராயணனென்று விருதூதித் திரிகிறவரைக் கண்டக்கால். 'இப்பேர் யோக ரூடியோ? என்றிருந்தோம்; மஹாவ்ருக்ஷத்தோபாதியோ?' என்று கேளுங்கோள். [மல்கு நீர் இத்யாதி] உன் செயல் பரார்த்தமா யிருந்ததீ! பெருகாநின்றுள்ள நீரை யுடைத்தான நீர்நிலமுண்டு-கொடித்தோட்டம், அதிலே. [இரைதேர்] பேடையின்வாய்க்கு அடங்குவது தேடாநின்றது. "புள்ளும்பிள்ளைக் கிரை தேடும்" என்னக்கடவதிறே. கயல் உகளாநிற்கச்செய்தேயிறே பிள்ளைவாய்க்கு அடங்குவது தேடுகிறது. [வண்சிறுகுருகே] குருகு-வண்டானம், கொய்யடிநாரை. வண்மை-அழகும், ஔதார்யமும். கைப்பட்ட இரை தன்மிடற்றுக்குக் கீழ் இழித்ததாயிற்று. நான் உபவாஸக்ருசையா யிருக்க நினையாதிருக்குமவனைப் போலன்றே உன் ஔதார்யம். [சிறுகுருகே] கார்யகாலத்தில் ப்ருஷதம்சக மாத்ரமாகவேண்டா. தூது போகைக்குச் சிரமஞ்செய்திருப்பாரைப்போலே யிருந்தது உன்வடிவில் லாகவம். [மல்கு நீர்க் கண்ணேற்கு] இதுவும் ஒரு நீர்நிலமிருக்கிறபடி பாராய். இரைதேடுகிற இத்தை விட்டு இத்தைப் பார்க்குமோ? என்னில்; பார்க்குமிறே, இங்கேயும் சேலுங் கயலு முண்டாகையாலே. [மல்குநீர்க் கண்ணேற்கு] தனக்கு நிருபகம் கண்ணநீர்போலேகாணும். அதாவது கலவியில் ஆநந்தாச்ரு, பிரிவில் சோகாச்ரு. [ஓர்வாசகங்கொண்டு] நேரே உடம்பைத் தரவேணுமென்று சொல்ல மாட்டாளே! 'மறுப்பரோ' என்னும் பயத்தாலே. மறுக்கும் வார்த்தையும் அமையும் இத்தலைக்கு: அவர்பக்கலுள்ளது தோன்றுமத்தனையே வேண்டுவது; "தாரான் தருமென்றிரண்டத்திலொன்றதனை" என்றிறே மற்றும் பிராட்டிமார் பாசுரம்; "மெய்ம்மைசொல்லி முகம்நோக்கி விடைதான் தருமேல் மிகநன்று" என்றும், "பாவிநீ யென்றொன்றுசொல்லாய்" என்றுமிறே இருப்பது. [அருளாயே] அவை திர்யக்குக்களாகவுமாம், தான் ஜநககுல ஸுந்தரியாகவுமாம். உபகரிக்கிறது பகவத் விஷயமானால் இங்ஙனல்லது சொல்லவொண்ணாது. 'நம்பியேறுதிருவுடையான் தாஸர் திருநாட்டுக்கு நடந்தார்' என்று பட்டர்க்கு விண்ணப்பஞ்செய்ய, துணுக்கென்று எழுந்திருந்து, அவர் ஸ்ரீவைஷ்ணவர்களுடன் பரிமாறும்படிக்கு, 'திருநாட்டுக்கு எழுந்தருளினாரென்னவேணுங்காண்' என்று அருளிச்செய்தார்.

அருளாதநீரருளி அவராவிது ராமுன்
அருளாழிப்புட்கடவீர் அவர் நியொருநாளென்று
அருளாழியம்மானைக் கண்டக் ாலிதுசொல்லி*
அருளாழிவரிவண்டே! யாமுமென்பிழைத்தோமே. (6)

ஒ.—ஆறும்பாட்டில், 'இத்தனை ஸாபராதரோடே ஸம்ச்லேஷித்தது' என்று வரும் அகீர்த்தியிற் காட்டில் நாராயணத்வம் விகலமாயிற்றகிலும் ஆக அமையுமென்னில்; - அதுவும் விகலமாகாதே, நானும் பிழைப்பதொரு விரகு சொல்லுகிறேன், அப்படி செய்யச்சொல்லென்று ஒரு வண்டை அபேக்ஷிக்கிறாள்.

[அருளாத நீரருளி யென்று தொடங்கி] - ஸம்ச்லேஷிக்க நினையாத நீர் தயநீயதசையையுடைய ளான இவள் பக்கலிலே க்ருபை பண்ணி அவளுயிர் முடிவதற்கு முன்னே, ஆச்ரிதர் பக்கல் பரமதயாளு வான திருவடியை நடத்திர். [அருளாத நீர்] - பண்டு இப்படி நோவு பட்டவர் இல்லாமையாலே க்ருபை பண்ணாதிருக்கிற நீரென்றுமாம். [அவர்வீதியொருநாள்] - அவர் வீதியிலே ஒருநாள் போனதுக்காக அவத்யமாய்ப் பிறவாதென்று கருத்து. [அருளாழியம்மானை] - அருட்கடலான ஸர்வேச்வரனை; தயா சீலமான திருவாழியை உடையவ னென்றுமாம்.]கண்டக் காலென்று தொடங்கி] - அவர்வீதி ஒருநாள் எழுந்தருளவேணுமென்று சொன்னவார்த்தையைச் சொல்லி யருளவேணும்; ஆர்த்தனுடைய ஆர்த் தியைத் தீர்க்கைக்கீடான அளவையும் ச்ரமஹரமான வடிவையுமுடைய வண்டே! [யாமுமென்பிழைத் தோமே] - அதுவும் செய்யாதொழியிலோ? என்னில்; எங்கள் தெருவிலே போகலாகாமைக்கு நாங்கள் செய்த குற்ற முண்டோ?

இ.—ஆறும்பாட்டில். இத்தனை தண்ணியாரோடு கலந்துவரும் நிறக்கேட்டில் நாராயணத்வம் விகலமாக அமையுமென்னில், - அதுவும் விகலமாகாதே. என்ஸத்தையுங் கிடந்ததாம்படி ஒரு விரகு சொல்லுகிறேன்; அத்தைச் செய்யச்சொல் என்று ஒரு வண்டை அபேக்ஷிக்கிறாள்.

[அருளாத நீர்] - 'அவள்பக்கல் அருளக்கடவோமல்லோம்' என்று ஸங்கல்பித்திருக்கிற நீர். "மயர்வற மதிநலமருளினன்" என்று ஓரடி போகமாட்டாதே நெஞ்சுருகின இவர், 'அருளாதநீர் என்னும் போதைக்கு என்ன அபஸ்மார விசேஷம்? அறிகிலோம்? என்று பிள்ளான்- 'அருளாத நீர் என்று திருநாமம் சாற்றுகிறாள்' என்று சீயர். [அருளி] - அவள் தயநீயதசையைக் கண்டு அருளவேணும். இதுக்கு முன்பு இப்படி தயநீயரில்லாமையாலே க்ருபை பண்ணாதிருக்கிற நீரென்னவுமாம். அவராவி துவராமுன்] - அருளும்போது அவள் முடிவதற்கு முன்பே அருளவேணும். "ஜீவந்தீம்மாம் யதா ராமஸ்ஸம் பாவயதி கீர்த்திமாந், தத்த்வயா ஹ நுமந்வாச்யோ வாசாதர்ம மவாப் நுஹி".அருளே'நிரூபகமான ஸ்வரூபம் உம்மது; நிர்த்தயர்க்கும் ஐயையோ! என்னவேண்டும்தசை அவளது; அருளாதொழியும்படி எங்ஙனே? [அருளாழிப்புட்கடவீரவர்வீதி] - என்னைப்பற்ற வந்தாரென்னும் நிறக்கேடு தமக்குப் பிறவாதபடி அழகு சென்டேற என்னுதல், ஆனைக்கு அருள்செய்ய என்னுதல் ஒரு வ்யாஜத்தாலே எங்கள்தெருவே வழிபோக அமையும்; நாங்களும் ஜாலகரந்த்ரத்தாலே காண, எங்களுக்கு அருளினீராகவுமாம். [அருளாழிப்புள்] - அருட்கடலான புள்ளு; 'வெஞ்சிறைப்புள்' என்றாள் கொடுபோகையாலே. இப்போது வரவுக்கு உடலாகையாலே 'அருளாழிப்புள்' என்கிறாளிறே. [ஒருநாள்] - பலநாள் ஒருதெருவே போகாநின்றால், 'இது வெறுமனன்று' என்றிரார்களோ? என்னில்; ஒருநாளமையும். [அருளாழியம்மானைக் கண்டக்கால்]- பெரியதிருவடியுடைய க்ருபையும் மிகையென்னும்படியன்றோ அவன்நீர்மை யிருப்பது. அருட்கடலான ஸர்வேச்வரன். அவன்பக்கல் அருள் மறுத்தாலும் மறுக்காத திருவாழியென்று திருவாழிக்கு விசேஷண மாகவுமாம். [இது சொல்லியருள்] - "அருளாழிப்புட்கடவீ ரவர்வீதி யொருநாள்" என்ற வார்த்தையைச் சொல்லியருளவேணும். [ஆழிவரிவண்டே] - கம்பீர ஸ்வபாவத்தையும், சரீரத்தில் வரியையுமுடைய வண்டென்னுதல்; வட்டமான வரியையுடைய வண்டென்னுதல்; ச்ரமஹரமாய் அழகிதான வண் டென்னுதல்; வட்டமாகப் பறக்கிற வென்னுதல்; கடகருடைய ஆத்மகுணத்தோபாதி ரூபகுணமும் உத்தேச்யமென்கை. [யாமும்இத்யாதி] - இவ்வளவும் செய்யாமைக்கு நாங்கள் என்ன பிழைசெய்தோம்?

தாமேயன்றிக்கே நாங்களும் செய்த குற்றமுண்டோ? ப்ரணயிநிக்குக் குற்றமாவது பிரிந்தாலும் ஆறியிருக்கையிறே.

ஈடு.—ஆறும்பாட்டு. எங்கள் ஆற்றாமை பரிஹரித்திலராகிலும் தம்முடைய நாராயணத்வம் ஒறுவாய்ப்போகாமே நோக்கிக்கொள்ளச் சொல்லுங்கோள் என்று நின்றது கீழ்; இதுக்கு அவர்க்கு மறுமாற்றம் 'நம்முடைய நாராயணத்வமும் அழிய அமையும், தாமல்லாதாருடன் கலந்து வரும் அவத்யத்திற்காட்டில்' என்றிறே; தமக்கு அவத்யம் வாராமே, எங்கள் ஸத்தையுங் கிடக்கைக்கு ஒருவழியுண்டு—தாம்அழகுசெண்டேறப் புறப்படுதல், ஆனைக்கு அருள்செய்யப்புறப்படுதல் செய்வன சில உண்டிறே; அப்போது எங்கள் தெருவே போனால் தமக்கும் ஸ்வரூபஹாநி வாராது, நாங்களும் ஜாலகரந்த்ரத்தாலே கண்டு ஜீவித்துக் கிடப்புதோம்; இப்படி அவிருத்தமாகச் செய்யலானபின்பு அத்தைச் செய்யச்சொல் என்று ஒரு வண்டை இரக்கிறாள்.

[அருளாத நீர்] *ஏதத் வ்ரதம் மம* என்று அருளுகைக்கு ஸங்கல்பித் திருக்குமாபோலே அருளாமைக்கு ஸங்கல்பித்திருக்கிற நீர். "மயர்வற மதிநலமருளினன்" என்று நெஞ்சுருகிக் கிடக்குமவர் "அருளாதநீர்" என்கிறது என்ன தசாவிசேஷமென்றறிகிறிலோம். "அருளாதநீர்" என்று ஒரு திருநாமம் சாற்றுகிறாள். அன்றிக்கே, தயாவிஷயம் பெருமையாலே தயை குமரிருந்து தயை பண்ணுதிருக்கிற நீர் தயைக்கு விஷயம் போருமிடத்திலே தயைபண்ணி யென்னவுமாம். [அருளி] அருளே நிருபகமான ஸ்வரூபம் உம்மது, நிர்த்தயர்க்கும் 'ஐயோ!' என்ன வேண்டும் தசை இவளது; அருளாதொழியும்படி யெங்ஙனே? [அவராவி துவராமுன்] பின்னையும் அருளத் தவிரீரிறே? அது அஸத்ஸமமாவதற்கு முன்னே அருளப்பாரும். அவளுடைய ப்ராணன் பசையற உலருவதற்கு முன்னே அருளப்பாரும்; *ஜீவந்தீம் மாம் யதா ராமஸ் ஸம்பாவயதி கீர்த்திமாந்* என்னுமாபோலே. நாங்கள் சொல்லுமத்தனையேயோ வேண்டுவது? அவன் அருளப் புகாநின்றானோ? என்ன, நீங்கள் அறிவிக்கு மத்தனையே வேண்டுவது, கொடுவருவாரும் அங்கே உண்டு; [அருளாழிப்புள்] அருட்கடலான புள்ளு. "வெஞ்சிறைப்புள்" என்றாள் கொண்டுபோனபடியாலே; இப்போது வரவுக்கு உடலாகையாலே "அருளாழிப்புள்" என்கிறாள். [கடவீர்] அநுகூலர் கண்டு வாழுகைக்கும் ஸ்பர்சத்தாலுமாகப் போகாதே பிசுகிச் சுழியாநிற்குமிறே; அசேதநமான ரதத்தோபாதி வடிம்பாலே தாக்கி நடத்த வேணுமாயிற்று. எங்கேதான்? என்னில், [அவர்வீதி] அவன் தெருவிலே. அங்ஙனொண்ணுமோ? ஒரு தெருவிலே பலகால் போகப்புக்கவாறே "இது வெறுமனன்று" என்று இரார்களோ? என்னில், [ஒருநாள்] நாங்கள் ஜீவித்துக் கிடக்கைக்கு ஒருநாள் போக அமையும். [அருளாழியம்மானை] பெரிய திருவடியும் மிகை, *தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல் என்னடியாரது செய்யார்* என்னும்படி அருட்கடலானவனிறே. அன்றிக்கே, திருவடி ஒருவனுமாயிருந்ததோ! அங்கு கையாளாயுள்ளாரடைய நம் பரிகரமன்றோ? அருளை நிருபகமாகவுடைய திருவாழியைக் கையிலே உடையவன். *அருளார் திருச்சக்கரமிரே! ஸர்வேச்வரனுக்கும் கைக்குறியாப்பை வாங்குவது இங்கேயிறே! ஸர்வேச்வரன்பக்கல் அருள் மறுத்தாலும் அருள் கூடுகட்டிநிற்கும் இடமிறே. [இது சொல்லியருள்] இத்தனையுஞ் சொல்லி யருளவேணும். ஏதென்னில், "அருளாழிப்புட்கடவீ ரவர்வீதியொருநாள்" என்கிற வார்த்தையைச் சொல்லி யருளவேணும். [ஆழிவரிவண்டே] ச்ரமஹரமாய் அழகிதான வண்டே! என்னுதல், வடிவு சிறுத்திருக்கச் செய்தே காம்பீர்யம் பெருத்திருக்கிற படியைச் சொல்லுதல். ஆழியென்று வட்டமாய், சுழலப்பறக்கிற வண்டே என்னுதல். கடகருடைய ஆத்மகுணத்தோபாதி ரூபகுணமும் உத்தேச்யமென்கை. [யாமுமென் பிழைத்தோமே] நாங்கள் என்ன தப்புச்செய்தோம்? தாம் பிரிந்து துவளவிட்டு வைத்தாற்போலே, நாங்களும் க்ரமத்திலே பெறுகிறோமென்று ஆறியிருந்தோமோ? நிர்பந்தன் காலிலே விழுவாரும், தூதுவிடுவாரும், தாமாயிருக்க, அத்தலை இத்தலையாயும் வாராதிருக்கிற தம்மதோ குற்றம்? எங்களதோ?

என்பிழைகோப்பதுபோலப் பனிவாடையீர்கின்ற*
என்பிழையேநினைந்தருளி அருளாததிருமாலார்க்கு
என்பிழைத்தாள்திருவடியின் தகவினுக்கென்றொருவாய்சொல்*
என்பிழைக்குமிளங்கிளியே! யான்வளர்த்தநீயலையே. (7)

ஒ.—ஏழாம்பாட்டில், இத்திருவாய்மொழிக்கு நிதாநமான அபராதஸஹத்வத்தை அநுஸந்தித்து, 'தன்னுடைய இக்குணத்துக்கு நான் புறம்போ? என்று எம்பெருமானுக்கு அறிவி' என்று தன் கிளியை நோக்கிச் சொல்லுகிறாள்.

[என்பிழை என்று தொடங்கி] - விரஹவ்யஸநத்துக்குமேலே எலும்பை இழைகோத்தாற்போலே பனிவாடை ஈராநின்றது. நிரதிசய க்ருபாவானை தனக்கு இங்ஙனே நோவுபடக் கண்டிருக்கை போராதென்று பாராதே பிராட்டியோடே கூடி என்குற்றங்களையே அநுஸந்தித்து க்ருபைபண்ணாதிருக்கிறவனுக்கு என் அபராதமெல்லாம் பொறுத்தருளும்படி பிராட்டி ஸந்நிதியிலே அறிவி யென்று கருத்தாகவுமாம். [என்பிழைத்தாளென்று தொடங்கி] - ஸ்வாமியான உன்னுடைய அபராத ஸஹத்வத்துக்கு விஷயமன்றிக்கே நோவுபடுகைக்கிடான என்ன தப்புச் செய்தாள்? என்று ஒரு வார்த்தை சொல்லு. [என் பிழைக்குமென்று தொடங்கி] - ச்ரமஹரமான நிறத்தாலும் வடிவழகாலும் பவ்யதையாலும் நல்ல பேச்சாலும் வாயின் சிவப்பாலும் பருவத்தாலும் எம்பெருமானோடு அறவொத்திருக்கிற உன்படியைக் காட்டி எலும்பை யிழைத்து நோவுபடுத்துகிற இளங்கிளியே! என் பிழைக்கும் - என்ன தப்புண்டா மென்னவுமாம். [யான்வளர்த்த நீயலையே] - தாய்மாரைப் பிள்ளைகளும் நலிவரோ?

இ.—ஏழாம்பாட்டில், தம்முடைய அபராத ஸஹத்வத்துக்கும் இலமன்றோ? என்பிழையென்று அவர்க்கு அறிவியென்று தன் கிளியை நோக்கிச் சொல்லுகிறாள்; இத்திருவாய்மொழிக்கு நிதாநமான பாட்டாயிற்று இது.

[என்பிழைகோப்பதுபோல] - எலும்பிலே துளைத்து நூலைக் கோக்குமாபோலே. [பனிவாடை] "பாவகப்ரதிமோ வவெள" என்கிறபடியே பண்டு குளிர்ந்துபோரும்வாடை இப்போது பாதகமாகிறபடி. [ஈர்கின்ற] - ஈராநின்றது. விரஹக்ருசையாயிருக்கிறதின்மேலே பாதகவர்க்கம் நலிகிறபடி. "பத்மஸௌகந்திகவஹம்" [என்பிழையேநினைந்தருளி] - வாடை நலிந்தபடி போராதென்று கீழாண்டைச்சிகையையாயிற்றுக் கணக்கிடுகிறது. அவிஜ்ஞாதாவாகை தவிர்ந்து, இப்போது "ஸஹஸ்ராம்சு:" என்கிறபடியே தோஷத்தில் ஸர்வஜ்ஞராயாயிற்று இருக்கிறது. [அருளாததிருமாலார்க்கு] - என்பிழை பார்த்துக் கைவிட்டு, "நகச்சிந்நாபராத்யதி" என்னுமவளோடே அணையஇருக்கிறரோ? நம்அபராதங்களைப் பொறுப்பிக்கும் பிராட்டி ஸந்நிதியிலே அறிவி யென்னவுமாம். 'அபராதங்களைக் கணக்கிடுகைக்கு அவளும் கூட்டுப்போலே காண்' என்றும் சொல்லுவர். [என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு] - ஸ்வாமியான உம்முடைய தகவினுக்கு என்ன தப்புச் செய்தாள்? அபராத ஸஹத்வமாகிறது - க்ஷமை. அதுக்கு அடியானதயை - தகவாகிறது. என்பிழை அநாதிகாலார்ஜிதமானாலும் தம்முடைய க்ஷமைக்கு எவ்வளவு போரும்? "கிம்கோபமூலம் மநுஜேந்த்ரபுத்ர கஸ்தே ஸந்திஷ்டதிவாங்நிதேசே" [திருவடியின் தகவினுக்கு] - இழவுபேறு தம்மதாம்படியான குடல்தொடக்குண்டாயிருக்க, குற்றத்தைக் கணக்கிட்டது அமையாதோ? ப்ராப்திக்குப் போராது, க்ஷமைக்கும் போராது. [என்றொருவாய்சொல்] - ஒரு வார்த்தை சொல்லு. [என்பிழைக்குமிளங்கிளியே] - பருவத்தாலும் நிறத்தாலும் வாயின் பழுப்பாலும் பேச்சின் இனிமையாலும் ஸர்வதா ஸத்ருசமாகையாலே உன்வடிவைக்காட்டி எலும்பையிழைக்கிற நீ, ஒரு வார்த்தை சொன்னால் என்ன தப்பு உண்டா மென்னவுமாம். [யான்வளர்த்தநீயலையே] - கலந்தார் செய்யுமவற்றை வயிற்றில் பிறந்தாரும் செய்வரோ? நிவாரகரில்லாத ஸ்வதந்த்ரர் செயலை நீயுஞ் செய்யவோ?

ஈடு.—ஏழாம்பாட்டு. தந்தாமுடைய அபராதத்தைப் பாராதே, "அருளாழிப்புள் கடவீர வர்வீதி" என்று சொல்லுமித்தனையோ வேண்டுவதென்று அவர்க்குக் கருத்தாக; எங்கள்

குற்றமொன்றுமேயோ பார்ப்பது? தம்முடைய அபராதஸஹத்வம் பார்க்கக்கடவதன்றோ? என்று சொல் என்று தன்கிளியை இரக்கிறாள்.

[என் பிழை கோப்பதுபோல] எலும்பும் நரம்புமேயாம்படி சரீரந்தான் போர க்ருசமாயிற்று. எலும்பைத்தொளைத்து, அதிலே ஸூர்த்தமாயிருப்பதொன்றை வ்யாபரிப்பித்தாற்போலே யாயிற்று, பனிவாடை ஈர்கின்றது. நஞ்சூட்டின வாடையானது இருக்கிறபடி. *பம்போபவநமாருதம்* என்று நாயகனுக்கிருக்குமாபோலே இராநின்றதுகாணும் இவ்வாடை இவளுக்கு. *பத்மஸௌகந்திகவஹம்* கலம்பகன் சூடுவாரைப்போலே தாமரை யோடை செங்கழுநீரோடைகளிலே சென்று புக்கு, "பூவிலிழியில் அதில் வெக்கை தட்டும்" என்று, மேலெழ நின்று, அரிமிதியான பரிமளத்தைக் கொய்துகொண்டு வாராநின்றது. *சிவம்* கலப்பற்றுப் பசுந்தென்றலா யிராநின்றது. அதாவது புறம்பே சிலர்க்கு உடம்பு கொடுத்துச் சுணங்கறியாதே தாய்த்தலைத் தென்றலா யிருக்கை. *சோகவிநாசநம்* நம்மை இனி ப்ராணனோடே வைத்து நலியாதுபோலே யிருந்தது. *தந்யா:* காற்று வாராநின்றதென்றால், ஏகாந்தஸ்த்தலம் தேடிப்படுக்கை படுக்கிறவர்களும் சிலரே. *லக்ஷ்மண லேவந்தே* இதுஎப்போதோ வருவது என்றிருப்பர்கள். *பம்போபவநமாருதம்* 'ஆகரத்தில் நெருப்பு' என்னுமாபோலே. இப்படி மஹிஷியானவள் வாடைக்கு இடைந்து நோவுபடாநிற்க, இத்தைப் பரிஹரிக்கைக்கு அவர், கடலடைப்பது படைதிரட்டுவதாகிறபடி. நாயக நாயகிகள் ஒருவரையொருவர் பிரிந்தவாறே அந்தரஜாதிகாலிலே துகை யுண்பதே இப்படி? அந்தரத்திலே ஜாதமானது அந்தரஜாதி. ஆகாசத் வாயுவிறே. கால் காற்று. [என்பிழையே நினைந்தருளி] நான்படுகிற க்லேசம் போராதென்று ஸோரண்டைச்சிகை வாசியாநின்றார்; அவிஜ்ஞாதாவாகை தவிர்ந்து, *ஸஹஸ்ராம்க:* என்கிறபடியே இப்போதுதோஷத்தில் ஸர்வஜ்ஞராயாயிற்று இருக்கிறது. [அருளாத திருமாலார்க்கு] *நகச்சிந் நாபராத்யதி* என்பாரும் அருகே யிருக்க, எங்கள் குற்றம்பார்த்து அவன்பக்கல் முகம்பெறவிருக்கிறீரே?" என்று நஞ்சீயர் அருளிச்செய்யும்படி. "நான் இப்படி நோவுபட வேண்டுகிறது அவனுக்கு அவன் முகங்கொடுத்து அங்கே துவக்குகையிறே யென்று இன்னாதாகிறாள்" என்று பிள்ளான் பணிக்கும்படி. உறவுள்ளவிடத்திலேயிறே வெறுப்புள்ளதும். அருளாதொழிகிற தென்? என்றால், தந்தாங்குற்றம் பாராதே அருளச் சொல்லுமித்தனையோ வேண்டுவது? என்று சொல்ல நினைத்தாராகில் நீங்கள்தான் இங்ஙனே சொல்லுங்கோள். என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு என்னுங்கோள், என்குற்றத்தைப் பார்த்து தமிக்க நினைத்தாராகில், தம்பொறையாகிற நேர்தரவைக் காட்டுங்கோள். ஸ்வாமிகளான தம் பொறை வயிறு நிறைய எங்களால் குற்றஞ் செய்யப்போமோ? என்னுங்கோள். ஆச்ரயத்துக்குத் தக்கபடியன்றோ எல்லாம்; நாங்கள் குற்றஞ் செய்வதும் எங்களளவிலே, தாம் பொறுப்பதும் தம்மளவிலே யன்றோ? [திருவடியின் தகவினுக்கு என் பிழைத்தாள்] "தேவரீர் க்ருபைக்குத் தண்ணீர்த் துரும்பாக ஏதேனும் ப்ரதக்ஷிண நமஸ்காராதிகள் பண்ணிற்றுண்டோ" என்று நம்பிள்ளை அருளிச்செய்யும்படி. [தகவினுக்கு] *ஆந்ருசம்ஸ்யம் பரோ தர்ம:* என்று சொல்லும்படியிருக்கும் நிலைக்கு என் பிழைத்தாள் - என்ன தப்புச் செய்தாள்? *இம் கோபமூலம்* என்றுளிறே தாரை. ராஜபுத்ரர்களை நாலுமாஸம் மின்னுக்கும் இடிக்கும் இரையாக்கித் தாங்கள் போகப்ரவணராயிருந்து அவற்றை ஒன்றையும் புத்திபண்ணாதே, 'உம்முடைய கோபத்துக்கு அடியென்?' என்றாளிறே, அவர்கள் பொறையை நினைந்திருந்தகனத்தாலே. *மநுஜேந்த்ர புத்ர* அறுபதினாயிரமாண்டு செய்தார்செய்த குற்றங்களைப் பொறுத்துச்சேரவிட்டு ஆண்டு கொண்டுபோந்தான் உங்கள் தமப்பனார்; அவன் வயிற்றிலே பிறந்து குற்றஞ்செய்தோமென்று தலையறுக்க வந்து நின்றீர் நீர்; அழகிதாயிருந்தது உம்முடைய போக்கு! *கஸ்தே ந ஸந்திஷ்டேதி வாங்நிதேசே* சாஸ்த்ரவச்யமன்றிக்கே கண்டதிலே கடுகச் சாபலத்தைப்பண்ணி மீளமாட்டாத திர்யக்குக்களை நீரே 'இழந்த போகங்களை புஜிப்பது' என்று சேர்த்துவிட்டு, நீர் சொல்லிற்றுச் செய்தனவென்று தலையறுக்க வந்துநின்றீர். இப்படி சொல்லலாம்படியிறே இவர் பொறை யிருப்பது. [ஒருவாய் சொல்] "ஒருவாய்" என்றது ஒருவார்த்தை யென்றபடி. "சொல்" என்றது சொல்லு என்றாய், ஒருவார்த்தை சொல்லு என்றபடி. [என் பிழைக்கு

மிளங்கிளியே] மௌக்த்யத்தாலும், ஸ்நிக்த்தமான ப்பணி இயாலும், வடிவில் பசுமையாலும், வாயில் பழுப்பாலும் நாயகனுக்கு ஸ்மாரகமாய் எனும்பையிழைக்கிற கிளி யென்னுதல்; என் பிழைக்கும்—என் தசையை அறிவித்தால் என்ன தப்புண்டா மென்னுதல். [யான் வளர்த்த நீயலையே] ச்ரிய:பதியாய்த் தான்தோன்றியாயிருப்பார் செய்வதை வயிற்றில் பிறந்தாரும் செய்வரோ? கலந்துபிரிந்தார் செய்வதை வளர்த்தவர்களும் செய்வர்களோ? [யான் வளர்த்த நீயலையே] அவன்தான் இப்படிச் செய்யவேண்டிச் செய்தானோ?] என்னோட்டை ஸம்பந்த மன்றோ அவன் இப்படிச் செய்தது? அப்படி என்னோட்டை ஸம்பந்தம் உனக்கு முண்டான பின்பு, நீ நலியச் சொல்ல வேணுமோ? [யான் வளர்த்தநீயலையே] எனக்குத் தக்காற்போலே யன்றோ நீயும் இருப்பது, உனக்குக் குறையோ?

நீயலையேசிறுபூவாய்! நெடுமாலார்க்கென்தூதாய்*
நோயெனதுநுவலென்ன நுவலாதேயிருந்தொழிந்தாய்*
சாயலொடுமணிமாமை தளர்ந்தேன்நான்* இனியுனது
வாயலகிலின்னடிசில் வைப்பாரைநாடாயே. (8)

ஒ.—எட்டாம்பாட்டில், ஒரு பூவையைக் குறித்து பகவத்விச்லேஷத்தாலே தனக்கு வந்த மஹாவஸாதத்தைச் சொல்லுகிறாள்.

[நீயலையே யென்று தொடங்கி] - இன்று என் அவஸாதத்தைக் கண்டு மிகவும் தளருகிற நீயன்றோ? ஆச்ரிதருடைய நோவு பொறாதே அவர்கள் பக்கலிலே அதிவ்யாமுக்தனாயிருக்கிற எம்பெருமானுக்கு விரஹவ்யஸநத்தாலே மிகவும் நொந்திருக்கிற என்னுடைய தூதாய் என்னுடைய மஹாவஸாதத்தைச் சொல் என்ன, சொல்லாதே செல்வப்பிள்ளைத்தன மடித்தாய். [சாயலொடு என்று தொடங்கி] - சாயலோடேகூட நல்ல நிறத்தை இழந்தேன் நான், இனி உன் ப்ரக்ருதியறிந்து உன்னை வளர்ப்பாரைத் தேடு; நான் முடிந்தே னென்று கருத்து.

இ.—எட்டாம்பாட்டில், தன்தசையைக் கண்டு உருவுகின்ற தன்பூவையைக் குறித்துத் தன்னுடைய அவஸாதத்தைச் சொல்லுகிறாள்.

[நீயலையே] - என் அவஸாதத்தைச் சென்று சொல்லென்ன, செருக்கடித்திருந்தாய் நீயன்றோ? இதுக்குச் சொன்னாளோ? என்னில்; கீழில் அவற்றுக்குச் சொல்லிற்றெல்லாம் இதுக்குச் சொல்லிற்று என்றிருக்கிறாள், கலக்கத்தின் மிகுதியாலே. இன்று என் அவஸாதத்தைக் கண்டு தளர்ந்திருக்கிற நீயன்றோ அன்று செருக்கடித்திருந்தா யென்றுமாம். [சிறுபூவாய்] - உன்பால்யம் நம்கார்யத்தைக் கெடுத்ததில்லையோ? [நெடுமாலார்க்கு] - ஸர்வேச்வர னென்னுதல், ஆச்ரிதர்பக்கல் அதிவ்யாமுக்த னென்னுதல். [என்தூதாய்] - அன்று அவன் வ்யாமோஹத்துக்கு இலக்காய், இன்று வெறுந்தரையாயிருக்கிற என்தூதாய். [என்நோயெனது நுவலென்ன]-நோயைச் சொல் லென்ன இவள்நோயென்றால் வ்யாவ்ருத்தமாயிற்று இருப்பது. ஸ்ரீபரதாழ்வான் நோயென்றால் சாதுர்த்திகமா யிராதே; ''ஜடிலம்'', ''புத்ரவ்யாதிர் நதேகச்சித்'' ஸம்ஸாரிகளுக்கு சப்தாதிவிஷயங்களிலே இழவு பேறுகையாலே பகவத்விச்லேஷம் அறியார்தன். [நுவலாதே யிருந்தொழிந்தாய்] - நோயறியாமை சொல்லாதிருந்தாயல்லை. நான் ஏவாமையன்று, செல்வப்பிள்ளைத்தனமடித்திருந்தா யித்தனையிறே. அத்தலையில் வ்யாமோஹம் அது, இத்தலையில் நோவு இது; இரண்டு தர்மியையும் ஒருக்திமாத்ரத்தாலே நோக்கலாயிருக்கவன்றோ நீ ஆறியிருந்தது? [சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான்] - அது, 'போகிறேன்' என்று உத்யோகித்தது; இனி ஆரை நோக்கப் போகிறு யென்கிறாள். ஸமுதாயசோபையோடே கூடின அழகிய நிறத்தை இழந்தேன். [இனி உனது வாயலகில் இன்னடிசில்வைப்பாரைநாடாயே] - இனி உனக்குச் செய்ய அடுப்பது, உன் ப்ரக்ருதியறிந்து வளர்ப்பாரைத் தேடுகைகாண். சரமதசையிலே தம்முடைய திருவாராதநமான பிள்ளையைப் பார்த்து, ''வாயலகிலின்னடிசில் வைப்பாரை நாடாயே'' என்று அருளிச்செய்தார் பெரியதிருமலைநம்பி.

௮.—எட்டாம்பாட்டு. முன்பு இவள் வார்த்தை சொல்லிக் கொண்டாடுகையாலே தரித்திருந்த பூவையானது இவள் உருவப்புக்கவாறே தானும் உருவப் புக்கது; அந்தைப் பார்த்து, முன்பே என் தசையை அறிவியென்னச் செருக்கடித்திருந்தாய்; நானே முடியா நின்றேன்; இனி உன்னை ரக்ஷிப்பாரைத் தேடப்பாராயென்கிறாள். பூவையென்பது நாகணவாய்ப்புள்; அதாவது ஒரு பக்ஷிவிசேஷம்.

[நீயலையே] என்தசையை அறிவிக்கவேணு மென்ன, அறியாதேயிருந்த உன்னாலே வந்த தன்றோ இது? அறிவித்தால் வாராதே யிருந்தானாகிலிறே அவனுக்குக் குறையாவது? பகவல்லாபம் சேர்ப்பாராலே என்றிருக்கிறாள், அவ்யவதாநேநஸம்பந்தம் எம்பெருமானோடே யாயிருக்க, ஆசார்யனை விரும்புகிறது பண்ணின உபகாரத்தைப் பற்றவிறே; *ஆதநீதயதோ ஜ்ஞாநம் தம் பூர்வமபிவாதயேத்* என்னுகின்றதிறே. [சிறுபூவாய்] உன்பருவம் நிரம்பாமையிறே நம்கார்யத்தைக் கெடுத்தது. [நெடுமாலார்க்கு] அவர்க்கு வ்யாமோஹத்தையுண்டாக்கிக்கொடுவரவேணுமென்று இருந்தாயல்லையே? [என்தூதாய்] எனக்கு அவர்பக்கல் வ்யாமோஹந்தானில்லாமை இருந்தாயுமன்றே! (வயிற்றில் பிறந்த உங்களைக்கொண்டு அபிமதம் சேர்க்கவேண்டும்படியன்றோ! எனக்கு உண்டான ஆசை.) [நோயெனது] 'ஸ்ரீபரதாழ்வான் நோய்' என்றால் சாதுர்த்திகமாயிராதே? *ஜடிலம்* நல்லமாலை வந்தால் 'பிள்ளை பரதன்மயிருக்காயிருந்தது? என்றாயிற்று, சக்கரவர்த்தி வாய்விடுவது: அவனாயிற்று சடை புனைந்திருக்கிறான். *சீரவஸநம்* நல்ல பரிவட்டங் கண்டால் 'இது பிள்ளைக்காம்' என்று வாய்விடுவார்கள்; அவனன்றோ மரவுரியுடுத்திருக்கிறான். *ப்ராஞ்ஜலிம்* அவர்களிரந்து கொடுக்கப் பெறுமவன், தன் அபிமதத்துக்குத் தான் இரப்பாளனாயிருந்தான். *பதிதம் புவி*—*அங்கே பரதமாரோப்ய* என்னும்நிலை பெற்றதில்லை. 'படுக்கை உறுத்தும்' என்று மடியிலே கண்வளருமவனாயிற்று தரைக்கிடை கிடக்கிறான். *ததர்ச ராமோ துர்த்தர்சம்* வைத்தகண் வாங்காதே கண்டுகொண்டிருக்கும் பெருமானுக்கும் கண்வைக்கவொண்ணாதபடி இருக்கிறவனை. *யுகாந்தே பாஸ்கரம் யதா* பெருமானொருவர்க்கும் கண்வைக்கவொண்ணாமையே யன்றிக்கே, 'ஜகதுபஸம்ஹாரம் பிறக்கப் புகுகிறதோ?' என்னும்படி யிருந்தான். [நோயெனது நுவலென்ன] என்தசையை அங்கே சென்று சொல் என்ன, சொல்லாதே யிருந்தொழிந்தாய். நுவலாதே யிருந்தா யென்னுதல், நுவலாதே யொழிந்தா யென்னுதல் செய்ய அமையாதோ? இரட்டிப்பென்? என்னில், — 'வந்தொழிந்தான், போயொழிந்தான்' என்னக் கடவதிறே, வழக்கச்சொல் இருக்கிறபடி. இரண்டு தர்மியையும் ஒரு உக்திமாத்ரத்தாலே நோக்கலாயிருக்கவன்றோ நீ ஆறியிருந்தது! 'அதுக்கு இப்போது வந்ததென்?' என்ன, — [சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான்] ஸமுதாய சோபையோடே நிறத்தில் ஔஜ்ஜ்வல்யமும் இழந்தேன். 'இனிப் போய் அறிவிக்கிறேன்' என்று த்வரிக்கப்புக்கது; கதே ஜலே ஸேதுபந்தம்போலே இனி அறிவித்தால் என்ன லாபமுண்டு? [இனியுனது இத்யாதி] இனி உனக்கு ரக்ஷகரைத் தேடப்பாராய். அவன் வந்தாலும் போன நிறத்தை மீட்கப்போகாதென்றிருக்கிறாள். பெரியதிருமலைநம்பி, தம்முடைய அந்திம தசையிலே, தமக்கு ஒரு வெண்ணெய்க்காடும் பிள்ளையாயிற்று திருவாராதநம்; அவர் திருமுன்பில் திருத்திரையை வாங்கச் சொல்லி, "சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான் இனியுனது வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே" என்றாராம்.

நாடாதமலர்நாடி நாடோறும்நாரணன்தன்*
வாடாதமலரடிக்கீழ் வைக்கவேவகுக்கின்று*
வீடாடிவீற்றிருத்தல் வினையற்றதென்செய்வதோ?
ஊடாடுபனிவாடாய்! உரைத்தீராயெனதுடலே. (9)

௯.—ஒன்பதாம்பாட்டில், தனக்கு சேஷமாயிருக்கிற வஸ்து இங்ஙனே அவஸந்நமாய் முடிந்து போகப் பெறலாமோ? என்று எம்பெருமானுக்கு அறிவித்தால் அவன் உபேக்ஷித்தருளினானாகில் அவச்யம் என்னை முடிக்கவேணுமென்று ஒரு வாடையை இரக்கிறாள்.

[நாடாதமலரென்று தொடங்கி] - இஜ்ஜகத்தில் ஒருவரால் தேடவொண்ணாத செவ்விப்பூவெல்லாம் தேடி ஸர்வசேஷியானவனுடைய வாடாத மலரின் செவ்வியையுடைத்தான திருவடிகளின் கீழே நித்யமும் அடிமை செய்ய இவ்வாத்மாவை உண்டாக்கிற்று. [வீடென்று தொடங்கி] விரஹவ்யஸநத்திலே மூர்த்தாபிஷிக்தமான பொல்லாத இருப்பு என்செய்யக்கடவதோ? எம்பெருமானைப் பிரிந்து விரஹவ்யஸநத்திலே மூர்த்தாபிஷிக்தமா யிருக்கைக்கிடாக பாக்யஹீநமான இவ்வாத்மவஸ்து என்செய்யக்கடவது? என்றுமாம். உறவுமுறையாரோட்டைத் தொற்று அறுகைக்கும் உம்மைப் பிரிந்திருக்கைக்கும் ஈடான இப்பொல்லாதான இருப்பு என் செய்வது? [ஊடாடுபனிவாடா வென்று மேலுக்கு] - அங்கோடு இங்கோடு உலாவித்திரிகிற குளிர்காற்றே! எம்பெருமானுக்கு என்னை அறிவித்தால் அவன் உபேக்ஷித்தானாகில் அவச்யம் ஈரவேணும், அவனோட்டை விரஹத்தாலும் நெஞ்சு இளையாதிருக்கிற என்னுடைய உடலை.

இ.—ஒன்பதாம்பாட்டில், முன்புத்தைவாடை போலன்றிக்கே, தன்னை முடிக்க அவன் வரக்காட்ட வந்ததாகத் தோற்றிற்றொரு வாடையைப் பார்த்து, தனக்கு சேஷமான வஸ்து இங்ஙனே முடிந்துபோமித்தனையோ? என்று அவனுக்கு அறிவித்தால், அவன் உபேக்ஷித்தானாகில் பின்னையும் நான் இராமே முடிக்கவேணுமென்று இரக்கிறாள்.

[காடாதமலர்நாடி] - அபிநிவேசத்துக்கீடாகத் தேடவரிதான புஷ்பங்களைத் தேடி; "எண்டிசையுமுள்ள பூக்கொண்டு" என்னுமாபோலே. [நாடோறும்] - விச்சேதியாதபடி. கிஞ்சித்கரித்து ஸ்வரூபம் பெறும் வஸ்துவுக்கு, விச்சேதம் ஸ்வரூபஹாநியிறே. [நாரணன்தன் வாடாத மலரடிக்கீழ்] - ஸர்வஸ்வாமியானவனுடைய ஏகரூபமான செவ்விப்பூப்போலே இருந்துள்ள திருவடியின்கீழே. அகிஞ்சித்கரமானவன்றும் விடவொண்ணாதபடி நிரதிசய போக்யமான திருவடிகள். [வைக்கவே வகுக்கின்று]. "ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய" என்னுமாபோலே இதுக்காகவாயிற்று இவனை உண்டாக்கிற்று. வைக்க - சேர்க்க. சேஷபூதனுக்குக் கிஞ்சித்காரத்தாலே ஸ்வரூபலாபமானாற்போலே, சேஷிக்கும் கிஞ்சித்கரிப்பித்துக்கொண்டு அத்தாலேயிறே ஸ்வரூபஸித்தி. [வீடாடி வீற்றிருத்தலென்று தொடங்கி] - வீடென்று விச்லேஷம், ஆடுகை - அதிலே அவகாஹிக்கை. வீற்றிருத்தல் - அதிலேமூர்த்தாபிஷிக்தனாகை. வினை - நல்வினை, அறுகை - க்ஷயிக்கை. விச்லேஷத்திலே அவகாஹித்து அதிலே மூர்த்தாபிஷிக்த மாம்படி பாக்யஹீநமான இருப்பு; பாக்யஹீநமான இவ்வாத்மவஸ்து என்னவுமாம். வீறென்று வேறுபாடாய் உறவுமுறையாரோடு தொற்றறுகைக்கும் உம்மைப் பிரிந்திருக்கைக்கும் ஈடான இப்பொலலாவிருப்பு என்னவுமாம்; "எமராலும் பழிப்புண்டிங்கென்தம்மா விழிப்புண்டு" என்னும்படியே. [என்செய்வதோ] - என் செய்யுமோ? எதுக்காக என்னவுமாம். இது ஓரிருப்புமல்ல, இதுக்கு ஒரு ப்ரயோஜநமுமில்லை என்றபடி. [ஊடாடுபனிவாடாய்] - ஊடென்று உள்ளு; ஆடுகை - ஸஞ்சரிக்கை. அந்தரங்கமாக ஸஞ்சரிக்கை. அங்கோடு இங்கோடு அந்தரங்கமாய்க்கொண்டு ஸஞ்சரிக்கிற குளிர்ந்த காற்றே! 'ஸம்ச்லேஷதசையில் எனக்குப் பாங்காக ஸஞ்சரித்த நீயன்றோ' என்றுஞ் சொல்லுவர். [உரைத்து] அவனும் என் ஸ்வரூபத்தை ஸ்மரிக்கையாலே உங்களை வரக்காட்டினானித்தனை. 'வாடாதமலரடிக்கீழ் வைக்கவே வகுக்கின்று' என்கிற பாசுரத்தைச் சொல்லி, [ஈராயெனதுடலே] - 'அவனால வரும் நித்யகைங்கர்யமும் வேண்டா' என்று உபேக்ஷித்தானாகில், அவச்யம் வந்து ஈர்ந்துபோகவேணும். [எனதுடலே] - அவனோட்டைப் பிரிவுக்கும் நெஞ்சழியாத இந்த சரீரத்தை முடிக்கவேணும். இப்போது இருப்புத் தேட்டமானாற்போலே அப்போது முடிவு தேட்டமாம்றே.

ஈ௫.—ஒன்பதாம்பாட்டு. "சாயலொடுமணிமாமை தளர்ந்தேன் நான்" என்று இருக்கிற ஸமயத்திலே ஒருவாடை வந்து உடம்பிலே பட்டது! இதினுடைய தோற்றரவு இருந்தபடியாலே வெறுமனன்று; மஹாராஜருடைய மிடற்றோசையில் தெளிவைக் கேட்டுத் தாரை, 'பூர்வக்ஷணத்திலே வாலிகையாலே நெருக்குண்டுபோனவர் இப்போது இப்படி தெளித்து வந்து அறைகூறுகிற இது வெறுமனலல, இதுக்கு ஓரடியுண்டு' என்றாற்போலே, இவளும் இவ்வாடைக்கு ஓரடி யுண்டாக வேணும் என்று பார்த்து, ராஜாக்கள் ராஜத்ரோஹம் செய்தவர்களை நலிகைக்கு வேற்காரரை வரவிடுமாபோலே நம்மைநலிகைக்காக ஸர்வேச்வரன் இவ்வாடையை வரவிட்டானாகவேணுமென்று பார்த்து, வேற்காரர்

கொடுபோய் நலியப்புக்கவாறே 'நிதியுண்டு' என்பாரைப்போலே, நான் சொல்லுகிற வார்த்தையை நீ அங்கே சென்று அறிவித்தால் 'அத்தலையால்வரும் நன்மையும் வேண்டா' என்று இருந்தானாகில், அவச்யம் வந்து என்னை முடிக்கவேணுமென்று அவ்வாடையை இரக்கிறாள்.

[வாடாதமலர்நாடி] 'ஆத்மபுஷ்பத்தைச் சொல்லுகிறது' என்பாருமுண்டு; அங்ஙனன்றிக்கே, பேர், "எண்டிசையுமுள்ள பூக்கொண்டு" என்கிறபடியே, 'தேடவரிய புஷ்பங்களெல்லாம்தேடி' என்று அருளிச்செய்வர். இதுதான் ஒருநாள் தேடிவிடுகையன்றிக்கே, [நாடோறும்] விச்சேதியாதபடி. கிஞ்சித்கரித்து ஸ்வரூபம்பெறும் வஸ்துவுக்கு விச்சேதம் ஸ்வரூபஹாநியிறே. [நாரணன்] நித்யபரிசர்யை பண்ணவேண்டும்படி ஸர்வஸ்வாமியானவன். [வாடாதமலரடிக்கீழ்] செவ்விமாறாத பூப்போலேயிருக்கிற திருவடிகளின் கீழே. ஸ்வரூபஹாநியானாலும் விடவொண்ணாதபடி நிரதிசய போக்யமுமான திருவடிகள். [வைக்கவே] சேர்க்கவே. [வகுக்கின்று] உண்டாக்கிற்று. *ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய* போலே. இப்படி வகுத்ததுமாய் ஸுலபமுமாய் நிரதிசய போக்யமுமான திருவடிகளிலே ஸர்வவித கைங்கர்யங்களையும் பண்ணவாயிற்று இத்தை யுண்டாக்கிற்று. சேஷபூதனுக்குக் கிஞ்சித்கரித்து ஸ்வரூபஸித்தி யானாற்போலே சேஷிக்கும் கிஞ்சித்கரிப்பித்துக் கொண்டிறே ஸ்வரூபஸித்தி. இப்படியிருக்க, [வீடாடி வீற்றிருத்தல் வினையற்ற தென்செய்வதோ] வீடென்று விடுகை: அதாவது விச்லேஷிக்கை. ஆடுகை அவகாஹிக்கை. வீற்றிருக்கையாவது விச்லேஷத்திலே மூர்த்தாபிஷிக்தையாயிருக்கை. வினையறுகையாவது நல்வினையறுகை. இப்படி பாக்யஹாநியாலே விச்லேஷத்திலே அபிஷேகம்பண்ணித் தம்மைப் பிரிந்திருக்கிற இப்பொல்லாத இருப்பு உண்டு. இது என்செய்யக்கடவதோ? என்னுதல்; அன்றிக்கே, தம்மையும்பிரிந்து, தம்மோடு ஒரு ஸம்பந்தத்தை யிட்டு பந்துக்களும் கைவிட, அவர்களையும் விட்டு, வேறுபட்டிருக்கிற இவ்வஸ்து, என்செய்யக்கடவதோ? என்னுதல். *"எமராலும் பழிப்புண்டிங்கென் தம்மாலிழிப்புண்டு" என்னக்கடவதிறே. [ஊடாடுபனிவாடாய்] வேற்காரர் அங்குத்தை வார்த்தையை இங்கே சொல்லி, இங்குத்தை வார்த்தையை அங்கே சொல்லித்திரியுமாபோலே, அங்கோடுஇங்கோடாய்த் திரியாநின்றதாயிற்று. ஊடென்று உள்ளாய், ஆடுகை ஸஞ்சரிக்கையாய், அங்கே அந்தரங்கமாக ஸஞ்சரிக்கை; அன்றிக்கே, ஸம்ச்லேஷஸமயத்திலே கிட்டி வர்த்தித்துப்போந்த நீயென்னுதல். [உரைத்து] நித்யகைங்கர்யத்துக்கு இட்டுப் பிறந்த வஸ்து இப்படி யிருக்கக்கடவதோ? என்று அறிவித்தால், 'அத்தலையால்வரும் கைங்கர்யமும் நமக்குவேண்டா' என்றிருந்தானாகில், அவச்யம் வந்து அவனோட்டைப் பிரிவுக்குச் சிளையாத என்னுடலை முடித்துவிடவேணுமென்று காலைப்பிடித்து வேண்டிக்கொள்ளுகிறாள்.

உடலாழிப்பிறப்புவீடு உயிர்முதலாமுற்றுமாய்*
கடலாழிநீர்தோற்றி அதனுள்ளேகண்வளரும்*
அடலாழியம்மானைக் கண்டக்காலிதுசொல்லி*
விடலாழிமடநெஞ்சே! வினையோமொன்றாமளவே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், கீழ்ப்பாட்டிலே ப்ரஸ்துதமான சேஷத்வத்தை அநுஸந்தித்துப் பற்றுகிற மாநஸத்தை 'எம்பெருமானுக்கு நம்முடைய கார்யத்தை விண்ணப்பஞ்செய்து நம்கருமம் அறுதிபடுத்தன்னையுஞ் செல்ல என்னை விடாதே கொள்' என்று ப்ரார்த்திக்கிறாள்.

[உடலென்று தொடங்கி] - அஸங்க்யமான சரீரங்களினுடைய ஜந்மத்தையும். சரீரஸ்தமான ஆத்மாவையும் மற்றுமெல்லாவற்றையும் உண்டாக்குகைக்காக. ஆத்மாவை உண்டாக்குகையாவது - சரீரத்தோடே கூட்டுகை. [கடலென்று தொடங்கி] - பெரிதான நீரையுடைய ஏகார்ணவத்தைத் தோன்றுவித்து இப்பாலுள்ள ஸ்ருஷ்ட்யாதிகளுக்காக அதினுள்ளே கண்வளர்ந்தருளும் ஸ்வபாவனும் ஆச்ரித விரோதி நிரஸநஸ்வபாவமான திருவாழியை யுடையனுமான எம்பெருமானைக் கண்டக்கால் கீழ்ப்பாட்டிற்

சொன்ன வார்த்தை சொல்லி. [விடலென்று தொடங்கி] - சுழன்று வருகிற பேதைநெஞ்சே! நங்கருமம் அறுதிபடுந்தனையும் என்னை விடாதேகொள். அளவுடையபமாய் பவ்யமான நெஞ்சென்றுமாம்.

இ.—பத்தாம்பாட்டில், கீழ் ப்ரஸ்துதமான சேஷத்வத்தை நினைத்துப் பற்றுகிற திருவுள்ளத்தை 'நம் காரியம் உறுதிபடுந்தனையும் என்னைக் கைவிடாதே கொள்' என்கிறான். 'கீழ் தூதப்ரகரணமாகையாலே மநஸ்ஸைத் தூதுவிடுகிறான்' என்பாரு முண்டு.

[உடலாழிப்பிறப்பு] - சக்ரூபமான சரீரங்களில் பிறப்பு. வீடு - மோக்ஷம். இப்போது மோக்ஷமென்? என்னில், மோக்ஷார்த்தமிறே ஸ்ருஷ்டி. [உயிர்முதலா] - நித்யமான ஆத்மாவை உண்டாக்குகையாவது - சரீரத்தோடே கூட்டுகை. [முற்றுமாய்] - இவை முதலான எல்லாவற்றையும் உண்டாக்குகைக்காக. முற்றுமா யென்கிறது, "பஹுஸ்யாம்" என்கிற ச்ருதிச்சாயையாலே. அஸங்க்யேயமான சரீரங்களையுடைய ஜந்மத்தையும் சரீரஸ்தமான ஆத்மாவையும், இவை முதலான எல்லாவற்றையும் உண்டாக்குகைக்காக என்றுமாம். அப்போது, ஆழியென்று - காம்பீர்யமாய், அபரிச்சிந்நமான சரீரபேதங்க ளென்றபடி. [கடலாழி நீர் தோற்றி] - அகாதமான நீரையுடைத்தான கடலைத் தோற்றுவித்து. "அபஏவ ஸஸர்ஜாதௌ" என்கிறபடியே ஏகார்ணவத்தை ஸ்ருஷ்டித்து. [அதனுள்ளே கண்வளரும்]- இப்பாலுண்டான ஸ்ருஷ்ட்யாதிகளுக்காக அதிலே கண்வளரும். இப்போது காரணத்வம் சொல்லுகிறது. இத்தை உண்டாக்கினவன் அறிவித்தால் விடா னென்கைக்காக. [அடலாழியம்மானை] - ஆச்ரிதவிரோதி நிரஸந சீலமான திருவாழியையுடைய ஸர்வேச்வரனை. 'கண்வளரும்அடலாழியம்மானை' என்று காரணாவஸ்தையிலும் நித்யவிபூதி விக்ரஹம் திவ்யாயுதம் இவற்றினுடைய ஸத்பாவஞ் சொல்லிற்றாகிறது. [இதுசொல்லி] - கீழ் "வைக்கவே வகுக்கின்று" என்ற வார்த்தையைச் சொல்லி. [விடல்] - விடாதேகொள். [ஆழிமடநெஞ்சே] - கம்பீரமாய் பவ்யமான நெஞ்சே! சுழன்று வருகிற பேதைநெஞ்சே! என்றுமாம். [வினையோம்] - அவன் தொடங்கின காரியத்துக்கு இன்று நாம் வழிபார்த்திருக்கும்படி பாபத்தைப் பண்ணின நாம் [ஒன்றுமளவு] - நம் காரியம் ஒரறுதி பிறக்குந்தனையும். "ஸாயுஜ்யம் ப்ரதிபந்நா யே" என்கிறபடியே அவனோடே சேர்ந்துவிடுமளவுமென்றுமாம். 'அடலாழியம்மானைக் கண்டக்காலிது சொல்லி, வினையோமொன்றுமளவும் என்னை விடல். தூதானபோது அவனைக் கண்டக்கால் இது சொல்லி, நம் காரியம் அறுதிபடுமளவும் அவனை விடாதேகொள்' என்று அந்வயம்.

ஈடு.—பத்தாம் பாட்டு. 'அல்லாதவற்றை யெல்லாம் விட்டு, நெஞ்சைத் தூது விடுகிறான்' என்பாரு முண்டு. அப்போது, விடலென்றது—அவனை விடாதேகொள் என்கை. அன்றிக்கே, ஒன்பதிற்பாட்டில், 'வைக்கவே வகுக்கின்று' என்று கைங்கர்யம் ப்ரஸ்துதமானவாறே, தாய்முலையை நினைத்த கன்றுபோலே திருவுள்ளம் பதறி சரீரத்தை விட்டுப் போகப் புக்கது; நம் கார்யம் ஒரறுதிபிறக்குமளவும் நீ என்னை விடாதே கொள் என்னுதல்.

[உடலாழிப்பிறப்பு] உயிரினுடைய உடலாழிப்பிறப்பு (ஆத்மாவினுடைய ஸஹஜமான பிறப்பு.) வீடுமுதலா முற்றுமாகைக்காக - மோக்ஷாதி புருஷார்த்தங்களைப் பெறுகைக்காக. சரீரத்தினுடைய வட்டமான பிறப்பு; அன்றிக்கே, ஆழியென்று கடலாய், அத்தால் 'காம்பீர்யமாய், அஸங்க்யேயமான ஜந்ம மென்னுதல். வீடு—மோக்ஷம். ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநம் மோக்ஷமாகையாலே சொல்லுகிறது. அன்றிக்கே, [வீடு உயிர்] ஜந்மங்கள்தோறு முண்டான சரீரஸ்தமான ஆத்மாக்கள். உயிர்தொடக்கமாக மற்றுமுண்டான கார்யஜாதத்தை உண்டாக்குகைக்காக [ஆய்] *பஹு ஸ்யாம்* என்கிறபடியே, தன் விகாஸமே யாகையாலே [கடலாழி நீர்தோற்றி] ஆழிநீர் ஆழியநீர். *அப ஏவ ஸஸர்ஜாதௌ* என்கிறபடியே மிக்க ஜலத்தையுடைத்தான ஏகார்ணவத்தை யுண்டாக்கி, இவ்வருகுண்டான ஸ்ருஷ்ட்யாதிகளுக்காக அங்கே வந்து கண்வளர்ந்தருளும். [அடலாழியம்மானை] ஸ்ருஜ்யபதார்த்தங்களுக்கு விரோதிகளாயிருப்பாரை அழியச்செய்கைக்காக ஆசிலே வைத்த கையுந் தானுமாயிற்றுக் கண்வளர்ந்தருளுவது. [கண்டக்கால்] என்னிலும் உனக்கன்றோ பேறு முற்பட்டிருக்கிறது. *சந்த்ரே த்ருஷ்டிஸமாகம:* போலே கண்டாரைக் காணுமித்தனையிறே தனக்கு. [இதுசொல்லி] 'வைக்கவே வகுக்கின்று' என்கிற வார்த்தையைச் சொல்லியென்னுதல்; ஸ்ருஷ்டிக்கு

ப்ரயோஜநம் (விசித்ரா தேஹஸம்பத்திரீச்வராய நிவேதிதும்) என்கிறபடியே, தேவர் திருவடிகளிலே ஸர்வ கைங்கர்யங்களையும் பண்ணுகையன்றோ என்கை. விடல் என்கிற பதம், மேலே அந்வயிக்கிறது. [ஆழிமடநெஞ்சே] அளவுடையையாய் பவ்யமான நெஞ்சே என்னுதல், சுழன்றுவருகிற பேதை நெஞ்சே யென்னுதல். [வினையோ மொன்றுமளவும்விடல்] ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநம் அங்கே அவரைக் கிட்டி அடிமைசெய்கையாயிருக்க, பிரிகைக்கு சடான பாபத்தைப் பண்ணின நாம் அவரோடே சேருமளவும் நீ அவரை விடாதே யொழியவேணும்.

அளவியன்றவேழுலகத்தவர் பெருமான்கண்ணனை*
வளவயல்சூழ்வண்குருகூர்ச் சடகோபன்வாய்ந்துரைத்த*
அளவியன்றவந்தாதி ஆயிரத்துளிப்பத்தின்*
வளவுரையால்பெறலாகும் வானேங்குபெருவளமே. (11)

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்றார் திருநாட்டில் முக்தப்ராப்யமான நிரதிசய ஸம்பத்தைப் பெறுவ ரென்கிறார்.

[அளவியன்ற என்று தொடங்கி] - அபரிச்சேத்யமஹிமனும் ஸர்வலோகேச்வரனும் ஆச்ரிதபவ்யனுமிருந்துள்ள எம்பெருமானை, ஏழுலகத்தவர் பெருமா னென்று - தம்மையும்அகப்பட ரக்ஷிக்கையிலே உத்யுக்தனானென்று ப்ரீதராய்ச் சொல்லுகிறார். [வளவயலென்று தொடங்கி] - வளவிதான வயல் சூழ்ந்து நிரதிசயபோக்யமான குருகூர்ச் சடகோபன் ஸ்நேஹித்து உரைத்த அபரிச்சேத்யமாய் அந்தாதியான ஆயிரத்துள் இப்பத்தினுடைய வளவிதான உரையாலே.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார், பரமபதத்தில் முக்தப்ராப்யமான மஹாஸம்பத்தைப் பெறுவ ரென்கிறார்.

[அளவியன்றவேழுலகத்தவர் பெருமான்] - "ததோ தத்ருசாாயாந்தம் விகாஸிமுகபங்கஜம்" என்கிறபடியே தம்இழவுதீர வந்து தோற்றினபடியை அருளிச்செய்கிறார். [அளவியன்ற] - அபரிச்சேத்ய மஹிமாவாகையாலே இவ்வளவிலே வந்து முகம் காட்டுகைக்கீடான ஜ்ஞாநாதிகுணபூர்ண னென்கை. [ஏழுலகத்தவர்பெருமான்] - நாராயணத்வம் விகலமாகாதபடி ஸர்வேச்வரனானான். ஏழுலகத்தவரென்று தம்மையுங் கூட்டிக்கொள்ளுகிறார். [கண்ணனை] - 'இவ்வளவில் முகங்காட்டிற்றிலன்' என்கிற குறை தீருகையாலே ஆச்ரிதஸுலபனுமானான். "பத்துடையடியவ"ரில் க்ருஷ்ணாவதாரத்திலே அநுபவிக்கப் பாரித்து, அது கிடையாமையாலே தூது விட்டாராகையாலே இங்கு முகங்காட்டினான் க்ருஷ்ண னென்னவுமாம். [வளவயல்சூழ் வண்குருகூர்] - வளவிதான வயல் சூழ்ந்து நிரதிசயபோக்யமான ஊர்; இவர் உருவினபோது, "அபிவ்ருக்ஷா: பரிம்லாநா:" என்கிறபடியே உருவின ஊர் இவர் தரித்தவாறே, "அகாலபலிநோ வ்ருக்ஷா:" என்கிறபடியே தளிரும் முறியு மானபடி. [வாய்ந்துரைத்த]-கிட்டியுரைத்த. அதாகிறது-மாநஸமான கிட்டுதலாய், ப்ரேமார்த்ரசித்தராகை. [அளவியன்றவந்தாதியாயிரம்] - அபரிச்சேத்யனானவனையும் தனக்குள்ளே ஆக்கவற்றாய் அந்தாதியான ஆயிரம். [இப்பத்தின் வளவுரையால் பெறலாகும்] - வளவுரை - நற்சொல்லு. பாலைக்குடிக்க நோய் போமாபோலே, இத்திருவாய்மொழியின் இனிய சொல்லாலே பெறலாம். [வானேங்குபெருவளமே] - வானென்று - பரமபதமாய், பரமபதத்திலே விஸ்த்ருதமாய் நிரதிசயமான ஸம்பத்தைப் பெறுவர்கள். பிதா க்ருஷிபண்ணிவைத்தால் புத்ரனுக்கு பலத்திலே அந்வயமாமாபோலே, இப்பத்தையும் கற்றவர்களுக்கு, இவர் தூதுவிட்டுப் பட்ட க்லேசம் படவேண்டா, இவர்பேற்றைக்கொடுக்கும் இப்பத்து.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழியில் சப்தமாத்ரத்தை அப்யஸிக்கவே யமையும் திருநாட்டைப் பெறுகைக்கு என்கிறார்.

[அளவியன்ற] வியந்த என்கிற இது 'வியன்ற' என்று கிடக்கிறது. தவ்வுக்கு றவ்வாய், வியத்தல் கடத்தலாய், அளவைக் கடந்திருக்கு மென்றபடி; அபரிச்சேத்யமஹிமனானகை.

இத்தால் இத்தசையிலே முகங்காட்டுகைக்கீடான ஜ்ஞாநாதி குண பூர்ணனென்கை. [ஏழுலகத்தவர் பெருமான்] நாராயணத்வம் விகலமாகாதபடி ஸர்வேச்வரனானவன். ஏழுலகத்தவ ரென்னவே, தாமும் அதிலே அந்தர்ப்பூதரிறே. [கண்ணனை] இவ்வளவிலே வந்து முகங் காட்டிற்றில னென்கிற குற்றந் தீர வந்து முகங்காட்டுகையாலே ஆச்ரிதஸௌலப்யனானவன். 'பத்துடையடியவ'ரில் க்ருஷ்ணவதாரத்திலே அநுபவிக்கப் பாரித்து, அது கிடையாமையாலே தூதுவிட்டாராகையாலே இங்கு முகங்காட்டினான் க்ருஷ்ண னென்னவுமாம். இத்தால் அவனுடைய மேன்மையும் ஸௌலப்யமும் நிலைநின்றது, இவர்க்கு முகங் காட்டினபின்பாயிற் றென்றபடி. [வளவயல்] *அகாலபலிநோ வ்ருக்ஷா:* என்கிறபடியே நிருகரியும் தளிரும் முறியு மாயிற்று. [வாய்ந்துரைத்த] வாய்கை கிட்டுகை. அதாவது பாவபந்தத்தை யுடையராகை; நெஞ்சு பிணிப்புண்டு சொன்னதாயிருக்கை. [அளவியன்றவந்தாதி] அபரிச்சேத்யவஸ்து வுக்கு வாசகமாகையாலே தானும் அபரிச்சிந்நமாய், ஒருவராலும் சவிப்பிக்கவொண்ணாதா யிருக்கிற ஆயிரத்துள் இப்பத்தினுடைய நன்றான உரையாலே- [வானேங்கு பெருவளம் பெறலாகும்] பால்குடிக்க நோய் தீருமாபோலே இத் திருவாய்மொழியில் இனிய சொல்லாலே பெறலாம். ஸ்வயம்ப்ரயோஜநமான இத்தாலே ஸம்ஸாரத்தில் ஸங்குசிதமான நிலை போய், பரமபதத்திலே போய், ஸ்வஸ்வரூபத்தைப் பெற்று விஸ்த்ருதனாகையாகிற நிரவதிகஸம்பத் தைப் பெறலாம்.

முதற்பாட்டில், ஒரு நாரையைத் தூது விட்டாள்: இரண்டாம் பாட்டில், அங்குப் போனால் சொல்லும் பாசுரத்தைச் சில குயில்களுக்குச் சொன்னாள்: மூன்றாம்பாட்டில், நான் பண்ணின பாபமேயோ மாளாததென்று சொல்லுங்கோளென்று சில அன்னங்களை இரந்தாள்; நாலாம்பாட்டில், சிலமகன்றில்களைப் பார்த்து, என்தசையை அங்கே சென்று சொல்ல வல்லிகளோ? மாட்டிகளோ? என்றாள்; அஞ்சாம் பாட்டில், சில குருகுகளைப் பார்த்து, தன்னுடைய நாராயணத்வம் ஒறுவாய்ப் போகாமே நோக்கிக்கொள்ளச் சொல்லுங்கோ ளென்றாள்; ஆறாம்பாட்டில், ஒரு வண்டைக் குறித்து, தம்முடைய நாராயணத்வத்துக்கு ஒரு ஹாநி வாராமே எங்கள் ஸத்தையுங் கிடக்கும்படி இத்தெருவே எழுந்தருளச்சொல் என்றாள்; ஏழாம்பாட்டில், ஒரு கிளியைக் குறித்து, இத்தலையில் அபராதத்தையே பார்க்குமத்தனையோ? தம்முடைய அபராதஸஹத்வத்தையும் ஒருகால் பார்க்கச் சொல் என்றாள்; எட்டாம்பாட்டில், தான் உருவினவாறே முன்கையிலிருந்த பூவையும் உருவ, நானோ முடியாநின்றேன், நீ உனக்கு ரக்ஷகரைத் தேடிக்கொள் என்றாள்; ஒன்பதாம் பாட்டில், ஒரு வாடையைக் குறித்து, என் தசையை அங்கேசென்று அறிவித்தால், அவன் 'நமக்கு அவள் வேண்டா' என்றானாகில் என்னை வந்து முடிக்கவேணுமென்று இரந்தாள்; பத்தாம்பாட்டில், தன்னெஞ்சைக் குறித்து நம் கார்யம் ஓரறுதி பிறக்குமளவும் நீ அவனை விடாதேகொள் என்று போகவிட்டாள்; நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸித்தார்க்கு பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

முதற்பாட்டில், ஆசார்யனுடைய ஜ்ஞாந வைபவத்தை அருளிச்செய்தார்: இரண்டாம் பாட்டில், மதுரபாஷியா யிருக்கு மென்றார்; மூன்றாம்பாட்டில், ஸாராஸார விவேகஜ்ஞ னென்றார்: நாலாம்பாட்டில், விக்ரஹஸௌந்தர்யத்தை அநுஸந்தித்தார்: அஞ்சாம்பாட்டில், நினைத்தது கிட்டுமளவும் சவியாத சுத்தஸ்வபாவ னென்றார்; ஆறாம்பாட்டில், பகவதேகபோகனு யிருக்கும் ரூபவானுமாய் க்ருபாவானுமாய் கம்பீர ஸ்வபாவனுமா யிருக்கு மென்றார், மதுகரமிறே: ஏழாம்பாட்டில், தான் ஸர்வஜ்ஞனாகிலும் ஆசார்யர்கள் பக்கல் கேட்ட வார்த்தையல்லது அருளிச்செய்யா னென்று, அவனுடைய ஆப்தியை அநுஸந்தித்தார்; எட்டாம்பாட்டில், ஆசார்யனுடைய தேஹயாத்ரையே இவனுக்கு ஆத்மயாத்ரை என்றார்; ஒன்பதாம்பாட்டில், ஆசார்யஸம்பந்தமாத்ரமே ஸத்தா தாரகம், இதரஸ்பர்சம் ஸத்தாபாதக மென்கிறார்; பத்தாம்பாட்டில், ஆக இப்படி ஜ்ஞாநவானுமாய், மதுரபாஷியுமாய், ஸாராஸார

விவேகஜ்ஞனுமாய், தர்சநீயனுமாய், சுத்தஸ்வபாவனுமாய், க்ருபாகாம்பீர்யங்களையுமுடையனாய், சிரோபாஸிதஸத்வ்ருத்தஸேவ்யனுமாய், ஸச்சிஷ்யனாகையாலே ஏவம் பூதனான ஆசார்யனுடைய தேஹயாத்ரையே தனக்கு ஆத்மயாத்ரையாய், இதரஸ்பர்சமும் தனக்கு பாதகமாய், இப்படி ஸதாசார்யஸேவை பண்ணுகையாலே பகவத்கைங்கர்யத்திலே ப்ரவணமாய், "பின்னிடையேனல்லேன்" என்று நீங்கி ஓர்கோலநீல நன்னெடுங்குன்றம் வருவதொப்பானுண்மலர்ப்பாதமடைந்தது தந்திருவுள்ளமென்று தலைக்கட்டினர்.

ஆழ்வார் திருவடிகளே சரணம். எம்பெருமானர் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

ஐந்தாந்திருவாய்மொழி—வளவேழுலகு : ப்ரவேசம்.

ஒ.—அஞ்சாந்திருவாய்மொழியில், தூதப்ரேஷண வ்யாஜத்தாலே அபராதஸஹத்வத்தை அறிவித்த ஸமநந்தரம் எம்பெருமான் வந்து ஸம்ச்லேஷோந்முகனானவாறே, அவனுடைய வைலக்ஷண்யத்தையும் தம்முடைய நிகர்ஷத்தையும் அநுஸந்தித்து, 'அம்ருதத்தை விஷத்தாலே தூஷிக்குமாபோலே விலக்ஷணர்க்கு போக்யனான எம்பெருமானை, ஸம்ஸாரியான நான் தூஷிக்கை சடன்று' என்று பார்த்தருளி, ஆழ்வார், 'நான் ஸம்ச்லேஷித்து அவனுக்கு அவத்யத்தை விளைவித்து உஜ்ஜீவிப்பதிற்காட்டிலும் விச்லேஷித்து முடிந்தேனாகிலும் முடிய அமையும்' என்று பார்த்தருளி, பெருமாளுக்கும் தேவதூதனுக்கும் மந்த்ரம் ப்ரவ்ருத்தமான தசையிலே, 'துர்வாஸா பெருமாளை சபிக்கும்' என்னும் பயத்தாலே அவனுடைய ஆகமநத்தை விண்ணப்பஞ்செய்து, பெருமாளுடைய ப்ரதிஜ்ஞாநுகுணமாகத் தம்முடைய வ்யஸநம் பாராதே இளையபெருமாள் விடைகொண்டாற்போலே, தம்முடைய விநாசத்தையே அங்கீகரித்து, அவனை ஸம்ச்லேஷிக்கையில் ஆசையற்று, 'பண்டு அவரோடு பரிமாறின பரிமாற்றமும் தப்பச்செய்தோம்' என்று இவர் அகலப்புக, இவரோட்டை ஸம்ச்லேஷம் தனக்கு அவத்யாவஹமன்றிக்கே ஸௌசில்யவர்த்தகமாயிருக்கிற படியைக் காட்டியருள, இவர் தன்னோடே ஸம்ச்லேஷிக்கையிலே துஃகேந இசைந்தருளி, மீளவும் தம்படியை ஆராய்ந்தும் எம்பெருமான்படியைப் பார்த்தும், 'என்னுடைய ஸ்பர்சத்தாலே வரும் ஸௌசில்யம் எம்பெருமானுக்கு வேண்டா' என்று அகல உத்யோகிக்க, யுத்தேப்ரவ்ருத்தனாய் வைத்துக் கச்மலாவிஷ்டனான அர்ஜுநனை தத்த்வோபதேசத்தாலே யுத்தத்திலே மூட்டினாற்போலே, "மித்ரபாவேந ஸம்ப்ராப்தம்" இத்யாதி ப்ரக்ரியையாலே தன்ப்ரக்ருதியைக் காட்டி மீளவும் சேர்த்துக்கொண்டருளினான் என்கிறார்.

இ.—அஞ்சாந்திருவாய்மொழியில், தூதப்ரேஷண வ்யாஜத்தாலே அபராதஸஹத்வத்தை அறிவித்த ஸமநந்தரம் வந்து ஸம்ச்லேஷோந்முகனாக, ஸூரிபோக்யமான அவன்வைலக்ஷண்யத்தையும் நித்யஸம்ஸாரியான தம்முடைய நிகர்ஷத்தையும் பார்த்து, 'அம்ருதத்தை விஷத்தாலே தூஷிக்குமாபோலே நாம் ஸம்ச்லேஷித்து அவத்யத்தை விளைப்பதிற்காட்டில் விச்லேஷித்து முடிகை நன்று' என்று பார்த்து, பெருமாளுக்கும் தேவதூதனுக்கும் மந்த்ரம் ப்ரவ்ருத்தமான தசையிலே 'துர்வாஸா பெருமாளை சபிக்கும்' என்னும் பயத்தாலே அவன் வரவை இளையபெருமாள் சென்று விண்ணப்பஞ்செய்து "யதிப்ரீதிர் மஹாராஜ யத்யநுக்ராஹ்யதாமயி-ஜஹிமாம் நிர்விசங்கஸ்த்வம் ப்ரதிஜ்ஞாமநுபாலய" என்று அவருடைய ப்ரதிஜ்ஞாநுகுணமாகத் தம்மைப் பாராதே இளையபெருமாள் விடைகொண்டாற்போலேயும், "நகல்வத்யைவ ஸௌமித்ரே" என்ற பிராட்டியைப்போலேயும் இவர் அகலப்புக, அவனும் 'உம்மோட்டை ஸம்ச்லேஷம் நமக்கு அவத்யாவஹமன்று; ஸௌசீல்யவர்த்தகம்' என்றபின்பும், 'என்னுடைய ஸம்ச்லேஷத்தாலே அங்குத்தைக்கு வரும் ஸௌசீல்யமும் வேண்டா' என்று இவர் அகல "மித்ரபாவேநஸம்ப்ராப்தம்" என்கிற

படியே தன் ப்ரக்ருதியைக் காட்டி, 'நீர் ஸம்ச்லேஷியாதவன்று, நம்முடைய ஸத்தையே இல்லை' என்று யுத்தாந்நிவ்ருத்தனான அர்ஜ்ஜுநனை ''கரிஷ்யே வசநம் தவ'' என்னப்பண்ணினாற்போலே தன்னோடே சேர்த்துக்கொண்டா னென்கிறார்.

௬௫.—ஸர்வேச்வரன் ஸர்வஸ்மாத்பரனாகையாலே அவனை யாச்ரயிப்பார்க்கு ஒரு குறையில்லை யென்றார்; அந்த ஆச்ரயணந்தான் புருஷோத்தமனை ஆச்ரயிக்கிறதாகையாலே பலத்தோடே வ்யாப்தமாயல்லது இராதென்றார்; பஜிப்பார்க்காகத் தான் அவதரித்து ஸுலபனாகையாலே பஜிக்கத்தட்டில்லை யென்றார்; ஸுலபனானவன்தான் அபராதஸஹனாகையாலே பலத்தோடே வ்யாப்தமாயல்லது இராதென்றார்; அயோக்யதாநுஸந்தானம் பண்ணி அகலுவாரையும் தன்செல்லாமையைக் காட்டிப் பொருந்தவிட்டுக்கொள்ளும் சீலவா னென்கிறார் இதில். கிழ்க்கலங்கித் தூதுவிட்ட இடம் ப்ரேமகார்யம், இங்கு அகலப்பார்க்கிற இடம் ஜ்ஞாநகார்யம்; ''மயர்வற மதிநலமருளினன்'' என்று பக்திரூபாபந்நஜ்ஞாநமிறே இவர்தாம் பெற்றது. தூதப்ரேஷணவ்யாஜத்தாலே தம்முடைய ஆற்றாமையை அறிவித்த அநந்தரம், 'இவரை இங்ஙனே நோவுபட விட்டோமாகாதே' என்று பிற்பாட்டுக்கு நொந்து, ஆனைக்கு உதவ வந்து தோற்றினாற்போலே அரைகுலையத் தலைகுலைய வந்து தோற்றினான்; அவனுடைய வைலக்ஷண்யத்தையும், தம்முடைய ஸ்வரூபத்தையும் கண்டார்; 'தார்மிகன் வைத்த தண்ணீர்ப்பந்தலை அழிப்பாரைப்போலே நித்யஸூரிகளுக்கு அநுபாவ்யமான வஸ்துவை நாம் கிட்டி தூஷிக்கப் பார்ப்போமல்லோம், அகலுமித்தனை' என்று பார்த்தார். அகன்றால் ஜீவிக்கவல்லரோ? என்னில், முடியுமித்தனையே; சேஷிக்கு அதிசயத்தை விளைக்கத் தேடுமவர்கள் தந்தாம் விநாசம் பாரார்களிறே; பெருமாளுக்கும் தேவதூதனுக்கும் மந்த்ரம் ப்ரவ்ருத்தமான ஸமயத்திலே, துர்வாஸா, 'என்னை உள்ளே புகவிடவேணும்' என்ன, 'இவனைத் தகைந்து பெருமாளுக்கு அவத்யத்தை விளைப்பதில் நாம் அகன்று முடிய அமையும்' என்று பார்த்து, அவனைப் புகவிட்டு, *யதி ப்ரீதிர்மஹாராஜ யத்யநுக்ராஹ்யதா மயி, ஜஹி மாம் நிர்விசங்கஸ்த்வம் ப்ரதிஜ்ஞாமநுபாலய* என்று விடை கொண்டாரிறே இளையபெருமாள்; *த்யஜேயம் ராகவம் வம்சே பர்த்துர் மா பரிஹாஸ்யதி* என்று விடைகொண்டாளிறே பிராட்டி; அப்படியே இவரும். 'ஊருணியிலே கள்ளியை வெட்டி யெறிவாரைப் போலவும், அம்ருதத்திலே நஞ்சைக் கலந்தாற்போலவும், நித்யஸூரிகளுக்கு அநுபாவ்யமான வஸ்துவை நாம் புக்கு அழிக்கையாவது என்? என்று இவர் அகலப்புக, 'இவரை யிழந்தோமாகாதே' என்று ஈச்வரன், ஆழ்வீர்! அகலப்பார்த்தீரோ?' என்ன, 'அடியேன் அகலப்பார்த்தேன்' என்ன, 'நீர் நமக்கு அவத்யம் வருமென்றன்றோ அகலப்பார்த்தது? நீர் அகலவே, இவ்விஷயம் அதிக்ருதாதிகாரமாகாதே! என்று நமக்கு ஆள்பற்றாது; இப்படி தண்ணியராக நினைத்திருக்கிற நீரொருவரும் நம்மைக் கிட்டவே, 'ஸர்வாதிகாரம்' என்று தோற்றும்; ஆனபின்பு, நீர் அகலுமதுகாணும் நமக்கு அவத்யம்; இனித்தான், நமக்கு ஆகாதாரில்லை யென்னுமிடம் பண்டே அடிபட்டுக்காணும் கிடப்பது' என்று—'நாம் குணகுண நிரூபணம் பண்ணாதே எல்லார்தலையிலும் நம் காலை வைத்தோம் கண்டீரே' என்று தான் திருவுலகளந்தருளின ஸௌலப்யத்தைக் காட்ட, 'ஆகில், கிட்டுவோம்' என்று பாரா, 'ஒரு குணதிக்யமேயோ வேண்டுவது? நம்மால் வரும் குணமும் அவனுக்கு வேண்டா' என்று அகலப்புக, 'உம்மால்வரும் குணதிக்யமேயன்றோ வேண்டாதது? உம்மால்வரும் நான்தான் வேணுமோ? வேண்டாவோ?' என்று—(நீர் அயோக்யரென்று அகலுகிறது ஸத்தாஹாநி; கிட்டுவது ஸத்தாதாரகங்காணும்; ஆனபின்பு) நீர் அயோக்யரென்று அகலுமதிலும் ஸம்ச்லேஷிக்கிறது திருவாய்ப்பாடியில் வெண்ணெயோபாதி நமக்கு தாரகங்காணும்; இனி நீர் அகலில் திருவாய்ப்பாடியில் வெண்ணெய் விலக்கினார் புக்க லோகம் புகுவீர்கிடீர்; நீர் அகலுமது நமக்கு ஸத்தாஹாநி' என்று, *மித்ரபாவேந ஸம்ப்ராப்தம்* என்று அவன் பக்கலுள்ளது போட்கனுகவுமாம்; நாம் அவனை விடில் உளோமாகோமென்று சேர்த்துக்கொண்டாற்போலவும், 'பந்துவதம் பண்ணி ஜீவிக்கப் பார்க்கிறிலேன்' என்ற அர்ஜுநனை, *கரிஷ்யே வசநம் தவ* என்னப்பண்ணினாற்போலவும, தம்மை வருந்தி இசைவித்து ஸம்ச்லேஷோந்முகனானபடியே ஸம்ச்லேஷித்துத் தலைக்கட்டினா னென்கிறார்.

வளவேழுலகின்முதலாய வானோரிறையை* அருவினையேன்
களவேழ்வெண்ணெய்தொடுவுண்ட கள்வா! என்பன் பின்னையும்*
தளவேழ்முறுவல்பின்னைக்காய் வல்லானாயர்தலைவனாய்*
இளவேறேழுந்தழுவிய எந்தாயென்பன் நினைந்துநைந்தே. (1)

ஒ.—முதற்பாட்டில், அத்யந்த நிக்ருஷ்டனான நான், அத்யந்த விலக்ஷணனான எம்பெருமானை என்னுடைய மநோவாக்காயங்களாலே தூஷித்தே னென்று சோகிக்கிறார்.

[வளவேழுலகின்முதலாய வானோரிறையை] - பகவத்போகத்துக்கிடான வைலக்ஷண்யத்தை யுடையராய், ஏழுலகுக்கும் முதலாயுள்ள அபர்வறுமமரர்களுக்கு நாயகனை; வளவிதான ஏழுலகு என்னுமாம். தொடங்கின வாக்யம் பூரிப்பதற்குமுன்பே தம்முடைய மௌர்க்க்யத்தை அநுஸந்தித்து "அருவினையேன்" என்கிறார். அநிஷ்டமான பகவத்ஸம்ச்லேஷத்தை விளைக்கையாலே, பக்தியை அருவினை யென்கிறது. [களவேழென்று தொடங்கி] - 'களவு ப்ரஸித்தமாம்படி வெண்ணெய்களவுகண்ட கள்வா!' என்றுயசோதைப்பிராட்டி அவனைக் களவிலே கண்டுபிடித்துச் சொல்லும் சொல்லைச் சொன்னேன். [பின்னையும் என்று தொடங்கி] - அதுக்குமேலே முல்லையரும்புபோலே யிருக்கிற முறுவலை யுடைய நப்பின்னைப்பிராட்டியோடே ஸம்ச்லேஷிக்கைக்காக வலியையுடைய இடையருக்கு ப்ரதாநனாய் வந்து பிறந்து எருதேழடர்த்தபடியை நினைத்து சிதிலனாய் அது உள்ளடங்காமையாலே 'இளவேறேழுந் தழுவின இச்சேஷ்டிதத்தாலே என்னை அடிமை கொண்டவனே!' என்பதும் செய்தேன்.

இ.—முதற்பாட்டில், அத்யந்த விலக்ஷணனான அவனை அத்யந்த நிக்ருஷ்டனான நான் மநோவாக்காயங்களாலே தூஷித்தே னென்கிறார்.

[வளவேழுலகின் முதலாய வானோரிறையை] - வளவியனாய் ஏழுலகுக்கும் காரணபூதனாய் நித்ய ஸூரிகளுக்கு நிர்வாஹகனாயிருந்துள்ளவனை. வளவியனாகையாவது-ஸ்வரூபாதிகளால் வந்த வைலக்ஷண்யத்தை யுடையனாகை. வளவியதாயிருந்துள்ள எழுலகுக்கு என்னவுமாம். வளவியராய் ஏழுலகுக்கும் காரண பூதராயிருந்துள்ள நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனென்னவுமாம். நித்யஸூரிகளுக்கும் காரணத்வ முண்டோ? என்னில், - அஸ்த்ரபூஷணாத்யாயத்தின்படியே, ஸ்ரீகௌஸ்துபத்தாலே ஜீவஸமஷ்டியை தரிக்கு மென்றும், ஸ்ரீவத்ஸத்தாலே ப்ரக்ருதி ப்ராக்ருதங்களை தரிக்கு மென்றும் சொல்லுகிறது. இவர்கள் வளவியராகையாவது - பகவதநுபவத்தில் குசலராகை. [அருவினையேன்] வாக்யம் பூரிப்பதற்கு முன்பே தம்முடைய மௌர்க்க்யத்தைப் பார்த்து 'அருவினையேன்' என்கிறார். இவர் இப்போது அருவினையே னென்கிறது - பகவத்ப்ராவண்யத்தை இப்போது பகவத்விஷயத்தைக் கிட்டுகை அநிஷ்டமாகையாலே அவ்விஷயத்தை மேல்விழப்பண்ணுமது பாபமாகக்கடவதிறே. அநிஷ்டாவஹமிறே பாபம். [களவேழ் வெண்ணெய் தொடுவுண்ட கள்வா என்பன்] - களவிலே வேழ்க்கையையுடையனாய் - ஆசைப்பாட்டை யுடையனாய்க்கொண்டு, வெண்ணெய்களவுகண்ட. "களவெழு" என்கிற இத்தை "களவேழ்" என்று நீட்டிற்றாய், களவு ப்ரஸித்தமாம்படி யென்னவுமாம். ப்ரஸித்தமாகையாவது - சிசுபாலாதிகள் கோஷ்டியிலும் ப்ரஸித்தமாம்படி யிருக்கை. [கள்வா என்பன்] - ஸர்வேச்வரனைப் பிள்ளையாகப் பெறுகைக்கீடான ஸௌபாக்யத்தை யுடையளான யசோதைப்பிராட்டி, வெண்ணெய் களவு காண்கிற ஸமயத்திலே கண்டு ப்ரேமாதிசயத்தாலே அவள் சொன்ன வார்த்தையைச் சொன்னேன். "தொல்லையின்பத்திறுதிகண்டாளே" என்று நித்யஸூரிகளுக்கும் மேலாகப் பேசக்கடவதிறே; அவர்கள் தாங்கள் தொழ இருக்கும் மேன்மையிறே கண்டது; அவன்தானே தொழும் நீர்மை கண்டறியார்களிறே. 'என்பன்' என்கிற இது - காலத்ரய வர்த்தியானாலும் இப்போது பூதார்த்தத்திலேயாய், என்றே னென்றபடி. [பின்னையும்] - அதுக்குமேலே பிராட்டிமார் பாசுரத்தையுஞ் சொன்னே னென்கிறார். [தளவேழ்முறுவல்பின்னைக்காய்] - முல்லையரும்பு போலே யிருக்கிற முறுவலையுடைய நப்பின்னைப் பிராட்டிக்காய். எழுகை - தோற்கை. தளவு - முல்லை. எழுகையாகிறது-முறுவலைக் கண்டால் முல்லையரும்பு ஸ்ம்ருதிவிஷயமாகை. [பின்னைக்காய்]-"த்வாஸ்மி" என்று முறுவலுக்குத் தோற்றபடி. [வல்லானாயர்தலைவனாய்] - "க்ருஷ்ணாச்ரயா:" என்கிறபடியே வலியையுடையரான இடையருக்குத் தலைவனாய். அதவா, "துல்யசீலவயோவ்ருத்தாம்" என்று இரண்டுதலையும்

குறைவற்றிருக்க, எருதுகளை முன்னிட்ட வன்னெஞ்ச ரென்னவுமாம். [தலைவனாய்] - நித்யஸூரிகளுக்கும் அவ்வருகாயிருக்குமாபோலேயாயிற்று இடையர்க்கும் அவ்வருகா யிருக்கும்படி. அபிஜாதனுக்கல்லது பெண்கொடார்களிறே. [இளவேறு]-பருவத்தின் இளமையாலே ம்ருத்யுவைப்போலேயிருக்கை. [ஏழும்]-நப்பின்னைப் பிராட்டியை அணைக்கைக்கு உள்ள அபிநிவேசத்தாலே, ஒரொன்றாகவன்றிக்கே ஒருகாலே நெரிக்கை. [தழுவிய] - அவற்றினுடைய நிரஸநத்துக்குப் பலம் - அவளை அணைக்கையாகையாலே, இதுவும் போகரூபமா யிருந்தபடி. [எந்தாயென்பன்] - அவள் இச்செயலுக்குத் தோற்று 'என்னையன்' என்று சொல்லுமத்தையுஞ் சொன்னேன். [நினைந்து] - அஹ்ருதயமாகச் சொல்லிவிட்டேனோ? நெஞ்சாலும் தூஷித்தேன். [நைந்தே] - மாநஸமாய், பிறர் அறியாதபடி யிருந்ததோ? 'இவ்விஷயத்தே இவன் சிதிலனானான்' என்று நாடு அறியும்படி காயிகமாகவும் தூஷித்தேன். அவதாரத்தில் அணைய ஆசைப்படுவார் அவள்பாசுரத்தாலே யிறே சொல்லுவது. முதல் திருவாய்மொழியிலே, நித்யஸூரிகளுக்கு அநுபாவ்யமான மேன்மையை தூஷித்தேன்; பத்துடையடியவரிலே, யசோதைப்பிராட்டிக்கு அநுபாவ்யமான நீர்மையை தூஷித்தேன்; அஞ்சிறையமடநாரையிலே, பிராட்டிமார் பாசுரத்தைச் சொன்னேன். நினைந்து - மாநஸம். நைந்து - காயிகம். என்பன் - வாசிகம். "நினைந்துநைந்து, வளவேழுலகின் முதலாய வானோ ரிறையைக் களவேழ் வெண்ணெய் தொடுவுண்ட கள்வா என்பன்; பின்னையும், தளவேழ் முறுவல் பின்னைக்காய் வல்லானாயர்தலைவனாய் இளவேறேழும் தழுவிய எந்தா யென்பன் அருவினையேன்" என்று அந்வயம்.

௩௫.—*முதற்பாட்டு. நித்யஸூரிகளுக்கு அநுபாவ்யனானவனை என்னுடைய மநோவாக்காயங்களாலே தூஷித்தேனென்கிறார்.*

*[வளவேழுலகு இத்யாதி] வளவிதான ஏழுலகென்று லீலாவிபூதியாய், 'வானோரிறை' என்கையாலே நித்யவிபூதியைச் சொல்லிற்றாய், இப்படி உபயவிபூதிநாதனைக் கிடீர்! நான் அறிக்கப் பார்த்ததென்கிறார். வளவியனாய், ஏழுலகுக்கும் முதலாய், வானோரிறையா யிருக்குமவனையென்று அவன் தனக்கே விசேஷண மாகவுமாம்; வளவியராய், ஏழுலகுக்கும் முதலா யிருக்கிற வானோரென்று நித்யஸூரிகளுக்கு விசேஷண மாகவுமாம்; இவர்கள் வளவியராகையாவது பகவதநுபவத்தில் குசலராகை. *அஸ்த்ர பூஷணாத்யாயத்திலே, ஸ்ரீகௌஸ்துபத்தாலே ஜீவஸமஷ்டியை தரிக்குமென்றும், ஸ்ரீவத்ஸத்தாலே ப்ரக்ருதி ப்ராக்ருதங்களை தரிக்குமென்றும் சொல்லாநின்றதிறே. [வானோரிறையை] தேசிகராகையாலே துறையறிந்தே இழிவர்கள்; 'ஸ்வாமி' என்றேயாயிற்று இவர்களுக்கு ப்ரதிபத்தி, "வானோரிறையைக் கள்வாவென்பன்" என்னவாயிற்று நினைத்தது; தொடங்கின வாக்யம் பூரிப்பதற்கு முன்னே தம்மையநுஸந்தித்து 'அருவினையேன்' என்கிறார். தார்மிகனா யிருப்பானொருவன் ரஜஸ்தமஸ்ஸுக்களாலே அபிபூதனாய், க்ரோதத்திலே அக்ஷிப்ரக்ஷேபத்தைப் பண்ணி, ஸத்த்வம் தலையெடுத்தவாறே அநுதபிக்குமாபோலே அநுதபிக்கிறார். [அருவினையேன்] இப்போது 'அருவினையேன்' என்கிறது - 'கள்வா' என்கைக்கு அடியான ப்ரேமத்தை. அத்தை 'அருவினை' என்கிறார் - அநிஷ்டாவஹம் பாபம் என்றிருக்குமவராகையாலே. [களவேழ் இத்யாதி] களவிலே வேழ்க்கையுடையனாய், அபிநிவிஷ்டனா யென்னவுமாம்; அன்றிக்கே, களவு எழும்படி - களவு ப்ரஸித்தமாம்படி என்னவுமாம். களவு ப்ரஸித்தமாம்படி, வெண்ணெயைக் களவுகண்டு அமுது செய்த க்ருத்ரிமனே! என்பன்.' இத்தால், பரிவுடைய யசோதைப்பிராட்டி சொல்லும் பாசுரத்தைக் கிடீர்! சொல்லிற்றென்கை. 'என்பன்' என்றது சொன்னேனென்றபடி. [பின்னையும்] அதுக்குமேலே. [தளவு இத்யாதி] பரிவுடைய யசோதைப் பிராட்டிக்கு மறைத்தவற்றையும் வெளியிடும்படி அபிமதையான நப்பின்னைப் பிராட்டி பாசுரத்தையும் சொன்னேன். [தளவேழ் முறுவல்] நப்பின்னைப் பிராட்டியுடைய தந்தபங்க்தியைக் கண்டவாறே முல்லையரும்பு ஸ்ம்ருதி விஷயமாகை நெஞ்சிலே; கவயத்தைக் கண்டவாறே க்ரோதத்தில் கோ ஸ்ம்ருதிவிஷயமாமாபோலே. (தளவெழும்படியான முறுவலென்னவுமாம். அதாவது, எழுகை போகையாய், தோற்றுப்போம்படியான முறுவல்.) "பல்லுக்குத் தோற்றபனிமுல்லை" என்னக்கடவதிறே. [பின்னைக்காய்] நப்பின்னைப்பிராட்டியுடைய ஸ்மிதத்திலே தோற்று அவனுக்குத் தன்னை இஷ்டவிநியோகார்ஹமாக்கினான். [வல்லானாயர் தலைவனாய்] *க்ருஷ்ணாச்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ண*

நாதாச்ச பாண்டவா:* என்னுமாபோலே, அவனைப்பற்றி நாட்டை யழித்துத் திரியும் மிடுக்கைப் பற்ற, 'வல்லாளாயர்' என்னவுமாம்; அன்றிக்கே, ஆளாயர் வலிய தலைவனாய்: அதாவது உடம்புஇருக்கத் தலைகுளித்தும், தலையிருக்க உடம்பு குளித்துமிறே திரிவது: கார்த்திகை புதியதுக்குக் குளித்தார்களாகில் இவன் அதுவும் செய்யாதே இடைத்தனத்திலே ஊன்றி நிற்குப்படியைச் சொல்லுதல். இப்படி யிருக்கிலல்லது பெண்கொடார்களிறே இடையர். *குலேந ஸத்ருஸி* என்னக்கடவதிறே. *துல்யஸீலவயோவ்ருத்தாம்* என்று இரண்டுதலையும் குறைவற்றிருக்க, எருதுகளை முன்னிட்ட வன்னெஞ்ச ரென்னவுமாம். [இளவேறு] ம்ருத்யுஸமமா யிருந்துள்ள ருஷபங்க ளேழையும் ஊட்டியாக ஒருகாலே தழுவி னான். அநந்தரம் அவளை லபிக்கையாலே அவள் முலையிலே யணைந்தாற்போலே யிருக்கையாலே தழுவி யென்கிறது. [எந்தா யென்பன்] எருதேழடர்த்த செயலுக்குத் தோற்று நப்பின்னைப் பிராட்டி சொல்லும் பாசுரத்தைச் சொன்னேன். உக்திமாத்ரமேயோ? [நினைந்து] நெஞ்சாலும் தூஷித்தேன். அவ்வளவோ? [நைந்தே] பிறர் அறியும்படி சிதிலனாய், காயிகத்தாலும் தூஷித் தேன். வளவேழுலகு இத்யாதிக்கு 'அயர்வறுமமரர்களதிபதி' என்றேன், 'எத்திறம்' என் றேன், பிராட்டிமார் தசையை ப்ராப்தனாய்த் தூது விட்டேன் என்று அவற்றுக்கு அநுதபிக் கிறார். நினைந்து நைந்து வளவேழுலகின் முதலாய வானோரிறையைக் களவேழ் வெண்ணெய் தொடுவுண்ட கள்வா வென்பன்; பின்னையும், தளவேழ் முறுவல் பின்னைக்காய் வல்லானாயர் தலைவனாய் இளவேறேழுந்தழுவிய எந்தாயென்பன்; அருவினையேன் என்று அந்வயம்.

நினைந்துநைந்துள்கரைந்துருகி இமையோர்பலரும் முனிவரும்*
புனைந்தகண்ணிநீர்சாந்தம் புகையோடேந்திவணங்கினால்*
நினைந்தவெல்லாப்பொருள்கட்கும் வித்தாய்முதலிற்சிதையாமே*
மனஞ்செய்ஞானத்துன்பெருமை மாசூணாதோமாயோனே! (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், அர்ஹனல்லே னென்கைக்கு நான் ஆர்? ப்ரேமார்த்ரசித்தரான ப்ரஹ்மருத்ராதிகளன்றோ அது சொல்ல அடுப்பது என்கிறார்.

[நினைந்து என்று தொடங்கி] - த்வத்குணஸ்மரணத்தாலே அத்யந்தம் சிதிலராய். [புனைந்த கண்ணிநீர்] - ஸாதரமாகத் தொடுத்த மாலை. [நினைந்த என்று தொடங்கி] - ஸம்ஹார ஸமயத்திலே 'புருஷார்த்தோபயோகியான கரணகளேபரங்களை இழந்து நோவுபட்டன' என்று ஸ்மரிக்கப்பட்ட ஸகல பதார்த்தங்களுக்கும் காரணமாய், ஸ்வகார்யங்களைப் பிறப்பிக்கும்போது தான் முதலழியாதபடியான ஸங்கல்பரூபஜ்ஞாநத்தையுடைய உன் பெருமை மழுங்காதோ? ஆச்சர்யமான வைலக்ஷண்யத்தை யுடையவனே!

இ.—இரண்டாம்பாட்டில், அர்ஹனல்லே னென்கைக்கு நான் ஆர்? ப்ரேமார்த்ர சித்தரான ப்ரஹ்மாதிகளன்றோ அது சொல்லப்பெறுவ ரென்கிறார்.

[நினைந்து] - முந்துற பகவத்குணங்களை ஸ்மரிப்பர்கள். [நைந்து] - அந்த ஸ்ம்ருதியாலே சாரீர மான சைதில்யம் பிறக்கும். [உள்கரைந்து] நினைக்கைக்கும் பரிகரமில்லாதபடி மநஸ் அழியும். [உருகி] - பின்னை ஓரவயவியாக்க வொண்ணாதபடி மங்கும். [இமையோர் பலரும் முனிவரும்] - ப்ரஹ்மாதிகளும் ஸநகாதிகளும். [புனைந்த கண்ணி] - இந்த சைதில்யம்-தொடுக்கிறபோதே யுண்டாகை. 'மாலை' என்ற போதே புனைந்திருக்கு மென்று தோற்றுநிற்க, விசேஷித்தது - சிதிலராய்க்கொண்டு தொடுத்தார் களென்று தோற்றுகைக்காக. [நீர்] - அர்க்க்யாதிஜலம். [சாந்தம்] - கந்தத்ரவ்யம். [புகை] - அகிற்புகை. [ஏந்தி] - ''சூட்டுநன்மாலைகள் தூயனவேந்தி'' என்னுமாபோலே ஏந்துகைதானே போகரூபமாயிருக்கை. பூர்ணனாகையாலே அவனுக்கும் இவர்களுடைய உத்யோகமே அமையும். [ஏந்திவணங்கினால்] - ஆராதந ஸமாப்தியிலே வணங்குகையன்றிக்கே இவற்றை ஸ்வீகரிக்கிற நீர்மையைக் கண்டு நிர்மமராய் விழுவர்கள். இது ஸநகாதிகள்படியன்றோ? என்னில்; உபயபாவநாநிஷ்டராகையாலே ஸத்த்வம் தலை

யெடுத்தால் ஸநகாதிகளோபாதி ப்ரஹ்மாதிகளுக்கும் இவையெல்லாம் உண்டாயிறே யிருப்பது [நினைந்த வெல்லாப் பொருள்களுக்கும்] - ஸம்ஹாரஸமயத்திலே புருஷார்த்தோபயோகியான கரணங்களை யிழந்து கிடக்கிற தயநீயதசையைக் கண்டு, 'ஐயோ!' என்று நினைப்பதொரு நினைவு உண்டு; அத்தைச் சொல்லுகிறது; "அசிதவிசேஷிதாந் ப்ரலயஸீமநிஸம்ஸரத: கரணகளேபரைர்கடயிதுந்தயமாநமநா:" [வித்தாய்] - தேவாதி ஸகல பதார்த்தங்களுக்குங் காரணமாய். [முதலில்சிதையாமே மனஞ்செய்ஞானத்து உன் பெருமை] - ஸ்வகார்யத்தைப் பிறப்பிக்கும்போது. தான் முதலழியாதபடியான மநோவ்யாபாரரூப ஸங்கல்ப ஜ்ஞாநத்தையுடைய உன்வைலக்ஷண்யம். ஆனால், ஸங்கல்பமோ ஜகத்காரணம்? ஸூக்ஷ்ம சிதசித்விசிஷ்ட ப்ரஹ்மமன்றோ? என்னில்; ஆனாலும், காரணமாம்போது ஸங்கல்பபூர்வக மாகவேணும். ஸங்கல்ப விசிஷ்டன் காரணமானாலும் "பஹுஸ்யாம்" என்கிற ஸங்கல்ப ப்ராதாந்யத்தாலே சொல்லுகிறது [மாசூணாதோ] தங்களோடு உபகரணங்களோடு வாசியற உனக்கு போகோபகரணமாம்படி யிருக்கும் நித்யஸூரிகளுடைய அநுகூல ப்ரவ்ருத்திகளை, கர்மம், அத்தால்வந்த அசித்ஸம்ஸர்க்கம், அத்தால்வந்த அஹங்காராதிகள் இவற்றையுடைய ப்ரஹ்மாதிகள் பண்ணப்புக்கால் உன்பெருமை மழுங்காதோ? [மாயோனே] - ப்ரஹ்மாதிகளையும் க்ஷுத்ரமநுஷ்யர்களுடைய ஸ்தாநத்திலே யாக்கவல்ல உன்னுடைய ஆச்சர்யமான வைலக்ஷண்யம் இருந்தபடியென்! நினைந்த எல்லாப் பொருள்களுக்கும் வித்தாய் முதலில் சிதையாமே மனஞ்செய் ஞானத்து உன்பெருமை, இமையோர்பலரும் முனிவரும் நினைந்துநைந்து உள் கரைந்துஉருகிப் புனைந்த கண்ணிநீர் சாந்தம் புகையோடு ஏந்தி வணங்கினால் மாசூணாதோ? மாயோனே!

௯௫.—இரண்டாம் பாட்டு. நெஞ்சாலே நினைத்தும், வாயாலே பேசியும், நைந்தும், தப்பச்செய்தே னென்றார் கீழ்; தப்பச்செய்தேனென்ற இடம் தப்பச்செய்தே னென்கிறார் இதில். சண்டாலன் 'ஒத்துப்போகாது' என்றுதான் சொல்லப்பெறுமோ? அப்படியே யன்றோ நான் அயோக்யனென்று அகலுகையும். ப்ரேமார்த்ரசித்தரான ப்ரஹ்மாதிகளன்றோ அதுதான் சொல்லப்பெறுவார்! 'நான் தப்பச்செய்தேன்' என்று அகலுமதில், கிட்டிநின்று பரிமாறுவது நன்றன்றோ? என்று, கீழ்நின்ற நிலையையும் நிந்தித்துக்கொண்டு அகலுகிறார்.

[நினைந்து இத்யாதி] ப்ரஹ்மாதிகள், ஸமாராதநத்துக்கு ஒருப்படும்போது, திருமாலை தொடக்கமான உபகரணங்களைச் சமைத்துக்கொண்டாயிற்று இழிவது. நாம் இவற்றைக் கொண்டு சென்றால் நம்மைக் குளிரக் கடாக்ஷிக்கக்கடவனே; *மாமக்ரூரேதி வக்ஷ்யதி* என்கிறபடியே நம்மை வினவக்கடவனே என்று இங்ஙனே மூந்துற நினைப்பார்கள்; அநந்தரம், தரித்திருக்கமாட்டாதே சிதிலாந்த:கரணராவர்கள். [உள்கரைந்து] நையுமது ஸ்தூலமென்னும்படி உள்கரைவர்கள். பின்னை ஓரவயவியாக்கி எடுக்க வொண்ணாதபடி மங்குவர்கள். இப்படி படுகிறவர்தாங்கள் ஆர்? என்றால்,—[இமையோர்பலரும் முனிவரும்] ப்ரஹ்மாதிகளும் ஸநகாதிகளும். இவர்கள் ரஜஸ்தமஸ்ஸுக்களாலே அபிபூதரானபோது பண்ணும் துர்மாநம் கனத்திருக்குமாபோலே யாயிற்று, ஸத்த்வம் தலையெடுத்தபோது பகவத்குணாநுபவம்பண்ணி சிதிலராம்படியும். இப்படி ப்ரேம ஸ்வபாவராகையாலே தொடுக்கும்போது தொடங்கி, 'அவன் இத்தைக்கண்டருளக்கடவனே, சாத்தியருளக்கடவனே' என்று ஸாதரமாகத் தொடுத்த மாலை, ஸமாராதநோந்முகனான ச்ரம மாறுகைக்கு அர்க்க்யங் கொடுக்கைக்காக உண்டாக்கின ஜலம். அநந்தரம் சாத்தியருளுவதாகச் சமைத்த சந்தநாதிகள் தூபங்கண்டருள உண்டாக்கின அகிற்புகை இவை தொடக்கமானவற்றை தரித்துக்கொண்டு வந்து, நிர்மமராய்த் திருவடிகளிலே விழுவர்கள். [ஏந்தி வணங்கினால்] அவன் இவைகொண்டு கார்யங் கொள்ளுமதிலும் அவனுக்கென்று தரிக்குமதுவே பேறா யிருக்கும் இவர்களுக்கு: "சூட்டுநன் மாலைகள் தூயனவேந்தி" என்னுமாபோலே அவன்தான் இவைகொண்டு கார்யங் கொள்ளுமதிலும், இவர்கள் தரித்துக்கொண்டு நிற்கக் காணுமதுவே பேறாக நினைத்திருக்கும்; பாவபந்தம் இரண்டுதலைக்கும் உண்டிறே. வணங்கினால் - உன் பெருமை மாசூணாதோ? என்கை. [நினைந்த இத்யாதி] மேலே, "மனஞ்செய்ஞானம்" என்று ஸங்கல்பரூப ஜ்ஞாநத்தைச் சொல்லா நிற்கச்செய்தே, "நினைந்த" என்கிற இதுக்குக் கருத்தென்? என்னில்,—தேவாதி கார்யமாய்க்கொண்டு விஸ்த்ருதமானது அடங்கலும் அழிந்து, (ஸதேவ) என்று வ்யவஹரிக்க வேண்டும்படியான அன்று, புத்ரபௌத்ராதிகளோடே ஜீவித்தவன் அவர்களை யிழந்து

தனியனாநல் தன் தனிமையை அநுஸந்தித்து வெறுக்குமாபோலவும், தேசாந்தர கதனான புத்ரனை மாதா பிதாக்கள் நினைக்குமாபோலவும் இவற்றினுடைய இழவை அநுஸந்திப்பதொரு அநுஸந்தாநமுண்டு; அத்தைச் சொல்லுகிறது. [நினைந்த எல்லாப்பொருள்களுக்கும் வித்தாய்] 'நினைத்தல்-கலந்தலும், கூடலுமாய், ஸதவஸ்த்தமாய்த் தன்னுடனே கூடிக்கிடக்கிற ஸகல பதார்த்தங்களுக்கும் காரணமாய்' என்று பிள்ளையமுதனார் நிர்வஹிப்பர்; அன்றியே, இப்படி தன் திருவுள்ளத்தாலே விஷயீகரிக்கப்பட்ட ஸகலபதார்த்தங்களுக்கும் காரணமாய். [முதலில் சிதையாமே] அவற்றை யுண்டாக்கச்செய்தே தானான தன்மையில் குறை வாராதபடியிருக்கும். ம்ருத்பிண்டம் கடசராவாதிகார்யமானவாறே விசிஷ்டாகாரம் நசிக்கும்; இங்கு அது இல்லை; நாட்டில் கார்யங்களை யுண்டாக்குவதான காரணத்தின்படியல்ல இவன்படியென்கிறது. ஆனால், பின்னை, ஸங்கல்பமோ ஜகத்காரணம்? ஸூக்ஷ்மசிதசித் விசிஷ்டப்ரஹ்மமன்றோ? என்னில்; ஆனாலும், காரணமாம்போது ஸங்கல்பபூர்வகமாகவேணும்; ஸங்கல்பவிசிஷ்டம் காரணமானாலும், *பஹுஸ்யாம்* என்கிற ஸங்கல்ப ப்ராதாந்யத்தாலே சொல்லுகிறது. இப்படியிருக்கிற ஸங்கல்பரூப ஜ்ஞாநத்தையுடைய உன்பெருமை யுண்டு உன் வைலக்ஷண்யம், அது, இவர்கள் வணங்கினால் மாசூணாதோ? 'தன் ஸங்கல்பத்தாலே ஸகல பதார்த்தங்களையும் உண்டாக்கும்படியான வைலக்ஷண்யத்தை யுடையவனுக்கு, அவனாலே ஸ்ருஜ்யரான நாம் ஸ்பர்சித்த த்ரவ்யம் அங்குத்தைக்கு அர்ஹமோ?' என்று தந்தாமுடைய அயோக்யதையை அநுஸந்தித்து, அகலுகைக்கு அதிகாரமுள்ளது அவர்களுக்கன்றோ? அதுக்குத்தான் ஆர்? [மாயோனே] ப்ரஹ்மாதிகளையும் க்ஷுத்ரமநுஷ்யஸ்த்தாநத்திலே யாக்கவல்ல உன்னுடைய ஆச்சர்யமான வைலக்ஷண்யம் இருந்தபடியென்? நினைந்த எல்லாப் பொருள்களுக்கும் வித்தாய் முதலில் சிதையாமே மனஞ்செய் ஞானத்து உன் பெருமை, இமையோர் பலரும் முனிவரும் நினைந்து கைந்து உள்கரைந்து உருகிப் புனைந்த கண்ணி நீர் சாந்தம் புகையோடேந்தி வணங்கினால் மாசூணாதோ? மாயோனே!

மாயோனிகளாய்நடைகற்ற வானோர்பலரும்முனிவரும்*
நீயோனிகளைப்படையென்று நிறைநான்முகனைப்படைத்தவன்*
சேயோனெல்லாவறிவுக்கும் திசைகளெல்லாந் திருவடியால்
தாயோன்* எல்லாவெவ்வுயிர்க்கும் தாயோன்தானோருருவனே. (3)

ஒ.—மூன்றாம்பாட்டில், இப்படி அநர்ஹனென்கைக்கும் தகேனென்று பகவத்தாஸ்யத்தினின்றும் அத்யந்தம் விப்ரக்ருஷ்டரான ஆழ்வார், தம்மை த்ரைவிக்ரமமான ஸௌசீல்ய வாத்ஸல்யாதிகளைக் காட்டியருளி மீளும்படியாக வசீகரித்தருளினானென்கிறார்.

[மாயோனிகள் என்று தொடங்கி] - மநுஷ்யாதிகளிற்காட்டில் அதிகமான யோநிகளிலே பிறந்து அதுக்கீடான மர்யாதைகள் கற்றுள்ள வானோர்பலரும் முனிவருமான யோநிகளை நீ படையென்று அதிகசக்தியான ப்ரஹ்மாவைப் படைத்தவன். [சேயோன் எல்லாவறிவுக்கும்] எத்தனையேனும் அதிசயிதஜ்ஞாநரான ப்ரஹ்மாதிகளுடைய ஜ்ஞாநத்துக்கும் கோசரமல்லாதானும். [திசைகளெல்லாம் என்று தொடங்கி] - உத்கர்ஷாபகர்ஷம் பாராதே ஸகல பதார்த்தத்தோடும் தன் திருவடிகள் ஸ்பர்சிக்கும்படி லோகங்களையெல்லாம் அளப்பதுஞ்செய்து ஜந்ம வ்ருத்தாதிகளால் நிஹீநரானாரும் அகப்பட எல்லார்க்கும் பரிவனானவன் ஒருருவனே யென்று அவன்குணத்தை அநுஸந்தித்து விஸ்மிதராகிறார்.

இ.—மூன்றாம்பாட்டில், 'இப்படி நீர் அகலுகைக்கு அடி நம்மேன்மையைப் பார்த்தாயிற்று; அவ்வோபாதி நம் நீர்மையையும் பாரீர்' என்று த்ரைவிக்ரமாபதாநத்தைக் காட்டக்கண்டு, இருந்தபடி யென்! என்று அகலுகை தவிர்ந்து கால்தாழுகிறார்.

[மாயோனிகளாய்] - விலக்ஷண ஜந்மத்தை யுடையராகை. [நடைகற்ற] - தங்கள் ஜந்மாநுகூலமான ஸ்ருஷ்ட்யாதி மர்யாதைகள் கற்றுள்ள. [வானோர் பலரும்] - தசப்ரஜாபதிகள் ஏகாதசருத்ரர்கள்

அஷ்டவஸுக்கள் முதலான 'ஸர்வதேவதைகளும், [முனிவரும்] - ருஷிகளும். [நீ யோனிகளைப்படையென்று] - வானோர் பலரும் முனிவருமான யோனிகளை நீ படையென்று, அவ்வருகுள்ளதெல்லாம் தானே ஸ்ருஷ்டித்து, 'தேவாதிகளை யெல்லாம் நீயே ஸ்ருஷ்டி' என்று. [நிறைநான்முகனைப்படைத்தவன்] - ஜ்ஞாநசக்த்யாதிகளால் பூர்ணனை ப்ரஹ்மாவைப் படைத்தவன். [சேயோன் எல்லாவறிவுக்கும்] - ஜ்ஞாநாதிகரான ப்ரஹ்மாதிகளுடைய ஜ்ஞாநத்துக்கும் கோசரமல்லாதான்; "யந்நாயம் பகவாந் ப்ரஹ்மா ஜாநாதி புருஷோத்தமம்." [திசைகளெல்லாம் திருவடியால் தாயோன்] - லோகங்களை யெல்லாம் திருவடிகளாலே அளந்துகொண்டவன்; நாய்ச்சிமாருந் தொடும்போது கூசவேண்டும்படியான திருவடிகளைக்கொண்டு கிடீர் காடும் ஒடையும் அளந்தது! இங்ஙனே செய்வானென்? என்னில், [எல்லா எவ்வுயிர்க்கும் தாயோன்] - எல்லாரோடும் ஸம்பந்தம் ஒத்திருக்கை. எல்லாமென்று - ஸாகல்யபரம். எவ்வுயிரென்று - 'விலக்ஷணம், அவிலக்ஷணம்' என்று பாராதொழிந்தபடி. [தாயோன்] - தாய்போலப் பரிவனுனவன். [தானேருருவனே] - இது ஒரு ப்ரகாரமே? மேன்மைக்கு ஒப்பில்லாதாபோலே நீர்மைக்கும் அவதியின்றிக்கே யிருக்கிறதொருபடி என்? என்று விஸ்மிதராகிறுர்.

௩௫.—மூன்றும்பாட்டு. நினைந்தும் பேசியும் நைந்தும் தப்பச்செய்தேனென்றுர், முதற்பாட்டில்; தப்பச்செய்தேனென்ற இடம் தப்பச்செய்தே னென்றுர், இரண்டாம்பாட்டில்; 'நீர் நம்முடைய மேன்மையைப் பார்த்து அங்ஙன்நெகிழப்போகாதே, நான் தாழநின்று எல்லாரோடும் பொருந்தும் சில குணத்தையும் ஒருகால் பாரீர்' என்று திருவுலகளந்தருளின சில குணத்தைக்காட்டிக்கொடுக்க, அத்தை அநுஸந்தித்து, அகலமாட்டாதே அணுகவும் மாட்டாதே, நடுவேநின்று அணைவாய்த்துக் காலங்கழிக்கிறுர். அப்படிக் காலங்கழிக்க வல்லரோ அவனை யொழிய? என்னில்,—சீர்கலந்த சொல் நினைந்து போக்கும்போது போக்க வல்லரே; சில குணநுஸந்தாநத்தாலே போக்கலாமிறே.

[மாயோனிகள் இத்யாதி] மஹாயோகிகளாய்; விலக்ஷணமான ஜன்மங்களை யுடையராய், தந்தாமுடைய அதிகாரா நுரூபமான மரியாதைகளுண்டு ஸ்ருஷ்ட்யாதிகள், அவற்றில் வந்தால் அறிவித்த ஸர்வேச்வரன்பக்கல் இருகால்மட்டுச் சென்று கேள்விகொள்ள வேண்டாதபடி கற்றிருப்பாரான வானேர்பலரும் முனிவருமான யோனிகளை; அவர்களாகிறுர் ஸப்தர்ஷிகள், தசப்ரஜாபதிகள், ஏகாதசருத்ரர்கள், த்வாதசாதித்யர்கள், அஷ்டவஸுக்கள் என்று இப்படி சொல்லப்பட்டிருந்துள்ள ஜந்மங்களை யுடையரானவர்களை நீ படையென்று, முந்துறச் சதுர்முகனை யுண்டாக்கினவன்; *யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்* என்கிறபடியே ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்து, 'இவ்வருகுண்டான கார்யவர்க்கத்தை நீ யுண்டாக்கு' என்று விட்டால், ஸர்வேச்வரனைக் கேள்விகொள்ள வேண்டாதபடி துப்புரவுடையனுகையாலே பூர்ணனை சதுர்முகனைப் படைத்தவன். [சேயோன் எல்லாவறிவுக்கும்] அவ்யவதாநேந தன்பக்கலிலே பிறந்து, தான் ஓதுவிக்க ஓதி, அவற்றாலே ஜ்ஞாநத்தில் குறைவற்றிருக்கிற ப்ரஹ்மாதிகளுடைய ஜ்ஞாநத்துக்கும் தூரஸ்த்தனு யிருக்கும். [திசைகளெல்லாம் திருவடியால் தாயோன்] எத்தனையேனும் அதிசயித ஜ்ஞாநரானவர்களுடைய ஜ்ஞாநத்துக்கும் தூரஸ்த்தனு யிருந்துவைத்து, தானே தன்னைக் கொடுவந்து காட்டுமன்று வருத்தமறக் கொடுவந்து காட்டும். இக்குக்கனோடே கூடின பூமிப்பரப்படையத் திருவடிகளாலே தாவியளந்துகொண்டவன். நாய்ச்சிமார் தொடும்போதும் பூத்தொடுமாபோலே கூசித்தொடுந் திருவடிகளைக்கொண்டு கிடீர் காடும் ஓடையும் அளந்துகொண்டது! என்று ஆச்சர்யப்படுகிறுர். குணகுண நிரூபணம் பண்ணுதே எல்லார் தலையிலும் திருவடிகளைக் கொடுவந்து வைக்கைக்கு நிர்ப்பந்தமென்? என்னில், — [எல்லா எவ்வுயிர்க்குந் தாயோன்] ஸகல ப்ராணிகளுக்கும் தாய்போலே பரிவனுகை. எல்லாவெவ்வுயிர்க்கு மென்கிறது உத்கர்ஷாபகர்ஷம் பாராதே பரிவனுகை [தானேருருவனே] ஒருவர்க்கும் நிலமல்லாத மேன்மையையும் அநுஸந்தித்தார்; அப்படிப்பட்டவனுடைய நீர்மையையும் அநுஸந்தித்தார்; இவனும் ஒருபடியையுடையவனுயிருக்கிறுனே? என்று வித்தராகிறுர். கடுநடையிட்டு ஓடுகிறவர் இவன்சிலகுணத்தை அநுஸந்தித்துக் கால்தாழ்கிறுர்.

தானேருருவேதனிவித்தாய்த் தன்னில்மூவர்முதலாய*
வானோர்பலரும்முனிவரும் மற்றும்மற்றும்முற்றுமாய்*
தானோர்பெருநீர்தன்னுள்ளேதோற்றி அதனுள் கண்வளரும்*
வானோர்பெருமான்மாமாயன் வைகுந்தனெம்பெருமானே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், அத்யந்த நிரபேக்ஷனு யிருந்துவைத்து ஸ்ருஷ்ட்யாத்யநேகயத்நங்களைப் பண்ணி என்னை விஷயீகரித்தவன், இனி 'நானல்லேன்' என்னிலும் தன்னுடைய ஸௌசீல்யகுணத் தாலே விடா னென்று ஸமாஹிதராகிறார்.

[தானேருரு என்று தொடங்கி] - நிமித்தோபாதாந ஸஹகாரிகளான மூன்றுவகைப்பட்ட காரணமும் தானேயாய், தன்னோடு மூவரானவர்கள் முதலான தேவ திர்யக் ஸ்த்தாவரங்களுள்ளிட்ட ஸகல பதார்த்தங்களையும் உண்டாக்குகைக்காக. தன்னில் - ஸங்கல்பத்திலே யென்னவுமாம். [தானென்று தொடங்கி] - தன்னுடைய ஸங்கல்பவசத்தாலே ஏகார்ணவத்தைத் தோன்றுவித்து, அதிலே கண்வளர்ந்தருளும் ஸ்வபாவனுய் வைகுந்தனுய் வானோர்பெருமானு யிருந்துவைத்து எனக்குத் தப்பவொண்ணுதபடி அத்யாச்சர்யமான சீலவத்தையை யுடையவன் எனக்கு ஸ்வாமியே; நானும் அவனுக்கு அடிமை.

இ.—நாலாம்பாட்டில், தான் நிரபேக்ஷனுய் வைத்து ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணி என்னை விஷயீகரித்தவன், 'நானல்லேன்' என்னிலும் தன் ஸௌசீல்யத்தாலே விடா னென்று ஸமாஹிதராகிறார்.

[தானேருருவே தனிவித்தாய்] - நிமித்தோபாதாந ஸஹகாரிகளான மூன்றுகாரணமும் தானேயாய். வித்தாய் என்று உபாதாநஞ் சொல்லிற்று; தனிவித்தாய் என்று - நிமித்தாந்தர நிஷேதம் பண்ணிற்று. ஓர் தனிவித்தாய் என்று ஸஹகார்யந்தரநிஷேதம் பண்ணிற்று; ''ஸதேவ ஏகமேவ அத்விதீயம்'' என்கிற ச்ருதிச்சாயையாலே அருளிச்செய்கிறார். நாட்டில் இவை வேறுபட்டிறே இருப்பது. [தன்னில் மூவர் முதலாய] - இக்ஷ்வாகு வம்ச்யர்நடுவே வந்து அவதரித்து அவர்களோடே எண்ணலாம்படியிருக்குமா போலேயும், யாதவர்கள்நடுவே வந்து அவதரித்து அவர்களோடொக்க எண்ணலாம்படி யிருக்குமா போலேயும், ஸ்வேநரூபேண நின்று பாலநத்தைப் பண்ணி, அவர்களுக்கு அந்தராத்மாவாய் நின்று ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைப் பண்ணிப்போருகையாலே, தன்னோடேகூடின மூவர்முதலாய என்னுதல்; தன்னில் - தன்னுடைய ஸங்கல்பத்திலே, மூவர்முதலாய - ப்ரஹ்மேந்த்ர ருத்ரர்களுக்கு முதலாய் என்று மாம். [வானோர்பலரும்] - தேவஜாதியும். [முனிவரும்] - மந்த்ர ஸூத்ர த்ரஷ்டாக்களான மஹர்ஷிகளும். [மற்றும் மற்றும்] - மநுஷ்ய திர்யக்குக்களும். [முற்றுமாய்] - அநுக்தமான ஸ்த்தாவராதிகளும். இவை யெல்லாவற்றையும் உண்டாக்குகைக்காக. 'ஆய்' என்கிறது - ''பஹுஸ்யாம்'' என்றாற்போலே. [தானோர் பெருநீர் தன்னுள்ளேதோற்றி] - நிரபேக்ஷனானதான் ஒப்பில்லாத ஏகார்ணவத்தைத் தன் ஸங்கல்பத்திலே தோற்றுவித்து. [அதனுள்கண்வளரும்] - அதுக்குள்ளே ஸ்ருஷ்ட்யுந்முகனுய் இவற்றினுடைய ரக்ஷண சிந்தையைப் பண்ணிக்கொண்டு சாய்ந்தருளும். இப்படிசெய்கிறவன் ஆர்? என்னில், - [வானோர் பெருமான்] - நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனுனவன். [வைகுந்தன்] - அவர்களும் தானுமாய் அநுபவிக் கைக்கு நித்யமான விபூதியையுடையவன். [மாமாயன்] - அங்கு அங்ஙனே யிருக்கச்செய்தே, இவ் விபூதியிலே வந்து இவர்களோடே ஒருநீராகக் கலந்த அத்யாச்சர்யமான சீலாதிகளைக் காட்டி என்னை அகலாமல் சேரவிட்டுக்கொண்டவன். [எம்பெருமானே] - இவன் எனக்கு ஸ்வாமியே; நானும் அவனுக்கு அடிமை. இத்தலை இருயாநிற்க, தன்பேருகச் சேரவிட்டுக்கொள்ளுமவனிறே ஸ்வாமியாமவன்.

ஈடு.—நாலாம்பாட்டு. 'அவன்படி இதுவாயிருந்தது; இனி நீர் செய்யப்பார்த்ததென்?' என்ன,—'நாம் அகலப் பார்த்தால் உடையவர்கள் விடுவார்களோ?' என்கிறார். அத்யந்த நிரபேக்ஷனுயிருந்துவைத்து, ஸ்ருஷ்ட்யாத்யநேக யத்நங்களைப் பண்ணி என்னைத் தனக்கு ஆக்கிக்கொண்ட குணங்களாலே என்னை விஷயீகரித்தவன், இனி 'நானல்லேன்' என்னிலும், தன்னுடைய ஸௌசீல்ய குணத்தாலே என்னை விடா னென்று ஸமாஹித ராகிறார்.

[தானோருருவே தனிவித்தாய்] *ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்* - இங்கே: அத்விதீயபதங்கள் மூன்று உண்டாயிருந்தது: இவற்றால் கொள்ளுகிற விநியோகம் என்? என்னில்;—ஸ்ருஷ்டியை ப்ரஸங்கிக்கையாலே காரண விஷயமாய்க் கிடக்கிறன: த்ரிவித காரணமும் தானேயென்கை. 'தான்' என்கிற இத்தால் உபாதாநாந்தரமில்லை யென்கை; 'ஓர்' என்கிற இத்தால், ஸஹகார்யந்தரமில்லை யென்கை: 'தனி' என்கிற இத்தால் நிமித்தாந்தரம் இல்லையென்கை. 'உரு' என்று அழகு: அழகிய த்ரிவித காரணமுமாய். [தன்னில் மூவர் முதலாய] இக்ஷ்வாகுவம்சயர்நடுவே வந்து அவதரித்து அவர்களோடே எண்ணலாம்படி யிருக்குமாபோலவும், யாதவர்கள் நடுவே வந்து அவதரித்து அவர்களோடு ஒக்க எண்ணலாம்படி யிருக்குமாபோலவும், ப்ரஹ்மாதிகள்நடுவே அவர்களோடு ஒக்கச் சொல்லலாம்படி அவதரித்து, ஸ்வேநரூபேண நின்று பாலநத்தைப் பண்ணி, அவர்களுக்கு அந்தராத்மாவாய் நின்று ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைப் பண்ணிப்போருகையாலே, தன்னோடு கூடின மூவர் தொடக்கமான என்னுதல்; அன்றியே, 'தன்னில்' என்றது தன் பக்கலிலே யென்றபடியாய், தன்னுடைய ஸங்கல்பரூப ஜ்ஞாநத்திலே, மூவர் முதலாய *ஸேந்த்ர:* என்கிற இந்த்ரனையுங் கூட்டிச் சொல்லுதல். [வானோர் பலரும்] ப்ரஹ்மாதிகள் தொடக்கமான தேவர்களையும். [முனிவரும்] ஸநகாதிகளையும். [மற்றும்] ஸ்தாவரங்களையும். [மற்றும்] ஜங்கமங்களையும். [முற்றுமாய்] அநுக்தமான எல்லாவற்றையும் உண்டாக்குகைக்காக. [தானோர்இத்யாதி] இப்படி ஸ்ருஷ்ட்யுந்முகனான தான், தனக்குக் கண்வளர்ந்தருளுகைக்குப் போரும்படியான பரப்பையுடைத்தான ஏகார்ணவத்தைத் தன் பக்கல்நின்று முண்டாக்கி அதனுள் கண்வளரும். இப்படி ஏகார்ணவத்திலே தனியே சாய்ந்தருளுகிறவன் தான் ஆர்? என்னில், [வானோர்பெருமான்] நித்ய ஸூரிகளுக்கு நாதனானவன். [மாமாயன்] ஆச்சர்யங்களான குணசேஷ்டிதங்களை யுடையவன். [வைகுந்தன்] ஸ்ரீவைகுண்டத்தைக் கலவிருக்கை யாகவுடையவன். [எம்பெருமானே] அவன் என்னுயனே. உடைமை தப்பிப் போகப்புக்கால், உடையவர்கள் ஆறி யிருப்பர்களோ? பெறுகைக்கீடாக ஏற்கவே நோன்பு நோற்று வருந்தி ப்ரஜையைப் பெற்ற தாயானவள், அவன் நடக்கவல்லனான ஸமயத்திலே, 'தேசாந்தரம் போவேன்' என்றால் விட்டு ஆறியிராளிறே, அப்படியே நெடுநாள் தன்வாசி யறியாதே போந்த எனக்கு அறிவைத் தந்து தன்னை உள்ளபடி அறிவித்தவன், தான் தந்த அறிவைக்கொண்டு நான் அகன்றுபோகப்புக்கால், அவன் விட்டு ஆறி யிருக்குமோ?

மானேய்நோக்கிமடவாளை மார்பிற்கொண்டாய் மாதவா!*
கூனேசிதையவுண்டைவில் நிறத்தில்தெறித்தாய்!கோவிந்தா!
வானார்சோதிமணிவண்ணா! மதுசூதா! நீயருளாய்* உன்
தேனேமலருந்திருப்பாதம் சேருமாறுவினையேனே. (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், இப்படி இசைந்த ஆழ்வார், 'சடக்கென முகங்காட்டப் பழையபடிக்கே அகலுவர்; இவர்தாமே அர்த்திக்குந்தனையும் செல்ல முகங்காட்டாதே நிற்போம்' என்று எம்பெருமான் பேர நிற்க, மீண்டு 'உன்திருவடிகளிலே சேர்த்து அடிமை செய்யும்படி பார்த்தருளவேணும்' என்று ப்ரார்த்திக்கிறார்.

[மானேயென்று தொடங்கி] - மானின்நோக்குப்போலே முக்த்தமான நோக்கையுடைய பெரிய பிராட்டியாரைத் திருமார்பிலே யுடையையாகையாலே மாதவனென்னுந் திருநாமத்தை முக்யமாக வுடையையாய், அநுலேபதாயிநியான கூனியுடைய மற்றுறுரவயவத்துக்கும் வாட்டம் வாராமே கூனே நிமிரும்படி சுண்டுவில் தெறித்தாற்போலே அநாயாஸேந நிமிர்த்தவனே! ஆச்ரிதருடைய அவத்யம் பாராதே அவர்களை விஷயீகரித்து அவர்களுடைய அவத்யத்தைப் பின்னையும் போக்குமென்று கருத்து. [கோவிந்தா] - திர்யக்குக்களோடும் ஸம்ச்லேஷிக்கும் ஸ்வபாவனானவனே! கூனேசிதைய உண்டைவில் நிறத்தில் தெறிக்கையாவது - கூனியுடைய கூன்போம்படி மர்மத்திலே பெருமாள் சுண்டுவில்லெடுத்துத் தெறித்தபடி. நிம்புசேர்வது ஸ்ரீ நந்தகோபர்திருமகனுக்காகையாலே பெருமாள்நிம்பை அவன்

பக்கலிலே வைத்து, 'கோவிந்தா என்கிறது' என்றுஞ் சொல்லுவர். [வானொரென்று தொடங்கி] - திருநாடெல்லாம் நிறையும்படியான தேஜஸ்ஸையும் ஸ்ப்ருஹணீயமான நிறத்தையு முடையையாய், ஸமாச்ரிதருடைய விரோதிகளைப் போக்கும் ஸ்வபாவனான நீ, உன்னுடைய நிரதிசய போக்யமான திருவடிகளை வினையேனான நான் பெறும்படி பார்த்தருளவேணும். எம்பெருமானுடைய திருவடிகளிலே அடிமை செய்வோமென்று இவர் இசைந்தபின்பும் கிடையாமையாலே நலிவுபட்டு 'வினையேன்' என்கிறார்.

இ.—அஞ்சாம்பாட்டில், 'இவ்வளவிலே முகங்காட்டில் பழையபடியே அகலும்; அவர்தாமே அர்த்திக்குந்தனையும் முகங் காட்டக் கடவோமல்லோம்' என்று அகலநிற்க, 'உன்னைச்சேருமாறு அருளாய்' என்கிறார்.

[மானேய்நோக்கி மடவாளை மார்பிற்கொண்டாய் மாதவா] - மானின்நோக்குப்போலே முக்த்தமான நோக்கை யுடையளாய், நிரந்தர ஸம்ச்லேஷத்தாலே துவட்சியை யுடையளான பிராட்டியைத் திருமார்விலே யுடையனாகையாலே மாதவ னென்கிற திருநாமத்தை முக்யமாக வுடையவனே! "நகச்சிந்நாபராத்த்யதி" என்னுமவள் ஸந்நிஹிதையாயிருக்க, உனக்கு அருளாதொழியப்போமோ? [கூனேசிதைய உண்டைவில் நிறத்தில் தெறித்தாய்] - மற்றோ ரவயவத்துக்கு வாட்டம்வாராதபடி கூனேநிமிரும்படி சுண்டுவில்லைத் தெறித்தாற்போலே அநாயாஸேந நிமிர்த்தாய். ஸ்ருஷ்டிகாலத்தில் மூட்டுவாயறியுமவனிறே. தெறிக்கையாகிறது - க்ரியையாய், இப்போது, நிமிர்த்தா யென்றபடி ஆச்ரிதரை அவத்யம்பாராதே விஷயீகரித்து, பின்னை அவர்களுடைய அவத்யத்தைப் போக்குமவனே! [கோவிந்தா] - திர்யக்குக்களோடும் பொருந்துமவனென்கை. அங்ஙனன்றிக்கே, பெருமாளுடைய பால்யத்திலே சுண்டுவில்லையிட்டுக் கூனியுடைய கூன்சிதையும்படி மர்மத்திலே தெறித்தபடியைச்சொல்லிற்றாகவுமாம். கோவிந்தா-பூமிக்கு ரக்ஷகனென்கை. அப்பக்ஷத்தில், 'தீம்புசொல்லுவது க்ருஷ்ணனுக் காகையாலே பெருமாள்தீம்பை அவன் பக்கலிலே வைத்து 'கோவிந்தா! என்கிறது' என்றுஞ்சொல்லுவர். [வானோர்சோதிமணிவண்ணா] - த்ரிபாத்விபூதி நிரம்பும்படியான தேஜஸ்ஸையும், நீலமணிபோலே ஸ்ப்ருஹணீயமான நிறத்தையுமுடையவனே! [மதுசூதா] - மதுவை நிரஸித்தாப்போலே, 'நான் அயோக்யன்' என்று அகலுகையைத் தவிர்த்தவனே! [உன்தேனேமலருந்திருப்பாதம் வினையேன் சேருமாறு நீயருளாய்] - "விஷ்ணோ:பதே பரமே மத்த்வஉத்ஸ:" என்கிறபடியே நிரதிசயபோக்யமான திருவடிகளை வினையேனான நான் பெறும்படி நீ க்ருபைபண்ணியருளவேணும். தாம் இசைந்தபின்பும் கிடையாமையாலே வினையே னென்கிறார்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. ஆபிமுக்க்யம் பண்ணின அநந்தரம் *க்ரியதாமிதி மாம் வத* போலே, ஏவி அடிமைகொள்ளவேணுமென்று ப்ரார்த்திக்கிறாரென்னுதல்; இவர் ஆபிமுக்க்யம் பண்ணச்செய்தே அவன் முகங்காட்டாதே அல்பம் விளம்பிக்க, அதுபற்றாமை 'அருளாய்' என்கிறாரென்னுதல்.

[மானேயித்யாதி] அருளுவிப்பாரும் அருகே உண்டாயிருக்க, 'எனக்கருளாய்' என்று ப்ரார்த்திக்கவேண்டுகிறதென்? [மானேய் நோக்கி] மானேய்ந்த நோக்கையுடையளாய். ஏய்கை பொருந்துகை. மானோடொத்த நோக்கை - கண்ணையுடையளாய். [மடவாளை] ஆத்மகுணோபேதையாயிருக்கிற பெரியபிராட்டியாரை; காரியப்பாடறக் கண்ணாலே அவனை ஒருகால் நோக்கினால், ஒருபாட்டம் மழைவிழுந்தாற்போலே குளிரும்படியாயிற்று நோக்கு இருப்பது. அன்றிக்கே, [மடவாள்] மடப்பமாவது துவட்சியாய், அவன்தான் கண்ணாலே இவளை நோக்கினால், "தெய்வவண்டுதுதைந்தவெம்பெண்மையம்பூ" என்கிறபடியே, வண்டாலே ஆத்தஸாரமான பூப்போலேயாயிற்று இவளிருப்பது. [மார்பிற்கொண்டாய் மாதவா] மாம்பழத்தோடு ஒருஸம்பந்தமின்றிக்கே யிருக்கச்செய்தே அப்பேரை தரிக்குமா போலேயிறே இவளை யொழிய ஸ்ரீமானென்னும் பேரை தரிக்கிறவர்கள். அங்ஙனன்றிக்கே, *விஷ்ணுவக்ஷஸ்த்தலஸ்த்தயா* என்கிறபடியே, அவள் திருமார்பிலே நித்யவாஸம்பண்ணுகையாலே 'மாதவன்' என்னுந் திருநாமத்தையுடையவனே! [கூனேசிதைய] அவள்

அருமின்றிக்கே பொழியவானால்தான் உன்னைக் கிட்டினார்க்கு அவத்யம் வருமோ? "கூனே சிதைய" என்றது இவளுடைய அல்லாத அவயவங்களுக்கு ஒருவாட்டம் வாராதபடி நிமிர்த்த அந்தைப்பற்ற. வசவாஸஹேதுபூதையான குப்ஜையைச் சொல்லிற்றாய், பால்யத்திலே சுண்டுவிற்கொண்டு திரியாநிற்கப் பெருமாள் லீலாரஸ மநுபவித்தாரென்று உண்டு; அத்தைப் பற்றச் சொல்லிற்றாகவுமாம். அப்போது 'கோவிந்தா' என்றது பூமிக்கு ரக்ஷகனானவன் என்கிறது. அன்றிக்கே, தீம்புசெருவது க்ருஷ்ணனுக்கே யாகையாலே "போம்பழியெல்லாம் அமணன் தலையோடே" என்னுமாபோலே, அவன்தலையிலே யேறிட்டுச்சொல்லுதல்; அதுவுமன்றிக்கே, சாந்திட்ட கூனிதன்னையே சொல்லிற்றாய், வருத்தமறச் சுண்டுவில் நிமிர்க்குமாபோலே நிமிர்த்தவ னென்னுதல். தெறிக்கையாகிறது க்ரியையாய், நிமிர்த்தா வென்றபடி. க்ருஷ்ணனுக்கும் வில் உண்டோ பின்னை? என்னில்; *வேலிக்கோல்வெட்டி விளையாடு வில்லேற்றித் திரியுமிறே; "தருமமறியாக் குறும்பனைத் தன்கைச் சார்ங்கமதுவேபோல்" என்று வில்லுண்டாகவே அருளிச் செய்துவைத்தாளிறே. [கோவிந்தா] திர்யக்குக்களோடும் பொருந்துமவ னல்லையோ நீ? [வானார் சோதிமணிவண்ணா] அதுகிடக்க, *பக்தாநாம்* என்னும் வடிவு படைத்தவனல்லையோ? குப்பியில் மாணிக்கம்போலே த்ரிபாத்விபூதியிலும் அடங்காதே விம்மும்படியாயிற்று, வடிவில் புகர் இருப்பது [மதுசூதா] அவ்வடிவை யநுபவிப்பார்க்கு வரும் விரோதியைப் போக்குவாயும் நீயன்றோ? மதுவாகிற அஸுரனைப் போக்கினாப்போலே என் விரோதியைப் போக்கினவனே! [உன் தேனே மலரும் திருப்பாதம்] இவையொன்றும் இல்லையானாலும் அடியில் உன் போக்யதையைப் பார்த்தால்தான் விடப்போமோ? *விஷ்ணோ:பதே பரமே மத்வ உத்ஸ:* என்னக்கடவதிறே. இவர் பெருநிலங் கடந்த நல்லடிப் போதிறே ஆசைப்பட்டது; இவர் ஆசைப்பட்டபடியே "திசைகளெல்லாம் திருவடியால் தாயோன்" என்று அத்திருவடிகளையே காட்டிச் சேரவிட்டான். *உன் தேனே மலரும் திருப்பாதமென்று அத்தையே அபேக்ஷிக்கிறார். [சேருமாறு வினையேனே] கலத்தில் இட்ட சோற்றை விலக்குவாரைப்போலே, நீ வந்து கிட்டக்கொள்ள அகலுகைக்கு அடியான பாபத்தைப் பண்ணின நான் சேருமாறு அருளவேணும். தாம் இசைந்தபின்பும் இடையாமையாலே வினையே னென்கிறார்.

வினையேன்வினை தீர்மருந்தானாய் விண்ணோர்தலைவா! கேசவா!*
மனைசேராயர்குலமுதலே! மாமாயனே! மாதவா!*
சினையேய்தழையமராமரங்கள் ஏழுமெய்தாய்! சிரீதரா*
இனையாயினையபெயரினாய் என்றுநைவனடியேனே. (6)

ஒ.—ஆறும்பாட்டில், எம்பெருமான் இவர் அபேக்ஷித்தபோதே அபேக்ஷிதத்தைச் செய்யாத தசையிலே அவனுடைய குணசேஷ்டிதங்கள் ஸ்ம்ருதிவிஷயமாய்நின்று இவரை நலிய இவற்றாலே நலிவுபட்டு மிகவும் சிதிலராகிறார்.

[வினையேன் என்று தொடங்கி] - 'உனக்கு அவத்யாவஹமென்று அடிமைசெய்யவல்லேன்' என்று நான் அகல, 'எனக்கு உத்கர்ஷஹேதுவாமத்தனை' என்று என்னைத் தெளிவித்து அடிமையிலே சேர்த்துக் கொண்டவனே! அபர்வறுமமரர்களதிபதியாய் ப்ரஹ்மருத்ரர்களுக்கும் உத்பாதகனாய் வைத்து இடையர்தம் மனைகளிலே நீயே வந்து சேர்ந்து அவர்கள் குலத்துக்கு உஜ்ஜீவநஹேதுவாய் ஸகலஜநமநோநயநஹாரியான நவநீத சௌர்யாதி திவ்யசேஷ்டிதங்களை யுடையையாய், இப்படி ஆச்ரிதபவ்யனாகைக்கு நிதாநமான ச்ரிய:பதித்வத்தை யுடையையாய், மனைசேராய ரென்றது - பலமனைகளும் சேரவுடைய இடையரென்றுமாம். ஸ்ரீஸுக்ரீவ மஹாராஜரை விச்வஸிப்பித்து அடிமைகொள்ளுகைக்காக, பெரும்பணைகளையுடைத்தாய்த் தழைத்திருக்கையாலே இலக்குக் குறிக்கவொண்ணாதிருக்கிற மராமரமேழையும் எய்தவனே! [சிரீதரா] - எய்கிற போதை வீரலக்ஷ்மியைச் சொல்லுகிறது. [இனையா யென்று தொடங்கி] - ஏவம்வித குணசேஷ்டிதங்களை யுடையையாய், இவற்றுக்கு வாசகமான திருநாமங்களை யுடையவனே!

இ.—ஆறும்பாட்டில், இவர் அபேக்ஷித்தபோதே முகங்காட்டாமையாலே அவனுடைய குணசேஷ்டி
தங்கள் ஸ்ம்ருதிவிஷயமாய் நலிய, சிதிலராகிறார்.

[வினையேன்வினை] - இவரையொழிய வேறொருவர்க்கு உள்ளதொன்றன்று இந்தவினை; நித்யஸூரி
களுக்கு நிரந்தராநுபவத்தாலே இல்லை. "யஸ்த்வயாஸஹ ஸஸ்வர்க்க:" என்று ஸம்ச்லேஷம் ஸுகமாக
விறே பிரிவுக்கு ஸம்பாவனை யுடையாருடைய வார்த்தையும்; ஸம்ஸாரிகள் அந்யபரர்; ப்ரத்யாஸத்தியிலே
'அயோக்யன்' என்று அகலுவது-இவர்க்கே உள்ளதொன்று. [தீர்மருந்தானாய்] - சீலாதிகளைக்காட்டி
அகன்றுபோகிற என்னை மீட்டவனே! அகலுகிற இவரைக்கால்பிடிக்கிறவன்தான் ஆரென்னில்; —[விண்
ணோர் தலைவா] - நிரந்தராநுபவம் பண்ணுவாரை ஒருநாடாகவுடையவனே! [கேசவா] - அவர்களால்
பர்யாப்தி பிறவாதே, திருத்தி அடிமை கொள்ளுகைக்கு "ஆவாம் தவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத்கேசவ
நாமவாந்" என்று ப்ரஹ்மருத்ரர்களுக்கு உத்பாதகனுமாய், தந்மத்யஸ்தனாய் வந்து அவதரிக்கும்படி.
[மனைசேராயர்குலமுதலே] - பஞ்சலக்ஷங்குடியாகையாலே மனையோடுமனை சேர்ந்த என்னுதல்; இவ்வருகே
இடையரிருந்த மனைகளிலே வந்து அவர்கள் குலத்துக்கு உத்தாரகனானவனே! மனைசேர்ந்த ஆயரென்னவு
மாம்; மூங்கில்களைக் கையோடே கொண்டுபோய், பசுக்களுக்குப் புல்லுள்ளவிடத்தே வளைத்துக்கொண்டி
ருக்குமத்தனை யென்கை. "புலவிக்குலவானவர்தங்கோதா" என்னுமதுக்கு அவ்வருகேயாயிற்று 'ஆயர்
குலமுதலே' என்கிற இது. [மாமாயனே] - ஸர்வசக்தியாயிருந்துவைத்து வெண்ணெய்களவிலேயிழிந்து
அது தலைக்கட்டமாட்டாதே கட்டுண்டுநிற்கும் ஆச்சர்யம். [மாதவா] - இவ்வெளிமைக்கு நிதானம் இருக்
கிறபடி. அவளை உகப்பிக்கையாகிறது-ஆச்ரிதர்க்கு எளியனாகையிறே. ரக்ஷணத்திலே அதிசங்கை
பண்ணுவார்க்கு மழுவேந்தி ரக்ஷிக்கும்படி சொல்லுகிறதுமேல். [சினையேய் இத்யாதி] - சினை-கவடு.
நெருங்கின பணைகளை யுடைத்தாய், தழைத்திருக்கையாலே இலக்குக் குறிக்க அரிதான மராமரங்களேழை
யும் எய்தவனே! [சிரீ தரா] - எய்கிறபோதை வீரலக்ஷ்மியைச் சொல்லுகிறது. [இனையாய்] - இப்படிப்பட்ட
குணசேஷ்டிதங்களை யுடையவனே! [இனையபெயரினாய்] - இக்குண சேஷ்டிதங்களிலே இழியுந் துறையான
திருநாமங்களையுடையவனே! [என்று நைவன்] - 'அருளாய்' என்னவும்மாட்டாதே சிதிலனாகின்றேன்.
[அடியேனே] - இது ஸ்வதந்த்ரவஸ்துவாய்ப் படுகிறதோ? பிறர்க்கு உரிய வஸ்துவாய் அழிகிறதோ?

௬.—ஆறும்பாட்டு. இவர் ஆபிமுக்ய்யம் பண்ணினவாறே அவன் அல்பம் தாழ்த்
தான்; இவர் 'என்னை இழந்தாய்கிடாய்!' என்கிறார்.

[வினையேன் இத்யாதி] உன்னைப் பார்த்தல், என்னைப் பார்த்தல் செய்யவேண்டாவோ?
[வினையேன் வினை] சேதநரெல்லார்க்குமுள்ள வினைபோலல்லவாயிற்று இவரது; 'பகவத்
ஸம்ச்லேஷம் பெறவேணும்' என்றிறே அவர்களிருப்பது; அகலநினைக்கிற விது உள்ளது
இவரொருவர்க்குமிறே. [தீர்மருந்தானாய்] 'நான் கிட்டுகை அத்தலைக்கு அவத்யம்' என்று
அகலுகைக்கு அடியான வினையைப் போக்கும் மருந்தானவனே! வினையைப் போக்கிற்று
எங்குநின்றும் வந்து? என்னில், [விண்ணோர்தலைவா] நித்யாநுபவம் பண்ணுமிடத்தச் செய்தே,
"நான் அயோக்யன்' என்று அகலவேண்டாதார்க்கு நியந்தாவாயிருக்கும் இருப்பில்நின்றும்
வந்தாயிற்று. [கேசவா] அதுக்கு இவ்வருகே ஒருபயண மெடுத்துவிட்டபடி; *"ஆவாம்
தவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத் கேசவநாமவாந்"* என்கிறபடியே. [மனைசேராயர்குலமுதலே]
அங்கிலேயில்நின்றும் இவ்வருகே போந்து கிட்டினபடி. பஞ்சலக்ஷங்குடி யாகையாலே, மனை
யோடு மனை சேர்ந்த வென்னுதல்; ஆயர்மனைகளிலே வந்து சேர்ந்து, அவர்கள் குலத்துக்கு
முதலானவ னென்னுதல்; அன்றிக்கே, காலுமூங்கிலைக் கொண்டுபோய்த் தங்குமிடத்திலே
வளைத்துத் தங்குகையாலே சொல்லிற்றாதல். [மாமாயனே] இடைக்குலத்திலே வந்து பிறந்து,
அவர்கள் ஸ்பர்சித்த த்ரவ்யமே தாரகமாய், அதுதான் களவுகண்டு புஜிக்கும்படியாய், அது
தான் தலைக்கட்ட மாட்டாதே வாயது கையதாக அகப்பட்டுக் கட்டுண்டு அடியுண்டு நிற்கும்
நிலை. இவ்வெளிமைக்கு அடி சொல்லுகிறது [மாதவா] அவளோட்டைச் சேர்த்தி. [சினையேய்
இத்யாதி] மஹாராஜரை விச்வஸிப்பித்துக் கார்யஞ் செய்தபடி. சினையென்று பணை, ஏய்கை
நெருங்குகையாய், பணைகளோடு பணைகள் நெருங்கித் தழைத்து, நினைத்தபடி இலக்குக் குறிக்க
வொண்ணாபடி நின்ற மராமரங்கள் ஏழையும் எய்தவனே! இத்தால் ஆச்ரிதர் தன்னுடைய

ரக்ஷணத்திலே சங்கித்தால், சங்காநிராகரணம் பண்ணி ரக்ஷிக்குமவனென்றபடி [ஸ்ரீதராமராமரங்களெய்கைக்கு இலக்குக் குறித்துநின்றபோதை வீரலக்ஷ்மியைச் சொல்லுகிறது. [இனையாய்] ஏவம்விதமான குணசேஷ்டிதங்களையுடையவனே! [இனையபெயரினாய்] குணசேஷ்டிதங்களுக்கு வாசகங்களான திருநாமங்களையுடையவனே! [என்றுநைவன்] 'காணவேணும்' கேட்கவேணும்' என்னமாட்டாதே நையாநின்றேன். [அடியேனே] ஆருடைமை அழிகிறது? உடையவர்கள் தங்கள் வஸ்துவை வேணுமாகில் நோக்கிக்கொள்ளுகிறார்களென்கிறார். இது ஏதேனும் ஸ்வதந்த்ர வஸ்துவாய்ப் படுகிறதோ? பிறர்க்கு உரித்தாய் அழிகிறதோ? உன்னால் ரக்ஷிக்கவொண்ணாமே அழிகிறதோ? என்னால் ரக்ஷிக்கலாய் அழிகிறதோ?

அடியேன்சிறியஞானத்தன் அறிதலார்க்குமரியானை*
கடிசேர்தண்ணந்துழாய்க்கண்ணி புனைந்தான்தன்னைக்கண்ணனை*
செடியாராக்கையடியாரைச் சேர்தல்தீர்க்குந்திருமாலை*
அடியேன் காண்பானலற்றுவன் இதனின்மிக்கோரயர்வுண்டே? (7)

ஒ.—ஏழாம்பாட்டில், இப்படி எம்பெருமானைக் காணவேணுமென்று அபிநிவேசித்த ஆழ்வார், அவன் ஸம்ச்லேஷோந்முகனானவாறே மீளவும் அவன்வைலக்ஷண்யத்தையும் தம்முடைய நிகர்ஷத்தையும் அநுஸந்தித்து அகலுகிறார்.

[அடியேன்] - அடிமை தவிர்ந்திருக்கிறவர் 'அடியேன்' என்பானென்? என்னில், - பூர்வவாஸனையாலே. [அறிதலென்று தொடங்கி] - எத்தனையேனும் அளவுடையார்க்கும் அறிய நிலமன்றிக்கே ஐச்வர்யத்துக்கு ஸூசகமாய் நிரதிசய போக்யமான திருத்துழாய்மாலையாலே அலங்க்ருதனாய் மிகவும் குணவானானவனை. [செடியாராக்கையென்று தொடங்கி] - கர்மங்களாலே நிரந்தரமான தேஹஸம்பந்தநுரிதம் ஆச்ரிதர்பக்கல் சேராமே காக்கும் ச்ரிய:பதியை. கைவல்யார்த்திகளை 'அடியார்' என்கிறது, தம்மைப்போலே அவனோடே பரிமாறி அவனுக்கு அவத்யத்தை விளையாதே ப்ரயோஜநாந்தரங்களைக் கொண்டு அகலுகையால். [அடியேனென்று தொடங்கி] - நான் காணவேணுமென்று அலற்றாநின்றேன்; இதுக்கு மேற்பட அறிவுகேடு உண்டோ சில?

இ.—ஏழாம்பாட்டில், 'நைவன்' என்றவாறே மெய்யாகக் கருதி முகங்காட்டினான்; முகங்காட்டினவாறே பழையபடியே விஷயவைலக்ஷண்யத்தைப் பார்த்து அகலுகிறார்.

[அடியேன்] - இப்போது, அடியேன் என்கிறது, அடிமைக்கு இசைந்தன்று; ஜ்ஞாநாநந்தங்களோபாதி நிருபகமாக சேஷத்வத்தை ப்ரதிபத்தி பண்ணியிருக்கையாலே, 'அஹம்' என்கிறவோபாதி 'அடியேன்' என்கிறார். [சிறிய ஞானத்தன்] - அத்யல்பஜ்ஞாநத்தை யுடையவன். [அறிதல்ஆர்க்கும் அரியானை] - ஜ்ஞாநாதிகரான ப்ரஹ்மருத்ராதிகளுக்கும் அறிய அரியவனை. க்ஷுத்ரவிஷயங்களையும் பரிச்சேதிக்கமாட்டாதவன் நான்; அவன் அதிகராலும் அபரிச்சேத்யன்:ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனான தனக்கும் அறியப்போகாது; தனக்குந்தன் தன்மைஅறிய அரியானிறே; பர்வத பரமாணுக்களுக்கு உண்டான சேர்த்திபோலேயிறே. [கடிசேர் இத்யாதி] - ஸர்வாதிகவஸ்துவுக்கு அடையாளம் இருக்கிறபடி. ''ஸர்வகந்த:'' என்கிற விஷயமாகையாலே பரிமளம் அலையெறியாநிற்கும்; திருமேனியிற் குளிர்த்தியாலே செவ்விமாறாதே யிருக்கும். இப்படியிருக்கிற திருத்துழாய்மாலையாலே அலங்க்ருதனானவனை. [கண்ணனை] - அறிவரிதான நிலைதான் அவதரித்துநின்ற விடத்திலே. கடல்கிட்டிற்றென்றால் பரிச்சேதிக்கலாமோ? மநுஷ்யத்வே பரத்வம் இருக்கிறபடி. அன்றிக்கே, ஐச்வர்யத்தாலே எட்டாதிருக்குமோ? என்னில், - ஆச்ரிதர்க்கு ஸுலபனாயிருக்கு மென்னவுமாம். [செடியார் இத்யாதி] - அடியாரைச் செடியாராக்கை சேர்தல் தீர்க்கும். இங்கு 'அடியார்' என்கிறது - கேவலரை. தம்மைப்போலே கிட்டி அவத்யத்தை விளைக்காதே ப்ரயோஜநாந்தரங்களைக் கொண்டு அகலுகையாலே; அடிமையாவது - ஸ்வாமிக்கு அதிசயத்தைப் பண்ணுகையிறே. தூறுமண்டின சரீரம் அவர்களைச் சேராதபடி பண்ணும். ''ஜராமரணமோக்ஷாய'' என்றிறே அவர்கள்புருஷார்த்தம் இருப்பது. [திருமாலை] -

அவர்கள் சரீரஸம்பந்தம் அறுத்துக்கொடுப்பான் ச்ரிய:பதியாயிற்று. அவர்களிற்காட்டில் நீர் குறைய நின்ற விடமென்? என்னில், - [அடியேன் காண்பான் அலற்றுவன்] - அடியேனென்பது ஸ்வாமிக்கு அதிசயத்தைப் பண்ணப்பார்த்தாலன்றோ? மாம்பாவுண்ணிபோலே பேரைச்சுமந்து காணவேணுமென்று கூப்பிடாநின்றேன்; அவ்விஷயத்தைக் கிட்டி நாவிக்கப் பாராநின்றேன். [இதனின்மிக்கோரயர்வுண்டே] - இதுக்கு மேற்பட்ட அறிவுகேடு உண்டோ? இப்போது அறிந்தேனாய் அத்தலைக்கு அவத்யத்தைப் பண்ணுகிற இதிற்காட்டில், முன்பு ஸம்ஸரித்துப்போந்த அறிவுகேடு நன்றாயிருந்தது! அன்று அவனை யழிக்கப் பார்த்திலேன். ஸம்ஸாரதசையில் அஜ்ஞானம் தன்னை யழிக்குமதிறே; இது அவனை அழிக்குமதிறே

ஈடு.—ஏழாம்பாட்டு. 'நைவன்' என்றார்; இவரை நையக் கொடுக்கமாட்டாமையாலே வந்து முகங்காட்டினான்; அவனைப் பார்த்து, 'நம்மால் வரும் குணஹிக்யமும் இவனுக்கு வேண்டா' என்று அகலுகிறார்.

[அடியேன் சிறியஞானத்தன்] 'ஸம்ஸாரிகளில் அறிவுகேடர் ஸர்வஜ்ஞர்' என்னும் படியன்றோ! என் அறிவுகேடு. 'அல்லேன்' என்று அகலுகிற இவர் 'அடியேன்' என்கிறது வாஸனையாலே. அன்றிக்கே, 'அடியேன்' என்கிறது அடிமைக்கு இசைந்தன்று; ஜ்ஞாநாநந்தங்களோபாதி நிரூபகமாக சேஷத்வத்தை ப்ரதிபத்தி பண்ணியிருக்கையாலே, 'அஹம்' என்றவோபாதி 'அடியேன்' என்கிறார் [சிறியஞானத்தன்] அத்யல்பஜ்ஞாநத்தையுடையவன். [அறிதலார்க்கு மரியானை] எத்தனையேனும் அதிசயிதஜ்ஞாநரா யிருப்பார்க்கும் அறியப் போகாதவனாயிற்று அவன். ஸ்வதஸ் ஸர்வஜ்ஞனான தனக்கும் அறியப்போகாது; தனக்கும் தன் தன்மை அறிவரியானிறே. தம:ப்ரகாசங்களுக்கு உள்ள சேர்த்தி போரும் இறே எனக்கும் அவனுக்கும்! [கடிசேர்] அறிவரிய வஸ்துவுக்கு அடையாளம் திருத்துழாய்மாலை. நாட்செல்ல நாட்செல்ல பரிமளமேறிவாராநின்றுள்ள திருத்துழாய்மாலையைப் புனைந்தவனை. [கண்ணனை] அறிவரியனாயிருந்துவைத்து, இடையர்க்கும் இடைச்சிகளுக்கும் தன்னை எளியனாக்கிவைத்தவனை. [செடியார் இத்யாதி] செடி பாபம். ஆர்தல் மிகுதி. பாபம் மிக்கிருக்கிற சரீரம். நோயெலாம் பெய்ததோராக்கையிறே; *"ஜராமரணமோக்ஷாய மாமாச்ரித்ய யதந்தி யே"* என்று அவனையே உபாயமாகப் பற்றி, நாறுமண்டின சரீரத்தை அறுத்துக்கொள்ளும் அடியாருண்டு அவர்கள் பின்னை அடியரோ? என்னில், அடியாராவார் அவர்களே யென்றிருக்கிறார். என்றியவென்னில்; சேஷிக்கு அதிசயத்தை விளைக்குமவர்களிறே—சேஷபூதராகிறார்; என்னைப்போலே கிட்டி அவனுக்கு அவத்யத்தை விளைக்கப் பாராதே, ஸம்ஸாரஸம்பந்தத்தை அறுத்துக்கொண்டு கடக்க நிற்கிற வர்களிறே. உமக்கு இப்போது வந்ததென்? என்ன, [அடியேன் காண்பானலற்றுவன்] 'அடியேன்' என்பது, 'காணவேணும்' என்பதாகாநின்றேன் நான். [இதனின்மிக்கோரயர்வுண்டே] ஸம்ஸாரியான நாளில் அறிவே நன்றாயிருந்ததிறே அது நன்றானபடியென்? என்னில், — அப்போது கடக்கநின்று பகவத்தத்த்வத்தைக் குறியழியாமை வைத்தேன்; இப்போதன்றோ நான் கிட்டியழிக்கப் பார்த்தது! இதிற் காட்டில் அறிவுகேடு உண்டோ?

உண்டாயுலகேழ்முன்னமே உமிழ்ந்துமாயையால்புக்கு*
உண்டாய்வெண்ணெய்சிறுமனிசர் உவலையாக்கைநிலையெய்தி*
மண்டான்சோர்ந்ததுண்டேலும் மனிசர்க்காகும்பீர்* சிறிதும்
அண்டாவண்ணம்மண்கரைய நெய்யூண்மருந்தோமாயோனே! (8)

ஓ.—எட்டாம்பாட்டில், இப்படி ஆழ்வார் அகல, இவரைச் சேர்த்துக்கொள்ளுகைக்காக, ஆச்ரிதரோடே ஸம்ச்லேஷித்தல்லது தரிக்கமாட்டாத தன்னுடைய படியைக் காட்டியருளக் கண்டு விஸ்மிதராகிறார்.

[உண்டாய் என்று தொடங்கி] - இஜ்ஜகத்தையெல்லாம் பண்டே உன் திருவயிற்றிலே வைத்தாய்; அந்த லோகத்தை உமிழ்ந்து அதினுள்ளே உன்னுடைய அப்ராக்ருதமான திருமேனியை க்ஷுத்ரரான மநுஷ்யருடைய ஹேயதேஹங்களோடு ஸஜாதீயமாக்கிக்கொண்டு திருவவதாரம்பண்ணி அபிநிவேசத்தாலே வெண்ணெயையுண்டாய். [மண்தானென்று தொடங்கி] - லோகங்களைத் திருவயிற்றிலே வைத்து உமிழுகிறபோது சேஷித்தது ஏதேனும் மண் உண்டாகிலும் அத்யல்பமும் மநுஷ்யருக்கு சேஷியாதபடி நெய்யூண் மண்கரைய மருந்தோ? அங்ஙனன்றே; ஆச்ரிதர் த்ரவ்யத்தை புஜித்தல்லது ஆத்மதாரணமில்லாமையென்று கருத்து. [பிர் சிறிதும் அண்டாவண்ணம்] - வைவர்ண்யம் ஒன்றுமின்றியே ஒழியும்படி யென்னவுமாம். [மாயோனே] - நிரதிசய ஆச்சர்யபூதனே!

இ-—எட்டாம்பாட்டில், இப்படி அகன்ற இவரைச் சேர்த்துக் கொள்ளுகைக்காக ஆச்ரிதரையொழியச் செல்லாத தன்படியைக் காட்ட, கண்டு விஸ்மிதராகிறார்.

[உண்டாயுலகேழ்முன்னமே] - லோகங்களேழையும் எடுத்து வயிற்றிலே வைத்தாய், முன்பு ஒரு காலத்திலே. வெண்ணெயமுதுசெய்தது மண்கரைய மருந்தாகில், ஸமகாலத்திலே யாகவேண்டாவோ? [உமிழ்ந்து] - ஒன்றும் சேஷியாதபடி "யதாபூர்வமகல்பயத்:" என்கிறபடியே லோகங்களை யுண்டாக்கி; சேஷிக்கிலன்றே மருந்து செய்யவேண்டுவது; உண்கிறபோது சேஷித்தது உண்டாகிலிறே உமிழ்கிறபோதும் சேஷிப்பது [மாயையால் புக்கு] - இச்சையாலே, இந்த லோகத்திலே. [சிறுமனிசர் உவலையாக்கைநிலை யெய்திப்புக்கு] - அப்ராக்ருதமான திருமேனியை க்ஷுத்ரமநுஷ்யருடைய ஹேயசரீர ஸம்ஸ்தாநமாக்கிக்கொண்டு அவதரித்து. 'உவலையாக்கையெய்தி' என்னாதே, 'நிலையெய்தி' என்கையாலே-திவ்யஸம்ஸ்தாநத்தை இதர ஸம்ஸ்தாநமாக்கின னென்கை. [உண்டாய்வெண்ணெய்] - ஈச்வரனாய்ப்புக்கு வெண்ணெயமுது செய்யவொண்ணாதே; அதுக்காக ஸஜாதீயனாய்ப் புக்கு அமுது செய்தாய். மண்ணை அமுதுசெய்தது அதின்ஸத்தைக்காக; வெண்ணெய் அமுதுசெய்தது, தன் ஸத்தைக்காக. [மண்தான் இத்யாதி] - மண்ணை அமுதுசெய்து உமிழ்கிறபோது அதில் சோர்ந்தது உண்டேயாகிலும் "யதாபூர்வமகல்பயத்" என்கையாலே சேஷிக்கைக்கு ப்ரஸங்கமில்லை யென்கை. [மனிசர்க்காகு] - மநுஷ்யர்களுக்கும் ப்ரயோஜநப்படுகைக்கு. பிரென்றும் - அல்பம், சிறிதென்றும் - அல்பம், அத்யல்ப மென்றபடி. அண்டாவண்ணம்—சேஷியாதபடி. நெய்யூண் மண்கரைய மருந்தோ? அன்றிறே; ஆச்ரிதர்உகந்ததொருத்ரவ்யத்தாலேயல்லது செல்லாமையிறே. சேஷித்தால் மருந்தாகாதோ? அன்றிக்கே, [மனிசர்க்காகும்பீர்] - மநுஷ்யருக்குவரும் வைவர்ண்யம் அத்யல்பமும் சேஷியாதபடி யென்னவுமாம். [மாயோனே] - ஆச்சர்யபூதனே! ஆச்ரிதஸ்பர்ச முள்ளதொரு த்ரவ்யமே தாரகமாயிருக்கிறதோராச்சர்ய மிருக்கிறபடியென்!

ஈடு.—எட்டாம்பாட்டு இவர் இப்படி அகலப்புக்கவாறே, 'இவர் துணிவு பொல்லாதாயிருந்தது; இவரைப் பொருந்த விடவேணும்' என்று பார்த்து, வாரீர் ஆழ்வீர்! திருவாய்ப்பாடியில் வ்ருத்தாந்தம் கேட்டறியீரோ'? என்ன, 'அடியேன் அறியேன்' என்றார், அது கேட்கையிலுண்டான ச்ரத்தையாலும், 'அவன்தான் அருளிச் செய்யக் கேட்கவேணும்! என்னும் ச்ரத்தையாலுமாக. 'முன்பு ஒரு காலத்திலே பூமியை யெடுத்து வயிற்றிலே வைத்தோம்; பின்பு அதுதன்னை வெளிநாடுகாண உமிழ்ந்தோம்; அதில் ஏதேனும் சேஷித்ததுண்டாகக் கருதி, திருவாய்ப்பாடியில் வெண்ணெயை விழுங்கினோங்காணும்' என்ன, 'அது இதுக்குப் பரிஹாரமாகச் செய்தாயோ? அது ஒரு காலவிசேஷத்திலே: இது ஒரு காலவிசேஷத்திலே' என்ன, ஆனால், நாம் இது எதுக்காகச் செய்தோம்?' என்ன, 'ஆச்ரித ஸ்பர்சமுள்ள த்ரவ்யம் உனக்கு தாரகமாகையாலே செய்தாயத்தனை' என்ன, ஆனால், அவ்வெண்ணெயோபாதி உம்மோட்டை ஸம்ச்லேஷமும் நமக்கு தாரகங்காணும்; ஆன பின்பு, நீர் உம்மைக் கொண்டு அகலுயிராகில், திருவாய்ப்பாடியில் வெண்ணெய் விலக்கினார் புக்க லோகம் புகுவீரிடீர்' என்றான். அவன் கருத்தைத் தாம் அறிந்தமை தோற்ற அநுபாஷிக்கிறார் இப்பாட்டில்.

[உண்டாயுலகேழ் முன்னமே] லோகங்களேழையும் எடுத்து வயிற்றிலே வைத்தாய் முன்பு ஒரு காலத்திலே. [உமிழ்ந்து] பின்னை அதுதன்னை வெளிநாடுகாண உமிழ்ந்து. [மாயையால் புக்குஉண்டாய் வெண்ணெய்] *மாயா வயுநம் ஜ்ஞாநம்* என்கிறபடியே இச்சா

பர்யாயமாயிருக்கிற ஜ்ஞாநத்தாலே புக்குஉண்டாய் வெண்ணெய். அது செய்யுமிடத்தில் சக்ரவர்த்திதிருமகனைப்புக்கு 'வெண்ணெயமுதுசெய்ய' என்றால் கொடார்களே. [சிறுமனிசர் இத்யாதி] க்ஷுத்ரரான மநுஷ்யர்களுடைய ஹேயமான சரீரத்தினுடைய நிலையை அப்ராக்ருத திவ்யஸம்ஸ்தாநத்துக்கு உண்டாக்கிக்கொண்டுவந்தாயிற்று இப்படிச் செய்தது. "கறையினார் துவருடுக்கை" என்கிறபடியே இடையரளவிலே தன்னையமைத்து வந்து நிட்டியிறே வெண்ணெய் அமுது செய்தது; *ஸபலம் தேவி ஸஞ்ஜாதம் ஜாதோZஹம் யத்தவோதராத்* என்னாநிற்கச் செய்தேயிறே *நைஷ கர்ப்பத்வமாபேதே ந யோந்யாமவஸத்ப்ரபு:* என்கிறது; இக்ஷ்வாகுவம்ச்யரிலே ஒருவன் யாகம்பண்ணாநிற்க, பிபாஸை வர்த்தித்தவாறே மந்த்ரபூதமான ஜலத்தைப் பாநம்பண்ண, கர்ப்பமுண்டாயிற்றது, சுக்லசோணித ரூபத்தாலே பரிணதமாயன்றிறே; சக்த்யதிசயத்தாலே இப்படி கூடக் கண்டபின்பு, 'ஸர்வ சக்திக்குக் கூடாததில்லை' என்றுகொள்ளத் தட்டில்லையிறே. மண்ணை அமுதுசெய்தது அதின் ஸத்தைக்காக; வெண்ணெயமுதுசெய்தது உன் ஸத்தைக்காக. [மண்தானித்யாதி] பூமியைத் திருவயிற்றிலேவைத்து உமிழ்ந்தபோது சேஷித்தது ஏதேனும் மண்உண்டாகிலும், பிற்பட்ட மனுஷ்யர்க்கு அத்யல்பமும் சேஷியாதபடி செய்யமுது செய்தது அதுக்கு மருந்தோ? ஒன்றும் சேஷியாதபடி அமுதுசெய்யிலோ மருந்தாவது! அன்றிக்கே, 'பீர்' என்று வைவர்ண்யமாய், மண்ணிலே சிறிது சேஷித்தால் மநுஷ்யர்க்கு வரக்கடவதான வைவர்ண்யம் சிறிதும் வாராதபடி செய்யூண் மருந்தோ? அன்றிறே. ஆனால், எதுக்காகச் செய்தோம்? என்னில், [மாயோனே] ஆச்ரிதஸ்பர்சமுள்ள த்ரவ்யத்தாலல்லது தாரண மில்லாதபடியான ஆச்ரிதவ்யாமோஹத்தாலே செய்தாயித்தனையன்றோ?

மாயோம்தீயவலவலைப் பெருமாவஞ்சப்பேய்வீய*
தூயகுழவியாய் விடப்பாலமுதா அமுதுசெய்திட்ட
மாயன்* வானோர்தனித்தலைவன் மலராள்மைந்தன் எவ்வுயிர்க்கும்
தாயோன்*தம்மானென்னம்மான் அம்மாமூர்த்தியைச்சார்ந்தே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், 'பரிவரான யசோதாதிகளுடைய வெண்ணெய் உனக்கு அம்ருதஸமம்; என்னுடைய ஸ்பர்சம் உனக்கு நஞ்சோபோக்கும்: நான் அகலுகையே யுக்தம்' என்று ஆழ்வார் விண்ணப்பஞ்செய்ய, 'பூதனைநஞ்சு பாதகமன்றிக்கே யொழிந்தாற்போலே உம்முடைய தோஷம் பாதகமன்று' என்று எம்பெருமான் அருளிச்செய்ய, 'அங்ஙனேயாகில் அகல்வேனல்லேன்' என்று ஸமாஹிதராகிறார்.

[மாயோமென்று] - மாயக்கடவோமல்லோம்; [தீயவலவலையென்று தொடங்கி] - பொல்லாத நெஞ்சையுடையளாய்வைத்து யசோதைப்பிராட்டியைப்போலே மிகவும் புகழாநின்றதுஞ் செய்து ஈச்வரனான தனக்கும் இன்னாளென்று தெரியாதபடி மிகுந்திருந்த வஞ்சனையையுமுடையளாயுள்ள பூதனை முடியும்படி ஈச்வரத்வஜ்ஞாநங் கலவாதபடி வெறும்பிள்ளையாயிருக்கச் செய்தே நச்சுப்பாலே அம்ருதமாம்படி அமுதுசெய்து நம்மை உளோமாக்கின ஆச்சர்யபூதன். [வானோர்தனித்தலைவனென்று தொடங்கி] - அயர்வறுமமரர்களுக்கு அத்விதீயனான அதிபதியுமாய் ச்ரிய:பதியுமாய் எல்லாவுயிருக்கும் தாய்போலே பரிவனுமாய் ஸர்வேச்வரனுமாய்வைத்துத் தன்னுடைய குணவத்தையைக் காட்டி என்னை அடிமைகொண்ட பெரியோனைப்பற்றி.

இ.—ஒன்பதாம்பாட்டில், 'பரிவரான யசோதாதிகள்வெண்ணெய் உனக்கு அம்ருதஸமம், என்னுடைய ஸ்பர்சம் விஷஸமம்: நான் அகலுகையே யுக்தம்' என்ன, 'பூதனை நஞ்சுபாதகமாகாதாபோலே உம்முடைய தோஷமும் பாதகமன்று; 'பெற்றதாய்போல் வந்த பேய்ச்சி' என்று போலியும் அமையும்' என்ன, 'ஆகில் அகல்வே னல்லேன்' என்று ஸமாஹிதராகிறார்.

[மாயோம்] - இரண்டு தலையையும் அழித்துக்கொள்ளக் கடவோமல்லோம்; பிரிகையென்றும், மாய்கையென்றும் பர்யாயம். [தீய] - தீமையாவது - நெஞ்சில் திண்மை. [அலவலை] - யசோதைப் பிராட்டியைப்போலே பரிவுதோற்ற எத்திக்கொடு வருகை. பெரியவஞ்சம், மாவஞ்சம் இரண்டாலும் ஆதிக்யமேயாய், அறமிக்க வஞ்சகத்தை யுடையவள். ஈச்வரனும் 'தாய்' என்று ப்ரமிக்கும்படி மறைத்துக் கொடுவருகை. [வீய] - முடிய [தூயகுழவியாய்] - ஈச்வரத்வம் நடையாடாதபடியான பிள்ளைத்தனத்தில் சுத்தி. அடியறிவார் 'நீ ஈச்வரன்' என்றால் "ஆத்மாநம் மாநுஷம்மந்யே" "அஹம்வ:" இத்யாதி யென்னும்படியாயிருக்கை. [விடப்பாலமுதா அமுதுசெய்திட்ட] - இவன் பிள்ளைத்தனத்திற் குறைவில்லையாகில், பின்னை அதின்காரியம் காணுதொழிவானென்? என்னில், — விஷம் அம்ருதமாம் முஹூர்த்தத்திலேயாயிற்றுப் பிறந்தது. தர்மியை வேறொன்றாக்க வொண்ணாமையாலே, விரோதித்த ஆஸுரப்ரக்ருதிகள் முடிய ப்ராப்தம். [மாயன்] - விஷம் அம்ருதமாம்படி அமுதுசெய்து. தன்னைத்தந்து நம்மை உண்டாக்கின ஆச்சர்ய பூதன். இப்படி பூதனையுடைய வஞ்சகத்திலே அகப்பட்டிருக்கிறவன் தான் ஆர்? என்னில், [வானோர் தனித்தலைவன்] நித்யஸூரிகளுக்கு அத்விதீயனான நிர்வாஹகன். த்ரிபாத்விபூதியாகப் பரிந்து நோக்க இருக்கிறவன்கிடீர், பூதனைகையிலே அகப்பட்டிருக்கிறவன். [மலராள் மைந்தன்] - நித்ய ஸூரிகள்ஜீவக மிருக்கிறபடி மைந்தன் - நித்ய யௌவநஸ்வபாவன். [எவ்வுயிர்க்குந்தாயோன்] - நித்யஸூரிகள்பக்க லிருக்கும் இருப்பு ஸகலாத்மாக்கள்பக்கலிலும் ஒத்திருக்குமவன். ஸகலாத்மாக்களுக்கும் தாய்போல் பரிவனானவன். [தம்மான்] - இந்த வாத்ஸல்யத்துக்கு அடியான ஸம்பந்த மிருக்கிறபடி. தம்மான் - ஸர்வேச்வரன். [என் அம்மான்] - நித்யஸூரிகளும் மற்றுமுள்ள ஸகலாத்மாக்களும் ஒரு தட்டும், நான் ஒருதட்டுமாம்படி என்பக்கலிலே விசேஷ கடாக்ஷத்தைப் பண்ணினவன். [அம்மாமூர்த்தியைச் சார்ந்தே] - புருஷோத்தமனைக் கிட்டியே மாயக்கடவோமல்லோம். விலக்ஷணமாய்ப் பூஜ்யமான திருமேனியை யுடையவன்.

௯௫.—ஒன்பதாம்பாட்டு. 'திருவாய்ப்பாடியில் யசோதாதிகள் வெண்ணெயோபாதி, தாரகங்காணும், நீர் தண்ணிதாக நினைத்திருக்கிற உடம்பு' என்றான்; பாவபந்த முள்ளவர்களுடைய வெண்ணெய் உனக்கு தாரகம்; அதில்லாத என்னோட்டை ஸ்பர்சம் உனக்கு நஞ்சு' என்றார்; 'நஞ்சோ தான், நஞ்சானமை குறையில்லையே?' என்றான் அவன்; இவரும் 'இது நஞ்சே, இதுக்கொரு குறையில்லை' என்றார்; 'ஆனால் பூதனையுடைய நஞ்சு தாரகமான நமக்கு ஆகாததில்லைகாணும்' என்றான், என்னப் பொருந்துகிறார். அன்றிக்கே, பூதனையை முடித்தாற்போலே, 'நான் அல்லேன்' என்று அகலப்புக்க என் நிர்ப்பந்தத்தைப் போக்கினான், என்பாருமுண்டு.

[மாயோம்] 'பிரிகையாவது விநாசம்' என்றிருக்கையாலே, இனி அகன்று மாயக்கடவோமல்லோமென்கிறார். நானும என்னோடு ஸம்பந்த முடையாரும் முடியக் கடவோமல்லோம். அன்றியே, இரண்டு தலையையு மழித்துக்கொள்ளக்கடவோமல்லோம். [தீய இத்யாதி] *ஸ்தந்யம் தத் விஷஸம்மிச்ரம் ரஸ்யமாஸீஜ் ஜகத்குரோ:* என்கிறபடியே ஜகத்துக்கு வேர்ப்பற்றானவனை முடிக்கப்பார்த்த நெஞ்சில் தீமையையுடையளாய், யசோதைப் பிராட்டியைப்போலே பரிவுதோற்ற ஜல்பித்துக்கொண்டு வருவாளாய், ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனானவனும் 'தாய்' என்று ப்ரமிக்கும்படி தோற்றின மஹாவஞ்சகையான பூதனை முடியும்படியாக. [தூயகுழவியாய்] ஐச்வரமான மேன்மையும் நடையாடாதிற்கச் செய்தே, அது தோற்றாதபடி கலப்பற்ற பிள்ளைத் தனத்தை யுடையனாய். இவனுக்குப் பிள்ளைத்தனத்தில் குறையில்லையாகில், அதின்கார்யம் காணுதொழிவானென்? என்னில்,—[விடப்பாலமுதா] விஷம் அம்ருதமாம் முஹூர்த்தத்திலே யாயிற்று பிறந்தது. தர்மியைவேறாக்க வொண்ணாமையாலே விரோதித்த ஆஸுரப்ரக்ருதிகள் முடிய ப்ராப்தம். [மாயன்] விஷம் அம்ருதமாம்படி அமுது செய்து தன்னைத் தந்து நம்மையுண்டாக்கின ஆச்சர்யபூதன். ('எனக்குமல்ல, பிறர்க்குமல்ல, அவனுக்கே' என்று அவள் அநந்யார்ஹமாக்குகையாலே அம்ருதமாயிற்று) பூதனையுடைய விஷம் அம்ருதமாம்படி அமுதுசெய்தவன் தான் ஆர்? என்னில், [வானோர் தனித் தலைவன்] அயர்வறுமமரர்களுக்குத் தனித்தலைவனானவன். [மலராள்மைந்தன்] அவர்கள் பரிந்து பரிசர்யைபண்ண, பெரியபிராட்டியாருந் தானுமா யிருக்குமவன். "தேவிமாராவார் திருமகள் பூமி யேவ மற்றமர

ராட்செய்வார்'' என்கிறபடியே. [மைந்தன்] அவனுக்கு மிடுக்கானவன்; அவனோட்டைச் சேர்த்தியாலே நித்யமான நவயௌவநத்தையுடையவ னென்னுதல். (அவனோட்டைச் சேர்த்தியாலே அழகியமணவாளப்பெருமாளா யிருக்கிறவ னென்னுதல்) [எவ்வுயிர்க்குந்தாயோன்] ஸகலாத்மாக்களுக்கும் தாய்போலே பரிவனானவன். [தம்மான்] ஸர்வேச்வரன். [என் அம்மான்] நான் தன்னை அகன்று முடிந்து போகாதபடி நோக்கினவன். நித்யஸூரிகளும் மற்றுமுள்ள ஸகலாத்மாக்களும் ஒரு தட்டும், நான் ஒருதட்டுமாம்படி என்பக்கலிலே விசேஷ கடாக்ஷத்தைப் பண்ணினவ னென்றுமாம். [அம்மாமூர்த்தியைச் சார்ந்தே] விலக்ஷணமான திருமேனியையுடைய அம்மஹாபுருஷனைக் கிட்டி மாயக்கடவோமல்லோம்.

சார்ந்தவிருவல்வினைகளுஞ்சரித்து மாயப்பற்றறுத்து*
தீர்ந்துதன்பால்மனம்வைக்கத் திருத்திவீடுதிருத்துவான்*
ஆர்ந்தஞானச்சுடராகி அகலங்கீழ்மேலளவிறந்து*
நேர்ந்தவுருவாயருவாகும் இவற்றினுயிராம்நெடுமாலே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், அடிமைசெய்கையிலே உந்முகராம்படிபண்ணித் தம்மைத் திருநாட்டிலே கொண்டுபோக உத்யோகியாநின்றுள்ள எம்பெருமானுக்குத் தம்பக்கலுண்டான வ்யாமோஹத்தைப் பேசுகிறார்.

[சார்ந்தஎன்று தொடங்கி] - ஆத்மாவோடு அவிநாபூதமான புண்ய பாபரூபங்களான கர்மங்களை அநாயாஸேந போக்கி விஷயங்களிலுள்ள ருசி வாஸநைகளை அறுத்து அத்தாலே க்ருத க்ருத்யனும், தன்னுடைய ஸௌந்தர்யாதிகளைக் காட்டித் தன்பக்கலிலே மநஸ்ஸு ப்ரவணமாம்படி பண்ணி. 'தீர்ந்து தன்பால் மனம் வைக்கத் திருத்தி' என்றதால் - அநந்ய ப்ரயோஜநனுக் கொண்டு தன் பாடே மநஸ்ஸை வைக்கும்படி திருத்தி யென்றுமாம். [வீடுதிருத்துவான்] - ஆழ்வார் எழுந்தருளுகிற மஹோத்ஸவத்துக்குத் திருநாடு கோடிக்கத் தொடங்கினான். பரிபூர்ண ஜ்ஞாநப்ரபனும், ஸர்வகதனும், அதிஸூக்ஷ்மமான சேதநாசேதநங்களுக்கு ஆத்மாவாய் ஆச்ரித விஷயத்தில் நிரதிசய வ்யாமோஹத்தையுடையவன். ஆழ்வாரை இப்படி திருத்துகைக்காக வ்யாப்தனா யிருந்தா னென்றும், அவரைப் பெற்ற பின்பு வ்யாப்தி பூர்ணமாயிற்றென்றும் வ்யாப்திக்கு ப்ரயோஜநஞ் சொல்லுவர்.

இ.—பத்தாம்பாட்டில், 'மாயோம்' என்றவாறே ஹ்ருஷ்டனாய், அடிமைசெய்கையிலே உந்முகராம்படி, தம்மை 'அயோக்யன்' என்று அகலாத தேசத்தேறக் கொடுபோவதாகப் பரமபதத்தைக் கோடிக்கத் தொடங்கினா னென்கிறார்.

[சார்ந்த] - இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபாநுபந்தியோ வென்னலாம்படி பொருந்தியிருக்கை. *[இருவல்வினைகளுஞ் சரித்து]* - இருவகைப்பட்ட புண்யபாபரூபமான கர்மங்களை விரகர் நெடுஞ்சுவர் தள்ளுமாபோலே அநாயாஸேந போக்கி. [வல்வினை] - ஸர்வசக்தியானவனும் அநுஸந்தித்தால் நெஞ்சு உளுக்க வேண்டும்படி யிருக்கை. *[சார்ந்த]* - எள்ளும் எண்ணெயும்போலே சேர்ந்திருக்கை. [மாயப் பற்றறுத்து] - விஷயங்களில் ருசிவாஸனைகளைப் போக்கி. மாயை - அஜ்ஞாநம்; அத்தாலே - ருசியை நினைக்கிறது. பற்று - வாஸனை. *[தீர்ந்து]* - க்ருதக்ருத்யனா யென்னுதல், அநந்யப்ரயோஜநனா யென்னுதல். [தன்பால் மனம்வைக்கத்திருத்தி] - விரோதியைப் போக்குமளவன்றிக்கே மநஸ்ஸுக்குத் தானே விஷயமாம்படிபண்ணி. *[வீடு திருத்துவான்]* - பரமபதத்தைக் கோடிக்கத் தொடங்குவான். அதாகிறது- ஆழ்வார் எழுந்தருளுகிற மஹோத்ஸவத்தாலே ஒருபுதுமைதோற்றியிருக்கை. [ஆர்ந்தஞானச்சுடராகி] - பரிபூர்ணஜ்ஞாந ப்ரபனாய். [அகலங்கீழ்மேலளவிறந்து] - பத்துத்திக்கையும் வ்யாபித்து ஸர்வகதனா யென்றபடி. [நேர்ந்த உருவாய் அருவாகும் இவற்றினுயிராம்] - அதிஸூக்ஷ்மமான சேதநாசேதநங்களாகிற இவற்றுக்கு அந்தராத்மாவாய். இப்போது வ்யாப்தி சொல்லுகிறதென்? என்னில், - ஒருவனைப் பிடிக்கைக்காக ஊரைவளைவாரைப்போலே, இவரை அகப்படுத்துகைக்காக வ்யாப்தனாகிறது. அன்றியே, இவர்

கிட்டினபின்பு வ்யாப்தியும் ஸப்ரயோஜநமாயிற் றென்னவுமாம் [நெடுமாலே] - என்பக்கலிலே அதிவ்யாமோஹத்தை யுடையவன். இவர்பக்கல் பண்ணின வ்யாமோஹம் முனியேநான்முகனளவும் செல்லுகிறதாயிற்று: அவன் தெளிந்துவந்து முகங்காட்டி க்ரமத்தாலே கொடுபோகப்பற்றாத கலக்கத்தின் காரியம் நடுவடைய. நெடுமால் - வீடுதிருத்தும் ஸ்வபாவ னென்று அந்வயம்.

௧0.—பத்தாம்பாட்டு. இவரை இப்படி இசைவித்துவைத்து, ஒரு புதுமை செய்ய வேண்டாதபடியான பரமபதத்தைக் கோடிக்கத் தொடங்கினான்.

[சார்ந்தவிருவல்வினைகளும் சரித்து] *திலதைலவத் தாருவஹ்நிவத்* என்கிறபடியே பிரிக்கவொண்ணாதபடி பொருந்திக்கிடக்கிற புண்யபாபரூப கர்மங்களையும் சரித்து, ஸர்வசக்தியான தான் போக்குமன்றும் போக்கவொண்ணாதபடி சதசாகமாகப் பணைத்த வினைகளை, விரகர் நெடுஞ்சுவர் தள்ளுமாபோலே போக்கி. [மாயப்பற்றறுத்து] ருசிவாஸனைகளையும் கழித்து. [தீர்ந்து] தான் க்ருதக்ருத்யனாய் என்னுதல்; அன்றிக்கே, [தீர்ந்து தன்பால் மனம்வைக்கத் திருத்தி] 'அல்லேன்' என்று அகலாதே தனக்கே தீர்ந்து, தன்பக்கலிலே நெஞ்சை வைக்கும்படி திருத்தி. [வீடுதிருத்துவான்] கலங்காப்பெருநகரத்துக்கும் ஒரு புதுமை பிறப்பியாநின்றான். [ஆர்ந்த ஞானச் சுடராகி] பரிபூர்ணஜ்ஞாந ப்ரபனாய். [அகலம் கீழ்மேலளவிறந்து] பத்துத் திக்கிலும் வ்யாபித்து. [நேர்ந்த வுருவாயருவாகு மிவற்றினுயிராய்] அதிஸூக்ஷ்மமான சேதநா சேதநங்களுக்கும் ஆத்மாவா யிருக்கிற, அன்றிக்கே, நேர்ந்த - கிட்டின; அதாவது ப்ரத்யக்ஷபரித்ருஷ்டமான ப்ரக்ருத்யாத்மாக்களுக்கும் ஆத்மாவா யென்றுமாம். [நெடுமால்] இப்படி யிருக்கிற நெடுமால் வீடு திருத்துவானானான். வ்யாப்தியும் இவரைப் பெற்றபின்பு புதுக்கணித்த தென்னுதல்; அன்றியே, ஒருவனைப் பிடிக்க நினைத்து ஊரை வளைவாரைப்போலே, இவரைத் திருத்துகைக்காக வ்யாப்தனாயிருந்தானென்னுதல். [நெடுமாலே] * முனியே நான்முகனளவும் அவன் பண்ணின உபகாரத்தைச் சொல்லுகிறது. அவன் தெளிந்துவந்து கொடுபோகப் பற்றாமே கூப்பிடுகிறாரிறே நடுவெல்லாம்.

**மாலே! மாயப்பெருமானே! மாமாயனே! என்றென்று*
மாலேயேறிமாலருளால் மன்னுகுருகூர்ச்சடகோபன்*
பாலேய்தமிழரிசைகாரர் பத்தர்பரவுமாயிரத்தின்*
பாலேபட்ட இவைபத்தும் வல்லார்க்கில்லைபரிவதே. (11)**

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார்க்கு உள்ள பலம் அருளிச்செய்கிறார்.

[மாலேயென்று தொடங்கி] - பெரியோனேயென்றும், ஆச்சர்யமான குணங்களை யுடையவனே யென்றும், ஆச்சர்யசேஷ்டிதங்களையுடையவனேயென்றும் அவனுடைய வைலக்ஷண்யத்தை அநுஸந்தித்து 'எம்பெருமானுக்கு அடிமை செய்வோமல்லோம்' என்று ஏங்கி அடிமைசெய்யப் பெருமையாலே அவஸந்நராய், மீளவும் அவனுடைய நிரவதிகக்ருபையாலே சேர்ந்து அடிமை செய்யப்பெற்றுத் தாம் உளரான ஆழ்வார். [பாலேய் தமிழ ரிசைகார ரென்று தொடங்கி] இயலறிந்துகொண்டார் இசையறிவார் பகவத்குணவித்தர் விரும்பும் ஆயிரத்திலும் இத்திருவாய்மொழி வல்லார்க்கு எம்பெருமானுடைய வைலக்ஷண்யத்தைக் கண்டு, 'தாம் அயோக்யர்' என்று அகலும் துஃகமில்லை. பாலென்று - தமிழ்நூல். பாலேய் தமிழ் - பால்போன்ற தமிழ்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியைக் கற்றார்க்கு 'அயோக்யன்' என்று அகலும் து:கமில்லை யென்கிறார்.

[மாலே] - ஸ்வரூபத்தாலும் ஐச்வர்யத்தாலு முண்டான வைலக்ஷண்யத்தை யுடையவனே! [மாயப்பெருமானே] - ஆச்சர்யமான குணங்களையுடையவனே! [மாமாயனே] - ஆச்சர்யமான சேஷ்டி

தங்கனையுடையவனே! [என்றுஎன்றுமாலேயேறி] - இவற்றை அநுஸந்தித்துப் பிச்சேறி. அதாகிறது - 'அயோக்யன்' என்று அகலுகை [மாலருளால் மன்னுகுருகூர்ச்சடகோபன்] - அவனும் தன்வ்யாமோஹத் தாலேயாயிற்று இவரைச் சேர்த்துக்கொண்டது. அவன் தன்செல்லாமையைக் காட்டிச் சேர்த்துக் கொண்டபடியை கண்டு ப்ரீதராய், அது உள்ளடங்காமையாலே வழிந்து புறப்பட்ட இத்திருவாய் மொழிக்குஉண்டான லோகபரிக்ரஹத்ததைச் சொல்லுகிறது — [பாலேய் தமிழர்] - பாலோடொத்துள்ள தமிழறிவார். பாலென்று - தமிழ் நூ லென்றுமாம். [இசைகாரர்] - இசையறிவார். [பத்தர்] - ஸர்வேச் வரனும் ஆழ்வாருமான பரிமாற்றத்திலே கால்தாழ்ந்திருக்குமவர்கள். பாலேய்தமிழ ரென்கிறது - முதலாழ் வார்களை. இசைகார ரென்கிறது - ஸ்ரீமதுரகவிகள் போல்வாரை. பத்தரென்கிறது பெரியாழ்வார் போல் வாரை. ஸ்ரீபராங்குசநம்பி, ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர், பிள்ளையுறங்கா வில்லிதாஸர் போல் வார் என்னுமாம், ஆழ்வான், ஒருருவிலே. [பரவும் ஆயிரம்] - அக்ரமமாகக் கூப்பிடுகை. [பாலேபட்ட] - ஆயிரத்தினருகேபட்ட, உள்ளேயுண்டான. [பட்ட] - 'முத்துப்பட்டது' என்றாற்போலே. [பரிவது இல்லை] - 'அயோக்யன்' என்று அகலும் துக்கமில்லை.

௰௧. – *நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லார்க்கு, அவன்வரக் கொள்ள அயோக்யதாநுஸந்தாநம் பண்ணி அகன்று இவர் பட்ட க்லேசம் படவேண்டா வென்கிறார்.*

[மாலே] ஸ்வரூபத்தால் வந்த விபுத்வம். [மாயப்பெருமானே] குணத்தால் வந்த விபுத்வம். [மாமாயனே] சேஷ்டிதங்களால் வந்த ஆதிக்யம். [என்றென்று மாலேயேறி] ஏவம்விதமான வைலக்ஷண்யத்தை அநுஸந்தித்து, 'நான் அயோக்யன்' என்று அகலும்படி பிச்சேறி. [மாலருளால் மன்னுகுருகூர்ச்சடகோபன்] தன்னை முடித்துக்கொள்வதாகக் கழுத்திலே கயிற்றை யிட்டுக்கொண்டவனை யறுத்து விழவிடுவாரைப்போலே, அகன்று முடியப்புக்க இவரைப் பொருந்தவிட்டுக்கொள்ள, அவனருளாலே பொருந்தின ஆழ்வார். பிடிதோறும் நெய்யொழியச் செல்லாத ஸுகுமாரரைப்போலே, நின்ற நின்ற நிலைகள்தோறும் அவனருளொழிய நடக்கமாட்டார். [பாலேய்தமிழர்] பால்போலே இனிய தமிழையுடைய வர்கள். [இசைகாரர்] இயலுக்கு இசைய இசையிடவல்லவர்கள். ஸ்ரீமதுரகவிகளையும் நாதமுனிகளையும்போலே யிருக்குமவர்கள். [பத்தர்] பகவத்குணாநுபவத்தில் இவர்தம்மைப் போலே, * "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்று இருக்குமவர்கள். ஆழ்வான் ஒருருவிலே, "ஸ்ரீபராங்குசநம்பியை பாலேய் தமிழரென்கிறது; இசைகாரரென்கிறது ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையரை; பத்தரென்கிறது பிள்ளையுறங்கா வில்லிதாஸரை" என்று பணித்தானும். "பாலேய்தமிழரென்கிறது முதலாழ்வார்களை; இசைகாரரென்கிறது திருப் பாணாழ்வாரை; பத்தரென்கிறது பெரியாழ்வாரை" என்று ஆளவந்தா ரருளிச்செய்வர். இயலறிவார் இசையறிவார் பகவத்குணவித்தரா யிருப்பார். இவர்கள் [பரவும்] இவர் அகலுகை தவிர்ந்து பாடினபின்பு உண்டான லோகபரிக்ரஹத்தைச் சொல்லுகிறது. [ஆயிரத்தின்பாலேபட்ட] 'கடலிலே முத்துப் பட்டது' என்னுமாபோலே ச்லாக்யமான ஆயிரத்தின் நடுவேபட்ட இத்திருவாய்மொழி வல்லார்க்கு. [இல்லைபரிவது] பரிவதில்லை. *அஞ்சிறைய மடநாரையிலே தூதுவிட்டு அவன் வந்து ஸம்ச்லேஷோந்முகனானவாறே 'அயோக்யன்' என்று அகன்றுபடும் து:கமில்லை.

முதற்பாட்டில், 'அயோக்யன்' என்று அகன்றார்; இரண்டாம் பாட்டில், அகலுகைக் குத்தானும் அதிகாரியல்லேனென்றார்; மூன்றாம்பாட்டில், சீலகுணத்தைக் காட்டித் துவக்கத் துவக்குண்டார்; நாலாம்பாட்டில், அகலவொட்டுவர்களோ உடையவர்கள்? என்றார்; அஞ்சாம்பாட்டில், உடைய உன் திருவடிகளைக் கிட்டும்படி பார்த்தருளவேணுமென்றார்; ஆறாம்பாட்டில், அவன் அரைக்ஷணம் தாழ்க்க, முடியப்புகாநின்றேனென்றார்; ஏழாம்

பாட்டில், அவ்வளவில் அவன் வரக்கொள்ள, அயோக்யன் என்று அகன்றார். எட்டாம் பாட்டில், திருவாய்ப்பாடியில் வெண்ணெயோபாதி உம்மோட்டை ஸம்ச்லேஷம் தாரகம் என்றான் அவன்; ஒன்பதாம்பாட்டில்' அப்படியல்ல, இது நஞ்சென்ன,- நஞ்சுதானே நமக்கு தாரகமென்றான்; பத்தாம்பாட்டில், தம்மை யிசைவித்துப் பரமபதத்தைக் கோடிக்கத் தொடங்கினானென்றார்; நிகமத்தில், கற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

ஆழ்வார் திருவடிகளே சரணம். எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆறுந்திருவாய்மொழி—பரிவதில் : ப்ரவேசம்

—:—

ஒ.—ஆறுந்திருவாய்மொழியில், அவாப்தஸமஸ்தகாமனாய் நிரபேக்ஷனாய்ப் பரிபூர்ணனான எம்பெருமானை, அதிக்ஷுத்ரனும் அதிக்ஷுத்ரோபகரணனுமாயிருக்குமவன் ஆச்ரயிக்கைக்கு உபாயமுண்டோ? என்று ஆசங்கிப்பார்க்கு, அவன் அத்யந்த பரிபூர்ணனேயாகிலும் அந்தப் பூர்த்தியெல்லாம் ஸ்வாராததைக்கு உறுப்பாம்படி ச்ரி:பதியாய் ஸுசீலனாகையாலே ஆச்ரயிக்கப் புக்கார்க்கு வித்தவ்யயாயாஸங்களில்லாமையாலும், ப்ரத்யவாயப்ரஸங்க மில்லாமையாலும், ப்பலாதிக்யத்தாலும், த்ரவ்யாதி கார்யங்களுடைய ப்ரகாரவிசேஷங்கொண்டு கார்யமில்லாமையாலும், பகவத்கிதா மத்யமஷட்காதிகளில் ப்ரதிபாதித்தாற்போலே ஆச்ரயணம் ஸுகரமென்று அருளிச் செய்கிறார்.

இ.—ஆறுந்திருவாய்மொழியில், அவாப்தஸமஸ்தகாமனாய்ப் பரிபூர்ணனாய் ச்ரிய:பதியாயிருக்கிற ஈச்வரனை க்ஷுத்ரனுமாய் க்ஷுத்ரோபகரணனுமானவன் ஆச்ரயிக்கைக்கு உபாயமுண்டோ? என்னில், —இவன் இட்டதுகொண்டு வயிறுநிறையவேண்டும்குறை யில்லாமையாலே அந்தப்பூர்த்தியும் ஸ்வாராததைக்கு உறுப்பு: ச்ரி:யபதித்வமும் தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கும் சீலாதிகளுக்கு அடியாகையாலே அதுவும் ஸ்வாராததைக்கு உடலாகக் கடவது: வித்தவ்யயாயாஸாதிக ளில்லாமையாலும், ப்ரத்யவாய ப்ரஸங்க மில்லாமையாலும், த்ரவ்யாதி கார்யங்களுடைய விசேஷ நியதி யில்லாமையாலும், ''த்வதங்க்ரி முத்திச்ய'' ''யா:க்ரியா:'' ''பத்ரம்புஷ்பம்'' ''அந்யத்பூர்ணாத்'' இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே ஆச்ரயணம் ஸுகர மென்கிறார்.

ஈடு.—முதல் திருவாய்மொழியிலே, அவன் ஸர்வஸ்மாத்பரனாயிருக்கிற படியைத் தாம் அநுபவித்தார்; இரண்டாந் திருவாய்மொழியிலே, இப்படி பரனானவனை பஜியுங்கோளென்றார்; அநந்தரம், பஜநத்துக்கு உறுப்பாக அவனுடைய ஸௌலப்யத்தை அருளிச் செய்தார்; அதுக்கு உறுப்பாக அவனுடைய அபராதஸஹத்வத்தை அருளிச்செய்தார்; அதுக்கு உறுப்பாக சீலவானென்றார். இவை யெல்லாம் உண்டானாலும் பசையில்லையே பரிமாற்றத்திலே அருமை தட்டியிருக்குமாகிலென்ன,—அது வேண்டா, ஸ்வாராதனென்கிறார்.

கீழில் திருவாய்மொழியிலே, 'அயோக்யன்' என்று அகன்ற இவரைப் பொருந்தவிட்டுக்கொண்ட இதுக்கு ஒரு ப்ரயோஜநங் கண்டிலோமே! பொருந்தவிட்டுக் கொள்ளுகிறது தான் ஒரு பரிமாற்றத்துக்கிறே; அதில், க்ஷுத்ரனை இவனாலே க்ஷுத்ரோபகரணங்களைக் கொண்டு ஸர்வேச்வரனை ஆச்ரயித்துத் தலைக்கட்டப் போகாமையாலே. ஸம்ஸாரியான இவனாலே நேர்கொடு நேர் ஆச்ரயித்துத் தலைக்கட்ட வொண்ணாதபடி அவாப்தஸமஸ்த காமனாயிருக்கையாலும், இவனிட்டதுகொண்டு த்ருப்தனாக வேண்டாதபடி பரிபூர்ணனாகையாலும்,

இவ்விரண்டுக்குமடியாக ச்ரிய:பதியா யிருக்கையாலும், இவன் அவனையாச்ரயிக்கை யென்று ஒருபொருளில்லையீ! என்ன, அது வேண்டா, அப்படிகளடைய ஆச்ரயணத்துக்கு உறுப்பு: இவன் தன் ஸ்வரூபலாபத்துக்கு உறுப்பாகக் கிஞ்சித்கரிக்குமிதுதான் தன் பேருக நினைத்திருக்கும்; இதுக்கு மேற்படத் தனக்கு வேரென்று தேடவேண்டாதபடி எல்லாம் கைப்புகுந்திருப்பாளெருவனாகையாலும், இவன் இட்டதுகொண்டு த்ருப்தனாகவேண்டாதபடி பரிபூர்ணனாயிருக்கையாலே இவன்பக்கல் பெற்றதுகொண்டு முகங்காட்டுகைக்கு உடலாயிருக்கையாலும், ச்ரிய:பதியாகையாலே ஸுசீலனாயிருக்கையாலும், இதரஸமாச்ரயணம் போலே பகவத்ஸமாச்ரயணம் அருமைப் பட்டிராது. இனி இது தன்னிலே யிழியவே, விரோதிகளடங்கலும் நசிக்கும்; ஆச்ரயணந்தான் க்லேசரூபமாயிருக்கையன்றியே போகரூபமா யிருக்கும்: இவனுக்கு வருந்தி ஒன்றுந் தேடவேண்டாதபடி பெற்றது உபகரணமாயிருக்கும்; பகவத்ஸமாச்ரயண மாகையாலே ப்ரத்யவாயப்ரஸங்கமில்லை; த்ரவ்யநியதி, காலநியதி, அதிகாரிநியதி இல்லை; இப்படி யிருக்கையாலே ஆச்ரயணம் ஸுகரம்; ஆச்ரயியுங்கோ ளென்கிறார்.

த்வதங்க்ரிமுத்திச்ய அல்லாத ஆச்ரயணீயரிற்காட்டில் இவனுக்கு உண்டான வ்யாவ்ருத்தியும், இவன்பக்கல் சேஷபூதனுக்கு இழியுந்துறை திருவடிகளென்னுமிடமுஞ் சொல்லுகிறது. *கதாZபி* காலநியதியை விதிக்கிற கர்மத்திற் காட்டில் வ்யாவ்ருத்தி. *கேநசித்* அதிகாரிநியதியை விதிக்கிறவற்றிற் காட்டில் வ்யாவ்ருத்தி. *யதாததா* க்ரமநியதியை அபேக்ஷித்திருக்கும் கர்மங்களில் வ்யாவ்ருத்தி. *வா அபி* என்கையாலே விகல்பஸமுச்சயங்களில் ஒன்றேயாகக்கடவ தென்கிற கர்மத்திற்காட்டில் வ்யாவ்ருத்தி. *ஸக்ருத்* தீர்க்கஸத்ராதிகளில் வ்யாவ்ருத்தி. *க்ருத:* ஆதிகர்மணிக்தனாய், உத்யோகமாத்ரத்திலே பலமாகச் சொல்லுகிறது. *அஞ்ஜலி:* இப்படி யிருக்கிறது எது? என்னில், *அஞ்ஜலி:* வித்தவ்யயாயாஸஸஹகாரி ஸாத்யமான அச்வமேதாதிகளில் வ்யாவ்ருத்தி. *ததைவ* தேசாந்தரே காலாந்தரே நின்று பலிப்பனவாகச் சொல்லுகிற கர்மங்களில் வ்யாவ்ருத்தி. *முஷ்ணாதி* 'இவன்தான் தொடர்ந்து பிடிக்கும்' என்று இவனை யறியாமே போமென்கை; 'சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தன' என்கிறபடியே. *அசுபாநி* ஒரு கர்மம் ஒரு பாபத்தைப் போக்குவதாகச் சொல்லுகிறவதில் வ்யாவ்ருத்தி *அசேஷத:* வாஸனை கிடக்கப்போக்கும் கர்மங்களில் வ்யாவ்ருத்தி. *சுபாநி* ஒருஸுக்ருதம் ஒரு பலத்தைப் பலிப்பதாகச் சொல்லுகிறவதில் வ்யாவ்ருத்தி. *புஷ்ணாதி* தீமையைப் போக்கிவிடுமளவன்றிக்கே, அது போனவிட மெங்கும் நன்மையாலே நிறைக்கும். *நஜாதுஹீயதே* பலத்தைக் கொடுத்துத்தான் நசித்துப்போமதில் வ்யாவ்ருத்தி. *பத்ரம் புஷ்பமித்யாதி* த்ரவ்யதாரதம்யம் பார்ப்பதில்லை; இடுகிறவன் நெஞ்சில் ஈரமேயாயிற்று பார்ப்பது. *அச்நாமி* இப்படி தரப்பட்டவற்றை மநோரதபதத்துக்கும் அவ்வருகானவை கைப்புகுந்தாற்போலே நினைந்திருப்ப னென்னுதல், அவன் கலங்கித் தருமா போலே நானும் கலங்கி அடைவுகெட விநியோகம் கொள்ளுவ னென்னுதல். *அந்யத் பூர்ணாதபாம் கும்பாத் இத்யாதி:*, *நசேச்சதி*. இவனுடைய உத்தியோகமாத்ரத்திலே வயிறு நிறையுமாயிற்று அவனுக்கு. *யா: க்ரியாஸ் ஸம்ப்ரயுக்தாஸ் ஸ்யு:* அபிமத விஷயத்தின் பரிமாற்றம்போலே எல்லாம் உத்தேச்யமாய்த் தோற்றும். *ஏகாந்தகதபுத்திபி:* இதுஒன்றுமே வேண்டுவது. *தாஸ்ஸர்வா:* அவற்றிலொன்றும் விட்டுப்பிடியான். *சிரஸா ப்ரதிக்ருஹ்ணாதி* இவன் காலாலே போகட்டவற்றையும் அவன் தலையாலே சுமக்கும். *தேவ:* காலாலே கொள்ளப் பிறந்தவன். *ஸ்வயம்* செல்வக்கேடப்பு உண்டேன்று, மஹிஷிஸ்வேதத்துக்கு ஆளிடவொண்ணாதே. ஆக, இப்படிகளாலே அவனுடைய ஸ்வாராததையைச் சொல்லுகிறார், இத்திருவாய்மொழியாலே.

பரிவதில்ஈசனைப்பாடி* விரிவதுமேவலுறுவீர்!*
பிரிவகையின்றிநன்னீர்தூய்* புரிவதுவும்புகைபூவே. (1)

ஒ.—முதற்பாட்டில், எம்பெருமான் பரிபூர்ணனாகையாலும் சீலவானாகையாலும் ஏதேனும் பத்ரபுஷ்பாதி த்ரவ்யங்களாலே த்ருப்தனுவா னொருவ னென்கிறார்.

[பரிவதில்ஈசனை] - ஹேயப்ரத்யநீகனை ஸர்வேச்வரனை. ஹேயப்ரத்யநீகத்வம் கல்யாணகுணங்களுக்கும் உபலக்ஷணம். இத்தால் ப்ராப்யஸ்வரூபம் சொல்லிற்று. [பாடியென்று தொடங்கி] - ஸம்ஸார முக்தராய் அநுபவித்து, அவ்வநுபவஜநித ப்ரீதியாலே "ஏதத் ஸாமகாயந்நாஸ்தே" என்னும்படியாலே பாடி விஸ்த்ருதராகையைப் பெறவேண்டி யிருப்பீர்! [பிரிவகையென்று தொடங்கி] - உபகரணங்களில் குறைவு பார்த்து அகலுகை தவிர்ந்து அஸம்ஸ்க்ருதமான ஜலத்தை ஏதேனும் ஒருபடி ப்ரயோகித்து மற்றும் அவனுக்குக் கொடுப்பதுவும் ஏதேனும் புகையும் ஏதேனும் பூவும்.

இ.—முதற்பாட்டில், ஆச்ரயிப்பார்க்கு த்ரவ்யநியதி யில்லை யென்கிறார்.

[பரிவதில்ஈசனை] - ஹேயப்ரத்யநீகனை ஸர்வேச்வரனை. பரிவென்று - து:கமாதல், பக்ஷபாதமாதல் உபாஸகனுக்கு து:கேந ஆச்ரயிக்கவேண்டி யிருக்குமதுவும் - ஆச்ரயணீயனுக்கு ஹேயம். குருவாக ஆச்ரயித்தவன்பக்கலிலே பக்ஷபதித்து லகுவாக ஆச்ரயித்தவன்பக்கலிலே நெகிழ்ந்திருத்தல் செய்யுமதுவும் - ஆச்ரணீய வஸ்துவுக்கு ஹேயம். இவையில்லாமையாலே ஹேயப்ரத்யநீகனென்கை. ஹேயப்ரத்யநீகதை புக்கவிடத்தே கல்யாணகுணங்களும் புகக்கடவதாகையாலே, இது அதுக்கும் உபலக்ஷணம். [ஈசனை] - இவனிடுகிறதிற்குறையுள்ளது தன் குறையாம்படி யிருக்கிற ஸம்பந்தத்தைச் சொல்லுகிறது இழவுபேறு தன்னதாம்படி யிருக்கும் ஸம்பந்தத்தை யுடையவனை. ஆச்ரயணீயனும் ப்ராப்யனுமாகையிறே உபயவாக்யத்திலும் நாராயணசப்த ப்ரயோகம் பண்ணிற்று; அல்லாதார் துராராதராகையாலே அநாச்ரயணீயர். [பாடிவிரிவது மேவலுறுவீர்] - ஸம்ஸாராங் முக்தராய் ஸமஸ்த கல்யாணகுணாத்மகனை அநுபவிக்கையாலே, அவ்வநுபவத்துக்குப் போக்கு வீடாக "ஏதத்ஸாமகாயந்நாஸ்தே" என்கிறபடியே பாடி விஸ்த்ருதராகையாகிற ஸம்பத்தைப் பெறவேண்டி யிருப்பீர்! இந்தக் கனத்த பேற்றுக்குச் செய்யவேண்டும் க்ருஷி என்னென்னில், — [பிரிவகை யின்றி] - பிரிவாகிற வகையின்றி; 'நினைந்து நைந்து' 'சூட்டுநன்மாலைகள்' என்கிறபடியே விலக்ஷணர் ஆச்ரயிக்குமவனை நாம் ஆச்ரயிக்கையாவது என்? என்று அகலுகைக்கு ஒரு வகையிட்டுக்கொண்டு அகலாதே. [நல்நீர்] - ஒரு கந்தத்தாலும் உபஸ்கரியாத வெறு நீர் [தூய்] - அக்ரமமாக ப்ரயோகித்து [புரிவதுவும்] - நீங்கள் அருட்கொடையாகக் கொடுக்குமதுவும். [புகைபூவே] - அகிற்புகை கருமுகைப்பூ என்று விசேஷியாமையாலே, ஏதேனும் புகையும் ஏதேனும் புஷ்பமும் அமையும்; இது ஸ்வாராததையைப் பற்றச் சொல்லிற்று. இவனைப் பார்த்தால், "எண்டிசையு முள்ள பூக்கொண்டு" என்றும், "நாடாத மலர் நாடி" "தூமநல்விரை மலர்கள் துவளறவாய்ந்துகொண்டு" என்றுஞ் சொல்லக்கடவதிறே; அவனைப் பார்த்தால், "கள்ளார் துழாயும்" இத்யாதிகளிற் சொல்லுகிற மாத்ரமே அமையும். "நகண்டகாரிகா புஷ்பம் தேவாயவிநிவேதயேத்" என்கிற விதியாலே தவிருகிறதும்-ப்ரேமபரவசனுய்ச் சென்று பறிக்கிறவன்கையில் முள்பாயாமைக்காக" என்று பட்டர் அருளிச் செய்வர். ஸ்ரீ வராஹபுராணத்திலே ஸ்ரீவராஹநாயனார்க்கு முத்தக்காசை அமுது படியாகச் சொல்லிற்று.

ஈடு.—முதற்பாட்டு. எம்பெருமான் பரிபூர்ணனாகையாலே ஸ்வாராத னென்கிறார்.

[பரிவது] து:கமாகவுமாம், பக்ஷபாதமாகவுமாம். [இல்] இல்லையென்பது இல்லாமை. இத்தால் து:கமில்லை யென்னுதல், பக்ஷபாதமில்லை யென்னுதல். து:கமாவது 'நாம் இடுகிறவை அவன் கொள்ளுமோ? கொள்ளானோ?' என்று ஆச்ரயிக்கிற இவன் நெஞ்சிலே து:கமுண்டாமன்று, ஆச்ரயணீயனுக்கு து:கமாமிறே; அன்றிக்கே, பக்ஷபாதமானபோது ஒருவன் குருவாக த்ரவ்யத்தைக்கொடுத்தால் அவன்பக்கலிலேபக்ஷபதித்திருக்குமாகில், துஷ்ப்ராபன் என்று ஆச்ரயணீயனுக்கு ஹேயமிறே; இவையில்லாதபடி இருக்கையாலே ஹேயப்ரத்யநீகனென்றபடி. தரதமவிபாகம் பாராதே யிருக்கைக்கு அடி என்? என்னில் [ஈசனை] வகுத்த ஸ்வாமி யாகையாலே. ஹேயப்ரத்யநீகதை புக்கவிடத்தே கல்யாணகுணங்களும் புகுமிறே; ஆக, ஹேயப்ரத்யநீகதையும் கல்யாணகுணயோகமும் சொல்லிற்றாயிற்று. [ஈசனை] புறம்பே ஒருவனுக்கு ஒருவன் விருந்திடும்போது நெடுநாள் பச்சைதேடி விருந்திட்டால், 'இவன் உண்டு என்னகுறை சொல்லப்புகுகிறானோ?' என்று நெஞ்சாறலோடே தலைக்கட்டவேண்டிவரும்; புத்ரன் பிதாவுக்கு விருந்திட்டால், உண்டாகில் உள்ள குறை தமப்

பன தாய்நெஞ்சாறல்பட வேண்டாதிருக்குமிறே; அப்படிப்பட்ட ஸம்பந்தத்தைப் பற்ற "ஈசன்" என்கிறது. [பாடி] ஸர்வேச்வரனைக் கிட்டினால் வாங்கியதியோடே நிற்கை யன்றிக்கே, ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டுப் பாடி. [விரிவதுமேவலுறுவீர்] *எதத் ஸாமகாயந்நாஸ்தே* என்று பாடி, விஸ்த்ருதராகையாகிற பேறு பெறவேண்டியிருப்பீர்! பேறு கனத்திருந்தது; நாங்கள் செய்ய வேண்டுவது என்? என்னில், [பிரிவகையின்றி] பிரிகையாகிற வகையின்றி; "இமையோர் பலரும் முனிவரும் புனைந்தகண்ணி நீர் சாந்தம் புகையோடேந்தி வணங்கினால் உன்பெருமை மாசூணாதோ?" என்று அகலவகையிட்டுக்கொண்டு அகலாதே. [நன்னீர்] ஏலாதிஸம்ஸ்காரமுமின்றிக்கேயிருக்கை. கேவலஜலமும் அமையும். [தூய்] *யதாததாவாபி* [புரிவதுவும்] இவன் அவனுக்கு அருட்கொடையாகக் கொடுக்குமதுவும். [புகைபூவே] அகிற்புகை, கருமுகைப்பூ என்றுவிசேஷியாமையாலே, ஏதேனும் புகையும், ஏதேனும் பூவுமமையும். 'செதுகையிட்டுப்புகைக்க அமையும்; கண்டகாலியிடவும் அமையும்' என்று பட்டர் அருளிச்செய்யும்படி. இத்தை பட்டரருளிச்செய்தவாறே *ந கண்டகாரிகாபுஷ்பம் தேவாய விநிவேதயேத்* என்று நின்றதே! என்று நஞ்சீயர் கேட்க, "அவனுக்கு ஆகாது என்கிறதல்ல; பறிக்கிற ஆச்ரிதன் கையிலே முள்பாயு மென்றதுக்காகத் தவிர்த்ததுகாணும்!" என்று அருளிச்செய்தார். "கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளையும், முள்ளார்முளரியு மாம்பலும்" என்று விஜாதீயங்களைச் சேர எடுக்கிறது கண்டீரே, த்ரவ்யதாரதம்யம் பார்ப்பதில்லை யென்கைக்காக; "புள்ளாயோரேனமுமாய்ப் புக்கிடந்தான்"—'அப்ராக்ருதத்ரவ்யம் வேணும்' என்று இருந்தானாகில் ஸ்ரீவைகுண்டத்தி லிரானோ? வாராஹகல்பம் பாராநிற்கச் செய்தே ஸ்ரீவராஹநாயனார்க்கு முத்தக்காசை அமுதுசெய்விப்பது' என்று கிடந்ததாய், 'இதென்ன மெய்ப்பாடுதான்!' என்று நஞ்சீயர் போர வித்தராயருளினார். "உள்ளாதாருள்ளத்தை யுள்ளமாக் கொள்ளோமே"—இப்படி அநுஸந்தியாதாருடைய ஹ்ருதயத்தை ஹ்ருதயமாக நினைத்திரோம். நாங்கள் பதின்மரும் என்று தம்மையொழிந்த ஆழ்வார்களையும்.

மதுவார்தண்ணந்துழாயான்* முதுவேதமுதல்வனுக்கு*
எதுவேதென்பணியென்னாததுவே* ஆட்செய்யுமீடே. (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், ஆச்ரயணத்துக்கு அதிகாரிநியம மில்லை யென்கிறார்.

[மதுவாரென்று தொடங்கி] - ஐச்வர்ய ஸூசகமாய், திருக்குழலின் ஸ்பர்சத்தாலே மதுஸ்யந்தியான திருத்துழாயை யுடையனாய் அபௌருஷேயமான வேதப்ரதிபாத்யனா யுள்ளவனுக்கு. [எதுவேதென்று தொடங்கி] - இப்படி விலக்ஷணனானவனுக்கு நான் அடிமை செய்கைக்கு அயோக்யனென்று பாராதே, அந்தரங்க வ்ருத்தியோடு பஹிரங்கவ்ருத்தியோடு வாசியின்றிக்கே எல்லாவ்ருத்தியுஞ் செய்யக்கடவனாகை, ஆட்செய்கைக்கு அதிகாரம்.

இ.—இரண்டாம்பாட்டில், த்ரவ்யநியதி யில்லாமையே யன்று, அதிகாரி நியதியுமில்லை யென்கிறார்.

[மதுவார் தண்ணந்துழாயான்] - 'பூவே' என்றது கீழ்; "மதுவார்" என்று தொடங்கிற்று இதில்; அந்தாதிக்குச் சேரும்படி யென்? என்னில்; — 'பூவாகில் மதுவோடே கூடியிருக்கையாலே சேரும்' என்று சொல்லுவர் தமிழர்; ஐச்வர்ய ஸூசகமாய்த் திருக்குழலின் ஸ்பர்சத்தாலே மதுஸ்யந்தியான திருத்துழாயையுடையவன். ஸர்வேச்வரத்வ லக்ஷணம் இதுவிறே. ஐச்வர்யமும் போக்யதையும் இருக்கிறபடி. [முதுவேதமுதல்வனுக்கு] - இவ்வொப்பனை யழகை அநுபவித்து ஏத்தப் புக்கு க்ஷம ரன்றிக்கே, இவ்விஷயத்தைப் பேசும்போது அபௌருஷேயமாகையாலே நித்யமான வேதமே யாகவேண்டாவோ? என்கிறார். வேதமுதல்வனாகையாவது - "சாஸ்த்ர யோநித்வாத்" என்கிறபடியே வேதப்ரதிபாத்யனென்கை. திருத்துழாய்மாலையாலே அலங்க்ருத னென்கைக்கு மேலில்லை ஸர்வாதிக னென்கைக்கு; அதுக்குமேலே ஒன்றிறே வேதைக ஸமதிகம்ய னென்னுமது. [எதுவேதென்பணி யென்னாததுவே] - வேதமுதல்வனுக்குப் பணி எது? என்பணி எது? என்னாததுவே; 'நித்யஸூரிகளன்றோ அவனுக்கு ஸத்ருசர்? நாம் செய்யுமது

எது?' என்று கைவாங்காதொழிகை. அந்தரங்க வ்ருத்தியோடு பஹிரங்க வ்ருத்தியோடு வாசியின்றிக்கே "அஹம்ஸர்வம்கரிஷ்யாமி" என்றிருக்கை யென்னவுமாம். [ஆட்செய்யுமீடு] - ஆட்செய்கைக்கு அதிகாரம்.

ஈடு.— இரண்டாம் பாட்டு. ஆச்ரயிக்குமவனுக்கு 'த்ரவ்யத்தில் குறைபார்த்து அகல வேண்டா என்றார் முதல்பாட்டில்; 'நான் அதிகாரியல்லேன்' என்று 'அகலவேண்டா' என்கிறார் இதில்.

[மதுவார்தண்ணந்துழாயான்] "புரிவதும்புகைபூவே" என்றது கீழ்; இதில் "மதுவார் தண்ணந்துழாயான்" என்று தொடங்கிற்று: இது சேரும்படியென்? என்ன, 'பூவாகில் மதுவோடே கூடியல்லது இராமையாலே சேரும்' என்று சொல்லுவார்கள் தமிழர்; வதுவார் தண்ணந்துழாயான்" என்று பாடமானபோது போரச்சேரும்; வதுவையென்று மணம், ஆர்தல் பூர்ணம். வதுவை'வது' என்று கடைக்குறைத்தலாய், நறுநாற்றத்தையுடைய துழா யென்றுமாம். இது தமிழர் போரச்சேருமென்பர். [மதுவாரித்யாதி] ஒருவாடல்மாலையைக் கொண்டுவந்து திருக்குழலிலேவளையமாகவைத்தால், திருக்குழலோட்டை ஸ்பர்சத்தாலே செவ்விபெற்று, மது நிரம்பிச் சிளையாறுபட்டு, வார்ந்து வெள்ளமிடாநிற்கும். [முதுவேத முதல்வனுக்கு] இவ்வொப்பனையழகு பேசும்போது இன்னமும் பாசிபூத்தவேதம் பேச வேண்டாவோ? நித்யமாய் அபௌருஷேயமான வேத ப்ரதிபாத்யனுயுள்ளவனுக்கு. வேதமுதல் வனுகையாவது, *சாஸ்த்ரயோநித்வாத்* என்கிறபடியே வேதப்ரதிபாத்யனென்கை. மதுவார் தண்ணந்துழாயானென்கையாலே ஸர்வாதிக னென்றதாயிற்று. முதுவேதமுதல்வனென் கையாலே பரிபூர்ண னென்றதாயிற்று. இரண்டும் ஸ்வாராதனென்கைக்கு உறுப்பாகிறது. [எதுவேது இத்யாதி] 'முதுவேதமுதல்வனுக்கு எதுபணி? என்பணிஏது? என்னுததுவே ஆட் செய்கைக்கு அதிகாரமாவது. 'நித்யஸூரிகளன்றோ அவனுக்கீடாக அடிமை செய்யவல்லார்? நான் செய்யுமது எது?' என்று தன்னைக்கொண்டு கைவாங்காதொழியுமதுவே. அன்றிக்கே, 'முதுவேதமுதல்வனுக்கு எதுபணி? ஏது என்பணி, என்னுததுவே—'இது அவனுக்கீடன்று' என்று சிலவற்றை விடாதே, ஸகலகைங்கர்யத்திலும் அந்வயிக்குமதுவே, ஆட்செய்கைக்கு அதிகாரமாவதென்னுதல்.

ஈடுமெடுப்புமிலீசன்* மாடுவிடாதென்மனனே*
பாடுமென்னுவவன்பாடல்* ஆடுமெனங்கமணங்கே. (3)

ஓ.—மூன்றும்பாட்டில், கீழிரண்டுபாட்டாலும் சொன்ன குணங்களை அநுஸந்தித்து, ஸர்வேச் வரன்பக்கலிலே தம்முடைய வாங்மந:காயங்கள் ப்ரவணமாயிருக்கிறபடியை அருளிச்செய்கிறார்.

[ஈடுமென்று தொடங்கி] - ஆச்ரிதரை ஜாத்யாதிகளுடைய அபகர்ஷமும் உத்கர்ஷமும் நிபந்தந மாக விடுதல் பற்றுதல் செய்யக் கடவ னன்றிக்கே நிருபாதிக சேஷியானவன் பாடு நின்றும் போகிற தில்லை என் மநஸ்ஸு. [பாடும் என்று தொடங்கி] - என்னுடைய வாக்கும் அவனுடைய இந்த குண ப்ரதிபாதகமான காதையைப் பாடாநின்றது; அங்கமும் தேவாவிஷ்டரைப்போலே ஆடாநின்றது.

இ.—மூன்றும்பாட்டில், கீழிரண்டுபாட்டிலும் சொன்ன குணங்களை அநுஸந்தித்துத் தாம்அதி கரித்த காரியத்தை மறந்து, அவன்பக்கல் தம்முடைய மநோவாக்காயங்கள் ப்ரவணமாயிருக்கிறபடியை அருளிச்செய்கிறார்.

[ஈடுமெடுப்புமிலீசன்] - 'ஜந்மவ்ருத்தாதிகளால் உத்க்ருஷ்டன்' என்று ஸ்வீகரித்தல், 'அபக் ருஷ்டன்' என்று உபேக்ஷித்தல் செய்யாத ஸர்வேச்வரன். ஜாத்யாதிகள் பார்க்க விரகில்லையே; ஸம் பந்தம் ஸர்வஸாதாரணமானபின்பு ஆரை விடுவது? [மாடுவிடாதென்மனனே] - அவன்பரிஸரத்தை விடுகிறதில்லை, என்மநஸ்ஸானது. ப்ரயோஜநத்தைப்பற்றக் கிட்டிற்றுகிலிறே, பலத்தளவிலே மீளுவது.

நான் அதிகரித்த கார்யத்துக்கு நெஞ்சு ஒழிகிறதில்லை. உம்முடைய அஹ்ருதயமான உக்தியே அமையாதோ எங்களுடைய ஹிதத்துக்கு? என்ன,—[பாடுமென் நா அவன்பாடல்] - என்னுடைய வாக்கானது அவனுடையகுணப்ரதிபாதகமான காதாவிசேஷங்களைப் பாடாநின்றது. உம்முடைய ஹஸ்த முத்ரையே அமையாதோ எங்களுக்கு அர்த்த நிச்சயம் பண்ணுகைக்கு? என்ன, — [ஆடுமெனங்க மணங்கே] - என்னுடைய சரீரமும் தைவாவிஷ்டரைப்போலே ஆடாநின்றது. தம்முடைய கரணங்கள் தனித்தனியே மேல்விழக் கண்ட ப்ரீதியாலே 'என்மனன், என்நா, என் அங்கம்' என்று உகக்கிறார்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. அவனுடைய இஸ்ஸ்வபாவத்தை அநுஸந்தித்துத் தாம் அதிகரித்த கார்யத்தை மறக்கும்படி தம்முடைய மநோவாக்காயங்களுக்கு அவன்பக்கலிலே உண்டான ப்ராவண்யத்தை அருளிச்செய்கிறார்.

[சடுமெடுப்புமிலீசன்] சிலரை உபேக்ஷித்தல் சிலரை ஸ்வீகரித்தல் செய்யாத ஸர்வேச்வரன்; ஸம்பந்தம் ஸர்வஸாதாரணமாயிருக்கையாலே சிலரை விடப்போகாதிறே. *தேவாநாம் தாநவாநாஞ் ச ஸாமாந்யமதிதைவதம்* என்று ஸ்வீகரிக்குமவனோடு உள்ள ஸம்பந்தம் விடுமவன்பக்கலிலு முண்டிறே. [ஈசன்மாடுவிடாதென்மனனே] ஒரு ஸாதநபுத்த்யா கிட்டிற்றாகில்றே பலம் கைப்புகுந்தவாறே விடுவது, நான் அதிகரித்த கார்யத்துக்கு எனக்கு நெஞ்சு ஒழிகிறதில்லை. *நாவியலா லிசைமாலைகளேத்தியன்றோ, மநஸ்ஸஹகாரம் வேணுமோ உமக்கு? உம்முடைய அஹ்ருதயமான உக்தி அமையாதோ எங்களுடைய ஹிதத்துக்கு? என்ன,—[பாடுமென்னுவவன்பாடல்] என்னுடைய வாகிந்த்ரியமும் மநஸ்அதிகரித்த கார்யத்திலே அதிகரித்தது. ஆனால் உம்முடைய ஹஸ்தமுத்ரை அமையாதோ எங்களுக்கு அர்த்தநிச்சயம் பண்ணுகைக்கு? என்ன,—[ஆடுமெனங்கமணங்கே] அதுவும் அவ்விஷயத்திலே ப்ரவணமாயிற்று.

அணங்கெனவாடுமெனங்கம்* வணங்கிவழிபடுமீசன்*
பிணங்கியமரர்பிதற்றும்* குணங்கெழுகொள்கையினனே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், நித்யஸூரிகளைப்போலே எனக்கு பகவத்ப்ராவண்யம் நித்யமாயிற்று என்கிறார்; பஹுகுணனான ஈச்வரனை என் அங்கம் வணங்கி வழிபடுமென்கிறாரென்றுமாம்.

[அணங்கென்று தொடங்கி] - தைவாவிஷ்டமானாற்போலே பகவத்குணஜிதமாய்க்கொண்டு ஆடாநின்றுள்ள என்னுடைய அங்கம் என்றும் வணங்குகையே ஸ்வபாவமாக வுடைத்தாயிற்று. [ஈசனென்று தொடங்கி] - ஒருவர்க்கொருவர் 'நான் முற்படவேணும்' என்று பிணங்கி அமர்வறுமமரர்கள் ஸந்நிபதிதரைப்போலே பிதற்றும் குணங்கள் சேருகைக்குப் பாத்ரமாயுள்ள ஸர்வேச்வரனை.

இ.—நாலாம்பாட்டில், கீழ்ச்சொன்ன ப்ராவண்யம் காதாசித்கமன்றிக்கே, நித்யமாய்ச் செல்லாநின்றதென்கிறார்.

[அணங்கென வாடுமெனங்கம்] - கீழ், 'அணங்கு' என்றதுக்கு அர்த்தம் இங்கே தெரிவித்தாரிறே. தைவாவிஷ்டரைப்போலே ஆடாநிற்கிற என் சரீரம் அவன்பக்கலிலே வணங்கி வழிபடாநின்றது. வழிபடுகையாவது - அதுவே யாத்ரையாய்ச் செல்லுகை. [ஈசன் இத்யாதி] - [பிணங்கி அமரர்] - அமரரென்கிறது - நித்யஸூரிகளை. ஏகரஸரானவர்களுக்கு விப்ரதிபத்தியுண்டோ? என்னில்; தாந்தாம் அநுபவித்த குணங்களிலேற்றத்தை 'நான் முந்துறச் சொல்ல, நான் முந்துறச் சொல்ல' என்று ஒருவர்க்கொருவர் பிணங்காநிற்பர்கள். [பிதற்றும்] - ஜ்வரஸந்நிபதிதரைப்போலே கூப்பிடாநிற்கை. [குணங்கெழுகொள்கையினனே] - ரத்நாகரம் போலே ஏவம்விதமான குணங்கள் வந்து சேருகைக்கு ஆச்ரயமாயுள்ளானென்னுதல்; இக்குணங்கள் வந்து கெழுமுகையை ஸ்வபாவமாக உடையானென்னுதல். பிணங்கி அமரர் பிதற்றுங் குணம்கெழுகொள்கையினனான ஈசனைக் கண்டு, அணங்கென ஆடும் எனங்கம்

வணங்கிவழிபடும். அன்றிக்கே, அணங்கென ஆடும் எனங்கம் வணங்கிவழிபடு மீசன், பிணங்கியமரர் பிதற்றும், குணங்கெழுகொள்கையினன் கிடீரென்கிறார். நித்யஸூரிகளுடைய யாத்திரையே தம்முடைய கரணங்களுக்கும் யாத்திரையாய்ச் செல்லாநின்ற தென்கிறார்.

ஈடு.—நாலாம்பாட்டு. தம்முடைய மநோவாக்காயங்களுக்கு அவன்பக்க லுண்டான ப்ராவண்யம் காதாசித்கமாய் விடுகை யன்றிக்கே, நித்யஸூரிகளைப் போலே யாத்ரையானபடி சொல்லுகிறார்.

அணங்கென வாடுமெனங்கம் வணங்கிவழிபடு மீசன், பிணங்கியமரர்பிதற்றும் குணங்கெழு கொள்கையினன்கிடீர் என்னுதல்; பிணங்கியமரர்பிதற்றும் குணங்கெழுகொள்கையினனை ஈசனை யநுபவித்து, அணங்கென வாடு மெனங்கம் வணங்கிவழிபடு மென்னுதல். தைவாவிஷ்டமென்னலாம்படி ஆடுகிற என் அங்கம், வணங்கி அதுதானே யாத்ரையாய்ச் செல்லும்படியிருக்கிற ஈசன். [பிணங்கியமரர்பிதற்றும்] தாந்தாம் அநுபவிக்கிற குணங்களுக்கு ஏற்றஞ் சொல்லப்புக்கு, எதிர்சொல்லுகிற குணங்களுக்கு ஏற்றம் சொல்லித் தலைக்கட்டுகை. தாந்தாமகப்பட்ட குணங்களைச் சொல்லி, 'நான் முந்துறச்சொல்ல, நான் முந்துறச்சொல்ல' என்று பிணங்கி நித்யஸூரிகள் ஜ்வரஸந்நிபதிதரைப்போலே அடைவுகெடக் கூப்பிடுகிற குணங்கள் வந்து சேருகைக்கு ஆச்ரயமானவன். ரத்நாகரம்போலே குணங்கள் சேருகைக்கு ஆச்ரயமாயுள்ளா னென்னுதல்; இக்குணங்கள் வந்து கெழுமுகையை ஸ்வபாவமாக வுடையவ னென்னுதல். ஸர்வஜ்ஞரானவர்கள் படுகிற பாடு என்னுடைய கரணங்களுக்கும் உண்டாகாநின்றது கிடீரென்கிறார்.

கொள்கைகொளாமையிலாதான்* எள்கலிராகமிலாதான்*
விள்கைவிள்ளாமைவிரும்பி* உள்கலந்தார்க்கோரமுதே. (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், அநந்யப்ரயோஜநர்க்கு எம்பெருமான் நிரதிசய போக்யனுமென்கிறார்.

[கொள்கை கொளாமை யிலாதான்] - ஆச்ரிதரோடு தான் பரிமாறுமிடத்தில் அவர்கள்பக்கல் தாரதம்ய மில்லாதான். [எள்கலிராகமிலாதான்] - எல்லாரையுமொக்க ஸ்நேஹித்திருப்பன். [விள்கையென்று தொடங்கி] - ப்ரயோஜநாந்தரங்களைக்கொண்டு அகலுமோ? அநந்யப்ரயோஜநனும் அகலாதொழியுமோ? என்று மிகவும் அநுஸந்தித்து.

இ.—அஞ்சாம் பாட்டில், திரியவும் தாம் அதிகரித்த கார்யத்தே போந்து, அவன் அநந்ய ப்ரயோஜநர்க்கு நிரதிசயபோக்யனு மென்கிறார்.

[கொள்கைகொளாமை யிலாதான்] - ஆச்ரிதரோடு பரிமாறுமிடத்தில் அவர்கள்பக்கல் தாரதம்யம் பாராதவன். அதாவது - 'இவன் உத்க்ருஷ்டன்: அந்தரங்க வ்ருத்தியைக் கொள்ளுவோம்; இவன் அபக்ருஷ்டன்: புறத்தொழிலைக் கொள்ளுவோம்' என்னுமவை யில்லாதவன். [என்க லிராக மிலாதான்] - அடிமைகொள்ளு மிடத்தில் வாசியில்லையே யாகிலும் அவ்வாசியை நினைத்திருக்குமோ? என்னில்,—ராகத்வேஷ விபாக மின்றிக்கே எல்லார்க்கு மொக்க வத்ஸலனுயிருக்கும். ஆனால், இவன் தன்னைக்கிட்டினார் பக்கல் பார்க்குமது ஏது என்னில், - [விள்கை விள்ளாமை விரும்பி] - விள்கை ப்ரயோஜநாந்தரங்களைக் கொண்டு விடுகை. விள்ளாமை - அநந்ய ப்ரயோஜநனுகை. விரும்பி - ஆதரித்துப் பார்த்து. [உள் கலந்தார்க்குஓரமுதே] - அநந்ய ப்ரயோஜநர்க்கு நிரதிசய போக்யனு யிருக்கும்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. திரியட்டும் தாம் அதிகரித்த கார்யத்திலே போந்து, ஸர்வேச்வரன், தன்பக்கலிலே சிலர் வந்து கிட்டினால் 'இவர்கள் ப்ரயோஜநாந்தரத்தைக் கொண்டு அகலுவர்களோ? நம்மையே ப்ரயோஜநமாகப் பற்றுவர்களோ?' என்று ஆராய்ந்து, தன்னையே ப்ரயோஜநமாகப் பற்றினவர்களுக்குத் தானும் நிரதிசயபோக்யனுயிருக்கு மென்கிறார்,

[கொள்கை கொளாமையிலாதான்] 'இவன் ஜந்ம வ்ருத்த ஜ்ஞாநங்களால் உயர்ந்தானொருத்தன்: இவனை அந்தரங்க வ்ருத்தி கொள்வோம்; இவன் அவற்றால் தாழ்ந்தானொருவன்: இவனைப் புறத்தொழில் கொள்வோம்' என்னுமவை யில்லாதான். வ்ருத்தி கொள்ளும்போது இல்லையாகில், திருவுள்ளத்தாலேதான் நினைத்திருக்குமோ? என்னில்,—[எள்க விராக மிலாதான்] திருவுள்ளத்தாலே சிலரை இகழ்ந்திருத்தல், சிலரை ஆதரித்தல் செய்யான். 'ஈடுமெடுப்புமிலீசன்' என்றவிடம் ஸ்வீகாரஸமயத்தில் குறைபாரானென்றது; இங்குப் பரிமாற்றத்தில் தரமிட்டுக்கொள்ளானென்கை. [விள்கை இத்யாதி] இது ஒன்றுமே பார்ப்பது. விள்கை ப்ரயோஜநங்களைக் கொண்டு விடுகை. விள்ளாமை அநந்யப்ரயோஜநனாகை. விரும்பி - ஆதரித்து. [உள்கலந்தார்க்கு] இவனையே ப்ரயோஜநமாகப் பற்றி இவனுடனே ஒருநீராகக் கலந்தவர்களுக்கு. [ஓரமுதே] அத்விதீயமான அம்ருதமாயிருக்கும்; ஆராவமுதிறே.

அமுதமமரர்கட்கீந்த* நிமிர்சுடராழிநெடுமால்*
அமுதிலுமாற்றவினியன்* நிமிர்திரைநீள்கடலானே. (6)

ஒ.—ஆறும்பாட்டில், நிரதிசயபோக்யனான எம்பெருமானை உபாயமாகப்பற்றி ப்ரயோஜநாந்தரங்களைக்கொண்டு அகலுகிறவர்களை இகழ்கிறார்.

[அமுதமென்று தொடங்கி] - 'க்ஷுத்ரபுருஷார்த்தத்தை அபேக்ஷிக்கிறார்' என்று இகழாதே தேவர்களுக்குக் கடலைக் கடைந்து அம்ருதத்தைக் கொடுப்பதுஞ்செய்து நிரவதிகதேஜஸ்கமான திருவாழியையுடையனுமாய், ஆச்ரயித்தமாத்ரத்திலே அதிவ்யாமுக்தனானவன், அவர்கள் போக்யமாகப் பற்றுகிற அம்ருதத்திற்காட்டிலும் நிரவதிகபோக்யன். [நிமிர்திரைநீள் கடலானே] - தூரஸ்த்தனன்றிக்கே, இவர்கள் ஆசைப்பட்ட அம்ருதம் பிறந்த கடலிலே ஆச்ரயிப்பார்க்கு உறுப்பாம்படி கண்வளர்ந்தருளுகிறவன்.

இ.—ஆறும்பாட்டில், நிரதிசயபோக்யனான அவனை உபாயமாகப்பற்றி ப்ரயோஜநாந்தரங்களைக் கொண்டு அகலுகிறவர்களை நிந்திக்கிறார்.

[அமுதமமரர்கட்கீந்த] - 'சாவாமைக்குப் பரிஹாரம்பண்ணித் தர அமையும்' என்றுஇருக்கிறவர்களுக்கு, 'க்ஷுத்ரத்தை அபேக்ஷித்தார்கள்' என்று இகழாதே கடலைக்கடைந்து அம்ருதத்தைக் கொடுத்த பரமோதாரன். [நிமிர்சுடராழிநெடுமால்] - "நால்தோளமுது" என்றும், "அமுதென்றும் தேனென்றும்" என்றும் தம்முடைய அம்ருதம் இருக்கிறபடி. மிக்க தேஜஸ்ஸை யுடைத்தான திருவாழியையுடைய ஸர்வேச்வரன். இவர்கள் அபேக்ஷித்ததைத் தலைக்கட்டிக்கொடுத்த ப்ரீதியால் வந்த புகர் திருவாழியிலே தோற்றியிருக்கை. 'ப்ரயோஜநாந்தரமேயாகிலும் நம்மைக்கொண்டு பெறப்பெற்றோமே' என்று இவர்கள் பக்கல் வ்யாமோஹத்தையுடையவனென்னவுமாம். [அமுதிலுமாற்றவினியன்] - இவர்கள் 'போக்யம்' என்றிருக்கிற அம்ருதத்திற்காட்டில் நிரதிசயபோக்யனானவன். வாசியறிவார்களாகில் அவனையேகிடீர் பற்ற அடுப்பதென்கை. பிள்ளைதிருவழுதிநாடுதாஸர் வார்த்தை. [ஆற்றஇனியன்] - மிகவும் இனியன். [நிமிர்திரை நீள்கடலானே] - அவ்வம்ருதம்படுங் கடலிலேகிடீர் அவன் சாய்ந்தருளுகிறது. தன் வாசியறியாதே யிருப்பார்க்கும் எழுப்பிக் கடைவித்துகொள்ளலாம்படி கண்வளர்ந்தருளுகிறவன். [நிமிர்திரை] - அவனோட்டை ஸ்பர்சத்தாலே கொந்தளித்த திரை. [நீள்கடல்] - "தாளுந்தோளும் முடிகளும்" என்கிறபடியே அஸங்குசிதமாகக் கண்வளர்ந்தருளுகைக்கு இடம்போந்திருக்கை.

ஈடு.—ஆறும்பாட்டு. அவன்படி இதுவாயிருக்க, அவனை விட்டு ப்ரயோஜநத்தைக் கொண்டு அகலுவதே! என்று ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களை நிந்திக்கிறார்.

[அமுதமமரர்கட்கீந்த] 'என்ன பரமோதாரனோ?' என்கிறார். 'நீ வேண்டா; எங்களுக்குச் சாவாமைக்குப் பரிஹாரம் பண்ணித்தரவேணும்' என்றவர்களுக்கு அவர்கள் உகந்த பதார்த்தத்தைக் கொடுத்து விடுவதே! அவர்கள் ப்ரயோஜநத்தை அருவருத்து, தாமுகந்த

ப்ரயோஜநத்துக்கு உண்டான வ்யாவ்ருத்தி சொல்லுகிறார். [நிமிர்சுடராழி நெடுமால்] இவருடைய அம்ருதம் இருக்கிறபடி. நாற்றோளமுதிறே இவர்க்கு அமுது; "அமுதென்றுந்தேனென்று மாழியானென்றும்" என்று கையுந் திருவாழியுமாயிறே இருப்பது, இவருடைய அம்ருதம். இவர்கள் ப்ரயோஜநத்தைத் தலைக்கட்டிக்கொடுக்கையாலே உண்டான புகர் திருவாழியிலே தோற்றும்படியிருக்கை. [நெடுமால்] 'நம் பக்கலிலே கொள்ளப்பெற்றோமே வேறொரு ப்ரயோஜநமாகிலும்' என்றுபண்ணின வ்யாமோஹாதிசயம். [அமுதிலுமாற்ற இனியன்] இவர்கள் வாசியறிவர்களாகில் இவனைக்கிடீர் பற்ற அடுப்பது? நம்பி திருவழுதிநாடுதாஸர் - இத்தேவஜாதி வெறும் மறையோ, 'உப்புச்சாறு கிளறுவது எப்போதோ? என்று கவிழ்ந்து பார்த்துக்கிடப்பதே இவனழகையும் போக்யதையையும் விட்டு!' என்பராம். [ஆற்றஇனியன்] மிகவும் இனியன். [நிமிர்திரைநீள்கடலானே] 'அஸங்க்ஷுப்தன்' என்றுதான் விடுகிறார்களோ! அவ்வம்ருதம்படுகிற கடலிலே கிடீர் அவன் சாய்ந்தருளிற்று. தன் வாசியறியாதிருப்பார்க்கும் எழுப்பிக் கார்யங்கொள்ளலாம்படி கண்வளர்ந்தருளுகிறவன். "தாளுந்தோளும் முடிகளும் சமனிலாதபலபரப்பி" என்கிறபடியே கண்வளர்ந்தருளுகைக்கீடான பரப்பையுடைத்தாய், ஸ்வஸங்கிதாநத்தாலே திரைக்கிளப்பத்தையுடைத்தான கடலிலேயாயிற்று, சாய்ந்தருளிற்று. "மாலுங்கருங்கடலேயென்னோற்றாய்" என்னக்கடவதிறே.

நீள்கடல்சூழிலங்கைக்கோன்* தோள்கள்தலைதுணிசெய்தான்*
தாள்கள்தலையில்வணங்கி* நாள்கடலைக்கழிமினே. (7)

ஒ.—ஏழாம்பாட்டில், பஜமாநரான உங்களுக்கு அவனைக் காண்கையிலுள்ள ஆசையாலே ஒரோதிவஸம் ஒரோ கடல்போலே நெடிதாய்க் காலக்ஷேபம் அரிதானால் பெருமாளுடைய வீரசரிதத்தை அநுஸந்தித்துத் திருவடிகளைத் தலையாலே வணங்கிக் காலத்தைப் போக்குங்கோளென்கிறார்; ஆச்ரித விரோதி நிரஸந சீலனான தசரதாத்மஜனை ஆச்ரயித்து நிர்த்துஃக்கராங்கோளென்றுமாம்.

இ.—ஏழாம்பாட்டில், அவன்போக்யதை நெஞ்சிற்பட்டால், ப்ராப்தியளவுஞ் செல்ல, சக்ரவர்த்தி திருமகனுடைய வீரசரிதத்தை அநுஸந்தித்துக் காலத்தைப் போக்குங்கோளென்கிறார்.

[நீள்கடல்சூழிலங்கைக்கோன்] - சதயோஜந விஸ்தீர்ணமான கடல் - அகழ்; அது மிகையென்னும்படி அரண் மிக்க ஊர்; அவை மிகையென்னும்படி ராக்ஷஸனுனவன்மிடுக்கு. [தோள்கள் தலை துணிசெய்தான்] - "அகப்பட்டானிறே" என்று கொன்றுவிடாதே, தோள்களைக் கழித்து, தலைகளை க்ரமத்திலே யறுத்து, அவன் இளைத்து நின்றவளவிலே 'நீ இளைத்தாய், இன்று போய்ப் பின்னைவா' என்று போதுபோக்காகக் கொன்றபடி. [தாள்கள் தலையில் வணங்கி] - திருவடிகளிலே நிர்மமனாய் வணங்கி. [நாள்கடலைக்கழிமினே] - இனாகம்பிறந்தால் ப்ராப்தியளவும் 'ஒருபகலாயிரமூழி' என்னுமா போலே காலக்ஷேபம் அரிதாயிறே யிருப்பது. திருவடியைப்போலே தசரதாத்மஜனுடைய வீரசரிதத்தை அநுஸந்தித்துக் காலத்தைப்போக்குவது: அன்றிக்கே, சக்ரவர்த்திதிருமகனை ஆச்ரயித்து ஸம்ஸாரார்ணவத்தை மாற்றிக்கொள்ளப் பாருங்கோளென்கிறாரென்றுமாம். நாழ் - குற்றம்.

௬டு.—ஏழாம்பாட்டு. அவன் நிரதிசயபோக்யனென்றீர்; அவனை ப்ராபிக்குமளவும் நடுவு காலக்ஷேபம் பண்ணும்படியென்? என்ன; அதுக்கன்றோ மனத்துக்கினியானுடைய குணங்களிருக்கிறது என்கிறார்.

[நீள்கடல்சூழிலங்கைக்கோன் இத்யாதி] 'பரந்தகடலை அகழாகவுடைத்தாய், அது தானும் மிகையாம்படியான அரணையுடைத்தாயிருந்துள்ள லங்கைக்கு நிர்வாஹகனல்லேனோ' என்னும் துரபிமாநத்தாலே 'சக்ரவர்த்திதிருமகன்' என்று மதியாதே எதிரிட்டவையனுடைய. [தோள்கள் தலைதுணிசெய்தான்] 'அகப்படாதவன் அகப்பட்டான், தப்பாமல் கொன்றுவிடுவோம்' என்று பாராதே, தோளைக்கழித்துத் தலையைச்சரித்துப் போதுபோக்காக நின்று கொன்றபடி. அவனுடைய வீரசரிதங்களைக்கொண்டு திருவடியைப்போலே

போதுபோக்கி. [நாள்கடலைக் கழிமினே] அவனுடைய போக்யதை நெஞ்சிலேபட்டால், அவனை ப்ராபிப்பதற்குமுன்பு நடுவுபட்ட நாள் ஒருகடல்போலே தோற்றுமாயிற்று. அன்றிக்கே, சக்ரவர்த்தி திருமகனை ஆச்ரயித்து ஸம்ஸார துரிதத்தைக் கழித்துக்கொள்ளுங்கோ ளென்கிறாராதல்.

கழிமின்தொண்டர்கள்கழித்து* தொழுமினவனைத்தொழுதால்*
வழிநின்றவல்வினைமாள்வித்து* அழிவின்றியாக்கந்தருமே. (8)

ஒ.—எட்டாம்பாட்டில், அநந்ய ப்ரயோஜநராய் பஜிக்குமவர்களுக்கு, விக்நங்களை யெல்லாம் போக்கி அடிமையாகிற அழிவில்லாத ஸம்பத்தை எம்பெருமான் தருமென்கிறார்.

[கழிமின் தொண்டர்கள்] - பாஹ்யருசிகளை விடுங்கோள். [கழித்துத் தொழுமின்]. அவச்யம் அவற்றைவிட்டு எம்பெருமானை ஆச்ரயியுங்கோள். [அவனைத் தொழுதால் என்று தொடங்கி] - ஆச்ர யிக்குமவனுக்கு ஆச்ரயணந்தானே ப்ரயோஜநம் போந்திருக்கச்செய்தே, பகவத்ப்ராப்திக்கு விக்நமான அவித்யாதிகளைப் போக்கி,

இ.—எட்டாம்பாட்டில், சக்ரவர்த்திதிருமகனை ஆச்ரயித்து விஷயப்ராவண்யத்தைத் தவிரவே, ப்ராப்திப்ரதிபந்தகங்களைப் போக்கி நித்யகைங்கர்யத்தைத் தருமென்கிறார்.

[கழிமின் தொண்டர்கள்] - பகவத்விஷயத்திலே நசையுடையீர்! விஷயங்களில் ருசியைக் கழியுங்கோள். [கழித்துத் தொழுமின்] - இந்த விஷயங்களில் ருசியைக்கழித்து அந்தச் சக்ரவர்த்தி திருமகனைத் தொழுங்கோள். 'கழித்து' என்கிற அநுபாஷணத்தாலே - விஷயவிரக்தி தானே ப்ரயோஜந மாகப் போருமென்கை; கழிக்கையாவது - 'இது பொல்லாது' என்றிருக்கை. [அவனைத்தொழுதால்] - கரும்புதின்னக் கூலிபோலே, தொழுகை தானே ப்ரயோஜநமென்கை. [வழிநின்ற வல்வினைமாள்வித்து] - ஸ்வயம்ப்ரயோஜநமான ஆச்ரயணத்துக்கு ப்பலமிருக்கிறபடி. 'இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபாநுபந்தியோ?' என்னும்படி யிருக்கிற ப்ரபல கர்மங்களை ஸவாஸநமாகப் போக்கி நடுவேநின்று ப்ராப்தியை விரோதிக்கிற கர்ம மென்னவுமாம். [அழிவின்றி யாக்கந்தருமே] - அபுநராவ்ருத்திலக்ஷண மோக்ஷமான நிரவதிக ஸம்பத்தைத்தரும்; அதாவது - கைங்கர்யந்தரும். இவ்வர்த்தத்தில் ஸம்சயமில்லை.

ஈடு.—எட்டாம்பாட்டு. சக்ரவர்த்திதிருமகனுடைய வீரசரிதத்தை அநுஸந்தித்து இதர விஷய ப்ராவண்யத்தைத் தவிரவே, அவன்தானே ப்ரதிபந்தகங்களைப் போக்கி நித்ய கைங்கர்யத்தைத் தந்தருளு மென்கிறார்.

[கழிமின்] பாஹ்யவிஷயங்களிலுண்டான ருசியைக் கழியுங்கோள். கழிக்கையாவது 'பொல்லாது' என்றிருக்கை. இந்த ருசியைப் பூண்கட்டிக்கொள்ளத் தேடுகிறவர்கள் கழிக்கச் சொன்னால் கழியார்களிறே; பகவத்விஷயத்தில் சாபலமுடையீர்! கழிக்கப் பாருங்கோள். [கழித்துத்தொழுமின்] 'அவனைத்தொழாநிற்கச்செய்தே இதுவும் க்ரமத்தாலே கழிகிறது' என்று இராதே அவச்யம் கழித்தே தொழுங்கோள். 'கழிமின்' என்று வைத்து, கழித்து என்றது இதரவிஷயங்களில் விரக்திதானே ப்ரயோஜநமாகப் போருமென்கை. 'தொழுமின்' என்றுவைத்து, தொழுதால் என்கிறது கரும்புதின்னக்கூலிபோலே ஒருபலமில்லையே யாகிலும் தொழுகைதானே பலம்போருமென்கை. இப்படிசெய்தால்; [வழிநின்ற வல்வினைமாள்வித்து] 'இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபாநுபந்தியோ' என்னும்படி பொருந்தியிருக்கிற ப்ரபலகர்மங்களை வாஸநையோடே போக்கி. வழிநின்றவல்வினை-நடுவேநின்று பகவத்ப்ராப்தியை நிரோதிக்கிற கர்ம மென்றுமாம். [அழிவின்றியாக்கந்தருமே] *நச புநராவர்த்ததே* என்கிறபடியே அபுநரா வ்ருத்திலக்ஷண மோக்ஷத்தைத்தரும்.

தருமவரும்பயனாய* திருமகளார்தனிக்கேள்வன்*
பெருமையுடையபிரானார்* இருமைவினைகடிவாரே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், ஆச்ரயிப்பாருடைய விக்நங்களை நீக்கி நித்யகைங்கர்யத்தைக் கொடுக்கும்போது, பெரியபிராட்டியாரோடே கூடிநின்றே ஸாதரமாகக்கொடுக்கு மென்கிறார்.

[தருமென்று தொடங்கி] - உபநிஷத்ப்ரஸித்தமான பரமபுருஷார்த்தங்களைத் தரும் பெரிய பிராட்டியாருடைய குறுதிகளுயுள்ள நாயகன். [பெருமையென்று தொடங்கி] - ச்ரிய:பதித்வ நிபந்தநமான பெருமையையுடையராய் ஆச்ரிதாநுக்ராஹகஸ்வரூபராய் அவர்களுடைய புண்யபாபஸ்வரூபமான கர்மங்களைப் போக்கும் ஸ்வபாவரானவர். தர்மத்தினுடைய பரமப்ரயோஜநரூபமான திருமகளா ரென்றுமாம்.

இ.—ஒன்பதாம்பாட்டில், தன்னைப்பற்றின மாத்ரத்திலே இதெல்லாஞ் செய்தருளக் கூடுமோ? என்னில், ''நகச்சிந்நாபராத்யதி'' என்னுமவள் அருகே யிருந்து தருவிக்கு மென்கிறார்.

[தருமவரும்பயனாய திருமகளார்] - உபநிஷத்துக்களிலே பரம ப்ரயோஜநமாக ப்ரஸித்தமானவற்றைத் தரும் திருமகளார்; தர்மத்தினுடைய பரமப்ரயோஜநமான திருமகளா ரென்னவுமாம். [தனிக் கேள்வன்] - அத்விதீயனான வல்லபன். [பெருமையுடைய பிரானார்] - ச்ரிய:பதித்வ நிபந்தநமான பெருமையையுடையவர். பிரானார் - ஆச்ரிதாநுக்ரஹமே ஸ்வரூபமாயுள்ளவர். [இருமைவினைகடிவாரே] - புண்யபாபரூபமான கர்மங்களைப் போக்குவர்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. தன்னைப்பற்றினமாத்ரத்திலே இப்படி விரோதிகளைப்போக்கி இப்பேற்றைத் தரக்கூடுமோ? என்னில்; வெறும் அவன்படியையோ பார்ப்பது! அருகே யிருக்கிறார்படியையும் பார்க்கவேண்டாவோ? *ந கச்சிந் நாபராத்யதி* என்பாரன்றோ அருகிருக்கிறா ரென்கிறார்.

[தரும்] இவ்வர்த்தத்தில் ஸம்சயமில்லை. [அவ்வரும்பயனாய] பெறுதற்கரிதாக சாஸ்த்ரங்களிலே ப்ரஸித்தமான ப்ரயோஜந ரூபமானவற்றை. அன்றிக்கே, தர்மத்தினுடைய பரம ப்ரயோஜநந்தான் வடிவு கொண்டாற்போலே யிருக்கிற பெரிய பிராட்டியாருக்கு வல்லபனாகையாலே அத்விதீயநாயகனாயிருக்கிறவ னென்றுமாம். *அப்ரமேயம் ஹி தத் தேஜ:* என்கிறபடியே ச்ரிய:பதியாகையாலே வரும் ஏற்றமுள்ளது இவனொருவனுக்குமிறே. லக்ஷ்மீபதியாகையாலே வந்த மேன்மையையுடைய உபகாரகரானவர். [பிரானார்] ஆச்ரிதாநுக்ரஹமே ஸ்வரூபமாயுள்ளவர். [இருமை வினை கடிவாரே] பேர்வாசியேயாம்படி நாம் பண்ணிவைத்த இருவகைப்பட்ட கர்மங்களையும் போக்குவார். புண்யபாபங்களுக்குத் தன்னில்தான் வைஷம்யமுண்டேயாகிலும், மோக்ஷவிரோதித்வாத் த்யாஜ்யமாகாநின்றனவிறே.

கடிவார்தீயவினைகள்* நொடியாருமளவைக்கண்*
கொடியாவடுபுள்ளுயர்த்த* வடிவார்மாதவனாரே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், பெரியபிராட்டியாரோடு கூடவந்து சண்டி ப்ரதிபந்தகங்களைப் போக்கியருளு மென்கிறார்.

[கடிவார்தீயவினைகள்] - ப்ரதிபந்தக கர்மங்களைப் போக்கும் ஸ்வபாவர். [நொடியாருமளவைக் கண்] - க்ஷணமாத்ரத்திலே. [கொடியாவடுபுள் ளுயர்த்த வடிவார்] - ஆச்ரிதஸம்ரக்ஷணம்பண்ணுகைக்கு ப்ரதிபக்ஷநிரஸந ஸ்வபாவனான பெரிய திருவடியைக் கொடியாக எடுக்கையை ஸ்வபாவமாகவுடையவர். பெரிய திருவடியை விஷயீகரிக்குமாபோலே, இன்று ஆச்ரயிப்பாரை விஷயீகரிக்கும் ஸ்வபாவ ரென்றுமாம். [மாதவனார்] - ச்ரிய:பதியானவர்.

இ.—பத்தாம்பாட்டில், அவள் பொறுப்பிக்கப் பொறுக்குமிடத்தில் விளம்பமில்லை; அரை க்ஷணத்திலே பொறுப்ப ரென்கிறார்.

[கடிவார்தீயவினைகள்] - தன்னால் போக்கிக்கொள்ளவொண்ணாத கொடிய பாபங்களைப் போக்கும் ஸ்வபாவர். [நொடியாருமளவைக்கண்] - நொடி நிறையுமளவிடத்திலே; க்ஷணமாத்ரத்திலே யென்றபடி. [கொடியாவடுபுள்ளுயர்த்த வடிவார்] - ப்ரதிபக்ஷநிரஸந ஸ்வபாவனான பெரிய திருவடியைக் கொடியாக எடுக்கையை ஸ்வபாவமாக வுடையவர். இன்று ஆச்ரயித்தவனையும் நித்யாச்ரிதரோடொக்க விஷயீ கரிக்கு மென்னுமிடத்துக்கு ஸூசக மென்றுமாம். வடிவாரென்று தனியேயாய், அழகியவடிவை யுடைய ரென்றுமாம். [மாதவனார்] - பிராட்டி அருகே யிருந்து போக்குவிக்க வாயிற்று வினைபோக்குவது.

ஈடு.—பத்தாம்பாட்டு. 'இப்படி அவனும் அவளுமாகக் குற்றங்களைப் போக்குவது எத்தனைகாலங்கூடி?' என்னில்,—தன் திருவடிகளிலே தலைசாய்த்தவளவிலே யென்கிறார்,

[கடிவார்தீயவினைகள்] காலதத்த்வமுள்ளதனையும் தன்னால் போக்கிக்கொள்ள வொண்ணாத கொடியபாபங்களைப் போக்குவார். "வழிநின்றவல்வினைமாள்வித்து" என்கிற விடத்தில் ஆச்ரயித்தமாத்ரத்திலே பாபங்களைப் போக்கு மென்றார்; "இருமைவினைகடிவார்" என்கிறவிடத்தில் அவன்தானானதுக்குமேலே பிராட்டியுங்கூட இருக்கையாலே போக்கு மென்றார்; எவ்வளவில் போக்குவது? என்னில், க்ஷணகாலத்திலே யென்கிறார் இதில்: [நொடியாருமளவைக்கண்] நொடிநிறையுமளவிலே. [கொடியாவடுபுள்ளுயர்த்தவடிவார்] தூரத்திலே காணவே ப்ரதிபக்ஷம் மண்ணுண்ணும்படியான பெரியதிருவடியை த்வஜமாக எடுக்கையை ஸ்வபாவமாக வுடையவரென்னுதல்; வடிவார்—ஆர்ந்தவடிவையுடையவர்; அழகிய வடிவை யுடையவ ரென்னுதல்; 'வடிவார் மா' என்று நாய்ச்சியார்க்கு விசேஷணமாதல். வடிவிலே ஆர்ந்திருக்கிறவ ளென்னுதல், அழகிய வடிவையுடையவ ளென்னுதல்; வடிவிலே பொருந்தி யிருக்கிறவ ளென்னுதல். [மாதவனார்] பிராட்டி அருகேயிருந்து போக்குவிக்க வாயிற்று போக்குவது. 'ஒருதலை ஜந்மம். ஒருதலை மரணம், நடுவே ஆதிவ்யாதிகள்; இவைசெய்த குற்றங்களைப் பார்க்கக்கடவதோ! குற்றங்கண்டுவிடில் விபூதியாக விடவேண்டாவோ! பொறுத்தருளீர்' என்றால், அவளுக்காக, 'பொறுத்தோம்' என்னுமித்தனை.

மாதவன்பாற்சடகோபன்* தீதவமின்றியுரைத்த*
ஏதமிலாயிரத்திப்பத்து* ஓதவல்லார்பிறவாரே. (11)

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார் பெறும் ப்பலத்தை அருளிச்செய்கிறார்.

கவிபாடுகிறவனுக்கும் கவிபாட்டுண்கிறவனுக்கும் கவிக்கும் குற்றமாகிற ஏதமில்லாதபடி யிருக்கிற ஆயிரத்தில் சரிய:பதியான தன்பக்கலுள்ள மேன்மையை அநுஸந்தித்தல், ஆச்ரயித்தவனு டைய சிறுமையை அநுஸந்தித்தல் செய்கையாகிற தீதும் அவமும் இல்லாத இத்திருவாய்மொழி கற்க வல்லார் பக்தியோகத்துக்கு மேட்டுமடையான ஸம்ஸாரத்திற் பிறவார். ஏதமாவது - குற்றம். "கவி பாடுகிறவனுக்கும், கவிபாட்டுண்கிறவனுக்கும், கவிக்கும் உள்ள மூன்று குற்றத்தையும் - தீதும், அவமும், ஏதமும்" என்றுஞ் சொல்லுவர்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார் பகவதநுபவத்துக்கு மேட்டுமடையான ஸம் ஸாரத்தில் பிறவா ரென்கிறார்.

[சடகோபன் மாதவன்பால் தீதவமின்றி யுரைத்த] - தீதாவது - தன்மேன்மையைப் பார்த்து எழ நிற்கை: அவமாவது - ஆச்ரயிக்கிறவனுடைய சிறுமை பார்த்துக் கைவிடுகை. [இன்றியுரைத்த] - இரண்டு குற்றமு மில்லாமையைச் சொன்ன. [ஏதமிலாயிரம்] - லக்ஷணஹானியால் வரும் குற்ற மின்றிக்கே யிருக்கை, ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு இப்பத்தையும் அப்யஸிக்கவல்லார். [பிறவார்] -

பிறக்கையிறே 'மாத்ருசுச்ருஷணம் அழகிது' என்னுமோபாதி 'பகவத்ஸமாச்ரயணம் எளிது' என்று உபதேசிக்க வேண்டுகிறது; உபதேசநிரபேக்ஷமாக ஜந்ம ஸம்பந்தமற்று பகவதேக போகராகப்பெறுவர். 'தீது, அவம், ஏதம் என்று கர்த்தாவுக்கும், கவிக்கும், பாட்டுண்கிறவனுக்கும் உள்ள மூன்று குற்றத்தையுஞ் சொல்லுகிறது' என்றுஞ் சொல்லுவர்.

௧௫.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லவர்கள் ஸம்ஸாரத்தில் வந்து பிறவா ரென்கிறார்.

[மாதவன் இத்யாதி] தீதும், அவமும், ஏதமும் என்று மூன்றாய், இம்மூன்றையும் ப்ரதிபாத்யனுக்கும் வக்தாவுக்கும் ப்ரபந்தத்துக்கு மாக்கி, 'இவையில்லாமையைச் சொல்லுகிறது' என்று நிர்வஹிப்பாரு முண்டு. பட்டர், அங்ஙனன்றிக்கே, 'ஏதமிலாயிரம்' என்று ப்ரபந்த லக்ஷணஞ் சொன்னபோதே, த்ரிவிததோஷராஹித்யமுஞ் சொல்லிற்றும்; இனி, தீதும் அவமுமாவது செய்வதென்? என்னில்; 'சடகோபன் மாதவன்பால் தீதவமின்றியுரைத்த' என்றாகக்கடவது என்று அருளிச்செய்தார். அதாவது தீதாவது: 'நான் ச்ரிய:பதியல்லேனோ!' என்று தன்மேன்மையைப்பார்த்துக் கடக்க இருக்குமது. அவமாவது' 'ஆச்ரயிக்கிறவன் நித்யஸம்ஸாரியன்றோ!' என்று இவன்சிறுமையைப் பார்த்துக் கைவிடுமது. இவையில்லாமையைச் சொன்ன இப்பத்து என்றபடி. ஆயிரத்திலும் இந்தப்பத்தையும் அப்யஸிக்க வல்லவர்கள் பிறவார் - பிறக்கைசுட்டியிறே, 'மாத்ருஸம்ரக்ஷணம் அழகிது' என்னுமோபாதி, 'பகவத்ஸமாச்ரயணம் எளிது' என்று உபதேசிக்கவேண்டுகிறது; இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லவர்கள் உபதேசநிரபேக்ஷமாக, ஸம்ஸாரஸம்பந்தமற்று பகவதநுபவமே யாத்ரையாம்படி யிருக்கிறவர்களோடே கூடி அநுபவிக்கப் பெறுவர்க ளென்கிறார்.

முதற்பாட்டில், ஆச்ரயிக்குமவனுக்கு த்ரவ்யநியதில்லை யென்றார்; இரண்டாம்பாட்டில், அதிகாரி நியதியில்லை யென்றார்; மூன்றாம்பாட்டில், தம்முடைய கரணத்ரயமும் பகவத்விஷயத்திலே ப்ரவணமானபடியை அருளிச்செய்தார்; நாலாம்பாட்டில், நித்யஸூரிகளைப்போலே அதுதானே யாத்ரையாயிற்றென்றார்; அஞ்சாம்பாட்டில், தன்னையே ப்ரயோஜநமாகப் பற்றினார்க்கு அவன் நிரதிசயபோக்யபூத னென்றார்; ஆறாம்பாட்டில், இப்படி போக்யபூதனானவனை விட்டு ப்ரயோஜநத்தைக்கொண்டு அகலுவதே! என்று ப்ரயோஜநாந்தரபரரை கர்ஹித்தார்; ஏழாம் பாட்டில், இவனையே ப்ரயோஜநமாகப்பற்றினார்க்குக் காலக்ஷேபம் இன்ன தென்றார்; எட்டாம் பாட்டில், ப்ராப்திவிரோதிகளையும் அவன்தானே போக்கு மென்றார்; ஒன்பதாம்பாட்டில், இது கூடுமோ? என்று சங்கையாக; வெறு மவன்படியையோ பார்ப்பது, அருகு இருக்கிறார்படியையும் பார்க்கவேண்டாவோ? என்றார்; பத்தாம்பாட்டில், இவர்கள் எத்தனைகாலம் கூடி விரோதிகளைப்போக்குவது? என்ன, க்ஷணகாலத்திலே யென்றார்; நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவே ஸம்ஸரிக்கவேண்டா வென்றார்.

ஆழ்வார் திருவடிகளே சரணம். எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

ஏழாந்திருவாய்மொழி—பிறவித்துயரற - ப்ரவேசம்:

—:—

௭.—ஏழாந்திருவாய்மொழியில், ஸர்வசேஷியாய் ச்ரிய:பதியாய் ஸமஸ்த கல்யாண குணாத்மகனுய் நிரதிசயாநந்த பூர்ணனுய்த் தன்னை அநுபவித்தாரைத் தன்னிற்காட்டிலும் நிரதிசயாநந்த பூர்ணராகப் பண்ண வல்லனுயிருந்துள்ள எம்பெருமானை, பஜியாநின்றுவைத்தும் ப்பலாந்தரத்தை

இச்சிக்கிறவர்களை நிந்தித்து, அவர்களுக்கு அபேக்ஷிதபலத்தைக் கொடுக்கிற எம்பெருமானைக் கண்டு அதிவ விஸ்மிதராய், ஏவம்விதனாயிருந்துள்ள எம்பெருமான்பக்கலுள்ள பக்தியே நிரதிசய போக்ய மென்கிறார்.

இ.—ஏழாந்திருவாய்மொழியில், ஸர்வசேஷியாகையாலே வகுத்தவனாய், ச்ரிய:பதியாகையாலே ஸர்வாதிகனுமாய், ஸுலபனுமாய், ஸமஸ்தகல்யாண குணாத்மகனாகையாலே ஆச்ரிதர்க்கு முகங் கொடுக்கும் சீலனுமாய், ஆநந்தாவஹமான ஸ்வரூபரூபகுண விபூதிகளையுடையனாகையாலே நிரதிசயா நந்தபரிபூர்ணனாய், "ஏஷஹ்யேவாநந்தயாதி" என்கிறபடியே தன்னைக் கிட்டினாரை ஆநந்திப்பிக்கும் ஸ்வபாவனானவனை பஜியாநின்றுவைத்து, ப்பலாந்தரத்தை ப்ரார்த்திக்கிறவர்களை நிந்தித்து,'பஜநீயனானவன் தான் வேண்டா, பஜநந்தானே அமையும்' என்று ஆச்ரயணத்தினுடைய ரஸ்யதையை அருளிச்செய்கிறார். "அச்ரத்ததாநா: புருஷா தர்மஸ்யாஸ்ய பரந்தப, அப்ராப்ய மாம் நிவர்த்தந்தே ம்ருத்யுஸம்ஸாரவர்த்மநி" "ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம் ஸுஸுகம்கர்த்துமவ்யயம்".

ஈடு.—ஆறில் திருவாய்மொழியிலே ஸ்வாராத னென்றார்; அதில்சொன்ன ஆச்ரயணந் தான் போகரூபமாயிருக்குமென்கிறார் இதில். பகவத்ஸமாச்ரயணமாகிறதுதான் இதுக்கு இட்டுப் பிறவாத ஸர்வேச்வரனும் ஆசைப்படும்படி போகரூபமாயிருப்பதொன்றிறே. *அச்ரத்ததாநா: புருஷா:* விச்வாஸபூர்வக த்வராரஹிதரானவர்கள். *அஸ்ய தர்மஸ்ய* என்கு றிறே—தனக்கும் இனிதாயிருக்கையாலே, *பரந்தப* விரோதிவர்க்கத்தை உதறவல்லாய் நீயன்றோ. *அப்ராப்யமாம் நிவர்த்தந்தே* செய்த குற்றங்களை யடையப் பொறுத்துத் தங்களை நல்வழி போக்கும் என்னை விட்டு, தந்தாமுடைய விநாசத்தைச் சூழ்ப்பதான ஸம்ஸாரத்தை விரும்பி அவ்வழியே போகாநிற்பர்கள். இதுதான் இருந்தபடி பாரா யென்கிறான். *ப்ரத்யக்ஷா வகமம்*-*ந மாம்ஸ சக்ஷுஷாபிவீக்ஷ்யதே தம்* என்கிற நான் ப்ரத்யக்ஷபூதனானவன். *தர்ம்யம்* நம்மைக் காண்கை ஒரு தலையானால் அதர்ம்யமானாலும் மேல்விழவேணும்; இது அங்ஙனன்றிக்கே, தர்மாதநபேதமுமா யிருக்கும். *ஸுஸுகம் கர்த்தும்* ஸ்மர்த்தவ்ய விஷயஸாரஸ்யத்தாலே தானும் போகரூபமா யிருக்கும். *அவ்யயம்* கோலின பலங்களைக் கொடுக்கச் செய்தேயும் ஒன்றும் செய்யாதேதாமாய் நம்நெஞ்சிலே கிடக்கையாலே தான் முதலழியாதே கிடக்கும். ச்ரிய:பதியாய், ஸமஸ்தகல்யாண குணாத்மகனாய், ஸகலாத்மாக்களுக்கும் சேஷியாய், நிரதிசயா நந்தயுக்தனாய், *ஏஷஹ்யேவாநந்தயாதி* என்கிறபடியே தன்னைக் கிட்டினாரையும் ஆநந்திப்பிக்கக் கடவனாய்; மோக்ஷதசையில் அநுபவம் இனிதாகிறதும் அவனைப்பற்றி வருகையாலேயிறே; அப்படியே ஆச்ரயணமும் அவனைப்பற்றி வருகையாலே போகரூபமாயிருக்குமிறே. இப்படி ஸாதநஸமயமே தொடங்கி இனிய விஷயத்தைப் பற்றுநிற்கச்செய்தே, அவனைவிட்டு க்ஷுத்ர ப்ரயோஜநத்தைக் கொண்டு அகலுவதே! என்று கேவலரை நிந்தியாநின்றுகொண்டு, இத்தை யொழியில் தாமுளராகாதபடி தமக்கு இனிதாயிருக்கையாலே இவ்வாச்ரயணத்தினுடைய இனிமையைச் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

பிறவித்துயரற ஞானத்துள்நின்று*
துறவிச்சுடர்விளக்கம் தலைப்பெய்வார்*
அறவனை ஆழிப்படையந்தணனை*
மறவியையின்றி மனத்துவைப்பாரே. (1)

ஒ.—முதற்பாட்டில், நிரதிசய போக்யனான தன்னை ஆச்ரயியாநின்றுவைத்தே ஆத்மமாத்ர நிஷ்டரான முமுக்ஷுக்களுடைய அபேக்ஷிதஸம்விதாநம் பண்ணுகிற எம்பெருமான்படியைக் கண்டு விஸ்மிதராகிறார்.

[பிறவி யென்று தொடங்கி] - ஜந்மஜராமரணாதி ஸாம்ஸாரிக து:கம் அறுகைக்காக ஆத்ம ஜ்ஞாநத்திலே நின்று ப்ரக்ருதிவிநிர்முக்தாத்ம ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரிக்கவேண்டியிருப்பார். [அறவனை] - அநந்ய ப்ரயோஜநரோடொக்க ப்ரயோஜநாந்தரபரரையும் அங்கீகரித்து, அவர்கள்அபேக்ஷிதத்தைச் செய்யுமவனை. [ஆழியென்று] - கையுந்திருவாழியுங் கண்டு தங்கள்புருஷார்த்தத்தை மறவாதே அவன்பக்கல் சுத்திமாத்ரத்தையே அநுஸந்தித்து ஆச்ரயியாநிற்பரே. இவர்களுக்கும் ஆச்ரயிக்கலாம்படி யிருப்பதே! என்ன அறவனோ? என்று கருத்து.

இ.—முதற்பாட்டில், நிரதிசயபோக்யனானவனை ஆச்ரயித்துவைத்து க்ஷுத்ரப்ரயோஜநத்தை அபேக்ஷிப்பதே! என்று கேவலரை நிந்தித்து, அவர்கள் சிறுமை பாராதே அவர்கள்அபேக்ஷிதத்தைக் கொடுப்பதே! என்று அவன்நீர்மையைக் கண்டு விஸ்மிதராகிறார்.

[பிறவித்துயர்] - பிறவி என்கிற இது - அஞ்சுவிகாரங்களுக்கும் உபலக்ஷணம்; "ஜராமரண மோக்ஷாய" என்கிறவிடத்திலே ஜந்மாதிகளுங் கூடுகிறப்போலே. ஜந்மஜராமரணாதி ஸாம்ஸாரிகது:கம் அறுகைக்காக. [ஞானத்துள் நின்று] - ஆத்மஜ்ஞாநமாத்ரத்திலே நின்று. அதாகிறது - சாஸ்த்ரஜந்ய ஜ்ஞாநமாத்ரத்திலே யென்றபடி. "சுடர்விளக்கம்" என்று - ப்பலமாகச் சொல்லுகையாலே இங்கு ஜ்ஞாந மாத்ரத்தையே சொல்லுகிறது; யதோபாஸநமிறே ப்பலம். [துறவி] - துறக்கை. சரீராவஸாநத்திலே. [சுடர்விளக்கம்] - ஜ்ஞாநகுணகமாய் ஸ்வயம் ப்ரகாசமாயிருக்கிற ஆத்மாவினுடைய அஸங்குசிததசையை. *[தலைப்பெய்வார்]* - கிட்டுவார். பிறவித்துயரற ஞானத்துள் நின்று என்று - உபாஸநம். துறவிச்சுடர் விளக்கந்தலைப்பெய்கை - ப்பலம். ப்ரக்ருதிவிநிர்முக்தாத்ம ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரிக்க வேண்டியிருப்பார். [அறவனை] - தார்மிகனை. அநந்யப்ரயோஜநரோடொக்க ப்ரயோஜநாந்தரபரரையும் அங்கீகரித்து அவர்கள்அபேக்ஷிதத்தைக் கொடுப்பதே! என்ன தார்மிகனோ! என்கிறார். *[ஆழிப்படையந்தணனை]* - கையுந்திருவாழியுங் கண்டு அதில் கால்தாழாதே, ஆத்மாநுபவவிரோதியைப் போக்குகைக்கு உறுப்பான சுத்தி மாத்ரத்தையே உபஜீவிப்பதே! என்கிறார். அழுக்கறுக்குங் கூரிய உவளைப்போலேயும் சாணிச் சாற்றைப் போலேயுமிறே அவனை நினைத்திருப்பது. [அந்தணனென்று] - சுத்திமாத்ரத்தை நினைக்கிறது. கையுந்திருவாழியுமான அழகைக் கண்டால், "இன்னாரென்றறியேன்" என்று முன்னடிதோற்றுதேயிறே தாங்கள் இருப்பது. [மறவியையின்றி மனத்துவைப்பாரே] - அவனுடைய போக்யதையைக் கண்டு வைத்தும் தங்கள் புருஷார்த்தத்தை மறவாதே ஆச்ரயியாநிற்பார்களே. [மறவியை] - மறப்பை [இன்றி] - மறப்பின்றிக்கே. மறவாதே. அவர்களுக்கும் ஆச்ரயிக்கலாம்படி யிருப்பதே என்ன தார்மிகனோ! என்று கருத்து. ஒருவன் ஒருதப்பைச் செய்தால், ஸம்வதிக்கையும் அரிதாயிறே நிர்வாஹனுக்கு இருப்பது.

ஈடு.—*முதற்பாட்டு. இப்படி நிரதிசயபோக்யனானவனை விட்டு, ப்ரயோஜநாந்தரத்தைக் கொண்டு அகலுவதே என்று கேவலரை நிந்திக்கிறார்.*

[பிறவித்துயரற ஞானத்துள் நின்று] "ஜராமரணமோக்ஷாய" *என்று இருப்பாருமுண்டு, கேவலர், அவர்களைச் சொல்லுகிறது. ஐச்வர்யார்த்திக்கும், ஆத்மப்ராப்தி காமனுக்கும் பகவத்ப்ராப்தி காமனுக்கும் ஒக்குமாயிற்று ஸர்வேச்வரனை உபாஸிக்கையும் அந்திம ஸ்ம்ருதியும்; இனிப்பேற்றில் தாரதம்யம் வருகிறபடியென்? என்னில்; - உபாஸநஸமயத்திலே சிறுகக்கோலுகையாலே. அதாவது அவனளவும்செல்லாதே நடுவே வரம்பிட்டுக் கொள்ளுகை. அத்தையிறே* *"வரம்பொழிவந்து" *என்கிறது. அதுதனக்கு அடி அவர்கள் ஸுக்ருததாரதம்யம்;* *சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ் ஸுக்ருதிநோ(அ)ர்ஜுந* *என்று அருளிச் செய்தானிறே. ஸுக்ருதத்துக்கு அநுரூபமாகவாயிற்று புருஷார்த்தங்களில் ருசி பிறப்பது. ருச்யநுகுணமாகவாயிற்று உபாஸிப்பது; உபாஸநாநுகுணமாக இருக்கக் கடவது ப்பலம்; [பிறவித்துயர் இத்யாதி] 'இவனைப்பற்றி இப்பேற்றைப் பெற்றுப்போவதே!' என்கிறார். "பிறவி" என்கிற இத்தால் ஜந்மந்தொடக்கமாக உண்டான மற்றை ஐந்து விகாரங்களையும் நினைக்கிறது. ஆக, ஜந்மஜராமரணாதி ஸாம்ஸாரிக ஸகலதுரிதங்களும் போம்படியாக. *"இந் நின்ற நீர்மை யினியாமுறாமை"‡ என்று இவர்தாமும் கழிக்கிறதாயிராநிற்கச்செய்தே, இவர்களை நிந்திக்கிறதுக்குக் கருத்தென்? என்னில்; இவர்க்கு விரோதிபோமது ஆநுஷங்கிக*

மாய், பகவதநுபவம் உத்தேச்யமாயிருக்கும்; அவர்களுக்கு து:கநிவ்ருத்திதானே உத்தேச்யமாயிருக்கும். [ஞானத்துள் நின்று] இவ்வநுஸந்தாநம் அவ்வருகே போகாநிற்கச் செய்தேயும், ஆத்மஜ்ஞாநமாத்ரத்திலே கால் ஊன்ற அடியிட்டாயிற்று நிற்பது. "துறவி" என்கிற இது துறக்கையைச் சொன்னபடி. "பிறவித்துயரற" என்றதினுடைய ப்பலரூபமான ப்ரக்ருதி விநிர்முக்தவேஷத்தை. "சுடர்விளக்கம் தலைப்பெய்வார்" என்கிற இது "ஞானத்துள்நின்று" என்ற அதினுடைய ப்பலரூபமாயிருக்கிறது. ஸம்ஸாரதசையில் கர்மமடியாக வரக்கடவ ஸங்கோசமில்லையிறே மோக்ஷ தசையில், விகஸிதமாயிருக்குமிறே. ஜ்ஞாநகுணகமுமாய் ஜ்ஞாதாவுமாயிறே வஸ்துதான் இருப்பது. "பிறவித்துயரற ஞானத்துள் நின்று" என்றது உபாஸநமானால் துறவிச்சுடர்விளக்கம் தலைப்பெய்கை பலமா யிருக்குமிறே. [பிறவி இத்யாதி] 'ஸாம்ஸாரிகஸகலது:கங்களும் போகவேணும்' என்று ஆத்மஜ்ஞாநத்திலே ஊன்றநின்று ப்ரக்ருதி விநிர்முக்தமான ஆத்மஸ்வரூபத்தை ப்ராபிக்கவேண்டியிருப்பார். [அறவனை] அவர்கள்படியையும், பலம்கொடுக்கிறவன்படியையும் பாரா, 'என்ன பரமோதாரனோ?' என்கிறார். ஏதேனுமொரு ப்ரயோஜநத்துக்கும் தன்னையே அபேக்ஷிக்குமத்தனையாகாதே வேண்டுவது. 'எங்களுக்கு நீ வேண்டா, க்ஷுத்ரப்ரயோஜநம் அமையும்' என்றிருக்கிறவர்களுக்கும் அத்தைக்கொடுத்து விடுவதே! என்ன தார்மிகனோ! என்கிறார். [ஆழிப்படையந்தணனை] ஆத்மாநுபவ விரோதியைப் போக்குகைக்குப் பரிகரமான திருவாழியைக் கையிலேயுடையவன்; அந்தணனென்று சாணிச் சாற்றோபாதி 'சுத்தன்' என்று கொண்டார்களித்தனை. போக்யதையில் நெஞ்சுசென்றதில்லை. 'சுத்திகுணவிசிஷ்டன்' என்றாயிற்று அவர்கள் அநுஸந்திப்பது. கையுந் திருவாழியுமான அழகைக் கண்டால் அதிலே கால்தாழாதே, தங்கள் ப்ரயோஜநத்துக்கு உறுப்பான சுத்திமாத்ரத்தையே பற்றுவதே! என்கிறார். [மறவியையின்றி] இவர்க்குக் கையுந் திருவாழியுமான அழகைக் கண்டால் முன்னடி தோற்றாது; *"சக்கரத்தண்ணலே" என்றால், பின்னைத் தரைப்படுமித்தனையிறே இவர்; திருமங்கையாழ்வாரும் *"ஆழியொடும் பொன்னார்சார்ங்கமுடைய வடிகளை யின்னாரென்றறியேன்" என்று உத்தேச்ய வஸ்துவையும் மறக்கும்படி கலங்குவர். பிள்ளாய்! நல்லத்தை மறக்கப் பண்ணாநிற்க, இவ்விஷயம் தீயத்தை மறவாதொழிவதே. [மறவியையின்றி] அவனுடைய போக்யதையுங் கண்டுவைத்து, தங்கள் புருஷார்த்தத்தை மறவாதே ஆச்ரயியாநிற்பர்கள். மறவியை மறப்பை; மறப்பின்றிக்கே, மறவாதே மனத்துவைப்பாரே. உபாஸகபரமானால், சுடர்விளக்கம் குணப்ரகாசகமான விக்ரஹமாகக்கடவது. அவனுடைய போக்யதையை அநுஸந்தித்து வைத்தும், பின்னையும் இக்கிலை குலையாதே நிற்பதே! இவ்வரிய செயலைச் செய்கைக்குத் திண்ணியராவதே இவர்கள்! பிறவித்துயரற ஞானத்துள் நின்று துறவிச்சுடர்விளக்கந் தலைப்பெய்வார், மறவியை யின்றி, அறவனை யாழிப்படையந்தணனை மனத்து வைப்பாரே இத்யந்வய:-

வைப்பாம்மருந்தாம் அடியரை*வல்வினைத்
துப்பாம்புலனைந்தும் துஞ்சக்கொடானவன்*
எப்பால்யவர்க்கும் நலத்தாலுயர்ந்துயர்ந்து*
அப்பாலவன் எங்களாயர்கொழுந்தே. (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், அநந்யப்ரயோஜநர்திறத்திலே எம்பெருமானிருக்கும்படியை அருளிச்செய்கிறார்.

[வைப்பாமென்று தொடங்கி]-ஆச்ரிதர்க்கு ப்ராப்யமான பரமபுருஷார்த்தமும், தத்விரோதியான ஸம்ஸாரம் போக்குகைக்கு மருந்துமாய் அவர்களை ஸ்வவிச்லேஷஜநகமான மஹாபாபத்தை விளைக்க வற்றான இந்த்ரியங்கள் நலியிலும் நலிவுபட விட்டுக்கொடான். [எப்பாலென்று தொடங்கி] - ஆநந்தவல்லியில் சொல்லிநின்றபடியே எல்லாவிடத்திலுமுள்ள எல்லாரிலுங்காட்டில் ஆநந்தத்தாலே மேற்பட்டு வாங்மநஸ்ஸுக்களுக்கு நிலமன்றியே யிருந்துவைத்துத் தன்னுடைய நிரவதிக க்ருபையாலே ஆச்ரிதர்க்காக இடையரில் ப்ரதாநனாய் வந்து பிறந்தான்.

இ.—இரண்டாம்பாட்டில், அநந்யப்ரயோஜநர்திறத்தில் அவனிருக்கும்படியைச் சொல்லுகிறார்.

[வைப்பாம்] - ப்ராப்யமான புருஷார்த்தமாம். நினைத்த வகைகளெல்லாம் அநுபவிக்கைக்கு யோக்யமாம்படி சேமித்துவைக்கும் நிதிபோலே தன்னை யாக்கிவைக்கும். [மருந்தாம்] - விரோதியைப் போக்கி போக்த்ருத்வசக்தியைக் கொடுக்கும். இத்தால் ப்ராபகத்வஞ் சொல்லுகிறது: ''நிர்வாணம் பேஷஜம்'' என்னக்கடவதிறே. இப்படி செய்வது ஆர்க்கு? என்னில், - [அடியரை] - ப்ரயோஜநாந் தரத்தைக் கொண்டு அகலாதே, தானே ப்ரயோஜநமா யிருக்குமவர்களுக்கு. [வல்வினைத்துப்பாம் புலனைந்தும் துஞ்சக்கொடானவன்] - விஷயங்களிலே மூட்டி ஸ்வவிச்லேஷ ஜனகமான மஹாபாபத்தைப் பண்ணுவிக்கைக்கு ஸமர்த்தமான ச்ரோத்ராதீந்த்ரியங்களால் நசிக்கும்படி விட்டுக்கொடான். துப்பு - ஸாமர்த்யம். ''ஸங்காத் ஸஞ்ஜாயதே'' இத்யாரப்ய ''புத்திநாசாத் ப்ரணச்யதி'' என்னக்கடவதிறே. ''அவன்'' என்கிறது ஆரை? என்னில், - [எப்பால் இத்யாதி] - எல்லாவிடத்திலுமுள்ள எல்லாரிலுங் காட்டில் ஆநந்தத்தால் மேற்பட்டு. [அப்பாலவன்] - மநுஷ்யாநந்தம் தொடங்கி சதகுணிதோத்தர க்ரமத்தாலே ப்ரஹ்மாநந்தத்தளவுஞ் சென்று, அத்தை மநுஷ்யகோடியிலே யாக்கி, மேல்மேல் கல்பித்துக் கொண்டு ஆநந்தத்தைப் பெருக்கினாலும் ப்ரமாணங்களால் வாங்மநஸங்களுக்கு நிலமன்றென்று மீளும்படி அவ்வருகான ஆநந்தத்தையுடையவன். [எங்களாயர் கொழுந்தே] - இப்படி ஸர்வாதிகனாய்வைத்து, ஆச்ரிதர்க்காகத் தாழ்வுக்கு எல்லையான இடையரிலே வந்து பிறந்தவன். [ஆயர்கொழுந்து] - இடையர் ப்ரஹ்மாதிகள் கோடியிலே யென்னும்படி தாழ்வில் வந்தால் அவர்களுக்குத் தலைவனானவன். கோபஸஜாதீயனாய்வந்து அவதரித்தது - தன்பக்கலிலே ந்யஸ்தபரரானாரை விஷயங்கள் நலியாமைக்கன்றோ!

ஈடு.—இரண்டாம் பாட்டு. ஸர்வேச்வரனை ஆச்ரயித்து க்ஷுத்ரப்ரயோஜநத்தைக் கொண்டுபோவதே! என்று கேவலரை நிந்தித்தார்; அவன்தன்னையே பற்றியிருக்குமவர்களுக்கு, அவன் தானிருக்கும்படி சொல்லுகிறார் இப்பாட்டில்.

[வைப்பாம்] - ஆடு அறுத்து பலியிட்டு, அரைப்பையாக்கி, இஷ்ட விநியோகார்ஹமாம்படி ரக்ஷித்துவைக்கும் நிதிபோலே, இவனுக்கு நினைத்த வகைகளெல்லாம் அநுபவிக்கலாம்படி தன்னை இஷ்டவிநியோகார்ஹமாக்கிவைக்குமென்றிட்டு ப்ராப்யத்வம் சொல்லுகிறது. [மருந்தாம்] - ஆனாலும், க்ஷுத்ர விஷயங்களையும் உண்டறுக்கமாட்டாத ஸம்ஸாரிசேதநனுக்கிறே ஸர்வாதிகனை தன்னை விஷயமாக்குகிறது, இவன் தன்னை அநுபவிக்கும்படியென்? என்னில், — அக்குறைகள் வாராதபடி அநுபவ விரோதிகளைப் போக்கித் தன்னை யநுபவிக்கைக்கு ஈடான சக்தி யோகத்தையுங் கொடுத்துத் தன்னையுங்கொடுக்குமென்று அவனுடைய ப்ராபகத்வம் சொல்லுகிறது. *ய ஆத்மதா பலதா:* என்கிறபடியே. ஆக, ப்ராப்யத்வமும் ப்ராபகத்வமும் சொல்லிற்று. இப்படி செய்வது ஆர்க்கு? என்னில், — [அடியரை] *ந நமேயம்* என்னும் நிர்ப்பந்தம் தவிர்ந்தார்க்கு. அவனைப்பற்றி ஒரு ப்ரயோஜநத்தைக் கொண்டு அகலாதே, அவன்தன்னையே பற்றி அவன்படிவிட ஜீவித்திருப்பாரை வலிய வினைகளிலே கொண்டுபோய் மூட்டுகைக்கீடான ஸாமர்த்யத்தை யுடைத்தான இந்த்ரியங்களைந்தாலும் துஞ்சக்கொடானென்னுதல், அஞ்சிலும் புக்குத் துஞ்சக்கொடானென்னுதல். துப்பென்று - ஸாமர்த்யம். 'அவன்' என்கிறது, எவனைப் பற்றி? அவன்தான் இப்படி செய்ய எங்கே கண்டோம்? என்னில்,—அத்தை உபபாதிக்கிறது மேல், [எப்பால் இத்யாதி] - ஸ்த்தாந விசேஷங்களாலும் மநுஷ்யாதி பேதங்களாலும் வரக்கடவன சில உயர்த்திகளுண்டிறே. பூமிபோலன்றிறே ஸ்வர்க்கம், மநுஷ்யர்களைப் போலல்ல விறே தேவர்கள். எப்பால் - எல்லா விடத்திலு மென்றபடி. பாலென்றது இடம். 'அப்பால், இப்பால்' என்னக்கடவதிறே, அவ்விடம், இவ்விடம் என்றபடியிறே. எல்லாவிடத்திலுமுண்டான எல்லார்க்கும். [நலத்தால்] ஆநந்தத்தாலே மேலேமேலே போய். பின்னையும் அது தன்னைச் சொல்லப்புக்கால் *யதோ வாசோ நிவர்த்தந்தே* என்று மீளவேண்டும்படியான ஆநந்தப்ராசுர்யத்தை யுடையவன். சதகுணிதோத்தர க்ரமத்தாலே அப்யஸ்யமாந மாகாநின்றுள்ள நிரதிசயாநந்தயுக்தன்; *ஆநந்தமய:* என்னக்கடவதிறே. [எங்களாயர்கொழுந்தே] இப்படி ஸர்வாதிகனானவன் இதர ஸஜாதீயனாய் வந்து அவதரித்தது தன்னை ஆச்ரயித்தார்

விஷய ப்ரவணராய் முடியும்படி விட்டுக்கொடுக்கவோ? தான் சோகமோஹங்களை அனுபவிக்கிறது தன்னைப்பற்றினர் சோகமோஹங்களை அநுபவிக்கைக்காகவோ? மேன்மைக்கு எல்லையானவன் தாழ்வுக்கு எல்லையாயிற்றது இவர்களை அநர்த்தப்படவிடவோ? [எங்களாயர் கொழுந்தே] க்ருஷ்ணன் திருவவதரித்த ஊரிலுள்ளாரோடே தமக்கு ஒரு ப்ராக்ருத ஸம்பந்தம் தேட்டமாயிருக்கிறபடி. அன்றியே, [எங்கள்] அவதாரந்தான் ஆச்ரிதார்த்தமாயிருக்குமிறே. நவநீதசௌர்ய நகரக்ஷோபம் பழையதாக எழுதிக்கிடக்கச் செய்தேயும், "எத்திறம்" என்றார் இவரேயிறே. [ஆயர் கொழுந்தே] இடையர் தங்களுக்குத்தான் ப்ரஹ்மாதிகள் கோடியிலேயாம்படி அவர்களில் ப்ரதாநனானவன் துஞ்சக்கொடான். எப்பாலவர்க்கும் முதலாக அந்வயம்.

ஆயர்கொழுந்தாய் அவரால்புடையுண்ணும்*
மாயப்பிரானை என்மாணிக்கச்சோதியை*
தூயவமுதைப் பருகிப்பருகி*என்
மாயப்பிறவி மயர்வறுத்தேனே. (3)

ஓ.—மூன்றும்பாட்டில், எம்பெருமானைத் தனக்கு இனிதாக புஜியாநிற்கச்செய்தே ஸாம்ஸாரிக ஸகல து:கமும் போயிற்றென்கிறார்.

[ஆயரென்று தொடங்கி] - ஆயருளராகத் தானுந் தன்மையை யுடையனாய் அவர்களது ஏதேனுமொரு த்ரவ்யத்தாலல்லது தரியாமையாலே வெண்ணெய் களவுகாணப்புக்கு அகப்பட்டுத் தாயிற்காட்டிலும் பரிவரான ஊரிலுள்ளாரெல்லாராலும் புடையுண்ணும் ஆச்சர்யத்தை யுடையனாய் ஆச்ரிதராலே நெருக்குண்கையாலே பெருவிலையனானதன் திருவழகை எனக்கு அநுபவிக்கத் தந்தவனை. [தூயஅமுதை யென்று தொடங்கி] - நியமங்களும் வேண்டாதே, அதிகாரிதான் ஆரேலுமாகவுமாய், ஸர்வதா ஸேவ்யமுமாய், ஸம்ஸாரத்தைப் போக்குமதுவுமாயிருக்கிற சுத்தியையுடைய அம்ருதத்தை மேன்மேலெனப் பருகி ஸம்ஸாரத்தில் பிறக்கையாலே ஸஞ்சிதமான அஜ்ஞாநாதிகளையெல்லாம் போக்கினேன்.

இ.—மூன்றும்பாட்டில், எம்பெருமானைத் தமக்கு இனிதாக புஜியாநிற்கச்செய்தே ஸாம்ஸாரிக ஸகல து:கங்களும் போயிற்று என்கிறார்; க்ஷுத்ரமான ப்ரயோஜநத்துக்காகப் பற்றினேனல்லேன், அவனைப் பரமப்ரயோஜநத்துக்கு உபாயமாகப் பற்றினேனுமல்லேன்; இனிய விஷயமென்று அநுபவிக்க இழிந்தேன், விரோதியானது தானே போகக்கண்டேனென்கிறார்.

[ஆயர் கொழுந்தாய்] - ஆயர் வேராக, தான் கொழுந்தாய், வேரிலே நோவுண்டானால் கொழுந்து வாடுமாபோலே, அவர்களுக்கு ஒரு நலிவு வரில் தன்முகம் வாடுமென்கை; காட்டிலே இடையர்க்கு அடி கொதித்தால் க்ருஷ்ணன்முகமிறே வாடுவது. [அவரால் புடையுண்ணும் மாயப்பிரானை] - வெண்ணெய் களவுகாணப் புக்கு அகப்பட்டு அவர்களெல்லாராலும் புடையுண்ணும் ஆச்சர்யபூதனை. அவ்வூரில் பரிவரில் வந்தால், தாயரில் குறைந்தாரில்லை யென்கை. [மாயம்] - அவாப்தஸமஸ்தகாமனுக்குக் களவு கண்டு ஜீவிக்கவேண்டி, களவிலேயிழிந்து, ஸத்யஸங்கல்பனாயிருந்துவைத்து அது தலைக்கட்டமாட்டாதே வாயது கையதாக அகப்பட்டுக் கட்டுண்டு அவர்களாலே அடியுண்டு போக்கடியற்று நிற்கிற நிலை. [பிரானை] - செய்தவையடங்க உபகாரமாயிருக்கை. *[என்மாணிக்கச்சோதியை]* - அவர்கள் நெருக்க நெருக்க சாணையிலேறிட்டுக் கடைந்த மாணிக்கம்போலே புகர்மிக்குச் செல்லுகிறபடி. [என்]-அப்புகரை எனக்கு முற்றூட்டாக்கித் தந்தவனை. *[தூய இத்யாதி]* - அந்த அம்ருதம் அதிக்ருதாதிகாரம், இது ஸர்வாதிகாரம், ப்ரஹ்மசர்யாதிநியதி யுண்டு அதுக்கு; இருந்தபடியிலே அநுபவிக்க அமையும் இதுக்கு. [பருகிப்பருகி] - ஸக்ருத்ஸேவ்யம் அது, ஸதாஸேவ்யம் இது. [என்மாயப்பிறவி மயர்வறுத்தேனே] - ப்ரக்ருதிஸம்பந்த ப்ரயுக்தமான ஜந்மத்தாலே ஸஞ்சிதமான அஜ்ஞாநத்தை ஸவாஸநமாகப் போக்கினேன், அந்த அம்ருதம் சரீரஸம்பந்தத்தைப் பூண்கட்டும்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. ப்ரயோஜநாந்தரபரரான கேவலரை நிந்தித்தார்; அநந்யப்ரயோஜநர்திறத்தில் அவனிருக்கும்படி சொன்னார். நீர் இவ்விரண்டு கோடியிலும் ஆர்? என்ன, 'நான் ப்ரயோஜநாந்தரபரனல்லேன், அநந்யப்ரயோஜநனாய் 'அவனைப் பற்றினேன்' என்று நேர்கொடுநேரே சொல்லவும்மாட்டாரே; அவனை அநுபவியாநிற்க, விரோதி தன்னடையே போய்க்கொடுநின்றவன் நான்' என்கிறார்.

[ஆயர்கொழுந்தாய்] இடையர்க்கு ப்ரதாநனாயிருக்கும் இருப்புச் சொல்லிற்றுக்கீழ்; இங்கு, அவர்களில் ஏகதேசஸ்த்தனாயிருக்கும்படி சொல்லுகிறது. அதாவது அவர்கள் வேராக, தான்கொழுந்தா யிருக்குமவ னென்கிறது. இடையர் காட்டிலே பசுக்களின் பின்னே திரிந்து, அவர்களுக்கு அடிகொதித்தால் வாடுவது க்ருஷ்ணன்முகமாயிருக்கை; வேரிலே வெக்கை தட்டினால் கொழுந்திறே முற்பட வாடுவது. [அவரால் புடையுண்ணும்] அவனால் என்னுதல் அவளால் என்னுதல் செய்யாமையாலே திருவாய்ப்பாடியில் பஞ்சலக்ஷங்குடியிலும் இவனை நியமிக்க உரியரல்லாதார் இல்லை. 'மத்தாலே ஒரடியடிப்பார்கள் போலேகாணும்' என்று பட்டர் அருளிச்செய்யும்படி. [மாயப்பிரானை] அவாப்த ஸமஸ்தகாமனான ஸர்வேச்வரன், தனக்கு ஒருகுறையுண்டாய் வந்து அவதரித்து, ஆச்ரிதஸ்பர்சமுள்ள த்ரவ்யத்தாலல்லது தரியாதானாய், அதுதான் நேர்கொடுநேரே கிடையாமையாலே களவுகாணப்புக்கு, தலைக்கட்டமாட்டாதே வாயது கையதாக அகப்பட்டுக் கட்டுண்டு அடியுண்டு நிற்கும் நிலையை அநுஸந்தித்து, 'மாயப்பிரானை' என்கிறார். [என்மாணிக்கச் சோதியை] ஆச்ரிதர் கட்டியடிக்க அடிக்க, களங்கமறக் கடையுண்ட மாணிக்கம்போலே திருமேனி புகர்பெற்று வருகிறபடி. கட்டின அளவுக்கு வெட்டென்றிருக்குமவன், கட்டியடிக்கப்புக்கால் புகர்பெறச் சொல்லவேணுமோ? கண்ணியார் குறுங்கயிற்றால் கட்ட வெட்டென்றிருந்தானிறே. [என்] அப்புகரை எனக்கு முற்றூட்டாக்கினவன். [தூயவமுதைப் பருகிப்பருகி] தேவர்கள் அதிகாரிகளாய், ப்ரஹ்மசர்யாதிநியமங்கள் வேண்டி, ஸக்ருத்ஸேவ்யமா யிருக்குமிறே, அது. ஸர்வாதிகாரமுமாய், ஒரு நியதியும் வேண்டாதே, ஸதாஸேவ்யமுமான அம்ருதமிறே இது. [என் இத்யாதி] ஆச்சர்யமான ஜன்ம மடியாக உண்டான அஜ்ஞானத்தை வாஸனையோடே போக்கினேன். ஜன்மத்துக்கு ஆச்சர்யமாவது ஒருபடிப்பட்டிராமை. மயர்வறுத்தே னென்கிறது "இந்நின்ற நீர்மை யினியாமுறாமை" என்று அபேக்ஷித்தபடியே ப்பலாநுவம் தம்மதாகையாலே அருளிச்செய்கிறார்.

> **மயர்வறவென்மனத்தே மன்னினான்தன்னை***
> **உயர்வினையேதரும் ஒண்சுடர்க்கற்றையை***
> **அயர்விலமரர்கள் ஆதிக்கொழுந்தை* என்**
> **இசைவினை என்சொல்லியான்விடுவேனோ?** (4)

ஒ.—நாலாம்பாட்டில், தன்படியைக்காட்டி என்னை இசைவித்து, அயர்வறுமமரர்களோடு கலக்குமாபோலே என்னோடுகலந்த மஹோபகாரகனை எனக்குவிட உபாயமுண்டோ? என்கிறார்.

[மயர்வறவென்று தொடங்கி]-அஜ்ஞாநமெல்லாம் போம்படி ஒருநாளும் மாறாதே என்நெஞ்சிலே யிருந்து எனக்கு மேன்மேலென உச்ச்ராயத்தைத் தந்து அது தன்பேறாகக் கொண்டு அத்தாலே விட விளங்காநின்றுள்ள அழகையுடையவனை. 'ஒண்சுடர்க்கற்றை' என்று தம்மை வசீகரிக்கைக்கு அடியான அழகைச் சொல்லுகிறது என்றுஞ் சொல்லுவர். [அயர்வென்று தொடங்கி] பகவத்விஷயத்தில் விஸ்மரணமில்லாத அமரர்களுடைய ஸத்தாதிகளுக்கு ஹேதுவாய் ப்ரதாநமாய்வைத்து எனக்கு 'தன்னையநுபவிப்போம்' என்னும் இசைவைப் பிறப்பித்தவனை.

இ.—நாலாம்பாட்டில், தன்படியைக்காட்டி என்னை இசைவித்து, அயர்வறுமமரர்களோடு கலக்குமாபோலே என்னோடுகலந்த உபகாரகனை நினைத்து விட உபாய முண்டோ? என்கிறார். முன்பு 'அயோக்யன்' என்று அகன்றவராகையாலே இனி விடே னென்கிறார்.

[மயர்வற] - அஜ்ஞாநம் ஸவாஸநமாகப் போம்படி. [என்மனத்தே மன்னினன் தன்னை] - அஜ்ஞாநம் பின்னாட்டாதபடி என் ஹ்ருதயத்திலே வந்து புகுந்தான். [மன்னினன் தன்னை] - இனி கந்தவ்ய பூமியில்லை யென்று ஸ்த்தாவர ப்ரதிஷ்ட்டைபோலே யிருந்தான். [உயர்வினையேதரும்] - ஜ்ஞாநவிஸ்ரம்ப பக்திகளை மேன்மேலெனத்தரும். தந்து சமைந்தானு யிருக்கிறிலன். [ஒண்சுடர்க்கற்றையை] - உபகரித்தானு யிருக்கையன்றிக்கே, உபகாரங்கொண்டானு யிருக்கும். கொள்கின்றவன்வடிவில் புகர் தன் வடிவிலே தோற்றியிருக்கை. ''ஸ ஸர்வாநர்த்திநோ த்ருஷ்ட்வா ஸமேத்ய ப்ரதிநந்த்யச''. ஒண்சுடர்க் கற்றையென்று தம்மை வசீகரித்த அழகைச் சொல்லிற்றுகவுமாம். [அயர்விலமரர்கள்] - பகவத் விஷயத்திலே விஸ்ம்ருதியுமின்றிக்கே விச்சேதமுமின்றிக்கே யிருப்பது ஒருநாடாக உண்டாயிருக்கக்கிடீர் ஆளில்லாதாரைப்போலே என்னை விடாதே யிருக்கிறது! [ஆதிக்கொழுந்தை]-அவர்கள் ஸத்தாதிகளுக்கு ஹேதுவாய் ப்ரதாநனுமாயிருக்கை. [என் இசைவினை] - அப்படியிருக்கிறவன் என்னையும் அவர்களோடொக்கப் பண்ணுகைக்கு இசைவும் தானுய் வந்துபுகுந்தான். [என்சொல்லி யான்விடுவேனே] - என்ன கண்ணழிவைச் சொல்லி, நான் கைவாங்குவது? அஜ்ஞாநம் அநுவர்த்தித்து விடவோ? அஸங்கிஹிதனென்று விடவோ? அந்யபரனென்று விடவோ? நன்மைகளைப்பண்ணித்தந்திலனென்று விடவோ? ப்ரத்யுபகாரங்கொள்ள இருந்தானென்று விடவோ? மேன்மை போராதென்று விடவோ? இசைவுக்கு க்ருஷிபண்ணினேன் நானென்று விடவோ? எத்தைச் சொல்லி விடுவது?

ஈடு.—நாலாம்பாட்டு. (''இங்கின் றநீர்மையினியாமுறுமை'' என்று அடியிலே நீர் அபேக்ஷித்தபடியே) உம்முடைய அபேக்ஷிதம் தலைக்கட்டிற்றே; இனி இவ்விஷயத்தைவிட்டுப் பிடிக்குமித்தனையன்றோ? என்ன, நான் என்ன ஹேதுவாலே விடுவேன்? என்கிறார் :

[மயர்வற] அஜ்ஞாநமானது வாஸனையோடேபோக. [என்மனத்தே மன்னினன் தன்னை] 'இன்னமும் மயர்வு குடிகொள்ளவொண்ணுது' என்று என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்து ஸ்த்தாவரப்ரதிஷ்ட்டையாக இருந்தவனை; செடிசீப்த்துக் குடியேற்றின படைவீடுகளை விடாதே யிருக்கும் ராஜாக்களைப்போலே. 'புறம்பேயும் ஒரு கந்தவ்ய பூமி யுண்டு' என்று தோற்ற இராமை. இப்படியிருந்து செய்கிறதென்? என்னில்,—[உயர்வினையேதரும்] ஜ்ஞாந விஸ்ரம்ப பக்திகளைத் தாராநின்றுனென்னுதல். யமாதிகள் தலையிலே அடியிடும்படியான உத்கர்ஷத்தைத் தாராநின்றுனென்னுதல். [தரும்] தந்து சமைந்தானு யிருக்கிறிலன்; *''காதல்கடல் புரைய'' * ''காதல்கடலின் மிகப்பெரிதால்'' * ''நீள்விசும்பும் கழியப்பெரிதால்'' *''சூழ்ந்த தனிற்பெரிய''*. [ஒண்சுடர்க்கற்றையை] இத்தால், எனக்கு உபகரித்தானுயிருக்கையன்றியே, 'தான் உபகாரங்கொண்டான்' என்னுமிடம் வடிவில் புகரிலே தோற்ற இராநின்றுனென்னுதல்; தம்மை வசீகரித்த அழகைச் சொல்லிற்றுகவுமாம்; *தேஜஸாம் ராசிமூர்ஜிதம்* என்னுமா போலே. இப்படி தன்பேறுக உபகரித்தவன், தன் உபகாரங் கொள்வாரில்லாதா னொருவனே? என்னில்,—[அயர்விலமரர்களாதிக் கொழுந்தை] தான் உபகரியாதவன்று, தங்கள் ஸத்தைகொண்டு ஆற்றமாட்டாதாரை ஒருநாடாக வுடையவன். பகவதநுபவ விஸ்ம்ருதிக்கு ப்ராகபாவத்தை யுடையவராய், அவ்வநுபவத்துக்கு விச்சேதசங்கையின்றிக்கே, தாங்கள் பலராயிருக்கிறவர்களுக்கு தாரகாதிகளெல்லாம் தானேயா யிருக்கிறவனை. [என் இசைவினை] 'நானல்லேன்' என்று அகலாதபடி என் இசைவு தானுய்ப் புகுந்தவனை. [என்சொல்லி யான் விடுவேனே] 'சிறிதுமயர்வுகிடந்தது' என்று விடவோ? 'மயர்வைப் போக்கி, தான் கடக்க இருந்தான்' என்று விடவோ? 'எனக்கு மேன்மேலென நன்மைகளைப் பண்ணித்தந்திலன்' என்று விடவோ? 'தான்பண்ணின உபகாரத்துக்கு ப்ரத்யுபகாரங் கொள்ள இருந்தான்' என்று விடவோ? 'வடிவழகில்லை' என்று விடவோ? 'மேன்மை போராது' என்று விடவோ? 'இப்பேற்றுக்கு க்ருஷிபண்ணினேன் நான் என்று விடவோ? எத்தைச் சொல்லி நான் விடுவது? என்கிறார்.

விடுவேனோவென்விளக்கை என்னாவியை*
நடுவேவந்து உய்யக்கொள்கின்றநாதனை*
தொடுவேசெய்து இளவாய்ச்சியர்கண்ணினுள்*
விடவேசெய்து விழிக்கும்பிரானையே. (5)

ஆ.—அஞ்சாம்பாட்டில், தன்னையறியாதே மிகவும் அந்யபரனாயிருக்கிற என்னை, தன் திருக்கண்களின் அழகாலே இடைப்பெண்களை அகப்படுத்திக்கொண்டாப்போலே நிர்ஹேதுகமாக விஷயீகரித்தவனை விட உபாயமுண்டோ? என்கிறார்.

[என்விளக்கை யென்று தொடங்கி] - ஸ்வவிஷயாஜ்ஞாநாந்தகாரமெல்லாம் நீங்கும்படி தன்னுடைய கல்யாண குணங்களை ப்ரகாசிப்பித்து நான் மிகவும் அந்யபரனா யிருக்கச்செய்தே நிர்ஹேதுகமாய் வந்து ஸ்வவிஷயஜ்ஞாந விஸ்ரம்ப பக்திகளைப் பிறப்பித்து உஜ்ஜீவிப்பியாநின்றுகொண்டு என்னை அடிமைகொண்டவனை. [தொடுவே செய்து என்று மேலுக்கு] - நவநீதாதிகளைக் களவுகண்டு 'இவன் களவுகண்டான்' என்று முறையிட வந்த இளவாய்ச்சியர்க்கு மறுநாக்குக்கொடுக்கவொண்ணாதபடி வேறொருவர்க்குந் தெரியாதே அவர்கள் கண்ணுள்ளே படும்படியாக விடவேபண்ணி நோக்கி அடிமை கொண்டவனை. [கண்ணினுள் விடவேசெய்து விழிக்கும்] - கண்ணினுள்ளே தூதராகவிழிக்கு மென்றுமாம். விடவு-விடருடைய செயல். விடவேசெய்து விழிக்கை. ஸவிலாஸமாக நோக்குகை யென்றுமாம்.

இ.—அஞ்சாம்பாட்டில், தன்னை யறியாதே மிகவும் அந்யபரனாயிருக்கிற என்னை, தன் திருக்கண்களினழகாலே இடைப்பெண்களை அகப்படுத்தினாப்போலே நிர்ஹேதுகமாக என்னை வசீகரித்தவனை விடுவேனோ? என்கிறார்.

[விடுவேனோ என்விளக்கை] - ஸ்வவிஷயமான அஜ்ஞாநாந்தகாரம் நீங்கும்படி பண்ணித் தன்னுடைய கல்யாண குணங்களை ப்ரகாசிப்பித்தவனை விடுவேனோ? [என் ஆவியை] - "அஸந்நேவ ஸ பவதி" என்கிறபடியே உருமாய்ந்துபோன என் ஆத்மாவை. [நடுவேவந்து] - விஷயப்ரவணனாய்ப் போகாநிற்க நடுவேவந்து; நிர்ஹேதுகமாக என்னவுமாம். [வந்து] - நான் இருந்தவிடத்தே தானேவந்து. [உய்யக்கொள்கின்ற] - அஸத்கல்பனான என்னை "ஸந்தமேநம் ததோ விது:" என்னப்பண்ணினபடி. [கொள்கின்ற] - கொண்டு விட்டிலன், மேன்மேலெனக் கொள்ளாநிற்கிற அத்தனை. [நாதனை] - உய்யக்கொள்கைக்கு நிபந்தநஞ் சொல்லுகிறது. இழவுபேறு தன்னதான குடல்துடக்கைச் சொல்லுகிறது. இப்படி தன்பேறாக க்ருஷிபண்ணின விடமுண்டோ? என்னில், - [தொடுவேசெய்து] வெண்ணெய் அவர்கள் கொடுக்கிலும் 'வேண்டா' என்று களவிலே யிழிந்து. பிடிபட்டது கேட்டுத் திரண்டு சிலுகிடுமதுக்காக வந்த இளவாய்ச்சியர்புருஷர்களுக்கும், வ்ருத்தைகளுக்கும் ஒருபயமுமில்லை. இவனாலே நெஞ்சாறல் பட்டவர்கள் 'இவன் பிடிபட்டுக் கட்டுண்டான்' என்றவாறே, ப்ரீதைகளாய்க் காண வருவர்கள். [கண்ணினுள்] - மற்றை எவர்களுக்குந் தெரியாதபடி. விடவேசெய்து விழிக்கும் - தூதாக விழிக்கும். தூதுசெய்கண்களிறே. விஷமமான சேஷ்டிதங்க ளென்னவுமாம். விடர் உண்டு தூர்த்தர். அவர்களுடைய செயலைச் செய்து என்றுமாம். [பிரானையே] - அந்நோக்காலே அவர்களை அநந்யார்ஹைகளாக்கினாப்போல என்னையும் அநந்யார்ஹனாக்கின உபகாரகனை.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. திருவாய்ப்பாடியில் இடைப்பெண்கள் க்ருஷ்ணனைவிட்டுப் பரமபதத்தை விரும்புமன்றன்றோ நான் இவனை விட்டுப் புறம்பே போவது என்கிறார்.

[விடுவேனோ என்விளக்கை] ஸ்வவிஷயமான அஜ்ஞாநாந்தகாரம் போம்படி நிர்ஹேதுகமாகத் தன்னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளை எனக்கு ப்ரகாசிப்பித்தவனை. "என் விளக்கை" என்பானென்? அல்லாதார்க்கும் ஒவ்வாதோ? என்னில், இவரைப்போலே அல்லாதார்க்கு ஸ்நேஹமில்லையே; ஸ்நேஹமுண்டாகிலிறே இவ்விளக்கும் ப்ரகாசிப்பது. விளக்காவது தன்னையுங்காட்டிப் பதார்த்தங்களையுங் காட்டுவதொன்றிறே. இவர்க்குத் தன்னையுங்

காட்டி ஸ்வஸ்வரூபத்தையும் விரோதிஸ்வரூபத்தையுமிறே காட்டிக்கொடுத்தது. [என் ஆவியை இத்யாதி] 'தானொருவனுளன்' என்னும் அறிவாதல் தன்பக்கல் அபேக்ஷையாதல் இன்றிக்கே ப்ரக்ருதிவச்யனாய் உருமாய்ந்து போந்த என் ஆத்மாவை. [நடுவேவந்து] நிர்ஹேதுகமாக வந்து. விஷயப்ரவணனாய்ப் போகாநிற்க நடுவே வந்து மீட்ட இத்தனை. [உய்யக் கொள்கின்ற] கொண்டுவிட்டிலன்; மேன்மேலெனக் கொள்ளாநிற்கிற இத்தனை. *அஸந்நேவ ஸ பவதி* என்கிறபடியே அஸத்கல்பனான என்னை *ஸந்தமேநம் ததோ விது:* என்னப் பண்ணினான். "என்னாவி" என்று உம்மதாகச் சொன்னீர்; உம்முடைய ஆத்மாவை அவன் வந்து உய்யக் கொள்ள நிபந்தநமென்? என்ன, [நாதனை] ஆருடைய வஸ்து அழியப்புக்கது? 'நான்' என்று ஒருவனுண்டோ? உடையவனாகையாலே செய்தான். ஆரேனும்பேற்றுக்கு ஆரேனும் யத்நம் பண்ணுவார்களோ என்ன, திருவாய்ப்பாடியில் பெண்கள்பேற்றுக்கு யத்நம்பண்ணினார் ஆர்? [தொடுவேசெய்து] ஆராய்ச்சிப்படுஞ் செயல்களைச் செய்து. ஓரிடத்திலே போய்க் களவுகண்டு அங்கே அகப்படுமே; 'கள்ளனைக் காணவேணும்' என்று இருப்பாரு முண்டே. இவனாலே புண்பட்டவர்க ளெல்லாரும் காண வருவர்களே; புருஷர்களுக்கும் வ்ருத்தைகளுக்கும் ஒருபயமில்லை, அருகே நின்றார்க்குத் தெரியாமே பருவம்நிரம்பின இடைப்பெண்கள் கண்ணுக்குள்ளே விடும்படியைச் செய்துவிழிக்கும்—தூதுவிடும்படியைச் செய்து விழிக்கும். தூது விடுகையாகிற செயலைச்செய்தென்னுதல், விடருடைய செயலைச் செய் தென்னுதல். *"தூதுசெய் கண்கள்"* என்னக்கடவதிறே, அதுவாதல்; தூர்த்தருடைய வ்யாபாரங்களைப் பண்ணுதல். ('தவாஸ்மி, தாஸோZஸ்மி' என்றாப்போலே சொல்லுகை.) [பிரானையே] அந் நோக்காலே இடைப்பெண்களை அநந்யார்ஹைகளாக்கினாப்போலே என்னையும் அநந்யார்ஹமாக்கிவிட்டவனை விடுவேனோ?

பிரான் பெருநிலங்கீண்டவன்* பின்னும்
விராய்மலர்த்துழாய் வேய்ந்தமுடியன்*
மராமரமெய்தமாயவன் *என்னுள்
இரானெனில் பின்னையானொட்டுவேனோ? (6)

ஒ.—ஆறும்பாட்டில், அவனேதான் விடில் செய்வதென் என்னில், தன்னுடைய திவ்ய சேஷ்டிதங்களாலே என்னைத் தோற்பித்து என்னோடே கலந்தவனை நான் விட ஸம்வதிப்பேனோ? என்கிறார்.

[பிரானென்று தொடங்கி] - தொடுக்கப்பட்டுப் பரிமளத்தையும் செவ்வியையுமுடைய திருத்துழாயாலே அலங்க்ருதமான திருமுடியையுடையனாய், ப்ரளயார்ணவமக்நையான பூமியை எடுப்பதுஞ்செய்து ஆச்ரிதர்ஏவிற்றுச் செய்து அவர்கள்பக்கலிலே வ்யாமுக்தனாய், இச்செயல்களாலே என்னை அடிமை கொண்டவன். விராய்மலர்த்துழாய் - பூக்கள் விரவின துழா யென்றுமாம்.

இ.—ஆறும்பாட்டில், அவன்தான் விடில் செய்வதென்? என்னில்; தன் நீர்மையாலே என்னைத் தோற்பித்தவனை நான் விட இசைவேனோ? என்கிறார்.

[பிரான்] - நிலா தென்றல் போலே தன்படிகளைப் பரார்த்தமாக்கி வைக்குமவன். இதினுடைய உபபாதநம் மேல்: [பெருநிலங்கீண்டவன்] - ரக்ஷ்யவர்க்கம் பரப்புண்டென்னாக் கைவிடானே. ப்ரளயார்ணவத்திலே புக்கு, பூமியைத் தன்பேறாகத் தன்னை அழியமாறி யெடுத்தாப்போலே, ஸம்ஸாரார்ணவத்திலே அகப்பட்ட என்னை எடுத்தவன். [பின்னும் விராய் மலர்த்துழாய் வேய்ந்த முடியன்] - ஒப்பனை யோடேயாயிற்று ப்ரளயத்திலே முழுகிற்று; நெருங்கத் தொடையுண்டு, பரிமளத்தை யுடைத்தாய், செவ்விபெற்றுள்ள திருத்துழாய். விரையை, 'விராய்' என்று நீட்டிக்கிடக்கிறது. அன்றிக்கே, மலர் விரவின துழா யென்னவுமாம். வேய்ந்த முடியன் - சூழப்பட்ட திருமுடியையுடையவன்; ஏய்ந்த' என்று

பாடமானபோது - சேர்ந்தமுடி. [மராமரமெய்த மாயவன்] - ரக்ஷணத்திலே அதிசங்கை பண்ணின வனுக்கு மழுவேந்திக்கொடுத்தும் அவன்காரியத்தை முடியச்செய்யும் வ்யாமோஹாதிசயத்தை யுடையவன். [என்னுளிரானெனில்] - இப்படி ஆச்ரிதர் தன்பக்கலிலே சேருகைக்கு க்ருஷி பண்ணுமவன் என்பக்க லிரானென்னில். 'எனில்' என்கையாலே - விட ஸம்பாவனை யில்லை யென்கை. [பின்னை யானெட்டுவேனோ] - பின்னை நான் இசைவனோ? பின்னை நான் தொங்குவனோ' என்னும் ஆச்சான்.

௬.—ஆறும்பாட்டு. இப்போது 'விடோம்' என்கிறீர்த்தனைபோக்கிப் பின்னையும் நீரல் லீரோ; உம்முடைய வார்த்தையை விச்வஸிக்கப்போமோ? என்ன, அவனாலே அங்கீக்ருதனான நான் அவனை விடுவேனோ? என்றார் கீழ்ப்பாட்டில்; உம்மை அவன்தான் விடில்செய்வதென்? என்ன, தன்குணசேஷ்டிதங்களாலே என்னைத்தோற்பித்து என்னோடே கலந்தவனை நான் விட ஸம்வதிப்பேனோ? என்கிறார் இதில்.

[பிரான்] நிலா தென்றல் சந்தநம் பிறர்க்கேயாயிருக்குமாபோலே, தன்படிகளை யடையப் பிறர்க்காக்கி வைக்குமவன். ஸர்வவிஷயமாகவும் ஆச்ரிதவிஷயமாகவும் பண்ணும் உபகாரத்தை நினைத்து "பிரான்" என்கிறது. அத்தை உபபாதிக்கிறது மேல்; [பெருநிலம் கீண்டவன்] ஸர்வவிஷயமாகப் பண்ணும் உபகாரம். ப்ரளயங்கொண்ட பூமியை நீருக்கும் சேற்றுக்கும் இளையாத வடிவைக் கொண்டு எடுத்தாப்போலே, ஸம்ஸாரப்ரளயங்கொண்ட என்னை யெடுத்தவன். [பின்னும் விராய்மலர்த்துழாய் வேய்ந்தமுடியன்] ஒப்பனையோடேயா யிற்று ப்ரளயத்திலே முழுகிற்று. நெருங்கத்தொடையுண்டு பரிமளப்ரசுரமாய், செவ்வி பெற்றிருந்துள்ள திருத்துழாய்மாலையாலே சூழப்பட்ட திருவபிஷேகத்தை யுடையவன். விரையை 'விராய்' என்று நீட்டிக்கிடக்கிறது. அன்றியே, மலர்விரவின திருத்துழா யென்று மாம். [மராமரமெய்த மாயவன்] ஆச்ரிதவிஷயமாக உபகரிக்கும்படி. மஹாராஜர், வாலி மிடுக்கையும் பெருமாள்ஸௌகுமார்யத்தையும் அநுஸந்தித்து, 'நீர், வாலியைக் கொல்ல மாட்டீர்' என்ன, 'நான் வல்லேன்' என்று மழுவேந்திக்கொடுத்துக் காரியஞ்செய்யும் வ்யாமோஹத்தையுடையவன். [என்னுளிரானெனில்] இப்படி ஆச்ரிதரை விஷயீகரித்து அவர்கள்பேற்றுக்குத் தான் க்ருஷிபண்ணுமவன், என்னுள் இரானெனில். 'எனில்' என் கையாலே விட ஸம்பாவனையில்லை யென்கை. *பின்னையானெட்டுவேனோ* 'எப்ரகாரத் தாலும் இரேன்' என்னுமாகில், பின்னை, நான் அவன்போக்கை இசைவேனோ? என்னுடைய கர்மபாரதந்த்ர்யம்போலே அவனுடைய ஆச்ரிதபாரதந்த்ர்யத்துக்கும் ஏதேனும் கண்ணழி வுண்டோ? என் இசைவின்றிக்கே யிருக்க, அவனாலே போகப்போமோ? அன்றியே, 'நான் தொங்குவேனோ?' என்று, பிள்ளான் பணிக்கும்படி.

யானொட்டியென்னுள் இருத்துவமென்றிலன்*
தானொட்டிவந்து என்தனிநெஞ்சைவஞ்சித்து*
ஊனொட்டிநின்று என்னுயிரில்கலந்து*இயல்
வானொட்டுமோ? இனியென்னைநெகிழ்க்கவே. (7)

௭.—ஏழாம்பாட்டில், எனக்கு இசைவின்றிக்கேயிருக்கத் தானே வருந்தித் தன் திருவடி களிலே சேர்த்துக்கொண்டவன், 'நான் போவேன்' என்னிலும் என்னைப் போகவிடா னென்கிறார்.

[யானொட்டி யென்று தொடங்கி] - நான் இசைந்து ஹ்ருதயத்திலே இருத்துவே னென்றிலேன்; தானே இருப்பதாக ப்ரதிஜ்ஞை பண்ணிக்கொடுவந்து அவிதேயமான என்னுடைய நெஞ்சைத் தன்னு டைய கல்யாண குணங்களைக் காட்டி என்னை அறியாமே அகப்படுத்தி. [ஊனொட்டியென்று தொடங்கி] - என்னுடைய தேஹத்தையே நிரதிசயபோக்யமாகப்பற்றி விடாதே நின்று என் ஆத்மாவோடே கலந்து அக்கலவியாலல்லதுசெல்லாத தன்மையை யுடையவன்,

இ.—ஏழாம்பாட்டில், எனக்கு இசைவின்றிக்கேயிருக்க, வருந்திச் சேர்த்துக்கொண்டவன், 'நான் போவேன்' என்னிலும் போகவொட்டான் என்கிறார்.

[யானொட்டியென்னுளிருத்துவமென்றிலன்] - நான் இசைந்து என் ஹ்ருதயத்திலே யிருத்துவே னென்றிலன். இசைவு என்னாலே வந்ததாகிலன்றோ விடுகை என்னாலே வந்ததாவது. இசைவின்றிக்கே யிருக்கக் கிட்டினபடி யென்? என்னில்,—[தானொட்டிவந்து] நிரபேக்ஷனான தான் 'உம்முடையபக்கலிலே யிருக்கை தவிரேன்' என்று ப்ரதிஜ்ஞைபண்ணிவந்து. "அத்ய மே மரணம்வாZபி தரணம் ஸாகரஸ்யவா". [என் தனி நெஞ்சை] - எனக்குபவ்யமாய், தன்னாலுந் திருத்தவொண்ணாதபடி ஸ்வதந்த்ரமான நெஞ்சை. [வஞ்சித்து] - தன்னுடைய சீலாதி குணங்களாலும் வடிவழகாலும் என்னை அறியாமே அகப்படுத்தி. மநஸ்ஸு பிடிபட்டபின்பு செய்ததென்? என்னில்,—[ஊனொட்டிநின்றுஎன்னுயிரிற்கலந்து] - அபிமத விஷயத்தில் அழுக்கு உகப்பாரைப் போலே, எனக்கு த்யாஜ்யமான சரீரத்தைத் தனக்கு போக்யமாகப் பற்றிநின்று; விலக்காததொரு ஸமயம் பெற்றவாறே என் ஆத்மாவோடே வந்து ஸம்ச்லேஷித்தான். இயல்வான்] - வ்யாமோஹத்தை ஸ்வபாவமாகவுடையவ னென்னுதல், இப்படி உத்ஸஹிக்குமவ னென்னுதல். [ஒட்டுமோ இனி யென்னை நெகிழ்க்கவே] - முன்பு த்வேஷம்பண்ணித் திரிந்த நாள் என்னை என் கைவசத்தே விட்டுத் திரிந்தான்; இப்போது இப்படி நிர்ஹேதுகமாக விஷயீகரித்தவன் ப்பல தசையிலே 'நான் நெகிழ்ந்துபோவேன்' என்றால், அவன் ஸம்வதிக்குமோ?

ஈடு.—ஏழாம்பாட்டு. குணத்ரயவச்யராய்ப்போந்நீர், காதாசித்கமாக 'அவனைவிடேன்' என்கிறீர், உம்முடைய வார்த்தையை விச்வஸிக்கப் போமோ? என்ன, நான் 'அவனை விட்டா லும், அவன்தான் என்னை விடான்' என்கிறார்.

[யான் இத்யாதி] இசைவு என்னாலே வந்ததாகிலன்றோ விடுகையும் என்னாலே வந்ததாவது. 'ஆழ்வீர்! நாம் உம்முடையபாடே யிருப்போம்' என்றால், 'ஒட்டேன்' என்பரே; 'ஆகில் இங்கே யிருக்கக்கடவோம்' என்று ப்ரதிஜ்ஞை பண்ணியாயிற்று வந்திருப்பது. நான் இசைந்து 'என்னுடைய ஹ்ருதயத்திலே யிருக்கவேணும்' என்றிலேன். [தானொட்டி வந்து] *அத்ய மே மரணம் வாZபி தரணம் ஸாகரஸ்ய வா* என்று இத்தை முடித்தல் (இறை முடிதல்) கடத்தல் செய்யுமதுக்கு மேற்படவில்லை யென்றாப்போலே, ப்ரதிஜ்ஞை பண்ணியா யிற்று புகுந்தது. [என் தனி நெஞ்சை] தன்னாலும் திருத்தவொண்ணாதபடி ஸ்வதந்த்ரமாய், அவிதேயமான நெஞ்சை. [வஞ்சித்து] தன்னுடைய சீலாதி குணங்களாலும் வடிவழகாலும் தனக்கு விதேயமாம்படி பண்ணி. பின்னைச் செய்ததென்? என்னில்,—[ஊனொட்டி நின்று என்னுயிரிற் கலந்து] 'சரீரத்தைப் பற்றி நிற்கிற என்னுயிரிலே கலந்து என்கிறார்' என்பாரு முண்டு; அன்றிக்கே, 'அபிமத விஷயத்தில் அழுக்கு உகப்பாரைப் போலே என்னுடைய சரீரத்தைப் பற்றி நின்று பின்னை என்பக்கலிலே விலக்காமை பெற்றவாறே என் ஆத்மா வோடே வந்து கலந்தான்' என்று சீயர் அருளிச்செய்யும்படி. [இயல்வான்] இப்படியை ஸ்வபாவமாக வுடையவனென்னுதல்; இப்படி எதிர்சூழல்புக்கு உத்ஸஹித்தவ னென்னுதல். [ஒட்டுமோ இனி என்னை நெகிழ்க்கவே] இப்படி நிர்ஹேதுகமாக என்னை விஷயீகரித்தவன், 'நான் தன்பக்கலினின்றும் நெகிழ்ந்துபோவேன்' என்றால் அவன் இசையுமோ? எனக்கு ஜ்ஞானம் பிறக்கைக்கு க்ருஷிபண்ணி, பிறந்த ஜ்ஞானம் ப்பலிக்குமளவாகக்கொண்டு நான் 'அகன்று போவேன்' என்றால் அவன் ஸம்வதிக்குமோ?

என்னை நெகிழ்க்கிலும் என்னுடை நன்னெஞ்சந்தன்னை*
அகல்விக்கத் தானுங்கில்லானினி*
பின்னை நெடும்பணைத்தோள் மகிழ்பீடுடை*
முன்னையமரர் முழுமுதலானே. (8)

ஒ.—எட்டாம்பாட்டில், என்னை ஒருபடி விடுவித்தானாகிலும் அயர்வறுமமரர்கள் ஸேவிக்க நப்பின்னைப்பிராட்டியோடு கூட இருந்தருளின அழகைக் கண்டு அடிமைபுக்க என்னெஞ்சை ஸர்வசக்தி யான தானும் தன்பக்கல்நின்றும் இனி விடுவிக்கமாட்டா னென்கிறார்.

[பின்னை யென்று மேலுக்கு] - நப்பின்னைப் பிராட்டியுடைய நெடியதாய்ப் பணைத்திருந்துள்ள தோளை அநுபவிக்கைக்கு ஈடான முதன்மையுடையனுகை. பணைத்தோள் - வேய்போலே யிருந்த தோளென்றுமாம்.

இ.—எட்டாம்பாட்டில், என்னை விடுவித்தானுகிலும், தன் கல்யாணகுணங்களிலே அகப்பட்ட என் நெஞ்சை இனி விடுவிக்க சக்தனல்ல னென்கிருர்.

[என்னை நெகிழ்க்கிலும்] - என்னுலன்றிக்கே "ஊனெட்டிநின்று" என்கிறபடியே அத்தலையாலே கிட்டின என்னை நெகிழ்க்கவொண்ணுது; அவ்வரியசெயலைச் செய்யிலும், மயர்வற்ற என்னைப் பிரிக்கை அரிது, அச்செயலைச் செய்யிலும் என்னவுமாம். [என்னுடை நல்நெஞ்சந்தன்னை யகல்விக்க] - "நெஞ்சேயியற்றுவா யெம்மொடு நீ கூடி" என்றும், "தொழுதெழென்மனனே" என்றுஞ் சொல்லலாம்படி தன்பக்கலிலே அவகாஹித்த விலக்ஷணமான என்னுடைய மநஸ்ஸை விடுவிக்க [தானும் கில்லான்] - ஸர்வசக்தியான தானும் சக்தனல்லன். ஸர்வசக்தியான தான் பண்ணிவைத்த வ்யவஸ்த்தை தன்னுல்தான் அழிக்கப்போமோ? ஸர்வசக்தித்வத்தோபாதி ஸத்யஸங்கல்பத்வமும் வ்யவஸ்த்தித மென்கை. [இனி] - முன்பு செய்யலாம், இனிச் செய்யப்போகாது. எத்தாலேயென்னில், — [பின்னை இத்யாதி] - நப்பின்னைப்பிராட்டி புருஷகாரமாக, நித்யஸூரிகள் ஓலக்கமிருக்க, அச்சேர்த்தியழகிலே தோற்று அடிமை புக்க என்நெஞ்சை மீட்கப்போகா தென்கை. அந்த:புர பரிகரத்தை ராஜாவாலும் அநாதரிக்க வொண்ணுது. "ஹர்யக்ஷகணஸந்நிதௌ" என்கிறபடியே, நித்யஸூரிகள் முன்பு பண்ணின ப்ரதிஜ்ஞை முடிய நடத்தவேணு மென்கை. நப்பின்னைப்பிராட்டியுடைய நெடிதாய்ப்பணைத்திருந்துள்ள தோளோடேயணைகையாலே ஆநந்திக்கிற முதன்மையை யுடையவன். பணையென்று - வேயாய், பசுமைக்கும், சுற்றுடைமைக்கும், செவ்வைக்கும் மூங்கில்போலேயிருக்கை யென்னவுமாம். "யஸ்ய ஸா ஜநகாத்மஜா அப்ரமேயம்ஹி தத்தேஜ:". [முன்னையமரர்] - பழைய அமரர், "யத்ரர்ஷய: ப்ரதமஜா யேபுராணு:" என்கிற பழமையை யுடையராகை, [முழுமுதல்] - அவர்களுடைய ஸ்வரூபாதிகளெல்லாம் ஸ்வாதீநமாயிருக்கை.

ஈடு.—எட்டாம்பாட்டு. 'நான் விடேன், அவன் விடான்' என்றுற்போலே சொல்லுகிற தென்? இனி அவன்தான் 'பிரிப்பேன்' என்னிலும் தன்னுடைய கல்யாண குணங்களிலே அகப்பட்ட என் நெஞ்சை அவனுலும் பிரிக்கப்போகாது என்கிருர்.

[என்னை நெகிழ்க்கிலும்] மயர்வறமதிநலமருளப்பெற்ற என்னைத்தானே அகற்ற அரிது; இவ்வரிய செயலைச் செய்யிலும், [என்னுடை நன்நெஞ்சந்தன்னை யகல்விக்க] "நெஞ்சேயியற்றுவா யெம்மொடு நீ கூடி" என்றும், "தொழுதெழென் மனனே" என்றுஞ் சொல்லலாம்படி தன்பக்கலிலே அவகாஹித்த நெஞ்சந்தன்னை அகல்விக்க. [தானும்கில்லான்] ஸர்வசக்தி யென்னு, எல்லாஞ் செய்யப்போமோ? என், செய்துபோந்திலனே? இது நெடுங்காலம் என்ன,—[இனி] அவனும் இனிமேலுள்ள காலம் மாட்டான்; 'இனி' என்கிற உரப்பு எத்தைப் பற்ற? என்னில்,—அத்தைச் சொல்லுகிறது, மேல். [பின்னை இத்யாதி] நப்பின்னைப் பிராட்டி புருஷகாரமாக நித்யஸூரிகள் ஓலக்கமிருக்க அடிமைபுக்கு அந்த:புரபரிகரமான வஸ்துவை அகற்றப் போமோ? நப்பின்னைப் பிராட்டியுடைய நெடிதாய்ச் சுற்றுடைத்தாய்ப் பசுமையை யுடைத்தான மூங்கில்போலே யிருக்கிற தோளோடே அணைகையால் வந்த பெருமையை யுடையனுய், *யத்ரர்ஷய: ப்ரதமஜா யே புராணு:* என்கிறபடியே பழையரா யிருந்துள்ள நித்ய ஸூரிகளுடைய ஸ்வரூபஸ்த்தித்யாதிகள் தன் அதீநமாம்படி யிருக்கிறவன் தானும் கில்லான். *ஹர்யக்ஷகணஸந்நிதௌ* என்கிறபடியே அவர்கள்ஸந்நிதியிலே ப்ரதிஜ்ஞைபண்ணிற்று; நப்பின்னைப்பிராட்டி புருஷகாரம் எங்ஙனே அகற்றும்படி?

அமரர்முழுமுதல் ஆகியவாதியை*
அமரர்க்கமுதீந்த ஆயர்கொழுந்தை*
அமரவழும்பத் துழாவியென்னுவி*
அமரத்தழுவிற்று இனியகலுமோ ? (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், தாம் அவனேடு கலந்த கலவியின் மிகுதியால் விச்லேஷ ஸம்பாவனை யில்லை யென்கிருர்.

[அமரரென்று தொடங்கி] - அயர்வறுமமரர்களுக்கு எல்லாம் தானே காரணமாய் இருப்பானும் இஜ்ஜகத்துக்கும் காரணமாய் க்ஷுத்ரமான ப்ரயோஜநங்களை வேண்டின ப்ரஹ்மாதிகளுக்கும் அவர்கள பேக்ஷிதங்களைக் கொடுப்பதுசெய்து இடைச்சாதியிலே வந்து அவர்கள் உளராகத் தானும் உளனானவனை. [அமரவென்று தொடங்கி] - மிகவும் நெருங்கக் கலசி என் ஆத்மா ஒருவராலும் பிரிக்கவொண்ணாத படி ஸம்ச்லேஷித்தது.

இ.—ஒன்பதாம்பாட்டில், தாம் அவனோடு ஸம்ச்லேஷித்தபடி, பிரிக்கயோக்யமன்று என்கிறார்.

[அமரர் முழுமுதலாகிய] - நித்யஸூரிகளுக்கு ஸ்வரூபாதிகளெல்லாவற்றுக்குந் தானே காரண மாகை. [ஆதியை] - லீலாவிபூதியிலுள்ளார்க்குப் புருஷார்த்தோபயோகியான கரணகளேபரங்களைக் கொடுக்குமவனை. இவ்வருகுள்ளார்க்கும் ஸூரிகளோபாதி ப்ராப்தியுண்டாயிருக்க இச்சையில்லாமை யாலே, யோக்யதையைப் பண்ணிக்கொடுக்கு மளவிறே செய்யலாவது. [அமரர்க்கமுதீந்த] - அந்தக் கரணங்களைக்கொண்டு க்ஷுத்ரப்ரயோஜநங்களை அபேக்ஷிப்பார்க்கு அவற்றையும் செய்யுமவனை. [ஆயர் கொழுந்தை] - அநந்யப்ரயோஜநர்க்கு வந்து அவதரித்து ஸுலபனாய்த் தன்னைக்கொடுக்குமவனை. "பரித் ராணாய ஸாதூநாம்". [அமர இத்யாதி] - இப்படி உபயவிபூதியுக்தனைக் கிட்டிச்செறிந்து எங்கும் புக்கு அநுபவித்து என் ஆத்மா ஏகத்ரவ்ய மென்னலாம்படி கலந்தது. [இனியகலுமோ] - ப்ருதக்ஸ்த்தித்யுபலம்ப மில்லாதபடி ஸ்வரூபம் ஸ்வரூபாநுரூபமாக ஸம்ச்லேஷித்தும் அகல ப்ரஸங்கமுண்டோ? ப்ரகாரப்ரகாரி களுக்கு ஏகத்வபுத்தி பிறந்தால் பிரிக்கப்போமோ? ஜாதிகுணங்களைப் பிரிக்க வொண்ணாதாபோலே த்ரவ்யத்துக்கும் நித்ய ததாச்ரயத்வமுண்டாகையாலே பிரிக்கவொண்ணாதாயிறே யிருப்பது.

ஈடு.—*ஒன்பதாம்பாட்டு. 'தானுங்கில்லான்' என்கிற ப்ரஸங்கந்தானென்? ஏகத்ரவ்ய மென்னலாம்படியான இத்தை எங்ஙனே பிரிக்கும்படி? என்கிறார்.*

[அமரர்முழுமுதலாகிய] நித்யஸூரிகளுடைய ஸ்வரூபஸ்த்தித்யாதிகள் தன் அதீநமாம் படி யிருக்கிறவனை. [ஆதியை] இதுதொடங்கி லீலாவிபூதி விஷயமாயிருக்கிறது. தன்பக்கல் பாவபந்தம் ஸத்தாப்ரயுக்தமன்றிக்கே யிருக்கிறவர்களுக்கும் தன்னைவழிபடுகைக்கு உறுப் பாகக் கரணகளேபரங்களைக் கொடுக்குமவனை. [அமரர்க்கு அமுதுஈந்த] அவன்கொடுத்த கரணங்களைக்கொண்டு, 'எங்களுக்குநீவேண்டா, உப்புச்சாறு அமையும்' என்பார்க்குக் கடலைக்கடைந்து அம்ருதத்தைக்கொடுக்குமவனை. [ஆயர்கொழுந்தை] 'அவ்வம்ருதம் வேண்டா, நீ அமையும்' என்பார்க்காக வந்து அவதரித்துத் தன்னைக்கொடுக்குமவனை; [அமர இத்யாதி] இப்படி உபயவிபூதியுக்தனாயிருக்கிறவனைக் கிட்டிச்செறிந்து எங்கும் புக்கு அநுபவித்து, என்னுடைய ஆத்மாவானது ஏகத்ரவ்யமென்னலாம்படி கலந்தது. [இனி அகலுமோ] இரண்டுவஸ்துவாகிலன்றே பிரிக்கலாவது. ப்ரகாரப்ரகாரிகளுக்கு ஏகத்வபுத்தி பிறந்தால் பிரிக்கப்போமோ? ஜாதிகுணங்களோபாதி த்ரவ்யமானதுக்கும் நித்ய ததாச்ரயத்வ முண்டாகில் பிரிக்கப்போமோ?

அகலிலகலும் அணுகிலணுகும்*
புகலுமரியன் பொருவல்லனெம்மான்*
நிகரில்லவன்புகழ் பாடியிளைப்பிலம்*
பகலுமிரவும் படிந்துகுடைந்தே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், என்னோடுகலந்த எம்பெருமானுடைய குணங்களைக் கால தத்த்வமுள்ள தனையும் அநுபவித்தாலும் த்ருப்தனாகிறிலே னென்கிறார்.

[அகலிலென்று தொடங்கி] - தன்னை யாச்ரயித்து ப்ரயோஜநாந்தரங்களைக் கொண்டு போகில் தான் இழவாளனாய்க்கொண்டு அகலும் ஸ்வபாவனாய், அவர்களே அநந்யப்ரயோஜநராகில் நிரதிசயாபி நிவேசத்தோடேகூட ஸம்ச்லேஷிக்கும் ஸ்வபாவனாய், ப்ரதிகூலர்க்கு அணுகவொண்ணாதானாய்,

ஸமாச்ரயணேந்முகராயிருப்பார்க்கு ஒரு தடையின்றியே எளியனுமாய், இந்நீர்மைகளிலுலே என்னை அடிமைகொண்டவன். [நிகரி லென்று தொடங்கி] - ஒப்பில்லாத அவன் குணங்களிலே மிகவும் அவகாஹித்து நிரந்தரமாகப் பாடி இனிமையின் மிகுதியாலே விடவும் மாட்டுகிறிலேன்.

இ.—பத்தாம்பாட்டில், இப்படிப்பட்ட இவ்வநுபவத்தைக் காலதத்த்வமுள்ளதனையும் அநுபவித்தாலும் த்ருப்தனுகிறிலே னென்கிருர்.

[அகலில் அகலும்] - தன்னையாச்ரயித்து ப்ரயோஜநாந்தரங்களைக் கொண்டுபோகில் தானும் இழவாளனுய்க் கொண்டு அகலும். "நநமேயம்" என்கிறபடியே அகலில் "யதிவாராவண:ஸ்வயம்" என்கிற சாபலம் உள்ளேகிடக்கக் கண்ணநீரோடே கொல்லு மென்னவுமாம். [அணுகில் அணுகும்] - நாலடி வரநின்றுரை. "ஆக்யாஹி மம தத்த்வேந ராக்ஷஸாநாம் பலாபலம்" என்கிறபடியே அவர்கள்படியைப் பாராதே, இளையபெருமாளோபாதி தம்கார்யத்துக்குக்கடவராம்படி கூட்டிக்கொள்வன். முதற்பாட்டில் - 'அகலிலகலும்' என்கிற இடஞ் சொல்லிற்று; இரண்டாம்பாட்டில் - 'அணுகிலணுகும்' என்கிற இடஞ் சொல்லிற்று. [புகலுமரியன்] - ப்ரதிகூலர்க்குக் கிட்டச்செய்தே அணுக அரியன். துர்யோதநன், அர்ஜுநனேபாதி கூட வரச்செய்தே இஞ்சிப்பயிரில் தழைகூறுகொள்வாரைப்போலே தன்னை யொழிந்த வற்றைக் கொண்டுபோம்படி பண்ணும். [பொருவல்லன்] - ஆச்ரிதர் தன்னைக் கிட்டுமிடத்தில் தடையுடையனல்லன். 'பொரு' என்று-ஒப்பு ஒப்பு - எதிராய் நேர்நிற்குமதுவாய்; அத்தாலே-தடையைச் சொல்லிற்றாய்த் தலைக்கட்டுகிறது. "யத்ரக்ருஷ்ணௌச க்ருஷ்ணாச ஸத்யபாமாச பாமிநீ, நசாபிமந்யுர் நயமௌ தத்தேசமபிஜக்மது:". ப்ரஜைகளுக்கும் புகவொண்ணுத தசையிலே ஸஞ்ஜயனுக்குத் தடையின்றிக்கேயிருக்கை. [எம்மான்] - இஸ்ஸ்வபாவங்களைக் காட்டி என்னை எழுதிக்கொண்டவன். [நிகரிலவன்] - நீர்மைக்கு ஒப்பில்லாதவனுடைய. [புகழ்பாடியிளைப்பிலம்] - கல்யாணகுணங்களைப் பாடி விச்சேதிக்க க்ஷமனுகிறிலேன். இளைக்கையாகிறது - விடுகை. அதாகிறது - விச்சேதம். [பகலுமிரவும்] - அநுபவ காலம் ஸாவதியோ? என்னில், — திவாராத்ரவிபாகமறக் காலமெல்லாம் அநுபவித்தாலும் விட க்ஷமனுகிறிலேன். [படிந்துகுடைந்தே] - இவ்விஷயத்தில் அவகாஹநம் அளவுபட்டோ இருப்பது? என்னில், படிந்து - கிட்டி குடைந்து - எங்கும்புக்கு. அவகாஹித்து விடமாட்டுகிறிலேன்.

ஈடு.—பத்தாம்பாட்டு. என்னேடுகலந்த எம்பெருமானுடைய குணங்களைக் காலதத்த்வமுள்ளதனையும் அநுபவியாநின்ருலும் த்ருப்தனுகிறிலேன் என்கிருர்.

[அகலில் அகலும்] இவன் அகன்றபடியே நிற்கில், *யதிவா ராவணஸ் ஸ்வயம்* என்கிற சாபலமும் கிடக்கச்செய்தே கண்ணநீரோடே கைவாங்கும். *த்விதா பஜ்யேயமப்யேவம் ந நமேயம்* என்னும் நிர்ப்பந்தத்தோடே நிற்கில் முடித்தேவிடும். [அணுகில் அணுகும்] தன்பக்கலிலே ஆபிமுக்க்யம் பண்ணினுல், *ஆக்யாஹி மம தத்த்வேந* என்னும். இளைய பெருமாள் நிற்க, நாலடிவர நின்றவனையிறே 'ராஜகார்யஞ் செய்யும்படி சொல்லீரோ?' என்றது; *ராக்ஷஸாநாம் பலாபலம்* இவனை ராக்ஷஸஜாதியனுக நினைக்கை யின்றிக்கே, இக்ஷ்வாகு வம்ச்யனுகவே புத்தி பண்ணி, 'ராக்ஷஸருடைய பலாபலஞ்சொல்லீரோ' என்ருரிறே. இத்திருவாய்மொழியில் முதற்பாட்டு 'அகலிலகலும்' என்கிற இடம் சொல்லிற்று. இரண்டாம்பாட்டு 'அணுகிலணுகும்' என்கிற இடம் சொல்லிற்று, [புகலுமரியன்] அர்ஜுநனும் துர்யோதநனுங் கூட வரச் செய்தே, அர்ஜுநனுக்குத் தன்னைக் கொடுத்து, துர்யோதநனுக்குத் தன்னையொழிந்த பங்களத்தைக் கொடுத்துவிட்டானிறே. உகவாதார்க்குக் கிட்ட அரியனுயிருக்கும். [பொருவல்லன்] ஆச்ரிதர் தன்னைக் கிட்டுமிடத்தில் தடையுடையனல்லன். *யத்ர க்ருஷ்ணௌ ச க்ருஷ்ணா ச ஸத்யபாமா ச பாமிநீ* புத்ரர்களுக்கும் புகவொண்ணுத ஸமயத்திலேயிறே ஸஞ்ஜயனை அழைத்துக் காட்சிகொடுத்தது. பொரு என்று ஒப்பாய், ஒப்பாவது நேர்நிற்குமதாய், அத்தால் தடையைச் சொல்லிற்ருய், தடையையுடையனல்லனென்கை. [எம்மான்] இஸ்ஸ்வபாவங்களைக் காட்டி என்னை அநந்யார்ஹனுக்கினவன். [நிகரிலவன்புகழ் பாடியிளைப்பிலம்] அவனுடைய ஒப்பில்லாத கல்யாணகுணங்களைப்பாடி, ஒருகாலமும் விச்சேதிக்க க்ஷமனுகிறிலேன். இப்படி

விடுகைக்கு க்ஷமனன்றிக்கேயொழிகிறது காலம் ஸாவதியாயோ? என்னில்,—[பகலும்இரவும்] ஸர்வகாலமும். ஆனால், விஷயத்தைக் குறைய அநுபவித்தோ? என்னில், [படிந்து குடைந்தே] எங்குங்கிட்டி விஷயத்தை அநுபவியாநிற்கச்செய்தே விடமாட்டுகிறிலேன்.

குடைந்துவண்டுண்ணும் துழாய்முடியானை*
அடைந்த தென்குருகூர்ச்சடகோபன்*
மிடைந்தசொல்தொடை யாயிரத்திப்பத்து*
உடைந்துநோய்களை யோடுவிக்குமே. (11)

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி, பக்திக்கு ப்ரதிபந்தகமான ஸகல துரிதங்களையும் உந்மூலிதமாக்கு மென்கிறார்.

[குடைந்து என்று தொடங்கி] - வண்டுகள்முழுகி மதுபாநம்பண்ணின திருத்துழாயைத் திருமுடியிலே யுடையனாகையாலே நிரதிசயபோக்யனாயுள்ளவனை அவ்வண்டுகள் திருத்துழாயிலே மதுவுக்குப் படிந்தாற்போலே அநந்யார்ஹராம்படி ஆக்ருஷ்டரான ஆழ்வாருடைய சொல்செறிந்த தொடையை யுடைய ஆயிரத்து இப்பத்து.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி பகவதநுபவவிரோதியான ப்ரயோஜநாந்தர ருசிகளை உந்மூலிதமாக்கு மென்கிறார்.

[குடைந்து வண்டுண்ணும் துழாய்முடியானை] - வண்டுகள் உள்ளே அவகாஹித்து மதுபாநம் பண்ணும்படி மதுஸம்ருத்தியையுடைய திருத்துழாயாலே அலங்க்ருதமான திருவபிஷேகத்தையுடையவனை; இத்தால் - நிரதிசயபோக்யபூத னென்கிறது [அடைந்த இத்யாதி] - மதுவிலே அவ்வண்டுகள் படிந்தாற்போலேயாயிற்று இவர் பகவத்குணங்களிலே அவகாஹித்தபடி. [மிடைந்தசொல்தொடை] - செறிந்த சொல்தொடையையுடைய, தனித்தனியே 'என்னைக்கொள் என்னைக்கொள்' என்று மேல்விழுந்த சொல் என்னவுமாம். இப்பத்துத்தானே நோய்களை உடைந்தோடும்படி பண்ணும். நோயாகிறது - க்ஷுத்ர புருஷார்த்தருசி. உடைந்தோடுகை - ஆச்ரயாந்தரங்களுக்கும் ஆகாதபடி உருவழிகை.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழிதானே இதுகற்றவர்களுடைய ப்ராப்திப்ரதிபந்தகங்களை உந்மூலிதமாக்கு மென்கிறார்.

[குடைந்துஇத்யாதி] மதுபாநம்பண்ண இழிந்த வண்டுகளானவை பெருங்கடலிலே இழிந்தாரைப்போலே உள்ளேஉள்ளே இடங்கொண்டு புஜியாநிற்குமத்தனைபோக்கி, மதுவற்றிக் கைவாங்க வொண்ணாதபடியிருக்கிற திருத்துழாய்மாலையாலே அலங்க்ருதமாயிருக்கிற திருவபிஷேகத்தையுடையவனைக் கவிபாடிற்று. [அடைந்ததென்குருகூர்ச்சடகோபன்] அம்மதுவிலே படிந்த வண்டுகள் விடமாட்டாதாப்போலே, பகவத்விஷயத்தை விடமாட்டாத ஆழ்வாராயிற்று அருளிச்செய்தார். [மிடைந்தசொல்தொடை] அநுபவஜநிதப்ரீதியாலே பிறந்தவையாயிருக்கச்செய்தேயும், சொற்கள்தாம் 'நாம் இங்குத்தைக்குக் கிஞ்சித்கரித்தோமாகவேணும்' என்று, 'என்னைக்கொள், என்னைக்கொள்' என்று மேல்விழுந்தன. ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு இப்பத்தையும் அப்யஸிக்கவல்லவர்களுக்கு, ஐச்வர்யகைவல்யங்கள் புருஷார்த்தமென்கைக்கு அடியான பாபங்கள் ஓடிப்போம். [நோய்களையுடைந்தோடுவிக்கும்] இவனைவிட்டுப்போம்போதும் திரளப்போகப்பெறாது, "வள்ளலே உன்தமர்க்கென்றும் நமன்தமர் கள்ளர்போல்" என்கிறபடியே இருவர் ஒருவழிபோகப்பெறார்கள். இப்பாபங்கள் ஆச்ரயாந்தரத்தில் கிடந்தாலும் மறுமுட்டுப்பெறாதபடி உடைந்தோடும்.

முதற்பாட்டில், கேவலரை நிந்தித்தார்; இரண்டாம்பாட்டில், அநந்யப்ரயோஜநர் நிறத்திலிருக்கும்படியைச்சொன்னார்; மூன்றாம் பாட்டில், இவ்விரண்டுகோடியிலும் நீர் ஆர்?

என்ன, 'உன்னை அநுபவியாதிற்க விரோதிகழிந்தவன் நான்' என்றார்; நாலாம்பாட்டில், என்னை 'இவ்வளவாகப் புகுரநிறுத்தினவனை என்னஹேதுவாலே விடுவது' என்றார்; அஞ்சாம் பாட்டில், திருவாய்ப்பாடியில் பெண்கள் க்ருஷ்ணனைவிடுமன்றன்றோ நான் அவனைவிடுவது என்றார்; ஆறும்பாட்டில், அவன்தான்விடிலோ வென்ன, அவன்போக்கை இசையே னென்றார்; ஏழாம்பாட்டில், நீர்தாம் விடிலோவென்ன, அவன் என்னைப் போகவொட்டா னென்றார்; எட்டாம்பாட்டில், இந்நாள்வரைபோகவிட்டிலனோ? என்ன, 'நப்பின்னைப்பிராட்டி புருஷகாரமாகப்பற்றின என்னை இனி அவனாலும் விடவொண்ணாது' என்றார்; ஒன்பதாம்பாட்டில், இப்ப்ரஸங்கந்தானென்? ஒருநீராகக்கலந்ததை ஒருவராலும் பிரிக்கவொண்ணாது' என்றார்; பத்தாம்பாட்டில், அவனுடைய கல்யாணகுணங்களை ஸர்வகாலமும் அநுபவித்து ச்ரமமுடையேனல்லே னென்றார்; இத்திருவாய்மொழியை அப்யஸித்தார்க்கு ப்பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

ஆழ்வார் திருவடிகளே சரணம். எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

எட்டாந் திருவாய்மொழி—ஓடும்புள் : ப்ரவேசம்.

—:—

೨.—எட்டாந்திருவாய்மொழியில், முக்தரும் பத்தருமான சேதநர்க்கும் தனக்கும் ஸம்ச்லேஷம் பிறக்கும்போது இரண்டத்தொருதலை பவ்யமாகவேணும்; பவ்யமாமிடத்தில், அவர்களைத் திருத்துவதற்காட்டில் தான் அவர்களுக்குப் பாங்காகை ஸுகமாகையாலே மேடான ஸ்தலத்துக்கு நீர் அபேக்ஷையானால் விரகாலே நீரை மேட்டிலே யேற்றுமாபோலே, தன்னுடைய ஸ்வரூபரூபசேஷ்டிதாதிகளை ஸங்கோசித்து அவர்களுக்குத் தன்னைப் பாங்காக்கி அவர்களோடே கலக்குமென்கிறார்.

இ.—எட்டாந் திருவாய்மொழியில்: நித்யரும் முக்தரும் பத்தருமான த்ரிவிதசேதந வர்க்கத்தோடும் தனக்குப் பரிமாறவேண்டினால் நாநாருசிகளான அவர்களைத் தன்னளவிலே பவ்யராக்குகை அரிதாகையாலே, அதிற்காட்டில் மேட்டிலே நீரை வருந்தி யேற்றுமாபோலே தன் ஸ்வரூப ரூப குண சேஷ்டிதங்களை ஸங்கோசித்துத் தன்னை அவர்களுக்குப் பாங்காக நியமித்து அவர்களோடே பரிமாறுமென்று, அவனுடைய ஆர்ஜவகுணம் சொல்லுகிறது. அதாகிறது - அவர்கள் போனவழி செவ்வைவழியாம்படி தன்னைத் திருத்திப் பரிமாறுகை.

ஈடு.—கீழில் திருவாய்மொழியிலே நிரதிசயபோக்ய னென்றார்; இதில் அவனுடைய ஆர்ஜவகுணம் சொல்லுகிறார். ஸௌலப்யமாவதென்? ஸௌசீல்யமாவதென்? ஆர்ஜவமாவதென்? என்னில்: ஸௌலப்யமாவது ஸ்ரீவைகுண்டம் கலவிருக்கையாக உடையவன், அங்கு நின்றும் ஸம்ஸாரிசேதநர் நின்ற இடத்தே வந்து அவதரித்து எளியனாகை. ஸௌசீல்யமாவது இப்படி தாழவிட்டால், 'சிறியாரளவில் நம்மைத் தாழவிட்டோமே' என்று தன் திருவுள்ளத்திலுமின்றிக்கேயிருக்கை. இனி, ஆர்ஜவகுணமாவது இப்படி பொருந்தினால், நினைவும் சொலவும் செயலும் ஒருபடிப்பட்டிராதே பலவகைப்பட்ட சேதநரோடு தான் பரிமாறுமிடத்தில், அவர்கள் போன வழி தனக்கு வழியாம்படி தான் அவர்களுக்குச் செவ்வியனாய்ப் பரிமாறுகை. 'குணவான்' என்று ஸௌசீல்யகுணத்தைச் சொல்லாநிற்கச்செய்தே, "ருஜு:" என்று ஆர்ஜவகுணத்தைப் பிரிய அருளிச்செய்தாரிறே. 'இத்திருவாய்மொழிதான் ஸர்வேச்வரனுடைய ஐச்வர்யத்தைச் சொல்லுகிறது' என்பாருமுண்டு; அன்றிக்கே, ஈச்வரத்வ

லக்ஷணம் சொல்லுகிறது' என்பாருமுண்டு; அன்றிக்கே, 'இமே, "பாடியிளைப்பிலம்" என்றார், 'அப்படியே பாடி அநுபவிக்கிறார்' என்பாருமுண்டு. 'ஆர்ஜவகுணம் சொல்லுகிறது என்று பட்டர் அருளிச்செய்யும்படி. பத்தர் முக்தர் நித்யர் என்று சேதநர்க்கு ஒரு த்ரைவித்ய முண்டிறே; த்ரிவித சேதநரோடும் பரிமாறுமிடத்தில், அவர்கள் தன்னினைவிலே வரும்படி பண்ணுகை யன்றிக்கே, நீரேறுமேடுகளிலே விரகாலே நீரேற்றுவாரைப்போலே தன்னை அவர்களுக்கு ஈடாக அமைத்துப் பரிமாறும் என்னும் அவ்வழியாலே இவனுடைய ஆர்ஜவ குணம்சொல்லுகிறார்.

ஓடும்புள்ளேறி* சூடுந்தண்துழாய்*
நீடுநின்றவை* ஆடுமம்மானே. (1)

ஒ.—முதற்பாட்டில், நித்யஸித்தரோடு எம்பெருமான் கலக்கும்படி பேசுகிறார்.

[ஓடுமென்று தொடங்கி] - பெரியதிருவடிக்குத் தன்னை வஹிக்கை அபேக்ஷிதமானால் அவன் மேலேயேறி ஸஞ்சரிக்கும்; திருத்துழாய் செவ்வியழியாமே சூடவேண்டுந்தசை யறிந்து சூடும். [நீடென்று தொடங்கி] - ஸர்வேச்வரன் காலமுள்ளதனையும் மிகவும் அத்தோடு ஸாதரமாக ஸம்ச்லேஷிக்கும்.

இ.—முதற்பாட்டில், நித்யஸித்தரோடு பரிமாறும்படி சொல்லுகிறது.

[ஓடும்புள்ளேறி] - புள்ளேறி யோடும். பெரியதிருவடியை மேற்கொண்டு ஸஞ்சரியா நிற்கும் மஹிஷிக்கு ஸ்தநபரிரம்பணம்போலே, தன்னைமேற்கொள்ளுகை வாஹநத்துக்கு அபேக்ஷிதமாயிருக்கை. மேற்கொள்ளுமதுதான் - அங்குள்ளார்க்குக் காட்சிகொடுக்கைக்கும், அவனுடைய ஸ்வரூபலாபத்துக்குமா யிருக்கும். "த்வதங்க்ரிஸம்மர்த்த கிணாங்கசோபிநா". [சூடுந்தண்துழாய்] - தண்டுழாய் சூடும். "தன் பக்கல் செவ்வி - திருக்குழலிலே யாகவேணும்" என்னுமளவிலே வளையமாக வைக்கும். "சிந்மயஸ் ஸ்வப்ரகாசைச்ச" இங்கு திர்யக்ஸ்தாவரஜந்மங்கள் பாபபலமாய் ஜ்ஞாநஸங்கோசஹேதுவா யிருக்கும்; அங்கு இவையுண்டாகைக்கு அடியென்? என்னில்;—அந்த:புரத்தில் கூனர்குறளராய் வர்த்திக்குமாபோலே, இச்சையாலே ஜ்ஞாந பலமாகப் பரிக்ரஹித்த சரீரங்கள். ஸம்ஸாரிகளுக்கன்றோ ருசிபேதமும் செவ்வைக்கேடு முள்ளது; நித்யஸூரிகளுக்கு விஷயம் ஒன்றாகையாலே ருசிபேதமு மில்லை; செவ்வைக்கேடுமில்லை. அவர்களோடு செவ்வியனாய்ப் பரிமாறுகையாவதென்? என்னில்;—எல்லார்க்கும் விஷயம் ஒன்றேயாகிலும், அவ்விஷயந்தன்னில் வ்ருத்திபேதத்தாலே ருசிபேதங்களு முண்டாம். [நீடு நின்று] - கர்மாநுகூலமாகிலிறே அநித்யமாவது; ஸ்வரூபாநுகூலமாகையாலே நித்யமாய்ச் செல்லா நிற்கும். அவனுக்கு இவர்களையொழியச் செல்லாது; இவர்களுக்கும் அவனையொழியச் செல்லாது. 'புள்' என்றும், துழாய்' என்றுஞ் சொல்லுகிறபடியாலே, அவை யென்கிறது; [ஆடும்] - அவற்றோடே பரிமாறுமென்னுமிடத்திலே 'ஆடும்' என்கிறது - இரண்டுதலைக்கும் போகருபமாயிருக்கையாலே. [அம்மானே] - நித்யஸூரிகளுக்கும் ஸம்ஸாரிகளுக்கும் ஸாதாரணமான ஸ்வாமித்வ முண்டாயிருக்கச் செய்தேயும், இப்படி தனித்தனியே அஸாதாரணமாய்ப் பரிமாறுகை. இப்படி பரிமாறுகைக்கு நிபந்தநஞ் சொல்லுகிற தென்னவுமாம். நித்யஸூரிகளுடைய தாரகாதிகளும் தன்னினைவிலேயாம்படியான ஏற்றத்தையுடையவ னென்றுமாம்.

ஈடு—முதற்பாட்டு. நித்யவிபூதியிலுள்ளாரோடே செவ்வியனாய்ப் பரிமாறும்படி சொல்லுகிறது; அவர்களுக்குச் செவ்வைக்கேடு இல்லையிறே, அவர்கள் பலராய் ருசிபேத முண்டானால் அவர்கள்நினைவு அறிந்து பரிமாறவே அங்கும் ஆர்ஜவகுணம் ஏறுமிறே.

[ஓடும்புள்ளேறி] புள்ளேறி ஓடும்; பெரிய திருவடியை மேற்கொண்டு ஸஞ்சரியாநிற்கும். மஹிஷிக்கு ஸ்தநபரிரம்பணம்போலே, தன்னை மேற்கொண்டு நடத்துவது அபேக்ஷிதமா

யிருக்குமிறே வாஹநத்துக்கு; பெரியதிருவடியை மேற்கொள்ளுமதுதான் அவ்விபூதியிலுள்ளார்க்குக் காட்சிகொடுக்கைக்கும், அவனுடைய ஸ்வரூப லாபத்துக்காகவுமாயிருக்குமிறே. *த்வதங்க்ரிஸம்மர்த்த கிணங்கசோபிநா*: காமியானவனுக்கு போக சிஹ்நங்கள் தாரகமாமோபாதி, திருவடிகள் உறுத்துகையால் வந்த தழும்பு இவனுக்கு தாரகமாயிருக்குமிறே. [சூடுந் தண் துழாய்] இப்போதே பறித்துத் திருக்குழலிலே வளையமாக வையாதொழியில் செவ்வியழியும்' என்னுமளவிலே அப்போதே பறித்துத் திருக்குழலிலே வைக்கும். இதுக்குச் சைதந்யமுண்டோ? என்னில்;—*சிந்மயைஸ் ஸ்வப்ரகாசைச்ச* என்னக்கடவதிறே. சில சேதநர் புள்ளாயும் துழாயாயும் அங்குத்தைக்கு உறுப்பாய் வர்த்திக்கிறபடியிறே. விரோதிசைதந்யமே கழிந்தது; ராஜஸந்நிதியில் வர்த்திப்பார் கூனர் குறளராய் வர்த்திக்குமோபாதியிறே; கர்மநிபந்தநமாகப் பரிக்ரஹித்த சரீரங்களுமன்றே, இச்சையாலே பரிக்ரஹிக்கிறவித்தனையிறே. இவ்விபூதியில் திர்யக்ஸ்த்தாவரங்களாமவை கர்மத்தாலேயாயிருக்கும், அங்கு ஸ்வேச்சாதீநமாயிருக்கும் பரிக்ரஹித்த சரீரங்கள். ஸம்ஸாரிகளுக்கன்றோ ருசிபேதமும் செவ்வைக்கேடு முள்ளது; நித்யஸூரிகளுக்கு விஷயம் ஒன்றாகையாலே ருசிபேதமுமில்லை, செவ்வைக்கேடு மில்லையே; அவர்களுடன் செவ்வையனுப் பரிமாறுகையாவது என்? என்னில்;—எல்லார்க்கும் விஷயம் ஒன்றேயாகிலும் அவ்விஷயந்தன்னில் வ்ருத்தி பேதத்தாலே ருசிபேத முண்டாம் [நீடு நின்று] கர்மாநுகூலமாகிலிறே அநித்யமாவது; ஸ்வரூபாநுருபமான பரிமாற்றமாகையாலே இதுதான் நித்யமா யிருக்கும், அவனுக்கு இவர்களை யொழியச் செல்லாது, இவர்களுக்கு அவனையொழியச் செல்லாது. [அவை] "புள்" என்றும் "துழாய்" என்றும் சொல்லுகையாலே "அவை" என்கிறது. [ஆடும்] அவற்றோடே பரிமாறும் என்னுதே அவை ஆடுமென்கிறது ஸர்வேச்வரனுக்கு அவர்களோடே அணையுமது, விடாயர் மடுவிலே புக்காடினாற்போலே யிருக்கையாலே. [அம்மானே] நித்யஸூரிகளோடு நித்யஸம்ஸாரிகளோடு வாசியறும்படி ஸர்வாதிகனயிருந்து வைத்து, இப்படி பரிமாறும்.

அம்மானாய்ப்பின்னும்* எம்மாண்புமானான்*
வெம்மாவாய்கீண்ட* செம்மாகண்ணனே. (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், ஸம்ஸாரத்தில் ஸமாச்ரிதரானாரோடு ஸம்ச்லேஷிக்கும்படியை அருளிச்செய்கிறார்.

[அம்மானையென்று தொடங்கி] - கீழ்ச்சொன்ன நித்யவிபூதியை யுடையனும் அதின் மேலே எல்லாமாண்மையு முடையனுனான்; மாண்பென்று - திருவவதாரங்களைச் சொல்லுகிறது. [வெம்மாவென்று தொடங்கி] - கொடியனான கேசியின் வாயை அநாயாஸேந பிளந்த ப்ரீதியாலே சிவந்து மலர்ந்த திருக்கண்களை யுடையான்.

இ.—இரண்டாம்பாட்டில், லீலாவிபூதியில் ஆச்ரிதருடைய விரோதிகளைப் போக்கி, அவர்களோடு பரிமாறும்படி சொல்லுகிறது.

[அம்மானாய்] - ஸர்வாதிகனாய் வைத்து. [பின்னும்] - அதின்மேலே. [எம்மாண்பு மானான்] - எல்லா அவதாரங்களையு முடையனானான். மாண்பென்று - அழகு. பரத்வத்திற்காட்டில் அவதாரங்களிலே அழகு மிக்கிருக்கை. "ஸ உச்ரேயாந்பவதி ஜாயமாந:". [வெம்மாவாய் கீண்ட] - வெவ்விதான மாஉண்டு - கேசி; அதினுடைய வாயைக் கிழித்த தற்காலத்தில் கேசியினுடைய வெம்மை இப்போது ஸ்ம்ருதிவிஷயமாய்த் துணுக்கென்கிறது; "விவ்ருதாஸ்ய:" இதி. [செம்மா கண்ணனே] - அநாயாஸேந பிளந்த ப்ரீதியாலே சிவந்துமலர்ந்த திருக்கண்களையுடையவன். அம்மானாய் வெம்மாவாய் கீண்ட செம்மாகண்ணன் பின்னும் எம்மாண்புமானான்.

ஈடு.—இரண்டாம்பாட்டு. இப்பாட்டு, நித்யவிபூதியில்நின்றும் வந்து அவதரித்து விரோதிகளைப்போக்கி ஸம்ஸாரிகளுடன் செவ்வையனுப் பரிமாறும்படி சொல்லுகிறது.

[அம்மானாய்] இப்படி ஸர்வாதிகனாயிருந்துவைத்து. [வெம்மா வாய் கீண்ட செம்மா கண்ணன் பின்னும் எம்மாண்புமானான்] வெவ்விதமான மாஉண்டு கேசி; அதினுடைய வாயைக் கிழித்துப் போகட்ட. கேசி, வாயை அங்காந்துகொண்டுவந்து தோற்றினபோது கண்ட ஸ்ரீநாரதபகவான் *ஜகதஸ்தமிதம்* என்று கூப்பிட்டுக்கொண்டு வந்து விழுந்தானிறே; அவனுக்குத் தத்காலத்திற்பிறந்த பயம். அவன் பட்டுப்போகச்செய்தேயும், ஸம்ருதிஸமயத்திலே அஞ்சுகிறார் இவர். [செம்மாகண்ணனே] விரோதி போகையால் வந்த ப்ரீதியாலே சிவந்து மலர்ந்த திருக்கண்களையுடைய க்ருஷ்ணன். [பின்னும் எம்மாண்புமானான்] அவ்வவதாரத்திலே பர்யவஸிக்கையன்றிக்கே அதுக்குமேலே அநேகாவதாரங்களைப் பண்ணினான். *பஹூநி* என்கிறபடியே. மாண்பு என்று அழகு. பரத்வத்திலும் மநுஷ்யத்வேபரத்வத்தால் வந்த அழகைச் சொல்லுகிறது.

கண்ணாவானென்றும்* மண்ணோர்விண்ணோர்க்கு*
தண்ணார்வேங்கட* விண்ணோர் வெற்பனே. (3)

ஒ.—மூன்றாம்பாட்டில், பத்த முக்த கோடித்வயத்தோடும் ஸம்ச்லேஷிக்கைக்கு ஈடாகத் திருமலையிலே வந்து நின்றருளினானென்கிறார்.

[கண்ணென்று தொடங்கி] - ஸம்ஸாரிகளுக்கும் நித்யஸித்தருக்கும் என்றும் கண்ணாகைக்காக; கண்ணாவானென்றுமாம். [தண்ணென்று தொடங்கி] - ரக்ஷண்ய ஜந்துக்களுக்கு ப்ரத்யாஸந்நமாகையாலே ஈச்வரனுக்கு ச்ரமஹரமாய் அயர்வறுமமரர்களுக்குப் பரமப்ராப்யமான திருமலையிலே நின்றருளினான்.

இ.—மூன்றாம்பாட்டில், இரட்டைப்பிள்ளைபெற்ற தாயார் இருவர்க்கும் பாங்காகக் கிடந்து முலைகொடுக்குமாபோலே, பத்தமுக்தகோடித்வயத்துக்கும் முகங்கொடுக்கைக்காகத் திருமலையிலே வந்து நின்றருளினானென்கிறார்.

[மண்ணோர் விண்ணோர்க்கு என்றும் கண்ணாவான்] - ஸம்ஸாரிகளோடு நித்யஸூரிகளோடு வாசியில்லை, அரக்ஷணம் தங்கள் காரியம் நிர்வஹித்துக்கொள்ள மாட்டாமைக்கு. [கண்ணாவான்] - கண்ணாகைக்காக என்னுதல்; கண்ணாமவனென்னுதல். கண்ணென்று - நிர்வாஹகன். ''சக்ஷுர்த்தேவாநா முதமர்த்யாநாம்'' என்கிற ச்ருத்யர்த்தத்தின்படியே சொல்லுகிறார். [தண்ணார்வேங்கடம்] - குளிர்மிக்கிருந்துள்ள திருமலை. ரக்ஷகனுக்கு ரக்ஷ்யவர்க்கம் பெருமையால் வரும் தாபத்தையும், இங்குள்ளார்க்கு ரக்ஷகனைப் பெருமையால் வரும் தாபத்தையும் தீர்க்கவற்றாயிருக்கை. [விண்ணோர் வெற்பனே] - நித்யவிபூதியின் மேன்மையையும் திருமலையிலே நிற்கிற நீர்மையையும் ஒருபோகியாக அநுபவித்துக்கொண்டு விடாதே படுகாடு கிடக்கையாலே 'விண்ணோர்வெற்பன்' என்கிறார். ஸம்ஸாரிகள் மேன்மையைக் கண்டறியாமையாலே நீர்மையும் அறியார்கள். ''மண்ணோர் விண்ணோர்க்கு'' என்கிறவிடம் - ஈச்வராபிப்ராயத்தாலே. ''நின்றவேங்கடம்நீணிலத்துள்ளது'' என்று - திருமலை ஸம்ஸாரிகளுக் கென்னுமிடம் ஸித்தம்; ''விண்ணோர் வெற்பு'' என்கிறவிடமிறே ஸாத்யம். ''விண்ணோர் வெற்பன்'' என்கிறவிடம் நித்யஸூரிகளபிப்ராயத்தாலே; விண்ணோர், ''எங்களது'' என்று அபிமாநிக்கும்படியான தண்ணார் வேங்கடவெற்பை யுடையவன்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. இரட்டை ப்ரஜை பெற்ற மாதாவானவள் இருவர்க்கும் முலைகொடுக்கப் பாங்காக நடுவே கிடக்குமாபோலே, நித்யஸூரிகளுக்கும் ஸம்ஸாரிகளுக்குமாக முகங்கொடுக்கைக்காகத் திருமலையிலே நின்றருளின நீர்மையை அருளிச் செய்கிறார்.

[கண்ணாவான்] நிர்வாஹகனாவானென்னுதல்; கண்ணாகைக்காக என்னுதல், கண்ணாமவனென்னுதல். *சக்ஷுர்த்தேவாநாமுத மர்த்யாநாம்* என்கிற ச்ருத்யர்த்தத்தை அருளிச்செய்கிறார். [மண்ணோர் விண்ணோர்க்கு என்றுங்கண்ணாவான்] நித்யஸூரிகளோடு ஸம்ஸாரி

களோடு வாசியில்லையாயிற்று தங்கள் காரியம் தாங்கள் செய்துகொள்ளமாட்டாமைக்கு. [தண்ணார்வேங்கடம்] "குளிரருவிவேங்கடம்" என்னுமாபோலே அவனுக்கு ரக்ஷ்யம்பெருமையால் வரும் தாபத்தையும் ஆற்றி, இவர்களுக்கு ரக்ஷகனைப் பெறுமையால் வரும் தாபத்தையும் ஆற்ற வற்றாயிருக்கை. [விண்ணோர்வெற்பனே] அவன் இரண்டு விபூதியிலுள்ளார்க்கும் முகங்கொடுக்க வந்து நின்றானேயாகிலும், திருமலைதான் நித்யஸூரிகளதாயிற்று. "வானவர் நாடு" என்னுமாபோலே 'விண்ணோர்வெற்பு' என்கிறார். கானமும் வானரமுமான இவற்றுக்கு முகங்கொடுத்துக்கொண்டு நிற்கிற நீர்மையை அநுஸந்தித்து, "இது என்ன நீர்மை!" என்று ஈடுபட்டிருக்கையாலே அவர்களதே திருமலை யென்கிறார்.

வெற்பையொன்றெடுத்து* ஒற்கமின்றியே*
நிற்குமம்மான்சீர்* கற்பன்வைகலே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், கோவர்த்தநோத்தரணம் பண்ணினவனுடைய குணத்தை என்றும் அநுபவிப்பே னென்கிறார்.

[வெற்பை யொன்றெடுத்து இத்யாதி] - அப்போதைக்கு எட்டிற்றொரு மலையெடுத்து. [ஒற்கமின்றியே என்று மேலுக்கு] - இளைப்பு இன்றியே நிற்பதுஞ்செய்து கோவர்த்தநோத்தரணோபகாரத்தாலே ஜகத்திலுள்ளாரையெல்லாம் அடிமைகொண்டவனுடைய குணங்களை என்றும் சொல்லுவன்.

இ.—நாலாம்பாட்டில், அவ்வார்ஜவகுணம் தம்மளவிலே வர, பலித்தபடியைச் சொல்லுகிறார்.

[வெற்பையொன்றெடுத்து] - பசுக்களும் இடையரும் தொலைய வர்ஷிக்கப் புக்கவாறே, கைக்கெட்டிற்றொரு மலையை யெடுத்து ரக்ஷித்தபடி. கீழ், ஒரு மலையை ஆதாரமாகக்கொண்டு ரக்ஷித்தபடி சொல்லிற்று; இப்போது ஒரு மலையை ஆதேயமாகக்கொண்டு ரக்ஷித்தபடி சொல்லுகிறது. ஏழு வயஸ்ஸிலே ஏழுநாள் ஒருபடிப்பட மலையை யெடுத்து ரக்ஷித்தவிடத்தில் இளைப்பு உண்டாயிற்றில்லையோ? என்னில், [ஒற்கமின்றியே நிற்கும்] - பரார்த்தமாக வ்யாபரிக்கையாலே இளைப்பின்றிக்கே நின்றான். ஒற்கமாவது - ஒல்குதலாய், அதாவது - ஒடுங்குதலாய், அதாவது - இளைப்பு; தாதுக்ஷயம் பிறவாவிட்டால் இளைப்பில்லையிறே. [அம்மான்] - வகுத்த ஸ்வாமியாகையாலும் இளைப்பில்லை; ப்ரஜாரக்ஷணத்தில் இளைப்பு மாதாவுக்கு உண்டாகாதிறே. [சீர்கற்பன்] - அவன் மலையையெடுத்து ரக்ஷித்த அப்போதை நீர்மையையும் அழகையும் வாய்வெருவுவன். "சொல்லுவன்" என்கிற ஸ்தானத்திலே, 'கற்பன்' என்கிறது - குணப்ரேரிதராய்ச் சொன்னாரென்னுமிடந் தோற்றுகிறது. [வைகலே] - "நீடுநின்று" என்று, நித்யஸூரிகளுக்கு அதுவே யாத்ரையானாப்போலே, எனக்கும் இதுவே யாத்ரையாயிருக்கும்.

ஈடு.—நாலாம்பாட்டு. அவனுடைய ஆர்ஜவகுணம் தம்மளவிலே பலித்தபடியை அருளிச் செய்கிறார்.

[வெற்பை யொன்றெடுத்து] பசுக்களும் இடையரும் தொலையும்படி வர்ஷிக்கப்புக்கவாறே, அதுக்கு ஈடாயிருப்பதொன்றை விட்டு ரக்ஷிக்கப்பற்றாமையாலே, தோற்றிற்றொரு மலையை யெடுத்துப் பரிஹரித்தானாயிற்று. இப்படி ஏழுபிராயத்தின்பாலன் ஒருபடிப்பட மலையை யெடுத்துத் தரித்துக்கொண்டு நின்ற இடத்தில் இளைப்பு உண்டாயிற்றில்லையோ? என்னில், [ஒற்கமின்றியே நிற்கும்] ஒற்கமாவது ஒடுங்குதல்; அதாகிறது இளைப்பு. ஏழு நாள் ஒருபடிப்பட மலையைத் தரித்துக்கொண்டு நின்ற இடத்தில் இளையாமைக்கு ஹேது என்? என்னில், [*அவன் ரக்ஷணத்தைப் பகிர்ந்துகொள்வாரில்லாமையாலே இளைப்பில்லை; தாதுக்ஷயம் பிறவாவிடில் இளைப்பில்லையிறே; உண்கிற சோற்றிலே மணலைத் தூவுகை யில்லாவிட்டால் இளைப்பில்லையிறே.*] [அம்மான்] வகுத்த ஸ்வாமியாகையாலே. ஸ்வாபாவிக ஸம்பந்தத்தாலே இளைப்பின்றிக்கே நின்றான். ப்ரஜாரக்ஷணத்தில் மாதாவுக்கு இளைப்பு உண்டாகாதிறே. [சீர்கற்பன்] அவன்மலையையெடுத்து ரக்ஷ்யவர்க்கத்தை நோக்கின நீர்

மையை அநுஸந்தித்து, அவனுடைய கல்யாணகுணங்களை அந்த குணப்ரேரிதனாய் அப்ப ஸிப்பன். *குணைர் தாஸ்யமுபாகத:* என்னுமாபோலே. [வைகலே] ஒருகால் இத்தைச் சொல்லி, பின்னை என்கார்யத்துக்குப் போமவனல்லேன்; நித்யஸூரிகளைப்போலே எனக்கும் இதுவே யாத்ரையாயிருக்கும்; *விபஂயவ:* இறே.

வைகலும்வெண்ணெய்* கைகலந்துண்டான்*
பொய்கலவாது என்* மெய்கலந்தானே. (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், தன்னுடைய குணகீர்த்தநோபக்ரமத்திலே தம்பக்கல் எம்பெருமான் அபிநிவிஷ்டனானபடியை அருளிச்செய்கிறார்.

[வைகலுமென்று தொடங்கி] - நாடோறும் வெண்ணெய் களவு காணப்புக்க அபிநிவேசாதிசயத் தாலும் மௌக்த்யத்தாலுமாக இரண்டு கையாலும் வெண்ணெய் விழுங்குமவன். [பொய்யென்று தொடங்கி] - அப்படியே தத்தேக தாரகனாய்க்கொண்டு என் உடம்பிலே கலந்தான்.

இ.—அஞ்சாம்பாட்டில், நான் அவன்ஸ்வரூபத்தை விட்டு அவன்குணங்களையே விரும்புகிறாப் போலே, அவனும் என்னை விட்டு என்னுடைய தேஹத்தையே விரும்பாநின்றானென்கிறார்.

[வைகலும் வெண்ணெய் கைகலந்து உண்டான்] - ''கற்பன்வைகலே'' என்று - எனக்கு அவன் குணம் என்றும் தாரகமாயிருக்கிறாப்போலே, ஆச்ரிதஸ்பர்ச முள்ளதொரு த்ரவ்யமே அவனுக்கும் நித்யதாரகமாயிற் றென்கிறார், [கைகலந்து உண்டான்] - ''தாரார்தடந்தோள்களுள்ளளவுங் கைநீட்டி'' என்கிறபடியே ''குடத்திலே கைபுக்கதனையும் வயிறுநிறையும்'' என்கிற மௌக்த்யத்தாலே யென்னுதல்; ''கள்ளன்'' என்று சிலுகிட்டவாறே, அவர்கள்தங்களோடே கலந்து அமுதுசெய்தா னென்னுதல்; ''ஒரிளம்பனும் ஒரு சதிரனும் களவுகண்டார்கள்'' என்று பட்டர் கதையை ஸ்மரிப்பது: அபிநிவேசத்தாலே இரண்டு கையாலும் அமுதுசெய்தா னென்னுதல், கைவாசி யறியாத மௌக்த்யத்தாலும் அபிநிவேசத்தாலும். [பொய்கலவா தென்மெய்கலந்தானே] - வெண்ணெயிற்பண்ணின விருப்பத்திற் பொய்யில்லாதாப்போலே கிடீர் என்னுடம்பிற் பண்ணுகிற விருப்பமும். அவன் மேல் விழ, தாம் மேன்மையைக் கண்டு இருய்க்கிறாராயிற்று; அவன்மேல்விழுகிறதும் இத்தாலேயாயிற்று. ''இங்நின்றநீர்மை'' என்று நான் அநாதரிக்கிற சரீரமும் இவனுக்குக் கலக்கைக்கு விஷயமாவதே!

ஈடு.—அஞ்சாம்பாட்டு. நீர் அவன் குணங்களை அப்யஸியாநின்றீராகில், அவன்தான் செய்கிறதென்? என்னில்; நான் அவனை விட்டு அவன் குணங்களை விரும்புகிறாப்போலே, அவனும் என்னைவிட்டு என்னுடைய தேஹத்தை விரும்பாநின்றானென்கிறார்.

[வைகலும்] ''கற்பன்வைகலே'' என்று எனக்கு அவன்குணம் என்றும் தாரகமா யிருக்கிறாப்போலே, ஆச்ரிதஸ்பர்சமுள்ள த்ரவ்யம் என்றுமொக்க தாரகமாயிருக்குமாயிற்று அவனுக்கு. [வெண்ணெய் கைகலந்து உண்டான்] வெண்ணெயிலுண்டான ஆதரத்தாலே இடக்கையாலும் வலக்கையாலும் வாங்கி அமுதுசெய்தான்; அன்றியே, ''தாரார் தடந்தோள் களுள்ளளவுங்கைநீட்டி'' என்கிறபடியே ''கை நிறையுந்தனையும் வயிறுநிறையும்'' என்னும் மௌக்த்யத்தாலே திருக்கைகளுள்ளளவும் கலந்து அமுதுசெய்தா னென்னுதல்; ''கள்ளன்'' என்று சிலுகிட்டவாறே அவர்கள்தங்களோடே கலந்து அமுதுசெய்தானென்னுதல். 'ஸர்வாதிகனானவன் நித்யஸம்ஸாரியாய்ப் போந்தவனுடைய தேஹத்தைத் திருவாய்ப்பாடியில் வெண்ணெயோபாதி ஆதரித்தான்' என்றால், இது கூடுவதொன்றோ? என்னில், [பொய்கலவா தென்மெய்கலந்தானே] அவ்வெண்ணெயில் பண்ணின விருப்பத்தில் பொய்யில்லாதாப் போலேகிடீர் என்னுடம்புடன்கலந்த கலவியிலும்பொய்யில்லாதபடி யென்கிறார். [என்மெய்] அவன் மேல்விழ மேல்விழத் தாம் இருய்த்தமை தோற்றுகிறது. ''அழுக்குடம்பு'' என்று நான் அநாதரிக்கிற சரீரம் இவனுக்கு ஆதரணீயமாவதே என்கிறார்.

கலந்தென்னாவி* நலங்கொள் நாதன்*
புலன்கொள்மாணாய்* நிலங்கொண்டானே. (6)

ஒ.—ஆறாம்பாட்டில், தம்மோடு கலந்த எம்பெருமான் தம்மை அநந்யார்ஹமாக்கிக்கொண்ட படியை ஸநிதர்சநமாகச் சொல்லுகிறார்.

[கலந்தென்று தொடங்கி] - என்னோடே ஸம்ச்லேஷித்து என் ஆத்மாவில் நன்மையைக் கொண்டு என்னை ஆளுங்கொண்டான். [புலனென்று தொடங்கி] - ஸர்வேந்த்ரியாபஹாரக்ஷமமான குறள்வடிவைக் காட்டி மஹாபலியில் நிலங்கொண்டாற்போலே.

இ.—ஆறாம்பாட்டில், தேஹத்தளவன்றிக்கே என்னை அநந்யார்ஹமாக்கினான் என்கிறார்.

[கலந்து] - என்னோடே ஒரு நீராகக் கலந்து. [என்னாவி நலங்கொள் நாதன்] - என் ஆத்மாவினுடைய நலத்தை - நற்சீவனைக் கொண்டான். [நாதன்] - "என்னையாளுங்கொண்டு" என்கிறபடியே தன்னையொழியச் செல்லாமையை விளைத்து நான் எனக்கு உரியேனாயிருக்கிற நிலையைத் தவிர்த்தான். தாம் அகப்பட்டபடிக்கு மஹாபலியை நிதர்சநமாகச் சொல்லுகிறார். [புலன்கொள் மாணாய்] - ஸர்வேந்த்ரியாபஹாரக்ஷமமான வடிவைக்கொண்டு. [நிலங்கொண்டானே] - மஹாபலி 'தன்னது' என்று அபிமானித்த பூமியைக் கொண்டான். அவன் என்னைப்போலே தன்னைக் கொடுத்திலன். அவன் வடிவிலே தோற்றான், நான் நீர்மையிலே தோற்றேனென்கிறார்.

ஈடு.—ஆறாம்பாட்டு. இப்படி கலந்து செய்ததென்? என்ன, தேஹத்தளவிலே விரும்பி விட்டிலன்; என்னாவி நலத்தையுங் கொண்டானென்கிறார்.

[கலந்து இத்யாதி] என்னோடே ஒரு நீராகக் கலந்து, பின்னை என் ஆத்மாவினுடைய நற்சீவனைக் கொண்டான். அவ்வளவேயோ? [நாதன்] "என்னையாளுங்கொண்டு" என்கிற படியே, நான் எனக்கு உரியேனாயிருக்கிற இருப்பையும் தவிர்த்தான். இப்படி அகப்பட்டார் நீரேயோ என்ன, மஹாபலியும் அகப்பட்டான். ஆவிநலங்கொடுத்திலன், கழஞ்சுமண் கொடுத்தானித்தனை. ஸர்வேந்த்ரியாபஹார க்ஷமமான வேஷத்தைப் பரிக்ரஹித்து, அவன் 'என்னது' என்று அபிமானித்திருக்கிற பூமியை அபஹரித்தான்.

கொண்டானேழ்விடை* உண்டானேழ்வையம்*
தண்தாமஞ்செய்து* என், எண்தானானானே. (7)

ஒ.—ஏழாம்பாட்டில், தன்விஷயத்தில் என்னுடைய மநோரதத்தை என் பக்கலிலே தான் பண்ணினானென்கிறார்.

[கொண்டானென்று தொடங்கி] - நப்பின்னைப்பிராட்டியோட்டை ஸம்ச்லேஷவிரோதியான ஏருதேழையும் கொன்றான்; ஜகத்தையடையத் திருவயிற்றிலே வைத்துக்கொண்டான்; இதுக்குக் கருத்து - தம்முடைய ஸம்ச்லேஷ விரோதிகளைப் போக்கி, ஜகத்துக்குத் தன்னை யொழியச் செல்லாதாபோலே தம்மையொழிய எம்பெருமானுக்குச் செல்லா தென்று. [தண்தாமஞ் செய்து] - பரமபதத்திற் பண்ணும் வ்யாமோஹத்தைப் பண்ணி நான் நினைத்தபடி செய்தானென்றுமாம்.

இ.—ஏழாம்பாட்டில், தன்பக்கலுண்டான என்னுடைய மநோரதத்தை என்பக்கலிலே தான் பண்ணினானென்கிறார்.

[கொண்டானேழ்விடை] - ஏழுவகைப்பட்ட வ்ருஷபங்களை ஜயித்தான். இன்ன படைவீட்டைக் கொண்டானென்னுமாபோலே, "கொண்டான்" என்றது - ஜயித்தானென்றபடி. நப்பின்னைப் பிராட்டி

யோட்டைக் கலவிக்கு விரோதியைப் போக்கினாப்போலே, என்விரோதிகளைப் போக்கி வந்து கலந்தானென்கை- [உண்டானேழ்வையம்] - ஜகத்தையெல்லாம் ப்ரளயாபத்திலே தன்திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்தான். ப்ரளயாபத்தில் ஜகத்துக்குத் தன்னையொழியச் செல்லாதாபோலே, என்னையொழியத் தனக்குஞ் செல்லாதபடியா யிராநின்றானென்கை [தண்தாமஞ்செய்து] - தட்பத்தையுடைய தாமமுண்டு - பரமபதம்; அதில் பண்ணக்கடவ விருப்பத்தை என்பக்கலிலே பண்ணி, தத்விபூதிகளுகை என்னை யாதரித்தென்னவுமாம் [என்எண்தானானானே] - நான் மநோரதித்தபடியே எனக்குக் கைப்புகுந்தானென்னுதல், என் மநோரதத்தைத் தான் கைக்கொண்டான்; அதாகிறது - "மாகவைகுந்தங் காண்பதற் கென்மனமேகமெண்ணும்" என்று - நான் அத்தேசத்திலே அநுபவிக்க எண்ணத் திருநகரியிலே வந்து என்னை அநுபவிக்க எண்ணுகிற்கை

ஈடு.—ஏழாம்பாட்டு. ஆவிநலங்கொண்டு விட்ட அளவேயோ? நித்யவிபூதியில் பண்ணும் ஆதரத்தையும் என்பக்கலிலே பண்ணினானென்கிறார்.

[கொண்டானேழ்விடை] "இன்ன படைவீட்டைக் கொண்டான்" என்னுமா போலே, நப்பின்னைப்பிராட்டி யோட்டை ஸம்ச்லேஷத்துக்கு ப்ரதிபந்தகமான ருஷபங்களேழையும் ஜயித்தான். [உண்டானேழ்வையம்] ப்ரளயாபத்தில் பூமி தன்வயிற்றிலே புகாவிடில் தரியாதாபோலே, தான் என்பக்கலிலே புகுந்தல்லது தரியாதானாய்க் கலந்தான். தனக்கு ஸ்நேஹிகளாயிருப்பார்க்குச் செய்யுமதுஞ் செய்தான். தான் பண்ணும் ரக்ஷணம் விலக்காதார்க்குச் செய்யுமதுஞ் செய்தான். அதுக்குமேலே, [தண்தாமஞ்செய்து] தட்பத்தையுடைத்தான தாமமுண்டு பரமபதம், அதில்பண்ணும் விருப்பத்தையும் என்பக்கலிலே பண்ணினான். தத்விபூதிகளுகை என்னை யாதரித்தென்றுமாம். [என் எண்தானானானே] நான் மநோரதித்தபடியே எனக்குக் கைப்புகுந்தானென்னுதல்; அன்றிக்கே, என்மநோரதத்தைத் தான் கைக்கொண்டானென்னுதல். அதாவது மாகவைகுந்தங்காண்பதற்கிறே இவர் ஏகமெண்ணுவது; "கண்ணன் விண்ணூர்தொழவே சரிகின்றது சங்கம்" என்று நான் ஸ்ரீவைகுண்டத்தேறப் போகவேணும்' என்றும், 'அங்கே அநுபவிக்க வேணும்' என்றும் ஆசைப்பட, அவன் 'திருநகரியேறப் போகவேணும்' 'ஆழ்வாரை அநுபவிக்க வேணும்' என்று பாரியாநின்றான்.

ஆனானாயன்* மீனோடேனமும்*
தானானானென்னில்* தானயசங்கே. (8)

ஒ.—எட்டாம்பாட்டில், ஸர்வேச்வரன் என்பக்கலுண்டான ஸங்காதிசயத்தாலே தேவமநுஷ்யாத்யநேகாவதாரங்களைப் பண்ணியருளினானென்கிறார்.

[என்னில் தானாயசங்கே] - 'ஸர்வேச்வரனாயிருந்துவைத்து, எனக்காகப் பண்ணின திருவவதாரத்துக்கு எண்ணில்லை' என்றுஞ் சொல்லுவர்.

இ.—எட்டாம்பாட்டில், என்பக்கல் ஸங்காதிசயத்தாலே என்னைப்பற்ற அவன் பட்டதுக்கு ஓரளவில்லை யென்கிறார்.

[ஆனானாயன்] - ஆயனானான், கையிலே கோலைக்கொடுத்து 'பசுமேய்த்துவா' என்னலாம்படி இடையனாய்ப் பிறந்த மெய்ப்பாடு. அவ்வளவேயோ? [மீனோடேனமுந்தானானான்] - ஸர்வாதிகனான தானிறே திர்யக்ஸஜாதீயனானான். அவன் க்ரமத்திலே பிறக்கச்செய்தேயும், அநுஸந்தாநத்திற் பதற்றத்தாலே ஏககாலத்திலே இரண்டவதாரம்போலே சொல்லுகிறார். [ஆனான்] - வடிவுஞ் சொலவுஞ் செயலும் ஜாதிக்கு அடுத்தவையா யிருக்கை இதுக்கு ஹேதுவென்? என்னில், [என்னில் தானாயசங்கே] - என்பக்கல் தனக்கு உண்டான ஸங்காதிசயத்தாலே யென்னுதல்; என்னைக்குறித்துத் தான்பண்ணின அவதாரங்கள் சங்கமென்கிற மஹாஸங்க்யைக்குப் போரும். என்னில் - என்னைக்குறித்து. தானாய - தானானவை. சங்கே - சங்கத்தளவேயன்றிறே.

ஈடு.—எட்டாம்பாட்டு. என்னைச்சுட்டி அவன்பிறந்த பிறவிகளுக்கு ஒருமுடிவில்லை யென்கிறார்.

[ஆனானாயன்] இடையனாய்ப்பிறந்து, முடிசூடஇராதே ஜாத்யுசிதமான கோரக்ஷணத்திலே அதிகரித்தான், இடையனாய்ப் பிறந்த மெய்ப்பாடு. அவ்வளவிலேதான் விட்டானோ? [மீனோடேனமுந்தானானான்] கீழே க்ருஷ்ணாவதாரத்தைச் சொன்னார், அது அயர்வறுமமரர்களதிபதியாயிருந்த வோபாதியிறே இவ்வவதாரங்களைப்பற்ற. ஸர்வாதிகனான தான் இவற்றோடு ஸஜாதீயனானான். அவன் க்ரமத்திலே பிறக்கச்செய்தே, அநுஸந்தாநத்தில் பதற்றத்தாலே ஏககாலத்திலே இரண்டவதாரம் போலேயிருக்க அருளிச்செய்கிறார். [ஆனான்] வடிவும் செயலும் சொலவும் தஜ்ஜாதீயர்க்கு அடுத்தவையாயிருக்கை. இவை தான் வித்யாவதாரங்கள். இதுக்கு அடியென்? என்னில், [என்னில் தானாயசங்கே] என் பக்கல் தனக்கு உண்டான ஸங்காதிசயத்தாலே யென்னுதல், என்னைக் குறித்து, தானானவை—தன் அவதாரங்கள். சங்கே—மஹாஸங்க்யை என்னுமத்தனை. அங்ஙனன்றிக்கே, சங்கே—மஹாஸங்க்யையளவோ! முடிவுண்டோ! *பஹூநி* என்னுமித்தனை.

சங்குசக்கரம்* அங்கையில்கொண்டான்*
எங்கும்தானாய* நங்கள்நாதனே. (9)

ஒ—ஒன்பதாம்பாட்டில், ஆச்ரிதரோடு ஸம்ச்லேஷிக்கைக்காக எங்கும் வந்து திருவவதாரம் பண்ணும்போது தன்னுடைய ஐச்வரமான சிஹ்நங்களைக் கொண்டுவந்து திருவவதாரம் பண்ணியருளு மென்கிறார்.

[எங்கு மென்று தொடங்கி] - பலவிடத்திலும் தேவமநுஷ்யாதிரூபேண வந்து திருவவதாரம் பண்ணியருளி எங்களை வசீகரித்து அடிமைகொண்டவன். [எங்குந்தானாய] - வ்யாப்தியாகவுமாம்.

இ.—ஒன்பதாம்பாட்டில், இப்படி அவதரிக்கு மிடத்தில் ஐச்வரமான சிஹ்நங்களோடே வந்து அவதரிக்கு மென்கிறார்.

[சங்குசக்கரம் அங்கையிற்கொண்டான்] - வெறும்புறத்திலே துவக்கவல்ல கையிலே திவ்யாயுதங்களை தரித்தான். திவ்யாயுதங்கள் எல்லாஅவதாரங்களிலு முண்டோ? என்னில்; எங்குமுண்டு; ராஜாக்கள் கறுப்புடுத்துப் புறப்பட்டால் அந்தரங்கர் அபேக்ஷிததசையிலே வந்து முகங்காட்டுகைக்காகப் பிரியத் திரிவர்கள்; அதுபோலே தோற்றுதேயும் கிற்பர்கள். "கூராராழிவெண்சங்கேந்தி" என்னும்இவர்க்கு அப்படியேயிறே தோற்றுவது. [எங்குந்தானாய] - தேவாதி ஜாதிபேதங்கள்தோறும் வந்து அவதரிக்கும்; வ்யாப்தியாகவுமாம். [நங்கள் நாதனே] - நம்மை எழுதிக்கொள்ளுகைக்காக.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. இப்படி அவதரிக்குமிடத்தில் ஐச்வரமான சிஹ்நங்களோடே வந்து அவதரிக்கு மென்கிறார்.

[சங்குசக்கரம் அங்கையிற்கொண்டான்] சிலரை வசீகரிக்க நினைத்தவர்கள், கையிலே மருந்துகொண்டு திரியுமாபோலே, அவதாரங்கள்தோறும் திவ்யாயுதங்களோடே வந்து அவதரிக்கும். திவ்யாயுதங்கள் எல்லா அவதாரங்களிலு முண்டோ? என்னில்; எங்குமுண்டு; ராஜாக்கள் கறுப்புடுத்துப் புறப்பட்டால், அந்தரங்கர் அபேக்ஷிததசையிலே முகங்காட்டுகைக்காகப் பிரியத் திரிவர்கள். அதுபோலே தோற்றுதேயும் நிற்பர்கள். "கூராராழி வெண்சங்கேந்தி வாராய்" என்னுமிவர்களுக்கு அப்படியேயிறே தோற்றுவது. [சங்குசக்கரம்] வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்கவேண்டுங் கையிலே திவ்யாயுதங்களைத் தரித்தான். [எங்குந்தானாய] தேவமநுஷ்யாதிபேதங்கள்தோறும் தான் வந்து அவதரித்துளனாய், அன்றிக்கே, ஒருவனைப்பிடிக்க நினைத்து ஊரைவளைவாரைப்போலே, தம்மை விஷயீகரிக்கைக்காக வ்யாபித்தபடியைச் சொல்லுதல். [நங்கள் நாதனே] நம்மை யெழுதிக் கொள்ளுகையே ப்ரயோஜநமாக.

நாதன்ஞாலங்கொள்* பாதனென்னம்மான்*
ஓதம்போல்கிளர்* வேதநீரனே. **(10)**

ஒ.—பத்தாம்பாட்டில், எம்பெருமானுடைய படி வேதைகஸமதிகம்ய மென்கிறார்.

[நாதனென்று தொடங்கி] - ஸர்வேச்வரனுப்வைத்து த்ரைவிக்ரமமானபடியைக்காட்டி என்னை அடிமை கொண்டவன். [ஓதமென்று தொடங்கி] - தன் குணநுஸந்தாநத்தாலே ஓதம்போலே கிளராநின்றுள்ள வேதங்களாலே ப்ரதிபாத்யமான நீர்மையுடையவன்.

இ.—பத்தாம்பாட்டில், இவன்படியைப் பேசும்போது. கடல்கிளர்ந்தாற்போலே வேதமே பேச வேண்டாவோ? என்கிறார்.

[நாதன்] - ஸர்வநியந்தாவானவன். [ஞாலங்கொள் பாதன்] - வஸிஷ்ட்ட சண்டாலவிபாக ரஹித மாக எல்லார்தலைகளிலுந் திருவடிகளைப் பரப்பினவன். [என்அம்மான்] - இம்மேன்மையையும் நீர்மை யையுங் காட்டி என்னை அநந்யார்ஹனுக்கினவன். அதவா, [நாதன்] - முதற்பாட்டில் சொன்ன நித்ய ஸூரிகளுக்கு நிர்வாஹகனுனவன். [ஞாலங்கொள் பாதன்] - இரண்டாம்பாட்டிற்சொன்ன அவதார ஸௌலப்யத்தை யுடையவன். [என் அம்மான்] - நான் நின்ற நிலையிலே நின்று அநுபவிக்கலாம்படி, மூன்றும்பாட்டிற்சொன்ன திருமலையிலே வந்து நின்றவன். [ஓதம்போல் கிளர் வேதநீரனே] - இவனுடைய இப்படிகளைச் சொல்லப்புக்கால் கடல்கிளர்ந்தாற்போலே கிளராநின்றுள்ள வேதத்தாலே ப்ரதிபாதிக்கப் பட்ட நீர்மையையுடையவன். நீர்மையாகிறது - ஆர்ஜவகுணம்.

ஈடு.—பத்தாம்பாட்டு அவன்நீர்மையைப் பேசப்புக்கு நம்மால் பேசப்போமோ! கடல் கிளர்ந்தாற்போலே வேதமே பேசவேண்டாவோ? என்கிறார்.

[நாதன்] ஸர்வநியந்தாவானவன். [ஞாலங்கொள்பாதன்] வஸிஷ்ட்ட சண்டால விபாகரஹிதமாக எல்லார்தலைகளிலும் திருவடிகளைப் பரப்பினவன். [என் அம்மான்] இம் மேன்மையையும் நீர்மையையுங் காட்டி என்னை அநந்யார்ஹமாக்கினவன். அதவா, [நாதன்] முதற்பாட்டில் சொன்ன சேஷித்வத்தை யுடையவன். [ஞாலங்கொள்பாதன்] இரண்டாம் பாட்டில் சொன்ன அவதாரஸௌலப்யத்தை யுடையவன். [என் அம்மான்] எனக்குக் கிட்டலாம்படி திருமலையிலே வந்து என்னை அடிமைகொண்டவன். மூன்றும்பாட்டில் "கண்ணுவான்" என்றத்தை நினைக்கிறார். [ஓதம் இத்யாதி] இவனுடைய இந்நிலைமைகளைப் பேசும்போது, கடல்கிளர்ந்தாற்போலே கிளராநின்றுள்ள வேதத்தாலே ப்ரதிபாதிக்கப் பட்ட நீர்மையையுடையவன். நீர்மையாவது ஆர்ஜவகுணம்.

நீர்புரைவண்ணன்* சீர்சடகோபன்*
நேர்தலாயிரத்து* ஓர்தலிவையே. **(11)**

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி எல்லாத் திருவாய்மொழியிலும் ஆராய்ந்து சொல்லப்பட்ட தென்கிறார்.

[நீர்புரைவண்ணன்சீர்] - உபாயஜ்ஞர்க்கு நினைத்தவிடத்திலே கொடுபோகலான நீரின் தன் மையை யுடையவனுடைய குணத்தை. நேர்தல் - சொல்லுகை. ஓர்தல் - ஒப்பன என்னவுமாம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி எல்லாத் திருவாய்மொழியிலும் ஆராய்ந்து சொல்லப் பட்ட தென்கிறார்.

[நீர்புரைவண்ணன் சீர்] - நீரோடொத்த ஸ்வபாவத்தை யுடையவனுடைய ஆர்ஜவகுணத்தை புரை - ஒப்பு. வண்ணம் - ஸ்வபாவம். நீரை வருந்தி மேட்டிலே யேற்றினாற்போலே, ஸம்ஸாரிகள் விலங்கிப்போனது தனக்கு வழியாம்படி தான் செவ்வியனாகை. [சடகோபன் நேர்தல்] - ஆழ்வார் அருளிச்செய்த. நேர்தல் - சொல்லுதல். [ஆயிரத்துளோர்தலிவையே] - ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு இவை ஓர்ந்து அருளிச்செய்யப்பட்டவை. அதாகிறது - ஸம்ஸாரிகளுடைய அநார்ஜவத்தாலும் இழக்க வேண்டாதபடியான அவனுடைய ஆர்ஜவகுணத்தை அநுஸந்தித்து அருளிச்செய்கை. அன்றிக்கே, சேதநர்க்கு ஓரப்படுமவை. தந்தாம் செவ்வைக்கேட்டால் இழக்கவேண்டாதபடி அவனுடைய ஆர்ஜவ குணத்தைச் சொல்லப்பட்டவை யாகையாலே, சேதநர்க்கு எப்போதும் அநுஸந்தேயமென்கை. ஆயிரத்திலும் சடகோபன் நீர்புரைவண்ணனுடைய சீரை நேர்ந்த இவை யோர்தல்.

௪௫.—நிகமத்தில், இத்திருவாய்மொழி எல்லாத்திருவாய்மொழியிலும் அவனுடைய ஆர்ஜவகுணத்தை ஆராய்ந்து சொன்ன பத்து என்கிறார்.

[நீர்புரைவண்ணன்] ஆக இத்திருவாய்மொழியில் சொல்லிற்றாயிற்று - ஸர்வேச்வரனுடைய ஆர்ஜவகுணமாயிற்று. நீரோடொத்த ஸ்வபாவத்தையுடையவனுடைய ஆர்ஜவ குணத்தையாயிற்று சொல்லிற்று. ஆர்ஜவகுணமாவது - ஸம்ஸாரிகள் விலங்கிப்போனது தனக்கு வழியாம்படி தான் செவ்வையனாகை. [சடகோபன்நேர்தல்] இவைதாம், இவ்வர்த்தத்தைக் கடக்கநின்று ஒருவன் கவிபாடுகையன்றிக்கே, இவ்வார்ஜவகுணத்துக்கு இலக்கான ஆழ்வார் அருளிச்செய்தவை. [ஆயிரத்து ஓர்தலிவையே] ஆயிரத்திலும் வைத்துக் கொண்டு ஓர்ந்து அருளிச்செய்யபட்டவை. அதாவது ஸம்ஸாரிகளுடைய செவ்வைக்கேட்டை யநுஸந்தித்து அத்தால் இழக்கவேண்டாதபடி அவனுடைய ஆர்ஜவகுணத்தை அநுஸந்தித்து அருளிச் செய்யப்பட்டவை. அன்றிக்கே, ஸம்ஸாரிகளுக்கு ஓரப்படுமவை என்னுதல். ஆயிரத்திலும் சடகோபன் நீர்புரைவண்ணனுடைய சீரை நேர்ந்த இவை யோர்தல் என்று அந்வயம்.

முதற்பாட்டில், நித்யவிபூதியிலுள்ளாரோடு செவ்வையனாய்ப் பரிமாறும்படியை அருளிச்செய்தார்; இரண்டாம்பாட்டில், லீலாவிபூதியிலுள்ளாருடன் செவ்வையனாய்ப் பரிமாறும்படியை அருளிச்செய்தார்; மூன்றாம்பாட்டில், இரண்டு விபூதியிலுள்ளார்க்கும் முகங்கொடுக்கைக்காகத் திருமலையிலே நிற்கிறபடியை அருளிச்செய்தார்; நாலாம்பாட்டில், அவ்வார்ஜவகுணம் தம்மளவிலே ப்பலித்தபடியை அருளிச்செய்தார்; அஞ்சாம்பாட்டில், நான் அவன்குணங்களை விரும்புமாபோலே அவனும் என்தேஹத்தை விரும்பாநின்றா னென்றார்; ஆறாம்பாட்டில், என்னுடைய தேஹத்தினளவன்றிக்கே, என்னுடைய ஆத்மாவையும் கைக்கொண்டா னென்றார்; ஏழாம்பாட்டில், அவ்வளவுமல்ல, நித்யவிபூதியில் பண்ணும் ஆதரத்தை என்பக்கலிலே பண்ணினா னென்றார்; எட்டாம்பாட்டில், என்னைச்சுட்டி அவன் பிறந்த பிறவிகளுக்கு முடிவில்லை யென்றார்; ஒன்பதாம்பாட்டில், இப்படிப்பிறந்த பிறவிகள் தோறும் நன்ஐச்வர்யத்தோடே வந்தவதரித்தா னென்றார்; பத்தாம்பாட்டில், அவனுடைய ஆர்ஜவகுணத்தைப் பேசும்போது வேதமே பேசவேண்டுமென்றார்; நிகமத்தில் இத்திருவாய்மொழி ஸம்ஸாரிகளுக்கு எப்போதுமொக்க அநுஸந்திக்கப்படுமென்றார்.

ஆழ்வார் திருவடிகளே சரணம். எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

ஒன்பதாந்திருவாய்மொழி—இவையும்: ப்ரவேசம்.

ஒ.—ஒன்பதாந்திருவாய்மொழியில், தன்னுடைய விபூதிச்ரவணத்தாலே ஸஞ்ஜாத பக்திகனாய், உபம்விதனான தன்னை 'ஸாக்ஷாத்கரித்து அநுபவிக்கவேணும்' என்ற அர்ஜுநனுக்கு அநுக்கூலான திவ்யசக்ஷுஸ்ஸைக் கொடுத்தருளி, அதிவிஸ்மயகரமான வைச்வரூப்யத்தைக் காட்டி அவனை உஜ்ஜீவிப்பித்தருளினாப்போலே ஸர்வேச்வரனாய் ச்ரிய:பதியாய்ப் பரமரஸிகனாய் ஆழ்வார்பக்கிலிலே துவக்குண்டு அவரோடு ஏகரஸனான எம்பெருமான், கீழில் திருவாய்மொழியிற் சொன்ன ஆர்ஜவகுணாநுஸந்தாநத்தாலே பிறந்த பக்த்யாரோக்யத்தையுடைய ஆழ்வாருக்கு, மஹிஷீபரிஜநாதி ரூபத்தாலே பலவகைகளாலும் தனக்கு போக்தாக்களானவர்களுக்கு நிரதிசய போக்யமான தன்னுடைய படிகளைக் காட்டி, அவர்களெல்லாரோடுங் கூட ஸம்ச்லேஷிக்கும் ஸம்ச்லேஷத்தை, அநாதிகாலம் தாம் இழந்த இழவெல்லாந் தீரும்படி ஸர்வேந்த்ரியங்களாலும் ஸர்வகாத்ரங்களாலும் யதாமநோரதம் தமக்கு ஸாத்மிக்கும்படி தம்மோடே ஸம்ச்லேஷிக்க, அத்தை அநுபவித்து ப்ரீதராகிறார்.

இ.—ஒன்பதாந்திருவாய்மொழியில், விபூதிச்ரவணத்தாலே ஸஞ்ஜாதபக்திகனாய் 'தன்னைக்காண வேணும்' என்ற அர்ஜுநனுக்கு திவ்யசக்ஷுஸ்ஸைக்கொடுத்து வைச்வரூப்யத்தைக் காட்டி அநுபவிப்பித் தருளினாப்போலே, ஸர்வேச்வரனாய் ச்ரிய:பதியாய்ப்பரமரஸிகனாய், கீழ்ச்சொன்ன ஆர்ஜவகுணாநுஸந்தாநத் தாலே பெருவிடாய்ப்பட்ட ஆழ்வார்பக்தியிலே துவக்குண்டு அவரோடு ஏகரஸனானவன், மஹிஷீபரிஜநாதி ரூபத்தாலே பலவகைகளாலுந் தனக்கு போக்தாக்களானவர்களுக்கு நிரதிசயபோக்யனானாப் போலே, அநாதிகாலம் இவரிழந்த இழவெல்லாந் தீரும்படியும் ஸாத்மிக்கும்படியுமாக ஸர்வேந்த்ரியங்களாலும் ஸர்வகாத்ரங்களாலும் ஸம்ச்லேஷிக்க, அத்தை அநுபவித்து ப்ரீதராகிறார்.

ஈடு.—கீழில்திருவாய்மொழியிலே, அவனுடைய ஆர்ஜவ குணாநுஸந்தாநம் பண்ணினார்; இப்படி அநுஸந்தித்தார் விஷயத்தில் ஸர்வேச்வரனிருக்கும்படியை அருளிச்செய்கிறார் இதில். ஸர்வேச்வரனாய் ச்ரிய:பதியாய்ப் பரமரஸிகனாயிருக்கிறவன், ஆழ்வார்பக்தியிலே துவக்குண்டு இவரோடே ஏகரஸனாயிருந்தான்; ஆழ்வாராகிறார், கீழில் ஆர்ஜவகுணாநுஸந்தாநத்தாலே அவன்பக்கலிலே பெரியவிடாயை யுடையரானார்; 'இது நமக்கு நல்ல வாய்ப்பாயிருந்தது' என்றுபார்த்து, அர்ஜுநன், விபூதிச்ரவணத்தாலே 'விபூதிமானானவனைக் காணவேணும்' என்று அபேக்ஷிக்க, அதுக்கு உறுப்பாக *திவ்யம் ததாமி தே சக்ஷு:* என்கிறபடியே திவ்ய சக்ஷுஸ்ஸைக்கொடுத்து வைச்வரூப்யத்தைக் காட்டினாப்போலே. இவர்க்கும் தன்னை யநுபவிக்கைக்கீடான விடாயைப் பிறப்பித்துத் தன்னை யநுபவிப்பிக்கிறான், நித்யவிபூதியி லுள்ளாரோடு பரிமாறுமாபோலே பரிமாறக்கோலி. அதாவது பிராட்டிமாரோடு பரிமாறுவது, மஹிஷிகளான முறையாலே; திருவடியோடு பரிமாறுவது, வாஹநமான முறையாலே; திருவநந்தாழ்வானோடு பரிமாறுவது, படுக்கையான முறையாலே; இப்படி அவர்களோடு ஓரோமுறையாலே பரிமாறும் பரிமாற்றமெல்லாம் இவரொருவரோடு பரிமாறுகிறானாய், அது தன்னைக் குளப்படியிலே கடலைமடுத்தாற்போலே யன்றிக்கே, பொறுக்கப்பொறுக்கப் பரிமாற, இவரும் அவனை ஸர்வேந்த்ரியத்தாலும் ஸர்வகாத்ரத்தாலும் யதாமநோரதம் அநுபவித்து, அவ்வநுபவஜநிதப்ரீதியாலே அவனைப்பேசி அநுபவிக்கிறார்.

இவையுமவையுமுவையும் இவருமவருமுவரும்*
யவையும்யவருந்தன்னுள்ளே ஆகியுமாக்கியுங்காக்கும்*
அவையுள்தனிமுதலெம்மான் கண்ணபிரானென்னமுதம்*
சுவையன்திருவின்மணாளன் என்னுடைச்சூழலுளானே. (1)

ஒ.—முதற்பாட்டில், ஜகத்தினுடைய ஸ்ருஷ்ட்யாதி ஹேதுவாய் ஸர்வாந்தராத்மதயா நின்று, அவற்றுக்கு தாரகனும் ச்ரிய:பதியாய்ப் பரமரஸிகனும் எனக்கு போக்யபூதனும் எனக்கு நாதனுமுள்ள க்ருஷ்ணனானவன் என்தனக்குத் தன்னோட்டை ஸம்ச்லேஷ ரஸத்தைத் தந்தருளுகைக்காக என்னுடைய பர்யந்தங்களிலே வந்து வர்த்தியாநின்றானென்று ஹ்ருஷ்டராகிறார்.

[இவையுமவையும்] - சேதநாசேதநங்களை எல்லாவற்றையும். [தன்னுள்ளே யாகியுமாக்கியுங் காக்கும்] - ஸம்ஹரித்துத் தன்னுடைய தயையாலே அவற்றை யுண்டாக்கி அவற்றினுடைய ரக்ஷணத்தையும் பண்ணுமவன்.

இ.—முதற்பாட்டில், ஜகத்காரணபூதனாய் ஸர்வாந்தராத்மாவாய் ச்ரிய:பதியா யிருந்துள்ள க்ருஷ்ணனானவன், என்னுடைய பர்யந்தத்தை விட்டுப்போகமாட்டாதபடியானா னென்கிறார்.

[இவையுமவையுமுவையும் இத்யாதி] - முதல் திருவாய்மொழியில், "நாமவன்" என்கிற பாட்டிற் சொன்ன சேதநாசேதநங்களை மூன்றுவகையாலே சொல்லுகிறார். முதல்திருவாய்மொழிக்குப் பின்பு, தமக்குப் பிறந்த வைசத்யத்தால் பாசுரப்பரப்பறச் சொல்லுகிறார். [இவையுமவையுமுவையும் இத்யாதி] - பார்ச்வஸ்த்தமாயும் தூரஸ்த்தமாயும் அதூரவிப்ரக்ருஷ்டமாயு முள்ள சேதநாசேதநங்களைச் சொல்லுகிறது. [யவையும்யவரும்] - இப்படிகளாலே திரட்டப்பட்ட சேதநாசேதநங்களையும். [தன்னுள்ளேயாகியும்] - "ஸதேவ" என்கிறபடியே 'தான்' என்கிற சொல்லுக்குள்ளேயாம்படி இவற்றை ஸம்ஹரித்தும். [ஆக்கியும்] - தன்னுடைய தயையாலே அவற்றை ஸ்ருஷ்டித்தும். [காக்கும்] - ஸ்ருஷ்டமான அவற்றை ரக்ஷித்தருளும். [அவையுள்தனிமுதல்] - அவற்றின்பக்கலிலே அந்தராத்மாவாய், தானொருவனுமே நிர்வாஹகனாய் நிற்கும். [எம்மான்]-தன்விபூதிவிஷயமாக வுண்டான ஓரத்தைக்காட்டி என்னை அநந்யார்ஹனாக்கினவன். [கண்ண பிரான்] - இப்படிப்பட்டவன் முகந்தோற்றுதபடி மறைய நிற்கை யன்றிக்கே கண்ணுக்குவிஷயமாய் வந்து நிற்கும் உபகாரத்தைச் சொல்லுகிறது. [என்அமுதம்] - தேவர்களதிகாரிகளான அம்ருதத்திற்காட்டில் வ்யாவ்ருத்தி. [சுவையன்] - ரஸிகன். அவ்வம்ருதத்திற்காட்டில் வ்யாவ்ருத்தி, அதுக்கு போக்த்ருத்வ மில்லையே. [திருவின்மணாளன்] - இவருடைய அம்ருதம் ஒருமிதுனமாயிற்று. [என்னுடைச் சூழலுளானே] - பிராட்டி "அகலகில்லேன்" என்னுமவன் என் பர்யந்தத்திலே வர்த்திக்குமது தன்பேறாக இராநின்றான். [திருவின்மணாளன்] - ரஸிகத்வத்துக்குச் சிரமஞ்செய்த விடமென்னுதல், ரஸிகத்வத்துக்கு விஷயம் அவளென்னுதல். [என்னுடைச் சூழலுளானே] - என்னுடைய பர்யந்தத்திலே வர்த்திக்கைக்கு அடி, பிராட்டி யென்னவுமாம். "யஸ்ய ப்ரஸாதே ஸததம் ப்ரஸீதேயு ரிமா:ப்ரஜா:, ஸ ராமோ வாநரேந்த்ரஸ்ய ப்ரஸாத மபிகாங்க்ஷதே" என்கிறபடியே.

ஈடு.—முதற்பாட்டு. ஸ்ருஷ்ட்யாதி ஹேதுபூதனுமாய் ஸர்வாந்தராத்மாவுமான க்ருஷ்ணனானவன் என்னுடைய பர்யந்தத்தை விட்டுப் போகமாட்டாதபடியானா னென்கிறார். அவனுடைய குணாநுபவத்தோடு விபூத்யநுபவத்தோடு வாசியில்லையிறே இவர்க்கு. முதல் திருவாய்மொழியிலே பரக்க அநுபவித்த இத்தை விசதமாயிருக்கையாலே திரள அநு பவிக்கிறார்.

[இவையும் அவையும் இத்யாதி] சித்வர்க்கத்தையும் அசித்வர்க்கத்தையும் திரளச் சொல்லுகிறது. [தன்னுள்ளேயாகியும்] "இவையுமவையும்" என்று இங்ஙனே பிரித்து வ்யவ ஹரிக்க வொண்ணாதபடி *ஸதேவ* என்கிறபடியே தானென்கிற சொல்லுக்குள்ளேயாம்படி தன்மேலே ஏறிட்டுக்கொண்டு தரிக்கும்படியைச் சொல்லுகிறது. [ஆக்கியும்] - *பஹு ஸ்யாம்*

என்கிறபடியே தன்பக்கலிலேநின்றும் பிரித்து, நாமரூப விபாகார்ஹமாம்படி பண்ணியும். [காக்கும்] ஸ்ருஷ்டமான பதார்த்தங்களை ரக்ஷகையாலே தடவி ரக்ஷிக்கும்படி. [அவையுள் தனிமுதல்] ஸ்ருஷ்டமான பதார்த்தங்களிலே, இவை ப்ரவ்ருத்தி நிவ்ருத்த்யாதிகளுக்கு யோக்யமாம்படி அந்தராத்மாவாய் நிற்கும் நிலையைச் சொல்லுகிறது. இது பின்னை, "ஆக்கியும்" என்று ஸ்ருஷ்டியைச்சொன்னபோதே சொல்லிற்றாகாதோ? என்னில்; *ததநுப்ரவிச்ய* என்று இவற்றினுடைய வஸ்துத்வ நாமபாக்த்வங்களுக்காகப் பண்ணும் அநுப்ரவேசத்தைச் சொல்லுகிறது அங்கு; இங்கு இவற்றுக்குச் சொல்லும் வாசகசப்தம் தன்னளவிலே பர்யவஸிக்கும்படியாக நிற்கும் நிலையைச் சொல்லுகிறது. [எம்மான்] தன்விபூதிவிஷயமாகத் தனக்கு உண்டான ஓரத்தைக் காட்டி என்னை அநந்யார்ஹமாக்கினவன். [கண்ணபிரான்] இப்படியிருக்கிறவன்தானே க்ருஷ்ணனென்கையும், அவன்தான் கண்ணுக்குத் தோற்றி நின்று உபகரிக்குமென்கையும். [என்அமுதம்] தேவர்கள் அதிகாரிகளாம் அம்ருதத்தில் வ்யாவ்ருத்தி. [சுவையன்] அவ்வம்ருதத்துக்கு போக்த்ருத்வமில்லையே சுவையன்—பரம ரஸிகன். இந்த ரஸிகத்வத்துக்கு ஊற்றுவாய்சொல்லுகிறது [திருவின்மணாளன்] இவருடைய அம்ருதம் ஒருமிதுனமாயிற்று [என்னுடைச்சூழலுளானே] பெரியபிராட்டியார் "அகலகில்லேன் இறையும்" என்னப் பிறந்தவன், என் பரிஸரத்திலே வர்த்திக்கை தன் பேறாக வர்த்தியாநின்றான். *யஸ்யப்ரஸாதே ஸததம் ப்ரஸீதேயுரிமா: ப்ரஜா:, ஸ ராமோ வாநரேந்த்ரஸ்ய ப்ரஸாதமபிகாங்க்ஷதே* என்கிறபடியே; *லோகநாத: புரா பூத்வா ஸுக்ரீவம் நாதமிச்சதி* தம்மையொழிந்தார்க்கெல்லாம் நாதரானவர் ஸுக்ரீவனை நாதனாக இச்சியாநின்றார். கிடைப்பது கிடையாதொழிவது, தாம் முந்துற முன்னம் இச்சியாநின்றார்.

சூழல்பலபலவல்லான் தொல்லையங்காலத்துலகை*
கேழலொன்றாகியிடந்த கேசவனென்னுடையம்மான்*
வேழமருப்பையொசித்தான் விண்ணவர்க்கெண்ணலரியான்*
ஆழநெடுங்கடல்சேர்ந்தான் அவனென்னருகலிலானே. (2)

ஒ.—இரண்டாம் பாட்டில், ப்ரஹ்மேசாநாதிகளுடைய வாங்மநஸ்ஸுகளுக்கும் அபூமியாயிருந்து வைத்து, அவர்களுக்காக க்ஷீரார்ணவசாயியாய், தன்னுடைய திருவவதாரங்களாலும் குணசேஷ்டிதங்களாலும் வசிகரித்து என்னைத் தனக்கு அடிமையாக்கிக் கொண்டவன், எனக்குத் தன்னோட்டை ஸம்ச்லேஷ ரஸம் தருகைக்காக என்னருகே வந்து நின்றானென்று த்ருப்தராகிறார்.

[சூழலென்று தொடங்கி] - சேதநரையெல்லாம் தன்பக்கலிலே அகப்படுத்திக்கொள்ள வல்லவான பல திருவவதாரங்களைப் பண்ணவல்லனாய் வராஹகல்பத்துக்கு முதலாய்த் தான் திருவவதரிக்கக்கடவனாகையாலே அழகிதான காலத்திலே ப்ரளயார்ணவ மக்நமான பூலோகத்தை அதிவிலக்ஷணமான அழகையுடைய ஸ்ரீ வராஹமாய் அநாயாஸேந எடுத்தருளி ஆர்த்ரமாய் அதிஸுந்தரமான கேசபாசத்தை யுடையவன். [வேழமருப்பை யொசித்தான்] - குவலயாபீடத்தினுடைய கொம்பை அநாயாஸேந பிடுங்கினவன்.

இ.—இரண்டாம்பாட்டில், பர்யந்தத்திலே வந்து நின்ற நிலை ஸாத்மித்தவாறே, என்னருகே வந்து நின்றானென்கிறார்.

[சூழல் பலபல வல்லான்] - சூழலென்று அவதாரம்; அத்தைச் சூழலென்கிறது, சேதநரைத் தப்பாமல் அகப்படுத்திக்கொள்ளுகையாலே. [பலபல] - ஜாதிபேதமும் அவாந்தரபேதமும். [வல்லான்] - அஹேதுகமாகப் பிறக்க வல்லான். [தொல்லை இத்யாதி] - தாம் அகப்பட்டிருப்பதொரு சூழலைச்சொல்லுகிறார். தொல்லை - பழமை. வாராஹகல்பாதியிலே. அம்காலம் - தன் வடிவைக் கண்ணுக்கு இலக்காக்கின காலம். [உலகை] விமுகமான ஜகத்தைப்பற்றக்கிடீர் தன்னை அழியமாறிற்று. [கேழலொன்றாகி] அத்விதீயமான வராஹமாய். பின்பு தானே 'இவ்வடிவு கொள்ளவேணும்' என்றாலும் கொள்ளவொண்ணாதபடி

அத்விதீயமா யிருக்கை. [இடந்த] - ஜாத்யுசிதமான செருக்கு. பூர்வாவஸ்தையும் ச்ரிய பதியேயிறே. [கேசவன்] - தத்காலத்திலே நனைந்த உளைமயிரும் தானுமா யிருந்தபடி. அதிஸௌந்தரமான கேசபாசத்தை யுடையனாயிருக்கை [என்னுடையம்மான்] - லோகமடங்க ரக்ஷணதர்மத்துக்குக் கர்மீபவித்த தித்தனை; இவர் ஒருவருமே அச்செயலுக்குத் தோற்று எழுத்துவாங்கினர். ப்ரளயங்கொண்ட பூமியை எடுத்தாப் போலே ஸம்ஸாரார்ணவங் கொண்ட என்னை எடுத்தவன். [வேழமருப்பை யொசித்தான்] - குவலயாபீடத்தின் கொம்பை அநாயாஸேந முறித்தாப்போலே என் விரோதியைப் போக்கினபடி. இப்படித் தனியே குவலயாபீடத்தின் கையிலே அகப்பட்டிருக்கிறவன்தான் ஆரென்னில்,—[விண்ணவர்க் கெண்ணலரியான்] - ப்ரஹ்மாதிகளுடைய வாங்மநஸ்ஸுகளுக்கு எட்டாதவன். [ஆழநெடுங்கடல் சேர்ந்தான்] - ப்ரஹ்மாதிகள் ஆபந்நிவ்ருத்திக்காக க்ஷீரார்ணவத்திலே கண்வளர்ந்தவன். ஆழம்-உறுத்தாமைக்கு. நெடுமை - "தாளுந் தோளும் முடிகளும்" என்கிறபடியே கண்வளர இடம்போந்திருக்கைக்கு. [அவன் என்னருகலிலானே] - அத்தேவர்களுக்குப்போலே அதூரவிப்ரக்ருஷ்டனன்றிக்கே, என் அருகே வந்து நின்றான்.

௪டு.—இரண்டாம்பாட்டு. என்பரிஸரத்திலே வர்த்தித்தவன், அது ஸாத்மித்தவாறே என் அருகே வந்து நின்றானென்கிறார்.

[சூழல்பலபலவல்லான்] இப்போது சூழலென்கிறது அவதாரத்தை. அவதாரத்தை "சூழல்" என்பானென்? என்னில்; சேதநரை அகப்படுத்திக் கொள்ளுமதாகையாலே. ஜாதி பேதத்தையும், அவாந்தர பேதத்தையும் பற்ற, "பலபல" என்கிறது. [வல்லான்] கர்ம நிபந்தநமாகப் பிறக்குமவனுக்கும் முடியாத பிறவிகளைப் பிறக்கவல்லான். கர்மம் செய்ய வல்லதன்றிறே, அநுக்ரஹம் செய்யவல்லது. அவற்றிலே ஒரு சூழல் சொல்லுகிறார் [தொல்லை] வாராஹகல்பத்தின் ஆதியிலே. [அம்காலத்து] தன்வடிவைக்கண்ணுக்கு இலக்காக்கின காலமிறே, அத்தைப்பற்ற, அங்கால மென்கிறார். [உலகை] ஒரு திருவடி திருவகந்தாழ்வானுக்காகத்தான் இப்படிப் படப்பெற்றதோ! ஸங்கல்பத்துக்கும் பாத்தம் போராத பூமிக்காகக்கிடீர்! [கேழலொன்றாகி] தன்மேன்மையோடு அணைந்திருப்பதொரு வடிவைத் தான் கொள்ளப்பெற்றதோ? [ஒன்றாகி] பின்பு ஸர்வசக்தியான தானே "இவ்வடிவைக் கொள்ள" என்னிலும் ஒண்ணாதபடி அத்விதீயமா யிருக்கிறபடி. பூமி, ப்ரளயத்திலே அகப்பட்டவாறே, நீருக்கும் சேற்றுக்கும் இளையாதவடிவைக்கொண்ட இத்தனை அவன்தான்; அது அவன்கொண்ட வடிவாகையாலே அழிவுக்கிட்ட வடிவுதனக்கே ஆலத்திவழிக்க வேண்டியிருக்கும்; *பன்றியாம்தேசிறே. [இடந்த] அஜ்ஜாதிக்காக உள்ளதொரு குணமாயிற்றுச் செருக்கு, ச்ரிய:பதி அவ்வடிவைக் கொண்டால் சொல்லவேண்டாவிறே. அண்டபித்தியிலே சேர்ந்த பூமியைப் புக்கு எடுத்துக்கொண்டு ஏறினான். [கேசவன்] ப்ரசஸ்த கேசன். அப்போதைத் திருமேனியும் உளைமயிருமாய் நின்ற நிலை. [என்னுடை யம்மான்] ஸம்ஸாரப்ரளயங் கொண்ட என்னை யெடுத்தவன். [வேழமருப்பை யொசித்தான்] குவலயாபீடத்தினுடைய மருப்பை அநாயாஸேந முறித்தவன். அப்படியே என்னுடைய மதக்களிறு ஐந்தினையும் சேரிதிரியாமல் பண்ணினவன். விரோதிநிரஸநசீலனென்றபடி. [விண்ணவர்க் கெண்ணலரியான்] தனியே குவலயாபீடத்தோடே பொருதவன், ப்ரஹ்மருத்ராதிகள் மநோரதத்துக்கும் அவ்வருகானவன். [ஆழநெடுங்கடல் சேர்ந்தான்] அந்த ப்ரஹ்மாதிகள் கூக்குரல் கேட்கத் திருப்பாற் கடலிலே சாய்ந்தருளினவன். ஆழம் — உறுத்தாமைக்கு. நெடுமை—தாளும் தோளும் முடிகளும் சமனிலாத பலபரப்பி வேண்டினபடி கண்வளர்ந்தருளுகைக்கு. [அவனென்னருகலிலானே] அவர்களைப்போலே எனக்கு அதூரவிப்ரக்ருஷ்டமாகவும் நிற்பிதவன்.

அருகலிலாயபெருஞ்சீர் அமரர்களாதிமுதல்வன்*
கருகியநீலநன்மேனிவண்ணன் செந்தாமரைக்கண்ணன்*
பொருசிறைப்புள்ளுவந்தேறும் பூமகளார்தனிக்கேள்வன்*
ஒருகதியின்சுவைதந்திட்டு ஒழிவிலனென்னோடுடனே. (3)

ஒ.—மூன்றும்பாட்டில், மஹிஷிப்ரப்ருதிகள் ஒரோவகைகளாலே தன்னோடு ஸம்ச்லேஷரஸம் பெறுமாபோலே யன்றிக்கே, எல்லாவகைகளாலுமுள்ள ஸம்ச்லேஷரஸத்தை எனக்குத் தந்து என்னை ஒருகாலும் விடாதபடியானு னென்கிறார்.

[அருகலிலென்று தொடங்கி] - ஹேயப்ரத்யநீக கல்யாணமஹாகுணனும் அயர்வறுமமரர்களுடைய ஸ்வரூப ஸ்திதித்யாதிகளுக்கும் போஷணாதிகளுக்கும் காரணமாய், கறுத்து நெய்த்து விலக்ஷணமான திருவுடம்பில் நிறத்தையுடையான். [பொருசிறையென்று தொடங்கி] - தன்னுடைய விஷயீகாரத்தாலே பிறந்த ஹர்ஷ ப்ரகர்ஷத்தாலே பற்றி நின்றுள்ள திருச்சிறகையுடைய பெரிய திருவடிமேலே ப்ரீதனாய்க்கொண்டு ஏறுவதுஞ்செய்து பெரிய பிராட்டியாருக்கு நாயகனென்னும் வைலக்ஷண்யத்தை யுடையான். அருகல் - க்ஷயிக்கை.

இ.—மூன்றும்பாட்டில், மஹிஷீப்ரப்ருதிகளோடு ஒருவகையாலேயிறே பரிமாறுவது. அங்ஙன் ஓரளவில் தலைக்கட்டுகிறிலன் என்பக்கல் என்கிறார்.

[அருகலினாய பெருஞ்சீர்]-ஹேயப்ரத்யநீக கல்யாணமஹாகுணன். அருகல் - க்ஷயம்; அதாகிறது - குற்றம். அதாகிறது - ஹேயம். இல் - இல்லாத அருகல் - கேடு துர்ப்பிக்ஷமென்னவுமாம். ஆய - ஆன. அருகலிலான - நன்றான. பெருஞ்சீர் - நிஸ்ஸீமமாய் நிஸ்ஸங்க்யமாயிருக்கை. [அமரர்க ளாதி முதல்வன்] - அக்குணாநுபவமே யாத்ரையான நித்யஸூரிகளுடைய ஸத்தாதிகளுக்கும் தாரகாதிகளுக்கும் ஹேதுவானவன். [கருகியநீலநன்மேனி வண்ணன்] - அவர்கள் ஸதாதர்சநம்பண்ணுகிற வடிவு இருக்கிறபடி கருகி நெய்த்து நன்றான திருமேனியின் நிறத்தையுடையவன். [செந்தாமரைக் கண்ணன்] - அகவாயில் தண்ணளிக்கு ப்ரகாசகமா யிருக்குந் திருக்கண்களையுடையவன் [பொருசிறைப்புள்] - ஸ்வவிஷயீகாரத்தாற் பிறந்த ஹர்ஷப்ரகர்ஷத்தாலே பதருநின்றுள்ள திருச்சிறகை யுடையவன். [உவந் தேறும்] - ஒருவினைக்காகவன்றியிலே. ஸ்வயம்ப்ரயோஜநமா யிருக்கை. [உவந்தேறும்] - அவனுக்குள்ள ப்ரியமன்று ஈச்வரனுக்கு உள்ளது. [பூமகளார்] - பரிமளம் ஒருவடிவுகொண்டாற் போலே யிருக்கும் படியான போக்யதையையுடையவள். [தனிக்கேள்வன்] - "அத்விதீயநாயகன்" என்னும் வைலக்ஷண்யத்தையுடையவன். [ஒருகதியின் சுவை தந்திட்டு ஒழிவிலன்] - ஒருவகைப்பட்ட ரஸத்தை அநுபவிப்பித்து விடுகிறிலன். நித்யஸூரிகளெல்லார்பக்கலிலும் பண்ணும் ஓரத்தை என்பக்கலிலே பண்ணாநின்றான். [என்னோடுஉடனே] - "நித்யவிபூதி நிர்வஹணமும் இங்கேயிருந்து" என்னும்படி என்னை விடுகிறிலன்.

ஈடு.—மூன்றும்பாட்டு. திருவடி, திருவனந்தாழ்வான், பிராட்டிமார் தொடக்கமானாரோடு ஒரோவகையாலே பரிமாறுமவன், என்னளவில் ஒரோவகையில் பரிமாறி விடமாட்டுகிறிலன் என்கிறார்.

[அருகல்] குறைகை; கேடு. இல் என்பது இல்லாமை. குறைவின்றிக்கே, ஆய ஆன: நன்றான. ஹேயப்ரத்யநீகமுமாய்க் கல்யாணைகதாநமுமான நிரவதிககுணங்களையுடையனுமாய், அக்குணங்களை நித்யஸூரிகளை ஸதாநுபவம்பண்ணுவிக்குமவனுமாய், அவர்கள்ஸத்தாதிகள் தன் அதீநமாம்படி யிருக்கிறவன். [கருகியநீலநன்மேனிவண்ணன்] கறுத்து நெய்த்துப் பேச்சுக்கு அவிஷயமாம்படி விலக்ஷணமான திருமேனியில் நிறத்தையுடையவன். விலக்ஷணமான திருமேனியில் கறுத்து நெய்த்த நிறத்தையுடையவன். அவர்களை ஸதாநுபவம்பண்ணி வைக்கும்போது படி விடும்படி. [செந்தாமரைக்கண்ணன்] அகவாயில் குணங்களுக்கு ப்ரகாசகங்களான திருக்கண்களையுடையவன். [பொருசிறைப்புள்ளுவந்தேறும்] ஸர்வேச்

வரன் பெரியதிருவடியை மேற்கொள்ளுவதாக நினைத்து 'வா' என்றழைத்தால், அவனுடைய அங்கீகாரத்தாலுண்டான ஹர்ஷத்தாலே பெருக்காறுசுழித்தாப்போலே சுழித்துத் தன்னில் தான் பொராநின்றுள்ள சிறகையுடையனாய்க் கொண்டாயிற்று தோற்றுவது. அவனும் 'நாம் இவனைமேற்கொள்ளப்பெற்றோமே' என்று திருவுள்ளத்தில் ப்ரீதியோடேயாயிற்று மேற்கொள்ளுவது. [பூமகளார்தனிக்கேள்வன்] புஷ்பத்தில் பரிமளம் வடிவு கொண்டாற்போலே யிருப்பாளாய் போக்யதைகவேஷையான பெரியபிராட்டியார்க்கு வல்லபனென்றால், இப்படிப்பட்ட ஐச்வர்யத்துக்கு இரண்டாம் விரலுக்கு ஆளில்லாதபடியிருக்கிறவன். [ஒருகதியின் இத்யாதி] அவர்களோடு பரிமாறுமாபோலே ஒருவழியால்வந்த ரஸத்தைத்தந்து விடுகிறிலன். என்னளவில் நித்யஸூரிகளெல்லார்பக்கலிலும் பண்ணும் ஆதரத்தை என் பக்கலிலே பண்ணுகின்றான். [உடனே] "இவன் ஒருவிபூதிமான், அப்பரன் என்று தோற்ற இருக்கிறிலன். நித்யவிபூதியில் கேள்வியும் இங்கேயிருந்தேயாமித்தனை. "தண்தாமம்செய்து" என்று நித்யவிபூதியில் பண்ணும் விருப்பத்தைப் பண்ணினானென்றார் கீழில் திருவாய்மொழியில்; இதில் அவ்விபூதியிலுள்ளாரோடு பரிமாறும் படியை என்னொருவனோடு பரிமாறினானென்கிறார்.

உடனமர்காதல்மகளிர் திருமகள்மண்மகள்ஆயர்
மடமகள்* என்றிவர்மூவர் ஆளுமுலகமும்மூன்றே*
உடனவையொக்கவிழுங்கி ஆலிலைச்சேர்ந்தவனெம்மான்*
கடல்மலிமாயப்பெருமான் கண்ணனென்னொக்கலையானே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், ஸர்வேச்வரனாய் அத்யாச்சர்யபூதனாய் எனக்கு ஸ்வாமியான க்ருஷ்ணன் என்ஒக்கலையிலே வந்திருந்தா னென்று ப்ரீதராகிறார்.

[உடனமர்காதல்மகளிர்] - அவனோடு நிரந்தரஸம்ச்லேஷாதி ரஸத்தையுடைய பிராட்டிமார். [ஆளுமுலகமும் மூன்றே] - கீழும் மேலும் நடுவு முள்ள லோகங்களாதல், த்ரிவித சேதநராதல். [உடனவையொக்க விழுங்கி ஆலிலைச்சேர்ந்தவன்] - தன்விபூதியில் பிரளயாபத் கதமானவற்றைத் தரம்பாராதே ஒருகாலே விழுங்கி ஆலிலையிலே கண்வளர்ந்தருளினவன். [கடல் மலிமாயப் பெருமான்] - கடலில் மிக்கிருந்துள்ள ஆச்சர்யங்களை யுடைய ஸர்வேச்வரன்.

இ.—நாலாம்பாட்டில், ஸர்வாதிகனாய் அகடிதகடநா ஸமர்த்தனாயிருக்கிற க்ருஷ்ணன், என் மருங்கிலே யிருக்கை தன்பேறாக நினைத்திராநின்றா னென்கிறார்.

[உடனமர்காதல்மகளிர்] - உடனே அமரவேண்டும்படியான காதலுடைய பிராட்டிமார். "அகலகில்லேனிறையும்" என்றிறே யிருப்பது. அவர்களாரென்னில், - [திருமகள்] - ப்ரதாநமஹிஷியான "நகச்சிந்நாபராத்யதி" என்னுமவள்; [மண்மகள்] - முதலிலே "குற்றங் காணக்கடவதோ" என்று அவன் பொறைவிளையுந் தரை. [ஆயர்மடமகள்] - தன்வடிவாலே துவக்கி அவன்திருவுள்ளத்திலே குற்றம் படாதபடி யிருக்கும் நப்பின்னைப்பிராட்டி. [என்றிவர்மூவர்] - மேன்மைக்கும் புருஷகாரத்துக்கும் தனித்தனியே அமைந்திருக்கை. [ஆளுமுலகமும்மூன்றே] - த்ரிவித சேதநவர்க்கமாதல், மேலுங் கீழும் நடுவுமாதல். கீழோடே சேர, "படுக்கைப்பற்று" என்பர் பட்டர். [உடனவையொக்கவிழுங்கி] - ஒருகாலே எல்லாவற்றையும் விழுங்கி. உபயவிபூதியையுஞ் சொன்னபோது, ஸம்ஹாரஞ் சேரும்படி என்னென்னில்;- ரக்ஷணத்தில் ஒத்திருக்கையாலே சொல்லிற்று அங்கு; இங்கு - அவையென்று - போக்யத்திலேயாகக் கடவது. [ஆலிலைச்சேர்ந்தவன்] லோகத்தை அடங்க விழுங்கி ஒரு பவனை ஆலந்தளிரின்மேலே கண் வளர்ந்தருளுகிற அகடிதகடநாஸாமர்த்த்யம். [எம்மான்] - அதுக்குமேலே ஒரு அகடிதகடநமிறே இது: "நநமேயம்" என்றிருந்தவனை, அநங்யார்ஹனாக்கினபடி. பத்ராலம்பநம் பண்ணிக்கிடர் என்னை எழுதிக் கொண்டது. [கடல்மலிமாயப்பெருமான்] - கடலில் மிக்கிருந்துள்ள ஆச்சர்யமான குணசேஷ்டிதங்களை யுடைய ஸர்வேச்வரன். க்ஷீராப்தியிலே வந்து குறைவற வர்த்திக்குமவனாய் ஆச்சர்ய சேஷ்டிதங்களை

யுடைய ஸர்வேச்வர னென்றுமாம். [கண்ணன்] - இவ்வாச்சர்யங்களை யெல்லாம் தன்பக்கலிலே காண லாம்படி யிருக்கிற க்ருஷ்ணன். [என் ஒக்கலையானே] - யசோதைப்பிராட்டிஒக்கலையிலே யிருக்குமா போலே என்னொக்கலையிலே யிருந்தான்.

ஈடு.—நாலாம்பாட்டு. மேன்மைஅது, அகடிதகடநாஸாமர்த்த்யம் அது: இப்படி யிருக் கிறவன், யசோதைப்பிராட்டிமருங்கிலே யிருக்குமாபோலே என்மருங்கிலே வந்திருக்கை தனக்குப் பெருப்பேருக நினைத்திராநின்ரு னென்கிறார்.

[உடனமர்காதல்மகளிர்] உடனே அமரவேண்டும்படியான காதலையுடைய பிராட்டி மார். "அகலகில்லேனிறையும்;' என்றுயிற்று இவர்களிருப்பது. அவர்களார்? என்னில்,— [திருமகள்] ஸர்வேச்வரனுக்கு ப்ரதாநமஹிஷியாய்ப் பட்டத்துக்குரியளாய் *ந கச்சிந் நாபராத்த்யதி* என்றிருக்கும் பெரிய பிராட்டியார். [மண்மகள்] முதலிலே 'குற்றம்பார்க்க கடவதோ' என்று அவனுக்குப் பொறைக்கு உவாத்தாய்ப் பொறைவிளையும்படியான ஸ்ரீ பூமிப்பிராட்டி. [ஆயர்மடமகள்] அநுபவஸ்ஹாயம் தானாய். தன்வடிவழகாலே துவக்கித் திருவுள்ளத்தில் குற்றம்படாதபடி யிருக்கும் நப்பின்னைப் பிராட்டி. திருமகள் அவனைச் வர்யம். மண்மகள் அருவினையும் பூமி. ஆயர்மடமகள் அத்தை புஜிக்கிற போக்தாவானவ ளென்றுமாம். [இவர் மூவர்] மேன்மைக்கும் புருஷகாரத்துக்கும் தனித் தனியே அமைந் திருக்கிறஇவர்கள் மூவர். [ஆளுமுலகமும் மூன்றே] அவர்களுடைய படுக்கைப்பற்று இருக்கிறபடி. த்ரிவிதசேதநரையுஞ் சொல்லுதல்; கீழும், மேலும், நடுவுமான லோகங்களைச் சொல்லுதல். [உடனவையொக்கவிழுங்கி] அவற்றிலொன்றும் பிரிகதிர்ப் படாதபடி ஏககாலத்திலே தன் திருவயிற்றிலே வைத்து. விபூதித்வயமும் ரக்ஷ்யவர்க்கமென்றால், திரு வயிற்றிலே வைக்குமது ப்ரளயத்துக்குக் கர்ப்பவிக்கும் எல்லையிலே யாகிறது. [ஆலிலைச் சேர்ந்தவன்] ஸகலலோகங்களையும் வயிற்றிலே வைத்து ஒருபவளுன ஆலந்தளிரிலே சாய்ந் தருளினவன். அகடிதகடநாஸாமர்த்த்யத்தையுடையவன். [எம்மான்] அச்செயலாலே என்னை எழுதிக்கொண்டவன். பத்ராலம்பநம் பண்ணிக்கிடீர் அடிமைகொண்டது. கீழில் அகடிதகடநாஸாமர்த்த்யத்துக்கு மேலே ஒரு அகடிதகடநாஸாமர்த்த்யமாயிற்று இது. *ந நமேயம்* என்று இருந்த என்னை அநந்யார்ஹமாக்கினபடி. [கடல் இத்யாதி] திருப்பாற் கடலிலே குறைவற வந்து வர்த்திப்பானாய், ஆச்சர்யமான சேஷ்டிதங்களையுடைய ஸர்வேச் வரன். அன்றிக்கே, கடலிற்காட்டில் மிக்க ஆச்சர்யத்தையுடைய ஸர்வேச்வர னென்றுமாம். [கண்ணன்] அந்த ஆச்சர்யங்களெல்லாம் தன்பக்கலிலே காணலாம்படி யிருக்கிற க்ருஷ்ணன். [என் ஒக்கலையானே] யசோதைப்பிராட்டிமருங்கிலே யிருக்குமாபோலே என்மருங்கிலே இராநின்றான்.

ஒக்கலைவைத்துமுலைப்பாலுண்ணென்று தந்திடவாங்கி*
செக்கஞ்செகவன்று அவள்பாலுயிர்செகவுண்டபெருமான்*
நக்கபிரானோடு அயனுமிந்திரனும்முதலாக*
ஒக்கவுந்தோற்றியவிசன் மாயனென்நெஞ்சினுளானே. (5)

ஓ.—அஞ்சாம்பாட்டில், ப்ரஹ்மேசாநாதிகளுக்குங்கூட ஜநகனான ஈச்வரன் என்னுடைய ப்ரதிபந்தகங்களெல்லாம் போக்கி என்னெஞ்சிலே வந்து புகுந்தா னென்கிறார்.

தந்திட - கொடுக்க [செக்கஞ்செகவன்றென்று தொடங்கி] - தாய்முகம்பார்த்து முலையுண்ணுமா போலே திருப்பவளத்தில் சிவப்பு மிகவுந்தோற்றும்படி பூதனைமுகத்தைப் பார்த்து அத்தசையிலே அவள்பக்கல்நின்றும் ப்ராணன் போம்படியாக முலையையுண்ட இவ்வுபகாரத்தாலே எல்லாரையும் அடிமைகொண்டவன். [செக்கஞ்செக] - அவள் கருதின தீங்கு வெல்லும்படி யென்றுமாம். தோற்றிய - தோற்றுவித்த. மாயன் - இப்படியாலே மஹாச்சர்யபூதன்.

இ.—அஞ்சாம்பாட்டில், ப்ரஹ்மாதிகளுக்கு ஜநகனானவன், என் ப்ரதிபந்தகங்களைப் போக்கி என்னெஞ்சிலே வந்து புகுந்தா னென்கிறார்.

[ஒக்கலைவைத்து] - தாய்மார் பிள்ளைகளை ஒசழக்காக எடுக்குமாபோலே பூதனை ப்ராப்திதோற்ற எடுத்து ஒக்கலையிலே வைத்து முலைப்பாலுண்ணென்று பரிவுதோற்ற உறுக்கிக்கொடுத்தபடி. [தந்திட] - கொடுக்க. அன்றிக்கே, அங்நஞ்சு, தமக்குத் தந்ததாக நினைத்திருக்கும் புத்தியாலே யாகவுமாம்; "அஸ்மாந் ஹந்தும்" என்னுமாபோலே. [வாங்கி] - அவளுடைய ஆதரம் தனக்கு உண்டாயிருக்கை. [செக்கஞ்செக] - செக்கமென்று - மரணமாய், அவள் நினைத்த மரணம் அவளோடே போம்படி யென்னுதல்: செக்கமென்று - சிவப்பாய், அத்தாலே சீற்றத்தை நினைத்ததாய், அவள்சீற்றம் அவளோடே முடியும்படியென்னுதல்: "இலங்கை செந்தீயுண்ணச்சிவந்து" என்று சிவப்பைச் சீற்றமாக ப்ரயோகித்த திறே; செக்கஞ்செக - மிகவும் சிவக்கும்படி; அதாகிறது - தாய்முகம்பார்த்து முலையுண்ணுமாபோலே, திருப்பவளம் மிகச்சிவக்கும்படி பூதனையைப்பார்த்து ஸ்மிதம்பண்ணி, [அன்று அவள்பால் உயிர்செக வுண்ட] - அவள்பக்கல் ப்ராணன் முடியும்படிஉண்டான். [பெருமான்]-"ஸ்தந்யந்த் விஷஸம்மிச்ரம் ரஸ்யமாஸீஜ்ஜகத்குரோ:" என்கிறபடியே அவளைமுடித்து ஜகத்துக்கு ஒரு சேஷியைத் தந்தான். பெருமானென்று - ஸர்வாதிகத்வத்தைச் சொல்லுகிறது. நக்கன் - நக்நன். பிரானென்று - ஸ்வகோஷ்டீ ப்ரஸித்தி. [அயனும்] - அஜனும். அவனுக்கு ஜநகனான ப்ரஹ்மாவும்: [இந்திரனும்] - க்ஷேத்ரஜ்ஞனாக ஸம்ப்ரதிபந்நனானவனை ஒக்கச்சொல்லிற்று - ப்ரஹ்மருத்ராதிகளும் அவனுபாதி என்கைக்காக' [ஒக்கவுந்தோற்றியவீசன்] - ஒருகாலே ஸ்ருஷ்டித்த ஸர்வேச்வரன். தோற்றியவென்றது - "பஹு ஸ்யாம்". என்றாப்போலே. [மாயன்] - ஸ்ருஷ்டமான ஜகத்தில் அநுப்ரவேசம் முதலான ஆச்சர்யத்தையுடையவன். [என்னெஞ்சினுளானே] - என்சரீரத்தில் ஏகதேசத்திலே வர்த்தியாநின்றான். நெஞ்சென்று - ஹ்ருதயமாதல், மார்வாதல்.

ஈடு.—*அஞ்சாம் பாட்டு. விரோதி நிரஸநசீலனாய் ஸர்வ ஸ்ரஷ்டாவானவன் வந்து என்னுடைய ஹ்ருதயஸ்த்தனானா னென்கிறார்.*

*[ஒக்கலைவைத்து] பரிவுடைய யசோதைப் பிராட்டியைப்போலே தூக்கியெடுத்து மருங்கிலே வைத்து. [முலைப்பாலுண்ணென்று] முலைக்கண்நெறித்து க்லேசப்படாநின்றேன், உண் என்று உறுக்கிக்கொடுக்க. [தந்திட] *அஸ்மாந் ஹந்தும்* என்னுமாபோலே, அந்நஞ்சு தமக்குக் கொடுத்தாற்போலே யிருக்கையாலே "தந்திட" என்கிறாராதல், தருகை - கொடுக்கையாய் வழங்குகையாலே, "தந்திட" என்கிறாராதல் [வாங்கி] அவள் முலைகொடாவிடில் தரியாதாளாய்க் கொடுத்தாப்போலே, இவனும் முலையுண்ணாவிடில் தரியாதானாய் உண்டபடி. [செக்கஞ்செக] செக்கம் என்று மரணமாய், அவள் கோலின மரணம் அவள்தன்னோடே போம்படியென்னுதல். அன்றிக்கே, செக்கம் என்று சிவப்பாய், அத்தால் நினைக்கிறது சீற்றத்தையாய், அவள் சீறினசீற்றம் அவள்தன்பக்கலிலே ப்பலிக்கும்படி யென்னுதல். "இலங்கை செந்தீயுண்ணச் சிவந்து" என்று சிவப்பைச் சீற்றமாக ப்ரயோகித்ததிறே. அன்றியே, செக்கஞ்செக என்றது செக்கச் சிவக்கவென்றாய், முலைகொடுத்த உபகாரஸ்ம்ருதியாலே திருவதரத்தில் பழுப்புத்தோற்ற ஸ்மிதம்பண்ணினபடியாதல். [அன்று] ஜகதுபஸம்ஹாரம் பிறக்கப் புக்கவன்று. தனியிடத்திலே இவள் கலியவந்த அன்று. [அவள்பாலுயிர்] அவள்பாலென்றது அவளிடத்தென்றபடி. அவளுடைய ஹேய சரீரத்தைப் பற்றிநிற்கிற உயிர். [செக] முடியும்படி. அன்றிக்கே, அவள்பாலையும் உயிரையும் முடியும்படி என்றுமாம். "முலையூடுயிரைவற்ற வாங்கியுண்டவாயான்" என்னக்கடவதிறே. முலைபாலினைக்கிறது பாலையிறே அங்கு. முலையுண்டான் என்றால் முலைப்பாலுண்டா னென்றபடியிறே. [உண்டபெருமான்] அவள்முலையுண்டு அவளை முடித்து, ஜகத்துக்கு ஒரு சேஷியைத் தந்தவன்; *ஸ்தந்யந்த் விஷஸம்மிச்ரம் ரஸ்யமாஸீஜ்ஜகத்குரோ:* என்கிறபடியே [நக்கபிரான் இத்யாதி] ஸ்வகோஷ்டிக்கு உபகாரகனாக ப்ரஸித்தனா யிருக்கிற ருத்ரனோடேகூட, அவனுக்கும் ஜநகனான சதுர்முகனும், அவனுக்கும் இவ்வருகான இந்த்ரனும் தொடக்கமாக இவ்வருகு உள்ளாரெல்லாரையும், அத்திக்காயில் அறுமான்போலே ஒன்றாக அரும்பிக்கும்*

படி பண்ணின ஸர்வேச்வரன். [மாயன்] ஸ்ருஷ்டமான ஜகத்திலே அநுப்ரவேசம் முதலான ஆச்சர்யத்தையுடையவன்; *(ஸர்வசரீரியாயிருக்கிற ஸர்வேச்வரன்.) [என்னெஞ்சினுளானே] என்சரீரத்தில் ஏகதேசத்தைப்பற்றி நின்றான்.

> மாயனென்னெஞ்சினுள்ளான் மற்றும்யவர்க்குமதுவே*
> காயமுஞ்சீவனும்தானே காலுமெரியுமவனே*
> சேயனணியன்யவர்க்கும் சிந்தைக்குங்கோசரமல்லன்*
> தூயன்துயக்கன்மயக்கன் என்னுடைத்தோளிணையானே. (6)

ஒ.—ஆறும்பாட்டில், ஸர்வாந்தராத்மாவாய் அநாச்ரிதர்க்கு துர்லபனாய் ஆச்ரிதர்க்கு ஸுலபனான எம்பெருமான் வந்து தோளிணையானனது என் ஒருவன்பக்கலிலே பண்ணும் ப்ரஸாதாதிசயமென்கிறார்.

[மற்றும் யவர்க்குமதுவே] - நான்பெற்றபேறு மற்று மாரேனும் பெற்றா ருண்டோ? [காயமென்று தொடங்கி] - தேவாதிசரீரபேதங்களுக்கும் ததந்தர்வர்த்திகளான ஆத்மாக்களுக்கும் ஐகதாரம்பகமான ப்ருதிவ்யாதி பூதங்களுக்கும் அந்தராத்மா தான்; காலுமெரியுமென்று - பூதபஞ்சகத்துக்கும் உபலக்ஷணம். [சேயனென்று தொடங்கி] - அநாச்ரிதர்க்கு அத்யந்ததுர்லபனாய் ஆச்ரிதர்க்கு அத்யந்தஸுலபனாய் எத்தனையேனும் அளவுடையாரேயாகிலும் அநாச்ரிதர்க்கு மநோரதத்துக்கும் விஷயமன்றிக்கே ஆச்ரிதர்க்கு அறிய எளியனாய் அநாச்ரிதர்க்குத் தன்னை அறியவொண்ணாதபடி ஸம்சயவிபர்யயஜ்ஞாநங்களைப் பிறப்பித்து மதிகெடுக்குமவன்.

இ.—ஆறும்பாட்டில், ஸர்வாந்தராத்மாவாய் அநாச்ரிதர்க்கு அரியனாய் ஆச்ரிதர்க்கு எளியனானவன் என்தோளைப்பற்றி விடுகிறிலனென்கிறார்.

[மாயனென்னெஞ்சினுள்ளான்] - இது என்ன பெருப்பேறு? ஆச்சர்யபூதனானவன் என்னெஞ்சைப் பற்றி வர்த்திக்கையாகிறஇது என்ன சேராச்சேர்த்தி? [மற்றும் யவர்க்கு மதுவே] - புறம்பு ஆரேனும் இதுபெற்றா ருண்டோ? நீர்பெற்ற பேறு என்? என்னில்,—[காயமும் சீவனும்தானே] - தேவாதி சரீர பேதமும் ததந்தர்வர்த்தியான ஆத்மாவும் அவனிட்டவழக்காயிற்று. [காலுமெரியுமவனே] - சரீரத்துக்கு அடியான பூதபஞ்சகமும் அவனிட்ட வழக்கு. காலுமெரியுமென்று - மற்றமூன்றுக்கும் உபலக்ஷணம். [சேயனணியன்] - அநாச்ரிதர்க்கு துர்லபன் ஆச்ரிதர்க்கு ஸுலபன். [யவர்க்குஞ் சிந்தைக்குங் கோசர மல்லன்] - அநாச்ரிதர்க்கு தூரஸ்த்தனாமதுக்கு எல்லை சொல்லுகிறது. அதிகஜ்ஞாநரேயாகிலும் மநோரதத்துக்கும் அவிஷயமாயிருக்கும். [தூயன்] - யசோதாதிகளுக்கும் தன்னைப் பரிச்சேதிக்கலாம்படி எளியனாயிருக்கும். [துயக்கன்மயக்கன்] - துயக்கு - மனந்திரிவு. மயக்கு - கூடலும், கலத்தலும். அநாச்ரிதர்க்கு அகோசரனுமளவன்றிக்கே, ஸம்சய விபர்யயஜ்ஞாநத்துக்கு ஹேதுவாயிருக்கும். [என்னுடைத்தோளிணையானே] - ஸம்சயவிபர்யய ரஹிதமாக என்தோளிலே வர்த்தியாநின்றான், பெரிய திருவடிதோளிலிருப்பை மாறி என் தோளிலே இராநின்றான்.

ஈடு.—ஆறும்பாட்டு. ஸர்வாந்தராத்மாவானவன் என்தோளைப்பற்றி வர்த்தியாநின்றான் என்கிறார்.

[மாயனென்னெஞ்சினுள்ளான்] இது என்னபெருப்பேறு? ஆச்சர்யமான குணசேஷ்டிதங்களையுடையவன், என்னுடைய ஹ்ருதயஸ்த்தனானான். இது என்ன சேராச்சேர்த்தி? [மற்றும்யவர்க்குமதுவே] மற்றுமாரேனும் நான்பெற்றபேறு பெற்றாருண்டோ? நீர் பெற்ற பேறுதான் என்னென்னில், [காயம் இத்யாதி] இது என்கிறார் மேல். [காயமும் சீவனுந்தானே] தேவமநுஷ்யாதி சரீரங்களும் அவ்வவசரீரஸ்த்தமான ஆத்மாக்களும் அவனிட்ட வழக்கு. [காலுமெரியும் அவனே] காற்றும், தேஜஸ்தத்த்வமும். இரண்டும் அஞ்சுக்கும் உபலக்ஷண

மாய், பூதபஞ்சகமும் அவனிட்ட வழக்கு. [சேயன்] ஸ்வயத்நத்தாலே காண்பார்க்கு தூரஸ்த்தனாயிருக்கும். [அணியன்] அவனாலே அவனைக் காண்பார்க்குக் கைப்புகுந் தணியனாயிருக்கும், [யவர்க்கும் சிந்தைக்கும் கோசரமல்லன்] தூரஸ்த்தனும்படிக்கு எல்லை சொல்லுகிறது. எத்தனையேனும் அதிசயிதஜ்ஞாநரா யிருக்குமவர்களுக்கும் கண்ணுக்கு விஷயமாகாமையேயன்றிக்கே, மநோரதத்துக்கும் அவிஷயமாயிருக்கும். [தூயன்] இப்படியிருக்கிறவன் யசோதாதிகளுக்கு *யதி சக்நோஷி* என்னலாம்படியிருக்கும். [துயக்கன் மயக்கன்] உகவாதார்க்கு ஸம்சய விபர்யயங்களைப் பிறப்பிக்கும். [துயக்கன் மயக்கன்] துயக்கு மனத்திரிவு, "அருவினையேன்" என்று அகன்ற என்மாநஸ்ஸைத் திரியவிட்டு; "உன்தேனே மலருந்திருப்பாதஞ்சேருமாறு" என்னும்படி திரியவிட்டு, என்னுடனே கலந்தவன். மயக்கம் கலத்தலும், கூடலும். [என்னுடைத்தோளிணையானே] என்னளவில் அங்ஙனன்றிக்கே, திருவடி திருத்தோளிலே யிருக்குமாபோலே, இராநின்றான்.

தோளிணைமேலும்நன்மார்பின்மேலும் சுடர்முடிமேலும்*
தாளிணைமேலும்புனைந்த தண்ணந்துழாயுடையம்மான்*
கேளிணையொன்றுமிலாதான் கிளருஞ்சுடரொளிமூர்த்தி*
நாளணைந்தொன்றுமகலான் என்னுடை நாவினுளானே. (7)

ஒ.—ஏழாம்பாட்டில், என்னோடு ஸம்ச்லேஷிக்கைக்காகத் திருத்துழாயாலே திருமேனியெல்லாம் அலங்கரித்துக்கொண்டு, எம்பெருமான் என்னுடைய நாவிலே வந்து புகுந்தானென்கிறார். எனக்கு ஸ்துதிவிஷயமானா னென்றுமாம்.

[கேளிணையொன்று மிலாதான்] - தன்னுடைய ஸ்வரூப குணாதிகளுக்குத் திரளவும் தனியும் ஒப்பில்லாதான். பூர்ணமான ஒப்பில்லாதா னென்றுமாம். [கிளருஞ்சுடரொளிமூர்த்தி] - கிளரா நின்றுள்ள ஔஜ்ஜ்வல்யத்தையுடைய ஒளியேவடிவாக வுடையவன். [நாளணைந்தொன்று மகலான்] - நாள்தோறும் அணைந்து ஒருகாலும் அகலுகிறிலன்.

இ.—ஏழாம்பாட்டில், நான் உகந்தபடியே அலங்கரித்துக்கொண்டு, என்னுவிலே வந்து புகுந்தான் என்கிறார்.

[தோளிணை இத்யாதி] - அபிமதவிஷயத்தை யணைவார் புழுகு நெய் ஒட்டிக்கொண்டு போமாபோலே, தாம் உகந்தபடியே திருத்துழாயாலே திருமேனியையெல்லாம் அலங்கரித்து வந்தபடி. [தோளிணை மேலும்] - "ஸுகாடம் பரிஷஸ்வஜே" என்கிறபடியே அணைக்குந்தோள்களிலும். [நன்மார்பின்மேலும்] - அவன் அப்படி அணைகைக்குப் பற்றாசான பிராட்டி யிருக்கிற திருமார்விலும். [சுடர்முடிமேலும்] - இவ்வணைக்கைதான் வகுத்தவிஷயமாகிலிறே புருஷார்த்தமாவது; அந்தசேஷித்வப்ரகாசகமான ஸர்வாதிகத்வ லக்ஷணமான திருவபிஷேகத்திலும், [தாளிணைமேலும்] - அந்தசேஷித்வத்துக்குத் தோற்றுவிழும் திருவடிகளிலும். [புனைந்ததண்ணந்துழாயுடையம்மான்] - சாத்தின திருத்துழாயையுடைய ஸர்வேச்வரன். இது தான் ஸர்வாதிகத்வ லக்ஷணமிறே. [கேளிணையொன்றுமிலாதான்] - "கேழென்று - அழகும், நிறமும், ஒளியும். கேளென்றத்தை - கேழாக்கி, அத்தாலும் - ஒப்பாய், இணையென்றும் - ஒப்பைச் சொல்லுகிறதாய், திரளவும் ஒப்பில்லை; ஒருவகையாலும் ஒப்பைச் சொல்லப்போகாது" என்பர்கள். "கேளென்று - உறவாய், இணையென்று - சேர்த்தியாய், ஸர்வதா ஸாத்ருச்யஞ் சொல்லலாவதொன்றில்லை" என்பர் பட்டர். [கிளருஞ்சுடரொளிமூர்த்தி] - சுடரென்றும், ஒளியென்றும் - பர்யாயம். மிக்கவொளி யென்றபடி. ஒப்பனைமிகையான வடிவையுடையவன். [நாளணைந்தொன்றுமகலான்] - நாள்தோறும் அணைந்து ஒருகாலும் அகலுகிறிலன். [என்னுடை நாவினுளானே] - எனக்கு ஸ்துதிவிஷய மென்னுதல், என்னுடைய நாக்கினுள்ளே நின்றா னென்னுதல்.

ஈடு.—ஏழாம்பாட்டு. நான் உகந்தபடியே அலங்கரித்துக்கொண்டு வந்து என்னாவிலே கலந்தானென்கிறார்.

[தோளிணையித்யாதி] அபிமதவிஷயம் இருந்த இடத்துக்குப் போவார், அவர்கள் உகந்தபடியே பூசிப்புலர்த்தி யொப்பித்துக்கொண்டு போமாபோலே- ஆழ்வாருகந்தபடியே திருத்துழாய் மாலையாலே அலங்க்ருதனாய் வந்தானாயிற்று. இவர் உகப்பதும் அதுவே, அவன் கொடுப்பதும் அதுவேயிறே. புள்ளூர்திகள்ளூருந் துழாய்க்கொயல்வாய் மலர்மேல் மனத்தையுடையராயிருப்பர்; திருத்தாயார் சொல்லும்போதும் "வண்டுதிவளும் தண்ணந் துழாய் கொடீர்" என்னும்; இவர்தாம் விரைமட்டலர் தண்டுழாயென்னும், கண்ணன்கழல் துழாய் பொன்செய்பூண் மென்முலைக்கென்று மெலியும்; அவனும் "தன்மன்னுநீள்கழல் மேல் தண்துழாய் நமக்கன்றி நல்கான்;' என்று இவர்க்கல்லது கொடான். [தோளிணை மேலும்] *ஸூகாடம் பரிஷஸ்வஜே* என்கிறபடியே அணைக்கக்கணிசிக்கிற திருத்தோள்களிலும். [நன் மார்பின் மேலும்] அணைப்பிக்குமவ ளிருக்கிற திருமார்பிலும். [சுடர்முடி மேலும்] அணைத்துக்கொண்டு நின்று மேல்நோக்கிப்பார்த்தவாறே தன்னுடைய சேஷித்வ ப்ரகாசகமா யிருக்கிற திருவபிஷேகத்திலும். [தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாயுடை யம்மான்] தன்னுடைய சேஷித்வத்தை ஸ்த்திதிப்பிக்கிற திருவடிகளிலும் சாத்தின திருத்துழாயையுடைய ஸர்வேச்வரன். தோளிணையித்யாதிகளுக்கு பட்டர் 'வீரராயிருப்பார் முற்பட ஆயுதத்துக்கு இடுவர்கள், அப்படியே திருத்தோள்களுக்கிட்டான்; ப்ரணயிகளாயிருப்பர் அநந்தரம் அபிமதவிஷயத்துக்கு இடுவர்கள். அப்படியே பெரியபிராட்டியார் எழுந்தருளியிருக்கிற கோயில் கட்டணத்துக்குக் கொடுத்தான்; ஆயுதத்துக்கும் அபிமத விஷயத்துக்கும் இட்டால், பின்னைத் தாந்தாம் விநியோகங்கொள்ளுமித்தனையிறே; ஆகையாலே தான் சூடினன்; சேஷம் பின்னை யடியாரிறே கைக்கொள்ளுவார், ஆகையாலே திருவடிகளுக்குச் சாத்தினன்; ஆபத்துக்கு உதவுவார் அடியாரிறே, தளர்ந்தும் முறிந்தும் சகடவசுரருடல் வேறுப்பிளந்து வீயப்பொருவாரடியாரிறே; நம்முடைய ஆபத்துக்களுக்குத் திருவடிகளே துணையானப்போலே காணும் அவனுடைய ஆபத்துக்களுக்கும் திருவடிகளே துணையானபடி' என்று அருளிச்செய்வர். [கேளிணையொன்றுமிலாதான்] கேள் என்ற இத்தை கேழ்என்றாக்கி, அதாவது ஒப்பாய், இணையென்றும் ஒப்பாய், இரளவும் :தனிதனியும் ஒப்பில்லாதானென்னுதல்; அன்றிக்கே, கேள் என்று உறவாய், சேர்ந்தவொப்பில்லாதான் என்னுதல். [கிளரும்] ஆற்றுப்பெருக்குப் போலே மேல்மேலெனக்கிளராநிற்பதாய் நிரவதிகதேஜோரூபமான திவ்யமங்களவிக்ரஹத்தையுடையவன். "சுடர்" என்றும், "ஒளி" என்றும் பர்யாயம். இரண்டாலும் மிக்கவொளியென்றபடி. ஒளி பேரழகு. [மூர்த்தி] கீழ்ச்சொன்ன ஒப்பனை மிகையாம்படியான வடிவையுடையவன். [நாவணைந்து] நாள்தோறும் வந்து கிட்டுமத்தனையல்லது கால்வாங்கமாட்டு கிறிலன். [என்னுடையித்யாதி] என்னுடைய ஸ்துதிவிஷயமானனென்னுதல்; அன்றிக்கே, *வாசி திஷ்டந்* என்கிறபடியே, என்னுடைய வாகிந்த்ரியத்துக்குவிஷயமானனென்னுதல்.

நாவினுள் நின்றுமலரும் ஞானக்கலைகளுக்கெல்லாம்*
ஆவியுமாக்கையுந்தானே அழிப்போடளிப்பவன் தானே*
பூவியல்நால்தடந்தோளன் பொருபடையாழிசங்கேந்தும்*
காவிநன்மேனிக்கமலக்கண்ணன் என்கண்ணினுளானே. (8)

ஒ.—எட்டாம்பாட்டில், ஸர்வவித்யாஸ்த்தலங்களுக்கும் சப்தார்த்த ஸம்பந்தநியமங்களையும், அவற்றினுடைய ஸ்த்திதி ஸம்ஹாரங்களையும் பண்ணும் ஸ்வபாவனான எம்பெருமான், என் கண்ணுள்ளே வந்து புகுந்தானென்கிறார்; என்கண்ணுக்கு விஷயமானனென்றுமாம்.

[நாவினுள்நின்று மலரும் ஞானக்கலைகளுக்கெல்லாம்] - ஜிஹ்வாக்ரத்திலே விகஸியா நின்றுள்ள வித்யாஸ்த்தலங்களுக்கெல்லாம், ஆவியாகிறது - அர்த்தம். ஆக்கையாகிறது - சப்தம்.

அழிப்போடளிப்பாவது - வித்யைகள் கெடாமே காக்கையும், லேககதோஷாதிகளாலே ஸ்வரூபம் அந்யதாபவித்தால் அத்தை ஸம்ஹரிக்கையும். [பூவியல் நாற்றடந்தோளன்] - திருமாலைகளாலே அலங்க்ருதமான நாலு திருத்தோள்களையுமுடையான். [பொருபடையென்று தொடங்கி] - யுத்த ஸாதநமான திருவாழியையும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும் ஏந்தும் ஸ்வபாவனுய். ஒருசாயல் நெய்த லோடொத்து அதிற்காட்டில் அத்யந்தவிலக்ஷணமான திருமேனியும் தாமரைப்பூப்போலே யிருந்துள்ள திருக்கண்களையு முடையான்.

இ.—எட்டாம்பாட்டில், அது ஸாத்மித்தவாறே என்கண்ணுக்கு விஷயமானு னென்கிறுர்.
[நாவினுள் நின்று இத்யாதி] ஜிஹ்வாக்ரத்தில் விகஸியாநின்றுள்ள ஜ்ஞாநஸாதநமான வித்யா
ஸ்த்தலங்களுக்கெல்லாம். [ஆவியுமாக்கையுந்தானே] - ஆவியென்று - ஆத்மா. ஆக்கையென்று - சரீரம்.
அர்த்தத்தையும் சப்தத்தையுஞ் சொல்லுகிறது. ஆக, சப்தார்த்த ஸம்பந்த நியமம் அவனிட்டவழக்கென்
றது. [அழிப்போடளிப்பவன் தானே] - வித்யைகளை ப்ரவர்த்திப்பித்து அழியாமே காக்கை - அளிக்கை
யாகிறது. அழிக்கையாகிறது லேககதோஷாதிகளாலே ஸ்வரூபம் அந்யதாபவித்தால், அவற்றை
ஸம்ஹரிக்கை. [பூவியல்நால்தடந்தோளன்] - பூவை இயல்வாக வுடைத்தாய் நாலாய்ச் சுற்றுடைத்தான
தோளையுடையவன். [பூவியல்] - பூவாலே அலங்க்ருதமான தோளென்னுதல், பூவை யொழியச்செல்லாத
ஸௌகுமார்யத்தைச் சொல்லுதல். [பொருபடை யாழிசங்கேந்தும்] - பணைத்த கல்பகதரு பரப்புமாறப்பூத்
தாப்போலேயாயிற்று திவ்யாயுதங்களிருப்பது. பொருபடை - யுத்தஸாதநங்களானவை. [காவிநன்மேனி] -
காவி - நெய்தல். காவி உபமாநமாகப் போராதபடியான நன்ருன திருமேனி. [கமலக்கண்ணன்] - புண்டரீ
காக்ஷனுன ஸர்வேச்வரன். [என்கண்ணினுளானே] - என்கண்ணுக்குள்ளே புகுந்தா னென்னுதல், கண்
ணுக்கு விஷயமானு னென்னுதல்.

ஈடு.—எட்டாம்பாட்டு. ஸகலவித்யாவேத்யனுன ஸர்வேச்வரன், ப்ரமாணங்களாலே காணக்கடவ வடிவை என்கண்ணுக்கு விஷயமாக்கினு னென்கிறுர்.

[நாவினுள் இத்யாதி] ஜிஹ்வாக்ரத்திலே விகஸியாநின்றுள்ள ஜ்ஞாநஸாதநமான வித்யா விசேஷங்களுக் கெல்லாம். [ஆவியுமாக்கையுந்தானே] ஆவிஎன்கிறது அர்த்தத்தை. ஆக்கை யென்கிறது சப்தத்தை. 'இவ்வர்த்தத்தை இச்சப்தம் காட்டக்கடவது' என்று நியமித்து விட்டான் அவனுயிற்று. ஆக, சப்தார்த்தஸம்பந்தம் அவனிட்ட வழக்காயிற்று. [அழிப் போடளிப்பவன்தானே] மந்தமதிகளான சேதநருடைய ப்ரதிபத்திதோஷங்களாலும் லேககதோஷங்களாலும் பாடபேதங்களாலும் இவையுருமாயுமளவிலே ஸம்ஹரித்தும், அபேக்ஷிதஸமயத்திலே ஸ்ருஷ்டித்தும் போருகிறுன்தானே. 'அல்லாத ஸ்ருஷ்டி ஸம்ஹாரங் களைச் சொல்லுகிறது' என்பாருமுண்டு. [பூவியல்இத்யாதி] பூவாலல்லது செல்லாதபடி ஸௌகுமாரமாய், கல்பகதரு பணைத்தாப்போலே நாலாய், சுற்றுடைத்தாயிருக்கிற திருத்தோள் களையுடையவன். பூவியல்—பூவாலே அலங்க்ருதமான தோளென்னுதல்; பூவையொழியச் செல்லாத ஸௌகுமார்யத்தையுடையவ னென்னுதல். [பொருபடை] பணைத்துப்பூத்த கல்பகதருப்போலேயாயிற்று யுத்தத்துக்குப் பரிகரமான திவ்யாயுதங்களைத் தரித்தால் இருக்கும்படி. பொருபடை—யுத்தஸாதநங்களானவை. [காவிநன்மேனி] அவ்வாயுதங்களாலே விரோதியைப்போக்கி அநுபவிக்கும் வடிவழகு. [நன்மேனி] காவி, வடிவழகுக்கு உபமாநமாக சேர்நில்லாமையாலே "நன்மேனி" என்கிறுர். [கமலக்கண்ணனென்கண்ணினுளானே] இவர் கண்வட்டமொழியப் புறப்பேபோனுல் கண்வட்டக்கள்ளனுமே. பெருவெள்ளத்திலே யொரு சுழிபோலே திருக்கண்கள். [என்கண்ணினுளானே] ப்ராக்ருத விஷயங்களை அநுபவித்துப் போந்த என் கண்ணுக்குத் தன்னை விஷயமாக்கினுன்.

கமலக்கண்ணனென்கண்ணினுள்ளான் காண்பனவன்கண்களாலே*
அமலங்களாகவிழிக்கும் ஐம்புலனுமவன்மூர்த்தி*
கமலத்தயன்நம்பிதன்னைக் கண்ணுதலானொடுந்தோற்றி*
அமலன்தெய்வத்தோடுலகமாக்கி என்நெற்றியுளானே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், ஸர்வ ஸ்ரஷ்டாவான எம்பெருமான், என் நெற்றியிலே வந்து நின்றானென்கிறார்.

[காண்பன் என்று தொடங்கி] - நானும் அவனைக் காணாநின்றேன்; தன்னைக்காண வல்லேனும்படி நிர்த்தோஷனாக என்னை நோக்கி யருளாநின்றான்; அவனுடைய திருவழகைக் கண்டு என் இந்த்ரியங்களும் அவனுக்கு சர்ரவத் விதேயமாயிற்றின. [கமலத்தயன் என்று தொடங்கி] - கமலாஸநனாய் ப்ரதாநனான ப்ரஹ்மாவை லலாடநேத்ரனான ருத்ரனோடுங்கூடத் தோன்றுவித்து ஸத்த்வப்ரசுரரான தேவர்களோடுங்கூட லோகங்களையெல்லாம் உண்டாக்குமவன்,

இ.—ஒன்பதாம்பாட்டில், ஸ்வஸங்கல்பைகதேசத்திலே ஸர்வத்தையும் உண்டாக்கினவன், என்னுடைய சரீரைகதேசத்தைப் பற்றித் தான் உளனாக நினையாநின்றானென்கிறார்.

[கமலக்கண்ண னென்கண்ணினுள்ளான்] - புண்டரீகாக்ஷனான ஸர்வேச்வரன் என்கண்ணுக்கு விஷயமானான், "ந மாம்ஸசக்ஷுஷாபி வீக்ஷதே தம் ந சக்ஷுஷா பச்யதி" என்கிற மர்யாதை குலைந்தது. [காண்பன்] - நானும் அவனைக் காணாநின்றேன். காண்ப னென்கிறவிடம் - வர்த்தமாநம். நீர் காண வல்லீராயிற்று எத்தாலே? என்னில், — [அவன் கண்களாலே அமலங்களாக விழிக்கும்] - அவன் திருக் கண்களாலே நிர்த்தோஷனும்படியும், காணவல்லேனும்படியும் விசேஷகடாக்ஷத்தைப் பண்ணினான். விஷயப்ரவணமான இந்த்ரியங்கள் செய்ததென்? என்னில்; - [ஐம்புலனும் இத்யாதி] - அவையும் அவனழகைக்கண்டு அவனுக்கு சர்ரவத் விதேயமாயிற்றின. அவனைக் காண்பதற்கு முன்பு அவிதேயமானவை அவனைக்கண்டவாறே விதேயமாயிற்றின. [கமலத்தயன் இத்யாதி] - கமலோத்பந்நனாகையாலே அஜனாய், ஜ்ஞாநாதி பரிபூர்ணனாய் ப்ரதாநனானவனை, லலாடநேத்ரனோடே கூடத் தோற்றுவித்து. [அமலத் தெய்வத்தோடுலகமாக்கி] - ஸத்த்வப்ரசுரரான தேவர்களோடே ஸர்வலோகங்களையும் உண்டாக்கும் ஸ்வபாவன். [என்னெற்றியுளானே] - தன்னை யொழிந்த ஸகலாத்மாக்களும் தன்னைப்பற்றி யுண்டாம்படி யிருக்கிறவன், என்சரீரத்தில் ஏகதேசத்தைப் பற்றி வர்த்தியாநின்றான்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. கண்ணில் நின்றநிலை ஸாத்மித்தவாறே என் நெற்றியிலே வந்து நில்லாநின்றானென்கிறார்.

[கமலக்கண்ண னென்கண்ணினுள்ளான்] புண்டரீகாக்ஷனானவன் என் கண்ணுக்கு விஷயமானான். *ந சக்ஷுஷா க்ருஹ்யதே* என்கிற மர்யாதை குலைந்தது. அவன் அவ்வடிவை உம்முடைய கண்ணுக்கு விஷயமாக்கினானாகில், நீர் பின்னைச் செய்வதென்? என்னில், [காண்பன்] நானும் கண்டு அநுபவியாநின்றேன். இவ்விலக்ஷண விஷயத்தை நீர் கண்டநுபவிக்க வல்லீரானபடி எங்ஙனே? என்ன,—[அவனித்யாதி] அவன் தன் திருக்கண்களாலே, என்தோஷமெல்லாங் கழிந்து நான் காணவல்லேனும்படி குளிரக்கடாக்ஷியா நின்றான். ஆனாலும், இந்த்ரியங்களென்று சிலவுண்டே காட்சிக்கு ப்ரதிபந்தகங்கள், அவைசெய்தது என்? என்ன, [ஐம்புலனுமவன்மூர்த்தி] காட்சிக்கு ப்ரதிபந்தகங்களான ச்ரோத்ராதிகளும் அவனிட்ட வழக்காம்படி அவனுக்கு சரீரவத்விதேயமாய் அங்கே படையற்றன. [கமலத்தயன் இத்யாதி] திருநாபிகமலத்திலே அவ்யவதாநேந பிறந்து, எல்லாரிலும் விஸஜாதீயமான ஜந்மத்தையுடையனாய், தனக்கு இவ்வருகுள்ளவற்றை யுண்டாக்குமிடத்தில் ஸர்வேச்வரனைக் கேள்வி கொள்ளவேண்டாதபடி நிரபேக்ஷனான சதுர்முகனை லலாடநேத்ரனான ருத்ரனோடே யுண்டாக்கி, அவ்வளவில் பர்யவஸியாதே, ஸத்த்வப்ரசுரரான தேவதைகளோடே லோகங்களை

யுண்டாக்கினவன். "நெய்யுண்ணி" என்னுமாபோலே, "ஆக்கி" என்றது ஆக்கும் ஸ்வபாவனென்றபடி. [என்னெற்றியுளானே] கர்மாநுகுணமாக ஜகத்தை ஸ்ருஷ்டித்துவிட்டான், ப்ரயோஜநநிரபேக்ஷமாக என் நெற்றியிலே புகுந்துநின்றான்.

நெற்றியுள்நின்றென்னையாளும் நிரைமலர்ப்பாதங்கள்சூடி*
கற்றைத்துழாய்முடிக்கோலக் கண்ணபிரானைத்தொழுவார்*
ஒற்றைப்பிறையணிந்தானும் நான்முகனுமிந்திரனும்*
மற்றையமரருமெல்லாம்வந்து எனதுச்சியுளானே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், ப்ரஹ்மருத்ராதிகளுக்கு அறவரியனாயுள்ள எம்பெருமான், தன் திருவடிகளை அவர்கள் கொண்டாடி ஏத்தாநிற்கச்செய்தே அத்தை அநாதரித்து, தான் வந்து என் உச்சியுள்ளே புகுந்தானென்கிறார்.

[நெற்றியுள் நின்றென்று தொடங்கி] - நெற்றியுள்ளே நிற்கிற என்னை ஆளுகிற ஒழுங்கான மலர்கள்போலே யிருக்கிற திருவடிகளை ஆதரித்துத் திருக்குழலில் செவ்வியாலே சாத்தியருளின திருத்துழாய் தழைக்கும்படியான திருமுடியின் அழகையுடைய க்ருஷ்ணனைத் தொழுவார்.

இ:—பத்தாம்பாட்டில், ப்ரஹ்மாதிகள் தன்பக்கலிலே மேல்விழாநிற்க, அவர்களை அநாதரித்து என் பக்கலிலே தான் மேல்விழாநின்றானென்கிறார்.

[நெற்றியுள்நின்றென்னை யாளும்] - என்னெற்றியிலே நின்று என்னை யாளுகிற, [நிரைமலர்ப் பாதங்கள்] - மலரொழுங்குபோலே யிருக்கிற திருவடிகளை. [சூடி] - சிரஸாவஹித்து. [கற்றைத்துழாய்] - திருக்குழலின் ஸ்பர்சத்தாலே தழையாநிற்கிற திருத்துழாய். [முடிக்கோலம்] - கோலம் - அழகு. ஒப்பனையழகை யுடைய திருமுடி. [கண்ணபிரானை] - உபகாரசீலனான க்ருஷ்ணனை. [தொழுவார்] ஸர்வேச்வரன் ஆழ்வாரை யல்லது அறியானா யிருக்கையாலே. நெற்றியுள்நின்று திருமுடிக்குப் போம்போது நடுவேயாயிற்று ப்ரஹ்மாதிகள் தொழுவது. ராஜாக்கள் அந்த:புரத்தில் ஒருகட்டில் நின்றும் ஒருகட்டுக்குப் போம்போது நடுவே வந்து கார்யத்துக்குக் கடவார் முகங்காட்டுமாபோலே. [ஒற்றை இத்யாதி] - ஒருகலாமாத்ரமான சந்த்ரனை ஒப்பனையாகவுடைய ருத்ரனும், சதுர்முகனும், இந்த்ரனும், மற்றுமுண்டான ஸர்வதேவதைகளும், அவர்கள் தங்கள் செல்லாமையாலே தொழாநிற்க, அவர்களை அநாதரித்து, தான் என்னை யொழியச் செல்லாதானாய் வந்து என் உச்சியிலே புகுந்தான்.

ஈடு.—பத்தாம்பாட்டு. ப்ரஹ்மாதிகள் தன்னைப்பெறுகைக்கு அவஸர ப்ரதீக்ஷராய்த்தடுமாறும்படி யிருக்கிறவன்தான் என்னைப் பெறுகைக்கு அவஸரம் பார்த்து வந்து என் உச்சியுளானென் என்கிறார்,

[நெற்றிஇத்யாதி] நெற்றியுள் நின்று என்னை யடிமை கொள்ளுகிற. [நிரைமலர்ப் பாதங்கள்சூடி] மலரை நிரைத்தாற்போலே யிருக்கிற திருவடிகளை சிரஸா வஹித்து. [கற்றைத்துழாய்இத்யாதி] ஒருவாடல் மாலையைக் கொண்டுவந்து திருமுடியிலே வைத்தாலும், திருக்குழலின் ஸ்பர்சத்தாலே செவ்விபெற்றுத் தழையாநிற்கும். "தழைக்குந்துழாய்" என்னுமாபோலே. செவ்விபெற்றுத் தழைக்கிற திருத்துழாயோடே கூடின திருவபிஷேகத்தையுடையனாய், தர்சநீயமான வடிவையுமுடைய உபகார சீலனான க்ருஷ்ணனை நிரைமலர்ப் பாதங்கள்சூடித் தொழுவார். [ஒற்றைப்பிறை யணிந்தானும்] ஒருகலா மாத்ரமான சந்த்ரனை ஜடையிலே தரித்து லோகப்ரதாநனாயிருக்கிற ருத்ரனும் அவனுக்கு ஜநகனான சதுர்முகனும், தேவர்களை மெய்க்காட்டுக்கொண்டிருக்கிற இந்த்ரனும், மற்றுமுண்டான தேவர்களுமெல்லாம். இப்படி அவர்கள் தடுமாறாநிற்கத் தன்னைப்பெறுகைக்கு, அதெல்லாம் தான் என்னைப் பெறுகைக்குப்பட்டுவந்து, என் உச்சியுளானாகாநிற்கிறான். ராஜாக்கள் அந்த:

புரத்தில், ஒருகட்டில் நின்றும் மற்றைக்கட்டேறப் போகாநிற்க, நடுவே அந்தரங்கர் முகங் காட்டித் தங்காரியங்கொண்டு போமாபோலே, இவர் திருநெற்றியில்நின்றும் திருமுடியேறப் போகாநின்றால் ப்ரஹ்மாதிகள் நடுவே முகங்காட்டித் தங்கள்காரியங் கொண்டுபோமித்தனை.

உச்சியுள்ளேநிற்கும்தேவதேவற்குக் கண்ணபிராற்கு*
இச்சையுள்செல்லவுணர்த்தி வண்குருகூர்ச்சடகோபன்*
இச்சொன்னவாயிரத்துள் இவையுமோர்பத்தெம்பிராற்கு*
நிச்சலும்விண்ணப்பம்செய்ய நீள்கழல்சென்னிபொருமே. (11)

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை எம்பெருமானுக்கு விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமான்திருவடிகள் அவன்தலையிலே நாடோறுஞ்சேரு மென்கிறார்.

[உச்சியுள்ளேநிற்குந் தேவதேவற்கு] - தேவதேவனுய்வைத்து என்னுச்சியுள்ளே நின்றவனுக்கு; என்னுச்சியுள்ளே நிற்கையாலே அயர்வறுமமரர்க ளதிபதியானு னென்றுமாம். [கண்ணபிராற்கு] - உள்ளத்திலே படும்படி அமைத்து.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை விண்ணப்பஞ்செய்ய, நாள்தோறும் திருவடிகள் தலையிலே சேரு மென்கிறார்.

[உச்சியுள்ளே நிற்குந் தேவதேவற்கு] - "அமரர் சென்னிப்பூவினை" என்கிறபடியே தேவர்களுக்கு சிரோபூஷணமாய் வைத்து, "இனி ஒரு கந்தவ்யபூமி யில்லை" என்று என்னுச்சியுள்ளே வர்த்தியா நின்றான். என்னுச்சியுள்ளே நிற்கையாலே அயர்வறுமமரர்களதிபதியானு னென்றுமாம். [கண்ணபிராற்கு] - எனக்கு க்ருஷ்ணனுய் வந்து உபகரித்தவனுக்கு. [இச்சையுள்செல்லவுணர்த்தி] - தன்பக்கலிலே அவன்பண்ணின அபிநிவேசத்தைத் தாம் அறிந்தபடியைத் திருவுள்ளத்திலேபட அறிவித்து. [இச்சொன்னவாயிரம்] - இப்பாவ வ்ருத்தியோடே சொன்ன ஆயிரம். [எம்பிராற்கு] - இப்படி ஸாத்மிக்க ஸாத்மிக்கவும் இழவுமறக்கவும் அநுபவிப்பித்த உபகாரகற்கு. [விண்ணப்பஞ்செய்ய நிச்சலும் நீள்கழல்சென்னிபொரும்] - ஒருகால் விண்ணப்பஞ்செய்ய என்றுமொக்கத் திருவடிகள் தலையிலே சேரும். நீள்கழல் - ஆசாலேசமுடையார் இருந்த இடம் எல்லையாக வளருந் திருவடிகள். பொருவென்று - ஒப்பாய், சேருமென்றபடி. "உச்சியுள்ளேநிற்கும்" என்று இவர் பெற்றதுவே பேறுகக்கடவது.

ஈடு.—பதினோராம்பாட்டு. நிகமத்தில், இத்திருவாய்மொழியை எம்பெருமானுக்கு விண்ணப்பஞ்செய்ய, அவர்கள்தலையிலே எம்பெருமான்திருவடிகள் நாடோறும் சேரு மென்கிறார்.

இனி எங்கேபோவதாக இருந்தானென்னில், [உச்சியுள்ளே நிற்கும்] அமரர் சென்னிப் பூவான தான் என்சென்னிக்கவ்வருகு, கந்தவ்ய பூமியில்லை' என்று என்னுச்சியுள்ளே வர்த்தியா நின்றான். என்னுச்சியுள்ளே நிற்கையாலே தேவதேவனு னென்றுமாம். [உள்ளே நிற்கும்] இனி அவ்வருகு போக்கில்லை. [தேவதேவற்கு] அயர்வறுமமரர்களதிபதியாயிருக்கிற இருப்பையும் நினைக்கிறிலன். [கண்ணபிராற்கு] உபகாரசீலனை க்ருஷ்ணனுக்கு. [இச்சையுள் செல்ல உணர்த்தி] ஸர்வேச்வரனுக்குத் தம்பக்கலுண்டான இச்சையைத் தாமறிந்தபடியை அவன் திருவுள்ளத்திலே படும்படி உணர்த்தி. [வண்குருகூர்ச்சடகோபன்] ஸர்வேச்வரனுக்கு அறிவித்தவளவே யன்றிக்கே ஸம்ஸாரிகளுமறியும்படி பண்ணின உதாரரான ஆழ்வார். [இச்சொன்ன] இப்பாவவ்ருத்தியாலே சொன்ன ஆயிரத்திலும் இவையுமோர் பத்து. [எம்பிராற்கு இத்யாதி] எம்பிராற்கு விண்ணப்பஞ்செய்ய, நிச்சலும் நீள்கழல் சென்னி பொரும்—தனக்குப்பாங்கான ஸமயத்திலே ஒருகால் விண்ணப்பஞ்செய்ய, நாள்தோறும்

ஆசாலேசமுடையாரிருந்த விடத்திலே செல்ல வளருந்திருவடிகள் சென்னியோடே சேரும். எம்பிரானென்றது இப்படி ஸாத்மிக்க ஸாத்மிக்கவும், இழவு மறக்கவும் அநுபவிப்பித்த உபகாரக னென்றபடி. ஆழ்வார் க்ரமத்திலே "உச்சியுளானே" என்றபேறு, இதுகற்றார்க்கு முதலடியிலே யுண்டாம். பொரு என்று ஒப்பாய், ஒப்பாவது சேருகையாய், சேருமென்றபடி. "உச்சியுள்ளேநிற்கும்" என்று இவர்பெற்றதுவே பேறாகக்கடவது.

முதற்பாட்டில், என்னுடைய பர்யங்கத்திலே வந்து நின்றா னென்றார்: இரண்டாம் பாட்டில், அது ஸாத்மித்தவாறே அருகே நின்றா னென்றார்; மூன்றாம்பாட்டில், தம்முடனே கூடநின்றா னென்றார்: நாலாம்பாட்டில், ஒக்கலையிலே வந்திருந்தானென்றார்; அஞ்சாம்பாட்டில், நெஞ்சிலேவந்து புகுந்தா னென்றார்: ஆறாம்பாட்டில், தோளிலே வந்திருந்தா னென்றார்; ஏழாம்பாட்டில், நாவிலே வந்து புகுந்தா னென்றார்; எட்டாம்பாட்டில், கண்ணுள்ளே நின்றா னென்றார்: ஒன்பதாம்பாட்டில், நெற்றியிலே நின்றா னென்றார்; பத்தாம்பாட்டில், திருமுடியிலே நின்றா னென்றார்: நிகமத்தில் ஆக, இத்தால் தம்முடனே ஸாத்மிக்கும்படி கலக்கையாலே அவனை சிரஸா வஹித்தார், பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

ஆழ்வார் திருவடிகளே சரணம். எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

பத்தாந்திருவாய்மொழி பொருமாநீள் : ப்ரவேசம்.

ஒ.—பத்தாந்திருவாய்மொழியில், புத்த்யாதி பதார்த்தங்களுக் கெல்லாம் தானே காரண மாகையாலே ஜ்ஞாந விசேஷாத்வேஷமென்ன, கணனையென்ன, நிரதிசய பக்தியென்ன, இவற்றை யெல்லாம் நிரதிசயமாக எம்பெருமான் தமக்குப் பிறப்பித்துத் தம்மோடே நிரவதிக ஸம்ச்லேஷத்தைப் பண்ணின படியைக் கண்டு "அத்வேஷாதிகளுடையாரோடு தம்மோடு ஸம்ச்லேஷித்தாப்போலே ஸம்ச்லேஷிக்கும்" என்றும், "தான் நினைத்தார்க்கு அவ்வளவுகளைப் பிறப்பிப்பான் தானே" என்றும் அநுஸந்தித்து நிர்வ்ருதராகிறார்.

இ.—பத்தாம் திருவாய்மொழியில், கீழ்ப்பெற்ற பேற்றை அநுஸந்தித்து, 'இக்கனத்தபேறு நமக்கு எத்தாலே வந்தது?' என்று இதுக்கடியை ஆராய்ந்தவாறே, "புத்திஜ்ஞாநமஸம்மோஹ: க்ஷமா ஸத்யந்தமச்சம:,:ஸுகம்து:கம் பவோபாவோ பயஞ்சாபயமேவவா, அஹிம்ஸாஸமதாதுஷ்டி ஸ்த போ தாநம் யசோZயச பவந்திபாவாபூதாநாம் மத்தஏவப்ருதக்விதா:" என்கிறபடியே புத்த்யாதி ஸகலபதார்த்தங்களுக் கும் தானே காரணமாகையாலே, அத்வேஷமென்ன, பரிகணனை யென்ன, பரமசக்தியென்ன இவ்வளவு களை நிர்ஹேதுக க்ருபையாலே தமக்குப் பிறப்பித்துத் தம்மோடு கலந்தபடியைக் கண்டு, அத்வேஷாதி களுடையாரோடும் தம்மோடு கலந்தாப்போலே கலக்கும் ஸ்வபாவனென்றும், அவர்களுக்கு அவ்வளவு களைப் பிறப்பிப்பான் அவனேயென்றும் அநுஸந்தித்து நிர்வ்ருதராகிறார். முன்புள்ளார், 'கீழ் பெற்ற பேற்றை அநுஸந்தித்து நிர்வ்ருதராகிறார்' என்னுமளவேயாயிற்று நிர்வஹிப்பது; பட்டர் தம்முடைய வைபவமெல்லாங் காட்டுந் திருவாய்மொழியாயிற்று இது.

ஈடு.—'கீழில் திருவாய்மொழியில் பிறந்த ஸர்வாங்க ஸம்ச்லேஷத்தை அநுஸந்தித்து நிர்வ்ருதராகிறார்' என்று முன்புள்ள முதலிகள் நிர்வஹிக்கும்படி. (அதாவது நிர்வ்ருதியென்று ஸுகமாய், ஸுகிக்கிறா ரென்றபடி.) கீழ்ப்பிறந்த ஸர்வாங்க ஸம்ச்லேஷத்தை அநுஸந்தித்து பட்டர் அருளிச்செய்வதோ ரேற்ற முண்டு. அதாவது "உச்சியுள்ளேநிற்கும்" என்றிறே கீழ்

நின்றது: பேற்றில் இனி இதுக்கவ்வருகு ஏற்றமாகச் செய்துகொடுக்கலாவதொன்றுமில்லை; இனி இதினுடைய அவிச்சேதத்தைப் பண்ணிக்கொடுக்கையே உள்ளது; 'பேறு கனத்திருந்தது, இது வந்தவழியென்ன? என்று ஆராய்ந்தார், இப்பேற்றின்கனத்துக்கு ஈடாயிருப்பதொரு நன்மை தந்தலையிலின்றிக்கே யிருந்தது: இத்தலையிலும் ஏதேனுமுண்டாகப் பார்த்தாலும், அத்வேஷமாதல், ஆபிமுக்யமாதலிறே உள்ளது, அத்தை ஸாதநமாகச்சொல்லப்போராதே, இத்தலையிலே பரமபக்தி பர்யந்தமாகப் பிறந்தாலும் பேற்றின் கனத்துக்கு இத்தை ஒருஸாதநமாகச் சொல்லப்போராதே, ஒருவன் ஓரெலுமிச்சம்பழம் கொடுத்து ராஜ்யத்தைப்பெற்றால் இது விலையாயிராதே; ஸர்வேச்வரனடியாக வரும் பேற்றுக்கு இத்தலையால் ஓரடி நிரூபிக்கலாயிராதே, "வரவாறொன்றில்லையால் வாழ்வினிதால்" என்னும்படியிறே யிருப்பது; இவனை முதலிலே ஸ்ருஷ்டிக்கிறபோது "இவன் தீயவழியைத்தப்பி நல்லவழி போகவேணும்" என்று உபகரணங்களைக்கொடுத்து விடுகையாலே, இவன் தலையால் பிறந்த நன்மைக்கும் அடி அவனாயிருக்குமே; இனி புத்த்யாதி ஸகலபதார்த்தங்களுக்கும் நிர்வாஹகனுகையாலே, அத்வேஷந் தொடக்கமாக, பரிகணனை நடுவாக, பரமபக்தி பர்யந்தமாகத் தானே பிறப்பிப்பானொருவன்; 'நித்யஸூரிகள் பேற்றை அநாதிகாலம் ஸம்ஸரித்துப்போந்த நமக்குத் தந்தான், ஒரு விஷயீகாரமிருக்கும்படி யென்!" என்று, கீழில்திருவாய்மொழியில் உந்மஸ்தகமாகப் பிறந்த ஸம்ச்லேஷரஸத்தை அநுஸந்தித்து நிர்வ்ருதராகிறார்" என்று.

பொருமாநீள்படை ஆழிசங்கத்தொடு*
திருமாநீள்கழல் ஏழுலகுந்தொழ*
ஒருமாணிக்குறளாகி நிமிர்ந்த* அக்
கருமாணிக்கம் என்கண்ணுளதாகுமே. (1)

ஒ.—முதற்பாட்டில், எம்பெருமான் தன்னுடைய ஸௌந்தர்யசீலாதிகளைக்காட்டி வசீகரித்துத் தம்மை அநந்யார்ஹமாக்கித் தம்மோடு உந்மஸ்தகரஸமாக முன்புகலந்த கலவியை அநுபாஷிக்கிறார்.

[பொருமாவென்று தொடங்கி] - எம்பெருமான்பக்கல் பரிவாலே ப்ரதிபக்ஷத்தின் மேலே விழா நிற்பதுஞ் செய்து எம்பெருமான் வளர்த்திக்குத் தக்கபடி மிகவும் வளராநின்றுள்ள திவ்யாயுதமான திருவாழியோடும், ஸ்ரீ பாஞ்சஜந்யத்தோடும், அழகியதாய்ப் பூஜ்யமாய் வளரா நின்றுள்ள திருவடிகளை ஸகலலோகங்களும் கண்டுதொழும்படி. [ஒருமாணிக்குறளாகி யென்று தொடங்கி] - அர்த்தித்தைக் கிடாய் அழகாலே ஆகர்ஷகமான குறள்வடிவாய்த் தன்னுடைய அபேக்ஷிதம் பெற்ற ப்ரீத்யதிசயத்தாலே மிகவும் வளருவதுஞ்செய்து விலக்ஷணமான அழகையுடைய எம்பெருமான் அப்படியே எனக்கு வந்து ஸுலபனானான்.

இ.—முதற்பாட்டில், தன்னுடைய ஸௌந்தர்யசீலாதிகளைக் காட்டித் தம்மை அநந்யார்ஹராக்கி உந்மஸ்தகரஸமாகக் கலந்த கலவியை அநுபாஷிக்கிறார். இத்திருவாய்மொழிக்கு ஸங்க்ரஹம்-முதற்பாட் டென்னவுமாம்.

[பொரு] - விரோதிகளான நமுசி ப்ரப்ருதிகள்மேலேவிழாநிற்கை. "பரதஸ்ய வதேதோஷம் நாஹம் பச்யாமிராகவ," தன்னிலே பொருகை யென்றுமாம். [மா] - ஆச்ரிதவிஷயத்தில் ஈச்வரன் நெகிழநின்றாலும் விடாத ஓரத்தின்மிகுதியைச் சொல்லுகிறது. [நீள்படை] - ஈச்வரன் வளருகிறபோது ஒக்கவளரா நின்றுள்ள திவ்யாயுதமான ஆழிசங்கத்தோடே கூட. "த்ரிவிக்ரமக்ரமாக்ராந்தத்ரைலோக்ய ஸ்ப்புரதாயுத:" "இடங்கைவலம்புரிநின்றார்ப்ப". மாநீள்படையென்று - மிக்கவளர்த்தியைச் சொல்லிற்றாகவுமாம். [திருமாநீள்கழல்] - திரு - சங்க்கரதாங்ககல்பக - என்கிற ஐச்வர்யஸூசகமான சிஹ்நங்களையுடைத்தாகை. மா - அவன் தன்னிலும் பூஜ்யமாயிருக்கை. நீள்கழல் - ஆஸாலோசமுடையாரளவும் வளருந் திருவடிகள். [ஏழுலகுந்தொழ] - அஜ்ஞரோடு ஸர்வஜ்ஞரோடு வாசியறத் தொழும்படி திருவடிகள் தலையிலே வந்திருக்கையாலே தொழுதார்களாமத்தனையிறே. [ஒரு] - அத்விதீயமாயிருக்கை. "இன்ன

முந்தானே அவ்வடிவைக் கொள்ளவேணும்" என்னிலும் அப்படி வாயா திருக்கை. [மாணி] - அர்த்தித்வத்திலே தகணேறினபடி. மாண் - அழகு. [குறளாகி] - சேர்ப்பால்போலே சுருங்கினதனையும் போக்யமாயிருக்கை. [நிமிர்ந்த] - அபேக்ஷிதம் பெற்ற ப்ரீதியாலே வளர்ந்தபடி. [அக்கருமாணிக்கமென் கண்ணுளதாகுமே] - குளிர்ந்து பெருவிலையனை ரத்நம்போலே அவ்வழகை நிர்ஹேதுகமாக என்கண்ணுக்கு விஷயமாக்கினுன். மயர்வறமதிநல மருளப்பெற்ற தம்மாலும் பரிச்சேதிக்க வொண்ணுமையாலே "அக்கருமாணிக்கம்" என்கிறுர். கண்ணென்று - இடமாய், எனக்கு ஸுலபனை னென்னவுமாம்.

ஈடு.—முதற்பாட்டு. இத்திருவாய்மொழியில் சொல்லுகிற அர்த்தத்தைத் திரள அருளிச்செய்கிறுர், முதற்பாட்டில். மஹாபலி, தன்வரவை நினையாதேயிருக்க அவன் பக்கலிலே தானே இரப்பாளனுய்ச் சென்று தன்னுடைமையைத் தன்னதாக்கினுப்போலே, எனக்கு நினைவின்றிக்கேயிருக்கத் தானே வந்து தன்வடிவழகை என்கண்ணுக்கிலக்காக்கினுன் என்று அவன்படியை அநுஸந்தித்து இனியராகிறுர்.

[பொரு] திருவுலகளந்தருளுகிறபோது, திவ்யாயுதங்கள் நமுசிப்ரப்ருதிகள்மேலே பொருதபடியைச் சொல்லுதல்; திவ்யாயுதங்கள்தான் ஒருவரையொருவர் அதிசங்கை பண்ணிப் பொருகிறபடியைச் சொல்லுதல். நமுசிப்ரப்ருதிகளோடே பொருமென்றது சேருமீறே; [இடங்கைவலம்புரிநின்றார்ப்ப] இடத்திருக்கையிலே ஸ்ரீபாஞ்சஜந்யமானது அப்போதப்போது பிறந்த விஜயத்தை அநுஸந்தித்து ஆர்த்துக்கொண்டது; அங்ஙன் ஆர்த்துக்கொள்ள[அவஸரமின்றிக்கே, திருவாழி, நெருப்பையுமிழ்ந்து விரோதிகளை "வாய்வாய்" என்று ஒடுங்கப்பண்ணிற்று; [விடங்காலுந் தீவாயரவணை] திருவநந்தாழ்வான் உகவாதார் மேலே கிடந்தவிடத்தேகிடந்து நெருப்பை யுமிழ்ந்தான்; விரோதிபூயிஷ்ட்டமான இத்தேசத்தில் அவன் இப்படி செய்யச்சொல்ல வேணுமோ? அங்கேயுட்பட இப்படிசெய்பக்கடவ அவன், *ஆங்காரவாரமதுகேட்டழலுமிழும் பூங்காரரவணையிறே, (ஆங்கு) தேசமது. (ஆரவாரமது) *அஹமந்ந மஹமந்ந மஹமந்நம், அஹமந்நாதோ Zஹமந்நாதோZ ஹமந்நாத:* என்கிற ஆரவாரம். அங்கே அது கேட்டு அப்படி படுகிறவர்கள் இங்கே இதுகண்டால் இப்படி படச்சொல்ல வேணுமோ? இவர்கள் இப்படிஅலமருகைக்கு அடியென்? என்னில், [அரவணை மேல்தோன்றல்] திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய ஸர்வேச்வரன் காடுமோடையும் அளக்கைக்காகப் புஷ்பஹாஸ ஸுகுமாரமான திருவடிகளை நிமிர்த்தபோது, எல்லாம்பட வேண்டாவோ? அவன் இப்படி வ்யாபரியாநின்றால், தன்னில்தான் பொருதென்றபோது அஸ்த்தாநே பயசங்கையாலே ஒருவரையொருவர் அதிசங்கைபண்ணிப் பொருகை. *ராகவம் சரணம் கத:* என்றவனையிறே, *வத்யதாம்* என்றது; *பரதஸ்ய வதே தோஷம் நாஹம் பச்யாமி* என்றாரிறே, இளைய பெருமாள். [மா] அவற்றின் வடிவின் பெருமையைச் சொல்லவுமாம். அன்றியே, ஆச்ரிதவிஷயத்தில் அவனிற்காட்டில் இவர்களுக்கு உண்டான பக்ஷபாதத்தைச் சொல்லவுமாம். *அவ்யாஹதாங்க்ருஷ்ணஸ்ய சக்ராத்ந்யாயுதாநி தம், ரக்ஷந்தி ஸகலாபத்ப்யோ யேந விஷ்ணுருபாஸித:* என்கிறபடியே ஸர்வேச்வரன் எதிரியானாலும் அவன்கையில் காட்டிக்கொடாதே நோக்கும் மஹத்தையைச் சொல்லுகிறது. [நீள்படை] "ஆயிரக்காதம் பறப்பதின்குட்டி ஐந்நூறுகாதம் சிறகடிக்கொள்ளும்" என்னுமாபோலே, ஸர்வேச்வரன் அதிகரித்த கார்யத்திலே அவன்தன்னிலும் முற்பட்டிருக்கை. நீள்படையான ஆழிசங்கத்தோடே கூட. [திருமாநீள்கழலேழுலகுந்தொழ] *தநாபுந:* என்று நான் ஆசைப்பட்டுக் கிடக்கும் திருவடிகளைக்கொண்டுநிமிர் ஆசையில்லாதார் தலையிலே வைத்தது. [திரு] ஐச்வர்ய ஸூசகமான த்வஜாரவிந்தாதிகளை யுடைத்தாயிருக்கை. [மா] பரமபூஜ்யமாயிருக்கை. [நீள்கழல்] ஆசாலேசமுடையாரிருந்த இடம் எல்லையாக வளரும் திருவடிகள். [ஏழுலகுந்தொழ] ஒருஸாதநாநுஷ்ட்டாநம் பண்ணுதாரும் தொழ. [ஒரு] இவன் தானே "இவ்வடிவை இன்னமொருகால் கொள்ளவேணும்" என்னிலும் வாயாதபடி அத்விதீயமாயிருக்கை. [மாணி] ச்ரிய:பதியென்று தோற்றுதபடி இரப்பிலே தழும்பேறுகை. [குறளாகி] கோடியைக் காணியாக்கினுற்போலே, பெரியவடிவைக் கண்ணாலே முகக்கலாம்படி சுருக்கினபடி. [நிமிர்ந்த] அடியிலே நீர் வார்த்துக் கொடுத்தவாறே நிமிர்ந்தபடி. *வாஸுதேவதருவிறே. செய்தற்காடு அலர்ந்தாப்போலே, ஆகாசாவகாசமடையத் தன்வடிவழகாலே

பரிந்தபடி. [அக்கருமாணிக்கம்] மயர்வறமதிநலமருளப்பெற்ற தம்மாலும் பரிச்சேதிக்கப் போகிற தில்லை காணும். [என் கண்ணுளதாகுமே] ஏழுலகத்துள்ளார், வாசியறிந்திலர்களிறே; அவ்வாசியறியுமவராகையாலே "என் கண்ணுளதாகுமே" என்கிறார். கண் என்று இடமாய், என்னிடத்ததாகும் என்னவுமாம். "கருமாணிக்கம்" என்கையாலே, கண்ணுளதாகும் என்கிறது.

கண்ணுள்ளே நிற்கும் காதன்மையால்தொழில்*
எண்ணிலும்வரும் என்னினிவேண்டுவம்*
மண்ணும்நீரும் எரியும்நல்வாயுவும்*
விண்ணுமாய்விரியும் எம்பிரானையே. **(2)**

ஒ.—இரண்டாம்பாட்டில், எம்பெருமான், தன்பக்கல் நிரதிசய பக்தரானவர்களுக்கும் "தானொருவனுளன்" என்று பரிகணித்தார்க்கும் அத்யந்தஸு॰லபனென்ற குணத்தாலேதாம் ஈடுபடுகிறார்.

[என்னினிவேண்டுவம்] - இங்ஙனே யானபின்பு நமக்கு ஒரு குறையில்லை. [மண்ணு நீருமென்று - மேலுக்கு] - இப்படி ஆச்ரிதஸம்ரக்ஷணார்த்தமாகக் கார்யபூத ப்ருதிவ்யாதி ஸகல பதார்த்த ரூபேண அத்யந்த விஸ்த்ருதனுயுள்ளவன் - ஸர்வேச்வர னென்றுமாம். நல்வாயுவு மென்கிறது - தாரகத்வத்தைப்பற்ற.

இ.—இரண்டாம்பாட்டில், பரிகணனையோடு பரமபக்தியோடு வாசியற முகங்கொடுக்குமென்று அக்குணத்திலே ஈடுபடுகிறார்.

[கண்ணுள்ளேநிற்கும் காதன்மையால் தொழில்] - அவனைப்பெறவிடில் தரியாதானும் படியான பரமபக்தியை யுடையனுய்க்கொண்டு தொழில் கண்வட்டத்தே விடாதேநிற்கும். [நிற்கும்] - இத்தலைக்காக நிற்கையன்றிக்கே, தன் செல்லாமையோடே ஸ்த்தாவரப்ரதிஷ்டையாய் நிற்கும். [எண்ணிலும்வரும்] - கடபடாதிகளுடைய அஸ்திபாவத்தை இசையும், ஈச்வரனுடைய அஸ்திபாவத்தை இசையான்; பஞ்சவிம்சதிதத்த்வத்தையும் இசையும், ஷட்விம்சகனை இசையான்; 'நம்முடைய உண்மையை இசைந்தானிறே' என்று அப்போதே வந்து முகங்காட்டும். இவன் எண்ணின அளவுக்கு அவ்வருகே வரு மென்னவுமாம். [என்னினிவேண்டுவம்] - ஸர்வேச்வரன் ஸ்வபாவம் இதுவானபின்பு ஹிதாம்சத்தில் நமக்கு ஒருகுறையில்லை. வேல்வெட்டிப்பிள்ளை இதிஹாஸம். [மண்ணும்நீரித்யாதி] - "நல்வாயுவும்" என்கிறது - தாரகத்வத்தைப் பற்ற. [ஆய்] - அந்தராத்மாவாய். [விரியும்] - "பஹு॰ஸ்யாம்" என்கிற படியே விஸ்த்ருதனுகாநிற்கும். [எம்பிரானையே] - ஜகத்காரணத்வ ப்ரயுக்தமான உபகாரத்தை நினைத்தல், ஸர்வேச்வர னென்னுதல்; "எம்பிரானை" என்கிற த்விதீயையை ப்ரதமையாக்கி, "எம்பிரான் - கண்ணுள்ளே நிற்கும்" என்னுதல்.

ஈடு.—இரண்டாம்பாட்டு. பரமபக்திக்கும் பரிகணனைக்கு மொக்க முகங்காட்டு மென்கிறார்.

[கண்ணுள்ளே நிற்கும் காதன்மையால் தொழில்] பரமபக்தியுக்தராய்க்கொண்டு தொழில், அவர்கள்கண்வட்டத்துக் கவ்வருகு போகமாட்டாதே நிற்கும். தன்னையொழியச் செல்லாமையை யுடையராய்க்கொண்டு தொழில், தானும் அவர்களை யொழியச் செல்லாமையையுடையனுய் அவர்கள் கண்வட்டத்தினின்றும் கால்வாங்கமாட்டாதே நிற்கும். [எண்ணிலும்வரும்] "கடம், படம், ஈச்வரன்" என்றால், "நம்மை, 'இல்லை' என்னுதே, இவற்றேடொக்கப் பரிகணித்தானிறே" என்று வரும். "சதுர்விம்சதிதத்த்வமாயிருக்கும் அசித்து, பஞ்சவிம்சகன் ஆத்மா, ஷட்விம்சகன் ஈச்வரன்" என்றால். "நம்முடைய

உண்மையையும் இவற்றுபாதி இசைந்தானிறே'' என்று வந்து முகங்காட்டும் [வரும்] நிற்குமதில்லை, இவன் 'போ' என்றபோதும் அதுக்குமுடலாக வருமித்தனை. அன்றியே, [எண்ணிலும்வரும்] நம்முடைய எண்ணைமிஞ்சிவரு மென்றுமாம். [எண்ணிலும்வரும்] "இருபத்தொன்று, இருபத்திரண்டு, இருபத்துமூன்று, இருபத்துநான்கு, இருபத்தஞ்சு, இருபத்தாறு'' என்று எண்ணினுல், 'இருபத்தாறு நானே' என்றுவரு மென்றுமாம். [என்னினிவேண்டுவம்] பரமபக்திக்கும் பரிகணைக்கு மொக்க முகங் காட்டுவானுனபின்பு எனக்கு ஒருகுறை யுண்டோ? அவன் இவன்பக்கல் அப்ரதிஷேதத்துக்கு அவஸரம்பார்த்திருந்து முகங்காட்டுவானுனபின்பு, இவனுக்கு ஒவ் தாம்சத்திற் செய்யவேண்டுவது உண்டோ? இப்படியிருக்கிற பகவத்ஸ்வரூபத்தை புத்திபண்ணுகையிறே இவன் ப்ரபந்நனுகையாவது. அவன் தன்ஸ்வருபோபதேசத்தைப் பண்ணி, "உன்னுல் வரும் இழவுக்கு அஞ்சவேண்டா, மாசுச: என்றுப்போலே, இவரும் அவன்ஸ்வரூபத்தை அநுஸந்தித்து "என்னினிவேண்டுவம்'' என்கிருர். அப்ரதிஷேதமே பேற்றுக்கு வேண்டுவது. அதுக்குப் புறம்பான யோக்யதா யோக்யதைகள் அகிஞ்சித்கரம். வேல்வெட்டி நம்பியார் நம்பிள்ளையை, 'பெருமாள் கடலை சரணம்புகுகிறவிடத்தில் ப்ராங்முகத்வாதிநியமங்களோடே சரணம் புக்காராயிருந்தது. இவ்வுபாயம் இதரஸாதநங்கள்போலே சிலநியமங்கள் வேண்டியிருக்கிறதோ?' என்று கேட்க, "பெருமாள் தமக்கு, *ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணங்கந்துமர்ஹதி* என்று உபதேசித்தான் ஸ்ரீவிபீஷணும்வான்; அவன்தான் பெருமாளை சரணம் புகுகிறவிடத்தில், 'கடலிலே ஒரு முழுக்கிட்டு வந்தான்' என்றில்லை; ஆக, இத்தால் சொல்லிற்றுயிற்று என்னென்னில்; பெருமாள், இக்ஷ்வாகுவம்ச்யராய் ஆசாரப்ரதாநராகையாலே, சில நியமங்களோடே சரணம் புக்கார்; ராக்ஷஸஜாதீயனுகையாலே, அவன் நின்ற நிலையிலே சரணம்புக்கான்; ஆகையாலே, யோக்யனுக்கு அயோக்யதை ஸம்பாதிக்கவேண்டா; அயோக்யனுக்கு யோக்யதை ஸம்பாதிக்க வேண்டா; ஆகையாலே, ஸர்வாதிகாரம் இவ்வுபாயம்'' என்று அருளிச்செய்தார். பகவத்ப்ரபாவ ஜ்ஞாநமுடையார்க்கு 'இதுவே அர்த்தம்' என்று தோற்றியிருக்கும், 'கேவலக்ரியாமாத்ரத்துக்கே ப்பலப்ரதாநசக்தி யுள்ளது' என்று இருப்பார்க்கு "இவ்வர்த்தம் அநுபபந்நம்'' என்று தோற்றியிருக்கும். [மண்ணும் இத்யாதி] காரணமான பூதபஞ்சகத்துக்கும் உள்ளிடாய், *பஹு ஸ்யாம்* என்கிறபடியே தன்விகாஸமேயாம்படி யிருக்கிற உபகாரகன் கண்ணுள்ளே நிற்கும் காதன்மையால் தொழில் எண்ணிலும்வரு மென்னினி வேண்டுவம்? தன்னையொழிந்த ஸகலபதார்த்தங்களும் தன்ஸங்கல்பத்தைப்பற்றி உளவாம்படி யிருக்கிற ஸர்வேச்வரன், தன்பக்கல் ஆசாலேச முடையார்ஸங்கல்பத்தைப்பற்றித் தான் உளனும்படி யிருப்பானுனபின்பு, இவ்வாத்மாவுக்கு ஒரு குறையுண்டோ? என்கிருர். நல்வாயுவு மென்றது தாரகத்வத்தைப் பற்ற. [விண்ணுமாய்] இவற்றுக்கு அந்தராத்மாவா யென்றபடி. [விரியும்] *பஹு ஸ்யாம்* என்கிறபடியே விஸ்த்ருதனுகாநிற்கும். [எம்பிரான்] எனக்கு உபகாரகன். ப்ரதமையை த்விதீயையாக்கி, 'எம்பிரானை' என்று கிடக்கிறது.

எம்பிரானை எந்தைதந்தைதந்தைக்குந்
தம்பிரானை* தண் தாமரைக்கண்ணனை*
கொம்பராவு நுண்ணேரிடைமார்பனை*
எம்பிரானைத்தொழாய் மடநெஞ்சமே! (3)

ஒ.—மூன்றும்பாட்டில், எம்பெருமானுக்கு ஆச்ரிதவிஷயத்தில் வந்த நீர்மைக்கு அடியான லக்ஷ்மீஸம்பந்தத்தை அநுஸந்தித்து, திருவுள்ளத்தைக் குறித்து அவனைத்தொழாய் பவ்யமான நெஞ்சே! என்கிறுர்.

[எம்பிரானையென்று தொடங்கி] என்னுயனை என்குடிநாயனை யென்று ப்ரீத்யதிசயத்தாலே அருளிச்செய்கிறுர். [கொம்பராவு நுண்ணேரிடைமார்பனை] - வஞ்சிக்கொம்பு போலவும் அரவுபோலவும், நுண்ணிதாய் நேரிதான இடையையுடைய பெரியபிராட்டியாரைத் திருமார்விலே யுடையவன். கொம்பை லக்ஷ்யாதின்றுள்ள இடை யென்றுமாம். [எம்பிரானை] பிராட்டியோட்டை ஸம்பந்தத்தை அநுஸந்தித்து ப்ரீத்யா மீளவும் என்னுயனை யென்கிறுர்.

இ.—மூன்றும்பாட்டில், அவனுடைய இந்நீர்மைக்கு அடியான லக்ஷ்மீஸம்பந்தத்தை அநுஸந்தித்து, இவ்விஷயத்தை அநுபவிக்கப் பாராயென்று திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்கிறார்.

[எம்பிரானை] - கீழ்ப்பாட்டில் அவன்நீர்மையை அநுஸந்தித்து, என்னுப னென்கிறார். [எந்தை இத்யாதி] - தம்மளவேயாய் அடியற்றிருக்கையன்றிக்கே, என்குடிநாயன் என்கிறார். ''ஸமாச்த்ரிய ஜகந்நாதம் மமபூர்வேபிதாமஹா:, விபக்ஷாபஹ்ருதம் ராஜ்யமவாபு: புருஷோத்தமம்.'' [தண்தாமரைக் கண்ணனை] - 'ப்ரயோஜந நிரபேக்ஷமாகப் புகழுகிறார்' என்று உயிர்க்கெல்லாந் தாயாயளிக்கின்ற தண்தாமரைக் கண்ணாலே குளிர நோக்கினான். இந்நோக்குக்கு அடி சொல்லுகிறது மேல். [கொம்பு இத்யாதி] - வஞ்சிக்கொம்பு போலேயும், அரவுபோலேயும் நுண்ணிதாய் நேரியதா யிருந்துள்ள இடையை யுடைய பிராட்டியைத் திருமார்விலே யுடையவனை. 'அரவு' என்கிறத்தை - ''அராவு'' என்று நீட்டிக்கிடக்கிறது. 'நச்சராவணை' என்னக்கடவதிறே. பணம்போலே நிதம்பப்ரதேசம். கொம்பை லகூகரியாநின்றுள்ள இடை யென்னவுமாம். [எம்பிரானை] - இச்சேர்த்தியழகைக் கண்டு 'எம்பிரானை' என்கிறார். [தொழாய்] - இவர்தொழும் வஸ்து - மிதுநமாயிறே யிருப்பது. [மடநெஞ்சமே] - ''தொழுதெழு'' என்னலாம்படி பவ்யமான நெஞ்சே.

ஈடு.—மூன்றும் பாட்டு. கண்டாயே அவன் ஸ்வரூபம் இருந்தபடி; நீயும் உன் ஸ்வரூபத்துக்குச்சேர நிற்கப் பாராய் நெஞ்சே என்கிறார்.

[எம்பிரானை] கீழிற்பாட்டில் அவன்நீர்மையை அநுஸந்தித்து, என்னுடையனவனை யென்கிறார். [எந்தை இத்யாதி] தம்மளவிலேயாய் அடியற்றிருக்கையன்றிக்கே, என்குடிக்கு நாயகனானவனை என்கிறார். இவர் இப்படி ஏத்தினவாறே ப்ரயோஜநாந்தரபரருடைய பாசுரத்துக்கும் அநந்யப்ரயோஜநர் பாசுரத்துக்கும் வாசியறியுமவனாகையாலே, 'இப்படி ஏத்துகிறவன் ஆர்?' என்று குளிரக்கடாக்ஷித்தான். [தண்தாமரைக்கண்ணனை] *தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந், க்ஷிபாமி* என்னுமவன் இப்படி கடாக்ஷிக்கைக்கு ஹேதுவென்? என்று பார்த்தார்; அருகே கடாக்ஷிப்பிக்கிறார் உண்டாயிருந்தது. [கொம்பராவுநுண்ணேரிடைமார்பனை] கொம்புபோலவும் அரவுபோலவு மிருப்பதாய், அதுதானும் நுண்ணிதாயிருந்துள்ள இடையையுடைய பெரியபிராட்டியாரைத் திருமார்பிலே யுடையவனை அரவு என்கிற இத்தை, ''அராவு'' என்று நீட்டிக்கிடக்கிறது; ''நச்சராவணை'' என்னக் கடவதிறே. அன்றியே, கொம்பை லகூகரிக்கிற இடை யென்றுமாம். [எம்பிரானை] அச்சேர்த்திக்கு ஒருகால் 'எம்பிரானை' என்கிறார். [தொழாய்] தொழப்படும் விஷயம் ஒருமிதுநமாயாயிற்று இருப்பது. [மடநெஞ்சமே] ''தொழுதெழு'' என்னலாம்படி பாங்கான நெஞ்சன்றோ நீ.

நெஞ்சமே! நல்லை நல்லை உன்னைப்பெற்றால்
என்செய்யோம்* இனியென்ன குறைவினம்?*
மைந்தனை மலராள்மணவாளனை*
துஞ்சும்போதும் விடாதுதொடர்கண்டாய். (4)

ஓ.—நாலாம்பாட்டில், தம்முடைய நிகர்ஷாநுஸந்தாநத்தைப் பண்ணி விச்லேஷத்தாலே முடியவேண்டும் தசை வந்ததேயாகிலும் அவனை விடாதே பற்று என்று திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்கிறார்.

[நெஞ்சமே நல்லை நல்லை] - அத்யந்தவிலக்ஷணமா யிருந்தது உன்படியென்று தம்முடைய நெஞ்சைக் கொண்டாடுகிறார். [உன்னை என்று தொடங்கி] - பகவத்விஷயமென்னில் ப்ரதிகூலியாதே பாங்காயிருக்கிற உன்னைப்பெற்றால் இனி நமக்கு ஸாதிக்கமுடியாததுண்டோ? நமக்கு இனி என்ன குறையுண்டு? [மைந்தனையென்று தொடங்கி] - நித்யமான யௌவநத்தை யுடையனாய், [மலராள் மணவாளனை] - நிரதிசயபோக்யமான பெரிய பிராட்டியாருக்கு போக்தாவாயுள்ளவனை.

இ.—நாலாம்பாட்டில், தாம்சொன்னபோதே மேல்விழுந்து தொழுதவாறே திருவுள்ளத்தைக் கொண்டாடி, நிகர்ஷாநுஸந்தாநம் பண்ணி நான் விச்லேஷிக்கும் ஸமயத்திலும் நீ விடாதேகொள் என்கிறார்.

[நெஞ்சமே நல்லை நல்லை] - சொன்னகாரியத்தை உகந்து செய்த ஸத்புத்ரர்களை உகக்குமாபோலே உகக்கிறார். என்னைக்கொண்டாடுகிறதென்? என்னில்; - [உன்னைப்பெற்றா லென்செய்யோம்] - பலந் தருகைக்கு ஈச்வரனுண்டு, விலக்காமைக்கு நீயுண்டு, இனிச் செய்ய முடியாததுண்டோ? [இனியென்ன குறைவினம்] - "உன்னைப்பெற்றா லென்செய்யோம்" என்று - ஸாத்யாம்ச முண்டாகச் சொன்னவிடம் தப்பச்சொன்னோம்; உன்பக்கல் விலக்காதவளவே பற்றாசாக அவன் காரியஞ்செய்வானாயிருந்தால் இனி ஸாத்யாம்சமுண்டோ? அவனுபாயபாவம் நித்யநிரபேக்ஷமானால் ஸாத்த்யாம்சமுண்டோ? எனக்கு க்ருத் யாம்சமென்? என்ன; — எனக்கு வளவேழுலகு பின்னாட்டுவ தொருபோது உண்டு, அப்போதும் நீ விடாதேகொள் என்கிறார். [மைந்தனை] - நித்யநவயௌவந ஸ்வபாவனை. [மலராள் மணவாளனை] - நிரதிசயபோக்யையா யிருக்கிற பிராட்டி செவ்விகொள்ள இட்டுப்பிறந்தவனை. [துஞ்சும்போதும்] - "அயோக்யன்" என்று அகலும்போதும். விச்லேஷம் விநாசபர்யாயமென்கை; "நசஸீதா த்வயாஹீநா, யஸ்த்வயாஸஹ". [விடாது தொடர்] - நான்விடிலும் நீவிடாதே மேல்விழுந்து அநுபவிக்கப்பார். அவன் விடிலும் நீதொடரப்பார். [கண்டாய்] - இவ்வேப்பங்குடிநீரையன்றோ நான் உன்னைக்குடிக்கச் சொல்லு கிறது. பிராட்டி "அகலகில்லே னிறையும்" என்கிற'விஷயத்தையன்றோ நான் அநுபவிக்கச் சொல்லுகிறது.

ஈடு.—நாலாம்பாட்டு. தாம்சொன்னபோதே மேல்விழுந்து தொழுதவாறே நெஞ்சைக் கொண்டாடி, நிகர்ஷாநுஸந்தாநம் பண்ணி நான் விச்லேஷித்த ஸமயத்திலும் நீவிடாதே கொள் என்கிறார்.

[நெஞ்சமேநல்லைநல்லை] சொன்னகாரியத்தைச் சடக்கெனச் செய்த ஸத்புத்ரர்களை மடியிலே வைத்துக் கொண்டாடும் மாதாபிதாக்களைப் போலே, இவரும் மார்விலேயணைத்துக் கொண்டாடுகிறார் நெஞ்சை. [நெஞ்சமேநல்லைநல்லை] நல்லை என்ன அமையாதோ? "நல்லை நல்லை" என்கிற வீப்ஸைக்குக் கருத்தென்? என்னில்; இவர்தாம் அவன்பக்கல் தூதுவிடுமா போலே, தனக்கு இவர் தூதுவிடவேண்டும்படி இவர்தம்மை விட்டு அவன்பக்கலிலேயிற்க வல்ல நெஞ்சாகையாலே; "என்னெஞ்சினாரைக்கண்டால் என்னைச்சொல்லி அவரிடைநீர் இன் னஞ் செல்லீரோ?" என்னும்படி முந்துற்ற நெஞ்சாகையாலே "நல்லை நல்லை" என்கிற மீமிசை. என்னை இப்படி ச்லாகிக்கிறதென்? என்ன, [உன்னைப்பெற்றா லென் செய்யோம்] நீ என்னோடு ஒருமிடறான பின்பு, எனக்குச் செய்ய முடியாததுண்டோ? நெஞ்சு ஒத்தபின்பு முடியா ததுண்டோ? ப்பலந்தருகைக்கு ஈச்வரன் உண்டு, விலக்காமைக்கு நீ உண்டு; இனிச் செய்யமுடி யாதது உண்டோ? [இனியென்ன குறைவினம்] "உன்னைப்பெற்றா லென்செய்யோம்" என்று ஸாத்யாம்சமுண்டாகச் சொன்னவிடம் தப்பச்சொன்னோம்; உன்பக்கல் விலக்காமையே பற்றாசாக அவன் கார்யம்செய்வானாயிருந்தால், ஸாத்யாம்சந்தா னுண்டோ? அவனுபாய பாவம் நித்யநிரபேக்ஷமானால் ஸாத்யாம்ச முண்டோ? ஆனால், பின்னை, க்ருத்யாம்ச மென்? என்ன, ஸாத்யாம்ச முண்டுகிடாயென்கிறார். [மைந்தனை இத்யாதி] நான் அவனைக் கிட்டக் கொள்ள,* வளவேழுலகு தலையெடுத்து அகலப்பார்ப்ப தொன்று உண்டு; நீ அப்போது அவனை விடாதேகிடாய். [மைந்தனை] இவ்விஷயத்தைக் கெடுவாய் சிலராலே விடப்போமோ? (மைந்து - இனிமை, அழகு, மிடுக்கு.) [மலராள்மணவாளனை] பெரியபிராட்டியார் "அகல கில்லேனிறையும்" என்னும் விஷயத்தையன்றோ நான் உன்னை 'விடாதேகிடாய்' என்கிறது. [துஞ்சும்போதும்] 'அயோக்யன்' என்று அகலும்போதும். விச்லேஷம் விநாசபர்யாய மென்கை. *முஹூர்த்தமபி ஜீவாவ:* என்னுமதிறே இவர்க்குத் துஞ்சுகையாகிறது. நான் அவனை அகன்று முடியுமன்றும், நீ அவனை விடாதே தொடரப்பார் கிடாய். இவ்வேப்பங்குடி நீரையன்றோ நான் உன்னைக் குடிக்கச் சொல்லுகிறது; பிராட்டி "அகலகில்லேனிறையும்" என்கிற விஷயத்தையன்றோ நான் உன்னை யநுபவிக்கச் சொல்லுகிறது.

கண்டாயேநெஞ்சே கருமங்கள்வாய்க்கின்று* ஓர்
எண்தானுமின்றியே வந்தியலுமாறு*
உண்டானை யுலகேழுமோர்மூவடி
கொண்டானை* கண்டுகொண்டனை நீயுமே. (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், தன்திறத்தில் எண்ணுகைதானுமின்றியே யிருக்கச்செய்தே எம்பெருமான் தம்மை ஆகஸ்மிகமாக விஷயீகரித்தபடியைச் சொல்லுகிறார்.

[கருமங்கள் வாய்க்கின்று] - ஒரோப்ரயோஜநங்கள் நேர்படப்புக்கால். இயலுதல் - ப்பலிக்கை. [உண்டானை யுலகேழுமோர் மூவடிகொண்டானை] - இவையிரண்டும் ரக்ஷணத்திலே அபேக்ஷை யில்லாதாரையும் ரக்ஷிக்குமென்னுமிடத்துக்கு த்ருஷ்டாந்தம். [கண்டுகொண்டனை நீயுமே] - [வேறே சில த்ருஷ்டாந்தங்கள் சொல்லவேணுமோ? அபேக்ஷாகந்த ரஹிதமான நீயுமன்றோ கண்டுகொண்டாய்

இ.—அஞ்சாம்பாட்டில், ''எண்ணிலும்வரும்'' என்கிறதுதானும் மிகையானபடி கண்டாயே என்று அவன்படியை மூதலிக்கிறார்.

[கண்டாயேநெஞ்சே] - சைதந்யத்துக்கு ப்ரஸரணத்வாரமான உனக்குத் தெரியாமை யுண்டோ? [கருமங்கள் வாய்க்கின்று] - ப்ரயோஜநங்கள் நேர்படப்புக்கால். [ஒரெண்தானுமின்றியே வந்தியலுமாறு]- ''எண்ணிலும்வரும்'' என்ற இதுமிகையாம்படி வந்து ப்பலித்துக்கொண்டு நிற்கிறபடி கண்டாயே. இயலுகை - ப்பலிக்கை. இப்படிப்பலிக்க, வேறெங்கே கண்டோம்? என்னில், [உண்டானையுலகேழும்]- அபேக்ஷாநிரபேக்ஷமாக ஆபத்தையே பற்றத் திருவயிற்றில் லோகங்களைவைத்து ரக்ஷித்தபடி. [ஓர்மூவடி கொண்டானை] - 'மஹாபலியால் வந்த இடரைப் போக்க வேணும்' என்றவத்தனைபோக்கி, திருவடிகளைத் தலையிலே வந்திருக்க எண்ணினாருண்டோ? ''உலகேழும்'' என்கிறவிடம் - இரண்டிடத்திலும் கூட்டிக்கொள்ளக்கடவது. [கண்டுகொண்டனைநீயுமே] - பழங்கிணறு கண்வாருகிறதென்? நீ அவனைக்காண எங்கே யெண்ணினாய்? ப்ரளயாபத்தில் ப்ரதிகூலிக்கைக்குப் பரிகாரமில்லை, ப்ரதிகூலிக்கைக்கும் பரிகாரமுடைய நீயன்றோ பெற்றாய்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. கீழ், ''எண்ணிலும்வரும்'' என்ற எண்தானும் மிகையானபடி கண்டாயே என்று அவன்படியை நெஞ்சுக்கு மூதலிக்கிறார்.

[கண்டாயே நெஞ்சே] நான் சொன்னபடியே ப்பலத்தோடே வ்யாப்தமானபடி கண்டாயே. [நெஞ்சே] ஜ்ஞாநப்ரஸரத்வாரமான உனக்குச் சொல்லவேண்டாவிறே. [கருமங்கள் வாய்க்கின்று] கார்யங்கள் ப்பலிக்குமிடத்தில், [ஒரெண்தானுமின்றியே வந்தியலுமாறு கண்டாயே] ''எண்ணிலும்வரும்'' என்றதுதான் மிகையாம்படி வந்து ப்பலித்துக்கொண்டு நிற்கிறபடி கண்டாயே, இயலுகை ப்பலிக்கை. பகவத்ப்ரபாவம் சொல்லுவார் சொல்லுமளவல்லகாண். இத்தலையில் எண்ணின்றிக்கே யிருக்கப் பலிக்குமென்னுமிடத்துக்கு உதாஹரணங் காட்டுகிறார் மேல்; [உண்டானை இத்யாதி] ப்ரளயங்கொண்ட ஜகத்துக்கு 'அவன் நம்மை வயிற்றிலேவைத்து நோக்கும்' என்னும் நினைவுண்டோ? 'உலகேழும்' என்கிறவிடம் இரண்டிடத்திலுங் கூட்டிக்கொள்ளக்கடவது. அவன், ஜகத்தையடைய அளக்கிறபோது 'நந்தலையிலே திருவடிகளை வைக்கப்புகாநின்றான்' என்னும் நினைவு உண்டோ? இதுக்கு உதாஹரணம் தேடிப்போகவேணுமோ ஒன்று. [கண்டுகொண்டனை நீயுமே] விலக்குகைக்குப் பரிகரமுடைய நீயுமன்றோ கண்டுகொண்டாய். ப்ரளயாபத்தில் அவற்றுக்கு ப்ரதிகூலிக்கப் பரிகரமில்லையே! இங்கு அவஸரமில்லை, அறியில் விலக்குவர்களிறே; அசங்கிதமாக வருகையாலே பேசாதிருந்தார்களித்தனை.

நீயும் நானும் இந்நேர் நிற்கில்* மேல்மற்றோர்
நோயுஞ்சார்கொடான் நெஞ்சமே சொன்னேன்*
தாயுந்தந்தையுமாய் இவ்வுலகினில்*
வாயுமீசன் மணிவண்ணனெந்தையே. (6)

ஒ.— ஆறாம்பாட்டில், இப்படி ஸுலபனானவன் நம்மை விடாவிறே யென்னில்; நீயும் நானும் நம் அயோக்யதையை அநுஸந்தித்து 'அவனோடே ஸம்ச்லேஷிப்போமல்லோம்' என்னாதே, இப்படி இசைந்திருக்கில் நம்மை ஒருநாளும் விடானென்று திருவுள்ளத்தைக் குறித்துச் சொல்லுகிறார்.

[மேலென்று தொடங்கி] - மேலுள்ள காலம் ஸ்வஸம்ச்லேஷவிரோதிகளையெல்லாம் போக்கி, நம்மோடே ஸம்ச்லேஷம்பண்ணும், நெஞ்சே! இவ்வர்த்தத்துக்கு என்னை விச்வஸித்திரு. [தாயுமென்று தொடங்கி] - தாயும் தமப்பனும் போலே ப்ரியமுடையனாய் இவ்வுலகத்திலே வந்து திருவவதாரம்பண்ணித் தன் வடிவழகைக் காட்டித் தானிட்ட வழக்காக்கி அடிமைகொள்ளுகிறவன். பகவல்லாபத்துக்குச் சேதநர்பக்கல் வேண்டுவது ப்ராதிகூல்யநிவ்ருத்தியே யென்று இப்பாட்டுக்குக் கருத்து.

இ.— ஆறாம்பாட்டில், நான் விடாதொழிகிறேன், அவன் விடில் செய்வதென்? என்னில்; — நாம் அயோக்யதை பார்த்து விடாதொழியு மத்தனை வேண்டுவது; நம் இசைவையே பற்றி அவன் ஒருகாலும் விடா னென்கிறார்.

[நீயும் இத்யாதி] - தொழு" என்று சொல்லலாம்படி யிருக்கிற நீயும், தொழச்சொல்லுகிற நானும். ப்ரதிகூலித்துப் போந்த நீயும், உன்னைப் பின்சென்ற நானும். [இந்நேர்நிற்கில்] - ஒரெண்தானுமின்றியே நிற்கில். "நமேயம்" என்கிற நிர்ப்பந்தத்தைத் தவிரப்பெறில். இப்படி நின்றால் அவன் செய்வதென்? என்னில்: — [மேல் மற்றோர் நோயும் சார்கொடான்] - மேலுள்ள காலம் ஒரு நோயும் சாரவிட்டுக் கொடான்; நிஷித்தாநுஷ்டாநம்பண்ண விட்டுக்கொடான். முன்பு பண்ணின பாபபலாநுபவம் பண்ண விட்டுக்கொடான். விஷயப்ரவணனாகவிடான்; ப்ரயோஜநாந்தரங்களைக்கொண்டு அகலவிடான்; "அயோக்யன்" என்று அகலவிடான்; உபாயாந்தரங்களைப்பற்றி அகலவிடான். [நெஞ்சமே சொன்னேன்] - நான் உன்னை ஆராயாதே உன் அநர்த்தத்தைப் பார்த்து உனக்கு இவ்வர்த்தத்தைச் சொல்லிக் கொடுகின்றேன். பகவத்விஷயம் பிறர் அறியலாகாதென்றிருக்கைக்கு ஒரு திருக்கோட்டியூர் நம்பியோடொப்பர்; சொல்லிச்சமைந்து 'பதண்பதண்' என்கைக்கு ஒரு கீதாசார்யனோடொப்பர், "இதந்தே நாதபஸ்காய". [சொன்னேன்] - உபதேசத்திற் குறையில்லை, ப்ரதிபத்திபண்ணாதொழியில் இழக்குமத்தனை. இப்படி விட்டுக்கொடாதொழிவது சாஸ்த்ரமுகத்தாலேயோ? தன் ஸ்வாதந்த்ர்யத்தாலேயோ? என்னில், — [தாயும் இத்யாதி] - ப்ரியகாமனுமாய், ஹிதகாமனுமாய். அப்படியாவதும் தன்னிலை குலையாதே நின்றோ வென்னில், — [இவ்வுலகினில் வாயுமீசன்] - தன்வாசியறியாத ஸம்ஸாரத்திலே தன்னை அழிய மாறிவந்து அவதரித்து [ஈசன்] - இப்படி வந்து அவதரிக்கைக்கு ஹேது—ப்ராப்தனாகை. இங்கே வந்து அவதரித்து ஈரரசு தவிர்க்கையாலே, ஈசனானா னென்னவுமாம். [மணிவண்ண னெந்தையே] - வடிவைக்காட்டி விஷயாந்தர ப்ராவண்யத்தைத் தவிர்த்து, தன்சேஷித்வத்தைக் காட்டி என்சேஷத்வத்தை நிலைநிறுத்தினவன் தாயும் தந்தையுமாய் இவ்வுலகினில் வாயும் மணிவண்ணனாய் எந்தையான ஈசன், நீயும் நானும் இந்நேர்நிற்கில் மேல் மற்றோர்நோயுஞ்சார்கொடான் நெஞ்சமே சொன்னேன் - "ஸத்யம்ஸத்யம்" என்கிறபடியே இதுமெய்.

ஈடு.— ஆறாம்பாட்டு. 'இப்படி ஸுலபனானவன் நம்மைவிடானிறே' என்ன, நம் அயோக்யதையை அநுஸந்தித்து அகலாதொழியில் நம்மை ஒருநாளும் விடா னென்று திருவுள்ளத்துக்கு அருளிச்செய்கிறார்.

[நீயும்நானும் இந்நேர்நிற்கில்] அப்புள்ளின் பின்போன நீயும், உன்னைப் பரிகரமாகவுடைய நானும், ப்பலாநுபவம்பண்ண இருக்கிற நாம் இப்படி விலக்காதேயிருக்கில். *நமேயம்*

என்னும் ப்ராதிகூல்ய மநோரதமின்றிக்கே யொழியில். [மேல் மற்றோர்நோயும் சார்கொடான்] பீஷித்தாநுஷ்ட்டாநம் பண்ணி அகலவிடுதல், தன்னை யொழிய ப்ரயோஜநத்தைக் கொண்டு அகலவிடுதல், அயோக்யதாநுஸந்தாநம் பண்ணி அகலவிடுதல், வேறொரு ஸாதநபரிக்ரஹம் பண்ணி அகலவிடுதல், முன்பு பண்ணின பாபபலாநுபவம்பண்ணி அகலவிடுதல் செய்யவிட்டுக்கொடான். [நெஞ்சமே சொன்னேன்] திருக்கோட்டியூர் நம்பியைப்போலே, பிறர் அறியலாகாது பகவத்விஷயம் என்றுபோலேகாணும் இவர் இருப்பது. உபதேசித்துவைத்து *இதம் தே நாதபஸ்காய* என்றவனைப்போலே படுகிறார் சொன்னேன் என்று. த்ரௌபதி, குழல் விரித்துக் கிடக்கிறபடியைப் பார்த்து, செய்வது காணாமல் சொல்லிக்கொண்டு நின்றான்; அர்த்தத்தின் கனத்தைப் பார்த்து, கைப்பட்ட மாணிக்கத்தைக் கடலிலே போகட்டோம்' என்று 'பதண் பதண்' என்றானிறே. இனி ப்ரதிபத்திபண்ணுதார் இழக்கும்மித்தனை. [தாயும்தந்தையுமாய்] மாதாபிதாக்களைப்போலே பரிவனாய். அவர்களளவன்றிக்கே, [இவ்வுலகினில்வாயுமீசன்] ப்ரஜை, கிணற்றில் விழுந்தால் ஒக்கக் குதிக்கும் மாதாவைப்போலே, ஸம்ஸாரத்திலே ஒக்க விழுந்து எடுக்குமவன். இங்குவந்து அவதரிக்கைக்கு ஹேதுவென்? என்னில் [ஈசன்] ப்ராப்தனாகையாலே. அன்றிக்கே, இங்கேவந்து அவதரித்து ஈரரசு தவிர்க்கையாலே ஈசனானானென்னவுமாம். [மணிவண்ணனெந்தையே] தன்வடிவழகைக்காட்டி என்னை முறையிலே நிறுத்தினன். என்னை விஷயாந்தரப்ரவணனாகாதபடி மீட்டு தன்சேஷித்வத்தைக் காட்டி என்னுடைய சேஷத்வத்தை நிலைநிறுத்தினவன். தாயுந்தந்தையுமாய் இவ்வுலகினில் வாயும் மணிவண்ணனாய் எந்தையான ஈசன், நீயும் நானும் இந்நேர்நிற்கில் மேல் மற்றோர்நோயும் சார்கொடான்; நெஞ்சமே சொன்னேன்—''ஸத்யம் ஸத்யம்'' என்கிறபடியே இதுமெய்.

எந்தையேயென்றும் எம்பெருமானென்றும்*
சிந்தையுள்வைப்பன் சொல்லுவன்பாவியேன்*
எந்தையெம்பெருமானென்று வானவர்
சிந்தையுள்வைத்து* சொல்லுஞ்செல்வனையே. (7)

ஒ.—ஏழாம்பாட்டில், அத்யந்தவிலக்ஷணனான எம்பெருமானை அத்யந்த நிக்ருஷ்டனான நான் வாங்மநஸங்களாலே நினைத்தும் பேசியும் தப்புச்செய்தேனென்று அகலுகிறார்.

[எந்தையேயென்று தொடங்கி] - என்தனக்குப் பரிவனென்றும் ஸ்வாமியென்றும். [எந்தையென்று தொடங்கி]-எம்பெருமானை நினைக்கவும் பேசவும் போக்யராயுள்ள அமரர்கள், ஸ்நேஹயுக்தராய்க்கொண்டு எம்பெருமானை நினைத்து அது உள்ளடங்காமையாலே எந்தை எம்பெருமானென்று சொல்ல அத்தாலே மதிப்பனானவனை.

இ.—ஏழாம்பாட்டில், ''மணிவண்ண னெந்தை'' என்று அவனுடைய வைலக்ஷண்யத்தையும் ஸ்வநிகர்ஷத்தையும் அநுஸந்தித்து அகலுகிறார். ''துஞ்சும்போதும் விடாது தொடர்கண்டாய்'' என்றதுவே வந்து ப்பலித்தபடி.

[எந்தையேயென்றும்] - எனக்குப் பரிவனானவனே யென்றும். பரிவனுமளவேயன்றிக்கே, [எம்பெருமானென்றும்] - எனக்கு வகுத்த ஸ்வாமியே யென்றும். [சிந்தையுள்வைப்பன்] - விஷயாந்தரப்ரவணமான நெஞ்சிலே வைப்பன். நெஞ்சிலேநினைத்து ரஹஸ்ய ப்ராயச்சித்தம்பண்ணி விடுமளவன்றிக்கே, [சொல்லுவன்] - இவன் பேசுமளவோ இவ்விஷயம்? என்று கைவிடும்படி பிறர்கேட்கச் சொல்லாநின்றேன். [பாவியேன்] - விலக்ஷணபோக்யமான இவ்விஷயத்தை, அழிக்கைக்கு நான் ஒரு பாபகர்மா உண்டாவதே! தமோZபிபூதியாலே அகத்திலே அக்நிப்ரக்ஷேபத்தைப்பண்ணி, ஸத்த்வந் தலையெடுத்தவாறே அநுதபிக்குமாபோலே 'பாவியேன்' என்கிறார். நீர் இங்ஙன் சொல்லுவானென்? பகவத்விஷயத்தை நினைக்கையுஞ் சொல்லுகையும் பாபபலமோ? என்னில்; — புரோடாசத்தை நாய் தீண்டினாப்போலே

விலக்ஷணருடைய போக்யத்தை அழிக்கை பாபபலமன்றோ? [எந்தை இத்யாதி] - நினையாவிடில் அரைக்ஷணம் தரிக்கமாட்டாத நித்யஸூரிகள் நினைத்து, அவ்வநுபவம் வழிந்து "எந்தை யெம்பெருமான்" என்று சொல்ல, அத்தாலே ஸ்ரீமானாய் மதிப்பனானவனை நான் நினைத்தும் பேசியும் ரிக்தனுமாக்கி மதிப்பையுங் கெடுத்தேன்.

ஈடு.—ஏழாம்பாட்டு. கீழ் இவர் அஞ்சினப்போலே விடிந்தது; 'அயோக்யன்' என்று அகலுகிறார்.

[எந்தையேயென்றும்] எனக்குப் பரிவனானவனே யென்றும். [எம்பெருமானென்றும்] எனக்கு வகுத்த ஸ்வாமி யென்றும்; [சிந்தையுள்வைப்பன்] எத்தனை விஷயங்களை நினைத்துப் போந்த நெஞ்சிலே வைத்தது. நான் அறிந்ததாக நெஞ்சிலே வைத்து தூஷித்தவளவேயோ? [சொல்லுவன்] பிறர் அறியும்படி தூஷித்தேன். [பாவியேன்] விலக்ஷண போக்யமான இவ்வஸ்துவை அழிக்கைக்கு நான் ஒருபாபகர்மா உண்டாவதே [பாவியேன்] ஸாத்த்விகனாயிருப்பானொருவன் தமோகுணாபிபூதனாய் ஒரு க்ருஹத்திலே நெருப்பை வைத்து ஸத்த்வந் தலையெடுத்தவாறே அநுதபிக்குமாபோலே 'பாவியேன்' என்கிறார். நீர் இங்ஙனே சொல்லுவானென்? பகவத் விஷயத்தை நினைக்கையும் சொல்லுகையும் பாபபலமோ? என்னில்;—புரோடாசத்தை நாய் தீண்டினாப்போலே, விலக்ஷணருடைய போக்யவஸ்துவை அழிக்கை பாபபலமன்றோ? [எந்தை இத்யாதி] நினையாவிடில் அரைக்ஷணம் தரிக்கமாட்டாத நித்யஸூரிகள் நினைத்து அநுபவித்து அவ்வநுபவம் வழிந்து 'எங்களுக்குப் பரிவனானவனே, ஸ்வாமியானவனே' என்று தங்கள்நெஞ்சிலே வைத்துச் சொல்லும்படியான ஐச்வர்யத்தையுடையவனை நான் என்சொன்னேன்? இவ்வஸ்துவை ஒருவர் கம்பாதபடி யழித்தேனென்கிறார்.

செல்வநாரணனென்றசொற்கேட்டலும்*
மல்குங்கண்பனி நாடுவன்மாயமே*
அல்லுநன்பகலும் இடைவீடின்றி*
நல்கியென்னைவிடான் நம்பிநம்பியே. (8)

ஒ.—எட்டாம்பாட்டில், அநர்ஹனென்று அகன்ற நான் யாத்ருச்சிக பகவந்நாமச்ரவணத்தாலே அபலனாய் அகலமாட்டுகிறிலேன்; எம்பெருமானும் என்னை விரும்பி விடுகிறிலன். இது ஒரு விஸ்மயமென்கிறார்.

[செல்வன் நாரணனென்ற] - ஸ்ரீமானான நாராயணன். [நாடுவன் மாயமே] - "அல்லேன்" என்ற நான் என்னுடைய சாபலாதிசயத்தாலே "எங்குற்றாய்" என்று தேடாநின்றேன்; இது ஒரு ஆச்சர்யம் இருந்தபடி யென்! [அல்லும்நன்பகலுமென்று மேலுக்கு] - என்னைப்பெறுகையாலே பரிபூர்ணனான எம்பெருமான் தன்னோட்டை ஸம்ச்லேஷத்தாலே நன்றான இரவும் பகலும் இடைவிடாதே என்னை ஸ்நேஹித்து விடுகிறிலன்.

இ.—எட்டாம்பாட்டில், "அநர்ஹன்" என்று அகன்ற நான், யாத்ருச்சிக பகவந்நாமச்ரவணத்தாலே சிதிலனாய் அகலமாட்டுகிறிலேன்; அவனும் என்னை விடமாட்டுகிறிலன்; இது ஒரு விஸ்மயமென்? என்கிறார்.

[செல்வன்நாரணன்] - ஆழ்வார்பரிஸரத்தில், லக்ஷ்மீஸம்பந்த மொழிய ப்ரஹ்மசாரி யெம்பெருமானைப் பற்றுவார் இல்லாமையாலே, "ஸ்ரீமந்நாராயணன்" என்று யாத்ருச்சிகமாகச் சொன்னார்கள். [என்றசொற்கேட்டலும்] - இச்சப்தம் செவிப்பட்டவளவிலே. அர்த்தாநுஸந்தாநம் பண்ணிற்றிலேன்; பாவித்திலேன்; விஷஹரணமந்த்ரம்போலே அர்த்தாநுஸந்தாந மொழியவே பலித்தது. [மல்குங்கண்பனி]-

என்னை யொழியவே கண்ணானது நீர்மல்கத்தொடங்கிற்று. [நாடுவன்] - நெஞ்சானது "எங்குற்றாயெம் பெருமான்" என்று தேடத்தொடங்கிற்று. [மாயமே] - "அல்லேன்" என்கைக்கு நான் வேண்டிற்று, "ஆவன்" என்கைக்கு நான் வேண்டிற்றில்லை; இது ஒரு ஆச்சர்ய மென்? என்கிறார். அவன் செய்கிறதென்? என்னில்,—[அல்லும் இத்யாதி] - தம்முடைய அபிஸந்தியொழிய அவன் மேல்விழுகிற காலமாகையாலே நன்றான இரவும் நன்றான பகலும். [இடைவீடின்றிநல்கி] - நான் ஒருகால் தேடி விடாநின்றேன்; அவன் இடைவிடாதே ஸ்நேஹியாநின்றான். [என்னைவிடான் நம்பிநம்பியே] - அபூர்ணனான என்னைப் பூர்ணனான தான் நம்பி விடுகிறிலன். நம்பி ஒருத்தனாக நினைத்து. நம்பி-அல்லும் நன்லுபகம் வீடின்றி நல்கி நம்பி என்னைவிடான் மாயமே. ஆழ்வான், "நம்பியே" என்று ஸ்வரத: - இவனையே பூர்ண னென்பது என்பர்.

அ௫.—எட்டாம்பாட்டு. 'நாம் இதுக்குமுன்பு நினைத்தும் பேசியும் தப்பச்செய்தோம், இனித் தவிருமித்தனை' என்று 'அவன்குணங்கள் நடையாடாத தேசிடத்திலே கிடக்க வேணும்' என்று போய், ஒருகுட்டிச்சுவரிலே முட்டாக்கிட்டுக்கொண்டு கிடந்தார்; அங்கே, வழிபோமிருவனொருவன், சுமைகனத்து "ஸ்ரீமந்நாராயணன்" என்றான்; அச்சொல்லைக் கேட்டுத் தம்முடையகரணங்கள் அங்கே ப்ரவணமாகிறபடியைக் கண்டு விஸ்மிதராகிறார்.

[செல்வநாரணனென்ற சொல்கேட்டலும்] ஆழ்வார்பரிஸரத்தில் ப்ரஹ்மசாரி யெம் பெருமான் பேர் சொல்லுவாரில்லை; அதில் அர்த்தாநுஸந்தாநம் பண்ணவேண்டா வாயிற்று இவர்நோவுபடுக்கைக்கு. என்போல வென்னில்;—விஷஹரணமந்த்ரம்போலே. அச்சொல் செவிப்பட்ட வளவிலே, கண்ணானது என்னை யொழியவே நீர்மல்கப்புக்கது; நெஞ்சும் அவ்வளவிலே, "எங்குற்றாய்" என்று தேடப்புக்கது. [மாயமே] "அல்லேன்" என்று அகலுகைக்கு நான் வேண்டிற்று. 'ஆவேன்' என்று கூடுகைக்கு நான் வேண்டிற்றில்லையீ! ஈது ஓராச்சர்யம் இருந்தபடியென்! அவன் பின்னைச்செய்கிறதென்? என்னில்' [அல்லும் இத்யாதி] தம் அபிஸந்தியொழியவே, தம்முடைய கரணங்களுக்கு பகவதநுபவமே யாத்ரையாம்படி அவன் மேல்விழுகிற காலமாகையாலே 'நல்லஅல்லும், நல்லபகலும்' என்கிறார். திவாராத்ரவிபாகமற எனக்கு ஸ்நேஹித்துப் பரிபூர்ணனானவன் என்னை ஸ்வீ கரித்து என்னைவிட க்ஷமனாகிறிலன்; அவன்பேர்மாத்ரத்தைக் கேட்டவளவிலே, என்கண் ணானது பனிமல்காநின்றது; நெஞ்சானது தேடாநின்றது; இது ஓர் ஆச்சர்ய மிருந்தபடி யென்? என்கிறார். [இடைவீடின்றி] நான் ஒருகால் தேடிவிடாநின்றேன், அவன் இடை விடாதே ஸ்நேஹியாநின்றான். [என்னைவிடான் நம்பிநம்பியே] அபூர்ணனான என்னைப் பூர்ணனான தான் நம்பிவிடுகிறிலன். நம்பி—என்னை ஒருமதிப்பனாக நினைத்து, நம்பி, அல்லும் நன்பகலும் இடைவீடின்றி நல்கி, நம்பி என்னைவிடான்; மாயமே. [நம்பியே] இவனையே பரிபூர்ணனென்கிறது. ஸம்ஸாரிசேதநனைப்பெற்று, பேறுப்பேறு பெற்றானாயிருக்கிற இவனையே! பரிபூர்ணனென்கிறது லோகத்தார்.

நம்பியைத் தென்குறுங்குடிநின்ற* அச்
செம்பொனேதிகழும் திருமூர்த்தியை*
உம்பர்வானவர் ஆதியஞ்சோதியை*
எம்பிரானை என்சொல்லிமறப்பனோ? (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், அவன் விடாதொழிந்தால் நீர் அந்யபரராய் அவனை மறந்தாலோ வென்னில்,—திருக்குறுங்குடியிலே நின்றருளின நம்பியைக் கண்டுவைத்து மறக்க உபாயமுண்டோ? என்கிறார்.

[அச்செம்பொனென்று தொடங்கி] - ஓடவைத்த செம்பொன்னின் ஒளிபோலே திகழாநிற்பதுஞ் செய்து ஒருவருடைய வாங்மநஸாதிகளாலும் பரிச்சேதிக்க வொண்ணாதபடியான திருமேனியை யுடைய

வனே. [உம்பரென்று தொடங்கி] - ப்ரஹ்மேசாநாதிகளிற் காட்டில் அத்யந்த விலக்ஷணரான நித்ய ஸூரிகளுக்கு ஜீவநஹேதுவாய் அதிமநோஹரமான தேஜஸ்ஸை யுடையனுமாய் அயர்வறுமமரர்களைப் போலே தாமே தாரகமாம்படி என்னைப் பண்ணினவனே.

இ.—ஒன்பதாம்பாட்டில், அவன் விடாதொழிந்தால் நீர் அந்யபரராய் அவனை மறந்தாலாகாதோ? என்னில்,—அவன்படிகளைக் கண்டுவைத்து மறக்கப்போமோ? என்கிறார்.

[நம்பியை] - கல்யாணகுணபரிபூர்ணனை; பரமபதத்தில் குணங்களுக்கு ஸத்பாவமே உள்ளது, இங்கே குணங்களுக்குப் பூர்த்தி. [தென்குறுங்குடிநின்ற] - கலங்காப்பெருநகரத்தைக் கலவிருக்கையாக வுடையவன், அத்தைவிட்டு என்னைப்பற்றத் திருக்குறுங்குடியிலே அவஸர ப்ரதீக்ஷனுய்க் கொண்டு ஸ்த்தாவரப்ரதிஷ்ட்டையாய் நின்றவனை; [அச்செம்பொனேதிகழுந்திருமூர்த்தியை]-ஓடவைத்த செம்பொன் போலே நிரவதிக தேஜோரூபமாய் எல்லாருடைய வாங்மநஸ்ஸுக்களாலும் பரிச்சேதிக்க வொண்ணுத திவ்யமங்கள விக்ரஹத்தை யுடையவனை. [உம்பர் இத்யாதி] - ஆக்கரான ப்ரஹ்மாதிகளன்றிக்கே, அவ்வருகான நித்யஸூரிகளுக்கு ஸத்தாஹேதுவுமாய், அவர்களுக்கு அதிமநோஹரமுமான தேஜஸ்ஸையு முடையவனை. அவ்வடிவுக்கு போக்தாக்களிறே அவர்கள். [எம்பிரானை] - நித்யஸூரிகளுக்குப் போலே தானே தாரகமாம்படி எனக்கு உபகரித்தவனை. [என்சொல்லி மறப்பனோ] - குணஹீநனென்று மறக்கவோ? அஸந்நிஹிதனென்று மறக்கவோ? வடிவிற்பசையில்லையென்று மறக்கவோ? மதிப்பனல்லனென்று மறக்கவோ? எனக்கு உபகாரகனல்லனென்று மறக்கவோ?

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. நீர்தாம் இங்ஙனே கிடந்து படாநில்லாதே, அவ்விஷயத்தை மறந்து ஸம்ஸாரிகளோபாதி உண்டு உடுத்துத் திரியமாட்டீரோ? என்ன;—நான் எத்தைச் சொல்லி அவனை மறப்பது என்கிறார்.

[நம்பியை] கல்யாணகுணபரிபூர்ணனை. பரமபதத்தில் குணங்களுக்கு ஸத்பாவமேயிறே உள்ளது, இங்கேயிறே குணங்களுக்குப் பூர்த்தி. [தென்குறுங்குடி நின்ற] கலங்காப் பெருநகரத்தைக் கலவிருக்கையாகவுடையவன், அத்தைவிட்டு என்னைப்பற்றத் திருக்குறுங் குடியிலே அவஸரப்ரதீக்ஷனுய்க்கொண்டு ஸ்த்தாவரப்ரதிஷ்ட்டையாக நின்றவன். [நம்பியைத் தென்குறுங்குடி நின்ற] குணத்திலே குறையுண்டாதல், தூரஸ்த்தனென்றுதல் செய்து, நான் மறக்கவேணுமே. [அச்செம்பொனேதிகழுந் திருமூர்த்தியை] வடிவழகிலே குறையுண்டாய்த் தான் மறக்கவோ? [அச்செம்பொன்] உபமாநரஹிதமாய், ஓட்டற்ற செம்பொன்போலே நிரவதிகதேஜோரூபமாய், வாங்மநஸ்ஸுக்களாலும் பரிச்சேதிக்க வொண்ணுத திவ்யமங்கள விக்ரஹத்தை யுடையவனை. [உம்பர் இத்யாதி] அவ்வடிவழகை அநுபவிக்க இட்டுப்பிறந்த நித்யஸூரிகளைச் சொல்லுகிறது. ஆக்கரான இவ்வருகில் வானவரைப்போலே யன்றியே மேலான நித்யஸூரிகளுடைய ஸத்தாதிகளுக்கும் தானே கடவனாய் அவர்களுக்கு அநுபாவ்ய மான திவ்யமங்களவிக்ரஹத்தையுடையவனை. [எம்பிரானை] அவர்களநுபவிக்கும்படியை எனக்கு உபகரித்தவனை. [என்சொல்லி மறப்பனோ] அபூர்ணனென்று மறக்கவோ? அஸந்நிஹிதனென்று மறக்கவோ? வடிவழகில்லை யென்று மறக்கவோ? மேன்மையில்லையென்று மறக்கவோ? எனக்கு உபகாரகனன்றென்று மறக்கவோ? எத்தைச் சொல்லி மறப்பனென்கிறார்.

மறப்பும்ஞானமும் நானுன்றுணர்ந்திலன்*
மறக்குமென்று செந்தாமரைக்கண்ணுெடு*
மறப்பறவென்னுள்ளே மன்னினான்தன்னை*
மறப்பனோவினி யானென்மணியையே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், வருந்தியாகிலும் அவனை மறந்தாலோ? என்னில்,—அழகிய திருக்கண் களாலே நோக்கிக்கொண்டு ஒருநாளும் மறக்கவொண்ணுதபடி என்னுள்ளே நிரந்தரமாக வர்த்திக்கிற வனை நான் மறக்கும்படி எங்ஙனே? என்கிறார்.

[மறப்பும் ஞானமும் நானொன்றுணர்ந்திலன்] - ஜ்ஞாநமென்று ஒன்றென்றும் மறப்பென்று ஒன்றென்றும் அறிந்திலேன்; அஸத்கல்பன். [மறக்குமென்று தொடங்கி] - ஏவம்விதனான எனக்கு அறிவைப்பிறப்பித்து 'இவன் நம்மை மறக்கும்' என்று பார்த்து; [என்மணியை] - தன்னுடைய திருவழகை எனக்கு போக்யமாம்படி தந்தவனை.

இ.—பத்தாம்பாட்டில், அவன் மறவாமைக்கு க்ருஷிபண்ணாநிற்க, என்னாலே மறக்கப்போமோ? என்கிறார்.

[மறப்பும் ஞானமும் நானொன்றுணர்ந்திலன்] - மறப்பென்றும் ஞானமென்றும் ஒன்றும் அறிந்திலேன் நான். ஒருசேதநனாய், நினைத்தேனோ மறக்கைக்கு? நினைவு நானடியாகவரிலன்றோ மறப்பும் நானடியாக வருவது; அசித்கல்பன். [மறக்குமென்று] - அறிவுக்கு அடைவின்றிக்கே யிருக்கிற என் பக்கலிலே அறிவைப்பிறப்பித்து, "மறக்கக்கூடும்" என்று பார்த்து, அழகிய திருக்கண்களாலே குளிர நோக்கிக்கொண்டு ஒருநாளும் மறக்கவொண்ணாதபடி என்னுள்ளே ஸ்த்தாவர ப்ரதிஷ்டையா யிருந்தவனை. புறம்பு ஒரு அந்யபரதைதோற்ற இருக்கிறிலன். [மறப்பனோவினி] - மறவாமைக்குப் பரிஹாரம் அவன் கையிலே யுண்டாயிருக்க, இனி மறக்க உபாயமுண்டோ? கீழ் அநாதிகாலம் நினைக்க விரகில்லாதா போலே யிறே, மேலுள்ளகாலம் மறக்க விரகில்லாதபடியும். [யான்] - அநாதிகாலம் விஸ்மரித்துப்போந்த நான். [என்மணியையே] - பெருவிலையனாய் முடிந்து ஆளலாம்படி கைப்புகுந்து புகரையுடைத்தான நீல மணிபோலே யிருக்கிற தன்னை எனக்கு அநுபவயோக்யமாம்படி பண்ணிவைத்தபின்பு, நான் அவனை அநாதரிப்பனோ?

ஈடு-பத்தாம்பாட்டு. ஆனாலும் வருந்தியாகிலும் மறந்தாலோ வென்ன, நெஞ்சில் இருந்து அறுத்துக்கொண்டு நிரந்தரவாஸம் பண்ணுமவனை மறக்க விரகுண்டோ? என்கிறார்.

[மறப்பும் ஞானமும் நானொன்றுணர்ந்திலன்] நான் சேதநனாய் நினைத்தேனாகிலன்றோ மறப்பது; நினைத்தேன் நானானவன்றிறே மறக்க இடமுள்ளது. ஜ்ஞாநத்துக்கு ஆச்ரயமாமதிறே அஜ்ஞாநத்துக்கும் ஆச்ரயமாவது, அசித்கல்பனாய்க்கிடீர் நான் இருந்தது. [மறக்கும் இத்யாதி] இப்படி யிருக்கிற நான் நினைத்தேனாகவும் நினைவையும் என் தலையிலே யேறிட்டு, 'பிறந்த ஜ்ஞாநத்துக்கு விச்சேதம் வரவொண்ணாது' என்றுபார்த்து, அழகிய திருக்கண்களாலே குளிரநோக்கிக்கொண்டு, தன்னைப்பற்றி எனக்கு வரும் விஸ்ம்ருதி போம்படி என் ஹ்ருதயத்திலே நித்யவாஸம் பண்ணுகிறவனை. [மன்னினான்] 'புறம்பே அந்யபரதை உண்டு' என்று தோற்ற இருக்கிறிலன். [மறப்பனோ இனியானென்மணியையே] பெருவிலையனான ரத்நம் கைப்புகுந்தால் அத்தை முடிந்து அநுபவியாதே உதறுவர்களோ? [மறப்பனோவினி] மறவாமைக்குப் பரிகரம் அவன்கையிலே யுண்டாயிருக்க, இனி மறக்க உபாயமுண்டோ? கீழ் அநாதிகாலம் நினைக்க விரகில்லாதாப்போலேயிறே மேலுள்ளகாலமும் மறக்க விரகில்லாதபடியும். [யான்] அநாதிகாலம் "மறந்தேனுன்னை முன்னம்" என்கிறபடியே விஸ்மரித்துப் போந்த நான் [என்மணியையே] பெருவிலையனாய் முடிந்தாளலாம்படி கைப்புகுந்து புகரையுடைத்தான நீலமணிபோலே யிருக்கிற தன்னை எனக்கு அநுபவயோக்யமாம்படி பண்ணிவைத்தபின்பு நான் அவனை அநாதரிப்பனோ?

மணியைவானவர்கண்ணனைத் தன்னதோ
ரணியை*தென்குருகூர்ச்சடகோபன்* சொல்
பணிசெயாயிரத்துள் இவைபத்துடன்*
தணிவிலர்கற்பரேல் கல்விவாயுமே. (11)

ஒ.—நிகமத்தில், இப்பத்தும் கற்பார் நிரதிசய புருஷார்த்தமான பகவத்கைங்கர்யத்தைப் பெறுவரென்கிறார். இக்கல்விதானே அமையு மென்றுமாம்.

[மணியையென்று தொடங்கி] - தனக்குத்தானே பூஷணமாய் அயர்வறுமமரர்களதிபதியாய் ஆச்ரயிப்பார்க்கு எளியனு யிருந்துள்ளவனை. [தென்குருகூரென்று தொடங்கி] - ஆழ்வார்க்கு அத்யந்த விதேயமாய்ச் சொற்கள் பணிசெய்த ஆயிரத்து இப்பத்தையும்; எம்பெருமானுக்குச் சொல்லாலே ஆழ்வார் பணிசெய்த ஆயிர மென்றுமாம். [உடனென்று தொடங்கி] - ஸாபிப்ராயமாக ச்ரத்ததாநராய்க் கற்பாராகில் கல்வி வாய்க்கும்.

இ.—நிகமத்தில், இப்பத்தும் கற்பார் நிரதிசய புருஷார்த்தமான கைங்கர்யத்தைப் பெறுவ ரென்கிறார்.

[மணியை] - தமக்கு முடிந்து ஆளலாம்படி ஸௌலப்யனானபடியைச் சொல்லுகிறார். [வானவர் கண்ணனை] - நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனை மேன்மையையுடையவனை. [தன்னதோரணியை] - தனக்குத்தானே ஆபரணமான அழகையுடையவனை. "தென்குறுங்குடிநின்ற" என்கிறவிடம் - ஸௌலப்யம், "உம்பர்வானவராதியஞ்சோதியை" என்கிறவிடம்-மேன்மை, "செம்பொனே திகழும் திருமூர்த்தி" என்கிறவிடம் - அழகு. ஸௌலப்யமும் மதிப்பும் அழகுங் கூடின பசுங்கூட்டு - பகவத்தத்த்வம். [சொற்பணிசெயாயிரம்] - "மிடைந்தசொல்" என்கிறபடியே, சொற்கள் பணிசெய்த ஆயிரமென்னுதல்; சொல்லாலே பணிசெய்த ஆயிரமென்னுதல்; சொல்லாலே பணிசெய்த ஆயிரமென்று - வாசிகமான அடிமையைச் சொல்லுதல். [உடன்கற்பரேல்] - ஸாபிப்ராயமாகக் கற்பராகில். [தணிவிலர் கற்பரேல்] - தணிவாகிறது - ஆறுதல். ச்ரத்ததாநராய்க் கற்பராகில். [கல்விவாயுமே] - கல்விதானே ப்ரயோஜந மென்னுதல், கல்வியின் பலமான கைங்கர்யஸித்தியுண்டா மென்னுதல். ஸர்வஸ்மாத்பரனென்றார்; பஜநீயனென்றார்; அவன்தான் ஸுலப னென்றார்; ஸுலபனானவன் அபராதஸஹனென்றார்; அவன் சீலவானென்றார்; ஸ்வாராதனென்றார்; நிரதிசயபோக்யனென்றார். அவனுடைய ஆர்ஜவகுணஞ் சொன்னார்; ஸாத்ம்யபோகப்ரத னென்றார்; இப்படி ஏவம்பூதனானவன் நிர்ஹேதுகமாக விஷயீகரிப்பா னொருவன் என்றார். ஆகையாலே, "அவன் துயரறு சுடரடி தொழுதெழென்மனனே" என்று தந்திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்து தலைக்கட்டினார்.

ஈடு.—நிகமத்தில், இப்பத்தைக் கற்றவர்கள் நிரதிசய புருஷார்த்தமான பகவத் கைங்கர்யத்தைப் பெறுவ ரென்கிறார்.

[மணியை] முன்தானையிலே முடிந்து ஆளலாம்படி கைப்புகுந்திருக்கு மென்று ஸௌலப்யஞ் சொல்லுகிறது. "தென்குறுங்குடி நின்ற" என்கிறவிடத்தில் ஸௌலப்யம். [வானவர்கண்ணனை] "உம்பர் வானவராதியஞ்சோதி" என்ற மேன்மையைச் சொல்லுகிறது. [தன்னதோரணியை] "அச்செம்பொனே திகழுந் திருமூர்த்தி" என்கிற வடிவழகை நினைக்கிறது, இம்மூன்றுங் கூடின பசுங்கூட்டாயிற்று பரதத்த்வமாகிறது. [தென்குருகூர்ச் சடகோபன்] ஆழ்வார் அருளிச்செய்ததாய், 'நாம் இங்குத்தைக்குக் கிஞ்சித்கரித்தோமாக வேணும்' என்று சொற்கள்தாம் 'என்னைக்கொள், என்னைக்கொள்' என்று—'மிடைந்தசொல்' என்கிறபடியே சொற்கள் பணிசெய்த ஆயிர மென்னுதல்; சொல்லாலே பணிசெய்த ஆயிர மென்று வாசிகமான அடிமையைச் சொல்லுதல். [உடன் தணிவிலர்கற்பரேல்] ஸாபிப்ராயமாகக் கற்பராகில். தணிவாகிறது மெத்தென்கை. "வரில் போகடேன், கெடில் தேடேன்" என்றிருக்கையன்றியே, ச்ரத்தைமாறாதே கற்பராகில். [கல்விவாயுமே] "ஒண்தாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு" என்கிறபடியே—ஜ்ஞாநமாகில் பகவத் விஷயத்தைப் பற்றியல்லது இராமையாலே இத்தை அப்யஸிக்க, இதுக்கு ப்பலமாகக் கைங்கர்யத்தை இது தானே தரும். [கல்விவாயும்] கல்வி தானே ப்ரயோஜந மென்றுமாம்.

இத்திருவாய்மொழியில், மேல் பரக்க அருளிச்செய்யப் புகுகிற அர்த்தத்தை ஸங்க்ரஹேண முதற்பாட்டிலே அருளிச்செய்தார்; இரண்டாம்பாட்டில், பரமபக்திக்கும் பரிகணைக்கு மொக்க முகங்காட்டு மென்றார்; மூன்றாம்பாட்டில், கண்டாயே அவன்ஸ்வரூப மிருந்தபடி, நீயும் உன்ஸ்வரூபத்துக்குச்சேர நிற்கப்பாராயென்றார். நாலாம்பாட்டில், ஸ்வரூபாநுரூபமாக நெஞ்சு தொழுதவாறே நெஞ்சைக் கொண்டாடினார்; அஞ்சாம்பாட்டில், கீழ்

“எண்ணிலும் வரும்” என்றது ப்பலத்தோடே வ்யாப்தமானபடியை நெஞ்சுக்கு அருளிச்செய்தார்; ஆறாம்பாட்டில், நாம் இருவரும் இப்படியே நிற்கப்பெறில் நமக்கு ஒரு அநர்த்தமும் வாராதென்றார்; ஏழாம்பாட்டில், கீழ் இவர் அஞ்சினபடியே விடிந்தபடி சொன்னார்; எட்டாம் பாட்டில், திருநாமச்ரவணத்தாலே தம்முடைய கரணங்களுக்குப் பிறந்த விக்ருதியைச் சொன்னார்; ஒன்பதாம்பாட்டில், விக்ருதராகாதே மறந்தாலோ வென்ன, மறக்கவொண்ணாதென்றார்; பத்தாம்பாட்டில், வருந்தியாகிலும் மறந்தாலோ வென்ன, என் ஹ்ருதயத்திலே யிருக்கிறவனை மறக்கப்போமோ? என்றார்; நிகமத்தில், கற்றார்க்குப் பலஞ்சொன்னார். ஸர்வஸ்மாத்பர னென்றார், பஜநீய னென்றார், அவன்தான் ஸுலப னென்றார், ஸுலபனானவன் அபராதஸஹ னென்றார், அவன் சீலவா னென்றார், ஸ்வாராத னென்றார், நிரதிசயபோக்ய னென்றார்; அவனுடைய ஆர்ஜவகுணஞ் சொன்னார், ஸாத்ம்யபோக ப்ரத னென்றார்; இப்படி ஏவம்பூதனானவன் நிர்ஹேதுகமாக விஷயீகரிப்பானொருவ னென்றார்; ஆகையாலே, “அவன் துயரறுசுடரடி தொழுதெழென்மனனே” என்று தந்திருவுள்ளத்தைக்குறித்து அருளிச்செய்து தலைக்கட்டினார்.

முதற்பத்தால் பகவத்கைங்கர்யம் புருஷார்த்தமென்று அறுதியிட்டார்; இரண்டாம் பத்தால் அந்தக்கைங்கர்யத்தில் களையறுத்தார்; மூன்றாம்பத்தால் விரோதிகழிந்த கைங்கர்ய வேஷம் பாகவத சேஷத்வ பர்யந்தமான பகவதகைங்கர்ய மென்றார்; நாலாம் பத்தால் இப்படிப்பட்ட கைங்கர்யத்துக்கு விரோதி ஐச்வர்யகைவல்ய மென்றார்; அஞ்சாம்பத்தால் அந்தவிரோதியைப் போக்குவானும் அவனே யென்றார்; ஆறாம்பத்தால் விரோதி நிரஸந சீலனானவன் திருவடிகளிலே சரணம்புக்கார்; ஏழாம்பத்தால் இப்படி பெரியபிராட்டியார் முன்னிலையாக சரணம்புக்க விடத்திலும், தக்தபடந்யாயம்போலே ஸம்ஸாரம் அநுவர்த்திக்கிறபடியைக் கண்டு விஷண்ணராகிறார்; எட்டாம்பத்தால் ‘இப்படி ப்ரபந்நராயிருக்கச்செய்தேயும் தக்தபடந்யாயம்போலே நம்மைவிடாதே அநுவர்த்திக்கிறது நம்முடைய ஆத்மாத்மீயங்களில் நசையறாதபடியாலே’ என்று பார்த்து, அவற்றில் ஒருநசையில்லை யென்கிறார்; ஒன்பதாம்பத்தால் ‘இப்படி நசையற்றபின்பும் ரக்ஷியாதொழிவானென்? என்று அதிசங்கை பண்ண, ‘நான் நாராயணன், ஸர்வசக்தியுக்தன், உம்முடைய ஸர்வாபேக்ஷிதங்களும் செய்து முடிக்கிறோம்’ என்று அருளிச்செய்ய, அவனுடைய சீலகுணத்திலே ஆழங்காற்படுகிறார்; பத்தாம்பத்தால் ஆழ்வாருடைய பதற்றத்தைக் கண்டு, திருமோகூரிலே தங்கு வேட்டையாக வந்து தங்கி, இவர்க்கு அர்ச்சிராதிகதியையுங் காட்டி, இவருடைய அபேக்ஷித ஸம்விதாநம் பண்ணினபடியை அருளிச்செய்தார்.

ஆழ்வார் திருவடிகளே சரணம். எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

பகவத்விஷயம் ஈடு முதற்பத்து முற்றிற்று.